லெனின்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி

10

அரசு

பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில்

பொருளியலும் அரசியலும்

"இடதுசாரி" கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு

T. 11978

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

வி. இ. லெனின், *1919*

வி. இ. லெனின்

தேர்வு நூல்கள்
பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி
10

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

В. И. Ленин

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ

Том 10

на тамильском языке

V. I. Lenin

SELECTED WORKS IN 12 VOLUMES

Vol. 10

in Tamil

W691.58LEN
M1;9

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

© தமிழ் மொழிபெயர்ப்பு

முன்னேற்றப் பதிப்பகம், 1981

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102-304}{014(01)-82}$ 806—81 0101020000

பொருளடக்கம்

அரசு (ஸ்வேர்த்லோவ் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய விரிவுரை). ஜூலை 11, 1919 . . . 9

கல்ச்சாக்கை எதிர்த்த வெற்றியின் நிமித்தம் தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்கு எழுதிய கடிதம் 41

பெத்ரோகிராத் தொழிலாளரின் உதாரணம் 55

மாஸ்கோவில் கட்சி வாரத்தின் பலன்களும் நமது பணிகளும் 60

பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் பொருளியலும் அரசியலும் 67

1 67

2 68

3 71

4 74

5 79

கீழ்த்திசை மக்களது கம்யூனிஸ்டு நிறுவனங்களின் இரண்டாம் அகில ருஷ்ய காங்கிரசில் ஆற்றிய உரை. நவம்பர் 22, 1919 84

ரு.க.க.(போ.)இன் எட்டாவது அகில ருஷ்ய மாநாடு. டிசம்பர் 2—4, 1919 104

அயல்துறைக் கொள்கை பற்றிய நகல் தீர்மானம் . . 104

விவசாயக் கம்யூன்கள் மற்றும் விவசாய ஆர்ட்டல்களின் முதலாவது காங்கிரசில் ஆற்றிய உரை. டிசம்பர் 4, 1919 106

தெனீக்கினை எதிர்த்த வெற்றிகளைக் குறித்து உக்ரேனிய தொழிலாளர், விவசாயிகளுக்கு எழுதிய கடிதம் 122

''யுனிவெர்சல் சர்விஸ்'' அமெரிக்கச் செய்தி நிறுவனத்தின் பெர்லின் நிருபர் கார்ல் விகாண்ட் கேட்ட கேள்விகளுக்குப் பதில் . . 133

''தி ஓர்ல்ட்'' எனும் அமெரிக்கச் செய்திப் பத்திரிகையின் நிருபரான லிங்கன் அயருக்கு அளித்த பேட்டி 137

நேச நாடுகள் ''சதுரங்க விளையாட்டு'' 137

அமெரிக்க ஐக்கிய நாடுகள் சோஷலிஸ்டுகளை ஒடுக்குகிறது 139

ஐரோப்பா ருஷ்யா மீது சார்ந்திருக்கிறது 140

உலகத்துக்கு ருஷ்யப் பண்டங்கள் தேவை 141

உள்நாட்டு நிலை நம்பிக்கையூட்டுகிறது 143

சோஷலிஸ்டுத் தலைவர்களைக் கடுமையாக விமர்சித்தல் 145

ரு.க.க.(போ.)இன் ஒன்பதாவது காங்கிரஸ். மார்ச் 29—ஏப்ரல் 5, 1920 146

மத்தியக் கமிட்டியின் அறிக்கை. மார்ச் 29 . . . 146

பழைய சமுதாய அமைப்பின் அழிவில் இருந்து புதிய சமுதாய அமைப்பைப் படைத்துருவாக்க . 179

''இடதுசாரி'' கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு 183

1. எப்பொருளில் நாம் ருஷ்யப் புரட்சியின் சர்வ தேச முக்கியத்துவம் குறித்துப் பேசலாம் . . 183
2. போல்ஷிவிக்குகளுடைய வெற்றிக்கு இன்றியமையாத ஒரு நிபந்தனை 187
3. போல்ஷிவிச வரலாற்றின் பிரதான கட்டங்கள். 192
4. தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் எந்தெந்தப் பகைகளுக்கு எதிரான போராட்டம் போல்ஷிவிசம் வளர்ந்து வலிமையுற்று உருக்கு உறுதி பெற உதவிற்று 200
5. ஜெர்மனியில் ''இடதுசாரி'' கம்யூனிசம். தலைவர்கள், கட்சி, வர்க்கம், வெகுஜனங்கள் . . . 213
6. புரட்சியாளர்கள் பிற்போக்குத் தொழிற்சங்கங்களில் வேலை செய்யலாமா? 226
7. முதலாளித்துவ நாடாளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொள்ளலாமா?. 242
8. சமரசம் கூடவே கூடாதா? 259
9. பிரிட்டனில் ''இடதுசாரி'' கம்யூனிசம் . . . 279
10. சில முடிவுகள் 300
அனுபந்தம் 324
1. ஜெர்மன் கம்யூனிஸ்டுகளிடையே பிளவு . . 324
2. ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகளும் சுயேச்சையாளர்களும் 327
3. இத்தாலியில் டுராட்டி கோஷ்டியார் . . . 331
4. சரியான முதற்கோள்களிலிருந்து பெறப்படும் தவறான முடிவுகள் 334
5. 341
வைன்காப்பின் கடிதம் 342

பதிப்பாளர் குறிப்புகள் 343

பெயர்க் குறிப்பகராதி 373

அரசு

ஸ்வேர்த்லோவ் பல்கலைக்கழகத்தில்
நிகழ்த்திய விரிவுரை
ஜூலை 11, 1919

தோழர்களே! உங்களால் ஏற்கப்பெற்று, எனக்கு அறிவிக்கப்பட்டுள்ள திட்டத்தின்படி, இன்றைய உரைப் பொருள் அரசு என்பதாகும். இப்பொருள் பற்றி ஏற்கெனவே உங்களுக்கு எந்தளவு பரிச்சயம் உண்டென்பது எனக்குத் தெரியாது. நான் நினைப்பது சரியானல் உங்களது வகுப்புகள் இப்போதுதான் தொடக்கமாகின்றன; இப்பொருளை முறையாக நீங்கள் அணுகத் தொடங்குவது இதுவே முதல் தடவையாகும். இங்ஙனமாயின், கடினமான இப்பொருள் பற்றிய முதற் பேச்சில், எனது உரையைக் கேட்பவரில் பலருக்குப் போதியளவு தெளிவாகவும் புரியக்கூடிய விதத்திலும் எனது கருத்துக்களை விளக்கிவைப்பதில் நான் வெற்றிபெருமல் போகலாம். அப்படி நேர்ந்துவிடுமாயின், அது பற்றிக் கலக்கமுற வேண்டாம் என்றும் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனெனில், அரசு என்பது பற்றிய பிரச்சினை மிக மிகச் சிக்கலும் கடினமுமான ஒன்று; முதலாளித்துவ அறிஞர்கள், எழுத்தாளர்கள், தத்துவவாதிகளால் ஒருவேளை மற்ற எந்தப் பிரச்சினையையும் விட மிகுதியாகக் குழப்பிவிடப்பட்ட ஒன்ருகும். ஆகவே, இப்பொருளை ஒரு சுருக்கமான பேச்சில் ஒரே முறையில் தெளிவாகப் புரிந்துகொள்ளுவது சாத்தியம் என்று ஒருபோதும் எதிர்பார்க்கக் கூடாது. இப்பொருள் பற்றிய முதற் பேச்சுக்குப் பின்,விளங்கிக்கொள்ளாத அல்லது உங்களுக்குத் தெளிவில்லாத இடங்களை நீங்கள் குறித்து வைத்து, இரண்டாவது, மூன்ருவது, நான்காவது முறையும் அவற்றுக்கே திரும்ப வேண்டும், அவ்வகையில், நீங்கள்

விளங்கிக் கொள்ளாதவை, படிப்பினாலும், தனிப்பட்ட விரிவுரைகள், உரையாடல்கள் ஆகியவற்றினாலும் மேலும் நிறைதலுற்று விளக்கம் பெறும். மீண்டும் ஒரு முறை நாம் கூட முடியுமென்று நம்புகிறேன்; அப்பொழுது, இதனோடு தொடர்புடைய பிரச்சினைகள் எல்லாவற்றையும் பற்றிய கருத்துக்களை நாம் பரிமாறிக் கொள்ளவும், மிகவும் தெளி வற்றதாக இருப்பது எது என்பதைக் காணவும் முடியுமென நம்புகிறேன். விரிவுரைகள், உரையாடல்கள் ஆகியவற்றோடுங் கூட மார்க்சும் எங்கெல்சும் எழுதிய மிகமிக முக்கியமான நூல்களில் சிலவற்றையேனும் படிக்கக் குறித்த நேரம் நீங்கள் ஈடுபடுத்துவீர்கள் என்றும் நம்புகிறேன். சோவியத், கட்சிப் பள்ளிக்கூட மாணவர்க்கான உங்கள் நூல்நிலையத்தில் உள்ள இலக்கியப் பட்டியலிலும் உதவிப்புத்தகங்களிலும் மிகமிக முக்கியமான இந்நூல்களைக் காணக் கூடும் என்பதில் ஐயமில்லை. இவற்றிலுள்ள விளக்கவுரையின் கடுமை காரண மாக, உங்களில் சிலருக்கு முதலில் திகில் உண்டாகலாம்; இருந்தாலும், இதனால் நீங்கள் ஏதும் கலக்கமடையக் கூடாது என்று மறுபடியும் எச்சரிக்கிறேன்; முதல் முறை படிக்கும் போது தெளிவில்லாதது, இரண்டாம் முறை படிக்கும் போது அல்லது பின்னர் அந்தப் பிரச்சினையைச் சற்று வேறுபட்ட ஒரு கோணத்திலிருந்து அணுகும் போது தெளிவாகிவிடும். ஏனென்றால், இந்தப் பிரச்சினை மிகச் சிக்கலானதோடு, முத லாளித்துவ அறிஞர்களும் எழுத்தாளர்களும் இதனை மிகவும் குழப்பியும் விட்டிருக்கிறார்கள் என்பதைத் திரும்பவும் சொல் கிறேன். ஆகவே இந்தப் பிரச்சினையை ஆழமாக ஆராய்ந்து, அதில் சொந்த முயற்சியால் தேர்ச்சி பெற விரும்பும் யாரும் இதனைப் பலகாலும் முனைந்து பயில வேண்டும்; அதனைப் பற்றித் திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும்; அதனைத் தெளிவாகவும் திண்ணமாகவும் புரிந்து கொள்ளுவதற்குப் பல்வேறு கோணங்களிலிருந்தும் இப்பிரச்சினையைப் பரிசீ லிக்க வேண்டும். இப்பிரச்சினைக்கே மீண்டும் திரும்புவது என்பது மிகவும் எளிது; ஏனெனில், அரசியல் முழுவதற்குமே இது அவ்வளவு மூலாதாரமான, அடிப்படையான ஒரு பிரச் சினையாகும். மேலும், தற்காலம் போல அத்தனை புயல்

வீசும் புரட்சிகரக் காலங்களில் மட்டும் அல்லாமல், மிகமிக அமைதியான காலங்களில்கூட, ஒவ்வொரு நாளும் எந்தச் செய்தித்தாளிலும் ஏதேனும் ஒரு பொருளாதார அல்லது அரசியல் பிரச்சினேயோடு சம்பந்தப்பட்டு இந்தப் பிரச்சினே உங்களுக்கு எதிர்ப்படும். அரசு என்பது என்ன? அதன் தன்மை யாது? அதன் முக்கியத்துவம் என்ன? நமது கட்சி, முதலாளித்துவத்தைத் தூக்கி எறியப் போராடும் கட்சி, அதாவது கம்யூனிஸ்டுக் கட்சி, அரசு விஷயத்தில் கொண்டுள்ள நிலே என்ன?—இக்கேள்விக்கு யாதேனுமொரு தொடர்பில் ஒவ்வொரு நாளும் நீங்கள் திரும்ப நேரும். மேலும், பல்வேறு வகையான சந்தர்ப்பங்களில், மிகமிக அற்பமான பிரச்சினேகளேயொட்டி, மிகவும் எதிர்பாராத தறுவாய்களில், எதிரிகளோடு நடத்தும் விவாதங்கள், தர்க்கங்கள் ஆகியவற்றில், இந்தப் பிரச்சினே உங்கள் எதிர்நிற்கக் காண்பீர்கள். ஆதலால், உங்கள் படிப்பின் பயனுய், அரசு என்பது பற்றி நீங்கள் செவிமடுக்கும் உரையாடல்கள், விரிவுரைகள் ஆகியவற்றின் பயனுய், நீங்கள் இந்தப் பிரச்சினேயைப் பிறர் துணேயின்றியே அணுகும் ஆற்றலேப் பெறுவது முக்கியமாகும். இப்பிரச்சினேயைப் பிறர் துணேயின்றி ஆராயும் வழியை நீங்கள் கற்ருல்தான், உங்கள் கொள்கைத் துணிபுகளில் போதியளவு உறுதிகொண்டவர்களாக உங்களே நீங்கள் கருத முடியும், யாரையும் எதிர்த்து எந்த நேரத்திலும் அவற்றைப் போதிய வெற்றியுடன் தற்காத்து நிற்க முடியும்.

இச்சுருக்கமான குறிப்புக்களேத் தொடர்ந்து, இனி நான் அப்பிரச்சினேயையே ஆராயப் போகிறேன்: அரசு என்பது என்ன? அது எவ்வாறு தோன்றியது? முதலாளித்துவத்தை அறவே தூக்கியெறியப் போராடுகின்ற தொழிலாளி வர்க்கத்தின் கட்சியான கம்யூனிஸ்டுக் கட்சி, அரசு என்பது பற்றிக் கொள்ள வேண்டிய நிலே அடிப்படையில் யாது?

அரசைப் பற்றிய பிரச்சினேயைப் போல முதலாளித்துவ விஞ்ஞானம், தத்துவம், சட்டக்கலே, அரசியல், பொருளியல், கட்டுரைப் பிரசுரத் தொழில் ஆகியவற்றின் பிரதிநிதிகளால் தெரிந்தோ தெரியாமலோ அவ்வளவு குழப்பிவிடப்பட்ட

வேருெரு பிரச்சினையை நீங்கள் காண்பது அருமை என்று நான் முன்பே கூறியுள்ளேன். இப்பிரச்சினை இந்நாள் வரையில் மதம் பற்றிய பிரச்சினைகளோடு அடிக்கடி பிணைத்துக் குழப்பப்பட்டிருக்கிறது. மதப் போதனைகளைப் பின்பற்றுவோர்கள் மட்டும் அன்றி (அவர்களிடம் அதனை எதிர்பார்ப்பது முற்றிலும் இயற்கைதான்), மதக் காழ்ப்பினின்றும் விடுபட்டவராகத் தம்மைக் கருதுகின்றவர்கள்கூட, அரசு என்பது பற்றிய தனிப் பிரச்சினையை மதம் பற்றிய பிரச்சினைகளோடு மிக அடிக்கடி குழப்புகின்றனர்; அத்துடன், ஒரு போதனையையே—சித்தாந்தபூர்வமாகவும் தத்துவரீதியிலும் அணுகப் பெற்ற, வாதங்களும் முடிவுகளும் நிறைந்த, பெரும்பாலும் மிகச் சிக்கலான ஒரு போதனையையே—உருவாக்கவும் பாடுபடுகின்றனர். அரசு என்பது ஏதோ தெய்வீகமானது; இயற்கைக்கு அப்பாற்பட்டது; மனித இனம் வாழ்வதற்கே காரணமான ஏதோ ஒரு வகை ஆற்றல்; மனிதனுடையதல்லாத ஒன்றை, அவனுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்ருல் கொடுக்கப்பட்டதை அது தன்னேடு கொண்டுவருகிறது, மக்களுக்கு அதனை வழங்குகிறது அல்லது வழங்குவதற்காக வைத்திருக்கிறது—அரசு தெய்வத்தால் தோற்றுவிக்கப்பெற்ற ஓர் ஆற்றல் என்றெல்லாம் இந்தப் போதனை கொண்டாடுகிறது. அத்துடன் வேறு ஒன்றையும் சொல்லியாக வேண்டும்: இந்தப் போதனை சுரண்டும் வர்க்கங்களின்—நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகியவர்களின்—நலன்களோடு மிகமிக நெருக்கமாகப் பிணைக்கப் பெற்றிருக்கிறது; அவர்களின் நலன்களுக்காக மிக நன்ருகப் பணி புரிகிறது; முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகளாகத் திகழும் கனவான்களின் பழக்க வழக்கங்கள், கருத்துக்கள், விஞ்ஞானங்கள் எல்லாவற்றிலுமே அது மிக ஆழமாக இழைந்து கலந்திருக்கிறது; ஆகவேதான் அந்தப் போதனையின் மிச்சசொச்சங்கள் எங்குமிருப்பதை நீங்கள் காணலாம். தாங்கள் மதக் காழ்ப்புக்களுக்கு அடிமைப்பட்டவர்கள் என்று குறிப்பிட்டால் அதனை மிக்க வெறுப்புடன் மறுத்து, அரசு என்பதைத் தாங்கள் நிதானப் பார்வையுடன் கருதக் கூடியவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-

புரட்சியாளர்கள்[1] ஆகியோர் அரசு பற்றிக் கொண்டுள்ள கருத்தில்கூட அந்தப் போதனையின் மிச்சசொச்சங்களைக் காணலாம். இந்தப் பிரச்சினை இவ்வளவு தூரம் குளறுபடி செய்து சிக்கலாக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் யாதெனில், மற்ற எந்தப் பிரச்சினைகளையும்விட (பொருளாதார விஞ்ஞானத்தின் அடிப்படை அம்சங்களைத் தவிர்த்து) அதிகமாக ஆளும் வர்க்கங்களின் நலன்களை இது பாதிக்கிறது. சமுதாயச் சலுகையை நியாயப்படுத்தும் வகையில், சுரண்டல் நிகழ்வதை நியாயப்படுத்தும் வகையில், முதலாளித்துவம் இருப்பதை நியாயப்படுத்தும் வகையில், அரசு பற்றிய போதனை பணி புரிகிறது. எனவே, இந்தப் பிரச்சினையில் ஒரு தலைச் சார்பற்ற பண்பை எதிர்பார்ப்பதும், விஞ்ஞானப் போக்கு உடையவராகத் தங்களைக் கூறிக் கொள்ளுகிறவர்கள், இப்பொருள் பற்றி முழுக்க முழுக்க விஞ்ஞான முறையைத் தழுவிய ஒரு கருத்தைத் தரக் கூடும் என்ற நம்பிக்கையோடு இந்தப் பிரச்சினையை அணுகுவதும், மாபெரும் தவறாகும். இப்பிரச்சினை பற்றிய நல்ல தெளிவு உங்களுக்கு ஏற்படும் பொழுது, போதிய அளவு ஆழமாகச் சென்று அதை ஆராய்ந்த பிறகு அரசு என்பது பற்றிய பிரச்சினையில், அரசு பற்றிய போதனையில், அரசு பற்றிய தத்துவத்தில், பல்வேறு வர்க்கங்களுக்கிடையிலும் நிகழும் போராட்டத்தை—அரசு பற்றிய கருத்து முரண்பாட்டின் மூலமும், அரசு வகிக்கும் பங்கையும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றிய மதிப்பீட்டின் மூலமும் வெளிப்படுகிற அல்லது பிரதிபலிக்கப்படுகிற போராட்டத்தை—நீங்கள் என்றென்றும் காண்பீர்கள்.

இந்தப் பிரச்சினையை முடிந்த அளவுக்கு விஞ்ஞான முறைப்படி அணுகும் பொருட்டு, அரசு என்பதன் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய வரலாற்றை மேலோட்டமாகவாவது பார்வையிட வேண்டும். சமூக விஞ்ஞானம் பற்றிய பிரச்சினையில் மிகமிக நம்பகமான விஷயம், இந்தப் பிரச்சினையைச் சரிவர அணுகும் பழக்கத்தை உண்மையிலேயே பெறுவதற்கும், சில்லறை விவரங்களின் திரளிலோ முரண்பட்ட கருத்துக்களின் மிகப் பெரிய வேறுபாட்டிலோ சிக்கி வழி தவறி விடாமலிருப்பதற்கும் மிகமிக அவசியமான ஒன்று—

இந்தப் பிரச்சினையை விஞ்ஞான ரீதியில் அணுகுவதற்கு மிகமிக முக்கியமானது—என்னவென்றால் அடிப்படையான வரலாற்றுத் தொடர்பை மறவாதிருப்பதும், ஒவ்வொரு பிரச்சினையையும் ஆராயும் போது, குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி வரலாற்றில் எவ்வாறு தோன்றியது, அது தன் வளர்ச்சிப் போக்கில் என்னென்ன முக்கியமான கட்டங்களைக் கடந்து சென்றது என்ற நிலைகளினின்று ஆராய்வதும் அவ்வாறு ஏற்பட்ட வளர்ச்சி நிலையிலிருந்து குறிப்பிட்ட பொருள் இன்று என்னவாக ஆகியிருக்கிறது என்பதை ஆராய்வது மாகும்.

அரசு என்ற பிரச்சினையைப் பொறுத்தவரை, நீங்கள் எங்கெல்ஸ் எழுதிய **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகிய வற்றின் தோற்றம்** என்ற நூலைப் படிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நவீன சோஷலிசத்திற்குரிய அடிப்படை நூல் களில் இது ஒன்று; அதன் ஒவ்வொரு வாக்கியத்தையும் நம்பிக்கையோடு ஏற்கலாம்; அதாவது, அவ்வாக்கியம் மனம் போனவாறு கூறப்பட்டதன்று, வரலாற்று, அரசியல் சம்பந்த மாக அளவற்ற விவரங்களை அடிப்படையாகக் கொண்டது என்ற உறுதியோடு ஏற்கலாம். இந்த நூலின் எல்லாப் பகுதிகளும் ஒரே நிகராகச் சகலருக்கும் புரியக் கூடிய வகை யில் எடுத்து விளக்கப்படவில்லை என்பதில் ஐயமில்லைதான். வரலாறு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஒரு குறிப் பிட்ட அளவு அறிவுடைய வாசகரை மனத்திற்கொண்டே நூலின் சில பகுதிகள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் இந்த நூலைப் படித்ததும், அதை உடனேயே புரிந்துகொள்ளா விடில், நீங்கள் கலக்கமுறக் கூடாது என்று நான் மீண்டும் சொல்லுகிறேன். இந்நூலை எடுத்த எடுப்பில் புரிந்துகொள் வது எவருக்கும் அரிது. பின்பு, உங்கள் ஆர்வம் தூண்டிவிடப் படும் போது, அதை மீண்டும் படித்தீர்களானால், அதனை முழுக்கவும் இல்லாவிட்டாலும், அதன் பெரும் பகுதியைப் புரிந்து கொள்வதில் வெற்றியுறுவீர்கள். நான் இந்நூலைக் குறிப்பிடுவதன் காரணம் யாதெனில் இங்குக் குறிக்கப்பட்ட பொருளில் இந்தப் பிரச்சினையை ஆராய்வதற்கான சரியான வழியை அது காட்டுகின்றது. அரசினது தோற்றத்தின்

வரலாறு பற்றிய ஒரு சுருக்கவுரையுடன் அது தொடக்கமாகிறது.

இந்தப் பிரச்சினையை முறையாக ஆராய்வதற்கு நாம் அதன் வளர்ச்சி பற்றிய வரலாறு முழுவதன் மீதும் கண்ணோட்டுவது இன்றியமையாததாகும். மற்ற ஒவ்வொரு பிரச்சினையையும் போலத்தான் இதுவும். எடுத்துக்காட்டாக, முதலாளித்துவத்தின் தோற்றம், மனிதனை மனிதன் சுரண்டுதல், சோஷலிசம், சோஷலிசம் எவ்வாறு தோன்றியது, அது தோன்றுவதற்குக் காரணமான சூழ்நிலைகள் யாவை என்பன போன்ற எந்தப் பிரச்சினையையும் ஆழமான முறையில் நம்பிக்கையுடன் ஆராய்வது என்பது, அதன் வளர்ச்சி பற்றிய வரலாறு முழுவதையும் நாம் பார்வையிட்டால்தான் முடியும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, அரசு என்றும் இருந்ததில்லை என்பதை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும். அரசு இல்லாதிருந்த காலம் ஒன்றும் இருந்தது. எங்கெங்கே, எவ்வெப்போது, சமுதாயத்தில் வர்க்கப் பிரிவினை தோன்றுகிறதோ, சுரண்டுவோரும் சுரண்டப்படுவோரும் தோன்றுகிறார்களோ, அங்கெல்லாம் அவ்வப்போது அரசும் தோன்றுகிறது.

மனிதனை மனிதன் சுரண்டுகிற முதல் வடிவம், வர்க்கங்களாக — ஆண்டைகளாகவும் அடிமைகளாகவும் — பிரிக்கிற முதல் வடிவம் தோன்றுவதற்கு முன்பு தந்தைவழிக் குடும்பம் இருந்தது; இதையே சிலவேளை கிளான் வழிக் குடும்பம் என்றும் கூறுவதுண்டு (கிளானாவது—குலம், தலைமுறை ஆகியவற்றுக்கு இணங்க மக்கள் கூடிவாழும் போது உண்டாகும் தலைமுறை, குலம்). இந்த ஆதிகாலத்திற்குரிய ஓரளவு திட்டமான அறிகுறிகள், பல ஆதி மக்களினங்களது வாழ்க்கையில் இன்றளவும் தப்பிப் பிழைத்திருக்கின்றன; இன்னும் ஆதிகாலப் பண்பாடு பற்றிய எந்த ஒரு நூலை நீங்கள் எடுத்தாலும், ஆதிகாலக் கம்யூனிசத்தை ஓரளவு ஒத்திருக்கும் காலம், அடிமைகள் என்றும் ஆண்டைகள் என்றும் சமுதாயம் பிரிக்கப்படாத காலம் ஒன்று இருந்தது என்பது பற்றிய வெவ்வேறு அளவிலான, திட்டமான விளக்கங்களையும், குறிப்புக்களையும், நினைவுகளையும் நீங்கள் எப்பொழுதும் காண்பீர்

கள். மேலும், அக்காலத்தில், அரசு என்பது இருந்ததில்லை; முறையாகப் பலாத்காரத்தைப் பிரயோகிக்கும் ஒரு தனி இயந்திரம், பலாத்காரத்தால் மக்களை அடிமைப்படுத்தும் ஒரு தனி இயந்திரம் இருந்ததில்லை. அவ்வகை இயந்திரமே அரசு எனப்படும்.

ஆதிகாலச் சமுதாயத்தில், மக்கள் சிறுசிறு குலங்களாக வாழ்ந்த காலத்தில், வளர்ச்சியின் மிகமிகத் தாழ்ந்த படியிலே, ஓரளவு காட்டுமிராண்டி நிலையை ஒத்த ஒரு நிலையிலேயே இன்னும் வாழ்ந்த நாளில்—நாகரிகம் படைத்த இன்றைய மனிதச் சமுதாயத்துக்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு காலகட்டத்தில்—அரசு என்ற ஒன்று இருந்ததற்குரிய அறிகுறிகளே தென்படவில்லை. அங்கே, வழக்கம், மரபு இவற்றின் ஆதிக்கத்தையும் குலத் தலைவர்கள் வைத்தாண்ட செல்வாக்கு, மதிப்பு, அதிகாரம் இவற்றையுமே நாம் காண்கிறோம், இந்த அதிகாரம் சிலவேளை மகளிருக்கும் அளிக்கப்பெற்றிருந்ததைக் காண்கிறோம்—அன்றைய மகளிர் நிலை, இன்றைய மகளிரின் உரிமைகளற்ற ஒடுக்கப்பட்ட நிலை போல இருந்ததில்லை. ஆனால் அந்தக் காலத்தில், மற்றவரை ஆள்வதற்காகவும், ஆள்வதையே நோக்கமாகக் கொண்டும் ஒரு வகைக் கட்டாயப் படுத்தும் இயந்திரத்தை, பலாத்கார இயந்திரத்தை ஒழுங்காகவும், நிரந்தரமாகவும் கையாளுவதற்காக மக்களிடையே பிரித்து வைக்கப்பட்ட தனி வகை ஆட்களை நாம் எங்கும் காண்பதில்லை. வன்முறைக்கு மற்றவருடைய சித்தத்தைப் பணியச் செய்வதற்குரிய சாதனங்களான ஆயுதமேந்திய இராணுவப் பிரிவுகள், சிறைச்சாலைகள், போன்றவை முன் சொன்ன இயந்திரத்தின் இன்றைய உருவம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அரசு என்பதன் கருப்பொருள் இவை அனைத்திலும் அடங்கியிருக்கிறது. இவற்றை ஆதிகாலச் சமுதாயத்தில் எங்குமே நாம் காண்பதில்லை.

முதலாளித்துவ அறிஞர்கள் முன்வைத்துள்ள மதப் போதனைகள் என்று கூறப்படுபவை, தந்திர உபாயங்கள், தத்துவஞானவாதங்கள், பல்வேறு கருத்துக்கள் ஆகியவற்றை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, விஷயத்தின் உண்மையான

சாரத்தை மட்டும் அறிய முயன்ருல், அரசு என்பது, உண்மையில், மனிதச் சமுதாயத்தினின்று பிரிக்கப்பட்டு இயங்கும் அத்தகைய ஆட்சி செலுத்தும் இயந்திரமாவதை நாம் காண்போம். வேறு எக்காரியத்திலும் ஈடுபடாது, ஆளுவதையே தொழிலாகக் கொண்ட ஒரு தனிப் பிரிவினர் தோன்றும் போது, பிறருடைய சித்தத்தை வலுவந்தமாகப் பணிய வைக்கக் கூடிய ஒரு விசேஷ இயந்திரம்—சிறைச் சாலேகள், விசேஷப் படைகள், இராணுவம் முதலியவை—ஆளும் பொருட்டு அவர்களுக்குத் தேவைப்படும் போது, அரசு என்பது தோன்றுகிறது.

என்ருலும், அரசென்பதே இல்லாத காலம் ஒன்று இருந்தது. அப்பொழுது, பொதுத் தொடர்புகள், சமுதாயமேகூட, ஒழுங்குமுறை, வேலே செய்யும் முறை ஆகிய எல்லாம் பழக்கவழக்கம், சம்பிரதாயம் ஆகியவற்றின் பலத்திஞலோ குலத்தின் மூத்தோர்கள் அல்லது மகளிர் பெற்றிருந்த செல்வாக்கிஞலோ உயர் மதிப்பிஞலோ நிர்வகிக்கப் பெற்றன—மகளிரோ, அந்நாளில் ஆடவரோடு சரி நிகரான நிலேயைப் பெற்றிருந்ததோடு, பல சமயங்களில் ஆடவரிலும் உயர்ந்த நிலேயைக்கூடப் பெற்றிருந்தார்கள். அந்நாளில் ஆளுவதில் தனித் தேர்ச்சி பெற்ற வகையினர் இருந்ததில்லே. எங்கு எப்போது சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிந்ததோ, அதாவது மக்களிடையே ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினரின் உழைப்பை நிரந்தரமாக அபகரித்துக் கொள்ள முடிகிற, ஒரு வகையினர் மற்ற வகையினரைச் சுரண்டுகிற மக்கள் குழுக்களாகப் பிரிந்ததோ, அங்கு அப்போது அரசு என்பது மக்கஃா நிர்ப்பந்திக்கும் விசேஷ இயந்திரமாகத் தோன்றியது என்று வரலாறு காட்டுகிறது.

சமுதாயம் இவ்வாறு வர்க்கங்களாகப் பிரிந்ததை வரலாற்றின் ஓர் அடிப்படை உண்மையாக எப்போதும் தெளிவாக மனதில் இருத்துதல் வேண்டும். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக, எல்லா மனிதச் சமுதாயங்களின் வளர்ச்சியும் விதிவிலக்கில்லாமல் எல்லா நாடுகளிலும் பொது விதிக்கு உட்பட்டு, முறையாகவும் ஒத்தியைந்த வழியிலும் நடந்திருக்கும் என்பதைக் காட்டுகிறது. அவ்வகையில், முதற்கண்

சமுதாயம் வர்க்கங்கள் இன்றி இருந்தது—தொடக்க காலத்திய தந்தைவழி, ஆதிகாலத்திற்குரிய சமுதாயம். அதில் உயர்குடி மக்கள் என்போர் இருந்ததில்லை. பிறகு அடிமை முறையிலமைந்த ஒரு சமுதாயத்தை—ஆண்டை அடிமைச் சமுதாயத்தை—நாம் காண்கிறோம். நாகரிகம் படைத்த இன்றைய ஐரோப்பா முழுவதும், இந்தக் கட்டத்தைக் கடந்து தான் வந்திருக்கின்றது — இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அடிமை முறை இங்கு ஆதிக்கம் செலுத்தியது. உலகத்தின் மற்றப் பகுதிகளிலுள்ள மிகவும் பெரும்பாலான மக்களினங்கள் இந்தக் கட்டத்தைக் கடந்து வந்திருக் கின்றன. குறைந்த வளர்ச்சி பெற்ற மக்களினங்களிடையே இன்றளவும் அடிமை முறையின் அடையாளங்கள் நீடித்திருக் கின்றன. இன்றைக்கும், எடுத்துக்காட்டாக ஆப்பிரிக்காவில், அடிமை முறை ஏற்பாடுகளைக் காணலாம். ஆண்டைகளும் அடிமைகளும் முதன்முதல் ஏற்பட்ட முக்கிய வர்க்கப் பிரிவு கள் ஆவர். முதலில் கூறப்பட்ட பிரிவினர் நிலமும் கருவி களும்—அக்கருவிகள் அக்காலத்தில் எவ்வளவுதான் பண்பட டாத நிலையில் இருந்தாலும்—ஆகிய உற்பத்திச் சாதனங் கள் அனைத்தையும் மட்டுமல்ல, மக்களையும்கூடத் தம் உடைமையாக்கிக் கொண்டார்கள். இந்தப் பிரிவினர் ஆண்டை கள் எனப்பட்டனர். மற்றவருக்காக உழைத்து, உழைப்பை வழங்கியவர்களோ, அடிமைகள் எனப்பட்டனர்.

வரலாற்றில் இந்த வடிவத்தைத் தொடர்ந்து இன் னொன்று—பண்ணையடிமை முறை—தோன்றியது. மிகவும் பெரும்பாலான நாடுகளில், அடிமை முறை தன் வளர்ச்சிப் போக்கில் பண்ணையடிமை முறையாக உருப்பெற்றது. அப் பொழுது சமுதாயத்தின் அடிப்படைப் பிரிவினை, பண்ணை நிலப்பிரபுக்களும், பண்ணையடிமைகளுமாக அமைந்தது. மக்களுக்கிடையே நிலவிய உறவுகளின் வடிவம் மாறலா யிற்று. ஆண்டைகள் அடிமைகளைத் தங்கள் உடைமையாகவே மதித்திருந்தனர். சட்டம் இந்தக் கருத்தை உறுதிப்படுத்திய தோடு, அடிமையை முழுக்கவும் ஆண்டைக்கே உரிமைப் பட்ட ஒரு பொருளாகக் கருதியது. பண்ணையடிமைகளைப் பொறுத்த மட்டில், வர்க்க ஒடுக்குமுறையும் சார்பு நிலையும்

தொடர்ந்து இருந்து வந்தன. ஆயினும், குடியானவன் நிலப் பிரபுவின் உடைமையில் உள்ள பொருளாகக் கருதப்பட வில்லை. குடியானவனுடைய உழைப்புக்கும், சில குறிப்பான ஊழியங்களைப் புரியும்படி அவனைக் கட்டாயப்படுத்தவும் மட்டும் நிலப்பிரபு உரிமை பூண்டிருந்தார். ஆனல் நடை முறையில், குறிப்பாக பண்ணையடிமை முறை எல்லா நாடுகளை யும் விட நீண்ட காலமாக நிலவி, மிகவும் கொடுமையான வடிவங்களையும் கொண்டிருந்த ருஷ்யாவில், இது அடிமை முறையினின்று எவ்வகையிலும் வேறுபட்டது இல்லை என்று உங்களுக்குத் தெரியும்.

இதன்பின், பண்ணையடிமைச் சமுதாயத்தில் வாணிபம் வளர்ச்சியுற்று, உலகச் சந்தை தோன்றி, பணப் புழக்கம் வளர்ச்சியுற்றதோடு கூடவே, ஒரு புதிய வர்க்கம் தோன் றிற்று. அதுதான் முதலாளி வர்க்கம். பண்டத்திலிருந்து, பண்ட மாற்றத்திலிருந்து, பணத்தின் ஆதிக்கம் தோன்றிய திலிருந்து எழுந்தது மூலதனத்தின் ஆதிக்கம். பதினெட்டாம் நூற்ருண்டில் அல்லது திட்டவட்டமாகக் கூறினல் பதி னெட்டாம் நூற்ருண்டின் இறுதியிலும், பத்தொன்பதாம் நூற்ருண்டிலும் உலகெங்கும் புரட்சிகள் நிகழ்ந்தன. மேற்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலிருந்தும் பண்ணையடிமை முறை அகற்றப்பட்டது. ருஷ்யாவில் எல்லாவற்றுக்கும் கடைசி யாக இது நிகழ்ந்தது. 1861ல், ருஷ்யாவிலும் ஒரு மாற்றம் உண்டாயிற்று. இதன் விளைவாக, சமுதாயத்தின் ஒரு வடிவத்துக்குப் பதிலாக அதனிடத்தில் மற்ரெரு வடிவம் ஏற்பட்டது. அதாவது, பண்ணையடிமை முறையை அகற்றி விட்டு, முதலாளித்துவம் வந்தது. இதன் கீழ் வர்க்கப் பிரி வினை தொடர்ந்து இருந்து வந்தது. மேலும் பண்ணையடிமை யின் பல்வேறு அடையாளங்களும் மிச்சசொச்சங்களும் தொடர்ந்து இருந்து வந்தன. என்ருலும், வர்க்கப் பிரிவினை அடிப்படையில் ஒரு புதிய உருவத்தை மேற்கொள்ளலா யிற்று.

எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் உள்ள மூலதனத் திற்கு உடைமையாளர், நிலத்திற்கு உடைமையாளர், ஆலை களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் உடைமையாளர் ஆகியோர்

மக்கள் தொகையில் மிகமிகச் சிறுபான்மையராகவே இருந்தார்கள், இன்னும் இருக்கிறார்கள். ஆனால் மக்கள் எல்லோருடைய உழைப்பும் முழுக்க முழுக்க இவர்கள் வசத்தில் இருக்கிறது. இதன் நேர் விளைவாக, உழைப்பாளி மக்களின் திரண்ட தொகுதி முழுவதன் மீதும் இவர்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள், அதை ஒடுக்குகிறார்கள், சுரண்டுகிறார்கள். உழைப்பாளி மக்களில் பெரும்பாலோர் பாட்டாளிகளாய், கூலித் தொழிலாளர்களாய் வாழ்பவர்கள்; அதாவது, உற்பத்தி முறையில் தங்களுக்கே உரிய உழைக்கும் கரங்களை, தங்கள் உழைப்புச் சக்தியை விலைகூறுவதால் மட்டும் தங்கள் பிழைப்புக்கு வேண்டியதைப் பெறுகிறவர்கள். குடியானவர்கள் பண்ணையடிமைக் காலத்திலேயே ஒற்றுமை கெட்டு, நசுக்கப்பட்டிருந்தார்கள். பண்ணையடிமை முறை போய் முதலாளித்துவம் நிலைபெறத் தொடங்கிய போது, இவர்களில் ஒரு பகுதியினர் (பெரும்பாலானவர்) பாட்டாளிகளாக மாற்றப் பெற்றனர். மற்றொரு பகுதியினர் (சிறுபான்மையர்) செல்வம் படைத்த குடியானவர்களாக, அதாவது தாங்களே தொழிலாளரைக் கூலிக்கமர்த்திக் கொள்வோராய், நாட்டுப்புறத்தைச் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கத்தினராய் மாற்றமடைந்தனர்.

இந்த அடிப்படை உண்மையை—அதாவது, சமுதாயம் அடிமை முறையின் ஆதிகால வடிவங்களிலிருந்து பண்ணையடிமை நிலைக்கும், பிறகு, இறுதியாக, முதலாளித்துவத்திற்கும் மாறியதை—எப்போதும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், இந்த அடிப்படை உண்மையை நினைவில் கொள்வதால் மட்டுந்தான், எல்லா அரசியல் போதனைகளையும் இந்த அடிப்படைத் திட்டத்தில் வைத்துப் பரிசீலிப்பதால் மட்டுந்தான், இந்தப் போதனைகளைச் சரியான வகையில் மதிப்பிட்டறியவும், அவை குறிப்பது என்ன என்பதைப் புரிந்துகொள்ளவும் முடியும். மனித இனத்தின் வரலாற்றில், அடிமை முறையும், பண்ணையடிமை முறையும், முதலாளித்துவமுமான இந்தப் பெருங்காலப் பகுதிகளில் ஒவ்வொன்றும் பத்துக்கணக்கான, நூற்றுக்கணக்கான நூற்றாண்டுகளைக் கொண்டது. மற்றும் ஏராளமான பல அரசியல் வடிவங்களை,

வெவ்வேறான அரசியல் போதனைகளை, கருத்தோட்டங்களை, புரட்சிகளையெல்லாம் தோன்றச் செய்துள்ளது. முதலாளித்துவ அறிஞர்கள், அரசியல்வாதிகள் ஆகியவர்களின் அரசியல், தத்துவஞான, இன்னும் பிற போதனைகளுடன் சிறப்பாகத் தொடர்புள்ள இந்தப் பெரும் வேறுபாட்டையும் அளப்பரிய வகைப்பாட்டையும் விளங்கிக்கொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு—அதாவது, சமுதாயத்தின் இந்த வர்க்கப் பிரிவினை, வர்க்க ஆதிக்கத்தின் வடிவங்களில் ஏற்பட்ட மாறுதல் ஆகிய இவற்றை வழி காட்டும் சாதனமாகக் கொண்டு இந்தக் கொள்கைநிலையில் உறுதியாக நின்று பொருளாதாரம், அரசியல், ஆன்மிகம், சமயம் முதலானவை பற்றிய எல்லாச் சமுதாயப் பிரச்சினைகளையும் ஆராய்வதே அந்த வழியாகும்.

இந்த அடிப்படைப் பிரிவினை பற்றிய பார்வை நிலையிலிருந்து நீங்கள் அரசு என்பதை ஆராய்வீர்களானால், நான் முன்பே சொல்லியபடி, சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிவதற்கு முன்பு, அரசே இருந்ததில்லை என்பதைக் காண்பீர்கள். ஆயினும், சமுதாயத்தின் வர்க்கப் பிரிவினை உண்டாகி, உறுதியாக வேரூன்றி விட்ட போது, வர்க்கச் சமுதாயம் தோன்றி விட்ட போது, அரசு என்பதும் கூடவே தோன்றி, உறுதியாகவும் வேரூன்றி விட்டது. அடிமை முறை, பண்ணையடிமை முறை, முதலாளித்துவம் ஆகிய கட்டங்களைக் கடந்து சென்ற, இன்னும் சென்று கொண்டிருக்கிற பதிற்றுக்கணக்கான நூற்றுக்கணக்கான நாடுகளை மனித இனத்தின் வரலாறு கண்டிருக்கிறது. இவற்றில் ஒவ்வொரு நாட்டிலும், அளவற்ற வரலாற்று மாறுதல்கள் ஏற்பட்டிருப்பினுங்கூட, மனித இனத்தின் இந்த வளர்ச்சியோடு, அடிமை நிலையிலிருந்து பண்ணையடிமை முறையின் வழியாக முதலாளித்துவத்திற்கும் முதலாளித்துவத்தை எதிர்த்து உலகெங்கும் பரவிய இன்றையப் போராட்டத்திற்கும் சமுதாயம் மாறிச் சென்றிருக்கும் நிகழ்ச்சியுடனும் தொடர்பு கொண்ட எத்தனையோ அரசியல் திடீர் மாற்றங்களும் எத்தனையோ புரட்சிகளும் ஏற்பட்டிருந்தாலுங்கூட, அரசு என்பதன் தோற்றத்தை நீங்கள் எப்போதும் காண்பீர்கள். சமுதாயத்தினின்றும்

தனித்துப் பிரிந்து ஒரு குறிப்பான இயந்திரமாக அது எப்போதும் இருந்து வந்திருக்கிறது; முற்றவோ அல்லது பெரும்பாலும் முழுக்கவோ அல்லது முக்கியமாகவோ ஆளுகை செய்வதில் ஈடுபட்டவரான மக்கள் குழுவினையே அது கொண்டிருந்து வந்திருக்கிறது. மக்கள், ஆளப்படுவோராகவும் ஆள்வதில் தேர்ந்தவராகவும் பிரிக்கப்பட்டுள்ளனர். கடைசியில் கூறப்பட்டவர்கள், சமுதாயத்திற்கு மேல் உயர்ந்தவர்களாய் ஆளுவோர், அரசின் பிரதிநிதிகள் என அழைக்கப்படுவோராய் இருக்கின்றனர். இந்த இயந்திரம், மற்றவரை ஆள்கின்ற இந்த மக்கள் குழு, கட்டாயப்படுத்துவதற்கான, பௌதிக பலம் கொண்ட ஒரு குறிப்பிட்ட கருவியை எப்போதும் தன்னிடம் எடுத்துக் கொள்ளுகிறது. ஆதிகாலக் குண்டாந்தடி மூலமோ, அல்லது அடிமை முறையின் காலகட்டத்தில் இன்னும் அதிகம் மேம்பட்ட ஆயுத வகைகள் மூலமோ, அல்லது மத்திய காலத்தில் தோன்றிய சுடு கருவிகள் மூலமோ, அல்லது, கடைசியாக, இருபதாம் நூற்றாண்டில் தொழில் நுணுக்கத்தின் அதிசயங்களாக உள்ள, இன்றையத் தொழில்நுட்பக் கலையின் மிகப் புதிய சாதனைகளை ஆதாரமாகக் கொண்ட நவீனக் கருவிகள் மூலமோ, இந்தப் பலாத்காரம் மக்கள் மீது செலுத்தப்படுகின்றது. பலாத்காரத்தின் முறைகள் மாறின. ஆனால், அரசு நிலவிய போதெல்லாம், ஒவ்வொரு சமுதாயத்திலும் மக்களின் ஒரு பகுதியினர் ஆள்வோராய், ஏவல் கொள்வோராய், ஆதிக்கம் புரிவோராய், தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டி, பௌதிக நிர்ப்பந்தத்திற்கான ஓர் இயந்திரத்தை, பலாத்கார இயந்திரத்தை, அவ்வக்காலத்தின் தொழில் நுணுக்கத் தரத்திற்கு ஒத்த ஆயுதங்களைப் பெற்றிருந்தனர். இந்தப் பொது நிகழ்ச்சிகளை ஆராய்வதன் மூலம், வர்க்கங்களே இருந்திராத காலத்தில், சுரண்டுவோரும் சுரண்டப்படுவோரும் இருந்திராத காலத்தில் அரசென்பது இருந்ததில்லையே ஏன் என்பதையும், வர்க்கங்கள் தோன்றிய போது அதுவும் தோன்றியது ஏன் என்பதையும் நம்மையே நாம் கேட்டுக்கொள்வதன் மூலம் மட்டுந்தான், அரசின் கருப்

பொருள் என்ன, அதன் பாத்திரம் என்ன என்ற கேள்விக்கான ஒரு திட்டமான விடையை நாம் பெறுவோம்.

அரசென்பது, ஒரு வர்க்கத்தின் மீது மற்ருெரு வர்க்கத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக உள்ள ஓர் இயந்திரம். சமுதாயத்தில் வர்க்கங்களே இல்லாத போது, அடிமை முறையின் கால கட்டத்திற்கு முன்பு மக்கள் அதிக சமத்துவமுடைய ஆதிகால நிலையிலேயே உழைத்த நாளில், உழைப்பின் உற்பத்தித் திறன் மிகமிகக் கீழ்ப்படியில் இன்னும் இருந்து வந்த சூழ்நிலையில், முற்றிலும் பண்படாத, மிகமிக எளிய வாழ்வுக்கான சாதனங்களைப் பெறுவதே ஆதிகால மனிதனுக்கு அரிதாக இருந்த அந்நாளில், மக்களின் தனித்த ஒரு பிரிவு—சமுதாயத்தின் மற்றப் பகுதியின் மேல் ஆளுகையும் ஆதிக்கமும் புரிய வேண்டித் தனியாக ஒதுங்கிப் பிரிந்த ஒன்று—இன்னும் தோன்றவில்லை; தோன்றியிருக்கவும் முடியாது. சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிவதின் முதல் வடிவம் தோன்றிய போதுதான், அடிமை முறை தோன்றிய போதுதான், மக்களின் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினர் உழவுத் தொழிலின் சற்றும் பண்படாத முறைகளில் முனைந்து ஈடுபட்டு, அதன் மூலம் தேவைக்கு மேல் ஓரளவு உபரிப் பொருளை உற்பத்தி செய்ய முடிந்த போதுதான், இந்த உபரிப் பொருள் அடிமையின் மிகமிகக் கடைகெட்ட வாழ்வுக்கு இன்றியமையாததாக இல்லாமல், அது ஆண்டையின் கைகளில் சேர்ந்து விட்ட போதுதான், இவ்வாருக ஆண்டைகள் என்ற இவ்வர்க்கத்தின் நிலை உறுதியான போது—அது மேலும் உறுதியாக வேண்டி, அரசு தோன்ற வேண்டியது அவசியமாயிற்று.

அது தோன்றியே விட்டது—அதாவது, ஆண்டைகளின் அரசு, ஆண்டைகளுக்கு அதிகாரம் தந்து, அடிமைகள் எல்லோர் மீதும் ஆட்சி புரியும் திறனுடையவராக அவர்களை ஆக்கிய ஓர் இயந்திரம் தோன்றியே விட்டது. சமுதாயம், அரசு இரண்டுமே இன்று இருப்பவற்றினும் அன்று மிகமிகச் சிறியனவாக இருந்தன. இன்றைய நிலையுடன் ஒப்பிடவே முடியாத அளவு வலுக்குறைவான தொடர்பு நிலவுவதற்கான சாதனங்களையே அவைகள் கொண்டிருந்தன—தற்

காலத்துப் போக்குவரவுச் சாதனங்கள் அன்று இருந்ததில்லை. மலைகளும், ஆறுகளும், கடல்களும் இன்று இருப்பதை விட அளந்தறிய முடியாதவாறு மாபெரும் தடைகளாக இருந்தன. அரசு உருவாவது தற்காலத்துடன் ஒப்பிடும் போது மிகக் குறுகிய பூகோள எல்லைகளுக்கு உட்பட்டிருந்தது. நிர்வாக முறைகளில் வலுக்குறைந்த அரசாங்க இயந்திரம் ஒப்புநோக்கில் குறுகலான எல்லைகள், குறுகலான செயல் வட்டம் ஆகியவற்றுள் அடங்கிக் கிடந்த அரசுக்குப் பணியாற்றியது. ஆயினும் அடிமைகள் தொடர்ந்து அடிமைகளாயிருக்குமாறு கட்டாயப்படுத்திய, சமுதாயத்தின் ஒரு பகுதி மற்ரொன்றுக்கு அடிமைப்பட்டு, அதனுல் ஒடுக்கப்பட்டு இருக்குமாறு செய்த ஓர் இயந்திரம் இருக்கத்தான் செய்தது. நிர்ப்பந்தத்திற்கான நிலைத்த இயந்திரம் இல்லாமல் சமுதாயத்தின் பெரும்பாலான பகுதியை சமுதாயத்தின் மற்றப் பகுதிக்காக முறையாக உழைக்கும்படிக் கட்டாயப்படுத்துவது முடியாத காரியம். வர்க்கங்கள் இல்லாமலேயிருந்த வரையில், இந்த இயந்திரமும் இருந்ததேயில்லை. வர்க்கங்கள் தோன்றிய போது, எங்கும் எப்போதும் இந்தப் பிரிவினை வளர்ச்சி பெற்று வலுவடைந்ததோடுகூட தனித்த ஓர் ஏற்பாடு—அதாவது அரசு—தோன்றிற்று. அரசின் வடிவங்கள் அளவிறந்து வேறுபட்டவை. அடிமை முறையின் காலப் பகுதியிலேயே இந்தக் காலத்துக்கேற்ப மிகமிக முன்னேற்றமும் பண்பாடும் நாகரிகமும் பெற்ற நாடுகளில்—எடுத்துக்காட்டாக, முற்றிலும் அடிமை முறையின் அடிப்படையில் நிலைபெற்றிருந்த பண்டைய கிரேக்க, ரோம தேசங்களில்—அரசின் பல்வேறு வடிவங்கள் இருந்ததை நாம் காண்கிரேம். அக்காலத்திலேயே முடியரசுக்கும் குடியரசுக்கும் இடையே, உயர்குடியாட்சிக்கும் ஜனநாயக ஆட்சிக்கும் இடையே வேற்றுமை தோன்றிற்று. முடியரசென்பது தனி ஒரு மனிதனின் அதிகாரம். குடியரசென்பது தேர்தல் மூலம் பெருதயாதொரு அதிகாரமும் இல்லாதிருப்பது. உயர்குடியாட்சி என்பது, மொத்த மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது, மிகச் சிறுபான்மையோரின் அதிகாரம். ஜனநாயக ஆட்சி என்பது மக்களின் அதிகாரம் (கிரேக்க மொழியில் ''டிமாக்

ரஸி'' என்ற சொல்லின் பொருள் மக்களின் அதிகாரம் என்பது). இவ்வேற்றுமைகள் எல்லாம் அடிமை முறையின் கால கட்டத்தில் எழுந்தன. இவ்வேற்றுமைகள் இருந்துங்கூட, அடிமை முறைக் கால கட்டத்தின் அரசு—அது முடியரசாகவோ, அல்லது உயர்குடி மக்களின் குடியரசாகவோ, அல்லது ஜனநாயகக் குடியரசாகவோ எவ்வாறிருந்தாலும்—அடிமை முறை அரசாகவே இருந்தது.

பண்டைக் கால வரலாறு பற்றிய ஒவ்வொரு வகுப்பிலும் இப்பொருள் பற்றிய விரிவுரையைக் கேட்குங்கால், முடியரசுகளுக்கும் குடியரசுகளுக்குமிடையே நிகழ்ந்த போராட்டத்தைப் பற்றி நீங்கள் கேட்பீர்கள். ஆயினும் அடிமைகள் மனிதப் பிறவிகளாக மதிக்கப்படவில்லை என்பது அடிப்படை உண்மையாகும். அவர்கள் குடிமக்களாக மதிக்கப்படாதது மட்டுமன்று, அவர்கள் மனிதப் பிறவிகளாகக்கூட மதிக்கப் படவில்லை. ரோமானியச் சட்டம் அவர்களை வெறும் தட்டு முட்டுப் பொருளாகவே மதித்தது. மனித வதை பற்றிய சட்டமே அடிமைகளுக்குச் செலுத்தப் பெறவில்லை என்றால், தனிநபர் பாதுகாப்புக்காக உள்ள மற்றச் சட்டங்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? அது ஆண்டைகளுக்கு மட்டுந் தான் பாதுகாப்பளித்தது. அவர்கள் மட்டுமே முழுவுரிமை கொண்ட குடிமக்களாகக் கருதப்பட்டனர். முடியரசோ, அல்லது குடியரசோ எது ஏற்படுத்தப்படினும், அது ஆண்டைகளின் முடியரசாகவோ, அல்லது ஆண்டைகளின் குடியரசாகவோதான் திகழ்ந்தது. அவற்றின் கீழ் ஆண்டைகளே எல்லா உரிமைகளையும் அனுபவித்தனர். அடிமையோ, சட்டப் பிரகாரம் ஒரு பொருளாகவே இருந்தான். அடிமைக்கு எவ்வகைப்பட்ட கொடூரத்தையும் இழைக்க முடியும் என்பது மட்டுமல்ல, அடிமையைக் கொல்வதுகூடக் குற்றமாகக் கருதப்படவில்லை. அடிமை முறைக் குடியரசுகள் தம்முடைய உள் அமைப்பில் வேறுபட்டிருந்தன. சில உயர்குடி மக்களின் குடியரசுகளாகவும், வேறுசில ஜனநாயகக் குடியரசுகளாகவும் இருந்தன. உயர்குடி மக்களின் குடியரசில் சலுகை பெற்ற மிகச் சிலரே தேர்தலில் பங்கு கொண்டனர். ஜனநாயகக் குடியரசிலோ ஒவ்வொருவரும் தேர்தலில் பங்கு

கொண்டனர்—ஆனால், அங்கும் ஆண்டைகள் மட்டுந்தான், அதாவது அடிமைகளைத் தவிர எல்லோரும் தேர்தலில் பங்கு கொண்டார்கள். இந்த அடிப்படை உண்மையைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், மற்ற எந்த உண்மையையும்விட, அரசு பற்றிய பிரச்சினையை அது மேலும் விளக்கிக் காட்டுவதோடு, அரசின் இயல்பையும் தெளிவாகக் காட்டுகிறது.

அரசென்பது ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தால் ஒடுக்கப் பெறுவதற்கான ஓர் இயந்திரம். ஒரு வர்க்கத்திற்கு மற்ற அடிப்பட்ட வர்க்கங்களைக் கீழ்ப்படிந்து இருக்கச் செய்யும் ஓர் இயந்திரம். இந்த இயந்திரத்திற்கு வேறு வேறான வடிவங்கள் உண்டு. அடிமை முறை அரசில் முடியரசும், உயர்குடி மக்களின் குடியரசும், ஜனநாயகக் குடியரசுங்கூட இருந்ததைக் கண்டோம். உண்மையில் ஆட்சி முறையின் வடிவங்கள் மிகமிக வேறுபட்டன, ஆயினும் அவற்றின் சாரம் எப்போதும் ஒன்றேதான்: அடிமைகளுக்கு எந்த உரிமையும் இல்லை; அவர்கள் ஒடுக்கப்பட்ட வர்க்கமாகவே அமைந்தனர், அவர்கள் மனிதப் பிறவிகளாக மதிக்கப்படவில்லை. பண்ணையடிமை முறை அரசிலும் இதே நிலையைத்தான் நாம் காண்கிறோம்.

சுரண்டும் முறையில் ஏற்பட்ட மாறுதல், அடிமை முறை அரசைப் பண்ணையடிமை முறை அரசாக மாற்றியமைத்தது. இது அளவற்ற முக்கியத்துவம் கொண்டதாகும். அடிமை முறைச் சமுதாயத்தில் அடிமைக்கு எவ்வகைப்பட்ட உரிமையும் இல்லை, அவன் ஒரு மனிதப் பிறவியாகக் கருதப்படுவதில்லை; பண்ணையடிமை முறை சமுதாயத்திலோ, குடியானவன் நிலத்தோடு பிணைக்கப்பட்டான். பண்ணையடிமை முறையின் தலையான அடையாளமே, குடியானவர்கள் (அப்போது குடியானவர்களே பெரும்பான்மையராக அமைந்திருந்தனர்; நகர்வாசிகள் மிகக் குறைந்த தொகையே இருந்தனர்) நிலத்தோடு பிணிக்கப்பட்டவராகக் கருதப்பட்டனர் என்பதே. இதிலிருந்துதான் பண்ணையடிமை என்ற கருத்தோட்டம் உருவாகியது. தனக்கு நிலப்பிரபுவினால் ஒதுக்கித் தரப்பட்ட துண்டு நிலத்தில் குறிப்பிட்ட நாட்கள் வரை குடியானவன்

தனக்காக உழைக்கலாம். மற்றை நாட்களில் அந்தப் பண்ணையடிமை தன் நிலப்பிரபுவுக்காக உழைத்தான். வர்க்கச் சமுதாயத்தின் சாரம் அப்படியேயிருந்தது: வர்க்கச் சுரண்டல் முறையை ஆதாரமாகக் கொண்டே சமுதாயம் அமைந்திருந்தது. நிலப்பிரபுக்கள் மட்டுந்தான் முழு உரிமைகளையும் அனுபவிக்க முடிந்தது. குடியானவர்களுக்கு உரிமைகளே இல்லை. நடைமுறையில் அவர்களது நிலை அடிமை முறை அரசிலிருந்த அடிமைகளின் நிலையினின்றும் மிகச் சிறிதளவே வேறுபட்டது. இருந்தபோதிலும், அவர்களுடைய, குடியானவர்களுடைய விடுதலைக்குரிய விரிந்த வாய்ப்பும் கிடைத்தது. ஏனெனில் பண்ணையடிமை நிலப்பிரபுவின் நேரடி உடைமையாகக் கருதப்படவில்லை. அவன் தனக்கேயுரிய நிலத்தில் தனது நேரத்தின் ஒரு பகுதியைக் கழிக்க, ஒரு வகையில் ஒரு குறித்த அளவுக்குத் தனக்கே உரியவனாக இருக்க முடிந்தது. பண்ட மாற்றமும் வாணிப உறவுகளும் வளர்ச்சி பெறுவதற்கான மிகப் பரந்த வாய்ப்புகள் ஏற்பட்டதும், பண்ணையடிமை முறை மேலும் மேலும் சிதைந்து குலைவதாயிற்று, குடியானவர்களின் விடுதலை வாய்ப்பு மேலும் மேலும் விரிவடைந்தது. பண்ணையடிமை முறை சமுதாயம் அடிமை முறை சமுதாயத்தைக் காட்டிலும் எக்காலும் அதிகச் சிக்கலானது. அதன்கண், வாணிபம், தொழில் ஆகியவை பெருமளவு வளர்ச்சியடைந்தன. அது அந்நாளிலேயே முதலாளித்துவத்திற்கு இட்டுச் சென்றது. மத்திய காலத்தில் பண்ணையடிமை முறை ஆதிக்கம் வகித்தது. இங்குங்கூட, அரசின் வடிவங்கள் வேறுபட்டன. இங்குங்கூட, முடியரசு, குடியரசு என்ற இரண்டையும் காண்கிறோம். இவற்றில் பிந்தியது வலுக்குறைவாக வெளிப்பட்டது. ஆயினும், நிலப்பிரபுக்கள் மட்டுமே ஆள்வோராக எப்போதும் கருதப்பட்டனர். பண்ணையடிமைகளான குடியானவர்கள் அரசியல் உரிமைகள் எல்லாவற்றிலிருந்தும் முற்றமுழுக்க விலக்கி வைக்கப்பட்டனர்.

அடிமை முறை, பண்ணையடிமை முறை ஆகிய இரு அமைப்புகளிலுமே மக்களின் மிகச் சிறுபான்மையினர் மிகப் பெரும்பான்மையினர் மீது பலாத்காரம் இல்லாது ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. ஒடுக்கப்பெற்ற வர்க்கங்கள் ஒடுக்குமுறையை

அகற்றி எறிவதற்காக இடைவிடாது செய்த முயற்சிகளைப் பற்றி வரலாற்றில் நிரம்பக் காணலாம். அடிமை முறையிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் பல பத்தாண்டுகள் வரை தொடர்ந்து நடந்த போர்களின் விவரங்கள் அடிமை முறை அமைப்பின் வரலாற்றில் உள்ளன. ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் ''ஸ்பார்த்தகிஸ்டுகள்''[2] என்ற பெயரை ஏற்றுக் கொண்டிருப்பதை இங்கே குறிப்பிடலாம்—முதலாளித்துவ நுகத்தடியைத் தூக்கியெறிய உண்மையிலேயே போராடும் ஒரே ஜெர்மன் கட்சி இது. அவர்கள் இப்பெயரை மேற்கொண்ட காரணம், ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த அடிமைகளின் மிகப் பெரிய எழுச்சி ஒன்றின் மிகமிகப் பிரபலமான தலைவனாகத் திகழ்ந்தவனின் பெயர் ஸ்பார்த்தகஸ் என்பதனாலே ஆகும். பார்வைக்கு எல்லா வல்லமையும் கொண்டது போல் தோன்றிய ரோமப் பேரரசு, முழுக்கவும் அடிமை முறையின் அடிப்படையில் அமைந்திருந்த ரோமப் பேரரசு, ஸ்பார்த்தகஸ் தலைமையின் கீழ் ஆயுதமேந்தி, ஒரு மாபெரும் படையாக ஒன்று திரண்ட அடிமைகளின் மாபெரும் எழுச்சியின் தாக்குதலுக்குள்ளாகிப் பல்லாண்டுகள் வரையில் அதிர்ச்சிகளுக்கும் அடிகளுக்கும் உள்ளாயிற்று. இறுதியில், அவ்வடிமைகள் தோற்றுச் சிறைப்பிடிக்கப்பட்டு, ஆண்டைகளால் சித்திரவதை செய்யப்பட்டனர். இத்தகைய உள்நாட்டுப் போர்களை வர்க்கச் சமுதாயம் பற்றிய வரலாறு முழுவதிலும் காணலாம். அடிமை முறையின் கால கட்டத்தில் நிகழ்ந்த இவ்வகையான உள்நாட்டுப் போர்களில் மிகமிகப் பெரிதான ஒன்றையே நான் இப்போது ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டேன். இவ்வாறே பண்ணையடிமை முறையின் கால கட்டம் முழுவதும் குடியானவர்களின் இடைவிடாத எழுச்சிகளால் நிறைந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, மத்திய காலத்தில் ஜெர்மனியில் நிலப்பிரபுக்கள், பண்ணையடிமைகள் என்ற இரண்டு வர்க்கங்களுக்கிடையே தோன்றிய போராட்டம் பெருத்த அளவில் விரிவடைந்து, நிலப்பிரபுக்களை எதிர்த்துக் குடியானவர்கள் நிகழ்த்திய உள்நாட்டுப் போராக மாறி விட்டது. இது போலவே, ருஷ்யாவிலும் நிலப்பிரபுக்களை எதிர்த்துக்

குடியானவர்கள் மீண்டும் மீண்டும் நடத்திய எழுச்சிகளைப் பற்றி நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும், தங்கள் அதிகாரத்தைப் பாதுகாக்கவும் நிலப்பிரபுக்களுக்கு ஓர் இயந்திரம் தேவையாயிருந்தது. இதைக் கொண்டு, பரந்த எண்ணிக்கையான மக்களை ஒன்றுதிரட்டித் தங்களுக்கு ஆட்படுத்தவும் குறிப்பிட்ட சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அவர்களைக் கீழ்ப்படுத்தவும் முடிந்தது. இச்சட்டங்கள் அனைத்தின் அடிப்படைக் கருத்து ஒன்றே — பண்ணையடிமைகள் மீது நிலப்பிரபுக்களின் அதிகாரம் நிலைத்திருக்க வேண்டும் என்பதே அது. இதுதான் பண்ணையடிமை முறை அரசு. இதற்கு எடுத்துக்காட்டாக, ருஷ்யாவையோ அல்லது இன்றும் பண்ணையடிமை முறை நிலவுகிற, முற்றும் பின்தங்கிய ஆசிய நாடுகளையோ குறிப்பிடலாம். நிலப்பிரபுத்துவ அரசு வடிவத்தில் ஆங்காங்கு வேறுபட்டிருந்தது — குடியரசாகவோ முடியரசாகவோ அது விளங்கியது. அரசு என்பது முடியரசாக இருந்த போது, ஒற்றை நபரின் ஆட்சி ஏற்கப்பட்டது. அது குடியரசாக இருந்த போது, நிலப்பிரபுத்துவச் சமூகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சியில் பங்கு பெறுவது ஏதேனும் ஓர் அளவிலே ஏற்கப்பட்டது. இது நிகழ்ந்தது பண்ணையடிமை முறைச் சமுதாயத்தில். பண்ணையடிமை முறைச் சமுதாயத்தில் நிலவிய வர்க்கப் பிரிவினையின்படி, மிகப் பெரும்பாலோர்—அதாவது பண்ணையடிமைகள்—மிகமிகச் சிறுபான்மையோரை—அதாவது நிலங்களின் சொந்தக்காரர்களான பிரபுக்களை—முற்றிலும் சார்ந்திருந்தனர்.

வாணிபத்தின் வளர்ச்சி, பண்ட மாற்றத்தின் வளர்ச்சி இவற்றின் விளைவாக முதலாளிகள் என்ற ஒரு புதிய வர்க்கம் உருவாயிற்று. மத்திய காலத்தின் இறுதியில், அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட பிறகு உலக வாணிகம் ஏராளமாக வளர்ச்சியுற்ற போது, விலையுயர்ந்த உலோகங்களின் அளவு பெருக்கமான போது, வெள்ளியும் பொன்னும் பரிமாற்றத்தின் சாதனங்களாக ஆன போது, தனிப்பட்டவர்கள் பெருந்திரளான செல்வம் பெறுவதைப் பணப் புழக்கம் சாத்திய

மாக்கிவிட்ட போது, மூலதனம் என்பது தோன்றிற்று. உலகு எங்கணும் வெள்ளியும் பொன்னும் செல்வமாக ஏற்கப்பட்டன. நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் பொருளாதார வல்லமை சரிந்தது. புதிய வர்க்கத்தின்—மூலதனப் பிரதிநிதிகளின்—வல்லமை வளர்ச்சி பெற்றது. சமுதாய அமைப்பில் உண்டான மாற்றத்தின்படி எல்லாக் குடிமக்களும் சமம் என்று பெயரளவில் ஏற்பட்டது. ஆண்டைகளும் அடிமைகளுமாக இருந்த பழம் பிரிவினை மறைந்தது. ஒவ்வொருவரிடமும் உள்ள மூலதனம் எதுவாக இருப்பினும், சட்டத்தின்படி எல்லோரும் சரிநிகராக மதிக்கப்பட்டனர். அதாவது, நிலத்தைத் தமது தனியுடைமையாகக் கொண்டிருப்பவரும் சரி, அல்லது தமது உழைப்புச் சக்தியைத் தவிர வேறு எந்தச் சொத்தும் இல்லாத பஞ்சையும் சரி, சட்டத்தின்படி சரிநிகரானவர் எனக் கருதப்பட்டனர். சட்டம் ஒவ்வொருவரையும் சமமாகப் பாதுகாக்கிறதாம். அது சொத்துடைமையோரின் சொத்துக்களை சொத்தில்லாத மக்கள் திரள் தாக்குவதினின்றும் காத்தளிக்கிறது — சொத்தில்லாத அந்த மக்களோ, தமது உழைப்புச் சக்தியைத் தவிர வேறு உடைமை எதுவும் இல்லாதவராய், நாளுக்கு நாள் மென்மேலும் வறுமைப்பட்டு நிலைகுலைந்து பாட்டாளிகளாக மாற்றப் பெறுகின்றனர். இதுதான் முதலாளித்துவச் சமுதாயம்.

இது பற்றி மிக விரிவாக என்னால் பேச முடியாது. நீங்கள் கட்சியின் வேலைத்திட்டத்தைப் பற்றிப் பேசும் போது, இப்பிரச்சினைக்கு மீண்டும் திரும்புவீர்கள். அப்போது முதலாளித்துவச் சமுதாயத்தின் தன்மை பற்றிய விளக்கவுரையை நீங்கள் கேட்பீர்கள். இந்தச் சமுதாயம் விடுதலை என்ற கோஷத்தை எழுப்பி, நிலப்பிரபுத்துவ முறையை எதிர்த்து, பழைய பண்ணையடிமை முறையை எதிர்த்து முன்வந்தது. ஆனால், அது சொத்துடையவர்களுக்கு மட்டுமே விடுதலையாயிற்று. பண்ணையடிமை முறை பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சிதறடிக்கப்பட்ட பின்—ருஷ்யாவில் மற்ற நாடுகளை விட மிகவும் பிந்திய காலத்தில், 1861ல் இது நிகழ்ந்தது— நிலப்பிரபுத்துவ அரசின் இடத்தில் முதலாளித்துவ அரசு

நிலைபெற்றது. முதலாளித்துவ அரசு, எல்லா மக்களுக்கும் விடுதலை என்பதைத் தன்னுடைய கோஷமாகப் பறைசாற்று கிறது; அது எல்லா மக்களுடைய சித்தத்தையும் வெளியிடு வதாகக் கூறிக் கொள்கிறது; தான் ஒரு வர்க்கச் சார்பான அரசென்பதை மறுக்கிறது. இந்நிலையில் மக்கள் எல்லோ ருடைய விடுதலைக்காகப் போராடும் சோஷலிஸ்டுகளுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் இடையே ஒரு போராட்டம் வளர்வதாயிற்று. இப்போராட்டத்தின் விளைவாகவே சோவி யத் சோஷலிசக் குடியரசு தோன்றியிருக்கிறது. அத்துடன் இப்போராட்டம் உலகம் முழுவதிலும் பரவியிருக்கிறது.

உலக மூலதனத்திற்கு எதிராகத் தொடங்கப்பட்டுள்ள போராட்டத்தைப் புரிந்து கொள்ள, முதலாளித்துவ அரசின் சாரத்தைப் புரிந்து கொள்ள, முதலாளித்துவ அரசு நிலப் பிரபுத்துவ அரசை எதிர்த்து முன்வந்த போது, விடுதலை என்ற கோஷத்துடன்தான் போரில் இறங்கிற்று என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்டது, என்றால், முதலாளித்துவ அரசின் பிரதிநிதி களுக்கு விடுதலை கிட்டி விட்டது என்று பொருளாயிற்று. பண்ணையடிமை முறை தகர்ந்ததனால், குடியானவர்கள் நிலத்தை விலை கொடுத்து மீட்டோ அல்லது பகுதி பகுதியாக விடுவரி செலுத்தியோ (அரசிற்கு இதில் கவலை கிடையாது), அதனைத் தமது முழு உடைமையாகக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்று விட்டதால், முதலாளித்துவ அரசின் பிரதிநிதிகளுக்கு அது மேலும் உதவியாயிற்று. உடைமை எவ்விதமாக வந்த தாயினும் அரசு அதைப் பாதுகாத்தது; ஏனெனில், அரசு என்பது தனியுடைமையையே அடிப்படையாகக் கொண் டிருந்தது. நவீன நாகரிக நாடுகள் அனைத்திலும் குடியானவர் கள் தனியுடைமை கொண்டவராக ஆகி விட்டனர். தனது நிலத்தின் ஒரு பகுதியைக் குடியானவனுக்குக் கொடுத்து விட்ட போதுங்கூட, மீட்புத் தொகையின் மூலமும் நிலத்தை விற்பனை செய்து பணம் பெறுவதன் மூலமும் நிலப்பிரபு வுக்குக் கைம்மாறு செய்து, அரசு தனியுடைமையைக் காத் தளித்தது. ஒரு வகையில், தனியுடைமையை முழுக்கப் பாது காப்பதாக அரசு பறைசாற்றிற்று எனலாம்; தனியுடை

மைக்கு எல்லா வித உதவியையும் பாதுகாப்பையும் அது வழங்கலாயிற்று. வணிகன், தொழில் முதலாளி, ஆலேச் சொந்தக்காரன் ஆகிய ஒவ்வொருவரின் சொத்து உரிமை களேயும் அரசு அங்கீகரித்தது. தனியுடைமை, மூலதனத்தின் ஆதிக்கம், சொத்தில்லாத தொழிலாளரையும் உழைத்து வாழும் குடியானவர்களேயும் முழுக்கவும் அடிபணிய வைப் பது என்ற அடித்தளத்தில் நின்றுள்ள இந்தச் சமுதாயம், தன்னுடைய ஆட்சி சுதந்திரத்தையே ஆதாரமாகக் கொண் டிருப்பதாகப் பறைசாற்றியது. பண்ணேயடிமை முறையை எதிர்த்துப் போரிட்டு, உடைமையின் சுதந்திரத்தைப் பறை சாற்றிற்று. அரசு என்பது ஒரு வர்க்க அரசாக இருந்த நிலே போய்விட்டதாகக் கூறிக் குறிப்பாகப் பெருமைப்பட்டது.

இருப்பினும், ஏழைக் குடியானவர்களேயும் தொழிலாளி வர்க்கத்தையும் அடிபணிய வைப்பதில் முதலாளிகளுக்கு உதவும் ஓர் இயந்திரமாக அரசு தொடர்ந்து இருந்து வந் தது. ஆனல் வெளித்தோற்றத்தில் அது சுதந்திரமானதாக இருந்தது. அனேத்து மக்களுக்குரிய வாக்குரிமையைப் பிர கடனப்படுத்தி, தனது ஆதரவாளர்கள், பிரசாரகர்கள், அறி ஞர்கள், தத்துவஞானிகள் ஆகியோர் மூலமாக, இது ஒரு வர்க்க அரசல்ல என்பதை அறிவித்தது. இப்பொழுதும், சோவியத் சோஷலிசக் குடியரசுகள் அதனேடு போர் தொடங் கியிருக்கும் போது, நாம் சுதந்திரத்திற்கு உலே வைப்பதாக வும், ஒரு பகுதியை மற்றவர்களேக் கொண்டு அடக்கி ஒடுக்கி விட்டு, வலுக்கட்டாய அடிப்படையில் ஓர் அரசை அமைப் பதாகவும் அவர்கள் நம்மீது குற்றஞ்சாட்டுகிருர்கள். அவர் களோ, எல்லா மக்களேயும் தழுவிய ஜனநாயக அரசின் பிரதிநிதிகளாக இருக்கிருர்களாம். இப்பொழுது, அதாவது, உலக சோஷலிசப் புரட்சி தொடங்கியிருக்கிற இந்நேரத்தில், சில நாடுகளில் புரட்சி வெற்றி பெற்றிருக்கிற இத்தறுவா யில், உலக மூலதனத்தை எதிர்த்து நடத்தும் போராட்டம் குறிப்பாகக் கடுமை பெற்றுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், அரசு பற்றிய பிரச்சினே மாபெரும் முக்கியத்துவம் பெற்றி ருக்கிறது. இன்று மிகவும் அவசரமான பிரச்சினேயாக, எல்லா அரசியல் பிரச்சினேகள், எல்லா அரசியல் தகராறுகள் ஆகிய

வற்றின் குவிமையமாக அது ஆகியிருக்கிறது என்றும் கூற லாம்.

ருஷ்யாவிலோ அல்லது அதைவிட மிக்க நாகரிகம் படைத்த நாடுயாதானும் ஒன்றிலோ உள்ள எந்த ஒரு கட்சியை நாம் எடுத்துக் கொண்டாலும், கிட்டத்தட்ட எல்லா அரசியல் தகராறுகளும் வேறுபாடுகளும் கருத்தோட்டங்களும் இன்று அரசைப் பற்றிய கருத்தைச் சுற்றியே மையங் கொண்டுள்ளன என்று காண்கிறோம். ஒரு முதலாளித்துவ நாட்டில், ஒரு ஜனநாயகக் குடியரசில்—குறிப்பாக, சுவிட்ஸர்லாந்து அல்லது அமெரிக்கா போன்ற ஒரு குடியரசில்—மிகமிகச் சுதந்திரமான ஜனநாயகக் குடியரசுகளில், அரசு என்பது மக்களனைத்தினுடைய சித்தத்தின் வெளியீடாக, மக்களுடைய பொதுவான தீர்மானத்தின் ஒன்றுதிரண்ட முடிவாக, தேசிய சித்தத்தின் வெளியீடாக, இவை போன்ற பிறவாக, இருக்கின்றதா? அல்லது, அரசு என்பது அங்குள்ள தொழிலாளி வர்க்கத்தின், விவசாயி மக்களின் மீது முதலாளிகள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த வல்லமையளிக்கும் ஓர் இயந்திரமாக இருக்கின்றதா? இது ஓர் அடிப்படையான பிரச்சினை; இதைச் சுற்றித்தான் உலகம் எங்கும் அரசியல் விவாதங்கள் இன்று மையங்கொண்டுள்ளன. போல்ஷிவிசம் பற்றிச் சொல்லப்படுகிறது யாது? முதலாளித்துவப் பத்திரிகைகள் போல்ஷிவிக்குகளைத் திட்டுகின்றன. போல்ஷிவிக்குகள் மக்கள் ஆட்சிக்கு உலை வைக்கிறார்கள் என்ற உளுத்துப் போனக் குற்றச்சாட்டைத் திருப்பித் திருப்பிச் சொல்லாத எந்த ஒரு செய்தித்தாளையுங்கூட நீங்கள் காண முடியாது. சுதந்திரத்தையும் மக்களின் ஆட்சியையும் போல்ஷிவிக்குகள் குலைத்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டைத் தாங்களே முதன்முதலில் கண்டறிந்து விட்டதாக நமது மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் தங்கள் அப்பாவித் தனத்தினால் நினைப்பார்களானால் (ஒருக்கால் அது அப்பாவித் தனமாக இல்லாமலுமிருக்கலாம்; ஆனால் பழமொழியில் சொல்வது போல இந்த அப்பாவித் தனம் வழிப்பறியைவிட மிகக் கேடானது) அவர்கள் எள்ளி நகையாடுமளவுக்குத் தவறான கருத்துடையவர் ஆவார்கள். இன்று

மிகப் பெரும் செல்வம் படைத்த நாடுகளில் உள்ள மிகமிகச் செல்வச் செழிப்பான பத்திரிகைகள், கோடிக்கணக்கான பிரதிகளை வழங்கி, முதலாளித்துவ வர்க்கத்தினரின் பொய்களையும் ஏகாதிபத்தியக் கொள்கையையும் பரப்புவதற்காகக் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவிடுகின்றன. இத்தகைய பத்திரிகைகள், போல்ஷிவிசத்திற்கு எதிராக இவ்வடிப்படை வாக்கு வாதங்களையும் குற்றச்சாட்டுகளையும் திருப்பித் திருப்பிச் சொல்லாத ஒன்றுகூட இல்லை. அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிட்ஸர்லாந்து ஆகியவை அனைத்து மக்களினுடைய ஆட்சியை ஆதாரமாகக் கொண்ட முன்னேற்றமான அரசுகள் என்றும், போல்ஷிவிக் குடியரசோ, கொள்ளைக்காரர்களின் அரசு என்றும், அதில் சுதந்திரம் என்பது அறியப்படாத ஒன்று என்றும், போல்ஷிவிக்குகள் அனைத்து மக்களினுடைய ஆட்சி என்ற கருத்துக்கே உலை வைத்து, அரசியல் நிர்ணய சபையையும்கூடக் கலைத்துவிடும்[3] அளவுக்குப் போய் விட்டார்கள் என்றும் அவை கூறுகின்றன. போல்ஷிவிக்குகளுக்கு எதிரான இந்தக் கொடிய குற்றச்சாட்டுகள் உலகம் எங்கும் திருப்பித் திருப்பிக் கூறப்படுகின்றன. இந்தக் குற்றச்சாட்டுகள் ஒரு கேள்விக்கு எதிரே நம்மை முழுக்கவும் கொண்டு வந்து நிறுத்துகின்றன—அரசு எனப்படுவது யாது? இக்குற்றச்சாட்டுகளைப் புரிந்து, தெரிந்துகொண்டு, அவற்றின் பால் அறிவுபூர்வமான ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமானால், காதால் கேட்டதைக் கொண்டல்லாமல், நமக்கே உரிய உறுதியான கருத்தைக் கொண்டு அதை ஆராய வேண்டுமானால், அரசு என்றால் என்ன என்பது பற்றி நாம் தெளிவான கருத்தைப் பெற வேண்டும். விதம் விதமான முதலாளித்துவ அரசுகளும் இவற்றிற்கு ஆதரவாக வாதிடும் பொருட்டு போருக்கு முன்பு உருவாக்கப் பெற்ற எல்லாப் போதனைகளும் நம்முன் இருக்கின்றன. எனவே, இந்தப் பிரச்சினைக்குச் சரிவரத் தீர்வு காண வேண்டி, இப்போதனைகளையும் கண்ணோட்டங்களையும் நாம் விமர்சனக் கண்ணோடு ஆராய வேண்டும்.

எங்கெல்ஸ் எழுதிய **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலைப் படிப்பது உங்களுக்கு

உதவியாயிருக்கும் என்று நான் முன்னமேயே அறிவுறுத்தியுள்ளேன். நிலத்திலும் உற்பத்திச் சாதனங்களிலும் தனிச் சொத்து நிலவும் ஒவ்வோர் அரசும், மூலதனம் ஆதிக்கம் செலுத்தும் ஒவ்வோர் அரசும், எவ்வளவுதான் ஜனநாயகத் தன்மை உடையதாக இருப்பினும், அது முதலாளித்துவ அரசேயாகும் என்றும் தொழிலாளி வர்க்கத்தையும் ஏழைக் குடியானவர்களையும் அடிபணிய வைப்பதற்காக முதலாளிகளால் பயன்படுத்தப்படும் இயந்திரமாகும் அது என்றும் அந்த நூல் கூறுகிறது. அனைத்து மக்களுக்குரிய வாக்குரிமை, அரசியல் நிர்ணய சபை, நாடாளுமன்றம் என்பனவெல்லாம் வெறும் வெளித்தோற்றமே, ஒரு விதமான கடன்பத்திரமே ஆகும். உண்மை நிலைமையை இது மாற்றுவதில்லை என்றும் அது கூறுகிறது.

அரசு செலுத்தும் ஆதிக்கத்தின் வடிவங்கள் வேறுபடக் கூடும். ஒரு வகை வடிவம் நிலவுகிற இடத்தில் ஒரு விதமாகவும், இன்னொரு வகை வடிவம் நிலவுமிடத்தில் வேறொரு விதமாகவும் மூலதனம் தன் அதிகாரத்தை வெளிப்படுத்தும். ஆனால், வாக்களிக்கும் தகுதிகள் உண்டோ இல்லையோ, அல்லது குடியரசு ஜனநாயகத் தன்மை உடையதோ இல்லையோ, எதுவானாலும் நடைமுறையில் மூலதனத்தின் கரங்களில் தான் அதிகாரம் இருக்கிறது. உண்மையில், குடியரசு எவ்வளவுக்கு ஜனநாயகத் தன்மை கொண்டதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு முதலாளித்துவ ஆட்சி அதிக முரடாகவும் அதிக இரக்கமின்றியும் இருக்கிறது. உலகத்தில் மிகப் பெரிய அளவு ஜனநாயகத் தன்மையுடைய குடியரசுகளில் ஒன்று, அமெரிக்க ஐக்கிய நாடுகள். இருந்தும், அமெரிக்காவில் இருப்பது போல (1905க்குப் பிறகு, அங்கிருந்தவர்களுக்கு ஒருக்கால் இது தெரியக் கூடும்), அவ்வளவு பண்பற்ற வகையில், அவ்வளவு பட்டவர்த்தனமாக ஊழல் மிகுந்த வகையில், சமுதாயம் முழுவதின் மீதும் மூலதனத்தின் அதிகாரமும், விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில கோடீசுவரர்களின் ஆதிக்கமும் இருப்பது வேறு எங்கும் கிடையாது. மூலதனத்திற்கு இருப்பிடம் கிடைத்தால் போதும், சமுதாயம் முழுவதன் மீதும் அது ஆதிக்கம் புரியும். எந்த ஜனநாயகக் குடி

யரசும், எவ்விதமான வாக்குரிமையும் விஷயத்தின் சாரத்தை மாற்ற முடியாது.

பண்ணையடிமை முறையுடன் ஒப்பிடும் போது, ஜன நாயகக் குடியரசும் அனைத்து மக்களுக்குரிய வாக்குரிமையும் பிரம்மாண்டமான முன்னேற்றமாகத் திகழ்ந்தன. பாட்டாளி வர்க்கம் இன்று பெற்றுள்ள ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் அடைவதற்கும், மூலதனத்தை எதிர்த்து முறை யாகப் போராடுகின்ற, உறுதியும் கட்டுப்பாடும் பெற்ற அணிகளை வகுப்பதற்கும் அவை வாய்ப்பு அளித்துள்ளன. பண்ணையடிமை குடியானவர்களிடம் கிட்டத்தட்ட இது போன்றதுகூட எதுவும் இருந்ததில்லை என்றால், அடிமை களைப் பற்றிக் கூறத் தேவையேயில்லை. அடிமைகள் கிளர்ந்து எழுந்தனர், கலகம் புரிந்தனர், உள்நாட்டுப் போர்களைத் தொடங்கினர் என்பதை நாம் அறிவோம். ஆயினும் வர்க்க உணர்வுள்ள பெரும்பாலாரையோ, போராட்டத்தை நடத்து வதற்கு வேண்டிய கட்சிகளையோ அவர்கள் ஒருபோதும் தோற்றுவிக்க முடியவில்லை. தாங்கள் எந்தக் குறிக்கோளுக்காகப் போராடுகிறோம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள அவர்களுக்கு முடியவில்லை. வரலாற்றின் மிகப் பெரும் புரட்சிகரமான கால கட்டங்களில்கூட ஆளும் வர்க்கங்களின் கைப்பாவைகளாகவே அவர்கள் எப்போதும் இருந்தனர். சமுதாயத்தின் உலக வளர்ச்சி நிலையிலிருந்து பார்க்கும் போது, முதலாளித்துவக் குடியரசு, நாடாளுமன்றம், அனைத்து மக்களுக்குரிய வாக்குரிமை ஆகிய அனைத்தும் மாபெரும் முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. மனித இனம் முதலாளித்துவத்தை நோக்கிச் சென்றது. முதலாளித்துவம் ஒன்றுதான், நகர்ப்புறப் பண்பாட்டின் மூலம், ஒடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம் தன்னைத்தானே உணரும்படியாகச் செய்யவும் உலகத் தொழிலாளி இயக்கத்தை உண்டாக்கவும் வாய்ப்பு அளித்தது; உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக் கான தொழிலாளர்களைக் கட்சிகளாக, திரளான மக்களின் போராட்டத்தை உணர்வுபூர்வமாக நடத்திச் செல்லும் சோஷலிசக் கட்சிகளாக அமையும்படிச் செய்தது. நாடாளு மன்ற முறை இல்லையேல், தேர்தல் அமைப்பு இல்லையேல்,

தொழிலாளி வர்க்கத்தின் இவ்வளர்ச்சிப் பெருக்கம் ஆக முடியாத காரியமாகவே இருந்திருக்கும். அதனுல்தான், பெருந் திரளான மக்களின் பார்வையில், இவையெல்லாம் அத்தனை பெரும் முக்கியத்துவமுடையன ஆகியிருக்கின்றன. அதனுல் தான், திடீர் மாறுதல் என்பது அத்தனை கடினமானதாகத் தோன்றுகிறது. அரசு சுதந்திரமானது என்றும், எல்லோரு டைய நலங்களையும் பாதுகாப்பது அதற்கு ஏற்பட்ட கடமை என்றும் முதலாளித்துவப் பொய்யை, உணர்வுபூர்வமான நயவஞ்சகரும் விஞ்ஞானிகளும் பாதிரிமார்களும் மட்டுந் தான் எடுத்துப் பேசி ஆதரிக்கிருர்கள் என்பதன்று. பழைய தப்பெண்ணங்களில் உண்மையிலேயே ஒட்டிக்கொண்டு பழைய முதலாளித்துவச் சமுதாயத்திலிருந்து சோஷலிசத் திற்கு நிகழும் மாறுதலைப் புரிந்துகொள்ளாமலிருக்கும் பெருந்திரளான மக்களும் அவ்வாறே செய்கிருர்கள். முத லாளித்துவ வர்க்கத்தினரை நேரடியாகச் சார்ந்திருக்கிற மக்கள் மட்டுமல்ல, மூலதனத்தின் நுகத்திஞல் அழுத்தி ஒடுக்கப்பட்டவர்களோ, அல்லது மூலதனத்தினிடம் கைக் கூலி பெறுபவர்களோ மட்டுமல்ல (மூலதனத்திற்கு ஊழியம் புரியும் விஞ்ஞானிகள், கலைஞர்கள், பாதிரிகள் முதலான எல்லா வகைப்பட்டவர்களும் ஏராளமாக இருக்கின்றனர்), வெறுமனே முதலாளித்துவச் சுதந்திரம் பற்றிய தப்பெண் ணங்களுக்கு ஆட்பட்டிருக்கின்ற மக்களுங்கூட, போல்ஷிவிசத் திற்கு எதிராக உலகம் எங்கும் ஆயுதமேந்துகின்ருர்கள். ஏனெனில், சோவியத் குடியரசு நிறுவப்பெற்ற போது அது இந்த முதலாளித்துவப் பொய்களை மறுத்துவிட்டு, ''நீங்கள் கூறுகிறீர்கள் உங்கள் அரசு சுதந்திரமானது என்று; ஆனுல் உண்மையில், தனியுடைமை என்பது நீடிக்கிற வரையில் உங்களுடைய அரசு, ஜனநாயகக் குடியரசாக இருந்தாலுங் கூட, தொழிலாளரை அடக்குவதற்காக முதலாளிகளால் பயன்படுத்தப்படும் இயந்திரமே தவிர, வேறு எதுவுமன்று; எவ்வளவுக்கு அரசு சுதந்திரமாக இருக்கிறதோ, அவ்வள வுக்கு இது தெளிவாக வெளிப்படுகிறது'' என்று வெளிப்படை யாகஅறிவித்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டுகள், ஐரோப்பா வில் சுவிட்ஸர்லாந்தும், அமெரிக்கக் கண்டத்தில் அமெ

ரிக்க ஐக்கிய நாடுகளும் ஆகும். எவ்வளவு ஆடம்பரமாக அவற்றை பூசி மெழுகினுலும் சரி, உழைப்பாளர் ஜனநாயகம், குடிமக்கள் எல்லோருடைய சமத்துவம் என்றெல்லாம் பேசினுலும் சரி, அவ்வளவு வெட்கங்கெட்டதாகவும் இரக்கமின்றியும் மூலதனம் வேறெங்கும் ஆள்வதில்லை; அவை ஜனநாயகக் குடியரசுகளாக இருந்துங்கூட, இந்த நாடுகளில் போல மூலதனத்தின் ஆதிக்கம் அத்தனைத் தெளிவாக வேறெங்கும் வெளிப்படுவதில்லை. உண்மையாதெனில், சுவிட்ஸர்லாந்திலும் அமெரிக்காவிலும் மூலதனம் ஆதிக்கம் புரிகிறது. தமது நிலைமையில் மிகமிகச் சிறிய உண்மையான அபிவிருத்தியைப் பெறும் பொருட்டுத் தொழிலாளர் செய்யும் ஒவ்வொரு முயற்சியிலும் அவர்கள் உடனடியான உள்நாட்டுப் போரினுல் எதிர்க்கப்படுகிருர்கள். இந்த நாடுகளில் படைவீரர்கள் மிகக் குறைவு, நிரந்தர இராணுவமும் அளவில் சிறியது. சுவிட்ஸர்லாந்தில் குடிமக்கள் படைதான் உண்டு, ஒவ்வொரு சுவிஸ் நாட்டுக்காரரிடமும் ஒரு துப்பாக்கி உண்டு. அமெரிக்காவிலோ, மிக அண்மை காலம் வரையில், நிரந்தர இராணுவம் இருந்ததில்லை. அதனுல், ஒரு வேலைநிறுத்தம் தோன்றினுல், முதலாளித்துவ வர்க்கம் ஆயுதமேந்தி, படையினர்களைக் கூலிக்கு அமர்த்தி, வேலைநிறுத்தத்தை அடக்கி விடுகிறது. சுவிட்ஸர்லாந்திலும் அமெரிக்காவிலும் போல் தொழிலாளி வர்க்கத்தின் இயக்கத்தை அடக்கி ஒடுக்குவதில் அவ்வளவு இரக்கமற்ற கொடுமை வேறெங்கும் நிகழ்வதில்லை. இந்த நாடுகளில் போல நாடாளுமன்றத்திலே மூலதனத்தின் செல்வாக்கு அவ்வளவு வலுவுடன் வேறெங்கும் தன்னை வெளிப்படுத்துவதில்லை. மூலதனத்தின் பலம்தான் எல்லாம், பங்கு மார்க்கெட்டுத்தான் எல்லாம், நாடாளுமன்றமும் தேர்தல்களும் வெறும் கயிருடு பாவையும், கைப்பாவையுமாகும்.... ஆயினும், கொஞ்சம் கொஞ்சமாகத் தொழிலாளரின் கண்கள் திறக்கின்றன. சோவியத் அரசாட்சி பற்றிய கருத்து, முக்கியமாக நாம் சற்றுமுன் அனுபவித்து வந்த இரத்தக் களரிக்குப் பிறகு, மேலும் மேலும் விரிவாகப் பரவுகிறது. முதலாளிகளுக்கு எதிராகத் தயவு தாட்சண்ணியம் அற்ற ஒரு போராட்டத்

தைத் தொடுக்க வேண்டியது அவசியம் என்பது தொழிலாளி வர்க்கத்திற்கு மேலும் மேலும் தெளிவாகி வருகிறது.

ஒரு குடியரசு, மிகமிக ஜனநாயகத் தன்மையுடைய குடியரசுகூட, எந்த வேஷம் போட்டாலும், இது முதலாளித்துவக் குடியரசாக இருக்குமானால், இதில் நிலம், ஆலைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் மீது தனியுடைமை நிலவுமானல், சமுதாயம் முழுவதையும் தனிப்பட்ட மூலதனம் கூலியடிமை நிலையில் வைக்குமானல், அதாவது நமது கட்சியின் வேலைத்திட்டத்திலும், சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்திலும் சாற்றியவற்றை அது நிறைவேற்றவில்லையானல், அப்பொழுது இந்த அரசு சிலர் மற்றவர்களை அடக்கி வைப்பதற்காக உள்ள இயந்திரமேயாகும். இனி, மூலதனத்தின் ஆதிக்கத்தைத் தூக்கியெறிய வேண்டிய ஒரு வர்க்கத்திடம் இந்த இயந்திரத்தை ஒப்படைப்போம். அரசு என்பது அனைத்து மக்களுக்கிடையிலான சமத்துவத்தை ஆதாரமாகக் கொண்டது எனும் பழைய தப்பெண்ணங்களை எல்லாம் நாம் மறுப்போம். ஏனெனில் அது வஞ்சனையாகும்: சுரண்டல் நீடிக்கிற வரையில் சமத்துவம் என்பது இருக்க முடியாது. நிலப்பிரபு தொழிலாளிக்குச் சமம் என்றோ, அல்லது பசித்த மனிதன் வயிறார உண்டு கொழுத்த மனிதனுக்குச் சமம் என்றோ கூற முடியாது. அரசு என்பதற்கு அனைத்து மக்களினுடைய ஆட்சி என்று பொருள் எனும் பழங்கதைகளை நம்பிக் கொண்டு, மூடத்தனமான பயபக்தியுடன் மக்கள் அதன்முன் வணங்கி நின்றார்களே, அந்த அரசு எனும் இயந்திரத்தைப் பாட்டாளி வர்க்கம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அது முதலாளித்துவப் பொய் என்று சாற்றுகின்றது. முதலாளிகளிடத்திலிருந்து இந்த இயந்திரத்தைப் பறித்து, அதை நாம் எடுத்துக் கொண்டு விட்டோம். இந்த இயந்திரம் அல்லது குண்டாந்தடியைக் கொண்டு எல்லாச் சுரண்டலையும் நாம் தகர்த்தெறிவோம். சுரண்டலுக்கு வேண்டிய வாய்ப்பு உலகில் எவ்விடத்திலும் இல்லாமல் போன போது, நிலச் சொந்தக்காரர்களும், ஆலைச் சொந்தக்காரர்களும் எங்குமே இல்லை எனும் போது, சிலர் மட்டும் வாரி வாரி விழுங்க மற்றவர் பட்டினி கிடக்கும் நிலை நீடித்திராத

போது, இதற்கெல்லாம் இனி வாய்ப்பே கிடையாது எனும் நாளில்தான், இந்த இயந்திரத்தை நாம் குப்பையில் வீசுவோம். அப்போது அரசென்பதும் இருக்காது, சுரண்டலும் இருக்காது. நம் கம்யூனிஸ்டுக் கட்சியின் நோக்கு இதுவே. பின்னல் நிகழும் விரிவுரைகளில் இந்தப் பொருளை நாம் மீண்டும் ஆராய்வோம்; அதனை ஆராய மீண்டும் மீண்டும் அதன்பால் திரும்புவோம் என்றே நம்புகிறேன்.

பிராவ்தா, *இதழ் 15ல்,*
ஜனவரி 18, 1929ல்
முதன்முதலாக வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 64-84

கல்ச்சாக்கை எதிர்த்த வெற்றியின் நிமித்தம் தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்கு எழுதிய கடிதம்

தோழர்களே! செஞ்சேனைப் படைகள் கல்ச்சாக்கிட மிருந்து உரால் பிரதேசம் முழுவதையும் விடுதலை செய்து விட்டன; சைபீரியாவை விடுதலை செய்யத் தொடங்கி விட்டன. உரால் மற்றும் சைபீரியாவின் தொழிலாளர்களும் விவசாயிகளும் சோவியத் ஆட்சியதிகாரத்தை உற்சாகமாக வரவேற்கிறார்கள். ஏனெனில் அது மக்களை வரிக்கொடுமை, தாழ்வுபடுத்தல், கசையடிகள் மூலமும் ஜாரின் ஒடுக்கு முறையை மீட்டமைப்பதன் மூலமும் அடக்கித்துயர்ப்படுத்தி வந்த நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவக் கழிசடையைத் துடைத் தொழித்து வருகிறது.

உரால் விடுதலையானதையும் சைபீரியாவுக்குள் செஞ் சேனைப் படைகள் புகுந்ததையும் கண்டு நாம் எல்லோரும் மகிழ்ச்சியும் களிப்பும் அடைந்தபோதிலும், நாம் ஒரு வித மான பாதுகாப்பு உணர்வுக்குள் உறங்கிவிட இடமளிக்கக் கூடாது. எதிரி இன்னும் அழிக்கப்பட்டு விடவில்லை. திட்ட வட்டமாகத் தகர்க்கப்படக்கூட இல்லை.

கல்ச்சாக்கையும் ஜப்பானியர்களையும் இதர விதேசிக் கொள்ளைக்காரர்களையும் சைபீரியாவில் இருந்து வெளி யேற்றி விரட்ட எல்லா முயற்சிகளும் செய்யப்பட வேண்டும். எதிரிகளை அழிப்பதற்கும் அவர்கள் இத்தகைய கொள்ளைக் காரச் செயல்களை மீண்டும் மீண்டும் துவக்க முடியாதபடி தடுக்கவும் இன்னும் பேரளவான முயற்சிகள் தேவை.

இதை எவ்வாறு சாதிப்பது?

உரால் மற்றும் சைபீரியாவின் வேதனை மிகுந்த அனுபவமும், நான்கு ஆண்டு காலம் ஏகாதிபத்தியப் போரின் அலைக்

கழிப்பால் அவலமுற்ற இதர நாடுகளின் அனுபவமும் நமக்கு நிச்சயம் படிப்பினைகளை வழங்க வேண்டும்.

இங்கு ஐந்து முக்கியமான படிப்பினைகள் உள்ளன. இவற்றை இந்த அனுபவத்தில் இருந்து எல்லாத் தொழிலாளர்களும் விவசாயிகளும் உழைப்பாளி மக்களும் பெற வேண்டும். இதன் மூலம் கல்ச்சாக் கலகத்தின் துன்பங்கள் மீண்டும் ஏற்படுவதை எதிர்த்து அவர்கள் தம்மைத் தாமே பாது காத்துக் கொள்ள முடியும்.

முதல் படிப்பினை. கொள்ளைக்காரர்களிடமிருந்து, அதாவது நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளிடமிருந்து தொழிலாளர், விவசாயிகளின் ஆட்சியை தற்காத்துக் கொள்வதற்கு நமக்கு ஒரு வலிமை மிகுந்த செஞ்சேனை அவசியம். நாம் அதை உருவாக்கும் ஆற்றல் உள்ளவர்கள் என்பதையும், உலகின் ஆகச்செல்வந்த நாடுகளில் இருந்து முதலாளிகள் ஆயுதங்கள், தளவாடங்களை அமோகமாகப் பெற்றபோதிலுங் கூட, செஞ்சேனையை நெறியாண்மை செய்து முதலாளிகளை நாம் தோற்கடிக்கப் பயின்று விட்டோம் என்பதையும், சொற்களால் அன்றி மெய்யான செயல்கள் மூலம் நாம் நிரூபித்து விட்டோம். அந்தளவுக்கு போல்ஷிவிக்குகள் மெய்யான செயல்கள் மூலம் நிரூபித்து விட்டார்கள். எல்லாத் தொழிலாளர்களும் விவசாயிகளும் — அவர்கள் வர்க்க உணர்ச்சி உள்ளவர்களாக இருப்பின்—அவர்களிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். அவர்களது சொல்லின் பலத்தின் மீதல்ல (ஒரு மனிதனை அவனது சொல்லின் பலத்தை வைத்து நம்புவது மடமை), மாறாக உரால் மற்றும் சைபீரியாவின் லட்சோப லட்சம் மக்களின் அனுபவத்தின் பலத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஆயுதமேந்தச் செய்வது, பெருமளவுக்கு நிலப்பிரபுக்கள், முதலாளிகளிடம் அனுதாபமுள்ள முன்னாள் அதிகாரிகளுக்கு தலைமைப் பதவிகளைத் தருவது எனும் இரு காரியங்களையும் இணைப்பது என்பது மிகவும் சங்கடமான பிரச்சினை. அற்புதமான ஒழுங்கமைப்பு ஆற்றல், கறாரான உணர்வு பூர்வமான கட்டுப்பாடு, வழி காட்டும் சக்தியான தொழிலாளர் கமிசார்களிடம் விரிவான மக்கள் திரளின் நம்பிக்கை

ஆகியவை இருந்தால் மட்டுமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இந்த மிகவும் சங்கடமான பிரச்சினைக்கு போல்ஷிவிக்குகள் தீர்வு கண்டு விட்டார்கள்: முன்னாள் அதிகாரிகளைப் பொருத்தவரை அவர்கள் புரிந்த துரோகச் செயல்கள் எண்ணிறந்தவை இருந்தபோதிலும், செஞ்சேனை நமது கரங்களில் இருக்கிறது என்பது மட்டுமல்ல, அது ஜாரின் ஜெனரல்களையும் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஜெனரல்களையும் தோற்கடிக்கப் பயின்று விட்டது.

இதன் விளைவாக, கல்ச்சாக் கலகத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் எனக் காரிய நோக்குடன் விரும்பும் எவரும் செஞ்சேனையைக் கட்டவும் வலுப்படுத்தவுமான பணியில் தனது ஊக்கம், சாதனங்கள் மற்றும் ஆற்றலை அனைத்தையும் அர்ப்பணிக்க வேண்டும். ஒவ்வொருவரும் தமது திறமைக்கு ஏற்ப செஞ்சேனையின் எல்லா விதிகளையும் எல்லா உத்தரவுகளையும் மனச்சாட்சி பூர்வமாயும், இம்மியும் பிழையாமலும் பின்பற்றி ஒழுக வேண்டும், அதிலுள்ள கட்டுப்பாட்டை எல்லா வழிகளிலும் ஆதரிக்க வேண்டும், செஞ்சேனைக்கு உதவி புரிய வேண்டும். இதுவே கல்ச்சாக் கலகத்தை விரும்பாத வர்க்க உணர்வுடைய ஒவ்வொரு தொழிலாளி மற்றும் விவசாயியின் முதன்மையான அடிப்படையான முக்கியமான கடமையாகும்.

கட்டுப்பாடற்ற கொரில்லா உணர்வை, தனிப்பட்ட படைப் பிரிவுகளின் எதேச்சாதிகாரச் செயல்களை, மத்திய அதிகாரிகள் பால் கட்டுப்பாடின்மையை நாம் கொள்ளை நோய் என அஞ்சுதல் வேண்டும், காரணம் அது அழிவுக்கு இட்டுச் செல்லும். இதை உரால், சைபீரியா மற்றும் உக்ரேன் சம்பவங்கள் நிதர்சனப்படுத்தி விட்டன.

எவன் ஒருவன் செஞ்சேனைக்கு பரிபூரணமாயும் தன்னலம் இன்றியும் உதவவில்லையோ, அல்லது அதன் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் தனது பலம் அனைத்தையும் கொண்டு ஆதரிக்கவில்லையோ அவன் ஒரு துரோகி, சதிகாரன், கல்ச்சாக் கலகத்தின் ஆதரவாளன் ஆவான். அவன் விஷயத்தில் இரக்கம் காட்டாமல் அழித்துவிட வேண்டும்.

ஒரு பலமான செஞ்சேனை இருப்பின் நாம் வெல்ல முடியாதவர்களாக இருப்போம். பலமான சேனை இல்லையேல் கல்ச்சாக், தெனீக்கின் மற்றும் யுதேனிச்சுக்கு நாம் தவிர்க்க முடியாதபடி பலியாக நேரும்.

இரண்டாவது படிப்பினை. பேரளவிலான அரசாங்கத் தானிய இருப்புக்கள் இல்லாமல் செஞ்சேனை வலிமையுடன் இருக்க முடியாது. ஏனெனில் இவை இன்றி சேனை இஷ்டம் போல இயங்க முடியாது, அதற்குச் சரிவரப் பயிற்சி அளிக்க முடியாது. இவை இன்றி சேனைக்காக உற்பத்தி செய்துவரும் தொழிலாளர்களைப் பராமரிக்க முடியாது.

அரசாங்கத் தானிய இருப்புக்கள் குறைவாக இருப்பதே குறிப்பாயும் நமது செஞ்சேனையின் வெற்றிகள் போதுமான அளவு வேகமாயும் ஸ்திரமாகவும் இல்லாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் என்பதை வர்க்க உணர்வுடைய ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் அறிந்திருக்க வேண்டும், நினைவில் இருத்த வேண்டும். தனது உபரி தானியத்தை அரசுக்குக் கொடுக்காத எவனும் கல்ச்சாக்குக்கு உதவுகிறான் அவன்; தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளைக் காட்டிக் கொடுக்கும் துரோகியாவான்; செஞ்சேனையிலுள்ள ஆயிரக் கணக்கான தொழிலாளர், விவசாயிகளின் அனாவசியமான சாவுக்கும் துன்பதுயரங்களுக்கும் பொறுப்பாளியாவான்.

பகிரங்க மார்க்கெட் விலைக்கு எனது தானியத்தை விற்பது நல்லது, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை விடவும் மிகவும் அதிகமான தொகை எனக்குக் கிட்டும் என்று இந்த வழியில் போக்கிரிகளும் கொள்ளைலாபக்காரர்களும், ஏதும் அறியாத விவசாயிகளும் வாதிக்கிறார்கள்.

ஆனால் இதன் முழுமையான அம்சம் என்னவென்றால் இஷ்டம் போல விற்பனை செய்வது கொள்ளைலாபமடிப்பதை ஊக்குவிக்கிறது; ஒரு சிலர் செல்வந்தர்களாகின்றனர்; பணக்காரர்கள் தெவிட்டுமளவு பணம் பெறுகின்றனர். அதேபோதில் உழைக்கும் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். இதை நாம் சைபீரியா மற்றும் உக்ரேனிலுள்ள மிகவும் செழுமையான தானியம் விளைக்கும் மாவட்டங்களில் நடைமுறையில் கண்டோம்.

தானியத்தை இஷ்டம் போல விற்பனே செய்வது மூலம் மூலதனம் வெற்றியடைகிறது, உழைப்பாளர் பட்டினி கிடந்து துயர்ப்படுகின்றனர்.

தானியத்தை இஷ்டம் போல விற்பனே செய்வது மூலம் ஒரு பூடு தானியத்தின் விலே ஆயிரக்கணக்கான ரூபிளுக்கு உயர்கிறது; பணம் தன் மதிப்பை இழக்கிறது; விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சில கொள்ளேலாபக்காரர்கள் அனுகூல மடைகின்றனர்; அதேபோதில் மக்கள் மேலும் ஏழைகளாகின்றனர்.

தானியத்தை இஷ்டம் போல விற்பனே செய்வது மூலம் அரசாங்கக் களஞ்சியங்கள் காலியாகின்றன; சேனே சக்தி இழக்கிறது; தொழில் அழிகிறது; கல்ச்சாக் மற்றும் தெனீக்கின் வெற்றி தவிர்க்க வொண்ணுதாகிறது.

செல்வந்தர்கள் மட்டுமே, தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் ஆட்சியதிகாரத்தின் படுமோசமான எதிரிகள் மட்டுமே, தானியத்தை இஷ்டம் போல விற்பனே செய்வதை உணர்வுபூர்வமாக ஆதரிக்கிருர்கள். அறியாமை காரணமாகத் தானியத்தை இஷ்டம் போல விற்பனே செய்வதை ஆதரிப்பவர்கள் அவ்வாறு செய்வது எப்படி கல்ச்சாக், தெனீக்கின் வெற்றிக்கு இட்டுச் செல்லும் என்பதை சைபீரியா மற்றும் உக்ரேனின் உதாரணத்தில் இருந்து புரிந்து அறிந்து கொள்ள வேண்டும்.

பின்வருமாறு வாதம் செய்யும் அறிவொளி பெருத விவசாயிகள் இன்னும் இருக்கிருர்கள்: எனது தானியத்துக்குப் பரிமாற்றமாக அரசு போருக்கு முந்திய விலேகளில் நல்ல சமான்களே எனக்கு முதலில் தரட்டும், பிறகு நான் எனது உபரி தானியத்தைத் தருகிறேன், இல்லாவிடில் தர மாட்டேன். இந்த விதமான வாதம் மூலம் அறிவொளி பெருத விவசாயிகளேப் போக்கிரிகளும் நிலப்பிரபுக்களின் ஆதரவாளர்களும் அடிக்கடி ஏமாற்றி வருகிருர்கள்.

கன்ஸ்தந்திநோப்பிள் வேண்டும் என்பதற்காக நான்காண்டு காலம் நடத்திய கொள்ளேக்காரப் போர் மூலம் முதலாளிகள் தொழிலாளர் அரசை முழுமையாக நாசம் செய்துவிட்டார்கள். இப்போது பழிவாங்கும் முறையில் கல்ச்சாக்கு

களும் தெனீக்கின்களும் உலக முற்றுமுள்ள முதலாளிகளின் ஆதரவோடு இதை மீண்டும் நாசப்படுத்தி வருகிருர்கள். இத்தகைய அரசால் இந்தத் தருணத்தில் விவசாயிகளுக்குப் பண்டங்களை வழங்க முடியாது, காரணம் தொழிற்துறை ஸ்தம்பித்துக் கிடக்கிறது. இதைப் புரிந்து கொள்வது கடின மல்ல—உணவு இல்லை, எரிபொருள் இல்லை, தொழில்கள் இல்லை.

தொழிற்துறைப் பண்டங்களைப் பிரதியாகப் பெறும் நிபந்தனையின் மீது, பட்டினி கிடக்கும் தொழிலாளிக்கு உபரி தானியத்தைக் கடனுக வழங்க வேண்டும் என்பதை விவேக முடைய ஒவ்வொரு விவசாயியும் ஒத்துக்கொள்வது திண் ணம்.

இப்போது நிலைமை இந்த வகையில்தான் உள்ளது. எவ் விதமான விதிவிலக்கும் இன்றி உபரி தானியம் அனைத்தும் தொழிலாளர் அரசாங்கத்திடம் கடனுக ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதை வர்க்க உணர்வுடைய விவேகமுடைய விவசாயிகள் அனைவரும், போக்கிரிகள் மற்றும் கொள்ளை லாபக்காரர்கள் தவிர்த்த எல்லோரும் ஒப்புக்கொள்வார் கள். ஏனெனில் அப்போதுதான் அரசு தொழிற்துறையை மீட்டமைத்து விவசாயிகளுக்குத் தொழிற்துறைப் பண்டங் களை வழங்க முடியும்.

தமது உபரி தானியத்தைக் கடனுகத் தரும் அளவுக்கு விவசாயிகள் தொழிலாளர் அரசை நம்புவார்களா? என்று நம்மிடம் கேட்கப்படலாம்.

முதலில், அரசு இந்தக் கடனுக்காகக் கஜானு நோட்டுகள் வடிவில் ஒரு பத்திரத்தை தரும் என்றும் நாம் பதிலளிக் கிருேம். இரண்டாவதாக, தொழிலாளர் அரசு, அதாவது சோவியத் ஆட்சி உழைக்கும் மக்களுக்கு உதவி செய்கிறது, நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் எதிர்த்துப் போராடு கிறது என்பதை அனுபவத்தின் மூலம் எல்லா விவசாயிகளும் அறிவார்கள். இதனுல்தான் சோவியத் ஆட்சியானது தொழி லாளர் மற்றும் விவசாயிகளின் ஆட்சி என்று அழைக்கப் படுகிறது. மூன்ருவதாக, விவசாயிகளுக்கு வேறு மாற்று வழி எதுவும் கிடையாது: அவர்கள் ஒன்ரு தொழிலாளியை

நம்ப வேண்டும், அல்லது முதலாளியை நம்ப வேண்டும்; தமது நம்பிக்கையையும் கடனுதவியையும் ஒன்று தொழிலாளர் அரசுக்கு வழங்க வேண்டும், அல்லது முதலாளிகளின் அரசுக்கு வழங்க வேண்டும். ருஷ்யாவிலும் சரி, அல்லது உலகின் எந்த ஒரு நாட்டிலும் சரி வேறு மாற்று வழி கிடையாது. விவசாயிகள் எந்தளவுக்கு அதிக வர்க்க உணர்வு பெற்றவர்களாகிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள் அதிக உறுதியாக தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிற்பார்கள்; அந்த அளவுக்கு தொழிலாளர் அரசுக்கு எல்லா வழிகளிலும் உதவி புரிவது என்ற தமது முடிவில் அவர்கள் அதிக உறுதியுடன் இருப்பார்கள். இதன் மூலம் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் ஆட்சி மீண்டும் ஏற்படுவதைச் சாத்தியமற்றதாக்கி விடுவார்கள்.

மூன்றாவது படிப்பினை. கல்ச்சாக்கும் தெனீக்கினும் முற்றாக அழிக்கப்பட வேண்டுமானால் மிகவும் கறாரான புரட்சிகர ஒழுங்கு பராமரிக்கப்பட வேண்டும்; சோவியத் ஆட்சியதிகாரத்தின் சட்டங்களும் நெறிமுறைகளும் விசுவாசமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்; அவை எல்லோராலும் பின்பற்றி ஒழுகப்படும் வகையில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

குறைந்தபட்ச ஒழுங்கு குலைவு, சோவியத் ஆட்சியின் சட்டங்கள் சிறிதளவில்கூட மீறப்படுவது, ஆகச் சிறிய உறுதியின்மை அல்லது கவனமின்மை முதலியவை உடனடியாக நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் வலுப் பெற உதவும், அவர்களது வெற்றிக்கு வகை செய்யும் என்பதற்கு சைபீரியாவிலும் உராலிலும் கல்ச்சாக் பெற்ற வெற்றிகள் நம் அனைவருக்கும் துலாம்பரமான உதாரணமாகும். ஏனெனில் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் இன்னும் அழித்தொழிக்கப்படவில்லை, அவர்கள் தாம் தோற்றுப் போய்விட்டதாகக் கருதவில்லை. அடிக்கப்பட்ட அவர்கள் தலைமறைவாகி விட்டார்கள் என்பதையும் பெரும்பாலும் ''சோவியத்'' ''பாதுகாப்பு'' வண்ணத்தின் கீழ் வேடமிட்டுத் திரியும் அவர்கள் தருணம் நோக்கிப் பதுங்கியிருக்கிறார்கள் என்பதையும் கூர் மதியுடைய ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் காண்

கிறுன், அறிந்திருக்கிறுன், உணர்கிறுன். பல நிலப்பிரபுக்கள் அரசுப் பண்ணைகளிலும், முதலாளிகள் சோவியத் அதிகாரி களாக பல்வேறு ''மத்திய நிர்வாகங்கள்'' ''மத்திய வாரியங் கள்'' ஆகியவற்றிலும் தந்திரமாகப் புகுந்து கொண்டு விட்டார்கள். சோவியத் ஆட்சியதிகாரத்தின் ஒவ்வொரு நட வடிக்கையையும் உன்னிப்பாக கவனித்து வருகிறுர்கள். அது தவறு செய்வதையும் பலவீனப்படுவதையும் எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கிறுர்கள். அவ்வாறு நேரிடுமானுல் அதை வீழ்த்தவும், செக்கோஸ்லொவாக்குகளுக்கு[4] இன்றும், தெனீக்கினுக்கு நாளையும் உதவி புரியலாம் என்றும் காத் திருக்கிறுர்கள்.

தருணம் நோக்கிப் பதுங்கியிருக்கும் இந்தக் கொள்ளைக் காரர்களை, இந்த நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளைத் தடம் கண்டு துரத்தி வெளியேற்றவும், அவர்கள் என்ன வேடம் போட்டாலும் சரி அவர்களை அம்பலப் படுத்தவும், தாட்சண்யமின்றித் தண்டிக்கவும் யாவும் செய்யப்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் உழைக்கும் மக்களின் படுமோசமான விரோதிகளாவர், தேர்ச்சி மிக்க, தந்திரமான, அனுபவம் வாய்ந்த விரோதிகளாவர், ஒரு சதியைத் தூண்டி விடுவதற்காகத் தக்க தருணம் நோக்கிப் பொறுமையுடன் காத்திருப்பவர்களாவர். அவர்கள் சோவி யத் ஆட்சிக்குத் தீங்கு விளைப்பதற்காக எந்தக் குற்றத்தை யும் செய்யத் தயங்காத நாச வேலைக்காரர்கள். உழைக்கும் மக்களின் இந்த விரோதிகளிடம், இந்த நிலப்பிரபுக்கள், முதலாளிகள், நாச வேலைக்காரர்கள் மற்றும் எதிர்ப்புரட்சி யாளர்களிடம் இரக்கம் காட்டக் கூடாது.

அவர்களைப் பிடிக்க இயலும் பொருட்டு, நாம் தேர்ச்சி யுடன், கவனமுடன், வர்க்க உணர்வுடன் செயல்பட வேண் டும்; ஆகச் சிறிய ஒழுங்கு குலைவையும், சோவியத் ஆட்சியதி காரத்தின் சட்டங்கள் மனச்சாட்சி பூர்வம் கடைப்பிடிக்கப் படுவதிலான சின்னஞ்சிறு பிறழ்வையுங்கூட நாம் மிகவும் கவனத்துடன் கண்காணிக்க வேண்டும். நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் வலிமையுடன் இருப்பதற்குக் காரணம் அவர் களது அறிவு, அனுபவம், உலகின் ஆகச் செல்வந்த நாடு

களில் இருந்து அவர்களுக்குக் கிட்டும் உதவி ஆகியவை மட்டும் அல்ல. அதோடு, ''பழைய வழியில்'' வாழ விரும்பி சோவியத் ஆட்சியின் சட்டங்களைக் கருராயும் மனச்சாட்சி பூர்வமும் கடைப்பிடிப்பது எவ்வளவு முக்கியமானது என்பதை உணராமலும் இருக்கும் விரிவான மக்கள் திரளின் பழக்க தோஷமும் அறியாமையுங்கூட இதற்குக் காரணமாகும்.

ஆகச் சொற்பமான அமைதி இன்மையும், சோவியத் சட்டமும் ஒழுங்கும் சொற்பமான அளவுக்கு மீறப்படுவதும் ஒரு பலவீன அம்சம். இதனை உழைக்கும் மக்களின் விரோதிகள் உடனடியாகத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கிருர்கள். இதுவே கல்ச்சாக் மற்றும் தெனீக்கினின் வெற்றிகளுக்குத் துவக்க நிலை ஆகும். செக்கோஸ்லொவாக்குகள் விஷயத்தில் ஏற்பட்ட ஏதோ ஒரு சிறிய அஜாக்கிரதை மூலமும், ஒரு சில படைப் பிரிவுகளின் அற்பமான கீழ்ப்படியாமையில் இருந்துமே கல்ச்சாக் கலக எழுச்சி தொடங்கியது என்பதை மறப்பது பெரும் குற்றம்.

நாலாவது படிப்பினை. கல்ச்சாக்கின் கலக எழுச்சி அற்பமான விஷயங்களுடன் தொடங்கியது என்பதை மட்டுமல்ல, மென்ஷிவிக்குகள் (''சமூக-ஜனநாயகவாதிகள்'') மற்றும் ''சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்'' அதன் பிறப்புக்கு உதவினர், அதை நேரடியாக ஆதரித்தனர் என்பதையும் மறப்பது பெருங்குற்றம். அரசியல் கட்சிகளை அவற்றின் சொற்களை வைத்து அல்லாமல் அவற்றின் செயல்களை வைத்து நிர்ணயிப்பதற்குப் பயில வேண்டிய காலம் வந்து விட்டது.

மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் தம்மை சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்கிருர்கள், ஆனல் அவர்கள் உள்ளபடியே எதிர்ப்புரட்சியாளர்களின் உடந்தையாளர்களே, நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் உடந்தையாளர்களே. இது தனிப்பட்ட மெய்விவரங்களால் மட்டுமன்றி ருஷ்யப் புரட்சியின் வரலாற்றின் இரண்டு பெரிய கால கட்டங்களாலும் நடைமுறையில் நிரூபிக்கப்பட்டது: 1) கேரென்ஸ்கி ஆட்சி கால கட்டம்[5] மற்றும் 2) கல்ச்சாக் கலகக் கால கட்டம். இந்த இரு காலங்களி

லும் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் தம்மை ''சோஷலிஸ்டுகள்'' மற்றும் ''ஜனநாயகவாதிகள்'' என்று புறப்பகட்டாகக் காட்டிக் கொள்ளும் அதேபோதில், உள்ளபடியே வெண்காவலர்களின் உடந்தையாளர்கள் பாத்திரத்தையே வகித்து வந்துள்ளனர். அவர்கள் ''மீண்டும் முயற்சி செய்ய'' அனுமதிக்கும்படி நம்மிடம் யோசனை கூறி, நமது அனுமதியை ''ஐக்கிய சோஷலிஸ்டு (அல்லது ஜனநாயக) முன்னணி'' என்று அழைக்கும் இப்போது அவர்களை நம்பும் அளவுக்கு நாம் அவ்வளவு மடையர்களாக இருக்கப் போகிறோமா? கல்ச்சாக் கலகத்தின் அனுபவத்துக்குப் பிறகு, மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடனான ஒரு ''ஐக்கிய முன்னணி'' என்பது கல்ச்சாக்கின் உடந்தையாளர்களுடனான இணைப்பேயாகும் என்பதை உணராத விவசாயிகள், ஒரு சில தனிப்பட்ட நபர்களைத் தவிர, எவரேனும் இருக்க முடியுமா?

மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் தமது தவறை உணர்ந்துவிட்டார்கள், முதலாளித்துவ வர்க்கத்தோடான எல்லாக் கூட்டணிகளையும் கைவிட்டு விட்டார்கள் என்று மறுப்புக் கூறலாம். ஆனால் அது உண்மை அல்ல. முதலாவதாயும், வலதுசாரி மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் இத்தகைய கூட்டணியைக் கைவிட்டுவிடக்கூட இல்லை. இந்த ''வலதுசாரிகளிடமிருந்து'' திட்டவட்டமான எல்லைப்பாகுபாடு இல்லை. தமது ''வலதுசாரிகளை'' சொல்லளவில் ''கண்டனம் செய்த'' போதிலும் ''இடதுசாரி'' மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் பிழை காரணமாக இத்தகைய எல்லைப்பாகுபாடு இல்லை. ஆகச் சிறந்த மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் கூட, அவர்கள் என்ன தான் சொன்ன போதிலும் சரி, அன்னவர்களுடன் ஒப்பிடும் போது உள்ளபடியே வலிமையற்றுக் காணப்படுகிறார்கள். இரண்டாவதாக, ஆகச் சிறந்த மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுங்கூட ஆதரித்து வருவது உள்ளபடியே கல்ச்சாக் கருத்துக்களே ஆகும். இவை முதலாளிகளுக்கும் கல்ச்சாக்குக்கும் தெனீக்கினுக்கும் துணை நிற்பதோடு, அவர்கள் தமது

நீசத்தனமான இரத்த வெறி பிடித்த முதலாளித்துவச் செயல்களை மூடி மறைத்துக் கொள்ளவும் உதவுகின்றன. இந்தக் கருத்துக்களாவன: ஒரு மக்கள் ஆட்சியதிகாரம், சர்வப் பொதுவான, சமமான, நேரடியான வாக்குரிமை, அரசியல் நிர்ணய சபை, பத்திரிகைச் சுதந்திரம் இத்தியாதி யாகும். இந்த ''ஜனநாயகப்'' பொய்மை மூலமே முதலாளி களின் ஆதிக்கத்தையும், காலனிகளை அடிமைப்படுத்துவதற் கான போர்களையும் நியாயப்படுத்தும் முதலாளித்துவக் குடியரசுகளை உலகம் முழுவதிலும் நாம் பார்க்கிறோம். நமது நாட்டிலேயே கல்சாக், தெனீக்கின், யுதேனிச் அல்லது எந்த ஒரு ஜெனரலும் இத்தகைய ''ஜனநாயக'' வாக் குறுதிகளைத் தயாராக வெளியிடுவதை நாம் பார்க்கிறோம். நாடறிந்த ஒரு கொள்ளைக்காரனுக்கு உதவி செய்யும் ஒரு மனிதனை அவனது சொல்லளவிலான வாக்குறுதிகளின் பேரில் நாம் நம்ப முடியுமா? எவ்வித விதிவிலக்கும் இன்றி எல்லா மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் நாடறிந்த கொள்ளைக்காரர்களான உலக ஏகாதிபத்திய வாதிகளுக்கு உதவி செய்கிறார்கள். போலி ஜனநாயகக் கோஷங்களைப் பயன்படுத்தி அவர்களது அரசு அதிகாரத்தை யும் ருஷ்யாவுக்கு எதிரான அவர்களது ஆக்கிரமிப்பையும் அவர்களது ஆதிக்கத்தையும் அவர்களது கொள்கையையும் ஒளிர் வண்ணங்களில் தீட்டிக் காட்டுகிறார்கள். ''பயங்கர நடவடிக்கைகளைக் கைவிடுதல்'' (அன்டான்ட்[6] முழுமையின் கோடீசுவரர்கள் மற்றும் ருஷ்யாவில் சதிகளைத் தூண்டிவிடும் ஆகச் செல்வந்த நாடுகளின் கூட்டணி முழுமையின் பயங்கர நடவடிக்கைகளை நாம் எதிர்கொள்ளும் போது) அல்லது தானிய வர்த்தகம் நடத்துவதற்கான சுதந்திரத்திற்கு வழி திறப்பது எனும் சலுகைகளை முதலாளிகளுக்கும் அவர்களது தலைவர்களான கல்சாக் மற்றும் தெனீக்கினுக்கும் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் மீது எல்லா மென்ஷிவிக்கு களும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் நமக்கு ஒரு ''கூட் டணியை'' வழங்குகிறார்கள். மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் இந்த ''நிபந்தனைகள்'' பின் வருமாறு சுருக்கமுறும்: மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-

புரட்சியாளர்களுமான நாங்கள் முதலாளிகள் பால் உறுதி யற்ற நிலை மேற்கொள்கிறேம்; முதலாளிகள் ஒவ்வொரு சலுகையையும் தமக்குச் சாதகமாக்கி எதிர்த்துப் போராடி வரும் போல்ஷிவிக்குகளுடன் ஓர் ''ஐக்கிய முன்னணியை'' விழைகிறேம்! இல்லை, மென்ஷிவிக் சோஷலிஸ்டு-புரட்சியா ளர் கனவான்களே, உங்களை நம்பக் கூடியவர்களான நபர் களை இனிமேல் ருஷ்யாவில் தேட முயலாதீர்கள். ருஷ்யாவில் வர்க்க உணர்வுடைய தொழிலாளர்களும் விவசாயிகளும், மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் வெண் காவலர்களின் உடந்தையாளர்கள் என்பதையும்—சிலர் திட்டமிட்டும் கெடுநோக்குடனும், இதரர்கள் அறியாமலும் தமது பழைய தவறுகளை விடாப்பிடியாக வைத்திருப்பதா லும் இருக்கலாம் எனினும்—அவர்கள் எல்லோரும் வெண் காவலர்களின் உடந்தையாளர்களே என்பதையும் இப் போது உணர்ந்து விட்டார்கள்.

ஐந்தாவது படிப்பினை. கல்ச்சாக்கும் அவரது எதிர்ப் புரட்சிக் கலகமும் அழிக்கப்பட வேண்டுமானல், மீண்டும் ஏற்படாது தவிர்க்கப்பட வேண்டுமானல் எல்லா விவசாயி களும் தொழிலாளர் அரசுக்குத் தயக்கமின்றி ஆதரவை அளிக்க வேண்டும். போல்ஷிவிக்குகளான கம்யூனிஸ்டுகளின் ''ஒரு கட்சி சர்வாதிகாரம்'' என்ற பூச்சாண்டியை வைத்து விவசாயிகளைப் பீதிப்படுத்த சிலர் (குறிப்பாயும் மென்ஷி விக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்—அனைவரும் அவர்கள் மத்தியிலான ''இடதுசாரிகளும்'' கூட) முயன்று வருகிறர் கள்.

இந்தப் பூச்சாண்டி குறித்துப் பயப்பட வேண்டியதில்லை என்பதை விவசாயிகள் கல்ச்சாக் கலகத்திலிருந்து தெரிந்து கொண்டு விட்டார்கள்.

ஒன்று, நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் சர்வாதி காரம் (அதாவது இரும்பனைய ஆட்சி) அல்லது தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம்.

நடுப்பாதை என்பது இல்லை. பிரபுக்குலத்து வழித் தோன்றல்கள், அறிவுஜீவி இயல்பினர், மோசமான நூல்களால் மோசமாகப் பயிற்றுவிக்கப்பட்ட சிறுதர கனவான்கள்

முதலியவர்கள் ஒரு நடுப்பாதை குறித்து வீணுகக் கனவு காண்கிருர்கள். உலகில் எங்குமே நடுப்பாதை என்பது இல்லை, இருக்கவும் முடியாது. ஒன்ரு, முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரம் (மக்கள் ஆட்சியதிகாரம், அரசியல் நிர்ணய சபை, சுதந்திரங்கள் இத்தியாதி அலங்காரமான சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக்குகளின் தொடர்களின் முகமூடியின் கீழ்) அல்லது பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம். பத்தொன்பதாம் நூற்ருண்டின் வரலாறு முழுவதில் இருந்தும் இதை அறிந்து கொள்ளாதவன் படுமோசமான மடையனே. மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் கேரென்ஸ்கியின் கீழும், கல்ச்சாக்கின் கீழுமான ஒரு நடுப்பாதை பற்றி எப்படிக் கனவு கண்டார்கள் என்பதை ருஷ்யாவிலுள்ள நாம் அனைவரும் கண்டோம்.

இந்தக் கனவுகள் யாருக்கு உதவுகின்றன? இவை யாருக்குத் துணை நின்றன?—கல்ச்சாக்குக்கும் தெனீக்கினுக்குமே. நடுப்பாதை பற்றிக் கனவு காண்போர் கல்ச்சாக்கின் உடந்தையாளர்களே ஆவர்.

உராலிலும் சைபீரியாவிலும் உள்ள தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்துடன் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தினை ஒப்பு நோக்கிப் பார்ப்பதற்கான ஒரு வாய்ப்புக் கிட்டியது. தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் போல்ஷிவிக்குகளின் கட்சியால் அமல் செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கட்சி 1905லேயே, அதற்கு முன்பே புரட்சிகரப் பாட்டாளிகள் முழுமையுடன் இரண்டறக் கலந்து விட்டது.

தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்பதன் பொருள் தொழிலாளர் அரசு நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் இந்தச் சுரண்டலாளர்களுக்கு உதவும் ஓடுகாலிகளையும் துரோகிகளையும் சற்றும் தயங்காது ஒடுக்கும், அவர்களை முறியடிக்கும் என்பதாகும்.

தொழிலாளர் அரசு நிலப்பிரபுக்கள், முதலாளிகள், கொள்ளைலாபக்காரர் மற்றும் மோசடி செய்வோரின் தீராத விரோதியாகும், நிலம் மற்றும் மூலதனத்தின் தனியார் உடைமையின் எதிரி, பண ஆதிக்கத்தின் எதிரி.

தொழிலாளர் அரசு உழைக்கும் மக்களுக்கும் விவசாயி மக்களுக்கும் உரிய ஒரே விசுவாசமான நண்பன் மற்றும் துணைவன் ஆகும். மூலதனத்தின் பக்கம் சார்ந்து நிற்பதில்லை, மாறாக அதை எதிர்த்துப் போராட உழைக்கும் மக்களின் கூட்டணி, தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் ஆட்சி அதிகாரம், சோவியத் ஆட்சி அதிகாரம் — இதுவே நடைமுறையில் ''தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்பதன் அர்த்தமாகும்.

இந்த வார்த்தைகளைக் கொண்டு விவசாயிகளைப் பீதிப்படுத்த மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் விரும்புகிறார்கள். அவர்கள் இதில் வெற்றியடைய மாட்டார்கள். கல்ச்சாக் எதிர்ப்புரட்சிக் கலகத்துக்குப் பிறகு மிகவும் தொலை தூரத்தில் இருக்கும் காட்டகத்தில் வாழும் தொழிலாளர்களும் விவசாயிகளும் இது இல்லாமல் கல்ச்சாக்கிடமிருந்து விமோசனம் ஏற்பட முடியாது என்பதே துல்லியமாயும் இச்சொற்களின் பொருள் என்பதை உணர்கிறார்கள்.

ஊசலாடும் பேர்வழிகள், உறுதியற்ற பேர்வழிகள், மூலதனத்திற்குத் துணை புரியும் போக்கில் தவறிழைக்கும் பேர்வழிகள், மூலதனத்தின் முழக்கங்கள் மற்றும் வாக்குறுதிகளால் மருட்சியூட்டப்பட்ட பேர்வழிகள் ஒழிக! மூலதனத்துக்கு எதிராக விட்டுக்கொடாத போராட்டம், உழைக்கும் மக்களின் கூட்டணி, விவசாயிகள் மற்றும் தொழிலாளி வர்க்கத்தினர்களின் கூட்டணி—கல்ச்சாக் எதிர்ப்புரட்சிக் கலகத்தின் இறுதியான, ஆக முக்கியமான படிப்பினை இதுவே.

ஆகஸ்டு *24, 1919*

பிராவ்தா, இதழ் *190*,
ஆகஸ்டு *28, 1919*

நூல் திரட்டு,
தொகுதி *39*,
பக்கங்கள் *151-159*

பெத்ரோகிராத் தொழிலாளரின் உதாரணம்

பெத்ரோகிராத் தொழிலாளர்கள் படைதிரட்டலை மிகவும் முனைப்புடன் தொடங்கி, சிறந்த தொழிலாளர்களைத் தெற்குப் போர்முனைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்று செய்திப் பத்திரிகைகள் ஏற்கெனவே அறிவித்து விட்டன.

தெனீக்கின் கூர்ஸ்க் நகரத்தைப் பிடித்தடக்கியதும், ஒரியோலை நோக்கி முன்னேறி வருவதும் பெத்ரோகிராத் பாட்டாளிகளின் இந்த ஊக்கமிகக செயலிற்கான முகாந்தரத்தை முற்றாக விளக்கி விட்டன. இவர்களது உதாரணத்தை இதர தொழிற்துறை மையங்களில் இருக்கும் தொழிலாளர்கள் பின்பற்ற வேண்டும்.

நமது அணிகளில் பீதியை ஏற்படுத்தவும், நாம் தற்காப்பைப் பற்றி மட்டுமே இப்போதிருக்கும் விவகாரம் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கும்படிச் செய்வதையும் நம்பியே தெனீக்கின் கும்பல் இருக்கிறது. பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் எவ்வளவு கண்ணும் கருத்துமா தெனீக்கினுக்கு உதவுகிறார்கள், எப்படி அவருக்கு ஆயுதங்களையும் கோடிக்கணக்கான ரூபிள்களையும் கொடுத்து உதவுகிறார்கள் என்பதை வெளிநாட்டு ரேடியோ புலப்படுத்துகிறது. மாஸ்கோவுக்கான பாதை திறந்து கிடக்கிறது என்று உலகம் முழுதிற்கும் பிரகடனம் செய்கிறது வெளிநாட்டு ரேடியோ. இப்படித்தான் முதலாளிகள் நம்மை அச்சுறுத்துவதில் வெற்றியடைய விரும்புகிறார்கள்.

ஆனால் நம்மை அச்சுறுத்துவதில் அவர்கள் வெற்றியடைய மாட்டார்கள். நமது படை அணிகளின் பரவலாக்கம் மிக

வும் கவனத்துடன் திட்டமிடப்பட்டு, கருராக நிறைவேற்றப் பட்டு இருக்கிறது. எதிரியின் வலிமையின் முக்கிய ஆதாரத்தை எதிர்த்த நமது தாக்குதல் உறுதியாக நீடிக்கிறது. அண்மையில் அடைந்த வெற்றிகள்—பகுச்சார்ஸ்கி பிரதேசத்தில் 20 பீரங்கிகள் கைப்பற்றப்பட்டதும், வேஷென்ஸ்கயா கிராமம் பிடித்தடக்கப்பட்டது—நமது படைகள் கசாக் பிரதேசத்தின் மையத்திற்கு வெற்றிகரமாக முன்னேறி வருவதைச் சுட்டுகின்றன. கசாக்குகள் மட்டுமே தெனீக்கின் முக்கியமான ஒரு படைப் பகுதியை ஒழுங்கமைப்பதற்கு இயலும்படிச் செய்தார்கள், இன்னும் இயலுமாறு உதவி செய்து வருகிருர்கள். கல்ச்சாக் தகர்க்கப்பட்டது போல தெனீக்கினும் தகர்க்கப்படுவார். அவர்களால் நம்மை அச்சுறுத்த முடியாது. நாம் நமது லட்சியப் பணியை வெற்றிகரமாகச் செய்து முடிப்போம்.

கூர்ஸ்க் பிடித்தடக்கப்பட்டதும், எதிரி ஓரியோலை நோக்கி முன்னேறியதும் காரணமாக, அங்கு எதிரியைத் தடுத்து விரட்டக் கூடுதலான படைகளை ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தப் பணியை அவர்கள் சரியாகப் புரிந்து கொண்டு இருக்கிருர்கள் என்பதைப் பெத்ரோகிராத் தொழிலாளர்கள் தமது உதாரணம் மூலம் எடுத்துக் காட்டி விட்டார்கள். ஆபத்துக்களை நம்மிடமிருந்து மறைத்துக் கொள்ளாத வகையிலும், அவற்றை எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிடாத வகையிலும் நாம் சொல்கிறேம்: நம்மிடம் கூடுதல் படைபலம் இருக்கிறது என்பதை பெத்ரோகிராத் காட்டி விட்டது. ஓரியோல் மீதான தாக்குதலைத் தடுக்கவும், கூர்ஸ்க் மற்றும் ஹார்க்கவுக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்கவும், நம்மிடம் ஏற்கெனவே கைவசம் இருக்கும் படைகளுக்கு மேல் அதிகமாக மிகச் சிறந்த பாட்டாளிகள் திரட்டப்பட வேண்டும். கூர்ஸ்க் நகர வீழ்ச்சி மிகவும் மோசமான ஓர் அபாயத்தைக் குறிக்கிறது. மாஸ்கோவுக்கு அருகே எதிரி முன் என்றுமே இவ்வளவு நெருங்கி வந்தது கிடையாது. முந்திய படைப் பிரிவுகளுக்கும் கூடுதலாக, பின்வாங்கி வரும் பிரிவுகளின் மனப்போக்கை மாற்றும் திறனுடைய முன்னேறிய தொழிலாளர்களின் புதிய படைப்

பிரிவுகளை இந்த அபாயத்தினைத் தவிர்ப்பதற்கு வேண்டி நாம் அனுப்பி வைக்கிறோம்.

தெற்குப் போர் முனையில் இருக்கும் நமது படைகளின் மத்தியில் அணிகளுக்கு மீண்டும் திரும்பி வந்த துறந்தோடிகள் முக்கியமாய் இடம் பெறுகின்றனர். பிரசாரத்தின் செல்வாக்கின் விளைவாக அவர்களில் பெரும்பாலோர் சுயவிருப்பத்துடன் திரும்பி வந்தார்கள். இந்தப் பிரசாரம் அவர்களது கடமை எங்கே இருக்கிறது என்பதை விளக்கியது; நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் ஆட்சி அதிகாரம் மீட்டமைக்கப்படுமானல் எத்தகைய படுமோசமான அபாயம் ஏற்படும் என்பதை எடுத்துக் காட்டியது. ஆனல் துறந்தோடிகளால் உறுதியுடன் இருக்க முடியாது. அவர்களிடம் திடமான உறுதி இல்லை. பெரும்பாலும் அவர்கள் போராடாமல் பின்வாங்கத் தொடங்கி விடுகிருர்கள்.

இதனல்தான் பாட்டாளிகள் படைப் பிரிவைப் புதிதாகப் புகுத்துவது மூலம் சேனையை வலுப்படுத்துவது தலையாய முக்கியத்துவமுடையதாக இருக்கிறது. திடமற்ற நபர்களுக்கு வலுவூட்டப்படும், மனவலிமை உயர்த்தப்படும், ஒரு திரும்புமுனை எட்டப்படும். நமது புரட்சியில் தொடர்ச்சியாக நிகழ்ந்தது போலவே உழைக்கும் மக்களிடையான உறுதியற்ற பகுதிகளை பாட்டாளி வர்க்கம் ஆதரித்து வழிநடத்தும்.

நீண்ட காலமாக பெத்ரோகிராத் தொழிலாளர்கள் இதர தொழிற்துறை மையங்களில் இருக்கும் தொழிலாளர்களை விட மேலதிகமான பொறுப்புக்களை ஏற்க வேண்டி இருந்திருக்கிறது. இதர வட்டாரங்களில் உள்ள பாட்டாளிகளை விட அதிகமாக பெத்ரோகிராத் பாட்டாளிகள் பஞ்சம், போரின் அபாயங்கள் மற்றும் ருஷ்யா முழுதிலும் சோவியத்தின் கடமைப் பதவிகளுக்குச் சிறந்த தொழிலாளர்களை அழைத்துக் கொள்ளல் ஆகியவற்ருல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும் பெத்ரோகிராத் தொழிலாளர்கள் மத்தியில் மிகவும் சொற்பமான சோர்வோ, மிகவும் சொற்ப அளவிலான ஊக்கக் குறைவோ அறவே இல்லை என்பதைக் காண்

கிறேம். நேர் மாருக அவர்கள் உருக்குப் போன்று உறுதி பெற்றுள்ளனர், புதிய பலத்தை அடைந்துள்ளனர், புதிய போராளிகளே முன்னணிக்குக் கொண்டுவந்துள்ளனர். உதவியும் ஆதரவும் எங்கு மிகவும் தேவையாக இருக்கிறதோ, அங்கு அவற்றை ஈந்து ஒரு தலைமைப் படைப் பிரிவின் கடமையை அற்புதமாக நிறைவேற்றி வருகிறுர்கள் அவர்கள்.

உறுதியின்றி இருந்த நமது சேனைப் பிரிவுகளை வலுப் படுத்த இத்தகைய புதிய படைகள் செல்லும் போது உழைக்கும் மக்கள் திரள், விவசாயி குடும்பங்களைச் சேர்ந்த படையாளிகள், தமது வகைப்பட்டவர்கள் மத்தியில் இருந்தே—அதிக வளர்ச்சி பெற்ற, அதிக அரசியல் உணர்வுடைய, மேலும் அதிக உறுதியான உள்ளம் படைத்த உழைக்கும் மக்களிடையில் இருந்தே—புதிய தலைவர்களைப் பெறுகின்றனர். இதனுல்தான் நமது விவசாயிகளின் சேனைக்கு வழங்கப்படும் இத்தகைய உதவி நமது விரோதிக்கு எதிராக நமக்கு நிர்ணயமான மேம்பாட்டைத் தருகிறது. ஏனெனில் நமது எதிரிகள் விஷயத்தில் அவர்களது விவசாயிகளின் சேனையை ''வலுப்படுத்த'' நிலப்பிரபுக்களின் புதல்வர்கள் மட்டுமே அனுப்பி வைக்கப்படுகின்றனர். இந்த ''வலிமைப் படுத்தல்'' கல்ச்சாக்கை நாசப்படுத்தியது, தெனீக்கினையும் நாசப்படுத்தும் என்பதையும் நாம் அறிவோம்.

தொழிலாளர் தோழர்களே! பெத்ரோகிராத் தொழிலாளர்களின் உதாரணத்தைப் பின்பற்றிப் புதிய வேலையை நாம் எல்லோரும் துவங்குவோம்! சேனை சம்பந்தப்பட்ட செயல்பாடுகளில் மேலும் அதிக ஊக்கத்தையும் அதிக முன் முயற்சியையும் துணிவையும் மேலதிகமான ஆதர்சப் போட்டியையும் தோற்றுவித்து பெத்ரோகிராத் தொழிலாளர்களுக்கு சரி இணையாக வாருங்கள். உழைக்கும் மக்கள் நிச்சயமாயும் வெற்றி பெறுவார்கள். நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ எதிர்ப்புரட்சியாளர்கள் முறியடிக்கப்படுவது திண்ணம்.

குறிப்பு: மாஸ்கோவில் இருந்தும் மிகவும் அர்ப்பணிப்பு உணர்வுள்ள சில டஜன் தோழர்கள் போர்முனைக்குச் சென்

திருப்பதாக இப்போதுதான் கேள்விப்பட்டேன். பெத்ரோகிராதைப் பின்பற்றி மாஸ்கோ செயலில் இறங்கி விட்டது. மாஸ்கோவைப் பின்பற்றி மற்றவையாவும் செயலில் இறங்க வேண்டும்.

நி. லெ.

அக்டோபர் 3, 1919

பிராவ்தா, இதழ் *221*,
அக்டோபர் 4, 1919

நூல் திரட்டு,
தொகுதி *39*,
பக்கங்கள் 206-208

மாஸ்கோவில் கட்சி வாரத்தின் பலன்களும் நமது பணிகளும்

மாஸ்கோவில் நடைபெற்ற கட்சி வாரத்தின் போது 13,600 பேர் கட்சியில் சேர்க்கப்பட்டனர்.

இது மிகப் பெரிய, முற்றிலும் எதிர்பாராத வெற்றி. முதலாளி வர்க்கம் முழுமையும் தமது தனிச்சலுகையான, ''ஆளும்'' அந்தஸ்தின் இழப்புக் குறித்து ஓலமிடும் நிபுணர் களும் அதிகாரிகளும் அலுவலகப் பணியாளர்களும் உள் ளிட்ட நகரப்புற குட்டிமுதலாளிகள் குறிப்பாயும்—இந்த கனவான்கள் அனைவரும் அண்மையில் மாஸ்கோவில் கட்சி வாரத்தின் போது பீதியைப் பரப்பவும், சோவியத் ஆட்சி அதிகாரம் உடனடி வீழ்ச்சியுறும், தெனீக்கின் உடனடி வெற்றி யடைவார் எனும் ஆருடம் கூறவும் தம்மால் இயன்றது அனைத்தையும் செய்து வந்துள்ளனர்.

பீதியைப் பரப்பும் ஆயுதத்தைக் கையாள்வதில் இந்த ''அறிவுஜீவிகளியல்புடைய'' நபர்கள் எத்தகைய சிறப் பான கலைத் திறனைக் காட்டியிருக்கிறார்கள்! பாட்டாளிகளை எதிர்த்து முதலாளி வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட் டத்தில் இது வாஸ்தவத்தில் ஒரு மெய்யான ஆயுதமாகி விட் டது. நாம் இப்போது கடந்து சென்று கொண்டிருப்பது போன்றதான இத்தகைய கால கட்டங்களில் குட்டிமுத லாளிகள் முதலாளித்துவ வர்க்கத்தினர்களோடு ''ஒரு பிற் போக்குத் திரளாக'' இரண்டறக் கலந்து இந்த ஆயுதத்தை ''ஆவேசத்தோடு'' பற்றிக் கொள்கிறார்கள்.

மாஸ்கோதான்—எங்கு வாணிக நபர்கள் விசேஷ வலு வுடன் இருக்கிறார்களோ, எங்கு சுரண்டலாளர்களும் நிலப் பிரபுக்களும் முதலாளிகளும் சுகஜீவனம் நடத்துவோர்களும் பெருமளவில் ஒரு முனைப்பட்டிருக்கிறார்களோ, எங்கு முத லாளித்துவ வளர்ச்சி திரளான முதலாளித்துவ அறிவுஜீவி

களை ஒன்றுசேர்த்திருக்கிறதோ, எங்கு மத்திய அரசு நிர்வா கம் குறிப்பாயும் பெரும் தொகையிலான அதிகாரிகளை உரு வாக்கியுள்ளதோ, அந்த மாஸ்கோதான்—முதலாளித்துவப் பிதற்றலுக்கும் முதலாளித்துவ விஷமப் பேச்சுக்கும் முத லாளித்துவ பீதி பரப்பலுக்கும் விசேஷமாயும் வசதிப்பட்ட களத்தினை வழங்கியுள்ளது. தெனீக்கின் மற்றும் யுதேனிச் சின் வெற்றிகரமான தாக்குதல்கள் இந்த முதலாளித்துவ ஆயுதத்தின் ''வெற்றிகளுக்கு'' மிகவும் அசாதாரணமான அளவுக்கு சாதகம் புரியும் ''காரணிகளாக'' இருந்தன.

இருப்பினும், தெனீக்கினின் ''வெற்றிகளைக்'' கண்டு, இன்றைய கட்டத்தில் ஒரு கம்யூனிஸ்டின் பெயருடனும் கடமையுடனும் பற்றி நிற்கும் இடர்ப்பாடுகள், பளுவான பொறுப்புக்கள் மற்றும் ஆபத்துக்கள் அனைத்தையும் உணர்ந்த பாட்டாளிகள் திரளிலிருந்து ஆயிரம் ஆயிரமாக நபர்கள் எழுச்சியுற்று, கம்யூனிஸ்டுக் கட்சியை வலுப்படுத்த முன்வந்தார்கள், அரசு நிர்வாகத்தின் நம்பற்கரிய பளுவான பொறுப்புக்களை மேற்கொள்ள முன்வந்தார்கள்.

சோவியத் ஆட்சி அதிகாரத்தின் வெற்றி, நமது கட்சி யின் வெற்றி உண்மையிலேயே தனிச்சிறப்புடையது!

சோவியத் ஆட்சி அதிகாரத்தின் வலிமைக்கும் அதன் திண்மைக்கும் உரியதான மிகவும் நம்பகமான ஆதாரம் உழைக்கும் மக்களின் மெய்யான பிரதிநிதிகள் மத்தியில், பாட்டாளி வாழ்க்கைச் சூழலில்தான் காணக்கிடக்கிறது என் பதை இந்த வெற்றியானது தலைநகரில் உள்ள மக்களுக்கும் பின்னர் குடியரசு முழுதிலும், உலகம் முழுதிலும் உள்ள மக்களுக்கும் நிரூபித்துக் காட்டியது, தெளிவாக நிதர்சனப் படுத்திக் காட்டியது. அதிகப் பட்ச இடர்ப்பாடும் அபாய மும் இருந்த சமயத்தில், கட்சியில் சுயவிருப்பமான உறுப் பினர் சேர்த்தலில் ஏற்பட்ட வெற்றி பாட்டாளி வர்க்க சர் வாதிகாரத்தின் ஓர் அம்சத்தின் மெய்யான எடுத்துக்காட்டா கும். இதனை நமது எதிரிகள் தமது வன்மம் காரணமாகப் பார்க்க மறுக்கிறார்கள். ஆனால் மூலதன ஆதிக்கத்தில் இருந்து தொழிலாளர் விமோசனத்தை விழையும் மெய்நண்பர்கள் இதை எல்லாவற்றுக்கும் மேலாக மதிக்கின்றனர். மக்கள்

திரள் மீதான (ஆட்சி அதிகாரம் நடத்தும்) பாட்டாளி வர்க்கத்தின் தார்மீக (இச்சொல்லின் ஆகச் சிறந்த பொருளில்) செல்வாக்கின் தனிவலிமையும், இந்தச் செல்வாக்குச் செலுத்தப்படும் வழிகளுமே இந்த அம்சமாகும்.

தமது கரங்களில் அரசு அதிகாரத்தைக் கொண்டுள்ள பாட்டாளி வர்க்கத்தின் தலைசிறந்த பகுதிகள், தமது உதாரணம் மூலம் உழைக்கும் மக்கள் திரளுக்கு இரண்டு முழு ஆண்டுகள் பூராவும் (நமது அரசியல் வளர்ச்சியின் விசேஷமான துரித விசைக்குரிய அளவு கடந்த கட்டம்) முன்மாதிரியாக விளங்கின. உழைக்கும் மக்கள் நலன்கள் விஷயத்தில் இத்தகையஅர்ப்பணிப்பைக் காட்டும், உழைக்கும் மக்கள் விரோதிகளை எதிர்த்த (பொதுவாகச் சுரண்டலாளர்களை எதிர்த்தும் குறிப்பாக ''சொத்துடைமையாளர்'' மற்றும் கொள்ளை லாபக்காரர்களை எதிர்த்தும்) போராட்டத்தில் இத்தகைய ஊக்கத்தை, இடர்ப்பாடான தருணங்களில் இத்தகைய உறுதியை, உலக ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர் பால் தியாகமயமான எதிர்ப்பைத் தோற்றுவிக்கும் முன்மாதிரியாக விளங்கின. தமது முன்னணிப் படையின் சார்பிலான தொழிலாளர், விவசாயிகளின் ஆதரவின் வலிமை அற்புதங்கள் புரியும் ஆற்றலுடையது என்பதை தன்னளவிலேயே நிருபித்து விட்டது.

உண்மையிலேயே இது ஓர் அற்புதம்தான். பட்டினி, குளிர், பொருளாதார வீழ்ச்சி, பொது நாசம் ஆகியவற்றால் முன் என்றும் கண்டிராத வேதனைகளால் துயர்ப்படும் தொழிலாளர்கள் தமது சந்தோஷ உணர்வினையும் சோவியத் ஆட்சியின் பாலான தமது பூரண அர்ப்பணிப்பையும் தியாகம், வீரம் ஆகியவற்றின் சகல ஊக்கத்தையும் கட்டிக் காத்திருப்பது மட்டுமன்றி, பயிற்சி மற்றும் அனுபவத்தில் குறைவாக இருந்தபோதிலும் அரசு எனும் கப்பலை இயக்கும் பாரமான பொறுப்பை மேற்கொண்டிருக்கிறார்கள்! இதுவும் புயல் தனது பேயாவேசத்தின் முகட்டை எட்டியிருக்கும் ஒரு தருணத்தில்....

நமது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வரலாறு இத்தகைய அற்புதங்கள் நிரம்பியதாக உள்ளது. அவை, எவ்வளவு

கடுமையான சோதனைகள் எதிரே இருந்தபோதிலும், நிச்சய மாயும் தவிர்க்கவொண்ணுத வகையிலும் உலக சோவியத் குடியரசின் முழு வெற்றிக்கு இட்டுச் செல்லும்.

புதிய கட்சி உறுப்பினர்களைச் சரியான முறையில் பயன் படுத்துவது குறித்து இப்போது நாம் கவனமாக இருக்க வேண்டும். இந்தப் பணிக்குக் குறிப்பாயும் மிகவும் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். இது எளிதான காரிய மல்ல. இது புதிய கடமை. இதைப் பழைய மாமூல் வழிகளில் நிறைவேற்ற முடியாது.

தொழிலாளர் மற்றும் உழைக்கும் விவசாயிகளிடையே இருந்த செழுமையான தனி ஆற்றல்களை முதலாளித்துவம் நெரித்து, அடக்கி அழித்து விட்டது. இல்லாமை, வறுமை ஆகியவற்றின் ஒடுக்குதலின் கீழும் மனித கவுரவம் மீதான அட்டூழியம் காரணமாயும் இந்தத் தனி ஆற்றல்கள் அழிந்து பட்டன. இந்தத் தனி ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து, அவற்றைச் செயல்படச் செய்வது நம் கடமை. கட்சி வாரத் தின் போது கட்சியில் சேர்ந்த புதிய உறுப்பினர்கள் அரசு நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரை பெரும்பாலும் அனுபவம் இல்லாதவர்கள், அறியாதவர்கள் என்பதில் சந்தேகமில்லை. அதேபோதில் இவர்கள் முதலாளித்துவம் செயற்கையாகக் கீழடக்கி வைத்து, ''ஆகத் தாழ்ந்த'' நிலைக்கு இறக்கி, மேலே வருவதற்கு விடாமல் வைத்திருக்கும் சமுதாயப் பகுதி களைச் சேர்ந்த மிகவும் பற்றுறுதியுள்ள, மிகவும் நேர்மை யான, ஆற்றலுடைய மக்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. அவர்கள் மத்தியில் வேறு எந்தப் பகுதியினரிட மும் இருப்பதை விட அதிக பலம், ஊக்கம், உறுதி, நேரடி யான போக்கு மற்றும் நேர்மை நிலவுகிறது.

இதன் தொடர்பாக, இந்தப் புதிய உறுப்பினர்களை ஈடுபடுத்துவது சம்பந்தமாக எல்லாக் கட்சி அமைப்புகளும் சிறப்பாகச் சிந்தனை செலுத்த வேண்டும். அவர்களுக்கு மிக வும் பலவகைப்பட்டதான அரசுப் பணிகள் மேலும் துணி வுடன் தரப்பட வேண்டும். சாத்தியமான அளவு விரைவாக அவர்கள் நடைமுறையில் சோதிக்கப்பட வேண்டும்.

துணிவு என்ருல் புதிய உறுப்பினர்களை அறிவு அவசியப்

படும் பொறுப்பான பதவிகளில்—அவர்களிடம் அந்த அறிவு இல்லாவிடினும்—உடனே நியமனம் செய்யலாம் என்ற பொருளில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பது திண்ணம். சிவப்பு நாடா போக்கினை எதிர்த்துப் போராடுவதில் நாம் துணிவு காட்ட வேண்டும்: நமது கட்சி வேலைத்திட்டம் அதிகார வர்க்க முறைகள் ஓரளவு மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவதன் காரணங்கள் பற்றிய பிரச்சினையைத் திட்டவட்டமாக எழுப்பி, அதை எதிர்த்துப் போராடுவதற்கான முறைகளையும் சுட்டிக் காட்டி இருப்பது சும்மாவல்ல. மக்கள் திரளினரின் நிலைமை, அவர்களது தேவைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து நன்றாகப் பரிசயம் பெற்ற புதிய கட்சி உறுப்பினர்களைக் கொண்டு அலுவலகப் பணியாளர், அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் மீது மேற்பார்வை நடத்த முதன் முதலாகத் துணிந்து ஏற்பாடு செய்ய வேண்டும். வேலையில் ஒரு விரிவான அளவுக்குத் தமது ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவும் வெளிப்படுத்தவுமான வாய்ப்புகளை இந்தப் புதிய கட்சி உறுப்பினர்களுக்கு நாம் உடனடியாகத் துணிந்து வழங்க வேண்டும். நாம் வழக்கமான மாமூல் பாணியைத் தகர்ப்பதில் துணிவு காட்ட வேண்டும் (நமது மத்தியிலுங்கூட நிலைநாட்டப்பட்டுவிட்ட சோவியத் மாமூல் பாணியை மீறுவதென்றால் அளவுக்கு மீறிய அச்சம் காணப்படுகிறது, சில சமயம் இந்த ''நிலைநாட்டல்'' வர்க்க உணர்வுடைய கம்யூனிஸ்டுகளால் செய்யப்படாமல் பழைய அதிகாரிகள், அலுவலகப் பணியாளர்களால் செய்யப்பட்டதாகும் என்றாலுங் கூட). புதிய கட்சி உறுப்பினர்களை மேலும் விரைவாகச் சோதனை செய்து அவர்களுக்குப் பொருத்தமான பதவியைக் கண்டறிவதற்கு அவர்களது வேலை வடிவத்தைப் புரட்சிகரமான வேகத்துடன் மாற்றத் தயாராக இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் நாம் துணிவு காட்ட வேண்டும்.

பழைய அதிகாரிகள் தமது பணிகளை மனச்சாட்சி பூர்வம் செய்கிறார்களா என்பதைப் பரிசீலனை செய்யும் பதவிகளைப் புதிய கட்சி உறுப்பினர்களுக்குப் பல சந்தர்ப்பங்களில் அளிக்கலாம். அப்போது இந்தக் கட்சி உறுப்பினர்கள் தாமே விரைவில் இந்த வேலையைக் கற்றுக் கொண்டு சுயேச்சையாக

அதை மேற்கொள்ள முடியும். இதர சந்தர்ப்பங்களில் அவர்கள் ஒரு புறம் பெருந்திரளான தொழிலாளர், விவசாயிகள் திரளுக்கும் மறு புறம் அரசு உறுப்பமைவுக்கும் இடையேயான இணைப்புக்களைச் செப்பனிடவும் புத்துயிரூட்டவும் செயல் புரியும் வகையில் அமர்த்தப்படலாம். நமது தொழிற்துறை ''மத்திய நிர்வாகங்கள்'' மற்றும் ''மத்திய வாரியங்களிலும்'' நமது விவசாயி ''சோவியத் பண்ணைகளிலும்'' இன்னும் பல, அளவுக்கு மேல் அதிகமான நாசவேலைக்காரர்கள், நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகள் ஒளிமறைவாக இருக்கிறார்கள். இவர்கள் சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு எல்லா வகைகளிலும் தீங்கிழைக்கிறார்கள். இந்தத் தீமையை எதிர்த்த ஒரு வைராக்கியமான போராட்டத்தில் இந்தப் புதிய, துடிப்பான கட்சிச் சக்திகளை முனைப்பாகப் பயன்படுத்துவதில் மத்தியிலும் வட்டாரங்களிலும் உள்ள அனுபவப்பட்ட கட்சி ஊழியர்கள் தமது திறமையைக் காட்ட வேண்டும்.

சோவியத் குடியரசு தனியொரு ராணுவ முகாமாக விளங்க வேண்டும். அங்கு அதிகப்பட்சமான முயற்சிகள், சக்திகள் விஷயத்தில் அதிகப்பட்ச சிக்கனம் தேவை. சிவப்பு நாடா பாணி மற்றும் தேவையற்ற சம்பிரதாய முறை அதிகப்பட்சமாகக் குறைக்கப்பட்டும், பொறி அமைவு அதிகப்பட்சம் எளிமையாக்கப்பட்டு, அது மக்களின் தேவைகளுக்குச் சாத்தியமான அளவுக்கு நெருக்கமானதாக இருப்பதோடு மட்டுமன்றி, அவர்கள் உடனடியாகப் புரிந்து கொண்டு சுயேச்சையாகப் பங்கேற்கும் ஒன்றாக விளங்க வேண்டும்.

சேனையில் பணியாற்ற பழைய கட்சி உறுப்பினர்கள் மேலதிகமாகத் திரட்டப்படுகிறார்கள். இந்தச் செயல்பாடு எவ்வழியிலும் பலவீனப்படக் கூடாது, மாறாக மேலும் மேலும் முனைப்பாக்கப்பட வேண்டும். எனினும், போரில் வெற்றி அடைய வேண்டும் எனும் நோக்கத்துடன் நாம் அதே சமயம் நமது சிவில் நிர்வாகத்தை மேம்படுத்தி, எளிதாக்கிப் புத்துயிரூட்ட வேண்டும்.

எந்தத் தரப்புக்கு மேலதிகமான சேமப் படையும் மேலதிகமான வலிமைக்குரிய ஆதாரங்களும் மக்கள் இடை

யில் மேலதிகத் திண்மையும் இருக்கின்றனவோ அந்தத் தரப்புக்கே போரில் வெற்றி கிட்டும்.

வெண்காவலர்களை விடவும், மண் கால் பேரரக்கனை ''சர்வ வல்லமை'' ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைக் காட்டிலும் நம்மிடம் இந்தப் பண்புகள் யாவும் அதிகமாக இருக்கின்றன. நம்மிடம் அவை அதிகமாக இருக்கின்றன. காரணம் நாம் தொழிலாளர் மற்றும் உழைக்கும் விவசாயிகளிடமிருந்து, முதலாளித்துவத்தால் ஒடுக்கப்பட்டு வரும் வர்க்கங்களிடம் இருந்து, மக்கள் தொகையில் எங்கும் பெரும்பான்மையாக இருந்து வரும் வர்க்கங்களிடமிருந்து இப்பண்புகளைப் பெறலாம், நீண்ட காலம் தொடர்ந்து பெறலாம், மேலும் மேலும் முனைப்பாகப் பெறலாம். இந்த மிகவும் விரிவான சேமக் களஞ்சியத்தில் இருந்து இப்பண்புகளைப் பெறலாம். ஏனெனில் இது மிகவும் நேர்மையுடன் இருக்கும், வாழ்க்கைப் பொறுப்புக்களின் பாரத்தால் மிகவும் எஃகுறுதி பெற்ற, தொழிலாளர் மற்றும் விவசாயிகளிடம் மிகவும் நெருக்கமாக இருக்கும் அவர்களது தலைவர்களை சோஷலிசத்தை நிர்மாணிக்கும் பணிக்கு அமோகமாகத் தருகிறது.

நமது எதிரிகளான ருஷ்யன் முதலாளிகள் அல்லது உலக முதலாளிகளிடம் இத்தகைய சேமக் களஞ்சியத்தை சற்றேனும் ஒத்ததான எதுவும் இல்லை. அவர்கள் நிலை மேலும் மேலும் உறுதியற்றதாக இருக்கிறது. தொழிலாளர் மற்றும் விவசாயிகள் மத்தியில் இருந்த அவர்களது முன்னாள் ஆதரவாளர்கள் மேலும் மேலும் பெருமளவில் அவர்களைத் துறந்து விலகி வருகிறார்கள்.

இதனால்தான், கடைசியாக ஆய்வு செய்யும் போதில் உலகம் முழுதிலும் சோவியத் ஆட்சி அதிகாரம் வெற்றியடைவது திண்ணம்; இது தவிர்க்க முடியாதது.

அக்டோபர் 21, 1919

ரு.க.க(போ.)இன் மத்தியக் கமிட்டியின் இஸ்வேஸ்தியா, இதழ் 7, அக்டோபர் 22, 1919	நூல் திரட்டு, தொகுதி 39, பக்கங்கள் 233-237

பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் பொருளியலும் அரசியலும்

சோவியத் ஆட்சியின் இரண்டாம் ஆண்டுவிழாத் தறுவாயில், மேலே கண்ட தலைப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பொருள் பற்றி ஒரு சிறு பிரசுரம் எழுத உத்தேசித்திருந்தேன். ஆனால் அன்றாட வேலைகளின் நெருக்குதல் காரணமாக சில பகுதிகளுக்கான பூர்வாங்கத் தயாரிப்புகளுக்கு அப்பால் இது வரைச் செல்ல முடியவில்லை. எனவே இந்தப் பொருளின் ஆக முக்கியமான கருத்துக்கள் என்று நான் கருதுவதன் சுருக்கமான, தொகுப்பான விளக்கத்தை இங்கு அளிப்பதென்று முடிவு செய்துள்ளேன். தொகுத்தளிக்கும் ஒரு விளக்கம் பல பிரதிகூலங்களையும் குறைபாடுகளையும் கொண்டதாக இருக்கும் என்பது இயல்பே. இருந்தபோதிலும் ஒரு சிறிய சஞ்சிகைக் கட்டுரை, கருத்தில் உள்ள எளிய நோக்கம் நிறைவேற உதவலாம். அந்த நோக்கம், பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்கு இந்தப் பிரச்சினையையும் அதனை விவாதிப்பதற்கான அடிப்படையையும் சமர்ப்பிக்கும்படிச் செய்வதேயாகும்.

1

முதலாளித்துவத்திற்கும் கம்யூனிசத்திற்கும் இடையே திட்டவட்டமான மாறுதல் கால கட்டம் இருக்கும் என்பதற்குத் தத்துவார்த்த ரீதியில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது. அது சமூகப் பொருளாதாரத்தின் இந்த இரு வடிவங்களின் அம்சங்களையும் தன்மைகளையும் இணைக்க வேண்டும். இந்த மாறுதல் கால கட்டம், மடிந்து வரும் முதலாளித்

துவத்திற்கும் இளம் பருவத்திலுள்ள கம்யூனிசத்திற்கும் இடையிலான போராட்டக் கால கட்டமாகும்—அல்லது வேறு சொற்களில் கூறினல், தோற்கடிக்கப்பட்ட ஆனல் இன்னும் அழிக்கப்படாத முதலாளித்துவத்துக்கும் பிறந்துள்ள ஆனல் இன்னும் மிகவும் வலுக்குறைந்த கம்யூனிசத்திற்கும்—இடையிலான போராட்டக் கால கட்டம் எனலாம்.

இந்த மாறுதல் கால கட்ட அம்சங்களால் வேறுபடுத்திக் காட்டப்பெறும் முழுமையான வரலாற்று சகாப்தத்தின் அவசியம், மார்க்சியவாதிக்கு மட்டுமன்றி, வளர்ச்சியின் தத்துவத்தை எந்தளவுக்காவது அறிந்துள்ள எந்த ஒரு கல்வி கற்ற நபருக்கும் கண்கூடாகத் தெரிய வேண்டும். இருப்பினும், இன்றைய குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளிடமிருந்து (அவர்களது போலியான சோஷலிச முத்திரை இருப்பினும் அத்தகையோராகக் காட்சி தரும் இரண்டாம் அகிலத்தின்[7] எல்லாப் பிரதிநிதிகளும் — மாக்டானல்ட், ழான் லொங்கே, காவுத்ஸ்கி, பிரெடெரிக் ஆட்லெர் உள்ளிட்டு) சோஷலிசத்தை நோக்கிய மாறுதல் கட்டம் குறித்து நாம் கேள்விப்படும் பேச்சுக்கள் யாவும் இந்தக் கண்கூடான உண்மையை முற்றிலும் புறக்கணிப்பதாகவே காணப்படுகின்றன. குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளுக்கு வர்க்கப் போராட்டத்தின் மேல் வெறுப்பு, அதைத் தவிர்ப்பது பற்றிக் கனவு காணுதல், வேற்றுமைகளை மழுப்புதல், சமரசப் படுத்தல், கூரிய முனைகளை அகற்றுதல் ஆகியவை அவர்களது இயல்பாக இருக்கிறது. எனவே, அத்தகைய ஜனநாயகவாதிகள், ஒருக்கால் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்லும் முழு வரலாற்றுக் கால கட்டத்தின் அவசியத்தை அங்கீகரிக்காமல் தவிர்ப்பார்கள், அல்லது மோதும் இருசக்திகள் நடத்தும் போராட்டத்தில் ஒன்றுக்குத் தலைமை தாங்குவதற்கு மாருக, இந்தச் சக்திகளையும் சமரசப் படுத்தச் சூழ்ச்சிகளைப் புனைவது தமது கடமை என்று கருதுவார்கள்.

2

நமது நாட்டின் மிகப்பெரிய பின்தங்கிய நிலைமை மற்றும் குட்டிமுதலாளித்துவத் தன்மை காரணமாக ருஷ்யாவில்

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முன்னேற்றமடைந்த நாடுகளிலுள்ள சர்வாதிகாரத்திலிருந்து சில தனிப்பட்ட இயல்புகளில் தவிர்க்க முடியாத வகையில் வேறுபடும். ஆனல் அடிப்படையான சக்திகளும் சமூகப் பொருளாதாரத்தின் அடிப்படை வடிவங்களும் வேறு எந்த ஒரு முதலாளித்துவ நாட்டிலும் இருப்பது போலவே ருஷ்யாவிலும் இருக்கும். எனவே இந்தத் தனிப்பட்ட இயல்புகள் குறைந்த முக்கியத் துவமுடையவற்றுக்கு மட்டுமே பொருந்தும்.

இந்தச் சமூகப் பொருளாதாரத்தின் அடிப்படை வடி வங்கள்: முதலாளித்துவம், சிறு பண்ட உற்பத்தி மற்றும் கம்யூனிசம். இந்த அடிப்படை சக்திகள்: முதலாளித்துவ வர்க்கம், குட்டிமுதலாளித்துவ வர்க்கம் (குறிப்பாக விவ சாயிகள்) மற்றும் பாட்டாளி வர்க்கம்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் ருஷ்யாவின் பொருளாதார அமைப்பானது, கம்யூனிஸ்டுக் கோட்பாடு களின் மீது ஒரு பரந்த அரசின் அளவுக்கு ஒன்றிணைந்துள்ள, தனது முதல் படிகளை மேற்கொண்டுள்ள உழைப்பு, சிறு பண்ட உற்பத்திக்கு எதிராகவும் தொடர்ந்து நிலவும் முத லாளித்துவத்துக்கு எதிராகவும் அதே போல சிறு பண்ட உற்பத்தியின் அடிப்படையில் மறு மலர்ச்சி பெறும் முத லாளித்துவத்துக்கு எதிராகவும் நடத்தும் போராட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

ருஷ்யாவில் முதலாவதாக உற்பத்தி சாதனங்களின் தனி யார் உடைமை ஒழிக்கப்பட்டு விட்டது, இரண்டாவதாக பாட்டாளி வர்க்க அரசதிகாரம் தேசிய அளவில் அரசுக்கு உடைமையான நிலத்திலும் அரசுக்கு உடைமையான நிறு வனங்களிலும் பெருவீத உற்பத்தியை ஒழுங்கமைத்து வரு கிறது, பல்வேறு தொழிற்துறைகளுக்கும் பல்வேறு நிறுவனங் களுக்கும் உழைப்புச் சக்தியை வினியோகம் செய்கிறது, உழைக்கும் மக்களிடையில் அரசுக்குச் சொந்தமான நுகர் பொருள்களைப் பெரிய அளவில் வினியோகித்து வருகிறது. இவற்றை எல்லாம் பொருத்தவரை ருஷ்யாவில் உழைப்பு கம்யூனிஸ்டு முறையில் ஒன்றுசேர்க்கப்பட்டிருக்கிறது.

நாம் ருஷ்யாவில் கம்யூனிசத்தின் ''முதல் படிகள்'' பற்றிப்

பேசுகிறோம் (1919 மார்ச் மாதத்தில் ஏற்கப்பட்ட நமது கட்சியின் வேலைத்திட்டத்திலும் அவ்வாறே குறிப்பிடப் பட்டுள்ளது), காரணம் இவையாவும் நமது நாட்டில் ஒரு பகுதியளவிலேயே செயல்படுத்தப்பட்டுள்ளன, அல்லது வேறுவிதமாகக் கூறினால் அவற்றின் நிறைவேற்றம் ஆரம்பக் கட்டங்களில் மட்டுமே உள்ளது. நாம் ஒரே ஒரு புரட்சிகரத் தாக்குதலில் பொதுவாக மிக அவசரமாக வெற்றி சாதனை யாகக் கூடிய அனைத்தையும் அவசரமாக வெற்றி சாதனை யாக்கினோம். உதாரணமாக, பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் முதல் நாளான 1917 அக்டோபர் 26ல் (நவம்பர் 8) நிலத்திலிருந்த தனியுடைமை ஒழிக்கப்பட்டது, பெரிய நிலவுடைமையாளர்களுக்கு எவ்வித நஷ்ட ஈடும் அளிக்கா மல் அவர்களின் நிலவுடைமைகள் பறிமுதல் செய்யப் பட்டன. ஒரு சில மாத அளவுக்குள் கிட்டத்தட்ட எல்லாப் பெரிய முதலாளிகளின் உடைமைகள்—ஆலைகள், தொழிற் சாலைகள், கூட்டுப் பங்கு நிறுவனங்கள், வங்கிகள், ரயில் பாதைகள் ஆகியவையும்—நஷ்ட ஈடின்றிப் பறிமுதல் செய் யப்பட்டன. தொழிற்துறையில் பெருவீத உற்பத்திக்கான அரசாங்க அமைப்பும், ஆலைகள், தொழிற்சாலைகள், ரயில் பாதைகள் சம்பந்தமாகத் ''தொழிலாளர் கண்காணிப் பிலிருந்து'' ''தொழிலாளர் நிர்வாகத்திற்கான'' மாற்றமும் பெரும்பாலும் முக்கியமான அம்சங்களிலும் ஏற்கெனவே சாதனையாகி விட்டன. ஆனால் விவசாயம் சம்பந்தப்பட்ட வரை இது இப்போதுதான் துவங்கியது (''சோவியத் பண்ணைகள்'', அதாவது அரசுக்குச் சொந்தமான நிலத்தில் தொழிலாளரின் அரசாங்கத்தால் நிறுவிய பெரிய பண்ணை கள்). இதே போல சிறு பண்ட விவசாயத்திலிருந்து கம்யூ னிஸ்டு விவசாயத்திற்கான மாறுதல் கட்டம் என்ற முறை யில் சிறிய விவசாயிகளின் பல்வேறு வடிவிலான கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதும் இப்போதுதான் தொடங்கியது.*

---

* சோவியத் ருஷ்யாவிலுள்ள ''சோவியத் பண்ணைகள்'' மற்றும் ''விவசாயக் கம்யூன்கள்'' எண்ணிக்கை நமக்குத் தெரிந்த வரை முறையே 3536 மற்றும் 1961ம் ஆகும்; விவ சாய ஆர்ட்டல்கள் எண்ணிக்கை 3696. எல்லா சோவியத்

தனியார் வர்த்தகம் அகற்றப்பட்டு அதனிடத்தில் அரசு நிர்வாகத்திலான பண்டங்கள் வினியோகம் நடத்தப்படுவது—அதாவது நகரங்களுக்குத் தானியங்களையும் கிராமப்புறங்களுக்குத் தொழிற்துறைப் பண்டங்களையும் அரசு கொள்முதல் செய்து வழங்குவது—குறித்தும் இதையே கூற வேண்டும். இது சம்பந்தமாகக் கிடைத்துள்ள புள்ளிவிவரத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விவசாயிகளின் பண்ணை, சிறு பண்ட உற்பத்தியாகவே வேலை தொடர்ந்து வருகிறது. இங்கு முதலாளித்துவத்திற்கு மிகவும் விரிவான, மிகவும் உறுதியான ஆழ வேரூன்றிய அடிப்படை இருக்கிறது. இந்த அடிப்படையில் முதலாளித்துவம் நீடித்து நிலவுகிறது, கம்யூனிசத்தை எதிர்த்த ஒரு கடுமையான போராட்டத்தில் புதிதாகத் தோன்றுகிறது. இந்தப் போராட்டத்தின் வடிவங்கள்: அரசின் தானியம் (அதே போல, இதர பொருள்கள்) கொள்முதலையும் பொதுவாக அரசின் பண்டங்கள் வினியோகத்தையும் எதிர்த்த தனிப்பட்ட வர்த்தகச் சூதாட்டமும் லாபவேட்டையும் ஆகும்.

3

இந்த ஸ்தூலமற்ற தத்துவார்த்தப் புத்துரைகளை விளக்கிக் காட்ட நாம் உண்மையான புள்ளிவிவரங்களை மேற்கோள் காட்டுவோம்.

உணவுத்துறை மக்கள் கமிசாரகத்தின் புள்ளிவிவரங்களின்படி ருஷ்யாவில் *1917* ஆகஸ்ட் *1*ந் தேதிக்கும் *1918* ஆகஸ்ட் *1*ந் தேதிக்கும் இடையே அரசு கொள்முதல் செய்த தானியம் சுமார் *30,000,000* பூடுகளாகும்; அடுத்த ஆண்டில் இது சுமார் *110,000,000* பூடுகளாக இருக்கும். அடுத்த கொள்முதல் இயக்கத்தின் *(1919-20)* முதல் மூன்று மாதங்களில் கொள்முதல் மொத்தம் சுமார் *45,000,000*

பண்ணைகள் மற்றும் கம்யூன்கள் பற்றிய சரியான கணக்குகளை நமது மத்தியப் புள்ளிவிவர வாரியம் தற்போது எடுத்து வருகிறது. இதன் முடிவுகள் *1919* நவம்பரில் வெளிவரத் தொடங்கும்.

பூடுகளாக இருக்கலாம்—1918ல் இதே கால கட்டத்தில் (ஆகஸ்ட்—அக்டோபரில்) இது 37,000,000 பூடுகளாக இருந்தது.

இந்தப் புள்ளிவிவரங்கள், முதலாளித்துவத்தை எதிர்த்த கம்யூனிசத்தின் வெற்றி என்ற கருத்துக் கோணத்திலிருந்து நிலைமைகள் மெதுவாக ஆனல் உறுதியாக மேம்பட்டு வருவதைத் தெளிவாகக் காட்டுகின்றன. உலகின் வலிமை மிக்க நாடுகளின் எல்லா சக்திகளையும் ஒன்றுதிரட்டி ருஷ்யாவின் மற்றும் அயல் நாடுகளின் முதலாளிகள் உருவாக்கியுள்ள உள்நாட்டுப் போரினல் ஏற்பட்ட, உலகில் முன்னறியாத இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும் இந்த முன்னேற்றம் சாதனையாகியுள்ளது.

எனவே, அனைத்து நாடுகளின் முதலாளிகள், அவர்களது பகிரங்க அல்லது முகமூடிக் கையாட்கள் (இரண்டாம் அகிலத்தின் ''சோஷலிஸ்டுகள்'') ஆகியோர் எத்தனை பொய்களையும் அவதூறுகளையும் பரப்பிய போதிலும், ஓர் உண்மை மறுக்க முடியாதபடி நிலவுகிறது: பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நமது நாட்டில் முதலாளித்துவத்தை எதிர்த்து கம்யூனிசத்தின் வெற்றி உத்தரவாதம் செய்யப்பட்டு விட்டது. உலகம் முழுவதிலும் முதலாளித்துவ வர்க்கம் போல்ஷிவிசத்தை எதிர்த்து வெஞ்சினமும் பகையும் தோற்றுவித்து, போல்ஷிவிக்குகளை எதிர்த்து ராணுவப் படையெடுப்புகள், சதித்திட்டங்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து வருகிறது, காரணம் ராணுவ வன்மையினல் நாம் நசுக்கப்படாத வரையில் சமூகப் பொருளாதாரத்தை மறுநிர்மாணம் செய்வதில் நமது வெற்றி தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதை அது நன்கு முழுமையாக உணர்ந்திருக்கிறது. ஆனல் இந்த வழியில் நம்மை நசுக்க அது புரியும் முயற்சிகள் வெற்றியடைவதில்லை.

உலகில் நம்பற்கரிய இடர்ப்பாடுகளின் கீழ் நாம் பணியாற்ற வேண்டி இருந்தபோதிலும் நமக்குக் கிட்டிய குறைந்த காலத்தில் நாம் ஏற்கெனவே முதலாளித்துவத்தை எந்தளவுக்குத் தோற்கடித்திருக்கிறேம் என்பதைப் பின்வரும்

சோவியத் ருஷ்யாவின் 26 குபேர்னியாக்கள்	மக்கள் தொகை (பத்து லட்சம்)		தானிய உற்பத்தி (விதை, தீவனம் தவிர) (பத்து லட்சம் பூடுகள்)	தானிய வழங்கல் (பத்து லட்சம் பூடுகள்)		மக்களுக்குக் கிட்டிய மொத்த தானியம் (பத்து லட்சம் பூடுகள்)	நபர் விகித தானியப் பயனீடு (பூடுகள்)
				உணவுத்துறை கமிசாரகம்	லாப வேட்டைக்காரர்கள்		
உற்பத்தி செய்யும் குபேர்னியாக்கள்	நகரங்கள்	4.4	—	20.9	20.6	41.5	9.5
	கிராமங்கள்	28.6	625.4	—	—	481.8	16.9
பயனீடு செய்யும் குபேர்னியாக்கள்	நகரங்கள்	5.9	—	20.0	20.0	40.0	6.8
	கிராமங்கள்	13.8	114.0	12.1	27.8	151.4	11.0
மொத்தம் (26 குபேர்னியாக்கள்)		52.7	739.4	53.0	68.4	714.7	13.6

சுருக்கமாகத் தொகுத்தளித்துள்ள விவரங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். மத்தியப் புள்ளிவிவர வாரியம் சோவியத் ருஷ்யா முழுவதற்கும் அன்றி இருபத்தாறு குபேர்னியாக்களுக்கு(மாவட்டம்)மட்டும் தானிய உற்பத்தி மற்றும் நுகர்வு பற்றிய புள்ளிவிவரங்களைப் பத்திரிகைகளுக்காகத் தயாரித்துள்ளது.

விளைவுகள் பின்வருமாறு: (பக்கம் 73 பார்க்க).

இவ்வாறாக, நகரங்களுக்கு வழங்கப்பட்ட தானியத்தில் தோராயமாகப் பாதி அளவு உணவுத்துறை மக்கள் கமிசாரகத்தாலும் மற்ற பாதி லாபவேட்டைக்காரர்களாலும் வழங்கப்பட்டது. நகரத் தொழிலாளர் பயன்படுத்திய உணவு சம்பந்தமாக 1918ல் நடத்தப்பட்ட ஒரு கவனமான ஆய்வில் இதே சராசரி வெளிப்பட்டுள்ளது. அதோடு, அரசு வழங்கும் ரொட்டிக்கு ஒரு தொழிலாளி கொடுக்கும் விலை அதே ரொட்டிக்கு அவன் லாபவேட்டைக்காரருக்குத் தருவது போன்று ஒன்பதில் ஒரு பங்கேயாகும் என்பதை மனதில் வைக்க வேண்டும். லாபவேட்டைக்காரரின் ரொட்டி விலை அரசு விலையைப் போலப் பத்து மடங்கு அதிகம். இது தொழிலாளர் வரவு செலவு பற்றிய துல்லியமான ஆய்வில் வெளியாகியுள்ளது.

4

மேற்கோள் காட்டப்பட்ட புள்ளிவிவரங்களைக் கவனமாக ஆராய்ந்தால், அவை ருஷ்யாவின் இன்றையப் பொருளாதாரத்தின் அடிப்படை அம்சங்களின் சரியான சித்திரத்தை அளிப்பதைக் காணலாம்.

உழைப்பாளி மக்கள், அவர்களது காலகாலமான ஒடுக்குமுறையாளர்கள் மற்றும் சுரண்டுவோரான நிலப்பிரபுக்கள், முதலாளிகளிடமிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். உண்மையான சுதந்திரம், உண்மையான சமத்துவத்தின் திசையிலான இந்த முன்னேற்றம்—அதன் விரிவு, பரிமாணம் மற்றும் வேகத்தில் உலகில் ஈடிணையற்ற இந்த முன்னேற்றம்—குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் உள்ளிட்ட முத

லாளித்துவ வர்க்கத்தின் ஆதரவாளர்களால் புறக்கணிக்கப் படுகிறது. அவர்கள் சுதந்திரம் மற்றும் சமத்துவம் பற்றிப் பேசும் பொழுது நாடாளுமன்ற முதலாளித்துவ ஜன நாயகத்தையே குறிப்பிடுகிருர்கள். இதை அவர்கள் பொது வாக ''ஜனநாயகம்'' அல்லது ''சுத்த ஜனநாயகம்'' என்று பொய்யாகப் பிரகடனம் செய்கிருர்கள் (காவுத்ஸ்கி).

ஆனல் உழைக்கும் மக்கள் உண்மையான சமத்துவம், உண்மையான சுதந்திரம் (நிலப்பிரபுக்கள், முதலாளிகளிட மிருந்து சுதந்திரம்) பற்றி மட்டுமே அக்கறை கொண்டிருக் கிருர்கள். இதனல்தான் அவர்கள் சோவியத் ஆட்சி அதி காரத்துக்கு இத்தகைய உறுதியான ஆதரவு தருகிருர்கள்.

இந்த விவசாய நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தால் முதலில் நன்மையடைந்தது ஒட்டுமொத்தமாக விவசாயிகளே, அவர்களே ஆக அதிக நன்மையடைந்தார் கள், உடனடியாக நன்மையடைந்தார்கள். நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் கீழ் ருஷ்யாவிலிருந்த விவசாயிகள் பட்டினி கிடந்தார்கள். நமது வரலாற்றின் நீண்ட பல நூற்ருண்டுகள் முழுவதிலும் விவசாயிக்குத் தனக்காகப் பாடுபடுவதற்கான வாய்ப்பு என்றுமே கிடைத்ததில்லே: முதலாளிகளுக்கும் நகரங்களுக்கும் ஏற்றுமதிக்கும் கோடிக் கணக்கான பூடுகள் தானியத்தைக் கொடுத்துவிட்டு அவன் பட்டினி கிடந்தான். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் விவசாயி முதல் தடவையாக தனக்காக உழைத்தான், நகரவாசியை விட நல்ல முறையில் உணவருந்திஞன். முதல் தடவையாக விவசாயி உண்மையான சுதந்திரத்தை—தனது ரொட்டியை தான் உண்ணும் சுதந்திரத்தை, பட்டினி கிடக்காதிருக்கும் சுதந் திரத்தை—கண்டு விட்டான். நில வினியோகத்தில் அதிகப் பட்சமான சமத்துவம் நிலேநாட்டப்பட்டது என்பதை நாம் அறிவோம்; மிகப் பெரும்பாலான இடங்களில் விவசாயிகள் ''உணவளிக்க வேண்டிய வயிறுகளின்'' எண்ணிக்கைக்கு ஏற்ப நிலத்தைப் பங்கு போட்டுக் கொண்டுள்ளனர்.

சோஷலிசம் என்ருல் வர்க்கங்கள் ஒழிக்கப்படும் என்று பொருளாகும்.

வர்க்கங்களே ஒழிப்பதற்கு முதலாவதாக, நிலப்பிரபுக்

கள் மற்றும் முதலாளிகளை வீழ்த்த வேண்டும். நமது கடமையின் இந்தப் பகுதி நிறைவேற்றப்பட்டு விட்டது. ஆனல் இது ஒரு பகுதி மட்டுமே. மேலும் இது ஆகக் கடினமான பகுதி அன்று. வர்க்கங்களை ஒழிப்பதற்கு இரண்டாவதாக, ஆலைத் தொழிலாளிக்கும் விவசாயிக்கும் இடையிலான வித்தியாசத்தை ஒழிக்க வேண்டுவதும், அவர்கள் எல்லோரையும் உழைப்பாளர்களாக்க வேண்டுவதும் அவசியம். இதைத் திடுமெனச் செய்துவிட முடியாது. இந்தக் கடமை ஒப்புவமையற்ற அளவுக்கு அதிகக் கடினமானது, அவசியமாயும் அதிக காலம் எடுப்பதுமாகும். ஏதாவதொரு வர்க்கத்தை வீழ்த்துவது மூலம் தீர்வு கண்டுவிடக் கூடிய ஒரு பிரச்சினையல்ல இது. சமூகப் பொருளாதாரம் முழுவதையும் ஒழுங்கமைத்து மறு நிர்மாணம் செய்வது மூலமும், தனிநபரின், பிரிந்த நிலையிலான சிறு பண்ட உற்பத்தி முறையிலிருந்து பெருவீத சமூக உற்பத்திக்கு மாறிச்செல்வது மூலமும் மட்டுமே இதற்குத் தீர்வு காண முடியும். இந்த மாறுதல் கட்டம் அவசியமாயும் மிகவும் நீடித்ததாக இருக்கும். அவசரமான, துடுக்கான நிர்வாக மற்றும் சட்டமியற்றும் நடவடிக்கைகளால் இது தவக்கமடையலாம், சிக்கலாகலாம். விவசாயி தனது விவசாயத் தொழில் சாதனங்கள் முழுவதையும் பெருமளவுக்கு மேம்படுத்திக் கொள்ளவும் அவற்றை அடிப்படையாகச் சீர்திருத்திக் கொள்ளவும் சாத்தியமாக்கும் வகையில் உதவிகளை வழங்குவது மூலம் மட்டுமே இதனை விரைவுபடுத்த முடியும்.

இந்தப் பிரச்சினையின் இரண்டாவதும், மிகவும் கடினமானதுமான பகுதிக்குத் தீர்வு காணப் பாட்டாளி வர்க்கமானது, முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்கடித்த பிறகு விவசாயிகளின் பாலான தனது கொள்கையினைப் பின்வரும் அடிப்படையான வழியில் நெறிதிறம்பாது கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும்: பாட்டாளி வர்க்கமானது உழைக்கும் விவசாயியைச் சொந்தக்கார விவசாயியிடமிருந்தும், விவசாயத் தொழிலாளியை விவசாய சிறு வணிகரிடமிருந்தும், பாடுபடும் விவசாயியை லாபவேட்டையாடும் விவசாயியிடமிருந்தும் பிரித்துத் தனிவரையறை செய்ய வேண்டும்.

இந்தத் தனிவரையறையில்தான் சோஷலிசத்தின் முழு சாரமும் காணக் கிடக்கிறது.

சொல்லில் சோஷலிஸ்டுகளாகவும் செயலில் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளாயும் இருப்பவர்கள் (மார்த்தவ்கள், செர்னேவ்கள் , காவுத்ஸ்கிகள் மற்றவர்கள்) சோஷலிசத்தின் இந்த சாரத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றால் அதில் வியப்பேதுமில்லை.

இங்கு நாம் குறிப்பிடும் தனிவரையறை மிகவும் இடர்ப்பாடான ஒன்று, காரணம் எதார்த்த வாழ்வில் ''விவசாயியின்'' அம்சங்கள் அனைத்தும்—அவை எவ்வளவுதான் பல்வேறு வகைப்பட்டதாயும், எவ்வளவுதான் முரண்பாடானதாகவும் இருந்தபோதிலும்—ஒரு முழுமையில் கலந்திணைந்துள்ளன. ஆயினும் தனிவரையறை சாத்தியமே. அது சாத்தியம் என்பது மட்டுமல்ல, விவசாயியின் பண்ணை வேலை மற்றும் விவசாயியின் வாழ்க்கை நிலைமைகளிலிருந்து இது தவிர்க்க முடியாது தொடர்வதாகும். உழைக்கும் விவசாயி காலகாலமாக நிலப்பிரபுக்கள், முதலாளிகள், சிறுவணிகர்கள், லாபவேட்டைக்காரர்கள் ஆகியோராலும், ஆக ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகள் உள்ளிட்ட அவர்களது அரசாலும் ஒடுக்கப்பட்டுள்ளான். இந்தக் காலங்கள் முழுவதிலும் உழைக்கும் விவசாயி இந்த ஒடுக்குமுறையாளர்களையும் சுரண்டுவோரையும் பகைக்கவும் வெறுக்கவும் தன்னைத்தானே பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறான். வாழ்க்கை நிலைமைகளால் தோற்றுவிக்கப்பட்ட இந்தப் ''பயிற்சி'' முதலாளியை எதிர்த்தும், லாபவேட்டைக்காரன் மற்றும் சிறுவணிகரை எதிர்த்தும் தொழிலாளியுடன் ஒரு கூட்டணியை நாடும்படி அவனைக் கட்டாயப்படுத்துகிறது. எனினும், அதே சமயம் பொருளாதார நிலைமைகள், பண்ட உற்பத்தி நிலைமைகள் விவசாயியை (எப்பொழுதுமல்ல, ஆனால் பெருவாரியான சந்தர்ப்பங்களில்) தவிர்க்க முடியாத வகையில் ஒரு சிறுவணிகர் மற்றும் லாபவேட்டைக்காரராக மாற்றி விடுகிறது.

மேலே மேற்கோள் காட்டப்பட்ட புள்ளிவிவரங்கள் உழைக்கும் விவசாயிக்கும் விவசாய லாபவேட்டையாளருக்

கும் இடையே எடுப்பான வித்தியாசம் இருப்பதை வெளிப் படுத்துகிறது. 1918-19 ஆண்டுகளின் போது நகரங்களில் பசியால் வாடிய தொழிலாளர்களுக்காக நிர்ணயமான அர சாங்க விலைக்கு 40,000,000 பூடுகள் தானியத்தை அரசாங்க நிறுவனங்களுக்கு (அவற்றின் குறைபாடுகள் அனைத்தையும் பாராட்டாமல்) வழங்கிய அந்த விவசாயி—இந்தக் குறை பாடுகளைத் தொழிலாளர் அரசாங்கம் முழுமையாக உணர்ந் திருந்தது, ஆயினும் அவை சோஷலிசத்தை நோக்கி மாறிச் செல்லும் முதல் கால கட்டத்தில் தவிர்க்க முடியாதவை—அந்த விவசாயிதான் ஓர் உழைக்கும் விவசாயி, சோஷலிஸ்டுத் தொழிலாளியின் முழு உரிமை பெற்ற தோழர், அவரது மிகவும் விசுவாசமுள்ள கூட்டாளி, முதலாளித்துவ அடிமைத்தளையை எதிர்த்த போராட்டத்தில் அவரது உடன்பிறப்பாளர் ஆவார். அப்படியிருக்க, அரசாங்க விலையைப் போலப் பத்து மடங்கு அதிக விலைக்கு இரகசிய மாக 40,000,000 பூடுகள் தானியத்தை விற்பனை செய்த அந்த விவசாயி, நகரத் தொழிலாளியின் தேவையையும் பசிக் கொடுமையையும் சாதகமாக்கி, அரசை ஏமாற்றி, எங்கு பார்த்தாலும் ஏமாற்று, மோசடி, திருட்டு ஆகியவற்றை அதிகரித்தும் உருவாக்கியும் வரும் அந்த விவசாயிதான் ஒரு லாபவேட்டையாளர், முதலாளியின் கூட்டாளி, தொழி லாளியின் வர்க்க விரோதி, ஒரு சுரண்டலாளர் ஆவார். ஏனென்றால் அரசு முழுவதற்கும் சொந்தமான நிலத்தில் இருந்து ஏதாவது ஒருவகையில் விவசாயியினது மட்டுமன்றி தொழிலாளரின் உழைப்பும் உருவகம் பெற்றுள்ள கருவி களின் உதவியுடன் சேகரிக்கப்பட்ட உபரி தானியத்தை வைத்திருப்பவர் யாராக இருப்பினும், தானியத்தை உபரி யாக வைத்திருந்து லாபக்கொள்ளையடிப்பவர் யாராக இருப்பினும் அவர் பட்டினியால் வாடும் தொழிலாளியைச் சுரண்டுபவராவார்.

நீங்கள் சுதந்திரத்தை, சமத்துவத்தை மற்றும் ஜன நாயகத்தைக் குலைப்பவர்கள் என்று, நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தொழிலாளிக்கும் விவசாயிக்கு முள்ள அசமத்துவத்தையும், அரசியல் நிர்ணய சபை கலைக்கப்

பட்டதையும், உபரி தானியம் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யப்பட்டதையும் சுட்டிக் காட்டி அவர்கள் நம்மை நோக்கி எல்லாத் திசைகளிலிருந்தும் கூச்சல் போடுகிறுர்கள். பல நூற்றுண்டுகளாக உழைக்கும் விவசாயி இன்னலுற்று வந்த உண்மையான அசமத்துவம், உண்மையான சுதந்திர மின்மையை அகற்ற இந்தளவுக்குப் பணி செய்துள்ள ஓர் அரசு உலகில் என்றுமே இருந்தது கிடையாது என்று நாம் பதில் கூறுகிறேம். ஆனல் விவசாயி லாபவேட்டைக்காரனுடன் சமத்துவத்தை நாம் என்றுமே அங்கீகரிக்க மாட்டோம். அதே போல, சுரண்டுவோருக்கும் சுரண்டப்படுவோருக்கும் இடையேயும் உண்டு கொழுத்தவருக்கும் பட்டினி கிடப்போருக்கும் இடையிலேயும் ''சமத்துவத்தை'' அங்கீகரிக்க மாட்டோம். முந்திய பகுதியினர் பிந்திய பகுதியினரைக் கொள்ளை யடிப்பதற்கான ''சுதந்திரத்தையும்'' அங்கீகரிக்க மாட்டோம். இந்த வேற்றுமையை அங்கீகரிக்க மறுக்கும் அந்தப் படித்த நபர்களை, அவர்கள் தம்மைத்தாமே ஜனநாயக வாதிகள், சோஷலிஸ்டுகள், சர்வதேசியவாதிகள், காவுத்ஸ்கிகள், செர்னேவ்கள், மார்த்தவ்கள் என்று அழைத்துக் கொண்டாலும், வெண்படையினர்களாகவே கருதுவோம்.

5

சோஷலிசம் என்ருல் வர்க்கங்கள் ஒழிக்கப்படுவது என்று பொருளாகும். வர்க்கங்களை ஒழிப்பதற்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தன்னல் இயன்றதனைத்தையும் செய்துள்ளது. ஆனல் வர்க்கங்களை ஒரே அடியில் ஒழித்துவிட முடியாது.

விளைவாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் வர்க்கங்கள் இன்னும் இருக்கின்றன, இருக்கப் போகின்றன. வர்க்கங்கள் மறைந்துவிடும் பொழுது சர்வாதிகாரம் தேவையற்றதாகி விடுகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லாமல் வர்க்கங்கள் மறைந்துவிட மாட்டா.

வர்க்கங்கள் தொடர்ந்து இருந்திருக்கின்றன. ஆனல் 'பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் ஒவ்வொரு

வர்க்கமும் மாறுதல் அடைந்துள்ளது. வர்க்கங்களிடையிலான உறவுகளும் மாற்றமடைந்திருக்கின்றன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டம் மறைந்து விடுவதில்லை. அது வேறு வடிவங்களை மட்டுமே எடுத்துக் கொள்கிறது.

முதலாளித்துவத்தின் கீழ் பாட்டாளி வர்க்கம் ஓர் ஒடுக்கப்பட்ட வர்க்கம், உற்பத்தி சாதனங்கள் இல்லாத ஒரு வர்க்கம், முதலாளி வர்க்கத்தை நேரடியாகவும் முழுமையாகவும் எதிர்த்து நின்ற ஒரே வர்க்கமாகும். எனவே, அது இறுதி வரையில் புரட்சிகரமாக இருக்கும் ஆற்றலுடைய ஒரே ஒரு வர்க்கமாகும். முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி அரசியல் ஆட்சி அதிகாரத்தை வென்ற பின் பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கமாகி விட்டது. அது அரசாட்சி அதிகாரம் செலுத்துகிறது; ஏற்கெனவே சமுதாயமயமாக்கப்பட்ட உற்பத்தி சாதனங்கள் மீது கட்டுப்பாட்டைச் செயல்படுத்துகிறது; ஊசலாடுகிற இடைத்தட்டு சக்திகள் மற்றும் வர்க்கங்களுக்கு வழி காட்டுகிறது; சுரண்டலாளர்களின் அதிகரித்து வரும் பிடிவாதமான எதிர்ப்பை நசுக்குகிறது. இவை யாவும் வர்க்கப் போராட்டத்தின் பிரத்தியேக கடமைகள். இந்தக் கடமைகளைப் பாட்டாளி வர்க்கம் முற்காலங்களில் தானே முன்வைக்கவில்லை, முன்வைத்திருக்க முடியாது.

சுரண்டலாளர்கள், நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் வர்க்கம் மறைந்து விடவில்லை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் திடுமென மறைந்துவிட முடியாது. சுரண்டலாளர்கள் தகர்க்கப்பட்டிருக்கிறார்கள், ஆனால் அழிக்கப்படவில்லை. அவர்களுக்கு சர்வதேச மூலதனம் என்ற வடிவில் இன்னும் ஒரு சர்வதேச அடித்தளம் இருக்கிறது. அவர்கள் அதன் ஒரு கிளையே. அவர்கள் இன்னும் ஓரளவு உற்பத்தி சாதனங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் இன்னும் பணம் இருக்கிறது. அவர்களுக்கு இன்னும் மிகவும் விரிவான சமுதாயத் தொடர்புகள் உள்ளன. அவர்கள் தோற்கடிக்கப்பட்டதால் அவர்களது எதிர்ப்பின் சக்தி நூறு மற்றும் ஆயிரம் மடங்கு அதிகரித்திருக்கிறது. அரசாங்க, ராணுவ மற்றும் பொருளாதார நிர்

வாகக் ''கலை'' அவர்களுக்கு மேன்மையை, மிகப் பெரிய மேன்மையைத் தருகிறது. அதன் காரணமாக மக்கள் தொகையிலான அவர்களது எண்ணிக்கையின் சராசரியினை விட ஒப்புவமையற்ற முறையில் அவர்களது முக்கியத்துவம் அதிகரித்திருக்கிறது. வீழ்த்தப்பட்ட சுரண்டலாளர்கள் வெற்றிவாகை சூடிய சுரண்டப்பட்ட மக்களின் முன்னணிப் படையினை—அதாவது, பாட்டாளி வர்க்கத்தை—எதிர்த்து நடத்தும் வர்க்கப் போராட்டம் ஒப்புவமையற்ற முறையில் அதிகக் கடுமையாகி விட்டது. இந்தக் கருத்தோட்டத்தை (இரண்டாம் அகிலத்தின் எல்லா வீரர்களும் செய்வது போல) அகற்றி அந்த இடத்தில் சீர்திருத்தவாதப் பிரமைகளைப் புகுத்தினுல் ஒழிய புரட்சியைப் பொருத்தவரை வேறு விதமாக இருக்க முடியாது.

இறுதியாக, விவசாயிகள் பொதுவாக குட்டிமுதலாளிகளைப் போலவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழும்கூட ஒரு பாதி வழி இடைத் தட்டு நிலையிலேயே இருக்கிருர்கள்: ஒரு புறம் அவர்கள் ஓரளவு பெரிய (பின்தங்கிய ருஷ்யாவில் பரந்தளவு) வெகுஜன உழைக்கும் மக்களாக, நிலப்பிரபு மற்றும் முதலாளியிடமிருந்து தம்மைத் தாமே விடுதலை செய்து கொள்ள வேண்டும் என்ற அனைத்து உழைக்கும் மக்களின் பொது நலனுல் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிருர்கள்; மறு புறம் அவர்கள் பிரிந்து கிடக்கும் சிறு உரிமையாளர்கள், சொத்துடைமையாளர்கள் மற்றும் வர்த்தகர்களாக இருக்கிருர்கள். இத்தகைய பொருளாதார நிலைமை பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையே ஊசலாடுவதைத் தவிர்க்க முடியாத வகையில் விளைவிக்கிறது. இந்த இரண்டு வர்க்கங்களுக்கிடையிலான போராட்டம் கடுமையான வடிவத்தை மேற்கொண்டு விட்டதாலும், அனைத்து சமூக உறவுகளும் நம்ப முடியாதளவு கடுமையாகத் தகர்ந்திருப்பதாலும், குறிப்பாக விவசாயிகளும் பொதுவாக குட்டிமுதலாளிகளும் பழைய, மாமூலான மாறுதலற்றவற்றில் பெருமளவு பற்றுக்கொண்டிருப்பதாலும், அவர்கள் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் அலையாடுவதையும் அவர்கள் ஊசலாடுகிற, மாறுபடக் கூடிய உறுதி

யற்றவர்களாக இருப்பதையும் தவிர்க்க முடியாத வகையில் நாம் காண நேர்ந்துள்ளது இயல்பே.

இந்த வர்க்கம்—அல்லது இந்த சமூக சக்திகள்—சம்பந்தமாகப் பாட்டாளி வர்க்கம் அதன் மீது தனது செல்வாக்கை நிலைநாட்டவும் அதற்கு வழி காட்டவும் முயல வேண்டும். ஊசலாடுகிற, உறுதியற்ற சக்திகளுக்குத் தலைமை வழங்குவது—இதுவே பாட்டாளி வர்க்கத்தின் கடமை.

அனைத்து அடிப்படை சக்திகள் அல்லது வர்க்கங்களையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால் மாற்றம் செய்யப் பட்ட அவற்றின் இடையுறவுகளையும் ஒப்புநோக்குவோமானால் சோஷலிசத்தை நோக்கிய மாறுதல் கட்டம் பொதுவாக ''ஜனநாயகத்தின் வழியில்'' சாத்தியம் என்று இரண்டாம் அகிலத்தின் பிரதிநிதிகள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ள பொதுவான குட்டிமுதலாளித்துவக் கருத்து எவ்வளவு வர்ணிக்க முடியாத அளவுக்கு முட்டாள்த்தனமானது, தத்துவார்த்த ரீதியில் மடத்தனமானது என்பதை நாம் அறிவோம். இந்தத் தவறுக்கு அடிப்படை ஆதாரம் முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து பரம்பரையாகப் பெற்ற ''ஜனநாயகம்'' முற்றமுழுமையான ஏதோ ஒன்று, அது வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது என்ற தப்பெண்ணமேயாகும். உண்மையில் ஜனநாயகம்தானே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் முற்றிலும் ஒரு புதிய கட்டத்திற்குள் கடந்து செல்கிறது. வர்க்கப் போராட்டம்கூட எல்லா வடிவங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்தி உயர் மட்டத்திற்கு எழுகிறது.

சுதந்திரம், சமத்துவம் மற்றும் ஜனநாயகம் பற்றிய பொதுவான பேச்சுக்கள் உண்மையில் பண்ட உற்பத்தி உறவுகளால் உருவாக்கப்பட்ட கருத்தோட்டங்களைக் கண்ணை மூடிக்கொண்டு உருவிடுவதாகும். அத்தகைய பொதுப் பேச்சுக்களைக் கொண்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஸ்தூலமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயல்வது முதலாளித்துவ வர்க்கத்தின் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் முழுமையாக ஏற்றுக்கொள்வதற்குச் சமமாகும். பாட்டாளி வர்க்கத்தின் கருத்து முனையிலிருந்து இந்தப்

பிரச்சினையைப் பின்வரும் வழியில் மட்டுமே முன்வைக்கலாம்: எந்த வர்க்கத்தின் ஒடுக்குமுறையிலிருந்து சுதந்திரம்? எந்த வர்க்கத்திற்கு எந்த வர்க்கத்துடன் சமத்துவம்? ஜனநாயகம் தனியார் சொத்துடைமை அடிப்படையிலா அல்லது தனியார் உடைமையை ஒழிப்பதற்கான போராட்டத்தின் அடிப்படையிலா? என்று இவ்வாறு கேட்கலாம்.

நெடுங்கால முன்பாக எங்கெல்ஸ் தனது டூரிங்குக்கு மறுப்பு என்ற நூலில் சமத்துவம் என்ற கருத்தோட்டம் பண்ட உற்பத்தி உறவுகளிலிருந்து உருவாக்கப்பட்டது, அதன் பொருள் **வர்க்கங்களை** ஒழிப்பதே என்று புரிந்து கொள்ளப்படா விட்டால் சமத்துவம் ஒரு தப்பெண்ணமாகி விடுகிறது என்று விளக்கம் தந்தார். சமத்துவம் பற்றிய முதலாளித்துவ-ஜனநாயகக் கருத்தமைப்புக்கும் சோஷலிசக் கருத்தமைப்புக்கும் இடையிலான வேறுபாடு பற்றிய இந்த சாதாரண உண்மை பெரும்பாலும் மறக்கப்பட்டு விடுகிறது. இது மறக்கப்படாதிருக்குமானல், முதலாளி வர்க்கத்தை வீழ்த்துவது மூலம் பாட்டாளி வர்க்கம் வர்க்கங்களை ஒழிப்பதற்கான திசையில் மிகவும் நிர்ணயமான நடவடிக்கையை எடுக்கிறது என்பதும், இந்த நிகழ்ச்சிப் போக்கைப் பூர்த்தி செய்யப் பாட்டாளி வர்க்கம், அரசாட்சி இயந்திரத்தைப் பயன்படுத்தி வீழ்த்தப்பட்ட முதலாளிகள் மீதும் ஊசலாடும் குட்டிமுதலாளிகள் மீதும் பல்வேறு போராட்ட, செல்வாக்கு முறைகளைக் கையாண்டு தனது வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதும் தெட்டத் தெளிவாகும்.

(தொடரும்*.)

அக்டோபர் 30, 1919

பிராவ்தா, இதழ் 250,
நவம்பர் 7, 1919

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 271-282

---

* இக்கட்டுரை முடிவுறவில்லை.—(ப-ர்.)

கீழ்த்திசை மக்களது கம்யூனிஸ்டு நிறுவனங்களின் இரண்டாம் அகில ருஷ்ய காங்கிரசில் ஆற்றிய உரை[8]

நவம்பர் 22, 1919

தோழர்களே! கீழ்த்திசை மக்களது முஸ்லிம் நிறுவனங்களின் பிரதிநிதிகளாகிய கம்யூனிஸ்டுத் தோழர்களது இந்தக் காங்கிரசிற்கு வாழ்த்துக் கூறவும், தற்போது ருஷ்யாவிலும் உலகெங்கணும் இருந்துவரும் சூழ்நிலை பற்றி சில வார்த்தைகள் கூறவும் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பு குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நடப்பு விவகாரங்களே எனது உரையின் கருப்பொருள். கீழ்த்திசை மக்களுக்கு ஏகாதிபத்தியத்தின் பாலுள்ள போக்கும் இம்மக்களிடையே நடைபெறும் புரட்சிகர இயக்கமும்தான் இப்பிரச்சினையின் அத்தியாவசியக் கூறுகளாய் எனக்குத் தோன்றுகின்றன. சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிராய் நமது சோவியத் குடியரசு நடத்தும் புரட்சிகரப் போராட்டத்துடன் நேரடித் தொடர்பு கொண்டு மட்டுந்தான் கீழ்த்திசை மக்களின் புரட்சிகரமான இந்த இயக்கம் இப்பொழுது பயனுள்ள முறையில் வளர முடியும், வெற்றிகர முடிவை எய்த முடியும் என்பது வெள்ளிடை மலை. ருஷ்யாவின் பிற்பட்ட நிலையும் அதன் மிகப்பெரும் பரப்பும் அடங்கிய பல சூழ்நிலைகளின் காரணமாகவும், ருஷ்யாவானது ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடைப்பட்ட, மேற்குலகுக்கும் கிழக்குலகுக்கும் இடைப்பட்ட ஓர் எல்லையாய் இருப்பதாலும், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான உலகப் போராட்டத்தின் முன்னோடிகளாய்ச் செயல்படும் முழு உக்கிரத்தையும் நாம் ஏற்றுச் சகித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இதை நாம் ஒரு பெரும் சிறப்பாகவே கருதுகிறோம். ஆகவே, உடனடியான வருங்காலத்தின் வளர்ச்சிப் போக்கு அனைத்தும் சர்வ

தேச ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மேலும் விரிவான, மேலும் கடுமையான போராட்டத்தையே எதிர்நோக்குகிறது. இந்த வளர்ச்சிப் போக்கு ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா ஆகியவற்றின் ஒன்றுபட்ட ஏகாதிபத்தியத்தின் சக்திகளை எதிர்த்து சோவியத் குடியரசு நடத்திவரும் போராட்டத்துடன் தவிர்க்க முடியாதபடி இணைந்ததாகவே இருக்கும்.

இராணுவ அம்சத்தைப் பொறுத்தவரை, எல்லாப் போர்முனைகளிலும் நமது நிலைமை எவ்வளவு சாதகமாய் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரிந்ததே. இப்பிரச்சினை குறித்து நான் விவரமாய்க் கூற வேண்டியதில்லை. சர்வ தேச ஏகாதிபத்தியத்தால் நம் மீது திணிக்கப்பட்ட இந்த உள்நாட்டுப் போர் இரண்டு ஆண்டுகளில் ருஷ்ய சோஷலிசக் கூட்டாட்சி சோவியத் குடியரசுக்குச் சொல்லொணா இன்னல் இழைத்திருக்கிறது, விவசாயிகளாலும் தொழிலாளர்களாலும் சகிக்கவே முடியாதென அடிக்கடித் தோன்றும்படியான, பொறுக்க முடியாத சுமையை அவர்கள் மீது இருத்திற்று என்பதை மட்டும் இங்கு கூறுகிறேன். அதே போதில் இந்தப் போர் அதன் மிருகத்தனமான வன்முறை காரணமாகவும், நமது ''நேசக் கூட்டாளிகள்'' எனப்படுவோர்—சோஷலிசப் புரட்சிக்கு முன்பே கூட நம்மைச் சூறையாடி வந்த இவர்கள்—இப்பொழுது மூர்க்கமான காட்டு விலங்குகளாய் மாறி, ஈவிரக்கமின்றி நடத்திவரும் கொடுந் தாக்குதல் காரணமாகவும், ஒரு பெரிய விந்தை புரிந்துள்ளது; போரால் களைத்துப்போய் ஓய்ந்துவிட்ட மக்களை, மற்றொரு போருக்குத் தாக்குப்பிடிக்க சக்தியற்றோராய்த் தோன்றிய இவர்களை, இரண்டு ஆண்டுகளாய் போரைத் தாக்குப்பிடித்ததோடல்லாமல் அதனை வெற்றிகர முடிவுக்குக் கொண்டு வருவோருமான வீரர்களாய் மாற்றியிருக்கிறது. கல்சாக், யுதேனிச், தெனீக்கின் இவர்கள் மீது இப்பொழுது நாம் பெற்றுவரும் வெற்றிகள், தமது விடுதலைக்காகப் போராடக் கிளர்ந்தெழுந்துவிட்ட நாடுகள், மக்களை எதிர்த்து உலக ஏகாதிபத்தியம் நடத்தும் போராட்டத்தின் வரலாற்றில் ஒரு புதிய கட்டம் துவங்கியிருப்பதைக்

குறிக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் நமது உள்நாட்டுப் போரின் இந்த இரண்டு ஆண்டுகளும் நெடுங்காலமாய் வரலாற்றுக்குத் தெரிந்த ஓர் உண்மையை முற்றிலும் உறுதி செய்திருக்கின்றன—போரின் தன்மையும் அதன் வெற்றியும் போருக்குச் செல்லும் நாட்டினுள் இருக்கும் அமைப்பையே பிரதானமாய்ப் பொறுத்துள்ளன, போரானது குறிப்பிட்ட அந்த நாடு போருக்கு முன்பு அனுசரித்த உள்நாட்டுக் கொள்கையின் பிரதிபலிப்பே ஆகும் என்கிற இவ்வுண்மையை உறுதி செய்துள்ளன. போரை நடத்திச் செல்வதில் இவை யாவும் தவிர்க்க முடியாத வகையில் பிரதிபலிக்கின்றன.

எந்த வர்க்கம் போரை நடத்திற்று, தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது என்பது மிகவும் முக்கியமான பிரச்சினை. நமது உள்நாட்டுப் போர் தம்மை விடுவித்துக் கொண்டு விட்ட தொழிலாளர்களாலும் விவசாயிகளாலும் நடத்தப்படுகிறது என்ற காரணத்தாலும், உழைப்பாளி மக்கள் தமது சொந்த நாட்டையும் அனைத்து உலகையும் சேர்ந்த முதலாளிகளிடமிருந்து விடுதலை பெறுவதற்காக நடத்தும் அரசியல் போராட்டத்தின் தொடர்ச்சியே இந்த உள்நாட்டுப் போர் என்ற காரணத்தாலும் மட்டும்தான்—இக்காரணங்களால் மட்டுமேதான்—ருஷ்யாவைப் போன்ற ஒரு பிற்பட்ட நாட்டில், நான்கு ஆண்டுக் கால ஏகாதிபத்தியப் போரால் ஓய்ந்து ஒடுங்கிய ஒரு நாட்டில், நம்புதற்கரிய, ஈடிணையற்ற துன்பத்துக்கும் இன்னலுக்குமுரிய இரண்டு ஆண்டுகளாய் அந்த உள்நாட்டுப் போரை நடத்திச் செல்வதற்கு வேண்டிய வைராக்கிய மனம் படைத்த மக்களைக் காண முடிகிறது.

உள்நாட்டுப் போரின் வரலாற்றில் கல்ச்சாக்கின் விவகாரம் இதற்குத் தெளிவான எடுத்துக்காட்டு. கல்ச்சாக் உலகின் மிகுந்த பலம் படைத்த எல்லா வல்லரசுகளின் உதவியையும் பெற்ற பகைவன். உதாரணமாய் ஏகாதிபத்தியப் போருக்காகப் பயிற்சி செய்யப்பட்டு, ஆனல் அனேகமாய் அதில் பங்கு கொள்ளாமலும், ஆகவே சேதமுறாமலும் இருந்த ஜப்பானியத் துருப்புக்களைப் போன்ற உலக

ஏகாதிபத்தியவாதிகளது மிகச் சிறந்த துருப்புக்களும் அடங்கலாய்ச் சுமார் ஒரு லட்சம் அன்னியத் துருப்புக்களால் பாதுகாக்கப் பெற்ற ஒரு ரயில் பாதையும் கல்ச்சாக் வசமிருந்தது. சைபீரிய விவசாயிகளுடைய பக்கபலம் கல்ச்சாக்கிற்குக் கிடைத்திருந்தது. சைபீரிய விவசாயிகள் பண்ணையடிமை முறையை அறியாதவர்கள், மிகவும் சுபிட்ச நிலையில் இருந்தவர்கள், ஆகவே கம்யூனிசத்திலிருந்து ஏனைய யாரையும் விட நெடுந்தொலைவு விலகி நின்றவர்கள். கல்ச்சாக் வெல்லற்கரிய சக்தியாகவே தோன்றினர். ஏனெனில் அவருடைய துருப்புக்கள் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் முன்னிலைப் படைகளாய் இருந்தவை. இது நாள் வரையில் ஜப்பானிய, செக்கோஸ்லொவாக்கியத் துருப்புக்களும் ஏனைய பல ஏகாதிபத்திய நாடுகளின் துருப்புக்களும் சைபீரியாவில் செயல்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும் சைபீரியா மீதும் அதன் அளவுகடந்த இயற்கைச் செல்வாதாரங்கள் மீதும் கல்ச்சாக் நடத்திவரும் ஆட்சியின் ஓராண்டுக்கும் அதிகமான அனுபவம்—ஆரம்பத்தில் இரண்டாவது அகிலத்தின் சோஷலிஸ்டுக் கட்சிகளாலும் அரசியல் நிர்ணய சபைக் கமிட்டியின்[9] அணியை நிறுவிக் கொண்ட மென்ஷிவிக்குகளாலும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களாலும் ஆதரிக்கப்பட்டு, ஆகவே இந்நிலைமைகளில் சாமான்ய ஆளின் கண்ணோட்டத்திலும் வரலாற்றின் சாதாரணப் போக்கின் கண்ணோட்டத்திலும் உறுதியானதாகவும் வெல்ல முடியாததாகவும் தோன்றிய இந்த அனுபவம்—பின்வருவதை உண்மையில் கண்கூடாய்ப் புலப்படுத்திற்று: கல்ச்சாக் ருஷ்யாவின் மையப் பகுதிக்குள் முன்னேறி வர வர அவர் மேலும் மேலும் தேய்ந்து குறுகவே நேர்ந்தது; முடிவில் கல்ச்சாக்கின் மீது சோவியத் ருஷ்யா முழுமையான வெற்றிவாகை சூடியதைக் கண்ணுற்றுள்ளோம். முதலாளிகளின் ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்கள், விவசாயிகளுடைய ஒன்றுபட்ட சக்திகள் மெய்யான விந்தைகள் புரிய வல்லவை என்பதற்குச் சந்தேகத்துக்கு இடமில்லாத நடைமுறை நிரூபணம் இங்கு நமக்குக் கிடைக்கிறது. புரட்சிகரப் போர் ஒன்று ஒடுக்கப்பட்ட உழைப்பாளி மக்

களை மெய்யாகவே கவர்ந்திழுத்து அவர்களது நாட்டத்துக்கு உரியதாகும் போது, சுரண்டுவோரைத் தாம் எதிர்த்துப் போராடுகிறோம் என்று அவர்களை உணர்வு பெறச் செய்யும் போது—இத்தகைய புரட்சிகரப் போர் விந்தைகள் புரிவதற்கான பலத்தையும் வல்லமையையும் ஊற்றெடுக்கச் செய்கிறது என்பதற்கு நடைமுறை நிரூபணம் இங்கு நமக்குக் கிடைக்கிறது.

செஞ்சேனை கண்டிருக்கும் இச்சாதனையும் அதன் போராட்டமும் அதன் வெற்றியின் வரலாறும் கீழ்த்திசை மக்கள் அனைவருக்கும் பிரம்மாண்டமான, சகாப்தகரமான முக்கியத்துவமுடையனவாய் இருக்குமென நினைக்கிறேன். கீழ்த்திசை மக்கள் பலமில்லாதோராய் இருக்கலாம், தொழில் நுட்பத்தின், ராணுவக் கலையின் எல்லா அதிசயங்களையும் கையாண்டு போராடும் ஐரோப்பிய ஒடுக்குமுறையாளர்கள் வெல்லற்கரிய பலமுடையோராய்த் தோன்றலாம்—இருப்பினும் ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்தும் புரட்சிகரப் போர் உழைப்பாளர்களும் சுரண்டப்படுவோருமான மக்களில் லட்சோப லட்சக் கணக்கானோரைத் தட்டியெழுப்புவதில் மெய்யாகவே வெற்றி பெறுமாயின், கீழ்த்திசை மக்களுடைய விடுதலை இப்பொழுது முற்றிலும் நடைமுறை சாத்தியமானதாகி விடும்படி இந்தப் புரட்சிகரப் போர் அவ்வளவு உள்ளாற்றல்களும் விந்தைகளும் நிறைந்ததாகும் என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தும். சர்வதேசப் புரட்சிக்குரிய வாய்ப்புகளின் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமின்றி, ஆசியாவில் மற்றும் சைபீரியாவில் கிடைத்திருக்கும் நேரடி ராணுவ அனுபவத்தின், பலம் படைத்த எல்லா ஏகாதிபத்திய நாடுகளின் ஆயுதப் படையெடுப்புக்கு உள்ளாகியுள்ள சோவியத் குடியரசின் அனுபவத்தின் கண்ணோட்டத்திலிருந்தும் கீழ்த்திசை மக்களின் விடுதலை இப்பொழுது முற்றிலும் நடைமுறை சாத்தியமானதாகி விட்டது.

தவிரவும் ருஷ்யாவில் உள்நாட்டுப் போரின் இந்த அனுபவமானது, உள்நாட்டு யுத்தத் தீயிலே புரட்சிகர ஆர்வத்தின் வளர்ச்சியுடன் கூடவே சக்திமிக்க உள் ஒருமைப்பாடும் ஏற்படுகிறது என்பதை நமக்கும் எல்லா நாடுகளின் கம்

யூனிஸ்டுகளுக்கும் தெளிவுபடுத்தி இருக்கிறது. ஒரு தேசத்தின் பொருளாதார, நிறுவன ஒழுங்கமைப்பு சக்திகள் அனைத்தையும் சோதித்துப் பார்க்கிறது போர். முடிவாய்ப் பார்க்குமிடத்து, பஞ்சத்திலும் குளிரிலும் துயருறும் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இந்தப் போர் அளவு மீறிக் கடுமையானதாய் இருந்துள்ளதென்றாலும், நாம் வெற்றி பெற்று வருகிறோம், தொடர்ந்து வெற்றி பெறுவோம் என்று இந்த இரு ஆண்டு அனுபவத்தின் அடிப்படையில் கூறலாம். ஏனெனில் நாட்டின் உள்மண்டலம்—பலம் பொருந்திய ஒன்று—நம்மிடம் இருக்கிறது; பஞ்சத்தையும் குளிரையும் மீறி விவசாயிகளும் தொழிலாளர்களும் ஒன்றுசேர்ந்து நிற்கின்றனர், வலுமிக்கோராய் வளர்ந்துள்ளனர், பலத்த ஒவ்வொரு அடியையும் அடுத்துத் தமது சக்திகளை மேலும் கெட்டியாய் ஒன்றிணைத்துக் கொண்டும் மேலும் கூடுதலான பொருளாதார வலிமை பெற்றும் பதிலளிக்கின்றனர். இது ஒன்றினால் மட்டுமே கல்ச்சாக் மீதும், யுதேனிச் மீதும், இவர்களுடைய கூட்டாளிகளான உலகின் வலுமிக்க அரசுகள் மீதுமான வெற்றிகள் சாத்தியமாகியுள்ளன. ஒரு புறத்தில் புரட்சிகரப் போரை வளர்த்துக் கொள்ள முடியுமென்பதையும், மறு புறத்தில் அன்னியப் படையெடுப்பின் பலத்த அடிகளை அடுத்து சோவியத் ஆட்சி அதிகாரம் வளர்ந்து வலுவடைந்து செல்கிறதென்பதையும் கடந்த இரு ஆண்டுகளும் காட்டியுள்ளன. புரட்சியின் மையத்தையும் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் மீது போர் பிரகடனம் செய்யத் துணிந்த தொழிலாளர்கள், விவசாயிகளது குடியரசையும் விரைவில் அழித்திடுவதே இந்த அன்னியப் படையெடுப்பு தந்த பலத்த அடிகளின் நோக்கமாகும். ஆனால் ருஷ்யாவின் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அழிப்பதற்குப் பதில் இந்தப் பலத்த அடிகள் அவர்களை மேலும் உறுதி பெறவே செய்தன.

இதுவே தற்போதைய கால கட்டத்தின் பிரதான படிப்பினை, பிரதான உள்ளடக்கம். நமது மண்ணில் எஞ்சியிருக்கும் கடைசிப் பகைவனான தெனீக்கின் மீது தீர்மானகரமான வெற்றிகள் பெறும் தறுவாயில் நாம் இருக்கிறோம்.

நாங்கள் வலுவுடையவர்கள் என்ற உணர்வு கொண்டுள்ளோம். எங்கள் குடியரசு உள்ளார்ந்த உறுதியடைந்திருக்கிறது, தெனீக்கினுக்கு எதிரான போரிலிருந்து மேலும் அதிக வலுப்பெற்று, சோஷலிசக் கட்டமைப்பை எழுப்பும் பணிக்கு மேலும் சிறப்பான ஆயத்த நிலையில் வெளிவருவோமெனக் கூறுவது தவறல்ல என்று ஓராயிரம் தரம் திரும்பத் திரும்ப நாம் பறைசாற்றலாம். சோஷலிசக் கட்டமைப்பை எழுப்புவதற்கு உள்நாட்டுப் போரின் போது நாங்கள் மிகக் குறைவான நேரமும் ஆற்றலும்தான் செலவிட முடிந்தது. ஆனால் இப்பொழுது நாங்கள் தங்கு தடையற்ற சுதந்திரப் பாதையில் அடியெடுத்து வைக்கிறபடியால் சந்தேகத்துக்கு இடமின்றி இதற்கு எங்களது நேரத்தை முழுமையாய்ச் செலவிட முடியும்.

மேற்கு ஐரோப்பாவில் ஏகாதிபத்தியம் சிதைந்து வருவதைப் பார்க்கிறோம். நிலவரங்களைப் புரிந்து கொள்ளாத சோஷலிஸ்டுகளின் மிகப் பெரும்பான்மையினரைப் போலவே ஓராண்டுக்கு முன்பே ஜெர்மன் சோஷலிஸ்டுகளுக்குங்கூட, உலக ஏகாதிபத்தியத்தின் இரு கோஷ்டிகளுக்கு இடையே போராட்டம் நடக்கிறது என்று தோன்றியது. இந்தப் போராட்டமே முழுமையான வரலாறு என்றும், வேறு எதையும் உண்டாக்க வல்ல சக்தி எதுவுமே இல்லை என்றும் அவர்கள் நம்பினர். பலம் படைத்த இந்த உலகக் கொள்ளைக்காரர்களின் கோஷ்டிகளில் ஒன்றின் பக்கம் சேர்வதைத் தவிர, சோஷலிஸ்டுகளுக்குங்கூட மாற்று வழி எதுவுமில்லை என்று அவர்களுக்குத் தோன்றியது. 1918 அக்டோபர் இறுதியில் அப்படித்தான் அவர்களுக்குத் தோன்றியது. ஆனால் அதற்குப் பின்னர் கழிந்திருக்கும் ஓராண்டில் உலக வரலாறு முன்பின் அறியாத நிகழ்ச்சிகளைக் கண்டுள்ளதைப் பார்க்கிறோம். பெரிய விளைவுகளை உண்டாக்கும் ஆழமான நிகழ்ச்சிகள் இவை. ஏகாதிபத்தியப் போரின் போது தேச பக்தர்களாய் இருந்த, பகைவன் ஒருவனை தாம் எதிர் நோக்குவதாய்க் கூறித் தமது நடத்தைக்கு நியாயம் கற்பித்தும் கொண்ட, ஜெர்மன் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற ஆங்கிலேய, பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள்

வழி செய்வதாய்க் காரணம் கூறி இவர்களுடன் தாம் கொண்ட கூட்டுக்கு நியாயம் கற்பித்துக் கொண்ட சோஷலிஸ்டுகளில் பலரின் கண்களை இந்த நிகழ்ச்சிகள் திறந்திருக்கின்றன. அந்தப் போரால் எத்தனை பொய்த் தோற்றங்கள் தகர்க்கப்பட்டன பாருங்கள்! ஜெர்மன் ஏகாதிபத்தியம் அழுகிக் கொண்டிருப்பதைக் கண்ணுறுகிறோம். இந்த அழுகல் குடியரசுவாதப் புரட்சிக்கு மட்டுமின்றி, சோஷலிசப் புரட்சிக்குங்கூட இட்டுச் சென்றுள்ளது. ஜெர்மனியில் இன்று வர்க்கப் போராட்டம் மேலும் கடுமையாகி இருப்பதும், உள்நாட்டுப் போர், குடியரசுவாதக் கொடியை ஏற்றுக் கொண்டு ஆனல் தொடர்ந்து ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளாகவே இருந்து வரும் ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் மேலும் மேலும் நெருங்கி வருவதும் உங்களுக்குத் தெரிந்தவையே.

மேற்கு ஐரோப்பாவில் சமூகப் புரட்சி அதிவேகமாய் முற்றி வருகிறது என்பதும் கலாசாரத்தின், நாகரிகத்தின் பிரதிநிதிகளாய் வேடம் பூண்டுள்ள ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளான ஹூனர்கள் மீது வெற்றி பெற்ற அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இதுவேதான் நடைபெற்று வருகிறது என்பதும் எல்லோருக்கும் தெரியும். வெர்சேய் சமாதான ஒப்பந்தம்[10] முடிவானதும், ஜெர்மன் கொள்ளைக்காரர்கள் நம் மீது திணித்த பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையைக்[11] காட்டிலும் நூறு மடங்கு அது கொள்ளைக்காரத்தனமாய் இருந்ததையும், வெற்றி பெற்ற துர்பாக்கிய நாடுகளின் முதலாளிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் தமக்குத் தாமே கொடுத்துக் கொள்ளக் கூடிய மிகக் கடுமையான உதையாய் அது அமைந்ததையும் எல்லோரும் கண்ணுற்றனர். வெர்சேய் உடன்படிக்கை வெற்றி பெற்ற தேசங்களது மக்களின் கண்களைத் திறந்து விட்டது; பிரிட்டனையும் பிரான்சையும் பொறுத்தவரை இந்நாடுகள் ஜனநாயக அரசுகளே என்ற போதிலும் நாம் எதிர்நோக்குவது ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்கள் ஆட்சி புரியும் நாடுகளையே அன்றி கலாசாரம், நாகரிகம் இவற்றின் பிரதிநிதிகளை

யல்ல என்பதைத் தெளிவுபடுத்திற்று. இந்தக் கொள்ளைக்கா ரர்களிடையிலான உள்போராட்டம் அதிவேகமாய் வளர்ந்து வருகிறது. வெர்சேய் உடன்படிக்கையானது ஆனந்தப்பட்டுக் கொள்ளும் ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பகட்டு வெற்றியே ஆகுமென்பதையும், உண்மையில் ஏகாதிபத்திய உலகு அனைத்தின் கையாலாகாத்தனத்தையும், போரின் போது தம்மை அழுகிச் சிதையும் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி களுடன் இணைத்துக் கொண்டு ஒன்றோடொன்று போராடிய கொள்ளைக்காரக் கோஷ்டிகளில் ஒன்றைப் பாதுகாத்து நின்ற சோஷலிஸ்டுகளைத் தொழிலாளி மக்கள் தீர்மானமாய் விட்டொழித்து விட்டனர் என்பதையும் அறிந்து நாம் மனம் மகிழும் வண்ணம் அந்த உள்போராட்டம் அவ்வளவு வேக மாய் வளர்ந்து செல்கிறது. வெர்சேய் உடன்படிக்கை தீவட்டிக் கொள்ளையைக் குறிக்கும் சமாதானமாய் இருப்பதா லும், உண்மையில் இங்கிலாந்தும் பிரான்சும் காலனிகள் மீது தமது ஆட்சியைப் பலப்படுத்திக் கொள்ளவும் தமது ஏகாதி பத்திய வலிமையைப் பெருக்கிக் கொள்ளவும் தான் ஜெர் மனியை எதிர்த்துப் போராடின என்பதை இவ்வுடன்படிக்கை தெளிவுபடுத்துவதாலும் தொழிலாளி மக்களுடைய கண் கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அந்த உள்போராட்டம் காலத் துக்குக் காலம் விரிவடைந்து வளர்கிறது. நவம்பர் 21ஆம் தேதியிட்டு லண்டனிலிருந்து அனுப்பப்பட்ட வானொலிச் செய்தி ஒன்றை இன்று பார்த்தேன். அமெரிக்கப் பத்திரிகை யாளர்கள்—புரட்சியாளர்களிடம் அனுதாபம் கொண்டவர் களாய்ச் சந்தேகிக்க முடியாதவர்கள்—வெர்சேய் உடன் படிக்கையை அங்கீகரிக்க அமெரிக்கர்கள் மறுப்பதால் பிரான் சில் அமெரிக்கர்கள் மீது என்றுமே கண்டிராத வெறுப்பு கிளர்ந்துள்ளதாய் இச்செய்தியில் கூறுகின்றனர்.

இங்கிலாந்தும் பிரான்சும் வெற்றிவாகை சூடியவை, ஆனால் கழுத்தளவுக்கு அவை அமெரிக்காவுக்குக் கடன் பட்டுள்ளவை. இங்கிலாந்தும் பிரான்சும் தாம்தான் வெற்றி யாளர்கள் என்று எவ்வளவு வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும், ஆனால் வெண்ணெயைக் கடைந்து எடுத்துக் கொள்ளப் போவது தானேதான் என்றும், போரின் போது

தான் அளித்த உதவிக்காகக் கடுவட்டி வசூலித்துக் கொள்வ தென்றும் அமெரிக்கா தீர்மானம் செய்திருக்கிறது. அமெ ரிக்கக் கடற்படை இதற்குரிய உத்தரவாதமாய் அமையப் போகிறது. இந்த அமெரிக்கக் கடற்படை இப்பொழுது கட்டப்பெற்று வருகிறது, அளவில் ஆங்கிலேயக் கடற் படையை எட்டிப் பிடித்து மிஞ்சி வருகிறது. அமெரிக்க ஏஜண்டுகள் வெள்ளை அடிமைகளை, பெண்களையும் சிறுமி களையும், விலைக்கு வாங்கி விபசாரம் வளர்த்திட அமெரிக் காவுக்குக் கப்பல்களில் அனுப்பி வைப்பதில் அமெரிக்கர் களது கொள்ளைக்கார ஏகாதிபத்தியத்தின் அப்பட்டமான உருவைக் காணலாம். சுதந்திர அமெரிக்கா, நாகரிக நயம் படைத்த அமெரிக்கா, வெள்ளை அடிமைகளை வாங்கி விப சார விடுதிகளுக்கு வழங்குவதைப் பாருங்கள்! அமெரிக்க ஏஜண்டுகளுடன் போலந்திலும் பெல்ஜியத்திலும் சச்சரவு கள் ஏற்பட்டு வருகின்றன. அன்டான்டிடமிருந்து உதவி பெற்ற ஒவ்வொரு சிறு நாட்டிலும் மிகப் பெரிய அளவில் நடைபெற்று வருவதற்கு ஒரு சின்னஞ்சிறு எடுத்துக்காட்டே இது. உதாரணமாய்ப் போலந்தை எடுத்துக் கொள்ளுங் கள். அமெரிக்க ஏஜண்டுகளும் கொள்ளைலாபக்காரர்களும் அங்கே சென்று, இப்பொழுது தான் ஒரு சுயேச்சை அர சென்று பெருமையடித்துக் கொள்ளும் போலந்தின் செல் வங்களை எல்லாம் வாங்கி மூட்டை கட்டுவதைக் காண் பீர்கள். அமெரிக்க ஏஜண்டுகளால் போலந்து விலைக்கு வாங்கப்படுகிறது. அமெரிக்கர்களுடைய சட்டைப் பைக்குள் அடைபடாத ஆலையோ தொழிற்சாலையோ தொழிற்பிரிவோ அங்கே ஒன்றுகூட இல்லை. அந்த "மாபெரும் சுதந்திர வெற்றி நாடான" பிரான்சையும் அடிமை செய்ய முற் படும் அளவுக்கு அமெரிக்கர்கள் ஆணவங்கொண்டவர்களாகி விட்டனர். முன்பு லேவாதேவிக்காரர்களது நாடாயிருந்த பிரான்ஸ் இப்பொழுது அமெரிக்காவுக்கு மிகக் கடுமையாய் கடன்பட்டதாகி விட்டது. ஏனெனில் அது தனது பொரு ளாதாரப் பலத்தை இழந்து விட்டது; சொந்தத்தில் போதுமான அளவு தானியமோ நிலக்கரியோ அதனிடம் இல்லை; பெரிய அளவில் அதனல் தனது பொருள் வளச்

செல்வாதாரங்களை வளர்த்துக் கொள்ள இயலவில்லை. ஆயினும் தங்குதடையின்றி முழு அளவில் தனக்குக் கப்பம் கட்டிவர வேண்டுமென்று அமெரிக்கா வற்புறுத்துகிறது. இவ்விதம் பிரான்சும் இங்கிலாந்தும் சக்தி வாய்ந்த பிற நாடுகளும் பொருளாதார வழியில் போண்டியாகி இருப்பது மேலும் மேலும் பட்டவர்த்தனமாகி வருகிறது. பிரெஞ்சுத் தேர்தல்களில் பாதிரிமார் கட்சியினர் மேல்நிலை பெற்று விட்டனர். ஜெர்மனியை எதிர்த்து சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதாய்க் கூறப்பட்ட ஒன்றில் தமது பலம் அனைத்தையும் ஈடுபடுத்தும்படி ஏமாற்றப்பட்ட பிரெஞ்சு மக்களுக்கு முடிவில்லாக் கடனும், கொள்ளைவெறி கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளது ஏளனமும், இவை யாவற்றுக்கும் மேலாய் மிகவும் காட்டுத்தனமான பிற்போக்கின் பிரதிநிதிகளாலான பாதிரிமார் கட்சியினரது பெரும்பான்மையும் இப்பொழுது வெகுமதியாய்க் கிடைத்திருக்கின்றன.

உலகெங்குமே சூழ்நிலை சொல்ல முடியாத அளவுக்கு அதிகச் சிக்கலாகி விட்டது. கல்ச்சாக் மீதும் யுதேனிச் மீதும்—சர்வதேச மூலதனத்தின் அந்த அடிவருடிகள் மீது—நாங்கள் பெற்றிருக்கும் வெற்றி மிகப் பெரிது. ஆனால் இதைப் போல அவ்வளவு வெளிப்படையாய்த் தெரியாவிட்டாலுங் கூட, சர்வதேச அளவில் நாங்கள் கண்டுவரும் வெற்றி இதனிலும் மிகப் பெரிது. ஏகாதிபத்தியத்தின் உள் அழுகலில் அந்த வெற்றி அடங்கியிருக்கிறது. ஏகாதிபத்தியத்தால் எங்களுக்கு எதிராய்த் தன் துருப்புக்களை அனுப்ப முடியவில்லை. அன்டான்ட் முயன்று பார்த்தது, ஆனால் பயனில்லை. ஏனெனில் அதன் துருப்புக்களுக்கு எங்கள் துருப்புக்களுடன் தொடர்பு ஏற்பட்டு அவற்றின் மொழிகளில் பெயர்க்கப்பட்ட எங்கள் ருஷ்யாவின் சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றித் தெரிய வந்ததும் அவை சோர்வுற்றுத் தளர்ந்து விடுகின்றன. அழுகல் சோஷலிசத்தின் தலைவர்களுடைய செல்வாக்கையும் மீறி எங்கள் அரசியல் அமைப்புச் சட்டம் தொழிலாளி மக்களுடைய அனுதாபத்தை எப்பொழுதும் பெற்றுக்கொண்டு விடுகிறது. ''சோவியத்''

என்னும் சொல் இப்பொழுது எல்லோரும் அறிந்த சொல்லாகி விட்டது. சோவியத் அரசியல் அமைப்புச் சட்டம் எல்லா மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு தொழிலாளிக்கும் தெரிந்ததாகி விட்டது. அது தொழிலாளி மக்களின் அரசியல் அமைப்புச் சட்டம், சர்வதேச மூலதனத்தின் மீது வெற்றி பெற அறைகூவல் விடுத்திருக்கும் தொழிலாளி மக்களது அரசியலமைப்பு என்பதும், அது சர்வதேச ஏகாதிபத்தியவாதிகள் மீது நாங்கள் சாதித்திருக்கும் ஒரு வெற்றி என்பதும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தெரிந்ததே. நமது இந்த வெற்றி எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் எதிரொலிக்கிறது. ஏனென்ருல் அவற்றின் சொந்தத் துருப்புக்களே அவற்றுக்குக் கிடைக்காதபடிச் செய்துள்ளோம், இத்துருப்புக்களை எங்கள் தரப்புக்கு வென்று கொண்டு விட்டோம், சோவியத் ருஷ்யாவுக்கு எதிராய் அந்தத் துருப்புக்களை உபயோகிக்கும் சாத்தியப்பாடு அவற்றுக்குக் கிடைக்காதவாறு செய்து விட்டோம்.

பிற நாடுகளின்—பின்லாந்து, போலந்து, லாத்வியா இவற்றின்—துருப்புக்களைக் கொண்டு யுத்தம் புரிய அவை முயற்சி செய்தன; ஆனுல் பயன் ஏதும் இல்லை. இங்கிலாந்து அமைச்சர் சர்ச்சில் சில வாரங்களுக்கு முன்பு, நாடாளுமன்ற சபையில் பேசுகையில் சோவியத் ருஷ்யாவுக்கு எதிராய்ப் பதினுன்கு தேசங்களது படையெடுப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது என்றும் இதன் பயனுய்ப் புத்தாண்டுக்குள் ருஷ்யா மீது வெற்றி கிட்டிவிடும் என்றும் ஜம்பமடித்துக் கொண்டார்—அனைத்து உலகுக்கும் இது தந்தி மூலம் பறை சாற்றப்பட்டது. பல தேசங்கள் அதில் பங்கு கொண்டது மெய்தான்—பின்லாந்து, உக்ரேன், போலந்து, ஜார்ஜியா மற்றும் செக்கோஸ்லொவாக்கியர்கள், ஜப்பானியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர், ஜெர்மானியர்கள் ஆகியோரும் பங்கு கொண்டது மெய்தான். ஆனுல் அதன் முடிவு என்னவென்பது நமக்குத் தெரியும்! எஸ்தோனியர்கள் யுதேனிச்சின் படைகளை நட்டாற்றில் விட்டுச் சென்றது நமக்குத் தெரியும். இப்பொழுது பத்திரிகைகளில் ஆக்ரோஷமான சர்ச்சை நடைபெற்று வருகிறது. ஏனென்ருல் எஸ்தோனி

யர்கள் யுதேனிச்சுக்கு உதவ விரும்பவில்லை; பின்லாந்தும்—அதன் முதலாளித்துவ வர்க்கத்தார் எவ்வளவுதான் விரும்பிய போதிலும்—அவருக்கு உதவி செய்யவில்லை. நம்மைத் தாக்குவதற்கான இந்த இரண்டாவது முயற்சியும் இவ்வாறு தோல்வியுற்று விட்டது. அன்டான்ட் அதன் சொந்தத் துருப்புக்களை அனுப்பியது முதற் கட்டமாகும். இந்தத் துருப்புக்கள் ராணுவ நுட்பமுறையின் எல்லா விதிகளின் பிரகாரம் படைச் சாதனங்கள் பெற்றிருந்தன. ஆகவே அவை சோவியத் குடியரசைத் தோற்கடித்து விடுமென்பதாய்த் தோன்றிற்று. ஏற்கெனவே காக்கஸசிலிருந்தும் அர்ஹான்கெல்ஸ்கிலிருந்தும் கிரீமியாவிலிருந்தும் அவை வெளியேறி விட்டன. இன்னும் அவை மூர்மன்ஸ்கில் இருந்து கொண்டிருக்கின்றன—அதே போல செக்கோஸ்லொவாக்குகளும் சைபீரியாவில் இருந்து வருகின்றனர். ஆனல் அவை தனிமைப்பட்ட கோஷ்டிகளாகவே இருந்து வருகின்றன. எங்களைத் தனது சொந்தப் படைகளால் தோற்கடிக்கலாமென்று அன்டான்ட் செய்த முதல் முயற்சி எங்களுக்கு வெற்றியாய் முடிவுற்றது. இரண்டாவது முயற்சி எங்களுடைய அண்டை அயலாரும், நிதித் துறையில் முற்றிலும் அன்டான்டையே சார்ந்தவையுமான தேசங்களை எங்களுக்கு எதிராய் ஏவி விடுவதிலும், சோஷலிசத்தின் உறைவிடம் என்ற முறையில் எங்களை நசுக்கும்படி அவற்றை நிர்ப்பந்தம் செய்ய முயலுவதிலும் அடங்கியிருந்தது. ஆனல் அந்த முயற்சியும் தோல்வியில் முடிவுற்றது. இந்தச் சிறிய நாடுகளில் எதற்கும் இத்தகைய ஒரு போரை நடத்தும் வல்லமை கிடையாது என்பது தெரியலாயிற்று. அது மட்டுமல்ல, அன்டான்ட் மீது ஒவ்வொரு சிறு நாட்டிலும் வெறுப்பு வேர்விட்டு வளர்ந்திருந்தது. யுதேனிச் ஏற்கெனவே கிராஸ்னயே செலோவைப் பிடித்துக் கொண்டுவிட்ட ஒரு நேரத்தில் பின்லாந்து பெத்ரோகிராதைப் பிடிக்க முற்படவில்லை என்றுல், சோவியத் ருஷ்யாவின் பக்கத்தில் தன்னுல் சுயேச்சையாய் வாழ முடியும், ஆனல் அன்டான்டுடன் சமாதான மாய் வாழ முடியாது என்பதை உணர்ந்து கொண்டு, பின்லாந்து தயங்கியதுதான் அதற்குக் காரணம். சிறு தேசங்

கள் யாவுமே இதை உணர்ந்து கொண்டன. பின்லாந்து, லிதுவேனியா, எஸ்தோனியா, போலந்து இவற்றில் எல்லாம் இது உணரப்படுகிறது. இந்நாடுகளில் தேசியவெறி தலை விரித்தாடுகிறது. ஆயினும் இந்நாடுகளில் தனது சுரண்டலை விரிவாக்கி வருகிற அன்டான்ட் மீது இவற்றுக்கு வெறுப்பு இருந்து வருகிறது. ஆக இப்பொழுது நிகழ்ச்சிகளின் போக்கைத் துல்லியமாய் மதிப்பீடு செய்து, சோவியத் குடியரசுக்கு எதிரான சர்வதேச யுத்தத்தின் முதற்கட்டம் மட்டுமின்றி இரண்டாவதும் தோல்வியடைந்து விட்டதென்று மிகையின்றி நாம் கூறலாம். தெனீக்கினது படைகளை முறியடிப்பதுதான் தற்போது நாங்கள் செய்ய வேண்டியதெல்லாம். ஏற்கெனவே அவை பாதியளவுக்குத் தோற்கடிக்கப்பட்டு விட்டன.

எனது உரையில் நான் சுருக்கமாய்த் தொகுத்துக் கூறியுள்ள தற்போதைய ருஷ்ய, சர்வதேசிய நிலைமை இதுவே. முடிவில் கீழ்த்திசைத் தேசிய இனங்கள் குறித்து வளர்ந்து வரும் நிலைமையைப் பற்றிச் சிலவற்றைக் கூற அனுமதியளியுங்கள். கீழ்த்திசையின் பல்வேறு மக்களின் கம்யூனிஸ்டு நிறுவனங்கள், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் நீங்கள். ருஷ்ய போல்ஷிவிக்குகள் பழைய ஏகாதிபத்தியத்தில் உடைப்பை உண்டாக்குவதிலும், புரட்சிக்குப் புதிய பாதைகளை வகுக்கும் மிகமிகக் கடினமான, அதேபோதில் மிக மிகப் புனிதமான பணியைச் செய்வதிலும் வெற்றி ஈட்டியிருக்கிறார்கள் என்றால் கீழ்த்திசை உழைப்பாளி மக்களது பிரதிநிதிகளான உங்கள் முன்னால் இதனிலும் பெரிய, புதிய பணி ஒன்று இருக்கிறது என்று நான் சொல்ல வேண்டும். அனைத்துலகிலும் நடைபெறவிருக்கும் சோஷலிசப் புரட்சி ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கம் அதன் சொந்த நாட்டு முதலாளித்துவ வர்க்கத்தின் மீது பெறும் வெற்றியாய் இருப்பதோடு மட்டும் நின்று விடாது என்பது முற்றிலும் தெளிவாகி வருகிறது. புரட்சிகள் எளிதாகவும் விரைவாகவும் வருமாயின் அது சாத்தியமாயிருக்கும். ஏகாதிபத்தியவாதிகள் இதை அனுமதிக்க மாட்டார்கள், எல்லா நாடுகளும் தமது உள்நாட்டு போல்ஷிவிசத்துக்கு எதிராய் ஆயுதமேந்தி நிற்கின்றன, உள்நாட்டில் போல்ஷிவிசத்தைத்

தோற்கடிக்க வேண்டுமென்பதே அவற்றின் சிந்தனையெல்லாம் என்பது நமக்குத் தெரியும். எனவேதான் ஒவ்வொரு நாட்டிலும் உள்நாட்டுப் போர் ஒன்று மூண்டு வருகிறது. பழைய சோஷலிஸ்டு-சமரசவாதிகள் இந்தப் போரில் முதலாளித்துவ வர்க்கத்தினரின் தரப்பில் அணி திரட்டப்பட்டிருக்கின்றனர். ஆகவே சோஷலிஸ்டுப் புரட்சியானது முற்றிலுமோ பிரதானமாகவோ அந்தந்த நாட்டின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தினர் தமது முதலாளித்துவ வர்க்கத்தினரை எதிர்த்து நடத்தும் ஒரு போராட்டமாயிராது. இல்லை, ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்படும் எல்லாக் காலனிகளும் நாடுகளும், எல்லாச் சார்பு நாடுகளும் சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்தும் ஒரு போராட்டமாய் இருக்கும். கடந்த மார்ச் மாதத்தில் நாங்கள் ஏற்ற கட்சி வேலைத்திட்டத்தில் உலகச் சமூகப் புரட்சி நெருங்கி வருவது பற்றி குணநிர்ணயம் செய்கையில், முன்னேறிய எல்லா நாடுகளிலும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் சுரண்டலாளர்களுக்கும் எதிராய் உழைப்பாளி மக்கள் நடத்தும் உள்நாட்டுப் போர் சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய யுத்தத்துடன் இணையத் தொடங்குகிறது என்று கூறினோம். புரட்சியின் போக்கு இதை ஊர்ஜிதம் செய்திருக்கிறது; காலம் செல்லச் செல்ல மேலும் மேலும் இது ஊர்ஜிதம் செய்யப்படும். கிழக்கிலும் இது இப்படியேதான் இருக்கும்.

கீழ்த்திசை மக்கள் பெருந்திரள் புது வாழ்வில் சுயேச்சையாய்ப் பங்கு கொள்வோராய், அதன் நிறுவகர்களாய்க் கிளர்ந்தெழுவார்கள் என்பது நமக்குத் தெரியும். ஏனெனில் கோடானு கோடியான மக்கள் சார்பு நிலையிலுள்ள, முழு உரிமை பெருத தேசிய இனங்களைச் சேர்ந்தோராய் இருக்கிருர்கள். இதுகாறும் இவர்கள் ஏகாதிபத்தியத்தின் சர்வதேசக் கொள்கையின் இலக்குகளாகவே, முதலாளித்துவக் கலாசாரத்தையும் நாகரிகத்தையும் வளப்படுத்துவதற்கான உரமாகவே இருந்துள்ளனர். காலனிகள் மீதான தர்மகர்த்தா ஆட்சிவுரிமைக் கட்டளையை வினியோகிப்பது பற்றிப் பேசுகிருர்கள் என்ருல், சூறையாடும் உரிமையையும் கொள்ளைப் பொருளையும் பங்கிட்டுக் கொள்வதென்பதே—உலகின்

பெரும்பான்மை மக்களைச் சுரண்டிக்கொழுக்கும் உரிமையை அற்ப சொற்பச் சிறுபான்மையோருக்கு அளிப்பதென் பதே—அதன் பொருள் என்று நமக்கு நன்ருகத் தெரியும். இந்தப் பெரும்பான்மை மக்கள் சுயேச்சையான புரட்சிகர சக்தியாய் அமைய முடியாத காரணத்தால், அது வரை வரலாற்று முன்னேற்றத்தின் செயல் வரம்புக்கு முற்றிலும் அப்பாற்பட்டோராய் இருந்தவர்கள். இவர்கள் இது போன்ற செயலற்ற பாத்திரம் வகிப்பது இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் முடிவடைந்து விட்டதை நாம் அறிவோம். 1905ஐத் தொடர்ந்து துருக்கியிலும் பாரசீகத்திலும் சீனு விலும் புரட்சிகள் நடைபெற்றன என்பதும், இந்தியாவில் புரட்சிகர இயக்கம் வளர்ச்சியடைந்தது என்பதும் நமக்குத் தெரியும். ஏகாதிபத்தியப் போரும் இதே போல புரட்சி இயக் கத்தின் வளர்ச்சிக்குப் பங்காற்றியது. ஏனெனில், ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள் தமது போராட்டத்துக்கு முழுமை யான காலனிப் படைப் பிரிவுகளைத் திரட்டிக் கொள்ள வேண்டியிருந்தது. ஏகாதிபத்தியப் போர் கிழக்கு உலகை யும் தட்டி எழுப்பி, அதன் மக்களை சர்வதேச அரசியலுக் குள் இழுத்துக் கொண்டது. இங்கிலாந்தும் பிரான்சும் காலனி நாடுகளின் மக்களை ஆயுதம் தரிக்கச் செய்து, அவர் களுக்கு ராணுவ நுட்பமுறைகளிலும் நவீன இயந்திரங்களி லும் பரிச்சயம் ஏற்பட உதவின. இந்த அறிவை அவர்கள் ஏகாதிபத்தியக் கனவான்களுக்கு எதிராய் உபயோகித்துக் கொள்வார்கள். தற்போதையப் புரட்சியில் கிழக்கு உலகு விழிப்புற்று எழுந்த கால கட்டத்தைத் தொடர்ந்து, கீழ்த்திசை மக்கள் ஏனையோர் செல்வம் திரட்டுவதற்கான இலக்குகளாய் இருந்துவிடாமல், அனைத்து உலகின் எதிர் காலத்தையும் தீர்மானிப்பதில் பங்கெடுத்துக் கொள்ளும் கால கட்டம் வந்து கொண்டிருக்கிறது. கீழ்த்திசை மக்கள் நடைமுறைச் செயலின் அவசியத்தையும் மனிதகுலம் அனைத் தின் எதிர்காலத்தையும் உருவாக்குவதில் ஒவ்வொரு தேசமும் பங்கு கொள்வதன் அவசியத்தையும் உணர்ந்து வருகிருர்கள்.

எனவேதான், உலகப் புரட்சியின் வளர்ச்சி வரலாற்

றில்—இப்புரட்சியின் துவக்கத்தைக் கொண்டு பார்க்கையில் இது பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நடைபெறும், மிகுந்த முயற்சியைக் கோருவதாயிருக்கும் என்பது தெரிகிறது—இந்தப் புரட்சிகரப் போராட்டத்தில், புரட்சிகர இயக்கத்தில் நீங்கள் பெரிய பங்காற்ற வேண்டியிருக்கும், சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிரான எங்களுடைய போராட்டத்துடன் ஒன்றுசேர வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன். சர்வதேசப் புரட்சியில் நீங்கள் பங்கெடுத்துக் கொள்வதானது, ஒரு சிக்கலான, கடினமான பணியை உங்கள் முன்னே வைக்கும். இந்தப் பணி நிறைவேற்றப் படுவதானது நம் எல்லோரது பொது வெற்றிக்குரிய அடித்தளமாய் அமையும். ஏனெனில், முதன்முதலாய் இங்கு மக்களில் பெரும்பான்மையோர் சுயேச்சையாய்ச் செயல்பட முற்படுகின்றனர், சர்வதேச ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவதற்கான போராட்டத்தில் செயல் முனைப்புள்ள சக்தியாய்த் திகழ்வார்கள்.

கீழ்த்திசை மக்களில் மிகப் பெருவாரியானோர் ஐரோப்பாவின் மிகவும் பிற்பட்ட நாடான ருஷ்யாவைக் காட்டிலும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். ஆனால் நிலப்பிரபுத்துவ மீதமிச்சங்களுக்கும் முதலாளித்துவத்துக்கும் எதிரான எங்கள் போராட்டத்தில் நாங்கள் ருஷ்யாவின் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் ஒன்றுபடச் செய்வதில் வெற்றி பெற்றோம். மூலதனத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்து விவசாயிகளும் தொழிலாளர்களும் ஒன்றுபட்டதால்தான் எங்களுடைய வெற்றி அவ்வளவு சுலபமாய் இருந்தது. இங்கே கிழக்கு உலகின் மக்களுடனான தொடர்பு குறிப்பான முக்கியத்துவமுடையது. ஏனெனில் கீழ்த்திசை மக்களின் பெரும்பான்மையோர் உழைப்பாளி மக்களது மாதிரிப் பிரதிநிதிகளாவர்—முதலாளித்துவ ஆலைகள் மற்றும் தொழிற்சாலைகள் மூலமான பயிற்சிக்கு உள்ளாகிய தொழிலாளர்களல்ல அவர்கள், ஆனால் மத்திய காலத்திய ஒடுக்குமுறைக்குப் பலியான உழைப்போரும் சுரண்டப்படுவோருமான விவசாயப் பெருங்குடி மக்களின் மாதிரிப் பிரதிநிதிகள் அவர்கள். ருஷ்யப் புரட்சியானது, பாட்டாளிகள்

முதலாளித்துவத்தைத் தோற்கடித்த பின் கோடானு கோடியான உழைக்கும் விவசாயிகளாகிய மிகவும் சிதறுண்ட பெருந்திரளுடன் ஒன்றுபட்டு மத்திய காலத்திய ஒடுக்குமுறையை எப்படி வெற்றிகரமாய் எதிர்த்துக் கிளம்பினர் என்பதைக் காட்டிற்று. நமது சோவியத் குடியரசு இப்பொழுது விழித்தெழும் கீழ்த்திசை மக்கள் அனைவரையும் தன் பக்கத்தில் ஒன்றுதிரட்டி, அவர்களுடன் சேர்ந்து சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிராய்ப் போராட்டம் நடத்தியாக வேண்டும்.

இத்துறையில் உங்களை எதிர்நோக்கும் பணி உலகின் கம்யூனிஸ்டுகளை இதன் முன் எதிர்நோக்கி இராத ஒன்ருகும்: கம்யூனிசத்தின் பொதுத் தத்துவத்தையும் நடைமுறையையும் ஆதாரமாய்க் கொண்டு நீங்கள் ஐரோப்பிய நாடுகளில் இல்லாதவையான, பிரத்தியேகமான நிலைமைகளுக்கு உங்களைத் தகவமைத்துக் கொண்டாக வேண்டும்; அந்தத் தத்துவத்தையும் நடைமுறையையும் நீங்கள் பெருவாரியான மக்கள் விவசாயிகளாய் இருக்கும் நிலைமைகளுக்கு, மூலதனத்தை அல்ல, மத்திய காலத்திய மீதமிச்சங்களை எதிர்த்துப்போராட்டம் நடத்துவதே பணியாயுள்ள நிலைமைகளுக்கு ஏற்பச் செயல்படுத்திக் கொள்ளக் கூடியோராய் இருத்தல் வேண்டும். அது கடினமான, பிரத்தியேகமான பணி; ஆனல் மிகுந்த நன்றிக்குரிய பணி. ஏனெனில் போராட்டத்தில் இது வரை பங்கெடுத்துக் கொள்ளாத வெகுஜனங்கள் அதனுள் ஈர்க்கப்பட்டு வருகிருர்கள், மற்றும் கிழக்கில் கம்யூனிஸ்டுக் கோஷ்டிகளை நிறுவுவதானது மூன்ருவது அகிலத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்பினை உங்களுக்கு அளித்திடுகிறது. அனைத்து உலகின் முன்னிலைப் பாட்டாளிகள் பல சந்தர்ப்பங்களில் மத்திய காலத்திய நிலைமைகளில் வாழ்ந்திருக்கிற கீழ்த்திசை உழைப்பாளர்களும் சுரண்டப்படுவோருமான வெகுஜனங்களுடன் கூட்டணி கொள்வதற்கான பிரத்தியேக வடிவங்களை நீங்கள் கண்டறிந்து கொண்டாக வேண்டும். பெரிய அளவிலும் பெரிய நாடுகளிலும் நீங்கள் செய்யப் போவதை நாங்கள் எங்கள் நாட்டில் சிறிய அளவில் செய்திருக்கிருேம். உங்களுடைய இந்த இரண்டாவது பணியை நீங்கள் வெற்றி

கரமாய்ச் செய்திடுவீர்களென்று நம்புகிறேன். இங்குள்ள நீங்கள் பிரதிநிதிகளாயிருக்கும் கீழ்த்திசைக் கம்யூனிஸ்டு நிறுவனங்களின் பயனுய், நீங்கள் முன்னேறிய புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டு மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில் கம்யூனிஸ்டுப் பிரசாரம் நடைபெறும்படித் தொடர்ந்து செய்து வரும்படிப் பார்த்துக் கொள்வது உங்கள் கடமையாகும்.

உலகின் முன்னேறிய நாடுகள் அனைத்தின் பாட்டாளி வர்க்கத்தால் மட்டும்தான் இறுதி வெற்றி கிட்டும்படிச் செய்ய முடியும் என்பது கூறுமலே விளங்கும் ஒன்று. ருஷ்யர்களாகிய நாங்கள் இவ்வேலையைத் துவக்கி வைக்கிறேம். ஆங்கிலேய, பிரெஞ்சு அல்லது ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தினர்கள் இவ்வேலையை உறுதி பெறச் செய்வார்கள். ஆனல் ஒடுக்கப்பட்ட எல்லாக் காலனி மக்களின், முதன்மையாகவும் முக்கியமாகவும் கீழ்த்திசை உழைப்பாளி மக்களின் உதவி இல்லாமல், அவர்களால் வெற்றி பெற முடியாதென்பது தெரிகிறது. கம்யூனிசத்துக்கான மாற்றத்தினை முன்னணிப் படையினுல் மட்டும் சாதித்துவிட முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். உழைப்பாளி வெகு ஜனங்களை—அவர்கள் வந்தடைந்துள்ள வளர்ச்சி மட்டம் எதுவாயினும்—தட்டி எழுப்பிப் புரட்சிகரச் செயற்பாட்டிலும் சுயேச்சையான செயல்களிலும் நிறுவன ஒழுங்கமைப்பிலும் ஈடுபடச் செய்தல், அதிக அளவு முன்னேறிய நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்காக வகுக்கப்பட்ட மெய்யான கம்யூனிஸ்டுப் போதனையை ஒவ்வொரு நாட்டின் மக்களது மொழியிலும் பெயர்த்திடல், உடனடியாய்ச் செய்யப்பட வேண்டிய நடைமுறைப் பணிகளை நிறைவேற்றுதல், பிற நாடுகளின் பாட்டாளிகளுடன் ஒரு பொதுப் போராட்டத்தில் ஒன்றுசேர்தல் ஆகிய இவையே நம் முன்னுள்ள பணிகள்.

பிரச்சினைகள் இத்தகையனவே. இவற்றுக்கான தீர்வை எந்தக் கம்யூனிஸ்டுப் புத்தகத்திலும் காண்பதற்கில்லை. ஆனல் ருஷ்யா துவக்கியுள்ள பொதுப் போராட்டத்திலே

தான் இத்தீர்வை நீங்கள் காண்பீர்கள். உங்களுடைய சொந்த அனுபவத்தின் வாயிலாகவே நீங்கள் இப்பிரச்சினை களைச் சமாளித்துத் தீர்வு கண்டாக வேண்டும். அதில் ஒரு புறத்தில், பிற நாடுகளின் தொழிலாளி மக்கள் அனைவரது முன்னணிப் படையுடன் உள்ள நெருங்கிய கூட்டணியும், மறு புறத்தில், இங்கே நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் கீழ்த்திசை மக்கள் பால் சரியான அணுகு முறையைக் கண்டு கொள்வதற்குரிய உங்கள் வல்லமையும் உங் களுக்குத் துணை புரியும். நீங்கள் முதலாளித்துவத் தேசிய வாதத்தை உங்களுக்கு அடித்தளமாய்க் கொள்ள வேண்டி யிருக்கும். இந்த முதலாளித்துவத் தேசியவாதம் இம் மக்களிடையே விழிப்பூட்டி வருகிறது, விழிப்பூட்டியே ஆக வேண்டும். இது வரலாற்று வழிப்பட்ட நியாயமுடையதா கும். அதேபோதில் நீங்கள் ஒவ்வொரு நாட்டின் உழைப் பாளர்களும் ஒடுக்கப்பட்டவர்களுமான வெகுஜனங்களிடம் செல்வதற்கான உங்கள் வழியைக் கண்டு கொண்டாக வேண் டும்; சர்வதேசப் புரட்சியின் வெற்றிதான் அவர்கள் விடுதலை பெறுவதற்கான ஒரேயொரு நம்பிக்கைச் சுடராகும் என் பதையும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கம்தான் கீழ்த்திசை உழைப்பாளர்களும் சுரண்டப்பட்டோருமான கோடானு கோடியான மக்களுக்கு ஒரேயொரு கூட்டாளியாகும் என்பதையும் அவர்களுக்குப் புரியும்படியான மொழியில் சொல்லியாக வேண்டும்.

இதுவே உங்களை எதிர்நோக்கும் பிரம்மாண்டமான பணி. புரட்சிக்கும் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கும்—இது குறித்து ஐயப்பாட்டிற்கு இடமே இல்லை—உரிய சகாப் தத்தின் பயனாய் இந்தப் பணி கீழ்த்திசைக் கம்யூனிஸ்டு நிறுவனங்களது கூட்டு முயற்சிகளால் வெற்றிகரமாய்ச் செய்து முடிக்கப்பட்டு, சர்வதேச ஏகாதிபத்தியத்தின் மீதான முழுமையான வெற்றியினால் முடிசூட்டப் பெறும்.

ரு.க.க.(போ.)இன்
மத்தியக் கமிட்டியின்
இஸ்வேஸ்தியா, இதழ் *9*,
டிசம்பர் *20, 1919*

நூல் திரட்டு,
தொகுதி *39*,
பக்கங்கள் *318-331*

ரு.க.க.(போ.)இன் எட்டாவது அகில ருஷ்ய மாநாடு

டிசம்பர் 2—4, 1919

அயல்துறைக் கொள்கை பற்றிய நகல் தீர்மானம்

ருஷ்யாவின் சோஷலிஸ்டு சோவியத் கூட்டாட்சி குடியரசு எல்லா மக்களுடனும் சமாதானத்தோடு வாழவே விழைகிறது. உள்நாட்டு வளர்ச்சிக்காக அதன் முயற்சிகள் அனைத்தையும் ஈடுபடுத்தியுள்ளது. இதன் மூலம் சோவியத் அமைப்புமுறையின் அடிப்படையின் மீது உற்பத்தி, போக்குவரத்து மற்றும் சமூக நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி வைக்க விரும்புகிறது. அன்டான்டு நாடுகளின் தலையீடும் பட்டினி போடும் முற்றுகைநிலையும் இவை நடைபெறவிடாமல் இது வரை தடை செய்து வந்துள்ளன.

தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம் அன்டான்டு நாடுகளிடம் மீண்டும் மீண்டும் சமாதான யோசனைகளை முன்வைத்திருக்கிறது: 1918 ஆகஸ்ட் 5ந் தேதி அமெரிக்கப் பிரதிநிதி திரு. பூல் இடம் அயல்துறை விவகார மக்கள் கமிசாரகம் அனுப்பிவைத்த செய்தி, 1918 அக்டோபர் 24ல் ஜனதிபதி வில்சனுக்கு அனுப்பிவைத்த செய்தி, எல்லா அன்டான்டு நாடுகளின் அரசாங்கங்களுக்கும் 1918 நவம்பர் 3ந் தேதி நடுநிலைமை நாடுகளின் பிரதிநிதிகள் மூலமாக அனுப்பிவைத்த செய்தி, 1918 நவம்பர் 7ந் தேதி சோவியத்துக்களின் ஆறாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் விடுத்த செய்தி, 1918 டிசம்பர் 23ல் ஸ்டாக்ஹோமில் எல்லா அன்டான்டு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட லித்வீனவின் குறிப்பு, பின்னர் 1919 ஜனவரி 12, ஜனவரி 17ல் அனுப்பிவைத்த செய்திகள் மற்றும் பிப்ரவரி 4ந் தேதி அன்டான்டு நாடுகளின் அரசாங்கங்களுக்கு அனுப்பிவைத்த குறிப்பு, புல்லிட்டுடன் 1919 மார்ச் 12ல்

கூட்டாக வரையப்பட்ட நகல் உடன்படிக்கை மற்றும் 1919 மே 7ந் தேதி நான்சன் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கை.

மக்கள் கமிசார்களின் கவுன்சிலும் அயல்துறை விவகார மக்கள் கமிசாரகமும் எடுத்துள்ள இந்தப் பல நடவடிக்கைகளையும் சோவியத்துக்களின் ஏழாவது காங்கிரஸ் முழுமையாக அங்கீகரிக்கிறது; சமாதானத்திற்கான தனது நிரந்தர விழைவினை மீண்டும் ஒரு முறை ஊர்ஜிதம் செய்கிறது; மற்றும் அன்டான்டு நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள், இத்தாலி, ஜப்பான் ஆகியவற்றுக்கு தனித்தனியாகவும் கூட்டாகவும் சமாதானம் பற்றிய பேச்சுவார்த்தைகளை உடனே தொடங்கும்படி மறுபடியும் யோசனை கூறுகிறது. இந்த சமாதானக் கொள்கையை முறையாகத் தொடர்ந்து அனுசரிக்கும்படி (அல்லது: இந்த சமாதானக் கொள்கையை முறையாகத் தொடர்ந்து அனுசரிக்கும்படியும், இதன் வெற்றியை உறுதிப்படுத்த தக்கதான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படியும்) அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, மக்கள் கமிசார்களின் கவுன்சில் மற்றும் அயல்துறை விவகார மக்கள் கமிசாரகம் ஆகியவற்றுக்கு காங்கிரஸ் நெறிமுறை வழங்குகிறது.

டிசம்பர் 2, 1919 எழுதப்பட்டது

வி. இ. லெனின், நூல்கள்,
தொகுதி 24ல்,
இரண்டாவது மற்றும் மூன்றாவது
ருஷ்யப் பதிப்புகளில், 1932ல்
முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 366-369

விவசாயக் கம்யூன்கள் மற்றும் விவசாய ஆர்ட்டல்களின் முதலாவது காங்கிரசில் ஆற்றிய உரை[12]

டிசம்பர் 4, 1919

தோழர்களே! உங்களது விவசாயக் கம்யூன்கள் மற்றும் விவசாய ஆர்ட்டல்களின் முதலாவது காங்கிரசுக்கு அரசாங்கத்தின் சார்பில் மிகுந்த மகிழ்ச்சியுடன் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறிய, தனிப்பட்ட விவசாயப் பண்ணை பொதுவான, கூட்டு முறை அல்லது ஆர்ட்டல் பாணி பண்ணை முறையாக மாறுவதையும், படிப்படியாக அவ்வாறு மாற்றமடைய உதவுவதையும் நோக்கமாக கொண்டதான கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் பொதுவான எல்லா நிறுவனங்களுக்கும் நாம் எவ்வளவு பிரம்மாண்டமான முக்கியத்துவம் அளித்து வருகிறோம் என்பதை சோவியத் அரசாங்கத்தின் எல்லாச் செயல்பாடுகளில் இருந்தும் நீங்கள் அறிவீர்கள் என்பது திண்ணம். இந்த வகையான முயற்சிகளுக்கு உதவுவதற்காக நீண்ட காலம் முன்பே சோவியத் ஆட்சியதிகாரம் நூறு கோடி ரூபிள் தொகையை ஒதுக்கியது[13] என்பதையும் நீங்கள் அறிவீர்கள். ''நிலம் சம்பந்தப்பட்டதான சோஷலிஸ்டு நடவடிக்கைகள் மீதான நிரந்தரச் சட்டம்''[14] கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் நிலத்தைக் கூட்டாக சாகுபடி செய்வதற்கான எல்லா நிறுவனங்களதும் உட்பொருளைக் குறிப்பாக வலியுறுத்துகிறது. மற்றும் இந்தச் சட்டம் வெறும் காகித அளவில் மட்டும் இல்லாமல், அது என்ன அனுகூலங்களை உண்டாக்க உத்தேசித்திருந்ததோ, அந்த அனுகூலங்களை மெய்யாகவே உண்டாக்குவதை உத்தரவாதம் செய்ய சோவியத் ஆட்சியதிகாரம் சகல முயற்சிகளையும் செய்து வருகிறது.

இந்த வகையான எல்லா நிறுவனங்களின் முக்கியத்துவ

மும் பிரம்மாண்டமானது. காரணம் பழைய மோசமான, வறுமைப்பட்டதான விவசாயி சாகுபடிமுறை மாறுமல் நீடிக்குமானல் ஓர் உறுதியான சோஷலிஸ்டுச் சமுதாயத்தைக் கட்டுவது என்பது இயலாத காரியம். நிலத்தில் பொதுவான, கூட்டு முறையிலான, கூட்டுறவுச் சங்கம், ஆர்ட்டல் வழி சாகுபடி முறையின் சாதகங்களை விவசாயிகளுக்கு நடைமுறையில் நிரூபித்துக் காட்டுவதில் வெற்றி பெறும் பட்சத்தில் மட்டுமே, கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஆர்ட்டல் முறை சாகுபடி மூலம் விவசாயிகளுக்கு உதவுவதில் நாம் வெற்றியடையும் பட்சத்தில் மட்டுமே, அரசு அதிகாரத்தை நிர்வகித்து வரும் தொழிலாளி வர்க்கம் தனது கொள்கை சரியானது என்பதை விவசாயிகளுக்கு உண்மையாகவே மெய்ப்பித்துக் காட்டி, அதன் மூலம் லட்சக்கணக்கான விவசாயிகளின் உண்மையான மற்றும் நிலையான ஆதரவைப் பெற முடியும். எனவே சாகுபடியில் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஆர்ட்டல் வடிவங்களை ஊக்குவிக்கும் உத்தேசத்துடனை ஒவ்வொரு நடவடிக்கையின் முக்கியத்துவத்தையும் மிகைபடக் கூறுவது சாத்தியமல்ல. நமது நாட்டில் லட்சக்கணக்கான தனிப்பட்டோர் பண்ணைகள் உள்ளன. அவை தொலைவிலான நாட்டுப்புற மாவட்டங்கள் முழுதிலும் பரவலாயும் துண்டு துண்டாயும் கிடக்கின்றன. ஒரு உத்தரவு போடுவது மூலமோ, வெளியில் இருந்து நிர்ப்பந்தம் கொண்டு வருவது மூலமோ, இந்தப் பண்ணைகளுக்குத் துரிதமான முறையில் மறு வடிவம் தர முயல்வது முற்றும் அபத்தமானது. லட்சக்கணக்கான சிறுவிவசாயிப் பண்ணைகள் மீது படிப்படியாகவும், எச்சரிக்கையுடனும் மட்டுமே, வெற்றிகரமான நடைமுறை உதாரணம் மூலம் மட்டுமே செல்வாக்குச் செலுத்த முடியும் என்பதை நாம் முழுமையாக உணர்கிறோம். ஏனெனில் விவசாயிகள் மிகமிகக் காரிய நோக்குடையவர்கள், வெறும் ஆலோசனை அல்லது ஏட்டறிவு அடிப்படையில் மட்டுமே எந்த ஒரு முக்கியமான மாற்றத்தையும் ஏற்பதற்கு இசையாமல் பழைய சாகுபடி முறைகளை மிகமிகப் பிடிவாதமாகப் பற்றி நிற்பவர்கள். அது சாத்தியமல்ல, மற்றும் அபத்தமானதும் ஆகும். கூட்டுறவுச் சங்கம்

மற்றும் ஆர்ட்டல் வடிவிலான சாகுபடி முறைக்கு மாறிச் செல்வது அத்தியாவசியமானது, சாத்தியமானது என்பதை நடைமுறையிலும், விவசாயிகள் புரிந்து கொள்ளக் கூடிய தான அனுபவம் மூலமும் நிரூபிக்கப்பட்டதற்குப் பிறகு மட்டுமே, நாம் இந்த விரிந்து பரந்த விவசாய நாடான ருஷ்யாவில் சோஷலிஸ்டு விவசாயத்தை நோக்கிய ஒரு முக்கியமான அடி எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல உரிமையுடையவர்களாவோம். இதன் பின் விளைவாக, கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரித்தான பரந்த முக்கியத்துவம் உங்கள் எல்லோர் மீதும் விழுகிறது, பிரம்மாண்டமான அரசு மற்றும் சோஷலிஸ்டுக் கடப்பாடு ஆகிறது. மேலும், இந்த விஷயத்தை விசேஷக் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் கருதிப்பார்க்க வேண்டுவது சோவியத் ஆட்சியதிகாரத்துக்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் இயல்பாகவே அவசர அவசியமாகிறது.

எல்லா கூட்டுறவு, ஆர்ட்டல் விவசாய நிறுவனங்களும் சுற்றுமுள்ள விவசாயி மக்களிடம் இருந்து தனிப்படவோ, பிரிந்து செல்லவோ கூடாது எனவும் மாறாக அவர்களுக்கு உதவி புரிய வேண்டுவது அவற்றின் முழுமுதற் கடமை என்றும் நாம் கருதுவதாக நிலம் குறித்த சோஷலிஸ்டு நடவடிக்கைகள் மீதான நமது சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. இது சட்டத்தில் வரையப்பட்டுள்ளது; எல்லா கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுவான விதிகளில் மறுபகர்ப்பு செய்யப்பட்டுள்ளது; நமது விவசாயத்துறை மக்கள் கமிசாரகம் மற்றும் எல்லா சோவியத் ஆட்சியதிகார உறுப்பமைப்புகளின் நெறிமுறைகள் மற்றும் தீர்ப்புகளில் இடையறாது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதைச் செயல்படுத்துவதற்கான மெய்யான ஒரு நடைமுறை சார்ந்த வழிமுறையைக் கண்டுபிடிப்பது என்பதே இங்கு முழுமையான காரியம். இந்த அடிப்படையான இடர்ப்பாட்டை நாம் வென்று சமாளித்து விட்டோம் என்று இன்னும் நான் திடமாக நம்பவில்லை. ருஷ்யாவின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் வந்துள்ள பொதுவான விவசாயத்தில் ஈடுபட்ட செயல் பாங்குள்ள ஊழியர்கள் தமது

அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பு நல்கியுள்ள உங்களது காங்கிரஸ் எல்லா சந்தேகங்களுக்கும் முடிவு கட்ட வேண்டும்; மற்றும் ஆர்ட்டல்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கம்யூன்களையும், பொதுவான மற்றும் கூட்டு முறை யிலான விவசாயத்தின் எல்லா வடிவிலுமான நிறுவனங்களையும் கெட்டிப்படுத்தும் பணியினை நாம் கற்றுக் கரை கண்டுவரு கிறோம், நடைமுறையில் கற்றுக் கரை காணத் தொடங்கி யுள்ளோம் என்பதை நிரூபிக்க வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். ஆனால் இதை நிரூபிப்பதற்கு உண்மை யிலேயே நடைமுறைப் பலன்கள் தேவை.

விவசாயக் கம்யூன்களின் விதிகளையோ, இந்த விஷயம் பற்றி விளக்கும் புத்தகங்களையோ நாம் படிக்கும் போது, அவற்றில் நாம் கம்யூன்களை ஒழுங்கமைப்பதன் அவசியம் குறித்த பிரசாரத்துக்கும் அதை தத்துவார்த்த முறையில் நியாயப்படுத்தவும் அதிகமான இடம் ஒதுக்குவது போலத் தோன்றலாம். அது அவசியம் என்பது திண்ணம். ஏனெனில் விவரமான பிரசாரம் இல்லாமல், கூட்டுறவு விவசாயத்தின் சாதகங்களை விளக்கிக் கூறுமல், இந்தக் கருத்தை ஆயிரம் ஆயிரம் தடவைகள் திரும்பத் திரும்பக் கூறுமல், விவசாயி களின் விரிவான திரள் இதில் அக்கறை கொள்வார்கள் மற்றும் இதனைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பற்றிய நடைமுறை சோதனைகளை மேற்கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. பிரசாரம் அவசியம் என்பது திண்ணம். திரும்பக் கூறுவது பற்றி அஞ்சத் தேவையில்லை. ஏனெனில் நமக்குத் திரும்பக் கூறல் என்று தோற்றமளிப்பது, நூறு ஆயிரக் கணக்கான விவசாயிகளுக்குத் திரும்பக் கூறல் அன்று, மாறாக முதல் தடவையாக வெளிப்படுத்தப்பட்ட உண்மையேயாகும். நாங்கள் பிரசாரத்தில் மிக அதிகக் கவனம் செலுத்தி வருவதாக நாங்கள் கருதலாம், ஆனால் இதை விட இன்னும் நூறு மடங்கு அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கட்டாயம் கூறியாக வேண்டும். இதை நான் சொல்லும் போது, நான் கொள்ளும் அர்த்தம், விவ சாயிகளிடம் விவசாயக் கம்யூன்களை ஒழுங்கமைப்பதன் சாதகங்களைப் பொதுவாக விளக்கி, அதே சமயம், கூட்டுறவுச்

சங்கம் மற்றும் ஆர்ட்டல் பண்ணைகளால் அவர்களுக்குக் கிட்டப்போகும் நடைமுறை சாதகங்களை உண்மையில் எடுத்துக் காட்ட இயலாத பட்சம், அவர்களுக்கு நமது பிர சாரத்தில் எள்ளளவும் நம்பிக்கை இருக்காது என்பதாகும்.

சுற்றுப் புறத்தில் வாழும் விவசாயி மக்களுக்கு கம்யூன் கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் உதவி புரிய வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. ஆனல் அரசு, தொழிலாளர் ஆட்சியதிகாரம் விவசாயக் கம்யூன்களுக்கும் ஆர்ட்டல்களுக்கும் உதவும் நோக்கத்துடன் நூறு கோடி ரூபிள் நிதி வழங்குகிறது. இந்த நிதியில் இருந்து எந்தக் கம்யூனவது விவசாயிகளுக்கு உதவுமானல் இது விவசாயி கள் மத்தியில் ஏளனத்தை மட்டுமே எழுப்புவதாக இருக் கும் என நான் அஞ்சுகிறேன். அது முற்றிலும் நியாயமாகவே இருக்கும். ''நூறு கோடி ரூபிள் நிதி உங்களுக்குக் கிடைக் கிறதென்ருல், அதில் ஒரு சிறிதை எங்கள் பக்கம் வீசுவது உங்களுக்கு ஒரு பொருட்டல்ல என்பது சொல்லாமலே விளங்கும்'' என்று ஒவ்வொரு விவசாயியும் கூறுவான். விவசாயி சிரித்து இகழ்வான் என்று நினைக்கிறேன். ஏனெனில் அவன் இந்த விஷயத்தில் கணிசமான அக்கறை கொண்டிருக் கிருன், இதைப் பற்றி மிகவும் அவநம்பிக்கை கொண்டு இருக்கிருன். நூற்ருண்டுகள் காலமாக அரசு அதிகாரத் திடம் இருந்து ஒடுக்குமுறையினை மட்டுமே எதிர்பார்த்து வழக்கப்பட்டிருக்கிருன் விவசாயி. எனவே அரசு கஜானு விடம் இருந்து வரும் எதையும் சந்தேகத்தோடு பார்ப்பது அவனுக்குப் பழக்கமாகி விட்டது. சட்டத்தினை சொல் லுக்குச் சொல் நிறைவு செய்வதற்காக மட்டும் விவசாயக் கம்யூன்கள் விவ்சாயிகளுக்கு உதவி வழங்கும் பட்சத்தில், அத்தகைய உதவி பயனற்றது மட்டுமல்ல, தீங்கு விளைப்பது மாகும். ஏனெனில் ''விவசாயக் கம்யூன்'' என்பது மகத் தான பெயர்; அது கம்யூனிசம் எனும் கருத்தோட்டத்துடன் இணைத்து எண்ணப்படுவது. விவ்சாயிகள் பயிர்த்தொழிலின் மேம்பாட்டிற்காகத் தாம் உண்மையில் காரிய நோக் குடன் பாடுபடுவதாக கம்யூன்கள் நடைமுறையில் காட்டு மானல் அது மிகவும் நல்ல விஷயம். அது சந்தேகமின்றி

கம்யூனிஸ்டுகளின், கம்யூனிஸ்டுக் கட்சியின் மதிப்பை உயர்த்துவதாக இருக்கும். ஆனல் விவசாயிகள் மத்தியில் எதிர்மறையான ஒரு போக்கினைத் தூண்டி விடுவதில் மட்டுமே கம்யூன்கள் வெற்றி கண்டிருப்பதும், மற்றும் சில வேளை, ''கம்யூன்'' எனும் சொல் கம்யூனிசத்தை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு அறைகூவல் ஆகி விட்டதும் அடிக்கடி நேர்ந்துள்ள சம்பவங்களாகும். விவசாயிகளை வலுவந்தமாகக் கம்யூன்களுக்குள் சேரும்படி விரட்ட அசட்டுத் தனமான முயற்சிகள் செய்யப்பட்ட போது மாத்திரம் இவை நிகழ வில்லை. இதன் அபத்தத் தன்மை கண்கூடாக இருந்தபடியால், சோவியத் ஆட்சியதிகாரம் இதை நீண்ட கால முன்பே தடை செய்து விட்டது. இப்போது இத்தகைய கட்டாயப் படுத்தும் தனிப்பட்ட உதாரணங்கள் காணப்படுமானல், அவை மிகவும் சொற்பமாகவே இருக்கும் எனவும், நீங்கள் இந்தக் காங்கிரசைப் பயன்படுத்திக் கொண்டு இந்த அட்டூழியத்தின் கடைசி அடையாளங்கூட சோவியத் குடியரசின் பரப்பில் இருந்து துடைத்தெறியப்படும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும், கம்யூனில் உறுப்பினராவது ஏதாவது ஒருவகையில் வலுவந்தப்படுத்தலுடன் தொடர் புடையது எனும் பழைய கருத்துக்கு ஆதரவாக அண்டை அயல் விவசாயி மக்கள் ஒரு சம்பவத்தைக்கூடச் சுட்டிக் காட்ட முடியாதபடிச் செய்து விடுவீர்கள் எனவும் நான் எதிர்பார்க்கிறேன்.

நாம் இந்தப் பழைய குறைபாட்டை அகற்றி, இந்த அட்டூழியத்தை முழுமையாக அடக்கிய போதிலும்கூட, நாம் செய்ய வேண்டி இருக்கும் பணியில் இது இன்னமும் ஒரு சிறு பகுதியாகவே இருக்கும். ஏனெனில், கம்யூன்களுக்கு அரசு உதவி புரிவது இன்னும் தேவையாக இருக்கும். மற்றும் எல்லா வகையான கூட்டு முறையிலான விவசாய நிறுவனங்களுக்கும் நாம் அரசு உதவி வழங்காவிடில், நாம் கம்யூனிஸ்டுகளாகவோ, சோஷலிஸ்டுப் பொருளாதாரத்தின் தீவிர ஆதரவாளர்களாகவோ இருக்க முடியாது. இது நமது குறிக்கோள்கள் அனைத்துக்கும் பொருத்தமாக இருப்பதால் நாம் அவ்வாறு செய்ய வேண்டும். காரணம் இந்தக்

கூட்டுறவுச் சங்கங்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டு முறை நிறுவனங்கள் புதுப்புனைவுகள் என்பதையும், இவற்றுக்கு ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தொழிலாளி வர்க்கம் ஆதரவு தராவிடில் இவை வேரூன்ற முடியாது என்பதையும் நாம் முற்றும் நன்ருக அறிவோம். அவை நன்கு வேரூன்றும் பொருட்டும், அரசு அவற்றுக்கு நிதி மற்றும் இதரவகையான எல்லா ஆதரவும் தருவதன் காரணமாயும் அவை விவசாயிகளின் இடையே ஏளனத்தை எழுப்பாதபடிப் பார்த்துக் கொள்ள வேண்டும். விவசாயி, கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் அரசை அண்டி வாழ்பவர்கள் எனவும் அவர்கள் தனிச்சலுகைகள் பெறுவதால் மட்டுமே விவசாயிகளிடமிருந்து வேறுபடுகிருர்கள் எனவும் கூற இடமளியாதபடி நாம் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். நாம் நிலமும், கட்டிடங்கள் கட்டுவதற்கு உதவிப் பணமும் இந்த நூறு கோடி ரூபிள் நிதியில் இருந்து தருவோமாஞல், எந்த ஒரு முடனுங்கூட சாமான்ய விவசாயியை விட மேம்பட்டு வாழ்வான் என்பது திண்ணம். இதில் கம்யூனிஸ்டுத் தன்மை எங்கு இருக்கிறது, மேம்பாடு எங்கே இருக்கிறது? நாம் ஏன் இதை மதிக்க வேண்டும்? என்று விவசாயி கேட்பான். ஒரு சில பதின்மர் அல்லது சில நூறு தனிநபர்களைப் பொறுக்கி எடுத்து அவர்களுக்கு நூறு கோடி கொடுத்தீர்களாஞல், அவர்கள் திண்ணமாயும் வேலை செய்வார்கள்.

விவசாயிகள் மத்தியில் இத்தகைய போக்கு எழுவது மிகவும் அஞ்சத்தக்கது. இது குறித்து காங்கிரசில் கூடியுள்ள தோழர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். இந்தப் பிரச்சினைக்கு நடைமுறையில் தீர்வு காணுதல் வேண்டும். அப்போதுதான் நாம் இந்த அபாயத்தைத் தவிர்த்து விடுவது மட்டுமன்றி, விவசாயி இந்த வழியில் சிந்திப்பதற்கு இட்டுச் செல்லப்படாமல், இதற்கு மாருக அவன் ஒவ்வொரு கம்யூனும் ஆர்ட்டலும் அரசு உதவியளித்து வரும் அமைப்புகள் என்று காணவும், பழைய முறைகளை விடவும் சாதகமான புதிய சாகுபடி முறைகளை அவற்றில் காணவும், இவற்றை புத்தகங்கள் மற்றும் பிரசங்கங்களில் அன்றி (இவற்ருல்

அவ்வளவு பயன் இல்லை) நடைமுறை அனுபவத்தில் காணவும், அதற்காகப் போராடவும் உரிய சாதனங்களையும் கண்டு விட்டோம் என்று நாம் கூற முடியும். இதனால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மிகவும் கடினமாக இருக்கிறது. இதனால்தான், வெறும் வறட்டுப் புள்ளிவிவரங்கள் மட்டுமே நம்முன் இருக்கும் நிலையில், ஒவ்வொரு கம்யூனும் ஒவ்வொரு ஆர்ட்டலும் பழைய அமைப்பின் நிறுவனங்களைக் காட்டிலும் உண்மையிலேயே மேலானவை என்பதையும், தொழிலாளர் ஆட்சியதிகாரம் இங்கு விவசாயிகளுக்கு உதவி செய்கிறது என்பதையும் நாம் நடைமுறையில் நிருபித்துக் காட்டியுள்ளோமா என்பதை நிர்ணயிப்பது மிகவும் கடினமாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினைக்கு நடைமுறைத் தீர்வு காண்பதற்கு அண்டையில் இருக்கும் பல கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய நேரடிப் பரிச்சயம் பெற்றுள்ள நீங்கள் மெய்யான காரிய சாத்தியமான வழிமுறைகளை வகுப்பது மிகவும் விரும்பத்தக்கதாகும் என்று நான் நினைக்கிறேன். இந்த வழிமுறைகள் சுற்றும் வாழும் மக்களுக்கு விவசாயக் கம்யூன்கள் உதவி அளிக்க வேண்டும் என்று கோரும் சட்டம் அமுலாக்கப்படுவதைச் சோதித்துப் பார்க்க உதவும். சோஷலிஸ்டுச் சாகுபடி முறைக்கான இடைமாற்றம் எந்த வழியில் செயல்படுத்தப்படுகிறது, ஒவ்வொரு கம்யூன், ஆர்ட்டல் மற்றும் கூட்டுறவுச் சங்கத்தில் இது எடுக்கும் ஸ்தூலமான வடிவம் என்ன, இது எவ்வாறு உண்மையில் செயல்படுத்தப்படும், இதனை எத்தனை கூட்டுறவுச் சங்கங்களும் கம்யூன்களும் உண்மையில் செயல்படுத்துகின்றன, அவ்வாறு செய்ய ஆயத்தம் மட்டுமே செய்து வருபவை எத்தனை, கம்யூன்கள் உதவி வழங்கியுள்ள சம்பவங்கள் எத்தனை, இந்த உதவிகளின் தன்மை என்ன—இரக்கத் தன்மையா, அல்லது சோஷலிஸ்டுத் தன்மையா என்பவற்றையும் சோதித்துப் பார்க்க இந்த வழிமுறைகள் உதவும்.

அரசு தமக்குத் தரும் உதவி நிதியில் இருந்து கம்யூன்களும் ஆர்ட்டல்களும் ஒரு பங்கை விவசாயிகளுக்கு ஒதுக்கு

மானல், ஒவ்வொரு விவசாயியும் கருணை உள்ளம் கொண்ட நபர்கள் தனக்கு உதவுகிறார்கள் என்று மட்டுமே நம்பு வதற்கு இது முகாந்தரமாக இருக்குமே தவிர, சோஷ லிஸ்டு அமைப்புக்கு மாறிச் செல்வதற்கான நிரூபணமாக எவ்வகையிலும் இராது. இத்தகைய ''கருணை உள்ளம் படைத்த நபர்களை'' விவசாயிகள் காலகாலமாகச் சமுசயத் துடன் பார்த்தே வழக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் புதிய சமுதாய அமைப்பு எந்த வழியில் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறது என்பதும் நிலத்தைக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஆர்ட்டல் முறையில் சாகுபடி செய்வது எப்படி தனிப்பட்ட விவசாயி சாகுபடியை விடவும் சிறந்தது, அரசு உதவியால் மட்டுந்தான் இது சிறந்தது என்பதால் அல்ல என்பவற்றை விவசாயிகளுக்கு எந்த முறைகளில் நிரூபித்துக் காட்டப்படுகிறது என்பதும் குறித்து எப்படிச் சரிபார்ப்பது என்பதை நாம் அறிந்திருக்க வேண் டும். அரசு உதவி இல்லாமலுங்கூட இந்தப் புதிய அமைப்பு நடைமுறையில் நிறைவேற்றப்படும் என்பதை விவசாயி களுக்கு எடுத்துக் காட்ட இயல வேண்டும்.

துரதிருஷ்டவசமாக, உங்களது காங்கிரஸ் முடிவடை யும் வரையில் நான் இங்கு இருக்க இயலாது. எனவே இந்தக் கண்காணிப்பு முறைகளை விரிவிளக்கம் செய்வதில் பங்குபற்ற இயலாது. ஆனால் நமது விவசாயத்துறை மக்கள் கமிசாரகத்துக்குப் பொறுப்பாக இருக்கும் தோழர்களின் உதவியுடன் இந்த முறைகளைக் கண்டு அறிந்து கொள்வதில் நீங்கள் வெற்றியடைவீர்கள் என்பது திண்ணம். விவசாயத் துறை மக்கள் கமிசார் தோழர் செரிதா எழுதிய ஒரு கட்டுரையை மிகுந்த மனநிறைவுடன் நான் படித்தேன். அதில் அவர் கம்யூன்களும் கூட்டுறவுச் சங்கங்களும் சுற்றும் வாழும் விவசாயிகளிடம் இருந்து தனிப்பட்டு நிற்கக் கூடாது, ஆனால் அவர்களின் பண்ணைகளை மேம்படுத்தப் பாடுபட வேண்டும் என்று வற்புறுத்துகிறார். அது ஒரு மாடலாக உதவ வேண் டும், அண்டையில் வாழும் விவசாயிகள் அதனால் கவரப் பட வேண்டும் எனும் நோக்கத்திற்காகவே ஒரு கம்யூன் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். பொருள்களின் பற்றாக்குறை

மற்றும் பொதுவான பொருளாதாரக் குழப்பம் எனும் சங்கடமான நிலைமைகளின் கீழ் தமது பண்ணைகளை நிர்வகித்து வரும் மக்களுக்கு எவ்வாறு உதவுவது என்பதற்கு ஒரு காரிய சாத்தியமான உதாரணத்தை வகுத்தளிக்க இயல வேண்டும். இதைச் செயல்படுத்துவதற்கான காரியகரமான முறைகளை வரையறுக்கும் பொருட்டு, மிகவும் விவரமான நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். அவை, அண்டையில் வாழும் விவசாயிகளுக்கு உதவும் எல்லா வடிவங்களையும் எடுத்துரைக்க வேண்டும். இந்த நெறிமுறைகள், விவசாயிகளுக்கு உதவ அவை என்ன செய்தன என்பதை ஒவ்வொரு கம்யூனும் எடுத்து விளக்கும்படிக் கோர வேண்டும். தற்போது நிலவும் இரண்டாயிரம் கம்யூன்களிலும் கிட்டத்தட்ட நாலாயிரம் ஆர்ட்டல்களிலும் ஒவ்வொன்றும், சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் ஒரு வடிவம் என்ற முறையில் கூட்டுப் பண்ணை என்பது விவசாயிகளுக்கு அனுகூலமான ஒன்று, ஒரு குழம்பிய மனதின் சபல எண்ணமோ அல்லது வெறிப்பிதற்றலோ அல்ல எனும் வகையில் விவசாயியின் திடநம்பிக்கையை உண்மையில் வலுப்படுத்தும் ஆற்றலுள்ள ஒரு கருமையம் ஆவதற்குரிய வழிமுறைகளையும் இந்நெறிமுறைகள் சுட்டிக் காட்ட வேண்டும்.

கம்யூன்கள் சுற்றும் வாழும் விவசாயி மக்களுக்கு உதவி வழங்க வேண்டும் என்று சட்டம் கோருகிறது என்பதை நான் ஏற்கெனவே கூறினேன். சட்டத்தில் நாம் வேறு மாதிரியாகக் கூறுவதோ, அல்லது அதில் ஏதேனும் நடைமுறை நெறிமுறைகளை வழங்குவதோ முடியாது. பொதுவான கோட்பாடுகளை நிலைநாட்டுவதும், வட்டாரங்களில் இருக்கும் அரசியல் உணர்வுடைய தோழர்கள் இச்சட்டத்தை இம்மியும் பிழையாது பயன்படுத்தி ஒவ்வொரு வட்டாரத்தின் சம்பந்தப்பட்ட ஸ்தூலமான பொருளாதார நிலைமைகளில் அதை நடைமுறையில் பிரயோகிப்பதற்கான ஆயிரம் வழிகளைக் காண இயலும்படிச் செய்வதுமே நமது வேலை. ஆனால் ஒவ்வொரு சட்டத்தையும், அதை அனுசரிப்பது போன்று வேடமிட்டே தட்டிக்கழிக்க முடியும் என்பது நிச்சயம். எனவே, விவசாயிகளுக்கு உதவிடும் சட்டம் இம்மி

யும் பிழையாது பயன்படுத்தப்படவில்லையானல், அது வெறும் விளையாட்டாகி விடலாம், உத்தேசித்த விளைவுகளுக்கு முற்றிலும் நேர்மாருன விளைவுகளுக்கு இட்டுச் செல்லலாம்.

அவற்றுடனுன தொடர்பு மூலமும், அவை தரும் பொருளாதார உதவி மூலமும் விவசாயி சாகுபடி நிலைமைகள் மாறத் தொடங்கும் அத்தகைய ஒரு வழியில் கம்யூன்கள் அபிவிருத்தி அடைய வேண்டும். ஒவ்வொரு கம்யூனும் ஆர்ட்டலும் கூட்டுறவுச் சங்கமும் இந்த நிலைமைகளில் மேம்பாடு செய்யத் தொடங்கி, இந்த மாறுதல் அவர்களுக்கு அனுகூலமானதே என்று நடைமுறையில் விவ்சாயிகளுக்கு நிருபித்துக் காட்டி, இம்மாறுதலை உண்மையில் செயல்படுத்திட முடியும் வழியில் கம்யூன்களும் வளர்ச்சி அடைய வேண்டும்.

விவசாயத்தை மேம்படுத்துவதற்கு நாலாண்டு கால ஏகாதிபத்தியப் போராலும் ஏகாதிபத்தியவாதிகளால் நம் மீது திணிக்கப்பட்ட இரண்டாண்டு கால உள்நாட்டுப் போராலும் ஏற்படுத்தப்பட்ட இன்றைய பொருளாதாரக் குழப்பத்தில் இருந்து வேறுபட்டதான நிலைமைகள் அவசியம் என்று நம்மிடம் கூறப்படும் என்று இயல்பாகவே நீங்கள் கருதலாம். இப்போது நமது நாட்டில் நிலவும் இத்தகைய நிலைமைகளில் விவசாயத்தில் பரந்து விரிந்த மேம்பாடு எதையேனும் பற்றி ஒருவர் எப்படிச் சிந்திக்க முடியும்—நாம் எப்படியாவது காரியம் செய்து பட்டினியால் சாகாதிருக்க ஆண்டவன் அருள்வாராக!

இந்த வகையான சந்தேகங்கள் வெளியிடப்படுவது முற்றிலும் இயல்பே. ஆனல் இத்தகைய ஆட்சேபங்களுக்கு நான் பதில் கூற வேண்டுமானல், நான் இதைத்தான் சொல்லுவேன். பொருளாதார வாழ்க்கையின் ஒழுங்கு குலைவு, பொருளாதாரக் குழப்பம், பொருள்கள் பற்ருக்குறை, மோசமான போக்குவரத்து வசதிகள், கால்நடைகளும் விவசாயக் கருவிகளும் நாசம் ஆகியவற்ருல் விவசாயத்தில் விரிவான மேம்பாட்டைச் செயலாக்க முடியவில்லை என்று வைத்துக் கொள்வோம். ஆனல் பல தனிப்பட்ட சந்தர்ப்பங்களில் விரிவானதல்லாவிடினும், மேம்பாடு சாத்தியம் என்

பதில் சந்தேகமில்லை. இவற்றைக்கூடச் செய்ய முடியாது என்று வைத்துக் கொள்வோம். இதனால் கம்யூன்கள், அண்டையில் வாழும் விவசாயிகளின் வாழ்க்கையில் மாற்றங்களை உண்டுபண்ண முடியாது மற்றும் கூட்டு முறையிலான விவசாய நிறுவனங்கள் ஒரு செயற்கையான மூடுதோட்ட பாணி வளர்ச்சி அல்ல, மாறாக தொழிலாளர் ஆட்சியதிகாரத்திடம் இருந்து உழைக்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஒரு புது வடிவிலான உதவி, குலாக்குகளை எதிர்த்த போராட்டத்தில் உழைக்கும் விவசாயிகளுக்குத் தரப்படும் ஓர் உதவி என்பதை விவசாயிகளுக்கு நிரூபித்துக் காட்ட முடியாது என்பது இதன் பொருளா? இந்த விஷயத்தை இந்த வழியில் கருதிப் பார்த்தாலுங்கூட, பொருளாதாரக் குழப்பம் நிறைந்த இன்றைய நிலைமைகளின் கீழ் மேம்பாடுகளைச் செயலாக்குதலின் சாத்தியமின்மையை ஒப்புக்கொண்டாலுங்கூட, கம்யூன்களிலும் ஆர்ட்டல்களிலும் உணர்வு பூர்வமான கம்யூனிஸ்டுகள் இருப்பார்களானால், மிகப் பெருமளவு சாதிக்க முடியும் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கை உண்டு.

இதனை எண்பித்துக் காட்ட, நமது நகரங்களில் சுபோத்னிக்குகள் என்று அழைக்கப்படும் நிகழ்ச்சிகளை நான் குறிப்பிடுவேன். இது, நகரத் தொழிலாளர்கள் வழக்கமான வேலைநாளுக்கு மேல் கூடுதலாக, சில சமூகத் தேவைகளுக்கு வேண்டிச் செய்யும், சில மணி நேர, ஊதியமற்ற இலவசமான சுயவிருப்ப உழைப்புக்குத் தரப்பட்டுள்ள பெயராகும். மாஸ்கோவில் மாஸ்கோ-கஸான் ரயில்வேத் தொழிலாளர்கள் சுபோத்னிக்குகளை முதன்முதலில் துவக்கி வைத்தார்கள். போர்முனைகளில் செஞ்சேனை வீரர்கள் முன் என்றும் கண்டிராத அளவில் தியாகங்கள் புரிகின்றனர், அவர்கள் கட்டாயமாக அனுபவிக்க நேர்ந்த துன்பதுயரங்கள் இருந்தபோதிலும் நமது விரோதிகளை எதிர்த்து முன் என்றும் கண்டிராத வகையில் வெற்றிகளை அடைந்து வருகிறார்கள் என்று சுட்டிக் காட்டும் சோவியத் ஆட்சியதிகாரத்தின் அறிக்கை ஒன்று, அதே சமயம் இத்தகைய வீரமும் தன்னலத்தியாகமும் போர்முனைகளில் மட்டுமன்றிப் பின்னணியிலும் காட்டப்படுமானால் மட்டுமே நாம் நமது வெற்றி

களை விடாப்பிடியாகப் பெற முடியும் என்று சாற்றியது. இந்த வேண்டுகோளுக்கு ஆதரவு காட்டும் முறையில் மாஸ்கோ தொழிலாளர்கள் சுபோத்னிக்குகளை ஏற்பாடு செய்தார்கள். மாஸ்கோ தொழிலாளர்கள் விவசாயிகளை விடவும் அதிகமான வறுமையையும் இன்மையையும் அனுபவித்து வருகிறார்கள் என்பதில் ஐயமில்லை. அவர்களது வாழ்க்கை நிலைமைகள் பற்றித் தெரிந்து கொண்டு, இந்த நம்பற்கரிய கடினமான நிலைமைகள் இருந்துங்கூட அவர்களால் சுபோத்னிக்குகளை ஏற்பாடு செய்ய முடிந்தது என்ற மெய்நடப்பைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தீர்களானால், மாஸ்கோ தொழிலாளர்களின் வழிமுறைகளைப் பயன்படுத்தி எந்த நிலைமையின் கீழும் எதைச் செய்ய முடியுமோ, அதனைச் செய்யாமல் இருப்பதற்குக் கடினமான நிலைமைகள் பற்றிய எந்த விளக்கமும் ஒரு சாக்குப்போக்காக முடியாது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இந்த சுபோத்னிக்குகளைப் போன்று, வேறு எதுவும் நகரத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் மதிப்பை உயர்த்தவும், கம்யூனிஸ்டுகள் பால் கட்சியில் சேராத தொழிலாளர்களின் மரியாதையினை அதிகரிக்கவும் இந்த அளவுக்கு உதவவில்லை எனலாம். இந்த சுபோத்னிக்குகள் தனிமைப்பட்ட சம்பவங்களாக இருக்கவில்லை. இவை நடைபெற்ற போது கட்சி சார்பற்ற தொழிலாளர்கள் நடைமுறையில் ஆளும் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர்களுக்கு கடப்பாடுகளும் கடமைகளும் இருப்பதைக் கண்டார்கள். கம்யூனிஸ்டுகள் கட்சிக்குள் புதிய உறுப்பினர்களைச் சேர்த்தது, அவர்கள் ஆளும் கட்சி என்ற நிலையில் தொடர்ந்து வரும் சாதகங்களை அனுபவிப்பதற்காக அன்றி, மாறாக, அவர்கள் மெய்யான கம்யூனிஸ்டு உழைப்புக்கு, அதாவது இலவசமாகப் புரியும் உழைப்புக்கு, முன் உதாரணமாகத் திகழ வேண்டும் என்பதன் பொருட்டேயாகும் என்பதைக் கட்சி சார்பற்ற தொழிலாளர்கள் கண்டார்கள். கம்யூனிசம் சோஷலிசத்தின் வளர்ச்சியின் உச்ச கட்டமாகும். அப்போது மக்கள் பொது நன்மைக்காக வேலை செய்வதன் அவசியத்தை உணர்வதால் உழைக்கிறார்கள். நம்மால் இப்போது ஒரு சோஷலிஸ்டு அமைப்பை நிலைநாட்ட முடியாது

என்பதை நாம் அறிவோம். நமது நாட்டில் நமது குழந்தைகளின் காலத்தில் அல்லது ஒருவேளை நமது பேரக்குழந்தைகளின் காலத்தில் இது நிலைநாட்டப்பட ஆண்டவன் அருள்வாராக. ஆனால், ஆளும் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் முதலாளித்துவத்தை எதிர்த்த போராட்டத்தில் விளையும் இடர்ப்பாடுகளின் மேலதிகமான பளுவைத் தாமே மேற்கொள்கிறார்கள் என்றும், ஆகச் சிறந்த கம்யூனிஸ்டுகளைப் போர்முனைக்குத் திரட்டுகிறார்கள் என்றும், இந்த நோக்கத்துக்குப் பயன்படுத்த முடியாதவர்களை சுபோத்னிக்குகளில் பங்கேற்கும்படிக் கோருகிறார்கள் என்றும் நாம் கூறுகிறோம்.

இந்த சுபோத்னிக்குகளை ஏற்பாடு செய்வது மூலமும்—இவை எல்லா பெரிய தொழிற்துறை நகரங்களிலும் மிகு பரவலாக உள்ளன—இன்று இவற்றில் பங்கேற்க வேண்டும் என்று கட்சி ஒவ்வொரு உறுப்பினரிடமும் கோருகிறது, இதை நிறைவேற்றாவிடில் கட்சியில் இருந்து விலக்குவது வரையிலான தண்டனை வழங்குகிறது—இந்த முறையைக் கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பயன்படுத்துவது மூலம், நீங்கள் மிகவும் மோசமான நிலைமைகளின் கீழ்கூட விவசாயி ஒவ்வொரு கம்யூனையும் ஆர்ட்டலையும் கூட்டுறவுச் சங்கத்தையும், அவை அரசின் உதவி நிதி பெறுகின்றன என்ற மெய்விவரத்தால் அன்றி, மாறாக, அவற்றின் அகத்தே மிகச் சிறந்த தொழிலாளி வர்க்க நபர்கள் ஒன்றுதிரண்டிருக்கிறார்கள், அவர்கள் மற்றவர்களுக்கு மட்டும் சோஷலிசத்தைப் பிரசாரம் செய்பவர்கள் அல்ல, ஆனால் தாமே அதை நிறைவு செய்யும் ஆற்றல் பெற்றவர்கள், மிகவும் மோசமான நிலைமைகளின் கீழில்கூட அவர்கள் தமது பண்ணைகளைக் கம்யூனிஸ்டு வழியில் நடத்தி சுற்றுமுள்ள விவசாயி மக்களுக்கு சாத்தியமான எல்லா வழிகளிலும் உதவும் ஆற்றலுடையவர்கள் எனும் மெய்விவரத்தை வைத்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்று கருதிப் பார்க்கும்படிச் செய்ய முடியும், செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் எதையேனும் சொல்லி தப்ப இடம் இல்லை; பொருள்களின் பற்றாக்குறை, விதைகள் இல்லாமை, கால்நடை இழப்பு எனும் அத்தகைய சாக்குப்போக்குகளுக்கு

இடம் கிடையாது. இது ஒரு சோதனையாக இருக்கும். எது எப்படி ஆயினும், நாம், நம் சார்பில் மேற்கொண்டிருக்கும் இந்த இடர்ப்பாடான பணியை எந்தளவுக்கு நடைமுறையில் நிறைவேற்ற முடிந்தது என்பதைத் திட்ட வட்டமாகக் கூறுவதற்கு இயலும்படி இது உதவும்.

கம்யூன்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஆர்ட்டல்களின் பிரதிநிதிகளின் பொதுக் கூட்டம் இதை விவாதிக்கும் எனவும், இந்த முறையைப் பயன்படுத்துவது கம்யூன்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் கெட்டிப்படுவதற்கான வலிமைமிக்க கருவியாக உண்மையில் விளங்கும் எனவும், விவசாயிகள் சார்பில் இருந்து கம்யூன்கள், ஆர்ட்டல்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பால் பகைமை காட்டும் தனி ஒரு சம்பவங்கூட ருஷ்யாவில் எங்குமே ஏற்படாத வகையில் அத்தகைய நடைமுறை விளைவுகளை சாதிக்கலாம் என்பதையும் இப்பிரதிநிதிகள் உணர்வார்கள் என்றும் நான் திண்ணமாகக் கருதுகிறேன். ஆனால் இது போதாது. தேவையாக இருப்பது என்னவென்றால், விவசாயிகள் இவற்றின் பால் அனுதாபமான உறவு நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். நம்மைப் பொருத்த வரை, சோவியத் ஆட்சியதிகாரத்தின் பிரதிநிதிகளான நாம் இதை ஏற்படுத்த உதவும் வகையில் நமது சக்திக்குட்பட்ட சகலத்தையும் செய்வோம். மற்றும் உழைப்பாளர் கம்யூன்கள் அல்லது ஆர்ட்டல்கள் தமது விவசாயி அண்டைவாசிகளின் வாழ்க்கையுடன் மெய்யாகவே நெருக்கமான தொடர்புகளை நிலைநாட்டியுள்ள இடங்களுக்கு மட்டுமே நூறு கோடி ரூபிள் நிதி மற்றும் இதர ஆதாரங்களிடமிருந்து அரசு உதவி கிடைக்கும்படிப் பார்த்துக் கொள்வோம். இந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால், ஆர்ட்டல்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தரப்படும் எந்த ஒரு உதவியும் பயனற்றது என்பது மட்டுமல்ல, திட்ட வட்டமாயும் தீங்கு விளைப்பதும் ஆகும் என்று கருதுகிறோம். அண்டையில் வாழும் விவசாயிகளுக்குக் கம்யூன்கள் தரும் உதவி மீமிகையின் காரணமாக வெறுமே தரப்பட்ட உதவியாகக் கருதப்படக் கூடாது. இந்த உதவி சோஷலிஸ்டு உதவியாக இருத்தல் வேண்டும். அதாவது, விவசாயிகள்

தமது தனித்தனியான தனிநபர் சாகுபடி முறையைக் கூட்டுறவு சாகுபடி முறைக்கு மாற்றீடு செய்துகொள்ள இயலுமாறு இது இருத்தல் வேண்டும். இதை சுபோத்னிக் முறை மூலம் மட்டுமே செய்ய முடியும், இம்முறை பற்றி நான் எற்கெனவே பேசியுள்ளேன்.

விவசாயிகளை விடவும் அளவிடற்கரிய வகையில் மோசமான நிலைமைகளில் வாழ்ந்து வந்த போதிலும், சுபோத்னிக்குகளுக்கான இயக்கத்தை முதலில் தொடங்கி வைத்த நகரத் தொழிலாளர்களின் இந்த அனுபவத்தில் இருந்து நீங்கள் படித்தறிந்து கொள்வீர்களானுல், நாங்கள் உங்களது பொதுவும் ஒரு முகப்பட்டதுமான ஆதரவுடன் தக்கதோர் சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் என்பது நிச்சயம். இதன் கீழ் இப்போது நிலவும் சில ஆயிரம் கம்யூன்களும் ஆர்ட்டல்களும் ஒவ்வொன்றும் விவசாயிகள் மத்தியில் கம்யூனிஸ்டு எண்ணங்களையும் கருத்துக்களையும் பேணும் மெய்யான வளர்ப்பிடமாக மாறும்; மற்றும், இது இன்னும் சிறியளவிலான, பலவீனமான முளை உருவில் இருந்தபோதிலும், இது செயற்கையான அல்லது மூடுதோட்ட பாணியிலான முளை அல்ல, மாறுக, புதிய சோஷலிஸ்டு அமைப்பின் மெய்யான முளையே என்பதை நடைமுறை உதாரணம் மூலம் புலப்படுத்தும். அப்போது மட்டுமே, நாம் பழைய அறியாமை, வறுமை, இன்மை ஆகியவை மீது நிலையான வெற்றியை அடைய முடியும். அப்போது மட்டுமே, நமது எதிர்காலச் செல்வழியில் நாம் சந்திக்கவிருக்கும் எவ்வித இடர்ப்பாடுகளும் நமக்குப் பயங்கரமானதாகக் காட்சி தரா.

பிராவ்தா,
இதழ்கள் *273, 274,*
டிசம்பர் *5,6, 1919*

நூல் திரட்டு,
தொகுதி *39,*
பக்கங்கள் *372-382*

தெனீக்கினை எதிர்த்த வெற்றிகளைக் குறித்து உக்ரேனிய தொழிலாளர், விவசாயிகளுக்கு எழுதிய கடிதம்

தோழர்களே! நான்கு மாதங்கள் முன்பு, 1919 ஆகஸ்டு இறுதியில் கல்ச்சாக் மீதான வெற்றி சம்பந்தமாக தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்கு நான் ஒரு கடிதம் எழுதியனுப்பும் சந்தர்ப்பம் கிடைத்தது.*

தெனீக்கினை எதிர்த்த வெற்றிகள் சம்பந்தமாக உக்ரேனியத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்கு இந்தக் கடிதத்தை இப்போது முழுமையாக மறுபதிப்புச் செய்து தருகிறேன்.

செஞ்சேனைத் துருப்புக்கள் கீவ், பல்தாவா மற்றும் ஹார்க்கவைப் பிடித்து விட்டன; ரஸ்தோவ் நோக்கி வெற்றிகரமாக முன்னேறி வருகின்றன. தெனீக்கினுக்கு எதிரான கலகத்தால் உக்ரேன் கொதித்துக் குமுறிக்கொண்டு இருக்கிறது. நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் ஆட்சி அதிகாரத்தினை மீட்டமைக்க முயன்று வந்துள்ள தெனீக்கினது சைனியத்தை இறுதியாக முறியடிக்க சகல சக்திகளையும் ஒன்றுதிரட்ட வேண்டும். புதிய தாக்குதலின் ஆகச் சிறிய சாத்தியக்கூறுக்குக் கூட எதிராக நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டி, நாம் தெனீக்கினை அழித்தாக வேண்டும்.

கல்ச்சாக்கால் சைபீரியா படையெடுத்துக் கைப்பற்றப் பட்டது, பல மாத கால நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளி

---

* இத்தொகுதி, பக்கங்கள் 41—54 பார்க்க.—(ப-ர்.)

கள் கொடுங்கோன்மைக்குப் பிறகு செஞ்சேனைத் துருப்புக்களால் அது விடுவிக்கப்பட்டது ஆகியவற்றில் இருந்து எல்லா ருஷ்யத் தொழிலாளர்களும் விவசாயிகளும் பெற்ற படிப்பினைகள் உக்ரேனிய தொழிலாளர்களும் விவசாயிகளும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

சைபீரியாவில் நிலவிய கல்ச்சாக் ஆட்சி போலவே அந்தளவுக்கு உக்ரேனில் தெனீக்கின் ஆட்சியும் ஒரு கடுமையான சோதனையாகவே இருந்தது. இந்தக் கடுமையான சோதனைகளின் படிப்பினைகள்—உரால் பகுதி மற்றும் சைபீரியாவின் தொழிலாளர், விவசாயிகளுக்கு அவை அளித்ததைப் போலவே—உக்ரேனிய தொழிலாளர், விவசாயிகளுக்கும் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் கடமைகள் பற்றியதான மேலும் தெளிவானதான அறிவைத் தரும், அதை மேலும் அதிகப் பற்றுறுதியுடன் தற்காத்து நிற்கும்படி அவர்களை ஊக்குவிக்கும் என்பதில் சந்தேகமே கிடையாது.

மகாருஷ்யாவில் பிரபுத்துவ எஸ்டேட் அமைப்பு முழுமையாக ஒழிக்கப்பட்டுவிட்டது. இதுவே உக்ரேனிலும் செய்யப்பட வேண்டும். உக்ரேனியத் தொழிலாளர், விவசாயிகளின் சோவியத் ஆட்சி அதிகாரம் பிரபுத்துவ எஸ்டேட்டுகள் முழுமையாக ஒழிக்கப்படுவதைச் செயல்படுத்துவதையும், நிலப்பிரபுக்களின் எல்லா ஒடுக்குமுறையில் இருந்தும் நிலப்பிரபுக்கள் தம்மிடமிருந்தும் உக்ரேனியத் தொழிலாளர், விவசாயிகளைப் பூரணமாக விடுவிப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தக் கடமை மற்றும் மகாருஷ்ய மற்றும் உக்ரேனிய உழைக்கும் மக்கள் திரள் இரண்டின் முன் எதிர்நின்றதும் இன்னும் எதிர்நிற்பதுமான கடமைகள் ஒரு புறம் இருக்க, உக்ரேனில் இருக்கும் சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு அதற்கே உரிய விசேஷமான கடமைகள் உள்ளன. இந்த விசேஷக் கடமைகளில் ஒன்று தற்சமயம் மாபெரும் கவனத்துக்கு உரியதாகும். இதுவே தேசியப் பிரச்சினை, அல்லது வேறு சொற்களில் கூறினல் உக்ரேன், (கூட்டாட்சியுடன்) ருஷ்ய சோஷலிசக் கூட்டாட்சி சோவியத் குடியரசுடன் சேர்த்து இணைக்கப்பட்டதான ஒரு தனியான சுயாதீனமான

உக்ரேனிய சோவியத் சோஷலிசக் குடியரசாக இருக்குமா அல்லது உக்ரேன் ருஷ்யாவுடன் இணைந்து ஒரே சோவியத் குடியரசாக அமையுமா எனும் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையை எல்லா போல்ஷிவிக்குகளும் அரசியல் உணர் வுடைய எல்லாத் தொழிலாளரும் விவசாயிகளும் கவன மாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உக்ரேனின் சுயாதீனம் ரு.சோ.கூ.சோ.கு.இன் (ருஷ்ய சோஷலிசக் கூட்டாட்சி சோவியத் குடியரசின்) அ.ரு.ம.நி.க. யாலும் (அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியாலும்) போல்ஷிவிக்குகளின் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே உக்ரேன் ருஷ்யாவுடன் இணைந்து விடுவதா அல்லது அது தனியான சுயாதீனமான குடியரசாக இருப்பதா என்பதையும் பிந்திய முடிவு எனில் இந்தக் குடியரசுக்கும் ருஷ்யாவுக்கும் இடையே என்ன கூட் டாட்சி உறவுகள் நிறுவப்படும் என்பதையும் உக்ரேனியத் தொழிலாளரும் விவசாயிகளும்தான் அவர்களது சோவி யத்துக்களின் அகில உக்ரேனிய காங்கிரசில் முடிவு செய்ய முடியும், நிச்சயம் முடிவு செய்வார்கள் என்பது விளக்கம் தேவைப்படாத பொதுவாக ஏற்கப்படும் உண்மையாகும்.

உழைக்கும் மக்களின் நலன்களையும், மூலதனத்தின் ஆதிக்கத்தில் இருந்து தொழிலாளர்களை முழுமையாக விடுவிப்பதற்கான அவர்களது போராட்டத்தையும் கருத் தில் கொண்டு பார்க்கும் அளவில் இந்தப் பிரச்சினைக்கு எவ்வாறு முடிவு காண்பது?

முதலாவதாக, தொழிலாளர் நலன்கள் பல்வேறு நாடு கள் மற்றும் மக்கள் இனங்களைச் சார்ந்த உழைக்கும் மக்கள் மத்தியில் முற்ற முழுமையான நம்பிக்கையையும் மிகவும் நெருக்கமான இணக்க உறவையும் கோருகின்றன. நிலப் பிரபுக்கள், முதலாளிகள் மற்றும் பூர்ஷுவா வகைப்பட் டோரின் ஆதரவாளர்கள் தொழிலாளர்களைப் பலவீனப் படுத்தவும், மூலதனத்தின் ஆட்சி அதிகாரத்தை வலுப் படுத்தவும் வேண்டித் தொழிலாளர்களைப் பிளவுறுத்த முயல்வார்கள், தேசியப் பிணக்குகளையும் பகைமையையும் தீவிரப்படுத்த முயல்வார்கள்.

மூலதனம் ஒரு சர்வதேசு சக்தி. அதைத் தோற்கடிப் பதற்கு ஒரு சர்வதேசத் தொழிலாளர் நேச அணி, ஒரு சர்வதேசத் தொழிலாளர் சகோதரத்துவம் அவசியம்.

நாம் தேசியப் பகைமை மற்றும் பிணக்கு, தேசியத் தனி விதிவிலக்குத் தன்மை ஆகியவற்றை எதிர்க்கிறோம். நாம் சர்வதேசியவாதிகள். நாம் ஒரே உலக சோவியத் குடியரசில் எல்லா உலக தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர், விவ சாயிகளினது நெருக்கமான ஒற்றுமையை முழுமையான இணைப்பை ஆதரிக்கிறோம்.

இரண்டாவதாக, முதலாளித்துவம் தேசங்களை ஒரு சில ஒடுக்கும் மகா வல்லரசு (ஏகாதிபத்திய) அரசுரிமையும் தனியுரிமைகளும் பெற்ற தேசங்கள் எனவும், மிகப் பெரும் பான்மையானவற்றை ஒடுக்கப்பட்ட சார்பு நிலையில் உள்ள, அரைச் சார்பு நிலையில் உள்ள அரசுரிமை அற்ற தேசங்கள் எனவும் பிரித்திருப்பதை உழைக்கும் மக்கள் மறந்துவிடக் கூடாது. 1914-18ம் ஆண்டுகளின் படுகொலைகார படுபிற் போக்குத்தனமான போர் இந்தப் பிரிவை இன்னும் அதிக மாக உரமடையச் செய்தது; இதன் விளைவாக தீராப் பகைமையையும் வெறுப்பையும் உக்கிரமாக்கியது. பல நூற்றுண்டுகள் காலமாக அரசுரிமை அற்ற, சார்பு நிலையில் உள்ள தேசங்களின் கடுஞ்சினமும் அவநம்பிக்கையும் ஆதிக் கம் செலுத்தும், ஒடுக்கும் தேசங்களின் பால் திரண்டு குவிந்து வந்துள்ளன—மகாருஷ்யன் தேசத்தின் பால் உக் ரேன் போன்ற தேசங்களில் போல.

நாம் தேசங்களின் சுயவிருப்பமான ஒன்றியத்தை விரும்பு கிறோம் — இந்த ஒன்றியம் ஒரு தேசத்தை இன்னொரு தேசம் வலுவந்தப்படுத்துவதை விலக்குவது—பூரணமான நம்பிக்கை, சோதர ஒற்றுமை பற்றிய தெளிவான அங்கீ காரம், முற்ற முழுமையாயும் சுயவிருப்பமான இசைவு ஆகியவற்றை அடிப்படையாக்கிய ஒன்றியம் ஆகும். இத் தகைய ஒன்றியத்தை ஒரே அடியில் செயல்படுத்தி விட முடியாது. அதை நோக்கி நாம் மிகப் பெரிய பொறுமை யுடனும் விழிப்புடனும் செயல்படுதல் வேண்டும்; காரியங் களைக் கெடுத்து விடாமலும், அவநம்பிக்கையை எழுப்பாம

லும் பார்த்துக் கொள்ள வேண்டும். இதன் விளைவாக பல நூற்றுண்டுக் கால நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ ஒடுக்கு முறை, பல நூற்றுண்டுக் காலத் தனிச் சொத்துடைமை, இத்தனிச் சொத்துடைமையின் பாகப் பிரிவினை, மறுபங்கீடு ஆகியவற்றுல் ஏற்பட்ட பகைமையில் இருந்தும் மரபாகப் பெற்ற அவநம்பிக்கை தேய்ந்து அழிந்து போக ஒரு வாய்ப்பும் கிடைக்கலாம்.

எனவே நாம் தேசங்களின் ஒற்றுமைக்காக விடாப்பிடியாக முயன்று, அவற்றைப் பிரிவினை செய்யும் அனைத்தையும் தாட்சண்யமின்றி அடக்கி, நாம் மிகவும் எச்சரிக்கையுடனும் பொறுமையுடனும் நடந்து கொள்ள வேண்டும்; தேசிய அவநம்பிக்கையின் மீதமிச்சங்களின் பால் விட்டுக் கொடுக்கும் போக்கை அனுசரிக்க வேண்டும். மூலதனத்தின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கான தொழிலாளர் போராட்டத்தில் அவர்களது அடிப்படையான நலன்களைப் பாதிப்புச் செய்யும் எல்லாவற்றின் பாலும் நாம் பிடிவாதமான சமரசப்படுத்த முடியாத தோரணை மேற்கொள்ள வேண்டும். அரசு எல்லைகளை வரையறை செய்யும் விஷயம் இப்போது இந்த நேரத்தில்—அரசு எல்லைகள் முழுமையாக ஒழிப்பதற்கு நாம் முயன்று வருவதால்—ஒரு சிறிய விஷயமே, இது அடிப்படையானதோ முக்கியமானதோ அல்ல. இந்தக் காரியத்தில் நாம் காத்திருக்கலாம், காத்திருக்க வேண்டும். காரணம் விவசாயிகளின் விரிவான பகுதிகள் மற்றும் சிறு உடைமையாளர்கள் மத்தியில் தேசிய அவநம்பிக்கை பெரும்பாலும் மிகவும் விடாப்பிடியானது; அவசரம் இதைத் தீவிரப்படுத்தலாம்; வேறு சொற்களில் கூறினல், முழுமையான முடிவான ஒற்றுமைக்கான லட்சியத்துக்கு இடையூறு செய்யும்.

ருஷ்யாவில் நிகழ்ந்த தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் புரட்சி, 1917 அக்டோபர்—நவம்பர் புரட்சி மற்றும் சர்வதேச மற்றும் ருஷ்யாவின் முதலாளிகளின் தாக்குதல்களுக்கு எதிராக இரண்டாண்டுகள் நடந்த அதன் வெற்றிகரமான போராட்டம் ஆகியவற்றின் அனுபவம், முதலாளிகள், போலிஷ், லாத்வியன், எஸ்தோனியன் மற்றும்

பின்னிஷ் விவசாயிகளும் சிறு உடைமையாளர்களும் மகா ருஷ்யர்கள் மீது கொண்டிருந்த தேசிய அவநம்பிக்கையினைப் பயன்படுத்திக் கொள்வதில் சிறிது காலம் வெற்றியடைந் திருக்கிறார்கள் என்பதையும், இந்த அவநம்பிக்கையின் அடிப்படையில் அவர்களுக்கும் நமக்கும் இடையே சிறிது காலம் உட்பூசலை விதைப்பதில் வெற்றியடைந்து இருக்கிறார் கள் என்பதையும் ஸ்படிகத் தெளிவுடன் எடுத்துக் காட்டி யுள்ளது. இந்த அவநம்பிக்கை மிகமிக மெதுவாகத்தான் தேய்வுற்று மறைந்தழியும் என்பதையும், நீண்ட காலமாக ஒடுக்கும் தேசமாக இருந்து வந்துள்ள மகாருஷ்யர்கள் எந் தளவுக்கு அதிக எச்சரிக்கையும் பொறுமையும் தோற்று விக்கிறார்களோ அந்த அளவுக்கு அதிக நிச்சயமாயும் இந்த அவநம்பிக்கை அகன்று ஒழியும் என்பதையும் அனுபவம் புலப்படுத்தி உள்ளது. போலிஷ், லாத்வியன், லிதுவே னியன், எஸ்தோனியன் மற்றும் பின்னிஷ் அரசுகளின் சுயா தீனத்தை அங்கீகரிப்பதன் மூலமே, மிகவும் பிற்பட்ட நிலை யில் இருந்து முதலாளிகளால் மேலும் அதிகமாக ஏமாற்றப் பட்டும் அடக்கி வைக்கப்பட்டும் கிடந்த, அண்டையில் இருக்கும் சிறிய நாடுகளின் உழைக்கும் மக்கள் திரளின் நம் பிக்கையை மெதுவாக ஆனால் உறுதியாக நாம் வென்று பெற்று வருகிறோம். ‘‘அவர்களது’’ தேசிய முதலாளிகளின் செல்வாக்கில் இருந்து அவர்களை விடுபடச் செய்யவும், எதிர்கால ஐக்கிய சர்வதேசிய சோவியத் குடியரசை நோக்கி முழு நம்பிக்கையளித்து இட்டுச் செல்லவும் ஆக உறுதியான வழி இதுவே.

தெனீக்கினிடம் இருந்து உக்ரேன் முழுமையாக விடு விக்கப்படாத காலம் வரை, சோவியத்துக்களின் அகில உக் ரேனிய காங்கிரஸ் கூடும் வரை, அகில உக்ரேனிய புரட்சிக் கமிட்டியே[15] அதன் அரசாங்கமாக இருக்கும். உக்ரேனியன் போல்ஷிவிக்குகளான கம்யூனிஸ்டுகள் தவிர, உக்ரேனியன் பரோத்பாவாதிகளான கம்யூனிஸ்டுகளும்[16] இந்தப் புரட்சிக் கமிட்டியில் அரசாங்க உறுப்பினர்களாகப் பணிபுரிகிறார்கள். இந்த பரோத்பாவாதிகளை போல்ஷிவிக்குகளிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டும் அம்சங்களில் ஒன்று, அவர்கள்

உக்ரேனின் நிபந்தனையற்ற சுயாதீனத்தை வலியுறுத்துவதேயாகும். போல்ஷிவிக்குகள் இதை வேறுபாட்டுக்கும் வேற்றுமைக்கும் உரிய ஒரு விஷயமாக ஆக்க மாட்டார்கள், ஒருங்கிணைந்த பாட்டாளி வர்க்க முயற்சிக்கு ஒரு தடையாக அவர்கள் இதைக் கருதவில்லை. மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்காக ஒற்றுமை கட்டாயம் வேண்டும். தேசிய எல்லைகள் அல்லது அரசுகள் இடையில் கூட்டாட்சி முறையா அல்லது வேறுவகையான உறவா எது வேண்டும் என்ற பிரச்சினை மீது கம்யூனிஸ்டுகள் மத்தியில் பிரிவினை ஏற்படக் கூடாது. போல்ஷிவிக்குகளின் மத்தியில் உக்ரேனுக்குப் பூரண சுயாதீனம் வேண்டும் என்பதை ஆதரிப்போர் உள்ளனர், கிட்டத்தட்ட நெருக்கமான கூட்டாட்சி உறவுகளை ஆதரிப்பவர்கள் உள்ளனர், உக்ரேன் ருஷ்யாவுடன் முழுமையாக இணைய வேண்டும் என்பதை ஆதரிப்பவர்களும் உள்ளனர்.

இந்தப் பிரச்சினைகள் மீது வேறுபாடுகள் இருத்தல் கூடாது. இவை சோவியத்துக்களின் அகில உக்ரேன் காங்கிரசால் முடிவு செய்யப்படும்.

ஒரு மகாருஷ்யன் கம்யூனிஸ்டு உக்ரேன் ருஷ்யாவுடன் இணைய வேண்டும் என்று வற்புறுத்தும் பட்சத்தில், அவர் இந்தக் கொள்கையை மூலதனத்தை எதிர்த்த போராட்டத்தில் பாட்டாளிகளை ஒற்றுமைப்படுத்தும் நோக்கத்தோடு ஆதரிக்கவில்லை எனவும், மாறாக பழைய மகாருஷ்ய தேசியவாதத்தின் ஏகாதிபத்தியத்தின் தப்பெண்ணங்கள் காரணமாகவே ஆதரிக்கிறார் எனவும் உக்ரேனியர்கள் அவர் மீது எளிதில் சமுசயப்படலாம். இத்தகைய ஐயப்பாடு இயல்பானது, ஓரளவுக்கு தவிர்க்க முடியாததும் நியாயமானதும் ஆகும். காரணம் மகாருஷ்யர்கள் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் ஆதிக்கத்தின் கீழ் பல நூற்றாண்டுகள் காலமாக மகாருஷ்ய தேசியவெறியின் வெட்கக்கேடான வெறுக்கத்தக்க தப்பெண்ணங்களை மனத்தில் ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

ஓர் உக்ரேனிய கம்யூனிஸ்டு உக்ரேனின் நிபந்தனையற்ற

அரசு சுயாதீனத்தை வற்புறுத்துவாராஞல், அவர் இந்தக் கொள்கையை மூலதனத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து உக்ரேனியத் தொழிலாளர்களும் விவசாயிகளும் நடத்தும் போராட்டத்தின் தற்காலிக நலன்கள் காரணமாக ஆதரிக்க வில்லை எனவும், மாருக சிறு உடைமையாளரின் குட்டி முதலாளித்துவ தேசியத் தப்பெண்ணங்களிஞல்தான் ஆதரிக் கிருர் எனவும் அவர் மீது சமுசயம் கொள்ள இடமளித்து விடுகிருர். பல்வேறு நாடுகளின் குட்டிமுதலாளித்துவ ''சோஷலிஸ்டுகள்''—எல்லாப் பல்வேறு போலிஷ், லாத்வியன், லிதுவேனியன் போலி சோஷலிஸ்டுகள், ஜார்ஜியன் மென்ஷி விக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் போன்ருேர்— புரட்சிகரத் தொழிலாளர்களுக்கு எதிராக ''தமது'' தேசிய முதலாளிகளுடனை ஒரு சமரசக் கொள்கையை வஞ்சக மாக ஆதரிப்பது எனும் ஏகச் செயல் நோக்கத்துடன் பாட் டாளிகளின் ஆதரவாளர்கள் போல வேடம் மேற்கொண் டார்கள் என்பதைக் காட்டும் நூற்றுக்கணக்கான எடுத்துக் காட்டுகளை அனுபவம் வழங்கியுள்ளது. இதை நாம் ருஷ்யா வில் 1917 பிப்ரவரி—அக்டோபர் கட்டத்தில் கேரென்ஸ்கி ஆட்சியில் கண்டோம்; இதர நாடுகள் எல்லாவற்றிலும் இதைக் கண்டிருக்கிருேம், கண்டு வருகிருேம்.

எனவே, மகாருஷ்யன் மற்றும் உக்ரேனிய கம்யூனிஸ்டு களுக்கு இடையே பரஸ்பர அவநம்பிக்கை மிகவும் எளி தாக எழலாம். இந்த அவநம்பிக்கையை எப்படி எதிர்த்துப் போராடுவது? இதை எப்படி வென்று சமாளித்து பரஸ்பர நம்பிக்கையை நிலைநாட்டுவது?

எல்லா நாடுகளின் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளி களை எதிர்த்தும், தமது மேலாதிக்கத்தை மீண்டும் நிறுவ அவர்கள் செய்யும் முயற்சிகளை எதிர்த்தும் நடத்தும் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் சோவியத் ஆட்சி அதிகாரத்தையும் ஆதரிப்பதற்காக ஒன்று சேர்ந்து பாடுபடுவதன் மூலம் இதைச் சிறந்த வழியில் சாதனையாக்க முடியும். அரசு சுயாதீனம் அல்லது அரசு எல்லைகள் சம்பந்தமான முடிவு எதுவாக இருந்தபோதிலும், மகாருஷ்ய மற்றும் உக்ரேனிய தொழிலாளர் இடையே

நெருக்கமான ராணுவ மற்றும் பொருளாதார நேச அணி இருக்க வேண்டும் என்பதை இத்தகைய கூட்டுப் போராட்டம் தெளிவாக நடைமுறையில் புலப்படுத்தும். இல்லாவிட்டால், அன்டான்டின்—வேறு சொற்களில் கூறினால், ஆகச் செல்வந்த முதலாளித்துவ நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இத்தாலியின் கூட்டணியின்—முதலாளிகள் நம்மைத் தனித்தனியாக நெரித்து நசுக்கி விடுவார்கள். இந்த முதலாளிகள் பணமும் ஆயுதங்களும் கொடுத்து உதவிய கல்ச்சாக் மற்றும் தெனீக்கினை எதிர்த்த நமது போராட்டம் இந்த அபாயத்திற்கான தெளிவான உதாரணமாகும்.

மகாருஷ்யன் மற்றும் உக்ரேனியன் தொழிலாளர், விவசாயிகள் இடையிலான ஒற்றுமையையும் மிகவும் நெருக்கமான நேச உறவையும் சீர்குலைவு செய்யும் எவரும் கல்ச்சாக்குகளுக்கும் தெனீக்கின்களுக்கும் எல்லா நாடுகளின் முதலாளிகளான கொள்ளைக்காரருக்கும் உதவி புரிபவர்களாவர்.

இதன் பின்விளைவாக, மகாருஷ்யன் கம்யூனிஸ்டுகளாகிய நாம் நமது மத்தியில் மகாருஷ்யன் தேசியவாதத்தின் ஆகச் சொற்பமான வெளிப்பாட்டையுங்கூட உச்சபட்சமான கடுமையுடன் அடக்கிட வேண்டும். ஏனெனில் பொதுவாக கம்யூனிசத்துக்குத் துரோகம் விளைக்கும் இத்தகைய வெளிப்பாடுகள் நம்மை உக்ரேனியன் தோழர்களிடம் இருந்து பிரித்து தெனீக்கின் மற்றும் அவரது எதிர்புரட்சிக் கலகத்திற்கு ஆதரவாக அதனிடம் சிக்குறும் பேராபத்தான தீங்கை விளைவிக்கும்.

இதன் பின்விளைவாக, உக்ரேனியன் போல்ஷிவிக்குகளான கம்யூனிஸ்டுகளுக்கும் பரோத்பாவாதிகளுக்கும் வேறுபாடுகள் இருக்கும் போது, இந்த வேறுபாடுகள் உக்ரேனின் அரசு சுயாதீனம், ருஷ்யாவுடனான அதன் நேச உறவின் வடிவங்கள் மற்றும் பொதுவாக தேசியப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கும் போது, மகாருஷ்யன் கம்யூனிஸ்டுகளான நாம் விட்டுக்கொடுக்க வேண்டும். ஆனால், மகாருஷ்யன் கம்யூனிஸ்டுகள், உக்ரேனியன் கம்யூனிஸ்டுகள்,

வேறு எந்தத் தேசங்களையும் சார்ந்த கம்யூனிஸ்டுகள் ஆகிய நாம் அனைவரும் எல்லா தேசங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்கும் பாட்டாளி வர்க்கப் போராட்டம், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் எனும் விஷயங்களில், ஆதாரமான அடிப்படையான விஷயங்களில் விட்டுக்கொடுக்காமலும் இணக்கத்துக்கு இடமளியாமலும் செயல்பட வேண்டும்; முதலாளிகளுடன் சமரசத்தை அனுமதிக்கக் கூடாது; தெனீக்கினுக்கு எதிராக நமக்குப் பாதுகாப்பு அளித்து வரும் சக்திகளில் எவ்விதப் பிளவையும் அனுமதிக்கலாகாது.

தெனீக்கின் கட்டாயம் முறியடிக்கப்பட்டு அழிக்கப்பட வேண்டும், அவருடையது போன்ற தாக்குதல்கள் மறுபடியும் நிகழவிடக் கூடாது—இது மகாருஷ்யன் மற்றும் உக்ரேனியன் தொழிலாளர், விவசாயிகள் இரு சார்பினரின் அடிப்படை நலன்களுக்குப் பொருந்தியதாகும். போராட்டம் நீடித்த ஒன்று, கடினமானது. ஏனெனில் உலக முழுதிலுமுள்ள முதலாளிகள் தெனீக்கினுக்கு உதவி செய்கிறார்கள், எல்லா இதர தெனீக்கின்களுக்கும் உதவி செய்வார்கள்.

இந்த நீடித்த, கடினமான போராட்டத்தில் மகாருஷ்யன் மற்றும் உக்ரேனியன் தொழிலாளர்களான நாம் மிகவும் நெருக்கமான நேச உறவைப் பேணி வைத்திருக்க வேண்டும். ஏனெனில் தனித்தனியே நம்மால் இந்தக் கடமையை மிகவும் திட்டவட்டமாயும் சமாளிக்க இயலாது. உக்ரேன் அல்லது ருஷ்யாவின் எல்லைகள் எவையாக இருப்பினும் சரி, அவற்றின் பரஸ்பர அரசு உறவுகளின் வடிவங்கள் எவையாக இருப்பினும் சரி, அது அவ்வளவு முக்கியமானது அல்ல. இந்த விஷயத்தில் சலுகைகள் காட்டப்பட முடியும், காட்ட வேண்டும்; இதில் ஒரு வழி அல்லது வேறொன்று அல்லது மூன்றும் வழியினைப் பயன்படுத்திப் பார்க்கலாம்—இதன் காரணமாக முதலாளித்துவத்தின் மீதான வெற்றி எனும் தொழிலாளர், விவசாயிகளின் லட்சியம் அழிந்து விடாது.

ஆனால் நாம் மிகவும் நெருக்கமான நேச அணியை, தெனீக்கினுக்கு எதிரான ஒரு நேச அணியை, நமது நாடுகள்

மற்றும் எல்லா நாடுகளதும் முதலாளிகள், குலாக்குகளுக்கு எதிரான நேச அணியை பேணிக் காப்பதில் தவறுவோ மானுல் சோவியத் உக்ரேன் சோவியத் ருஷ்யா இரண்டையும் முதலாளிகள் நெரித்து நசுக்கி விடுவது கட்டாயம் இயலும் என்ற பொருளில் வரப் போகும் பல ஆண்டுகளுக்குத் தொழிலாளர் லட்சியம் நிச்சயமாயும் அழிவுறும்.

எல்லா நாடுகளின் முதலாளிகளும், எல்லா விதமான குட்டிமுதலாளித்துவக் கட்சிகளும், தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளிகளுடன் கூட்டணி சேருவதை அனுமதிக்கும் ''சமரசக்'' கட்சிகளும் எல்லாவற்றுக்கும் மேல் சாதிக்க வேண்டும் என்று முயல்வது, பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த தொழிலாளர்களைப்] பிளவுறுத்துவது, அவநம்பிக்கையை ஏற்படுத்துவது, நெருக்கமான ஒரு சர்வதேசிய நேச அணியினையும் தொழிலாளர்களின் சர்வதேச சகோதரத்துவத்தையும் குலைப்பது இத்தியாதிகளையே. எப்போதெல்லாம் முதலாளிகள் இதில் வெற்றியடைகிருர்களோ, அப்போதெல்லாம் தொழிலாளர் லட்சியம் தோல்வியுறும். எனவே, ருஷ்யா மற்றும் உக்ரேனின் கம்யூனிஸ்டுகள் பொறுமையான, விடாப்பிடியான, உறுதியான ஒரு முகப்பட்ட முயற்சி மூலம், எந்தவொரு முதலாளிகளின் தேசியவாத சூழ்ச்சிகளைத் தடுத்து வீழ்த்தியும், எல்லா வகைப்பட்ட தேசியவாதத் தப்பெண்ணங்களையும் முறியடித்தும், சோவியத் ஆட்சி அதிகாரத்திற்காக, நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் ஆதிக்கத்தை வீழ்த்துவதற்காக, ஓர் உலக கூட்டாட்சி சோவியத் குடியரசுக்காக, பல்வேறு தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர் விவசாயிகளின் மெய்யாகவே உறுதியான ஒரு நேச அணியை உலகத்தின் உழைக்கும் மக்கள் முன்னுல் உதாரணமாக முன்வைப்பதில் வெற்றி காண்போமாக.

நி. லெனின்

டிசம்பர் *28, 1919*

பிராவ்தா, இதழ் *3,*
ஜனவரி *4, 1920*

நூல் திரட்டு,
தொகுதி *40,*
பக்கங்கள் *41-47*

"யுனிவெர்சல் சர்விஸ்" அமெரிக்கச் செய்தி நிறுவனத்தின் பெர்லின் நிருபர் கார்ல் விகாண்ட் கேட்ட கேள்விகளுக்குப் பதில்

1. "நாம் போலந்தையும் ருமேனியாவையும் தாக்க உத்தேசித்திருக்கிறோமா?"

இல்லை. நமது சமாதான நோக்கங்களை மக்கள் கமிசார்களின் கவுன்சில் மற்றும் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் பெயரால் மிகவும் வீறுர்ந்த முறையிலும் அதிகாரபூர்வமாயும் சாற்றியுள்ளோம். துரதிருஷ்டவசமாக, பிரெஞ்சு முதலாளித்துவ அரசாங்கம் போலந்தை (ஒருக்கால் ருமேனியாவையும் கூட) நம்மைத் தாக்கும்படி தூண்டிவிடுகிறது. லியோனில் இருந்து பல அமெரிக்க வானொலி நிலையங்கள்கூட இதைப் பற்றிக் கூறுகின்றன.

2. "ஆசியாவில் நமது திட்டங்கள் எவை?"

அவை ஐரோப்பாவில் உள்ளவையே: எல்லா மக்களினங்களுடனும் சமாதான சகவாழ்வு; ஒரு புது வாழ்வை நோக்கி—சுரண்டல் இல்லாத, நிலப்பிரபுக்கள் இல்லாத, முதலாளிகள் இல்லாத, வாணிகர்கள் இல்லாத ஒரு வாழ்வை நோக்கி—எழுச்சியுற்று வரும் எல்லா தேசங்களின் தொழிலாளர், விவசாயிகளுடனும் சமாதான சகவாழ்வு. *1914-18* ஆண்டுகளின் ஏகாதிபத்தியப் போர்—ஆங்கில-பிரெஞ்சு (மற்றும் ருஷ்யன்) முதலாளிகள் பிரிவு ஜெர்மன்-ஆஸ்திரியன் முதலாளிகள் பிரிவுக்கு எதிராக உலகைப் பங்கு போட்டுக் கொள்வதற்கு வேண்டி நடத்திய போர்—ஆசியாவை எழுச்சியுறச் செய்து, இதர இடங்கள் எல்லாவற்றிலும் போலவே அங்கும் சுதந்திரத்தை நோக்கிய, அமைதியான உழைப்பினை நோக்கிய, எதிர்காலப் போர்களுக்கு எதிரான ஆர்வத்தை வலுப்படுத்தியுள்ளது.

3. ''அமெரிக்காவுடன் சமாதானம் செய்து கொள்வதன் அடிப்படை என்ன?''

அமெரிக்க முதலாளிகள் நம் விவகாரங்களில் தலையிடாதிருப்பார்களாக. அவர்களை நாம் தொட மாட்டோம். நமது போக்குவரத்து மற்றும் தொழிற்துறைக்குப் பயன்படும் யந்திரமோ கருவிகளோ விற்பனை செய்தால், அவற்றுக்குத் தங்கத்தில் தொகை செலுத்தக் கூடத் தயாராக இருக்கிறோம். தங்கத்தில் மட்டுமன்றி மூலப் பொருள்கள் வகையிலும் தொகை செலுத்தத் தயாராக இருக்கிறோம்.

4. ''அத்தகைய சமாதானத்திற்குத் தடையாக இருப்பது என்ன?''

எங்கள் பக்கம் இருந்து எதுவும் இல்லை. தடை அமெரிக்கா (மற்றும் வேறு எந்த நாடுகளின்) முதலாளிகள் பக்கம் நிற்கும் ஏகாதிபத்தியமே.

5. ''அமெரிக்காவில் இருந்து ருஷ்யப் புரட்சியாளர்கள் நாடுகடத்தப்படுவது பற்றிய நமது கருத்து என்ன?''

நாம் அவர்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நமது நாட்டில் புரட்சியாளர்களைப் பற்றி நாம் அஞ்சவில்லை. உண்மையில் நாம் யாரைப் பற்றியும் அஞ்சவில்லை. அமெரிக்கா தனது குடிமக்கள் சில நூறு பேர் அல்லது ஆயிரம் பேர் பற்றி அஞ்சுமானால், நாம் அமெரிக்கா அபாயமானவர்கள் என்று கருதும் (குற்றவாளிகள் நீங்கலாக) எந்தக் குடிமக்களையும் வரவேற்கும் கருத்துடன் பேச்சுவார்த்தைகள் தொடங்கத் தயாராக இருக்கிறோம்.

6. ''ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையே பொருளாதார உறவுக்கான சாத்தியக்கூறுகள் எவை?''

துரதிருஷ்டவசமாக, அவை பேரளவில் இல்லை. ஏனெனில் ஷெய்டெமன்கள் மோசமான நேச சக்திகள். நாம் விதிவிலக்கு இன்றி எல்லா நாடுகளுடனும் உறவை நாடி நிற்கிறோம்.

7. ''போருக்குக் குற்றப்பொறுப்பாக இருந்தவர்களை மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்று நேச நாடுகள் கோரியுள்ளது பற்றி நமது கருத்து என்ன?''

இதைப்பற்றிக் காரியகரமாகப் பேசுவதானால், போருக்குக் குற்றப்பொறுப்பாக இருந்தவர்கள் எல்லா நாடுகளிலும் உள்ள முதலாளிகளே ஆவர். (நூறு ஹெக்டர் நிலத்துக்கு மேல் வைத்திருக்கும்) எல்லா நிலப்பிரபுக்களையும் (ஒரு லட்சம் பிராங்குக்கு மேல் மூலதனம் வைத்திருக்கும்) எல்லா முதலாளிகளையும் எங்களிடம் ஒப்படையுங்கள். பயன் தரும் வேலை செய்யும்படி அவர்களைப் பயிற்றுவிப்போம். வெட்கக்கேடான கேவலமான பழிகேடான, சுரண்டலாளர் மற்றும் காலனிகளைப் பாகப்பிரிவினை செய்யும் போருக்குத் தூண்டிகள் எனும் பாத்திரத்தில் இருந்து அவர்கள் முறித்துக் கொள்ளும்படிச் செய்வோம். இதன் பின் மிகு விரைவில் போர்கள் அறவே சாத்தியமற்றதாகிவிடும்.

8. ''ருஷ்யாவுடனான சமாதானம் ஐரோப்பாவின் பொருளாதார நிலைமைகள் மீது என்ன செல்வாக்குச் செலுத்தும்?''

தானியம், மென்சணல் மற்றும் இதர மூலப் பொருள்களுக்கு இயந்திரங்கள் பரிவர்த்தனை—இது ஐரோப்பாவுக்குப் பாதகமாக இருக்குமா? இது நிச்சயமாயும் அனுகூலமாகவே இருக்கும் என்பது தெளிவு.

9. ''எதிர் காலத்தில் சோவியத்துக்கள் ஓர் உலக சக்தியாக வளர்ச்சியுறுவது சம்பந்தமாக நமது கருத்து என்ன?''

உலகம் முழுவதும் எதிர் காலம் சோவியத் அமைப்பு முறைக்கே சொந்தம். மெய்நடப்புக்கள் இதை நிருபித்து விட்டன: ஒவ்வொரு மூன்று மாத காலத்தையும் வைத்து நிர்ணயித்துப் பார்த்தால் போதும், சோவியத்துக்களுக்கு ஆதரவாக அல்லது அனுதாபமாக இருக்கும் எந்த ஒரு நாட்டிலும் சிறு பிரசுரங்கள், புத்தகங்கள், பிரசார வெளியீடுகள், செய்திப்பத்திரிகைகள் பெருகிவரக் காணலாம். இது வேறுவகையாக இருக்க முடியாது. நகரங்களில் உள்ள தொழிலாளர்கள், கிராமங்களில் உள்ள தொழிலாளர்கள் பண்ணைத் தொழிலாளிகள் தினக்கூலித் தொழிலாளர்கள்

மற்றும் (கூலி உழைப்பைச் சுரண்டாதவர்களான) சிறு விவசாயிகள் அடங்கிய இந்தப் பேரளவான பெரும்பான்மை உழைக்கும் மக்கள் சோவியத்துக்கள் தமது கரங்களில் எல்லா ஆட்சி அதிகாரத்தையும் தருகிறது என்பதையும், நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்கிறது என்பதையும் புரிந்து கொண்டு விடும் பட்சத்தில்—உலகம் முழுவதும் சோவியத் அமைப்பு முறை வெற்றி சூடுவதை யாரால் தடுக்க முடியும்? இதைத் தடுப்பதற்கு எந்த வழியும் நான் அறியேன்.

10. ''ருஷ்யா இன்னும் வெளியிலிருந்து எதிர்ப்புரட்சி வரும் என்று அஞ்ச வேண்டுமா?''

துரதிருஷ்டவசமாக, ஆம். காரணம் முதலாளிகள் அசட்டுத்தனமான பேராசைப் பேர்வழிகள். இத்தகைய அசட்டுத்தனமான, பேராசைத்தனமான பல தலையீட்டு முயற்சிகளை அவர்கள் செய்திருக்கிறார்கள். எல்லா நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது முதலாளிகளுக்கு தீர்க்கமான மறுகல்வி புகட்டும் வரையில், இத்தகைய தலையீடு மீண்டும் நிகழும் அபாயம் உள்ளது.

11. ''ருஷ்யா அமெரிக்காவுடன் வர்த்தக உறவுகள் கொள்ளத் தயாரா?''

நிச்சயமாயும், எல்லா நாடுகளுடனும் அவ்வாறு செய்து கொள்ளத் தயாராக இருக்கிறது. நாம் பெருமளவு விட்டுக் கொடுத்து எஸ்தோனியாவுடன் சமாதானம் செய்து கொண்டிருப்பது நாங்கள் அதற்காக சில நிபந்தனைகள் பேரில் தொழிற்துறை சலுகைகள் தருவதற்குக்கூடத் தயார் என்பதை நிரூபித்து விட்டது.

வி. உலியானவ் (நி. லெனின்)

பிப்ரவரி 18, 1920

நியூயார்க் ஈவனிங் ஜர்னல்
(New York Evening Journal)
செய்தித்தாளில், இதழ் 12671ல்,
பிப்ரவரி 21ல், 1920ல்
ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 40,
பக்கங்கள் 145-147

"தி ஓர்ல்ட்" எனும் அமெரிக்கச் செய்திப்பத்திரிகையின் நிருபரான லிங்கன் அயருக்கு அளித்த பேட்டி

நேச நாடுகள் "சதுரங்க விளையாட்டு"

முற்றுகை நிலையை அகற்றி விடுவது பற்றிய நேச நாடுகளின் முடிவு பற்றிய அறிவிப்புக் குறித்து லெனின் சொன்னார்:

"எங்கள் மீது போலந்தின் மூலமாக தாக்குதலுக்குச் செய்யும் தயாரிப்புகளுடன் சேர்த்துச் சொல்லப்படுவதான இந்த தெளிவற்ற யோசனையின் பின்னே எத்தகைய நேர்மையையும் காண்பது கடினம். ருஷ்யன் கூட்டுறவுகளின் மூலமாக வர்த்தக உறவுகளை மீண்டும் நிறுவுதல் எனும் சுப்ரீம் கவுன்சிலின் யோசனை முதல் பார்வைக்குப் போதியளவு யுக்திப் பொருத்தமாய்த் தோன்றுகிறது. ஆனால் நமது சோவியத் வினியோக உறுப்பமைப்புகளுக்குள் தன்வயமாகிவிட்டதால் கூட்டுறவுகள் இனிமேல் இருக்கப் போவதில்லை. எனவே கூட்டுறவுகளுடன் காரியம் செய்வதாக நேச நாடுகள் பேசும் போது அதன் அர்த்தம் என்ன? நிச்சயமாயும் அது தெளிவாக இல்லை.

"எனவே இதை நெருக்கமாகப் பரிசீலிக்கும் போது இந்தப் பாரிஸ் முடிவு நேச நாடுகளின் சதுரங்க விளையாட்டில் நடத்தப்படும் வெறும் ஒரு காய் நகர்த்தலே என்பதும் இதன் உள்நோக்கங்கள் இன்னும் மூடுமந்திரமாகவே இருப்பதும் திடமாகத் தெரிகிறது என்று நான் சொல்கிறேன்."

லெனின் சற்று நேரம் நிறுத்தி, பிறகு தெளிவான புன் சிரிப்புடன் தொடர்ந்தார்:

"உதாரணமாக, வார்சாவுக்கு மார்ஷல் ஃபோஷ் வருகை தர உத்தேசித்திருப்பது இதை விட மூடுமந்திரமாக இருக்கிறது."

ஒரு போலிஷ் எதிர்த்தாக்குதல் நிகழக் கூடிய நிலை கண்டிப்பாக இருப்பதாக அவர் கருதுகிறாரா என்று நான் கேட்டேன். (ருஷ்யாவில் போல்ஷிவிக்குகளுக்கு எதிரான போலிஷ் காரர் தாக்கு பற்றியே முன்னவர் பின்னவர்களைத் தாக்குவது பற்றி அல்ல பேச்சு நிலவியதை நினைவு கூர வேண்டும்.)

''சந்தேகமே இல்லை நிச்சயம்'' என்று லெனின் பதிலளித்தார். ''கிளெமன்சோவும் ஃபோஷும் மிகவும் கண்டிப்பான கனவான்கள். ஆனால் இந்த ஆக்கிரமிப்புத் திட்டத்தை அவர்களில் ஒருவர் துவக்கிவைத்தார். மற்றவர் இதை நடத்தி முடிக்கப் போகிறார். இது மிகவும் மோசமான அச்சுறுத்தலே. ஆனால் இதை விட மோசமானவற்றை நாம் எதிரிட்டுள்ளோம். நேச நாடுகள் இன்னும் சாத்தியமற்ற செயல்களில் ஈடுபட்டு வருவது, அவ்வளவாக நமக்கு அச்சத்தை ஏற்படுத்தவில்லை; ஆனால் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. கல்ச்சாக் மற்றும் தெனீக்கினின் தாக்குதல்களால் அவர்கள் எப்படி அன்று ருஷ்யப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லையோ, அதே போல இன்று போலிஷ் தாக்குதலாலும் தீர்வு காண முடியாது போகும். போலந்துக்கு அதன் சொந்தத் தொல்லைகளே பலவாக இருக்கின்றன என்பது நினைவில் இருக்கட்டும். மற்றும் ருமேனியா உட்பட அதன் அண்டை நாடுகள் எதனிடமிருந்தும் போலந்து உதவி எதுவும் பெற முடியாது என்பது தெளிவு.''

எனினும், சமாதானம் முன்னை விட இப்போது நெருங்கி வருவது போல் தோன்றுகிறதே என்று நான் குறிப்பாகத் தெரிவித்தேன்.

''ஆம், அது உண்மைதான். சமாதானம் நம்முடன் வாணிகம் செய்வதன் இயற்கையான தொடர் முடிபாக இருக்குமானால், நேச நாடுகள் அதை அதிக காலத்துக்குத் தவிர்க்க முடியாது. கிளெமன்சோவுக்குப் பின் பதவிக்கு வந்த மில்லிரான் ருஷ்ய மக்களுடன் வாணிக உறவுகளை எதிர்நோக்குவது பற்றி விருப்பம் தெரிவித்திருப்பதாக நான் கேள்விப்பட்டேன். ஒருவேளை இது பிரெஞ்சு முதலாளிகள் மத்தியில் ஒரு மனமாற்றத்தைக் காட்டுவதாக இருக்கும் போலும். ஆனால்

இங்கிலாந்தில் சர்ச்சில் இன்னும் பலமாகவே இருந்து வருகிறார். நம்மோடு ஒருவேளை வாணிபம் செய்ய விரும்பும் லாயிட் ஜார்ஜ் சர்ச்சிலின் கொள்கையை ஆதரித்து வரும் அரசியல் மற்றும் நிதித்துறை நபர்களிடம் இருந்து பகிரங்கமாக முறித்துக் கொள்ளத் துணியவில்லை.''

அமெரிக்க ஐக்கிய நாடுகள் சோஷலிஸ்டுகளை ஒடுக்குகிறது

மற்றும் அமெரிக்காவோ?

''அங்கே என்ன நிகழ்ந்து வருகிறது என்பதைத் தெளிவாகக் காண்பது கடினம். உங்கள் வங்கி அதிபர்கள் எங்களைக் கண்டு முன் என்றையும் விட அதிகமாக பயப்படுகிறார்கள் போலும். மற்றவை எப்படியானாலும் சரி, உங்களது அரசாங்கம் வேறு எந்த அரசாங்கத்தை விடவும் பிற்போக்கு பிரெஞ்சு அரசாங்கத்தை விடவும்கூட அதிகமான வன்மை மிகுந்த அடக்குமுறைகள் சோஷலிஸ்டுகளுக்கு எதிராக மட்டுமன்றி, பொதுவாக தொழிலாளி வர்க்கத்துக்கு எதிராக ஏற்பாடு செய்து வருகிறது. வெளிப்படையாக அது வெளிநாட்டவர்களை அடக்குமுறைக்கு ஆளாக்கி வருகிறது. எனினும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் இல்லாவிடில் அமெரிக்காவின் கதி என்ன? உங்களது பொருளாதார வளர்ச்சிக்கு அவர்கள் பரம அவசியம்.

''இருப்பினும், ருஷ்யாவுடன் போர் செய்வதை விட ருஷ்யாவில் பணம் சம்பாதிப்பது அதிக விவேகமானது என்று சில அமெரிக்கத் தொழில் அதிபர்கள் உணரத் தொடங்கி இருப்பது நல்லதோர் அடையாளம். நமக்கு வேறு எந்த நாட்டினுடையதையும் விட அதிகமாக அமெரிக்க உற்பத்திப் பொருள்கள்—ரயில்வே எஞ்சின்கள், கார்கள் இத்தியாதி—தேவையாக இருக்கும்.''

மற்றும் உங்கள் சமாதான நிபந்தனைகளோ?

''அவை குறித்து மேலும் பேசுவது பயனற்றது. நாங்கள் எந்த நிபந்தனைகளின் மீது சமாதானம் செய்து கொள்ளத் தயாராக இருக்கிறோமோ, அவற்றின் நேர்மை குறித்து ஆக

ஏகாதிபத்தியவாதியான முதலாளிகள்கூட மறுத்துரைக்க முடியாது என்பதை உலகம் முழுதும் அறியும். நமது சமாதான விருப்பத்தை, சமாதானத்தின் தேவையை, வெளி நாட்டு மூலதனத்துக்கு மிகவும் தாராளமான சலுகைகளும் உத்தரவாதங்களும் தரத் தயாராக இருப்பதை நாம் திரும்பத் திரும்பக் கூறியுள்ளோம். ஆனால் சமாதானத்திற்காக வேண்டி நெரித்துக் கொல்லப்படுவதற்கு இடம் தர மாட்டோம்.

''நமது நாடு போன்ற ஒரு சோஷலிஸ்டு காமன் வெல்த் முதலாளித்துவ நாடுகளுடன் எல்லையின்றி வர்த்தகம் செய்யக் கூடாது என்பதகு எந்த முகாந்திரத்தையும் நான் காண முடியாது. நாம் அவர்களது முதலாளித்துவ ரயில்வே எஞ்சின்களையும் விவசாய யந்திரங்களையும் பயன்படுத்திக் கொள்வதில் தடை ஏதுமில்லை. அவர்கள் நமது சோஷலிஸ்டுக் கோதுமையை, மென்சணலை, பிளாடினத்தை பயன்படுத்திக் கொள்ளத் தடை எதற்கு? சோஷலிஸ்டுக் கோதுமை மற்ற கோதுமை போலவே ருசிக்கிறது, அல்லவா? அவர்கள் பயங்கரமான போல்ஷிவிக்குகளுடன் — அதாவது, சோவியத் அரசாங்கத்துடன்—வர்த்தக உறவுகள் கொள்ள வேண்டும் என்பது திண்ணம். ஆனால் அமெரிக்க உருக்கு முதலாளிகள் தமது போர்க்கால ஆயுத தளவாட பேரங்களில் அன்டான்டு அரசாங்கங்களுடன் செயல்பட்ட அளவுக்கு சோவியத்துக்களுடன் பேரம் செய்வது அவ்வளவு அதிகக் கடினமாக இருக்காது.''

ஐரோப்பா ருஷ்யா மீது சார்ந்திருக்கிறது

''இதனால்தான் கூட்டுறவுகள் மூலம் ருஷ்யாவுடன் வர்த்தகத்தை மீண்டும் தொடங்குவது பற்றிய இந்தப் பேச்சு நேர்மையற்றதாகவும் குறைந்தபட்சம் மூடுமந்திரமாகவும் நமக்குத் தோன்றுகிறது. இது உடனடியாகப் புரிந்து கொண்டு செயல்படுவதற்கான வெளிப்படையான, நேர்மையான யோசனையாக இல்லாமல் சதுரங்க விளையாட்டில் காய் நகர்த்துவது போல இருக்கிறது. மேலும் சுப்ரீம் கவுன்சில்

முற்றுகை நிலைமையை மெய்யாகவே அகற்றுவதாக முடிவு செய்தால் அதன் நோக்கங்களை ஏன் நம்மிடம் சொல்லவில்லை? பாரிசில் இருந்து எந்தவொரு அதிகாரபூர்வமான வாக்குறுதியும் நமக்குக் கிட்டவில்லை. நமக்குத் தெரிந்த சிறு விவரங்கள் யாவும் நமது ரேடியோ மூலம் திரட்டப்பட்ட செய்திப் பத்திரிகைத் தகவல்களில் இருந்து பெறப்பட்டவையே ஆகும்.

''ருஷ்யாவின் இன்றைய பொருளாதார இன்னல்கள் உண்மையில் உலகப் பொருளாதார இன்னல்களின் ஒரு பாகமே என்பதை ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் அரசறிஞர்கள் புரிந்து கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. பொருளாதாரப் பிரச்சினையை ஒரு சில தேசங்கள் அல்லது ஒரு சில தேசங்களின் குழுக்களின் நோக்கு நிலையில் மட்டுமன்றி, உலக நோக்கு நிலையில் இருந்து எதிர் கொள்ளாவிடில் இதற்குத் தீர்வு காண்பது சாத்தியமல்ல. ருஷ்யா இல்லாமல் ஐரோப்பா தன் கால்களில் எழுந்து நிற்க முடியாது. ஐரோப்பா சக்தி இழந்து விழுந்து கிடக்கும் போது அமெரிக்காவின் நிலை நெருக்கடியாகிறது. தனக்கு வேண்டியதை அதனுல் வாங்க முடியவில்லை என்ருல் அமெரிக்காவின் செல்வத்தால் அதற்கு என்ன நன்மை? அமெரிக்கா தான் குவித்துள்ள தங்கத்தை உண்ண முடியாது, உடுத்த முடியாது, அல்லவா? தான் கொடுக்க வேண்டியதற்குப் பரிவர்த்தனையாக அது விரும்பும் பொருள்களை ஐரோப்பாவால் கொடுக்க இயலும் வரையில் அமெரிக்கா ஐரோப்பாவுடன் லாபகரமான முறையில், அதாவது அதற்கு உண்மையிலேயே பயன் படும் அடிப்படையில், வாணிகம் செய்ய முடியாது. ஐரோப்பா பொருளாதார ரீதியில் எழுந்து நிற்கும் வரையில் அதற்கு இப்பொருள்களைத் தர முடியாது.''

உலகத்துக்கு ருஷ்யப் பண்டங்கள் தேவை

''ருஷ்யாவில் கோதுமை, மென்சணல், பிளாட்டினம், பொட்டாஷ் மற்றும் உலக முழுதும் மிகமிகத் தேவைப்படும் பல கனிப் பொருள்கள் உள்ளன. போல்ஷிவிசமோ போல்ஷி

விசம் இல்லேயோ அப்பொருள்களுக்காக முடிவில் உலகம் நம்மிடம் கட்டாயம் வர வேண்டும். இந்த உண்மை பற்றிய உணர்வு படிப்படியாகத் தோன்றி வரும் அடையாளங்கள் காணப்படுகின்றன. ஆனுல் இதற்கிடையே ருஷ்யா மட்டு மல்ல, மாருக ஐரோப்பா முழுவதுமே சின்னுபின்னப்பட்டு வருகிறது. சுப்ரீம் கவுன்சில் இன்னும் கொள்கை முரண்பாட் டில் ஈடுபடுகிறது. ருஷ்யாவும் ஐரோப்பாவும் கூட படுகே டான நாசத்தில் இருந்து காப்பற்றப்பட முடியும், ஆனுல் இது உடனே விரைவாகச் செய்யப்பட வேண்டும். சுப்ரீம் கவுன்சில் மிகவும் மெதுவாக, மிக மிக மெதுவாகச் செயல் படுகிறது. உண்மையில் இது எதையும் தீர்வு செய்யாமல், தூதுவர்கள் கவுன்சில் சார்பாக ஏற்கெனவே கலேக்கப்பட்டு விட்டது போலும். தன் இடத்தில் தற்போது இல்லாத, செத்துப் பிறந்ததான சர்வதேச சங்கத்தை[17] மட்டும் வைத் திருக்க வேண்டும். அதற்குரிய முதுகெலும்பை அமெரிக்கா தராமல் இந்த சர்வதேச சங்கம் உயிர் பெற்றுவருவது எப்படி சாத்தியம்?''

சோவியத் அரசாங்கம் ராணுவ நிலேமை குறித்து எந்த அளவுக்குத் திருப்தியடைந்திருக்கிறது என்று நான் கேட்டேன்.

''மிகவும் திருப்தி. நமக்கு எதிரான இனி மேற்பட்ட ராணுவ ஆக்கிரமிப்புக்கான அடையாளங்கள் போலந்தில் மட்டுமே நான் குறிப்பிட்டது போல இருந்தன. போலந்து அத்தகைய முரட்டுச் செயலில் இறங்குமானுல், இரு தரப்பி லும் அதிக துன்பதுயரங்கள் ஏற்படும், மேலும் பல உயிர்கள் வீணுகப் பலியாகும். ஆனுல் ஃபோஷ்கூட போலந்தியருக்கு வெற்றியைத் தர முடியவில்லே. அவர்களுடன் சர்ச்சிலே சேர்ந்து கொண்டு போராடினுலுங்கூட அவர்களால் நமது செஞ்சேனேயைத் தோற்கடிக்க முடியாது.''

இங்கு லெனின் தலேயை நிமிர்த்தி கடுமையாகச் சிரித் தார். பிறகு மேலும் அழுத்தமான பான்மையுடன் தொடர்ந் தார்:

''நமக்கு எதிராகத் தமது சொந்த சைனியங்களே அவை

அனுப்ப முடியுமானால், நேச நாட்டு வல்லரசுகள் ஏதேனும் ஒன்றால் நாம் நசுக்கப்படுவது திண்ணம். ஆனால் அதைச் செய்ய அவை துணிய மாட்டா. இதில் உள்ள அசாதாரண மான முரண்மெய்மை என்னவெனில், நேச நாடுகளின் எல்லையற்ற போர்வசதி ஆதாரங்களுடன் ஒப்பிடும் போது பலவீனமாக காட்சி தரும் ருஷ்யா, நேச நாடுகளால் அதற்கு எதிராக அனுப்பி வைக்க முடிந்த பிரிட்டிஷ் அமெரிக்க பிரெஞ்சு துருப்புக்கள் உள்ளிட்ட எல்லா ஆயுதப் படைகளை யும் நொறுக்கித் தகர்த்து விட்டது மட்டுமன்றி, நமது அண்டை நாடுகளுக்கு எதிராக அரசுறவுத்துறை மற்றும் தார் மீக வெற்றிகளையும் அடைய முடிந்தது என்பதே. பின்லாந்து நமக்கு எதிராகப் போராட மறுத்தது. எஸ்தோனியாவுடன் நாம் சமாதானமாக இருக்கிறோம். செர்பியா* மற்றும் லிது வேனியாவுடன் விரைவில் சமாதான உடன்படிக்கை ஏற்பட விருக்கிறது.[18] அன்டான்டு நாடுகள் இந்த சிறிய நாடு களுக்குப் பொருள்வகை ஊக்குவிப்புகள் வழங்கியும் கொடிய அச்சுறுத்தல்களைச் செய்த போதிலுங்கூட இவை நம்முடன் சமாதான உறவுகளை நிலைநாட்டிக் கொள்வதையே விரும் பின.''

உள்நாட்டு நிலை நம்பிக்கையூட்டுகிறது

''இது நாம் கொண்டுள்ள பிரம்மாண்டமான தார்மீக சக்தியை உறுதியாகவும் நிதர்சனப்படுத்திக் காட்டுகிறது. நமக்கு ஆக அருகாமையில் இருக்கும் அண்டை நாடுகளான பால்டிக் நாடுகள் அவற்றின் சுயாதீனம் மற்றும் நல்வாழ் வுக்கு எதிரான எவ்வித சதித்திட்டங்களும் இல்லாதவர்கள் நாம் மாத்திரமே என்பதை உணர்ந்து பாராட்டுகின்றன.''

ருஷ்யாவின் உள்நாட்டு நிலைமையோ?

---

* இது அந்தச் செய்திப்பத்திரிகை தந்த தவறான தகவல். செர்பியா சோவியத் ருஷ்யாவுடன் போர் நடத்தவில்லை. இங்கு குறிப்பிடப்படுவது லாத்வியா என்பது தெளிவு.—(ப-ர்.)

''அது நெருக்கடியானது, ஆனால் நம்பிக்கை ஊட்டு கிறது. வசந்தம் வருவதோடு குறைந்த பட்சம் நகரங்களைப் பஞ்சத்தில் இருந்து பாதுகாக்கும் அளவுக்கு உணவுப் பற்றுக் குறை சமாளிக்கப்பட்டு விடும். அப்போதும் கூடப் போதுமான எரிபொருள் வசதி இருக்கும். செஞ்சேனையின் வீரஞ்செறிந்த சாதனைகளின் உதவியால் நாட்டின் பொருளாதாரத்தின் மறுநிர்மாணப் பணிக் காலம் தொடங்கி விட்டது. இப்போது இந்த சைனியத்தின் பகுதிகள் உழைப்புச் சைனியங்களாக மாற்றியமைக்கப்படுகின்றன. ஓர் உயர்ந்த லட்சியத்தை நோக்கிப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில் மட்டுமே இந்த அசாதாரணமான புலப்பாடு சாத்தியம். நிச்சயமாயும், இதை முதலாளித்துவ நாடுகளில் செய்ய முடியாது. கடந்த காலத்தில் ஆயுதமேந்தி வந்த நமது பகைவர்களை எதிர்த்து வெற்றி பெறுவதற்காக சகலத்தையும் தியாகம் செய்தோம். இப்போது பொருளாதார மறுவாழ்வுக்காக நமது பலம் அனைத்தையும் ஈடுபடுத்துவோம். இது பல ஆண்டுகள் பிடிக்கும். ஆனால் இறுதியில் நாம் வெற்றி பெறுவது திண்ணம்.''

ருஷ்யாவில் கம்யூனிசம் எப்போது முழுமையடையும் என்று கருதுகிறீர்கள்? இந்தக் கேள்வி ஒரு புதிரான ஒன்று என்று நான் நினைத்தேன், ஆனால் லெனின் உடனடியாகப் பதிலளித்தார்:

''உரால் மற்றும் இதர இடங்களில் நிறுவ இருக்கும் மின்சார நிலையங்கள் மூலம், நமது தொழிற்துறை அமைப்பு முழுவதையும் மின்மயமாக்க முடிவு செய்திருக்கிறோம். இதற்குப் பத்து ஆண்டுகள் பிடிக்கும் என்று எங்கள் எஞ்சினீயர்கள் சொல்கிறார்கள். மின்மயமாக்கல் வெற்றிகரமாக நிறைவேறும் போது அது சமூகத்தின் பொருளாதார வாழ்வின் கம்யூனிஸ்டு நிர்வாகத்துக்கான பாதையில் முதலாவது முக்கியமான கட்டமாக விளங்கும். நமது தொழில்கள் யாவும் ஒரு பொதுவான ஆதாரத்தில் இருந்து தமது இயங்கு சக்தியைப் பெறும்; இந்த ஆதாரம் அவை அனைத்துக்கும் போதுமான அளவு மின்விசை வழங்கும் ஆற்றலுடையது. இது

எரிபொருள் தேடுவதிலான வீணுன போட்டியை இல்லா தொழிக்கும்; பொருள் உற்பத்தி நிறுவனங்களை நேர்த்தியான பொருளாதார அடித்தளத்தில் வைக்கும். இதில்லாவிடில் நாம் கம்யூனிஸ்டுக் கோட்பாடுகளுக்கு ஏற்பான முறையில் அவசியப் பண்டங்களின் பரஸ்பர பரிமாற்றத்தை முழு அளவில் சாதிப்பது என்பது முடியாது.

''இதற்கிடையே, இன்னும் மூன்ருண்டுகளில் ருஷ்யாவில் 5 கோடி மின்விளக்குகள் எரிய வேண்டும் என்று எதிர்பார்க்கிருேம். அமெரிக்காவில் 7 கோடி மின்விளக்குகள் உள்ளன என்று நான் கருதுகிறேன். ஆனல் மின்சாரம் குழந்தைப் பருவத்தில் இருக்கும் ஒரு நாட்டில் இதில் மூன்றில் இரு மடங்குக்கு மேல் உள்ள எண்ணிக்கை சாதனைக்கு மிகப் பெரியதாகும். நம்மை எதிர்கொண்டுள்ள மாபெரும் கடமைகளில் மிகவும் முக்கியமான கடமை மின்மயமாக்கலே என்று கருதுகிறேன்.''

சோஷலிஸ்டுத் தலைவர்களைக் கடுமையாக விமர்சித்தல்

நமது உரையாடலின் இறுதியில், இவை பிரசுரத்திற்காக அல்ல, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருக்கும் சில சோஷலிஸ்டுத் தலைவர்கள் சம்பந்தமாக லெனின் சில கடும் விமர்சனங்களை வெளியிட்டார். உலகப் புரட்சியை வெற்றிகரமாக ஊக்குவிக்கும் விஷயத்தில் இந்த கனவான்களிடையே அதற்கான திறமையோ குறைந்த பட்சம் அதற்கான விருப்பமோ இருப்பதாக அவர் நம்பவே கூட இல்லை என்பதை இந்த விமர்சனம் வெளிப்படுத்தியது. சோஷலிசத்தின் இந்த ''அதிகாரபூர்வத்'' தலைவர்கள் காரணமாக அன்றி பெரும்பாலும் அவர்களை எதிர்ப்பதாலேயே போல்ஷிவிசம் நிகழ்ந்து நிறைவுறும் என்று அவர் உணர்கிருர் போலும்.

தி ஓர்ல்ட் (*The World*)
செய்தித்தாளில்,
இதழ் *21368*ல்,
பிப்ரவரி *21*ல், *1920*ல்
ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி *40*,
பக்கங்கள் *150-156*

ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் (போ.) ஒன்பதாவது காங்கிரஸ்

மார்ச் 29—ஏப்ரல் 5, 1920

மத்தியக் கமிட்டியின் அறிக்கை
மார்ச் 29

தோழர்களே! எனது அறிக்கையைத் துவங்குவதற்கு முன்னால் இது முந்திய காங்கிரஸ் அறிக்கையைப் போலவே அரசியல் மற்றும் நிறுவன ஒழுங்கமைப்பு எனும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதை நான் எடுத்துக் கூற வேண்டும். இந்தப் பிரிவு, மத்தியக் கமிட்டி தனது வெளி அம்சம் பற்றிய, நிறுவன ஒழுங்கமைப்பு அம்சம் பற்றிய வேலையை எந்த வழியில் புரிகிறது என்பது குறித்து ஒருவர் முதன் முதலாக எண்ணிப்பார்க்கும்படி இட்டுச் செல்கிறது. யா. மி. ஸ்வெர்த்லோவ் மறைந்துவிட்ட பின் கட்சி தனது முதல் ஆண்டைக் கடந்து வந்திருக்கிறது; இந்த இழப்பு மத்தியக் கமிட்டியின் முழு நிறுவன ஒழுங்கமைப்பையும் நிச்சயமாயும் பாதித்துள்ளது. தோழர் ஸ்வெர்த்லோவ் போன்று இவ்வளவு வெற்றிகரமான ஒரு மனிதரில் நிறுவன ஒழுங்கமைப்பு வேலையும் அரசியல் பணியும் இணைந்ததை வேறு எவரிடமும் காண இயலவில்லை. அவரது பணியை ஒரு குழுவின் பணியின் மூலம் மாற்றீடு செய்வதற்கு முயலும் கட்டாயம் நமக்கு ஏற்பட்டுள்ளது.

பரிசீலனையின் கீழ் இருக்கும் இந்த ஆண்டின் போது மத்தியக் கமிட்டியின் நடப்பு வேலை மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு குழுக்களான மத்தியக் கமிட்டியின் நிறுவன ஒழுங்கமைப்பு பியூரோ மற்றும் மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோ[19] ஆகியவற்றால் நடத்தப்பட்டது. மேலும் இந்த இரு அமைப்புகளின் முடிவுகளிலும் ஒருங்கிணைப்பும் நிலையுறுதியும் பெறும்

பொருட்டு செயலாளர் இரண்டிலும் உறுப்பினராக இருந்தார். நடைமுறையில் அரசியல் பிரச்சினைகளை எடுத்துக் கவனிப்பது அரசியல் பியூரோவினதும் மற்றும் கட்சி சக்திகளை வினியோகிப்பது நிறுவன ஒழுங்கமைப்பு பியூரோவினதும் இன்றைய மிகவும் பிரதானமான பணியாகி விட்டது. இந்தப் பிரிவினை ஓரளவுக்கு செயற்கையானது என்பது சொல்லாமலே விளங்கும். நியமனங்கள் மற்றும் மாற்றங்கள் ஆகியவற்றில் வெளியீடாகாமல் எந்தக் கொள்கையையும் நடைமுறையில் நிறைவேற்றி முடிக்க முடியாது என்பது தெளிவு. இதன் பின்விளைவாக, நிறுவன ஒழுங்கமைப்பு பிரச்சினை ஒவ்வொன்றும் ஓர் அரசியல் உட்பொருளைப் பெறுகிறது; மற்றும் மத்தியக் கமிட்டியின் தனி ஓர் உறுப்பினர் கேட்டுக் கொண்டால் போதும், எந்த ஒரு பிரச்சினையையும் ஏதேனும் ஒரு காரணத்திற்காக ஓர் அரசியல் பிரச்சினையாகப் பரிசீலிக்கலாம் என்பது நிலைநாட்டப்பட்டுவிட்ட நடைமுறை ஆகிவிட்டது. மத்தியக் கமிட்டியின் பணிகளை வேறு எந்த வழியிலாவது பிரிவினை செய்ய முயல்வது உசிதமாக இருப்பது என்பது அரிது; மற்றும் நடைமுறையில் அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதையும் அது அரிதாக்கிவிடும்.

இந்த முறையில் காரியங்களை நடத்துவது மிகவும் நல்ல பலன்களை உண்டாக்கியுள்ளது: எந்த சந்தர்ப்பத்திலும் இந்த இரண்டு பியூரோக்களுக்கும் இடையே இடர்ப்பாடுகள் எதுவும் எழவில்லை. இந்த இரண்டு உறுப்பமைப்புகளின் வேலை மொத்தத்தில் ஒத்திசைவுடன் நடைபெற்று வந்துள்ளது; மற்றும் மத்தியக் கமிட்டியின் சித்தத்தையே தனிப்படவும் முற்ற முழுமையாயும் அனுசரிக்கும் வகையில் செயல்படும் செய்லாளர் இருப்பது நடைமுறை அமுலாக்கத்தை எளிதாக்குகிறது. எல்லாத் தப்பபிப்பிராயங்களையும் அகற்றும் பொருட்டு, நிறுவன ஒழுங்கமைப்பு பியூரோவிலோ, அல்லது அரசியல் பியூரோவிலோ அல்லது மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டத்தாலோ ஏற்கப்படும் மத்தியக் கமிட்டியின் கூட்டான முடிவுகள் மட்டுமே—இந்த முடிவுகள் மட்டுமே—கட்சியின் மத்தியக் கமிட்டியின் செயலாளரால் நிறைவேற்றப்படும் என்பதைத் துவக்கத்திலேயே வலியுறுத்திவிட

வேண்டும். இல்லாவிட்டால் மத்தியக் கமிட்டியின் வேலை சரியானபடி நடைபெற முடியாது.

மத்தியக் கமிட்டியின் அகத்தே வேலைகளை ஏற்பாடு செய்து கொள்வது பற்றிய இந்தச் சுருக்கமான குறிப்புக் களுக்குப் பின்னர், மத்தியக் கமிட்டியின் அறிக்கையை சமர்ப் பிக்கும் எனது பணியைத் தொடர்கிறேன். இதைச் சொல் லுக்குச் சொல் புரிந்து கொள்ளும் பட்சத்தில் மத்தியக் கமிட்டியின் அரசியல் வேலை மீதான ஓர் அறிக்கையைச் சமர்ப்பிப்பது என்பது மிகவும் கடினமான ஒரு பணியாகும். இந்த ஆண்டு அரசியல் பியூரோவின் முன் இருக்கும் வேலையில் ஒரு பெரும் பகுதி எழுந்துள்ள எந்தவொரு பிரச்சினை மீதான நடப்பு முடிவுகளைச் செய்வது பற்றியதாகும். இதில், அரசி யல் பிரச்சினைகள், எல்லா சோவியத் மற்றும் கட்சி நிறு வனங்கள் மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் எல்லா நிறுவன ஒழுங்கமைப்புகளின் செயல்பாடுகளையும் ஒருங்கிணைக்கும் பிரச்சினைகள், சோவியத் குடியரசு முழுமையின் வேலையை யும் நெறியாக்கம் செய்வதற்கு ஒருங்கிணைந்து தமது உச்ச பட்ச பங்கினை வகித்தல் ஆகிய பிரச்சினைகள் உட்படும். அயல்துறைக் கொள்கை மற்றும் உள்நாட்டுக் கொள்கை சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகள் மீதும் அரசியல் பியூரோ முடிவுகளை மேற்கொண்டது. இந்தப் பிரச்சினைகளைத் தோராயமாகக்கூட வரிசைப்படுத்திக் கூற முயல்வது இயல் பாயும் சாத்தியம் அல்ல. இந்தக் காங்கிரசுக்காக மத்தியக் கமிட்டியால் தயாரிக்கப்பட்டுள்ள அச்சிடப்பட்ட தாள்களில் ஒரு பொது பொழிப்புக்கான விவரப்பொருள்களைக் காண லாம்.[20] இந்தப் பொழிப்பை எனது அறிக்கையில் மறுப கர்ப்பு செய்ய முயல்வது எனது சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம். இது பிரதிநிதிகளின் அக்கறைக்குரியதாகவும் இருக் காது என்று கருதுகிறேன். அயல் நாட்டு உள்நாட்டு இரு வகைப்பட்ட அரசியல் பிரச்சினைகளின் அசாதாரணமான தொடர்ச்சியை இந்த அல்லது அந்தக் கட்சி அல்லது சோவியத் நிறுவன ஒழுங்கமைப்பில் வேலை செய்யும் நாம் அனைவரும் அன்றாடம் தடம் கண்டே வருகிறோம். சோவியத் ஆட்சியின் அரசாணைகளிலும் கட்சி நிறுவன ஒழுங்கமைப்பு

களின் செயல்பாடுகளிலும் ஒவ்வொரு திருப்பத்திலும் வெளிப் படுவது போன்று, இந்தப் பிரச்சினைகள் முடிவு செய்யப் படும் வழி தன் நிலையிலேயே கட்சியின் மத்தியக் கமிட்டியின் ஒரு மதிப்பீடாகும். பிரச்சினைகள் மிகப் பலவாக இருப்ப தால், அவற்றுக்கு மிகவும் அவசரமான நிலைமைகளின் கீழ் அடிக்கடி முடிவு காண வேண்டியிருக்கிறது என்பதையும், சம்பந்தப்பட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நன்ருகத் தெரிந்து கொண்டிருப்பதாலும், எல்லா கருத்துச் சாயல்களையும் அறிந்திருப்பதாலும், பரஸ் பரம் நம்பிக்கை கொண்டிருப்பதாலும் மட்டுமே இந்த வேலையைச் செய்ய முடிந்திருக்கிறது என்பதையும் நிச்சயம் சொல்லிவிட வேண்டும். இல்லாவிடில், இதைப் போல மூன்று மடங்கு பெரிய அளவிலான அமைப்புக்குக்கூட இது அதன் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருந்திருக்கும். சிக்கலான பிரச் சினைகள் பற்றி முடிவு செய்யும் போது கூட்டங்களுக்குப் பதில் டெலிபோன் மூலமான உரையாடல் அடிக்கடி நிகழ நேர்ந்துள்ளது. தெட்டத்தெளிவாயும் சிக்கலான தகராறுக் குரிய பிரச்சினைகள் விஷயத்தில் பராமுகம் காட்டப்பட மாட் டாது எனும் முழு உறுதிப்பாட்டுடன் இது செய்யப்பட்டது. இப்போது ஒரு பொது அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி என் னிடம் கேட்கப்படும் போது, நான் ஒரு காலவரிசை மதிப் பாய்வையும் விஷயங்களின் சேர்க்கையையும் தருவதற்குப் பதில், நேற்றைய—மேலும் சரியாகச் சொன்னல், கடந்த ஆண்டின்—அனுபவத்தை இப்போது நம்முன் உள்ள கடமை களுடன் இணைத்துக் காட்டுவது போன்ற பிரதானமான, மிகவும் முக்கியமான அம்சங்களை விளக்க முற்படுகிறேன்.

சோவியத் ஆட்சியதிகாரத்தின் ஒரு வரலாற்றை உரு வாக்குவதற்குரிய காலம் இன்னும் கனியவில்லை. அப்படியே கனிந்து இருந்தபோதிலும், வரலாற்ருளர்களாக ஆகும் உத் தேசம் நமக்கு இல்லை என்று—என் சார்பாகவும், ஒருக்கால் மத்தியக் கமிட்டியின் சார்பாகவும்—கூறிக் கொள்கிறேன். நாம் அக்கறை கொண்டிருப்பது நிகழ்காலம் மற்றும் வருங் காலம் பற்றியே. பரிசீலனைக்குரிய கடந்த ஆண்டை விவரப் பொருளாக, ஒரு படிப்பினையாக, நாம் மேலும் முன்செல்

வதற்கு உரிய ஒரு கால்வைப்புப் படியாக நாம் எடுத்துக் கொள்கிறோம். இந்தக் கருத்துக் கோணத்தில் இருந்து பார்த்தால் மத்தியக் கமிட்டியின் வேலை இருவகைப்படும்: போர்ப் பிரச்சினைகள் மற்றும் குடியரசின் சர்வதேச நிலைபாட்டை நிர்ணயிக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான வேலைகளும் உள்நாட்டு சமாதான கால பொருளாதார வளர்ச்சி பற்றிய வேலைகளும். பின்னவை கடந்த ஆண்டின் இறுதியிலும் ஒருவேளை, இந்த ஆண்டின் துவக்கத்திலும் மட்டுமே முன்வரத் தொடங்கின. அப்போது உள்நாட்டுப் போரின் தீர்மானகரமான முனைகளில் தீர்மானகரமான வெற்றிகளை நாம் பெற்றுவிட்டோம் என்பது முற்றும் தெளிவாகிவிட்டது. கடந்த வசந்தத்தின் போது நமது ராணுவ நிலைமை மிகவும் இடர்ப்பாடான ஒன்றாக இருந்தது. நாம் இன்னும் பல தோல்விகளை அனுபவிக்க வேண்டி இருந்தது என்பதும் எதிர்ப்புரட்சியாளர் மற்றும் அன்டான்டு நாடுகளின் சார்பில் நிகழ்ந்த புதிய மாபெரும் எதிர்பாராத எதிர்த்தாக்குதல்களை நாம் இன்னும் அனுபவிக்க வேண்டி இருந்தது என்பதும் இவற்றில் எதையும் நாம் முன்கூட்டி அறிந்திருக்க முடியவில்லை என்பதும் உங்களுக்கு நினைவு இருக்கும். எனவே இந்தக் காலப் பகுதியில் பெரும் பாகம் ராணுவப் பிரச்சினைக்கும் உள்நாட்டுப் போர் பற்றிய பிரச்சினைக்கும் ஒதுக்கப்பட வேண்டி இருந்தது முற்றிலும் இயல்பே. இந்தப் பிரச்சினை, மென்ஷிவிக்குகள் சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் மற்ற பிரதிநிதிகளது கட்சிகளுக்கு மட்டுமன்றி, எல்லா கோழைத்தனமான பேர்வழிகளுக்கும் எல்லா இடைத்தட்டு நபர்களுக்கும் தீர்வு காண முடியாததாகத் தோற்றமளித்தது. இது, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றும், ருஷ்யா பின்தங்கி நிற்கிறது, பலவீனப்படுத்தப்பட்டுள்ளது, உலகம் முழுவதன் முதலாளித்துவத்தை முறியடிப்பது என்பது, மேலை நாடுகளில் புரட்சி தவக்கம் அடைந்து வருவதைப் பார்க்கும் போது—சாத்தியமல்ல என்றும் முற்றிலும் நேர்மையாகவே சாற்றும்படி அவர்களைத் தூண்டியது. எனவே நாம் நமது நிலையைக் கட்டிக்காத்து முற்ற முழு உறுதியுடனும் பூரண திடநம்பிக்கை

யுடனும் நாம் வெற்றி அடைவோம் என்று பிரகடனம் செய்ய வேண்டி இருந்தது; ''எல்லாம் வெற்றிக்கே! எல்லாம் போருக்கே!'' எனும் கோஷங்களை அமுல்படுத்த வேண்டி இருந்தது.

இந்தக் கோஷங்களை நிறைவேற்றுவதற்கு, எல்லா சக்திகளும் போரில் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும் மற்றும் அன்டான்டு நாடுகள் நம் மீது திணித்துள்ள இந்தப் போரில் வெற்றி பெற வேண்டும் எனும் திடநம்பிக்கையில் நாம் சில மிகவும் அவசரமான தேவைகளை நிறைவு செய்யாமல் வேண்டுமென்றே முடிவின்றி முழு உணர்வுடனும் பகிரங்கமாகவும் விட்டு வைப்பதும், அடிக்கடி பலருக்கு உதவி மறுப்பதும் அவசியமாக இருந்தது. கட்சியின் விழிப்புணர்ச்சி மற்றும் அதன் கறாரான கட்டுப்பாட்டின் காரணமாயும், கட்சியின் அதிகாரச் செல்வாக்கு எல்லா அரசாங்க இலாகாக்களையும் நிறுவனங்களையும் ஒன்றிணைத்ததாலும், மத்தியக் கமிட்டி பிறப்பித்த கோஷத்தைப் பத்து நூறு ஆயிரம் பேர், இறுதியாக லட்சக் கணக்கான மக்கள் ஒரு மனிதன் போல ஏற்றுக் கொண்டதனாலும், நம்பற்கரிய தியாகங்கள் புரியப்பட்டதாலும்—இவை எல்லாவற்றின் காரணமாக மட்டுமே அந்த அற்புதம் சாத்தியமாயிற்று. அன்டான்டு நாடுகளின், உலகம் முழுவதன் ஏகாதிபத்தியவாதிகளின் ராணுவத்தலையீடுகள் இரண்டு, மூன்று மற்றும் நான்கு தடவைகள் கூட நடைபெற்றிருந்த போதிலும் கூட, இவை அனைத்தின் காரணமாகத் தான் நாம் வெற்றி பெற முடிந்தது. நிச்சயமாயும் இப்பணியின் இந்த அம்சத்தை மட்டும் நாம் அழுத்திக் கூறவில்லை, அதோடு கட்டுப்பாடு இல்லாமல், மையப்படுத்தல் இல்லாமல் இந்தப் பணியை நாம் என்றுமே வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்க முடியாது என்று இது நமக்குப் போதித்துள்ளது என்பதையும் நாம் திண்ணமாக மனதில் இருத்த வேண்டும். நாட்டை எதிர்ப்புரட்சியிடம் இருந்து காப்பாற்றுவதற்காகவும் தெனீக்கின், யுதேனிச் மற்றும் கல்சாக்குக்கு எதிராக ருஷ்யப் புரட்சியின் வெற்றியை உறுதிப்படுத்தவும் வேண்டி, நாம் புரிந்துள்ள நம்பற்கரியதான தியாகங்கள் உலக சமுதாயப் புரட்சிக்கு ஓர் உத்தரவாதமாகும். இதை

அடைவதற்கு நம்மிடம் கட்சிக் கட்டுப்பாடு, ஆகக் கறாரான மத்தியத்துவம், மற்றும் பத்து நூறு ஆயிரக்கணக்கான மக்களின் சொல்லற்கரிய கடினமான தியாகங்கள் இந்தக் கடமைகள் அனைத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்க உதவும் இவற்றை மெய்யாகவே செய்ய முடியும், வெற்றிகரமாக்க முடியும் எனும் பரம நிச்சயம் ஆகியவை அவசியமாயும் வேண்டும். இந்த நோக்கத்திற்காக, நமது கட்சியும் இந்தச் சர்வாதிகாரத்தைச் செயல்படுத்தி வரும் வர்க்கமான தொழிலாளி வர்க்கமும், ருஷ்யாவிலும் உலகம் முழுவதும் லட்சோபலட்சம் உழைக்கும் மக்களை ஒன்றிணைக்கும் சக்திகளாகத் தொண்டாற்ற வேண்டும்.

மொத்தத்தில், இந்த வரலாற்றுச் சிறப்புடைய அற்புதம் நிகழ்வதற்கு ஆழமான ஆதாரமாக இருக்கும் காரணம் என்ன, ஒரு பலவீனமான சோர்வுற்ற ஒரு பின்தங்கிய நாடு உலகிலேயே ஆக வலிமை மிக்க நாடுகளைத் தோற்கடிக்க முடிந்தது ஏன் என்பன குறித்து சற்றே சிந்தனை செலுத்துவோமானல் இதற்குக் காரணம் மத்தியத்துவம், கட்டுப்பாடு மற்றும் ஈடிணையற்ற தன்னலத்தியாகமே என்பதைக் கண்கிறோம். என்ன அடிப்படையில்? கல்விப் பயிற்சி மிகக் குறைவாக இருக்கும் நாட்டில் லட்சக் கணக்கான உழைக்கும் மக்கள் நிறுவன ஒழுங்கமைப்பையும், இந்தக் கட்டுப்பாட்டையும் மத்தியத்துவத்தையும் பெற முடிந்தது. இதற்கு ஒரே காரணம் தொழிலாளர்கள், முதலாளித்துவம் எனும் பள்ளியில் பயின்று சென்றார்கள் முதலாளித்துவத்தால் ஒற்றுமைப் படுத்தப்பட்டார்கள்; முன்னேறிய நாடுகள் அனைத்திலும் பாட்டாளிகள் ஒன்றுசேர்ந்திருந்தார்கள்—நாடு அதிக முன்னேற்றம் அடைந்த அளவுக்கு அவர்கள் பெரியளவில் அதிகமாக ஒன்றுசேர்ந்தார்கள். மறு புறம் சொத்து, முதலாளித்துவ சொத்து, பண்ட உற்பத்தியில் சிறு சொத்து ஒற்றுமையைக் குலைக்கிறது. சொத்து ஒற்றுமையைக் குலைக்கிறது. அதே போதில் நாம் ஒன்று சேருகிறோம். உலகம் முற்றுமுள்ள லட்சோபலட்சம் உழைக்கும் மக்களை மேலதிகமாயும் ஒன்று சேர்க்கிறோம். இது கண் அற்றோருக்கும் குறைந்த பட்சம் கண் இருந்தும் காணாத பேர்களுக்கும் கூட இப்போது தெளி

வாகும். காலம் செல்லச் செல்ல நமது எதிரிகள் மேலும் மேலும் ஒற்றுமை குலையலாயினர். முதலாளித்துவச் சொத்து மூலம், பண்ட உற்பத்தி கீழிலான தனியார் சொத்து மூலம் அவர்களது ஒற்றுமை குலைக்கப்பட்டது. உபரி தானியத்தை அளவு மீறிய விலைக்கு விற்பனை செய்து கொள்ளைலாபமடித்து பட்டினி கிடக்கும் தொழிலாளர்களுக்குப் பிரதிகூலமாக தம்மைச் செல்வந்தர்களாக்கிக் கொண்ட சிறு உடைமையாளர் ஆயினும் சரி அல்லது பல்வேறு நாடுகளின் முதலாளிகளாயினும் சரி அவர்களது ஒற்றுமை குலைக்கப்பட்டது. அவர்களிடம் ராணுவ வலிமை இருந்த போதிலும், உலகின் முன்னேறிய தேசங்கள் அனைத்தின் ''மாபெரும் ஒற்றுமை சங்கமான'' ''சர்வதேசச் சங்கத்தை'' உருவாக்கிய போதிலும் அவர்களது ஒற்றுமை குலைக்கப்பட்டது. இந்த விதமான ஒற்றுமை வெறும் கற்பனை, படுமோசமான மோசடி, பச்சைப் பொய். உலகைப் பங்கு போட்டுக் கொள்ளவும், பிற நாடுகளின் மீது ஆட்சி செலுத்தும் உரிமைகளை வினியோகிக்கவும் முயன்ற இந்த இகழார்ந்த ''சர்வதேசச் சங்கம்''—உடனே வெடித்து அழிந்த சோப்புக் குமிழியாகவே இந்த இகழார்ந்த கூட்டணி நிரூபணமாயிற்று—தரும் மாபெரும் உதாரணம் இதுவே. இதற்குக் காரணம் இது முதலாளித்துவச் சொத்துடைமையின் மீது தோற்றுவிக்கப்பட்ட கூட்டணி என்பதேயாகும். இதனை நாம் விரிவான வரலாற்று அளவில் பார்த்திருக்கிறோம். நமது லட்சியம் நீதியானது எனவும், அக்டோபர் புரட்சியின் வெற்றி பரம நிச்சயம் என்றும், நாம் முன்வைத்துள்ள லட்சியத்தின் மீது இடர்ப்பாடுகள் முட்டுக்கட்டைகள் யாவும் இருந்தபோதிலும் எல்லா நாடுகளிலுமுள்ள லட்சோப லட்சம் உழைக்கும் மக்கள் ஒன்று திரள்வார்கள் என்றும் நமக்கு அறிவுறுத்திய அடிப்படை உண்மையை இது உறுதிப்படுத்துகிறது. நமக்கு நேச சக்திகள் இருந்தன என்பதையும், இந்த மதிப்பிற்குரிய மிகவும் இடர்ப்பாடான கடமையினை வரலாறு ஒப்படைத்திருக்கும் ஒரு நாடு தன்னலமற்ற தியாக உணர்வினை வெளிக்காட்டினால் மட்டுமே போதும், இந்த நம்பற்கரிய தியாகங்களுக்கு நூறு மடங்கு பிரதிபலன் கிடைக்கும் என்பதையும், நாம்

நமது நாட்டில் உறுதியாக நிற்கும் ஒவ்வொரு மாதமும் எல்லா நாடுகளில் இருந்தும் லட்சோப லட்சம் நேச சக்திகளைப் பெற முடியும் என்றும் நாம் அறிவோம்.

நாம் வெற்றியடைய முடிந்ததன், நாம் கட்டாயம் வெற்றியுற இருந்ததன் முகாந்தரம் குறித்து மொத்தத்தில் சற்றே சிந்தனை செலுத்திப் பார்ப்போமானல், உலகின் ஆகச் சக்திவாய்ந்த அரசாங்கங்களோடும் மூலதனத்தின் பிரதிநிதிகளோடும் எல்லா வகையான பந்தங்களாலும் சம்பிரதாயமாக பிணைப்புண்டிருந்த நமது எதிரிகள் அனைவரும்—சம்பிரதாயமாக எவ்வளவுதான் ஒன்றுபட்டிருந்த போதிலும்—உண்மையில் ஒற்றுமை குலைந்தே கிடந்தார்கள் என்பதே இதற்கு ஒரே ஒரு காரணம் என்பதைக் காணலாம். அவர்களது உள் உறவுகள் உண்மையில் அவர்களை ஒற்றுமை குலைத்தன; ஒருவரை இன்னொருவருடன் மோத விட்டன. முதலாளித்துவச் சொத்து அவர்களைச் சிதைவுறச் செய்தது; நேச சக்திகளாக இருந்தவர்களைக் காட்டாள விலங்குகளாக மாற்றி விட்டது. இதன் விளைவாக, அவர்கள் சோவியத் ருஷ்யாவானது அர்ஹாங்கேல்ஸ்கில் இறங்கியுள்ள பிரிட்டிஷ் படையாளிகள் மத்தியிலும், செவஸ்தோப்பலில் இறங்கிய பிரெஞ்சு கடற்படையாளிகள் மத்தியிலும், எவ்வித விதிவிலக்கும் இன்றி எல்லா முன்னேறிய நாடுகளிலும்—இவற்றில் சமூக-சமரசவாதிகள் மூலதனத்திற்கு ஆதரவாக இருந்தார்கள்—எல்லா நாடுகளிலும் இருக்கும் தொழிலாளர் மத்தியிலும் ஆன தனது ஆதரவாளர்களைப் பெருக்கி வருகிறது என்பதைக் காணத் தவறி விட்டார்கள். இறுதியாக ஆய்ந்து பார்க்கும் போது இதுவே நமது வெற்றியை உறுதிபடச் செய்த அடிப்படைக் காரணம், மிகவும் உள்ளீடான காரணம் என்பதும், இதுவே இன்னும் நமது வலிமையின் பிரதானமான, வெல்லற்கரிய, வற்ருத தலையூற்று என்பதும் தெளிவாகிறது. மேலும், நாம் பாட்டாளிகளின் முன்னணிப் படையின், அதன் முன்னணிக் கட்சியின் மூலம் நமது நாட்டில் முழு அளவில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் அதன் சக்திகளின் அதிகப்பட்ச ஒற்றுமையினையும் அடையும் போது நாம் உலகப் புரட்சியை எதிர்பார்க்கலாம் என்பதை

வலியுறுத்தவும் இது நம்மை அனுமதிக்கிறது. இது உண்மையில் சித்தத்தின் வெளியீடாகும், போராடுவோம் எனும் பாட்டாளிகளின் வைராக்கியத்தின் வெளியீடாகும், எல்லா நாடுகளின் லட்சக் கணக்கான, கோடிக் கணக்கான தொழிலாளர்களின் நேச அணியை சாதனையாக்குவோம் எனும் பாட்டாளிகளின் வைராக்கியத்தின் வெளியீடாகும்.

முதலாளிகள் மற்றும் இரண்டாம் அகிலத்தின் போலி சோஷலிஸ்டுகள் ஆன கனவான்கள் இது வெறும் பிரசாரப் பேச்சு என்று சாற்றியுள்ளனர். ஆனால் இது அவ்வாறானது அல்ல. ருஷ்யாவின் உள்நாட்டுப் போரின் கொடுமையான வேதனைமிக்க அனுபவத்தால் எண்பித்துக் காட்டப்பட்ட வரலாற்று மெய்ப்பாடாகும் இது. காரணம் இந்த உள்நாட்டுப் போர் உலக மூலதனத்துக்கு எதிரான போராகும்; இந்த மூலதனம் பூசல்களுக்கு மத்தியில் தன்னைத் தானாகவே சிதைத்துக் கொண்டது, தன்னைத் தானே கபளிகரம் செய்து கொண்டது. அதே போதில் நாம் பசியாலும் நச்சுக் காய்ச்சலாலும் பாட்டாளிகள் அழிந்து வந்த ஒரு நாட்டில் முன் என்றையும் விட அதிக உறுதியுடன் அதிக வலிமையுடன் வெளிவந்தோம். இந்த நாட்டில் மிகவும் அதிகரித்த அளவில் உழைக்கும் மக்கள் ஆதரவைப் பெற்றோம். எதைச் சமரசவாதிகள் பிரசாரப் பேச்சு என்று அழைத்தார்களோ, எதைப் பார்த்து முதலாளிகள் வழக்கமாக இகழ்ச்சியாகச் சிரித்தார்களோ, அது நமது புரட்சியின் இந்த ஆண்டில், குறிப்பாயும் பரிசீலனையின் கீழ் உள்ள இந்த ஆண்டில், ஒரு கடைசியான மறுக்க முடியாத வரலாற்று மெய்மையாக மாற்றமடைந்து இருக்கிறது. இதனை நாம் சாதனையாக்கி இருப்பதால், முந்திய புரட்சிகள் எதையும் விட, அளவிட முடியாத அளவுக்கு விரிவான, உலகளாவிய அடித்தளத்தை நாம் கொண்டிருக்கிறோம் என்பதற்கு இது சான்று என்று, மிகவும் மாறாத திடநம்பிக்கையுடன் நம்மால் கூற முடிகிறது. நம்மிடம் ஒரு சர்வதேச நேச அணி இருக்கிறது; இந்த நேச அணி எங்கும் பதிவு செய்யப்படவில்லை; இதற்கு சம்பிரதாயமான உருவகம் தரப்படவில்லை; ''அரசியல் சட்ட விதிகளின்'' படி இதற்கு அர்த்தமே இல்லை. ஆனால் இது சிதைவுற்று வரும்

முதலாளித்துவ உலகில் உள்ளபடியே எல்லாமாகவும் விளங்குகிறது. நாம் வாய்ப்பிடங்களைப் பெற்று வரும், அல்லது நம்பற்கரிய வலிமை வாய்ந்த விரோதிக்கு எதிராக கேவலம் உறுதியுடன் நிற்கும் ஒவ்வொரு மாதமும், நமது நிலை சரி என்பது உலகம் முழுவதற்கும் நிரூபிக்கப்பட்டது; நமக்கு கோடிக் கணக்கான புதிய ஆதரவாளர்களைக் கொண்டு வந்தது.

இந்த நடைமுறை இடர்ப்பாடான ஒன்ருக தோன்றி வந்துள்ளது; இதைப் பின்பற்றி மிகப் பெரும் தோல்விகள் ஏற்பட்டிருக்கின்றன. பரிசீலனையில் இருக்கும் இந்த ஆண்டிலேயே பின்லாந்தில் அரக்கத்தனமான வெள்ளைப்படையினர் பயங்கரத்தைத்[21] தொடர்ந்து ஹங்கேரியப் புரட்சி தோற்கடிக்கப்பட்டது.[22] அது தமது நாடாளுமன்றங்களை ஏமாற்றி ருமேனியாவுடன் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்ட அன்டான்டு நாடுகளின் பிரதிநிதிகளால் நெரித்து அழிக்கப்பட்டது.

வெள்ளைப்படையின் பயங்கரம் மூலம் ஹங்கேரியப் புரட்சியை நசுக்குவதற்கு சர்வதேச அன்டான்டுக் கூட்டணி புரிந்த இந்தச் சதி, துரோகத்தின் படுநீசத்தனமான ஒரு செயல் ஆகும். ஜெர்மன் புரட்சியை நெரித்து அழிப்பதற்காக ஜெர்மன் சமரசவாதிகளுடன் எந்த ஒரு உடன்பாட்டுக்கும் வர அவர்கள் தயாராக இருந்தார்கள் எனும், லீப்க்னெஹ்டை நேர்மையான ஜெர்மானியர் என்று சாற்றிய இந்தப் பேர்வழிகள் இந்த நேர்மையான ஜெர்மானியர் மீது ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்து கொண்டு வெறி நாய்களைப் போலப் பாய்ந்தார்கள் எனும் மெய் நடப்பை சொல்லத் தேவையில்லை—எண்ணிப் பார்க்கக் கூடிய அடக்குமுறை எல்லைகள் அனைத்தையும் அவர்கள் மீறினர்கள். ஆனல் அவர்களிடமிருந்து ஏற்பட்டதான அடக்குமுறைச் செய்கை ஒவ்வொன்றும் நம்மை வலுப்படுத்தின, கெட்டிப்படுத்தின; அதே போது அவர்களை அரித்தழித்தன.

நாம் பெற்ற இந்த அடிப்படை அனுபவம் நம்மால் முதலாவதாயும் முக்கியமானதாயும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

இங்கு,நாம் ஏன் வெற்றி அடைந்தோம், உள்நாட்டுப் போரில் புரிந்த இந்தத் தியாகங்களுக்கு ஏன் நூறு மடங்கு அதிகமாக கைம்மாறு கிட்டியுள்ளது, இன்னெரு போரில், இரத்தம் சிந்தாத இன்னெரு போர் முனையில் நடக்கும் போரில், வடிவில் மட்டும் மாற்றமடைந்த போரில், பழைய முதலாளித்துவ உலகின் அதே பழைய பிரதிநிதிகளாலும் அடிவருடிகளாலும் தலைவர்களாலும் ஆனல் இன்னும் ஊக்கமான முறையில் இன்னும் வெறித்தனமான வகையில் இன்னும் அதிக ஆவேசத்துடன் நமக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் போரில், வெற்றி பெறும் பொருட்டு இந்த அனுபவத்தின் அடிப்படையில் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும், என்பன குறித்த ஓர் ஆய்வு மற்றும் விளக்கத்தை நமது கிளர்ச்சியை யும் பிரசாரத்தையும் அடிப்படையாக்கி நடத்த விசேஷ கவனம் செலுத்த வேண்டும். வேறு எதை விடவும் அதிக மாக நமது புரட்சியானது, ஒரு புரட்சியின் வலிமை, அதன் தாக்குதலின் வீரியம், அதன் ஊக்கம், வைராக்கியம், அதன் வெற்றி மற்றும் அதன் வாகைசூடல் ஆகியவை, முதலாளி கள் அதோடு கொண்டுள்ள எதிர்ப்பின் வலிமையைத் தீவிர மாக்கும் எனும் விதியை நிரூபித்து விட்டது. நாம் அதிகமாக வெற்றிவாகை சூடுந்தோறும் அந்தளவுக்கு அதிகமாக முத லாளித்துவச் சுரண்டலாளர்கள் ஒன்றுசேரக் கற்றுக் கொள் கிருர்கள், அந்த அளவுக்கு அதிகமாக அவர்கள் தமது தாக்கு தல்களில் உறுதியாக இருக்கிருர்கள். ஏனெனில், உங்கள் எல்லோருக்கும் தெளிவாக நினைவில் இருக்கும்—காலம் கடந்து சென்றுள்ளதை வைத்து நிர்ணயித்தால் அவ்வளவு நெடுங்காலத்துக்கு முந்தியதல்லாத, ஆனல் நிகழ்ச்சிகளின் அணிவரிசையை வைத்துப் பார்த்தால் நீண்ட காலம் முந்திய தான—அக்டோபர் புரட்சியின் துவக்கத்தில் போல்ஷி விசம் என்பது ஏதோ ஒரு மனம் போன போக்கு என்று கருதப்பட்டது. பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தீனமான வளர்ச்சியையும் பலவீனத்தையும் பிரதிபலித்த இந்தக் கருத்தை ருஷ்யாவில் மிக விரைவில் கைவிட வேண்டி நேர்ந்தது, இப்போது ஐரோப்பாவிலும் இது கைவிடப்பட்டு விட்டது. போல்ஷிவிசம் ஒரு உலகு தழுவிய புலப்பாடாகி

விட்டது; தொழிலாளர் புரட்சி தலை உயர்த்தி விட்டது. 1905 மரபுகளைப் பின்பற்றி நமது சொந்த அனுபவத்தை வளர்த்துக் கொண்டு அக்டோபரில் உருவாக்கிய சோவியத் அமைப்புமுறை உலக வரலாற்று முக்கியத்துவம் உடைய ஒரு புலப்பாடாகி விட்டது.

இப்போது உலகம் எங்கும் இரு முகாம்கள் முற்றும் உணர்வுபூர்வமாக ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்கின்றன, இதைச் சிறிதும் மிகைப்படுத்தாமலே கூற முடியும். இந்த ஆண்டில் மட்டுமே அவை ஒரு தீர்மானகரமான மற்றும் இறுதியான போராட்டத்தில் பின்னி நிற்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். இப்போது, இந்தக் காங்கிரஸ் நடந்து வரும் தருணத்திலேயே, நாம் போரில் இருந்து சமாதானத் திற்கான, ஒருவேளை ஆகப்பெரிதான மிகவும் உக்கிரமான ஆனால் இன்னும் முழுமையுறாத மாறுதல் கட்டங்களில் ஒன்றின் ஊடே கடந்து சென்று கொண்டு இருக்கிறோம். ''அடாவழி உரிமை கொள்வோரை, கொள்ளைக்காரர் களை, ஆட்சி அதிகாரத்தருக்கர்களை, ஜனநாயகத்தின் விரோதி களை, போல்ஷிவிக்குகளை எதிர்த்துப் போராடுவதை என்றுமே நிறுத்த மாட்டோம்'' என்று உலகம் முழுதிற்கும் உரத்த குரலில் சாற்றியவர்களான அன்டான்டின் ஏகாதிபத் திய வல்லரசுகளின் தலைவர்களுக்கு என்ன நேர்ந்தது என் பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். அவர்கள் முதலில் முற்றுகை நிலையை அகற்றினார்கள் என்பதையும் சிறு அரசு களை ஒன்றிணைக்க அவர்கள் செய்த முயற்சிகள் தோல்வி யடைந்தன, காரணம் நாம் எல்லா நாடுகளின் தொழிலாளர் களை மட்டுமன்றி சிறிய நாடுகளின் முதலாளிகளையும் நமக்கு ஆதரவாக நிற்கும்படிச் செய்தோம், ஏனெனில் ஏகாதிபத் தியவாதிகள் தமது சொந்த நாடுகளின் தொழிலாளர்களை மட்டுமன்றி சிறிய நாடுகளின் முதலாளிகளையும் கூட ஒடுக்கி வருகிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். முன்னேறிய நாடுகளின் ஊசலாடும் முதலாளிகளின் ஆதரவை நாம் பெற் றோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இன்றுள்ள நிலை என்ன வெனில், அன்டான்டுக் கூட்டணி அதன் முன்னாள் வாக்குறுதி களையும் உத்தரவாதங்களையும் தகர்த்து வருகிறது, இதற்

கிடையே பல்வேறு ருஷ்ய வெண்காவலர் படைப்பிரிவு களுடன் டஜன் கணக்கான தடவைகள் அது செய்துகொண்ட உடன்படிக்கைகளை மீறி வருகிறது. இப்போது இந்த உடன் படிக்கைகளைப் பொருத்தவரை அன்டான்டுக் கூட்டணி இழப் பாளி. ஏனெனில் அது அவற்றுக்காகக் கோடிக் கணக்கில் பணம் ஊதாரியாகச் செலவழித்தது, ஆனால் வேலையை முடிக்கத் தவறி விட்டது.

இப்போது முற்றுகை நிலையை அகற்றிவிட்டு அது சோவியத் குடியரசுடன் உண்மையில் சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கி விட்டது. ஆனால் இப்போது அது இந்தப் பேச்சுவார்த்தைகளை முழுமை செய்யவில்லை. எனவே சிறிய நாடுகள் அதனிடமும் அதன் வலிமையிலும் நம்பிக்கை இழந்து விட்டன. எனவே, அன்டான்டின் நிலைபாடு, அயல் துறை விவகாரங்களிலான அதன் நிலைபாடு சட்டத்தின் வழக்கமான கருத்துருக்களின் நோக்குநிலையில் இருந்து எல்லா வரையறைகளையும் மீறுவதாக உள்ளது என்பதை நாம் காண் கிறோம். அன்டான்டு அரசுகள் போல்ஷிவிக்குகளுடன் சமா தானமாகவும் இல்லை, போர் நிலையிலும் இல்லை; அவை நம்மை அங்கீகரித்தும் உள்ளன, அங்கீகரிக்காமலும் இருக்கின்றன. தாம் ஏதோ சிலவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக மிகவும் திடமான நம்பிக்கை கொண்டிருந்த நமது எதிராளி களின் மத்தியிலான இந்தப் படுமோசமான குழப்பம், அவர் கள் எதையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை, மாறாக அவர்கள் தமக்குள்ளே பூசலிட்டுக் கொள்ளும் ஒரு கும்பு முதலாளித் துவ விலங்குகளே என்பதையும், நமக்கு எவ்விதத் தீங்கும் இழைப்பதற்கு அறவே திறமை அற்றவர்கள் என்பதையும் நிரூபிக்கிறது.

லாத்வியா அதிகாரபூர்வமாக நம்மிடம் சமாதான யோசனைகளை முன்வைத்துள்ளது என்பதே இன்றைய நிலைமை. பின்லாந்து ஒரு தந்திச் செய்தி அனுப்பியுள்ளது. அது அதி காரபூர்வமாக எல்லைப்பாகுபாடு பற்றிக் குறிப்பிட்ட போதி லும், ஒரு சமாதானக் கொள்கைக்கான திருப்பத்தையே உண்மையில் உணர்த்துகிறது.[23] கடைசியாக போலந்து, எதன் பிரதிநிதிகள் இதன் முன்பும் இப்போதும் கூட இவ்

வளவு உள்ளுரத்துடன் பலத்தைக் காட்டுவதாக அச்சுறுத்தி வரும் போலந்து, இதன் முன்பும் இப்போதும், வண்டி வண்டியாக ஆயுதங்களையும், ருஷ்யாவுடன் அது போராட்டத்தைத் தொடரும் பட்சத்தில் எல்லாவற்றிலும் உதவி கிட்டும் எனும் வாக்குறுதிகளையும் பெற்று வரும் போலந்து, அதன் அரசாங்கத்தின் உறுதியற்ற நிலைமை எந்த ஒரு ராணுவச் சூதாட்டத்திற்கும் இணங்கும்படிக் கட்டாயப்படுத்துகிற போலந்துங்கூட சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்குமாறு நம்மை அழைத்திருக்கிறது.[24] நாம் மிகமிக எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். நமது கொள்கை மிகவும் கவனமாகச் சிந்தித்துத் தெளியப்பட வேண்டும். இங்கு சரியான கொள்கையைக் கண்டறிவது மிகமிகக் கடினம். ஏனெனில் வண்டி எந்தத் தடத்தில் நிற்கிறது என்பது இன்னும் யாருக்கும் தெரியாது—எதிரிக்கே தாம் அடுத்தபடி என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றித் தெரியாது. பிரெஞ்சுக் கொள்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவோரும் போலந்தைத் தூண்டிவிடுவதில் மிகவும் கண்ணும் கருத்துமாய் இருப்பவர்களுமான இந்த கனவான்களும், நிலப்பிரபுத்துவ-முதலாளித்துவப் போலந்தின் தலைவர்களும் அடுத்து என்ன நிகழும் என்பதை அறியார்; தாம் விரும்புவது என்ன என்பதையும் அறியார். இன்று அவர்கள் சொல்கிறார்கள்: ''கனவான்களே, எங்களுக்குச் சில வண்டிகளில் ஏற்றிய துப்பாக்கிகளும் சில கோடிகள் பணமும் கிடைக்கட்டும், நாம் போல்ஷிவிக்குகளை எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கிறோம்.'' போலந்தில் பரவிவரும் வேலைநிறுத்தங்கள் பற்றிய செய்திகளை அவர்கள் மறைக்கிறார்கள்; மெய்விவரங்களை ஒளிக்க வேண்டி தணிக்கை நடவடிக்கைகளைக் கடுமையாக்குகிறார்கள். ஆனால் போலந்தில் புரட்சி இயக்கம் வளர்ந்து வருகிறது. ஜெர்மன் ''கர்னீலவ் கலகத்துக்குப்''[25] பிறகு தொழிலாளர்கள் செஞ்சேனைகளைப் படைத்துருவாக்கி வரும் இன்று ஜெர்மனியில் புரட்சியின் வளர்ச்சி தனது புதிய தோற்றத்தில், தனது புதிய கட்டத்தில் பரவி வருவதானது (ஜெர்மனியில் இருந்து வந்த அண்மைக் கால செய்திகளில் இருந்து பார்க்கக் கூடிய வகையில்) தொழிலாளர்களின்

உணர்வு வேகம் மேலும் மேலும் அதிகரித்து வருவதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. ''இது மிகவும் காலங்கடந்த செயலே'' எனும், ''அரசாங்கம் போர் அல்லது சமாதானத் துக்கு என்று செயல்படுவதற்கு முன்பே போலந்தில் ஒரு சோவியத் குடியரசு வந்துவிடுமோ'' எனும் இக்கருத்து நிலப் பிரபுத்துவ-முதலாளித்துவப் போலந்தின் பிரதிநிதிகளது உணர்வில்தான் எழத் தொடங்கி விடுகிறது. என்ன செய்வ தென்று அவர்களுக்குத் தெரியவில்லை. நாளை என்ன நடக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

நமது சக்திகள் ஒவ்வொரு மாதமும் பிரம்மாண்டமான அளவில் அதிகரித்து வருகின்றன; எதிர்காலத்தில் இவை இதற்கு மேலும் கூட அதிகரிக்கும். நமது சர்வதேச நிலைபாடு முன் என்றையும் விட இப்போது அதிக உறுதியாக இருக் கிறது என்பதே இதன் விளைவாகும். ஆனல் நாம் சர்வதேச நெருக்கடியினை மிகவும் ஜாக்கிரதையுடன் கவனித்து எந்த ஒரு மேல்நிகழ்வுக்கும் தயாராக இருக்க வேண்டும். போலந் திடம் இருந்து சம்பிரதாயமான சமாதான யோசனை நமக்குக் கிட்டியுள்ளது. இந்தக் கனவான்கள் மிகவும் கடைகெட்ட இக்கட்டில் சிக்கிக் கொண்டிருக்கிறுர்கள்; இது மிகவும் கடை கெட்டதாக இருப்பதால், அவர்களது நண்பர்களான ஜெர் மன் முடியரசுவாதிகள், மேலும் சிறந்த பயிற்சியும் அதிக அரசியல் அனுபவமும் அறிவும் கொண்ட இவர்கள், ஒரு முரட்டுத் துணிச்சல் சூதாட்டத்தில் ஒரு ''கர்னீலவ் கலகத் தில்'' குதித்து விட்டார்கள். போலிஷ் முதலாளிகள் சமா தான யோசனையை வீசியபடி இருக்கிறுர்கள், காரணம் முரட்டுத் துணிச்சலான எந்த ஒரு சூதாட்டமும் ஒரு போலிஷ் ''கர்னீலவ் கலகம்'' ஆகி விடலாம் என்பதை அவர்கள் அறிவார்கள். நமது எதிரி மிகவும் கேடுகெட்ட இக்கட்டில் சிக்கிக்கொண்டிருக்கிறுர் என்பதையும், நமது எதிரிக்கு தான் எதைச் செய்ய விரும்புகிறுர் என்பதோ நாளை என்ன செய்யப் போகிறுர் என்பதோ தெரியவில்லை என்பதையும் அறிந்திருக் கும் நாம், சமாதானத்திற்கான யோசனை இருந்தபோதி லும், போர் சாத்தியம் என்பதை நமக்கு நாமே முற்றிலும் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள வேண்டும். அவர்

களது எதிர்கால நடத்தை என்னவாக இருக்கும் என்பதை முன்னறிந்து கூறுவது சாத்தியமல்ல. இந்தப் பேர்வழிகளை நாம் முன்பே பார்த்திருக்கிறோம்; இந்தக் கேரென்ஸ்கிகளை, இந்த மென்ஷிவிக்குகளை மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் களை நாம் அறிவோம். கடந்த இரண்டாண்டுகளின் போது நாம், அவர்கள் இன்று கல்ச்சாக் பக்கமாக ஈர்க்கப்படுவதை யும், மறுநாள் கிட்டத்தட்ட போல்ஷிவிக்குகள் பால் ஈர்க்கப் படுவதையும், பிறகு தெனீக்கினை நோக்கி ஈர்க்கப்படுவதை யும்—மற்றும் இவையாவும் சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் பற்றிய பேச்சு மூலம் மறைக்கப்படுவதையும்—பார்த்து வந் திருக்கிறோம். இந்தக் கனவான்களை நாம் அறிவோம். எனவே சமாதான யோசனையை இரு கரங்களாலும் ஆவலுடன் பற்றிக் கொள்கிறோம். மற்றும் சிறிய நாடுகளுடன் சமாதானம் செய்து கொள்வது என்பது போரை விடவும் அதிகமாக நமது லட்சியம் முன்னேற மிகப் பெருமளவு உதவும் எனும் திடநம்பிக்கையில் நாம் அதிகப் பட்சமாக விட்டுக்கொடுப் பதற்கும் தயாராக இருக்கிறோம். ஏனெனில் ஏகாதிபத்திய வாதிகள் உழைக்கும் மக்கள் திரளை ஏமாற்றுவதற்காகப் போரைப் பயன்படுத்தினார்கள்; சோவியத் ருஷ்யா பற்றிய உண்மையை மறைப்பதற்காக அதைப் பயன்படுத்தினார்கள். எனவே, எந்த சமாதானமும் நமது செல்வாக்குக்கான செயல் வழியினை நூறு மடங்கு அதிகமாகவும் விரிவாகவும் திறந்து வைக்கும். இச்செல்வாக்கு கடந்த சில ஆண்டுகளாகக் கணிச மாகப் பெருகி விட்டது. மூன்றாவது, கம்யூனிஸ்டு அகிலம் ஈடிணையற்ற வெற்றிகளை சாதித்திருக்கிறது. ஆனால் அதே சமயம் எந்த நாளிலும் போர் நம் மீது வலுவந்தமாகத் திணிக்கப்படலாம் என்பதை நாம் அறிவோம். இந்த விஷயத் தில் அவர்களால் என்ன செய்ய முடியும் என்பது குறித்து நமது விரோதிகளுக்கு இன்னும் தெரியாது.

போருக்கான தயாரிப்புகள் நடந்து வருகின்றன, இதைப் பற்றிக் கடுகளவும் சந்தேகமில்லை. ருஷ்யாவை எல்லையாகக் கொண்ட பல அரசுகளும்—ஒருவேளை எல்லையாகக் கொள் ளாத பல அரசுகளும்—இப்போது அரசுப் போர்க்கலன்களைப் பெருக்கி வருகின்றன. இதனால்தான் நாம் நமது சர்வ

தேசக் கொள்கையில் மிகவும் நெளிவு சுளிவாகத் திட்டமிட வேண்டும், நாம் மேற்கொண்டுள்ள பாதையை மிகவும் உறுதியுடன் பின்பற்ற வேண்டி இருக்கிறது. இதனுல்தான் நாம் எதற்கும் தயாராக இருக்க வேண்டி உள்ளது. சமாதானத்துக்கான போரை நாம் மட்டுமிகு வீரியத்துடன் தொடுத்துள்ளோம். இந்தப் போர் மிகச் சிறந்த விளைவுகளைத் தந்து வருகிறது. போராட்டத்தின் இந்தத் துறையில் நாம் மிகவும் நல்ல சாதனைகள் புரிந்துள்ளோம். இருப்பினும் அவை, இரத்தம் சிந்தப்படும் போர் முனையில் செஞ்சேனை புரிந்துள்ள சாதனைகளுக்கு எந்த அளவிலும் குறைவானவை அல்ல. ஆனுல் நம்முடன் சமாதானம் செய்து கொள்வது என்பது, அவை அதை விரும்பினுலுங்கூட, சிறிய நாடுகளின் சித்தத்தைச் சார்ந்ததாக இல்லை. தம்மிடையே மூர்க்கமாகப் பூசலிட்டும் போட்டியிட்டும் வரும் அன்டான்டு நாடுகளிடம் இந்தச் சிறிய நாடுகள் கடனில் மூழ்கிக்கிடக்கின்றன. எனவே, உலக நிலைமையின் கருத்துநிலையில் இருந்து, உள்நாட்டுப் போர் மற்றும் அன்டான்டுக் கூட்டணிக்கு எதிரான போர் உருவாக்கியுள்ள வரலாற்று நிலையில் இருந்து, சமாதானம் நிச்சயமாயும் சாத்தியம் என்பதை நாம் நினைவில் இருத்த வேண்டும்.

ஆனுல் நாம் சமாதானத்திற்காக எடுக்கும் நடவடிக்கைகளின் பின்னுல் தற்காப்புக்கான முனைப்பான ஆயத்தநிலை தொடர வேண்டும், எக்காரணம் கொண்டும் நமது சைனியத்தின் படைவலியைக் குறைக்கக் கூடாது. ஏகாதிபத்திய வல்லரசுகள் நமக்கு எதிராக அற்பசொற்பமான முயற்சிகளையோ, அத்து மீறலையோ செய்ய மாட்டா என்பதை நமது சைனியம் உண்மையிலேயே உத்தரவாதம் செய்கிறது. ஏனெனில் அவை ஆரம்பத்தில் ஒரு சில நிலையில்லாத வெற்றிகளை அடைந்தாலுங்கூட, சோவியத் ருஷ்யாவிடம் தோல்வியுறுவதில் இருந்து அவற்றில் ஒன்றுகூடத் தப்ப முடியாது. இதை நாம் உணர்தல் வேண்டும். இது நமது கிளர்ச்சி மற்றும் பிரசாரத்தின் அடித்தளம் ஆக வேண்டும். நமது பெருகிவரும் சோர்வு காரணமாக ஒன்றை இன்னொன்றுடன் இணைக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ள இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு

காணும் பொருட்டு இதற்கு நாம் தயார் செய்து கொள்ள முடிய வேண்டும்.

ஒரு சில அடிப்படையான மற்றும் உடனடியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு சைனியத்தைப் பயன்படுத்தும் வழிகளில், இவ்வளவு உறுதியாக உழைக்கும் மக்கள் திரளை நெறியாண்மை புரிவதற்கு நம்மைத் தூண்டிய, அந்த முக்கியமான கோட்பாட்டுக் காரணங்களுக்கு இப்போது கடக்கிறேன். கட்டுப்பாட்டின் பழைய ஆதாரமான மூலதனம் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது; ஒற்றுமையின் பழைய ஆதாரம் மறைந்து விட்டது. நாம் ஒரு வேறு வகையான கட்டுப்பாட்டை, கட்டுப்பாடு மற்றும் ஒற்றுமைக்கான வேறு ஆதாரத்தை நாம் உருவாக்க வேண்டும். பலாத்காரம் எனப்படுவது முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் ஆத்திரத்தை, ஊளைகளை, கூக்குரலை மற்றும் கண்டனக்குரலை எழுப்புகிறது. அவர்கள் ''சுதந்திரம்'' மற்றும் ''சமத்துவம்'' என்ற சொற்களை பெரிதும் மிகைப்படுத்துகிறார்கள். ஆனால் மூலதனத்துக்கு சுதந்திரம் என்பது தொழிலாளர்களுக்கு எதிரான அபராதம், உண்டுகொழுப்போருக்கும் பட்டினிகிடப்போருக்கும் இடையிலான சமத்துவம் என்பது உழைக்கும் மக்களுக்கு எதிரான அபராதம் என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. பொய்மையை எதிர்த்த நமது போராட்டத்தில், நாம் பலப்பிரயோகத்தைப் பயன்படுத்துவதில் சற்றேனும் தயக்கம் காட்டாமல், கட்டாய உழைப்பைக் கொண்டுவந்தோம், உழைக்கும் மக்களை ஒற்றுமைப்படுத்தத் தொடங்கினோம். ஏனெனில் பலப்பிரயோகம் இல்லாமல் எந்த ஒரு புரட்சியும் எங்கும் செய்து முடிக்கப்படவில்லை. மேலும் எது எப்படியானாலும், தனது சொந்த நிலையை உறுதி செய்து கொள்வதற்குப் பலப்பிரயோகத்தைச் செயல்படுத்தும் உரிமை பாட்டாளி வர்க்கத்துக்கு உண்டு. முதலாளிகளான கனவான்கள், சமரசவாதிகளான கனவான்கள், ஜெர்மன் ''சுயேச்சையாளர''[26] கனவான்கள், ஆஸ்திரியாவின் ''சுயேச்சையாளர்கள்'', பிரெஞ்சு லொங்கேவாதிகள்[27] வரலாற்றுக் காரணி குறித்து வாதித்த போது, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர வைராக்கியம், திடம், உறுதியுடைமை எனும்

அத்தகைய காரணியை அவர்கள் எப்போதும் மறந்து விடுகிறார்கள். அந்தக் காரணியே துல்லியமாயும் நமது நாட்டின் பாட்டாளி வர்க்கத்தின் உறுதியுடைமையும் திடமும் ஆகும். அது நமது பிரதேசத்தை விட்டுக்கொடுப்பதை விட நமது கோட்பாட்டை, எதன்பொருட்டு பிற அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டுமோ அந்த நமது கோட்பாட்டை, கட்டுப்பாடு மற்றும் திடமான கொள்கை எனும் கோட்பாட்டை விட்டுக்கொடுப்பதை விட கடைசி மனிதன் வரை அழியத் தயார், என்று தனக்கும் மற்றவர்களுக்கும் பிரகடனம் செய்து செயலிலும் நிரூபித்திருக்கிறது. முதலாளித்துவ நாடுகளும் முதலாளித்துவ வர்க்கமும் சிதைவுற்றுவரும் சமயத்தில், நெருக்கடியும் விரக்தியும் கொண்ட இத்தருணத்தில் இந்த அரசியல் காரணி மட்டுமே தீர்மானகரமானது. சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை, ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் பற்றிய பேச்சு, கடந்த கால வரலாற்றுக் கட்டத்தின் வீரர்கள் எவ்வளவுதான் அதிகமாக அதை வழிபட்டு வேண்டிய போதிலும் அதனால் எதையும் தீர்மானிக்க முடியாது. இங்கு முக்கியமாக இருப்பது தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வும் திடத்தன்மையுமே. தொழிலாளி வர்க்கம் தியாகங்கள் புரியத் தயாராக இருக்குமானால், அது சகல வழிகளிலும் பாடுபடத் தன்னால் இயலும் என்று காட்டுமானால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இந்தப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி அனைத்தும் நெறியாண்மை செய்யப்பட வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் வைராக்கியம், ''சரணாகதியை விடச் சாவதே மேல்!'' எனும் அதன் கோஷத்தை நிறைவேற்றுவதிலான அதன் வளையாத பற்று, ஒரு வரலாற்றுக் காரணி மட்டுமல்ல, அது தீர்மானகரமான வெற்றிக்குரிய காரணியும் ஆகும்.

இந்த வெற்றியில் இருந்தும் இந்த திடநம்பிக்கையில் இருந்தும் நாம் சமாதான முறையிலான பொருளாதார வளர்ச்சியின் பிரச்சினைகளுக்குக் கடந்து செல்கிறோம்; இவற்றுக்குத் தீர்வு காண்பது நமது காங்கிரசின் முக்கிய பணியாகும். இது விஷயமாக, நாம் மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோவின் அறிக்கை அல்லது சரியாகக் கூறினால்

மத்தியக் கமிட்டியின் ஒரு அரசியல் அறிக்கை பற்றி பேச முடியாது என்று நான் கருதுகிறேன். தோழர்களே, இது நீங்கள் முடிவு செய்ய வேண்டிய, கட்சியின் ஆக உயர் அமைப்பு என்ற முறையில் உங்கள் அதிகார பலம் அனைத்தையும் கொண்டு சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய ஒரு விஷயம் என்று நாம் வெளிப்படையாகவும் அப்பட்டமாயும் கூறிவிட வேண்டும். இந்த விஷயத்தை உங்கள் முன்னுல் முற்றிலும் தெளிவாக வைத்து விட்டோம். நாம் திட்டவட்டமான ஒரு நிலையை மேற்கொண்டு விட்டோம். நமது முடிவை இறுதியாக ஊர்ஜிதம் செய்வது, சரிப்படுத்துவது அல்லது திருத்தம் செய்வது உங்கள் கடமை. ஆனுல் அதன் அறிக்கையில் மத்தியக் கமிட்டியானது, இந்த அடிப்படையான அவசரமான விஷயத்தின் மீது அது முற்று முழுதுமான திட்டவட்டமான நிலை மேற்கொண்டு விட்டதாகச் சொல்ல வேண்டும். ஆம், இப்போதைய காரியம், பொருளாதார வளர்ச்சிக்கான அமைதியான வேலைகளில், தகர்ந்து கிடக்கும் தொழிற்துறையை மீட்டு நிறுவுவதில், பாட்டாளிகளை ஒரு பரம ஐக்கியத்தில் இணைக்கக் கூடியதான அனைத்திலும் கவனம் செலுத்துவதே ஆகும். இங்கு நமக்கு இரும்பனைய கட்டுப்பாடு, இரும்பனைய அமைப்புமுறை தேவைப்படுகிறது. இந்த அமைப்புமுறை இல்லாதிருப்பின், இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நீடித்தது ஒரு புறமிருக்க, இரண்டு மாதங்கள்கூடத் தொடர்ந்து நீடித்திருந்திருக்க முடியாது. நமது வெற்றியை நாம் பயன்படுத்த இயல வேண்டும். மறு புறம், இந்த மாறுதல் கட்டம் பல தியாகங்களைக் கோரும் என்பதை உணர வேண்டும்; இத்தகைய தியாகங்கள் பலவற்றை நாடு ஏற்கெனவே புரிந்துள்ளது.

சம்பந்தப்பட்ட கோட்பாடு மீது மத்தியக் கமிட்டி முற்றும் தெளிவான நிலை மேற்கொண்டது. நமது நடவடிக்கைகள் எல்லாம் இந்தக் கொள்கையால் முழுமையாக ஆளுமை செய்யப்பட்டன; இந்த உணர்வில் நடத்தப்பட்டன. கூட்டு நிர்வாகத்துக்கு எதிராக தனிநபர் நிர்வாகம் எனும் நீங்கள் தீர்வு காண வேண்டிய விஷயத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். இது ஒரு துணைத் தரத்திலுள்ள விஷயமாகவே

தோன்றும். இதை அதன் சந்தர்ப்ப சூழ்நிலையில் இருந்து பிய்த்தெடுக்கும் பட்சத்தில், இது தானே ஒரு கோட்பாட்டின் அடிப்படை விஷயம் என்று உரிமை கொண்டாட முடியாது என்பது திண்ணம். இந்த விஷயத்தை நமது அறிவு, நமது அனுபவம் மற்றும் நமது புரட்சி நடைமுறையின் முக்கிய சாதனைகளின் கருத்து நிலையில் இருந்து மட்டுமே நிச்சய மாயும் பரிசீலிக்க வேண்டும். உதாரணமாக, ''கூட்டு நிர்வாகம் என்பது நிர்வாக வேலையில் விரிவான மக்கள் திரள் பங்கேற்கும் வடிவங்களில் ஒன்று'' என்று நம்மிடம் கூறப்படுகிறது. ஆனால் மத்தியக் கமிட்டியில் இருக்கும் நாங்கள் இந்த விஷயத்தை விவாதித்து நமது முடிவை எடுத்தோம்; அது உங்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்: தோழர்களே, அத்தகைய தத்துவார்த்தக் குழப்பத்துக்கு இடமளிக்கக் கூடாது. நமது ராணுவ நடவடிக்கைகள், நமது உள்நாட்டுப் போர் பற்றிய அடிப்படைப் பிரச்சினையில் இந்த தத்துவார்த்தக் குழப்பத்தின் பத்தில் ஒரு பகுதியை அனுமதித்திருப்போமானால், நாம் தோற்கடிச்கப்பட்டிருப்போம், தோற்கடிக்கப்படுவதற்குத் தகுதியுற்றிருப்போம்.

மத்தியக் கமிட்டியின் அறிக்கை மற்றும் நிர்வாக வேலையில் புதிய வர்க்கம் கூட்டு முறையிலா அல்லது தனிப்பட்ட அடிப்படையிலா எவ்வாறு பங்கேற்க வேண்டும் எனும் பிரச்சினை இவற்றின் தொடர்பாக, ஒரு சிறிதளவு தத்துவத்தைக் கொண்டுவந்து, ஒரு வர்க்கம் எவ்வாறு ஆட்சி செய்கிறது, வர்க்க ஆதிக்கம் என்பது என்ன என்பதைச் சுட்டிக் காட்ட என்னை அனுமதியுங்கள், தோழர்களே. எப்படி இருந்தாலும் இந்தக் காரியங்களில் நாம் கற்றுக் குட்டிகள் அல்ல; நமது புரட்சியில் கற்பனுவாதமான எதுவும் கிடையாது என்பதே, அதை முந்திய புரட்சிகளில் இருந்து இனம் பிரித்துக் காட்டும் அம்சமாகும். பழைய வர்க்கத்தை மாற்றீடு செய்துள்ள புதிய வர்க்கம் இதர வர்க்கங்களுக்கு எதிரான மூர்க்கமான போராட்டம் மூலம் மட்டுமே தன்னைத்தானே கட்டிக் காத்துக் கொள்ள முடியும்; அது பொதுவாக வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதைச் செயலாக்கினால் மட்டுமே அது இறுதியாக வெற்றிவாகை சூடும். இதையே வர்க்கப் போராட்டத்தின்

பரந்த சிக்கலான நடைமுறை கோருகிறது. இல்லாவிடில் நீங்கள் குழப்பத்தின் சகதிக்குள் ஆழ்ந்து விடுவீர்கள். வர்க்க ஆதிக்கம் என்ருல் என்ன? முதலாளி வர்க்கம் நிலப்பிரபுக்கள் மீது எந்த வழியில் ஆதிக்கம் செலுத்தியது? அரசியல் அமைப்புச் சட்டம் சுதந்திரம் மற்றும் சமத்துவம் பற்றிப் பேசியது. அது பொய். உழைக்கும் மனிதர்கள் இருக்கும் வரை சொத்துடைமையாளர்கள் கொள்ளேலாபமடிக்கும் நிலேயில் உள்ளனர்; உண்மையில் சொத்துடைமையாளர் என்ற முறையில் கட்டாயம் கொள்ளேலாபம் அடித்தே தீர வேண்டும். சமத்துவம் இல்லே என்று நாம் சாற்றுகிருேம். உண்டுகொழுத்த மனிதன் பட்டினி கிடக்கும் மனிதனுக்குச் சமம் அல்ல, கொள்ளேலாபக்காரன் உழைக்கும் மனிதனுக்குச் சமம் அல்ல என்று சாற்றுகிருேம்.

வர்க்க ஆதிக்கம் இன்று எவ்வாறு வெளியீடாகிறது? பாட்டாளிகளின் ஆதிக்கம் என்பதில், நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகள் தமது உடைமையை இழந்துவிட்டார்கள் என்ற மெய்நடப்பு இடம் பெறுகிறது. முந்திய அரசியல் அமைப்புச் சட்டங்கள் அனேத்தின், ஆகக் குடியரசு பாணி ஜனநாயகமான அரசியல் அமைப்புச் சட்டங்களினதும் உணர்வும் அடிப்படைக் கருத்தும்—சொத்து எனும் ஒன்றே ஒன்றுதான். சொத்துடைமை ஒழிப்பு என்பது காகிதத்தளவில் நிற்பதல்ல எனும் செய்நடப்பின் காரணத்தால்தான் நமது அரசியல் அமைப்புச் சட்டம் வரலாற்றில் இடம் பெறும் உரிமை பெற்றது, அந்த உரிமையை வென்று பெற்றது. வெற்றிவாகை சூடிய பாட்டாளி வர்க்கம் சொத்துடைமையை ரத்துச் செய்தது, அதை முழுமையாக ஒழித்தது—இதில் தான் வர்க்க ஆதிக்கம் காணக்கிடக்கிறது; முதல்முதலில் சொத்துடைமை பற்றிய பிரச்சினேயிலேயே காணக்கிடக்கிறது. சொத்துடைமைப் பிரச்சினே உண்மையில் தீர்க்கப்பட்ட உடனேயே இந்த வர்க்கத்தின் ஆதிக்கம் உறுதிப்பட்டது. அதற்குப் பிறகு, எது உண்மையிலேயே செயலாக்கப்பட்டு விட்டதோ அதனே—அதாவது, முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ சொத்துடைமை ஒழிக்கப்பட்டதை—அரசியல் அமைப்புச் சட்டம் காகிதத்தில் பதிவு செய்து, அரசியல்

அமைப்புச் சட்டத்தின் கீழ் தொழிலாளி வர்க்கம் விவசாயி மக்களை விட அதிக உரிமைகளை அனுபவிக்கிறது, அதே போதில் சுரண்டலாளர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று சேர்த்துக் கொண்ட போது—அது நாம் நமது வர்க்கத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டி விட்டோம், அதன் மூலம் உழைக்கும் மக்களின் எல்லாப் பகுதிகளையும் எல்லாச் சிறு பிரிவுகளையும் நம்முடன் இணைத்துக் கொண்டு விட்டோம் எனும் மெய்நடப்பின் பதிவாகவே விளங்கியது.

குட்டிமுதலாளித்துவ சொத்துடைமையாளர்கள் பிளவுற்றிருக்கிறார்கள்; அவர்களில் அதிகமான சொத்துடையவர்கள் குறைவான சொத்துடையவர்களின் விரோதிகளாக இருக்கிறார்கள். பாட்டாளிகளோ, சொத்துடைமையை ஒழிப்பது மூலம் அவர்கள் மீது பகிரங்கமாகப் போர் தொடுத்திருக்கிறார்கள். ஏதாவது ஒரு வகைப்பட்ட வாணிக சுதந்திரத்தை ஆதரிக்கும் அறிவொளி பெறாத அறியாத மக்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள். ஆனால் சுரண்டலாளர்களை எதிர்த்து வெற்றி அடைவதில் தோற்றுவிக்கப்பட்ட கட்டுப்பாடு மற்றும் தன்னலத் தியாகத்தைப் பார்க்கும் போது அவர்களால் போராட முடியாது போகிறது. அவர்கள் நம் பக்கம் இல்லை. ஆனால் நமக்கு எதிராக வருவதற்கு அவர்களுக்கு சக்தி இல்லை. ஒரு வர்க்கத்தின் ஆதிக்கமே சொத்துடைமை உறவுகளையும் எந்த வர்க்கம் மேலே இருக்க வேண்டும் என்பதையும் நிர்ணயம் செய்கிறது. நாம் அடிக்கடி காண்பது போல, வர்க்க ஆதிக்கத்தின் தன்மையையும் ஜனநாயக மத்தியத்துவத்தின் பிரச்சினையையும் இணைப்பவர்கள் உருவாக்கும் இத்தகைய குழப்பம்தான் இந்த அடிப்படையிலான எல்லா வெற்றிகரமான பணியையும் சாத்தியமற்றதாக ஆக்கி விடுகிறது. பிரசாரம் மற்றும் கிளர்ச்சியில் தெளிவு என்பது அடிப்படை நிபந்தனை. நாம் கிளர்ச்சியையும் பிரசாரத்தையும் வளர்ப்பதில் அற்புதங்கள் புரிந்துவிட்டதாக நமது எதிரிகள் கூறி ஒத்துக் கொண்ட போது, அதை நம்மிடம் பெரிய அளவிலான கிளர்ச்சியாளர்கள் இருக்கிறார்கள், நாம் பெருமளவில் வெளியீடுகளைப் பயன்படுத்துகிறோம்

என்பதாக ஒரு மேலோட்டமான பொருளில் இதைப் புரிந்து கொள்ளக் கூடாது, மாறாக இந்தக் கிளர்ச்சியில் உள்ளடங்கியிருந்த உண்மை எல்லோர் மனதிலும் புகுந்து பரவுகிறது எனும் உள்ளார்ந்த பொருளில் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உண்மையில் இருந்து தப்ப முடியாது.

வர்க்கங்கள் ஒன்றை ஒன்று அகற்றி மாற்றம் செய்யும் போது, அவை சொத்துடைமை உறவுகளையும் மாற்றின. முதலாளி வர்க்கம் நிலப்பிரபுக்களை அகற்றி அவர்கள் இடத்தில் அமர்ந்த போது அது சொத்துடைமை உறவுகளை மாற்றியது. முதலாளி வர்க்கத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் கூறுவதாவது: ''சொத்துடைய மனிதன் பிச்சைக்காரனுக்குச் சமம்''. அதுதான் முதலாளிகளின் சுதந்திரம். இந்த வகையான ''சமத்துவம்'' அரசில் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தியது. முதலாளிகள் நிலப்பிரபுக்களை அகற்றி அவர்கள் இடத்தில் அமர்ந்த போது அவர்கள் அரசை நிர்வாகத்தோடு போட்டுக் குழப்பினார்கள் என்று கருதுகிறீர்களா? இல்லை, அவர்கள் அத்தகைய முட்டாள்களல்ல. நிர்வாக வேலைக்கு எப்படி நிர்வாகம் செய்வது என்பதைத் தெரிந்த ஆட்கள் தேவை எனவும் அந்த நோக்கத்துடன் பிரபுத்துவ நிர்வாக அதிகாரிகளை ஏற்றுக் கொண்டு மாற்றப் போவதாயும் அவர்கள் சாற்றினார்கள். அதையே அவர்கள் செய்தார்கள். அது தவறா? இல்லை, தோழர்களே, நிர்வாகக் கலை என்பது வானத்தில் இருந்து இறங்கி வருவதில்லை, அது தூய ஆவியால் உணர்ச்சியூட்டப்படுவதல்ல. ஒரு வர்க்கம் தலைமை தாங்கும் வர்க்கம் ஆகி விட்டதால் அது உடனே நிர்வாகத் திறமை பெற்று விடுவது இல்லை. இதற்கு ஓர் உதாரணம் உள்ளது: முதலாளிகள் தமது வெற்றியை நிலைநாட்டும் போது நிர்வாக வேலைகளுக்கு இன்னொரு வர்க்கத்தைச் சேர்ந்த, பிரபுத்துவ வர்க்கத்தைச் சேர்ந்த, உறுப்பினர்களை எடுத்துக் கொண்டார்கள். அவர்களை வேறு எங்கிருந்தும் பெற வழி இல்லை. நாம் நிதானமாக மெய்நடப்புக்களை எதிர்கொள்ள வேண்டும்: முதலாளிகள் பழைய வர்க்கத்தை நாடினார்கள்; நாமும் இப்போது பழைய வர்க்கத்தின் அறிவையும் அனுபவத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டிய,

அதை நமது தேவைகளுக்குக் கீழ்ப்படுத்த வேண்டிய, அவை அனைத்தையும் நமது வர்க்கத்தின் வெற்றிக்குப் பயன்படுத்த வேண்டிய கடமையினை எதிரிடுகிறோம். எனவே வெற்றி வாகை சூடிய வர்க்கம் முதிர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்றும் இந்த முதிர்ச்சிக்கு நீரூபணம் ஆவணமோ சான்றிதழோ அல்ல, மாறாக அனுபவமும் செயல்பாடுமே என்றும் நாம் சொல்கிறோம்.

முதலாளிகள் வெற்றிவாகை சூடிய போது எப்படி நிர்வாகம் செய்வது என்பது அவர்களுக்குத் தெரியாது. ஒரு புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பிரகடனம் செய்தும், தமது சொந்த வர்க்கத்தில் இருந்து நிர்வாக அதிகாரிகளை தேர்ந்தெடுத்து சேர்த்துக் கொண்டும், அவர்களுக்குப் பயிற்சி அளித்தும், இதற்காக பழைய வர்க்கத்தின் நிர்வாக அதிகாரிகளைப் பயன்படுத்திக் கொண்டும், தமது வெற்றியை அவர்கள் உறுதிப்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் தமது சொந்தமான புதிய நிர்வாக அதிகாரிகளைப் பயிற்றுவிக்கத் தொடங்கினார்கள், அரசின் முழு இயந்திரத்தின் உதவியுடன் அவர்களை இந்த வேலைக்குத் தகுதியுள்ளவர்களாகச் செய்தார்கள். நிலப்பிரபுத்துவ கல்வி நிறுவனங்களைத் தனிப்பட ஒதுக்கி வைத்து, செல்வந்தர்களை மட்டுமே பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொண்டார்கள். இந்த வழியில் பல ஆண்டுகள் பல பத்தாண்டுகள் இடையே அவர்கள் தமது சொந்த வர்க்கத்தில் இருந்து நிர்வாக அதிகாரிகளைப் பயிற்றுவித்தார்கள். இன்று ஆதிக்கம் வகிக்கும் வர்க்கத்தின் பாணியிலும் அதன் உருவடிவிலும் நிர்மாணிக்கப்பட்ட ஒரு அரசில், நாம் ஒவ்வொரு அரசும் செயல்பட்டது போலவே செயல்பட வேண்டும். படுமோசமான கற்பனுவாதம் மற்றும் பொருளற்ற சொல்லடுக்கு ஜாலத்தில் இறங்கிய குற்றத்துக்கு ஆளாகக் கூடாது என்று நாம் விரும்பும் பட்சத்தில், நாம் கடந்த ஆண்டுகளின் அனுபவத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதையும், புரட்சி மூலம் வென்று பெற்ற அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதையும், ஆனால் நிர்வாகம் மற்றும் அரசை ஒழுங்கமைக்கும் வேலைக்கு நிர்வாகக் கலையில் திறமை உள்ள,

அரசு மற்றும் பொருளாதார அனுபவம் உள்ள ஆட்கள் நமக்குத் தேவை என்பதையும், அத்தகைய ஆட்களைப் பெற பழைய வர்க்கத்திடம் செல்வதல்லால் வேறுவழி இல்லை என்பதையும் கூறிவிட வேண்டும்.

கூட்டு நிர்வாகம் பற்றிய கருத்துக்கள் மிகப் பெரும்பாலும் மோசமான அறியாமை உணர்வில், நிபுணர்களை எதிர்க்கும் உணர்வில் ஊறிக்கிடக்கின்றன. இத்தகைய உணர்வுடன் நாம் என்றுமே வெற்றி பெற முடியாது. நாம் வெற்றி பெறுவதற்கு நாம் பழைய முதலாளித்துவ உலகத்தின் வரலாற்றை அதன் கருத்தாழம் அனைத்தோடும் புரிந்து கொள்ள வேண்டும். கம்யூனிசத்தைக் கட்டுவதற்கு நாம் தொழில்நுட்பத்தையும் விஞ்ஞானத்தையும் மேற்கொண்டு அவை மேலும் விரிவான வட்டங்களுக்குக் கிடைக்கும்படிச் செய்தல் வேண்டும். அவற்றை நாம் முதலாளிகளிடமிருந்துதான் எடுத்துக் கொள்ள வேண்டும்; வேறு எங்கிருந்தும் அவற்றைப் பெற முடியாது. இந்த அடிப்படையான பிரச்சினைக்கு முக்கியத்துவம் தர வேண்டும், பொருளாதார நிர்மாணத்தின் ஒரு ஆதாரப் பிரச்சினையாக இது பாவிக்கப்பட வேண்டும். நம்மால் வீழ்த்தப்பட்டதான ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த நபர்களின் உதவியுடன் நாம் நிர்வாகம் செய்ய வேண்டும். அவர்கள் தமது வர்க்கத்தின் தப்பெண்ணங்களில் மூழ்கிக் கிடக்கிறார்கள். நாம் அவர்களுக்கு மறு போதனை தர வேண்டும். அதே சமயம் நமது சொந்த வர்க்கத்தில் இருந்து நமது சொந்த நிர்வாகிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பள்ளிக்கூடங்கள், முதியோர் கல்வி மற்றும் எல்லா நடைமுறைப் பயிற்சி வசதிகளையும் பாட்டாளிகள், தொழிலாளர், உழைக்கும் விவசாயிகளின் சேவையில் கம்யூனிஸ்டுகளின் வழிகாட்டுதலின் கீழ் கொண்டுவர அரசு இயந்திரம் முழுவதையும் நாம் பயன்படுத்த வேண்டும்.

காரியங்கள் தொடர்ந்து நடத்தப்படுவதற்கான ஒரே வழி இதுவே. நமது இரண்டாண்டுக் கால அனுபவத்துக்குப் பிறகு, நாம் இப்போதுதான் முதலில் சோஷலிஸ்டு நிர்மாணப் பணியினைத் தொடங்கியிருப்பது போன்று வாதிக்க முடியாது. நாம் ஸ்மோல்னி மாளிகையில்[28] அரசாங்க அலு

வலகம் செயல்பட்டு வந்த கால கட்டத்திலும் அதனைச் சுற்றியும் போதியளவு முட்டாள் செயல்கள் புரிந்தோம். அதில் வெட்கப்படுவதற்கு எதுவும் இல்லை. நாம் முற்றுமுழுதும் புதியதான சிலவற்றை மேற்கொண்டிருந்தோம் என்பதைப் பார்க்கும் போது இதை நாம் எப்படி அறிந்திருக்க முடியும்? நாம் முதலில் ஒரு வழியிலும் பிறகு இன்னொரு வழியிலும் முயன்றோம். நாம் நீரோட்டத்தோடு சேர்ந்து நீந்தினோம், காரணம் சரி எது தவறு எது என்பதை வேறுபடுத்துவது சாத்தியமற்றதாக இருந்தது—அதற்குக் காலாவகாசம் தேவை. இப்போது இவையாவும் அண்மைக் கடந்த காலத்தின் விவகாரமாகி, இவற்றை நாம் கடந்து முன்சென்று விட்டோம். குழப்பமும் உற்சாகமும் நிலவிய அந்தப் பழைய காலம் இப்போது முடிந்து விட்டது. இப்பழமையில் இருந்து வந்த ஓர் ஆவணம் பிரேஸ்த் சமாதான உடன்படிக்கைதான். இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணம்—அதற்கும் மேல் இது வரலாற்றின் ஒரு காலகட்டம். நாம் எல்லா வழிகளிலும் வகையற்றுக் கிடந்ததால் பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை நம் மீது வலுவந்தமாகத் திணிக்கப்பட்டது. அது எத்தகைய காலகட்டம்? அது வலிமை இழந்த ஒரு காலகட்டம்; இதிலிருந்து நாம் வெற்றியுடன் வெளிவந்தோம். கூட்டு நிர்வாகம் சர்வப் பொதுவாக நிலவிய காலகட்டம் அது. கூட்டு நிர்வாகம் என்பது ஓர் ஆட்சி நிர்வாகப் பள்ளியே என்று சொல்லி இந்த வரலாற்று உண்மையில் இருந்து தப்பிவிட முடியாது. ஆனால் பள்ளிக்கூடத்து பாலர் வகுப்பில் எப்போதும் உட்கார்ந்திருக்க முடியாது! (கரவொலி.) அது போதுமானது அல்ல. நாம் இப்போது வளர்ந்து வருகிறோம். நாம் பள்ளிச் சிறுவர் போல நடந்து கொள்வோமானால் ஒவ்வொரு துறையிலும் நாம் மீண்டும் மீண்டும் தோற்கடிக்கப்படுவோம். நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். நாம் ஊக்கத்தோடும் ஒருமுகப்பட்ட சித்தத்தோடும் மேலே செல்ல வேண்டும். தொழிற்சங்கங்களின் முன்னே பிரம்மாண்டமான இடர்ப்பாடுகள் உள்ளன. அவப்பேர் பெற்ற ஜனநாயகத்தின் மீதமிச்சங்களை எதிர்த்த போராட்டத்தின் உணர்வில் இந்தப் பணியை அவர்கள் கரு

தும்படிச் செய்ய வேண்டும். நியமிக்கப்பெறுவோர் பற்றிய இந்தக் கூக்குரல்கள் எல்லாம், பல்வேறு உரையாடல்கள் மற்றும் தீர்மானங்களில் இடம் பிடித்துள்ள இந்தப் பழைய ஆபத்தான குப்பைகள் துடைத்தொழிக்கப்பட வேண்டும். இல்லையேல் நாம் வெற்றி பெற முடியாது. இந்த இரண்டு ஆண்டுகளில் இந்தப் படிப்பினையை கரை காணுவதில் தவறி விட்டோமானால் நாம் பின்தங்கியவர்களாவோம்; பின்தங்கியவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள்.

இந்தப் பணி மிகவும் இடர்ப்பாடானது. பாட்டாளி வர்க்க அரசைக் கட்டுவதற்கு நமது தொழிற்சங்கங்கள் பிரம்மாண்டமாக உதவியுள்ளன. அவை கட்சிக்கும் அறிவொளி பெறாத லட்சோபலட்சம் மக்களுக்கும் இடையிலான இணைப்பாக விளங்கின. உணவு சம்பந்தமான வேலையில் அரசுக்கு உதவி தேவையாக இருந்த போது நமது தொல்லைகள் அனைத்தையும் எதிர்த்த போராட்டத்தின் பளுவைத் தொழிற்சங்கங்களே தமது தோள்களில் தாங்கின என்ற மெய்விவரத்தைக் காணமல் கண்ணை மூடிக்கொள்ள வேண்டாம். இது ஒரு பிரம்மாண்டமான வேலை அல்லவா? அண்மையில் மத்தியப் புள்ளிவிவர போர்டின் செய்தி வெளியீடு பிரசுரமாயிற்று. நிச்சயமாயும் போல்ஷிவிக்குகள் என்று சந்தேகிக்க முடியாத புள்ளிவிவர நிபுணர்களின் விவரங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இரண்டு முக்கிய புள்ளிவிவரங்கள் தரப்பட்டுள்ளன: 1918லும் 1919லும் நுகர்வாளர் குபேர்னியாக்களில் இருந்த தொழிலாளர்கள் ஆண்டுக்கு ஏழு பூடுகள் பெற்றுள்ளனர், அதே பொழுதில் உற்பத்தியாளர் குபேர்னியாக்களில் இருந்த விவசாயிகள் ஆண்டுக்குப் பதினேழு பூடுகள் பெற்றுள்ளனர். போருக்கு முந்தி அவர்கள் வழக்கமாக ஆண்டுக்குப் பதினறு பூடுகள் பெறுவார்கள். உணவுக்கான போராட்டத்தில் வர்க்கங்களின் உறவுகளைச் சித்திரித்துக் காட்டும் இரு புள்ளிவிவரங்கள் இங்கே உள்ளன. பாட்டாளி வர்க்கம் தொடர்ந்து தியாகங்கள் புரிந்து வந்தது. மக்கள் வலுக்கட்டாயம் பற்றிக் கூச்சலிடுகிறார்கள்! ஆனல் பாட்டாளி வர்க்கம் இந்த வலுக்கட்டாயத்தை நியாயப்படுத்தியது, சட்ட சம்மதமாக்கியது; ஆகப் பெரும் தியாகங்கள்

புரிந்து அதை நியாயப்படுத்தியது. பட்டினியிலும் வறுமையிலும் ஆழ்ந்து கிடக்கும் நமது ருஷ்யாவின் உற்பத்தி செய்யும் குபேர்னியாக்களில் இருக்கும் மக்கள் தொகையில் பெரும்பான்மையான விவசாயிகள் ஜாராட்சி மற்றும் முதலாளித்துவ ருஷ்யாவில் பல நூற்றுண்டுகளாக இருந்ததை விடவும் அதிக உணவை முதல் தடவையாகப் பெற்றுர்கள். செஞ்சேனை வெற்றி சூடும் வரையில் மக்கள் திரளினர் தொடர்ந்து பட்டினி கிடப்பார்கள் என்று நாம் கூறுகிறோம். தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப்படை இந்தத் தியாகத்தை கட்டாயம் செய்தே தீர வேண்டும். இப்போராட்டத்தில் அதற்கு அனுபவம் உண்டு. ஆனுல் இந்த அனுபவத்தை விட்டு விடை பெறும் போது நாம் முன்னேறிச் செல்லுக வேண்டும். எது என்னவாயினும் இப்போது இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எல்லாத் தொழிற்சங்கங்களையும் போலவே பழைய தொழிற்சங்கங்களுக்கு ஒரு வரலாறும் ஒரு கடந்த காலமும் உண்டு. கடந்த காலத்தில் அவை உழைப்பாளர்களை ஒடுக்குவோரை—முதலாளித்துவத்தை—எதிர்த்துப் போராடும் உறுப்பமைப்புகளாக இருந்தன. ஆனுல் இப்போது தொழிலாளி வர்க்கம் ஆட்சி புரியும் வர்க்கமாகிவிட்ட நிலையில் மாபெரும் தியாகங்கள் புரியவும் பட்டினி கிடக்கவும் அழியவும் அறைகூவப்படும் போது, நிலைமை மாறி விட்டது.

இந்த மாற்றத்தை எல்லோரும் புரிந்து கொண்டு விட்டார்கள் என்பதில்லை, எல்லோரும் இதன் உட்பொருளைப் புரிந்து கொண்டு விட்டார்கள் என்பதில்லை. தனிநபர் நிர்வாகத்துக்குப் பதில் கூட்டு நிர்வாகம் இடம் பெற வேண்டும் என்று கோரிய ஒரு சில மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் இந்தக் காரியத்தில் நமக்கு உதவியுள்ளனர். இல்லை, தோழர்களே, அது சரிப்படாது! நாம் அதைக் கடந்து விட்டோம். நம் முன்னுல் இப்போது மிகவும் இடர்ப்பாடான வேலை உள்ளது: இரத்தம் சிந்திய போர் முனையில் வெற்றியடைந்து விட்ட பின், இரத்தம் சிந்தாத போர் முனையில் நாம் வெற்றி பெற வேண்டும். இந்தப் போர் இன்னும் அதிகக் கடினமானது. இந்தப் போர் முனை மிகவும் கடின

மானது. இதை வர்க்க உணர்வுடைய எல்லாத் தொழிலாளி களுக்கும் வெளிப்படையாகக் கூறுகிறோம். நாம் போர் முனை யில் நின்று சமாளித்த போரைத் தொடர்ந்து இரத்தம் சிந் தாத போர் வர வேண்டும். உண்மை என்னவெனில் நாம் எவ்வளவு அதிகமாக வெற்றி பெற்றோமோ அந்தளவுக்கு அதிகமான பிராந்தியங்களை—சைபீரியா, உக்ரேன், குபான் போன்றவற்றை—நாம் பெற்றோம். இந்தப் பிராந்தியங் களில் செல்வந்த விவசாயிகள் இருக்கிறார்கள்; பாட்டாளிகள் இல்லை. ஏதேனும் பாட்டாளிகள் இருப்பார்களானால் அவர் கள் குட்டிமுதலாளித்துவ வழக்கங்களால் ஊழல்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் ஒரு துண்டு நிலம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் கூறுகிறார்: ''இந்த அரசாங் கத்தைச் சிறிதும் பொருட்படுத்த மாட்டோம். பட்டினி கிடப்பவர்களிடம் இருந்து முடிந்தது அனைத்தையும் பறித்துக் கொள்வோம். இந்த அரசாங்கத்தைப் பற்றி என்ன அக்கறை.'' தெனீக்கினின் முரட்டுக் கொடுமைகளில் சிக்கிய போது நமது பக்கமாகச் சாய்ந்துபட்ட விவசாய லாபக் கொள்ளைப் பேர்வழிக்கு இப்போது அன்டான்டு நாடுகள் உதவி கிடைக்கும். போர் அதன் முனைகளையும் வடிவங்களை யும் மாற்றி விட்டது. இப்போது அது வாணிகம், உணவுப் பொருள்களில் கொள்ளைலாபமடித்தல் எனும் வடிவம் எடுத் துள்ளது. கொள்ளைலாபமடித்தலை சர்வதேசிய அம்சமாக்கி விட்டது. ரு.க.க.(போ.)இன் மத்தியக் கமிட்டியின் இஸ் வேஸ்தியாவில்[29] வெளி வந்ததுள்ள தோழர் காமெனவ் ஆய்வுரைகளில் இதன் அடியாதாரமான கோட்பாடுகள் முழுமையாகத் தரப்பட்டுள்ளன. அவர்கள் உணவுப் பொருள் களில் கொள்ளைலாபம் அடிப்பதை சர்வதேச அம்சமாக்க விரும்புகிறார்கள். சமாதான பூர்வமான பொருளாதார நிர் மாணத்தை சோவியத் ஆட்சி அதிகாரத்தின் சமாதான வழி யிலான சிதைவாக மாற்ற விரும்புகிறார்கள். ஏகாதிபத்திய கனவான்களே, மன்னிக்க வேண்டும், நாங்கள் எச்சரிக்கை யுடன் இருக்கிறோம். நாங்கள் சாற்றுகிறோம்: நாங்கள் போராடி வெற்றி பெற்றோம்; அதனால்தான் நாங்கள் வெற்றி பெற உதவிய கோஷத்தை எங்களது அடிப்படை கோஷ

மாகத் தொடர்ந்து நிச்சயம் வைத்திருப்போம். அந்த கோஷத்தை முற்றிலும் பேணிக்காத்து தொழிற்துறையில் பயன்படுத்துவோம். பாட்டாளிகளின் உறுதியும் சித்தத்தின் ஒற்றுமையும் என்பதே இந்த கோஷம். இன்னும் மீதமாக நிற்கும் பழைய தப்பெண்ணங்களும், பழைய பழக்கங்களும் உதறித் தள்ளப்பட வேண்டும்.

இறுதியாக தோழர் கூசெவின் சிறு பிரசுரம் பற்றி விளக்க விரும்புகிறேன். இது இரு காரணங்களுக்காகக் கவனத்துக்கு உரியது என்று நான் கருதுகிறேன். இது சம்பிரதாயமான நோக்கு நிலையில் மட்டுமன்றி, நமது காங்கிரசுக்காக எழுதப் பட்டது என்ற காரணத்தால் மட்டுமன்றி ஒரு நல்ல பிரசுரம் ஆகும். எப்படியோ இது வரையில் நாம் எல்லோரும் தீர் மானங்கள் எழுதிப் பழக்கப்பட்டு விட்டோம். சலிப்பூட்டும் இலக்கியம் தவிர எல்லா இலக்கியமும் நல்லதே என்று கூறப் படுகிறது. தீர்மானங்கள் சலிப்பூட்டும் இலக்கியங்களாக வகைப்படுத்தப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன். நாம் தோழர் கூசெவின் உதாரணத்தைப் பின்பற்றி சில தீர் மானங்களையும் அதிகமான பிரசுரங்களையும்—அவை அவரது பிரசுரம் போலவே பிழைகள் மலிந்து காணப் பட்டாலுங்கூட—எழுதுவது நல்லது. இந்தப் பிழைகள் இருந்தபோதிலும் இப்பிரசுரம் நன்ருகவே இருக்கிறது. காரணம் இது நாடு முழுதும் தொழிற்துறையையும் உற்பத் தியையும் மீட்டு அமைப்பதற்கான அடிப்படையான பொரு ளாதாரத் திட்டத்தின் மீது கவனத்தை ஒருமுகப்படுத்து கிறது; மற்றும் இது எல்லாவற்றையும் இந்த அடிப்படையான பொருளாதாரத் திட்டத்துக்குக் கீழடக்குகிறது. இன்று வினி யோகிக்கப்பட்ட ஆய்வுரைகளில் மத்தியக் கமிட்டி தோழர் கூசெவின் ஆய்வுரைகளில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு முழுப் பாராவைச் சேர்த்திருக்கிறது. நிபுணர்களின் உதவியுடன் இந்த அடிப்படையான பொருளாதாரத் திட்டம் இன்னும் அதிக விரிவாக உருவாக்கப்படலாம். இத்திட்டம் என்பது வரப்போகும் பல ஆண்டுகளுக்கு என வரையப்படும் ஒன்று என்பதை நாம் நினைவில் இருத்த வேண்டும். நாட்டை உடனே பட்டினியில் இருந்து பாதுகாத்து விடுவதாக நாம்

வாக்களிக்கவில்லை. போர் முனையில் விடவும் அதிகக் கடின மானதாக இந்தப் போராட்டம் இருக்கும் என்று நாம் கூறு கிறோம். ஆனால் இந்தப் போராட்டம் நம்மை அதிகமாக அக்கறை கொள்ள வைக்கிறது. இது நம்மை நமது உடனடி யான பிரதான கடமைக்கு அருகில் கொண்டுவருகிறது. நாம் இதற்கு முன்பாக வெளிப்படுத்தியுள்ள அதிகப் பட்சமான முயற்சியையும் சித்த ஒற்றுமையையும் செயல்படுத்தி இப் போது வெளிப்படுத்த வேண்டும் என்று கோருகிறது. இந்தப் பணி நாம் வெற்றிகரமாக சாதிக்கும் பட்சத்தில் உள் நாட்டுப் போர் முனையில் விட இரத்தம் சிந்தா முனையில் இதில் சற்றும் குறையாத வெற்றியை ஈட்டுவது திண்ணம். (கரவொலி.)

பிராவ்தா, இதழ்கள் *69, 70,*
மார்ச் 30, 31, 1920

நூல் திரட்டு,
தொகுதி *40,*
பக்கங்கள் *237-257*

பழைய சமுதாய அமைப்பின் அழிவில் இருந்து புதிய சமுதாய அமைப்பைப் படைத்துருவாக்க

நமது செய்திப்பத்திரிகை[30] கம்யூனிஸ்டு உழைப்பு எனும் பிரச்சினைக்காகவே முழுதும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

சோஷலிசத்தை நிர்மாணிப்பதில் உள்ள தலையாய பிரச்சினை இதுவே. பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சி அதிகாரத்தை வென்று கைக்கொண்ட பிறகு மட்டுமே, நிலப் பிரபுக்கள் மற்றும் முதலாளிகள் உடைமை நீக்கம் செய்யப் பட்ட பிறகு மட்டுமே, அரசு அதிகாரத்தை வென்று கைக்கொண்டுவிட்ட பாட்டாளி வர்க்கம், மூர்க்கமான எதிர்ப்புக் காட்டி எதிர்ப்புரட்சிக் கலகங்களையும் உள்நாட்டுப் போரையும் ஏற்பாடு செய்த சுரண்டலாளர்களை எதிர்த்து தீர்மானகரமான வெற்றிகளை அடைந்த பிறகு மட்டுமே இந்தப் பிரச்சினையைச் செயல்முறையில் எழுப்ப முடியும் என்பதை முதன் முதலாக நமக்கு நாமே முற்றிலும் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும்.

இதற்கான தருணம் 1918 ஆரம்பத்தில் வந்து விட்டது போலத் தோன்றியது—அது உண்மையிலேயே, ஜெர்மன் ஏகாதிபத்தியம் ருஷ்யாவுக்கு எதிராக (1918) பிப்ரவரி ராணுவத் தாக்குதலுக்குப் பிறகு இது வந்தது. ஆனல் அந்த சந்தர்ப்பத்தில் இந்தக் காலகட்டம் மிகவும் குறுகியதாக இருந்தது. எதிர்ப்புரட்சிக் கலகங்கள் மற்றும் படையெடுப்புக் களின் புதிய மிகவும் வலிமை வாய்ந்த அலை நம் மீது மிகவும் வேகமாக மோதியடித்தது. எனவே சமாதானமான நிர்மாணப் பிரச்சினைகளில் தன்னைத் தானே நெருக்கமாயும்

விடாப்பிடியாயும் ஈடுபடுத்திக் கொள்வதற்கு சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

நாம் இப்போது இரண்டாண்டு காலம் முன் என்றும் கண்டிராத நம்பற்கரிய இடர்ப்பாடுகளின், இரண்டாண்டு காலப் பஞ்சத்தின் வறுமை மற்றும் துயரத்தின் கட்டத்தைக் கடந்து விட்டோம். இவற்றைத் தொடர்ந்து சர்வதேசிய முதலாளித்துவப் பிற்போக்கின் படைக்கும்பலை எதிர்த்து செஞ்சேனை முன் என்றும் கண்டிராத வெற்றிகளை அடைந்தது.

மேலும் நீடித்து நிற்கக் கூடிய நிலையான சமாதானத்தை நாம் பெற முடியும் (பிரெஞ்சு முதலாளிகள் போலந்தை நம் மீது போர் நடத்தும்படி தூண்டிவிடாத பட்சம்) என்று எதிர்பார்ப்பதற்குக் காரியகரமான ஆதாரங்கள் இன்று உள்ளன.

இந்த இரண்டாண்டுகளின் போது சோஷலிசத்தின் அடிப்படையில் நிர்மாண விஷயத்தில் நாம் சிறிது அனுபவம் பெற்றுள்ளோம். இதனுல்தான் நாம் கம்யூனிஸ்டு உழைப்பு பற்றிய பிரச்சினையில் செயல்பட உடனே இறங்க முடியும், இறங்க வேண்டும். அல்லது சரியாகச் சொன்னுல் கம்யூனிஸ்டு உழைப்பு அல்ல மாருக சோஷலிஸ்டு உழைப்பு பற்றிய பிரச்சினையில் செயல்பட இறங்க முடியும். ஏனெனில் நாம் முதலாளித்துவத்தில் இருந்து முளைத்து வளர்ந்து வரும் புதிய சமுதாய அமைப்பு முறையின் உயர் கட்டத்துடன் அல்ல மாருக தாழ்ந்த ஆரம்ப கட்டத்துடன்தான் நாம் செயல் பட்டு வருகிறோம்.

இத்தொடரின் மேலும் குறுகிய மற்றும் கருரான பொருளில், கம்யூனிஸ்டு உழைப்பு என்பது சமுதாயத்தின் நலனுக்காகப் புரியப்பட்டதான இலவச உழைப்பு ஆகும். இது, ஒரு திட்டவட்டமான கடமை என்ற முறையிலோ, ஒரு சில பொருள்களைப் பெறுவதற்கான உரிமையை நோக்கமாகவோ, முன்கூட்டியே நிறுவப்பட்டு சட்டபூர்வம் நிர்ணயிக்கப்பட்ட பங்குப் பணிக்கு ஏற்பவோ புரியப்படும் உழைப்பு அல்ல. இது பிரதிப் பலனை எதிர்பாராத பிரதிப் பலனை ஒரு நிபந்தனையாக்காத வேலை விகிதம் பற்றிய நிர்ப்பந்தம் அற்ற

வழியில் சுயவிருப்பமாகப் புரியப்படும் உழைப்பாகும். பொது நலனுக்குப் பாடுபடுவது என்பது ஒரு பழக்கமாகி விட்ட உழைப்பாகும்; பொது நலனுக்குப் பாடுபடுவது அவசியத்தால் உணர்வு பூர்வம் (இது ஒரு பழக்கம் ஆகி விட்டது) ஏற்பட்ட உழைப்பாகும்; ஆரோக்கியமான உடலமைப்பிற்கு அவசியமான உழைப்பாகும்.

இத்தகைய உழைப்பை விரிவாக, உண்மையிலேயே பேரளவான வீதத்தில் பயன்படுத்துவதில் இருந்து, நாம்—அதாவது நமது சமுதாயம், நமது சமூக அமைப்புமுறை—இன்னும் நெடுந்தொலைவிலேயே இருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெளிவாக்கப்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு இருக்கிறது, முன்னணி பாட்டாளி வர்க்கம் முழுவதாலும் (கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் தொழிற்சங்கங்கள்) அரசு ஆட்சியதிகாரத்தாலும் ஒருங்கே எழுப்பப்பட்டு இருக்கிறது என்ற மெய்விவரமே இந்த வழியில் ஒரு முன்னேற்றப் படியாகும்.

பெரிய காரியங்களைச் சாதிப்பதற்கு நாம் சிறிய காரியங்களுடன் தொடங்க வேண்டும்.

மறு புறம், ''பெரிய காரியங்கள்'' முடிந்த பிறகு, முதலாளிகளின் உடைமையை வீழ்த்தி பாட்டாளி வர்க்கத்தை ஆட்சி அதிகாரத்தில் வைத்த புரட்சிக்குப் பிறகு, பொருளாதார வாழ்க்கையைப் புதிய அடிப்படையில் ஒழுங்கமைப்பது சிறிய காரியங்களில் இருந்து மட்டுமே தொடங்க முடியும்.

சுபோத்னிக்குகள், உழைப்பு சேனைகள், கட்டாய உழைப்பு—இவை பல்வேறு வடிவங்களிலான சோஷலிஸ்டு மற்றும் கம்யூனிஸ்டு உழைப்பின் நடைமுறை நிறைவேற்றமாகும்.

இந்த நிறைவேற்றத்தில் இன்னும் பல குறைகள் இருக்கின்றன. முதலாளித்துவத்தின் வீர ஆதரவாளர்களை விட்டுவிட்டால், சிந்தனை ஆற்றலை முற்றும் இழந்துவிட்ட பேர்கள் தான் அவற்றை நோக்கி வெறுப்புடன் சிரிக்க (அல்லது ஆத்திரப்பட) முடியும்.

இத்தகைய ஒரு புதிய, கடினமான, மாபெரும் ஏற்பாட்டில் குறைகள், பிழைகள், அபத்தங்கள் தவிர்க்க முடியாதவை.

சோஷலிசத்தைக் கட்டுவதிலான இடர்ப்பாடுகள் பற்றி அஞ்சுபவர்கள், அவற்ருல் பீதிப்படுத்தப்பட இடமளிப்பவர்கள், விரக்திக்கோ அல்லது கோழைத்தனமான கலக்கத்துக்கோ இடமளிப்பவர்கள் சோஷலிஸ்டுகள் அல்ல.

ஒரு புதிய உழைப்புக் கட்டுப்பாட்டை, மக்கள் இடையே புது வடிவிலான சமூக பந்தங்களே, உழைப்பில் மக்களே ஈர்ப்பதற்கான புதிய வடிவங்களேயும் புதிய வழிமுறைகளேயும் உருவாக்கப் பல ஆண்டுகள் பல பத்தாண்டுகள் பிடிக்கும்.

அது மிகவும் மனநிறைவு அளிக்கும் உன்னதமான பணி.

நமது நல்வாய்ப்பு காரணமாக, முதலாளி வர்க்கத்தை வீழ்த்தி அதன் எதிர்ப்பை அடக்கியது மூலம் இந்தப் பணியைச் சாத்தியமாக்குவதற்கு வகைசெய்யும் ஆதாரத்தை வென்று பெற முடிந்தது.

நமது சக்தி அனேத்தையும் கொண்டு இந்தப் பணியில் இறங்குவோம். விடாமுயற்சி, விடா உறுதி, விருப்பார்வம், வைராக்கியம் மற்றும் காரியங்களே நூறு தடவை சோதித்துப் பார்க்கவும், அவற்றை நூறு தடவை சரிப்படுத்தவும், ஆனல் எது வரினும் சரி லட்சியத்தை அடையவும் இயலும் ஆற்றல்—இந்தப் பண்புகளே பாட்டாளி வர்க்கம் அக்டோபர் புரட்சிக்கு முந்திய பத்து, பதினேந்து அல்லது இருபது ஆண்டுகளில் பெற்றது. மேலும், அவற்றை இந்தப் புரட்சிக்குப் பிந்திய இரண்டே ஆண்டுகளில், முன் என்றும் கண்டிராத வறுமை, பட்டினி, நாசம் மற்றும் துரதிருஷ்டங்களால் துன்புற்ற பிறகு பெற்றது. பாட்டாளி வர்க்கத்தின் இந்தப் பண்புகள் பாட்டாளி வர்க்கம் நிச்சயம் வெல்லும் என்பதற்கு உத்தரவாதமாகும்.

ஏப்ரல் 8, 1920

கம்யூனிஸ்திச்செஸ்கி சுபோத்னிக்,
ஏப்ரல் 11, 1920

நூல் திரட்டு,
தொகுதி 40,
பக்கங்கள் 314-316

Н. ЛЕНИН

ДЕТСКАЯ БОЛЕЗНЬ «ЛЕВИЗНЫ» В КОММУ-НИЗМЕ

ГОСУДАРСТВЕННОЕ ИЗДАТЕЛЬСТВО

ПЕТЕРБУРГ

1·9·2·0

‘‘ ‘இடதுசாரி’ கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு’’ எனும் வி. இ. லெனினது புத்தகத்தின் முகப்புப் பக்கம். 1920

"இடதுசாரி" கம்யூனிசம்—இளம் பருவக்கோளாறு[31]

1

எப்பொருளில் நாம் ருஷ்யப் புரட்சியின் சர்வதேச முக்கியத்துவம் குறித்துப் பேசலாம்

ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வென்றதும் (அக்டோபர் 25 [நவம்பர் 7], 1917) ஆரம்ப மாதங்களில், பிற்பட்ட ருஷ்யாவுக்கும் மேலைய ஐரோப்பாவின் வளர்ச்சியுற்ற நாடுகளுக்கும் இடைப்பட்ட மிகுதியான வேறுபாடுகள் காரணமாய், இந்நாடுகளின் பாட்டாளி வர்க்கப் புரட்சி சிறிதும் எங்களுடையதை ஒத்ததாக இராதென நினைக்கத் தோன்றியிருக்கலாம். இப்பொழுது நமக்குக் கணிசமான அளவில் சர்வதேச அனுபவம் கிடைத்திருக்கிறது; எங்களுடைய புரட்சியின் குறிப்பிட்ட சில அடிப்படை இயல்புகள் ஒரு மண்டலத்துக்கோ, தனியொரு தேசத்துக்கோ, ருஷ்யாவுக்கோ மட்டும் உரித்தான முக்கியத்துவத்துடன் கூட, சர்வதேச முக்கியத்துவமும் பெற்றவை என்பதை இந்த அனுபவம் திட்டவட்டமாகப் புலப்படுத்துகிறது. சர்வதேச முக்கியத்துவம் என்பதாக இங்கு நான் கூறுவது இப்பதத்தின் விரிவான பொருளில் அல்ல; எங்களுடைய புரட்சியால் எல்லா நாடுகளுக்கும் ஏற்படும் விளைவுகளின் பொருளில், இப்புரட்சியின் முதல் நிலைக் கூறுகளில் சிற்சில மட்டுமின்றி யாவுமே, மற்றும் அதன் துணைக் கூறுகளில் பலவுங் கூட, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தவையே. இப்பதத்தின் மிகக் குறுகிய பொருளில்தான், எங்கள் நாட்டில் நடந்தேறியது சர்வதேச அளவில் பொருந்துவதாகும், அல்லது சர்வதேச அளவில் திரும்பவும் நடைபெறுவது வரலாற்று வழியில் தவிர்க்க இயலாததாகும் என்கிற பொருளில்தான், இதைப் பற்றி இங்கு நான் கூறுகிறேன். எங்களுடைய புரட்சி

யின் சில அடிப்படை இயல்புகள் இந்த முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

இந்த உண்மையை மிகைப்படுத்திக் கூறி, எங்கள் புரட்சியின் சிற்சில அடிப்படை இயல்புகளுக்கு அப்பாலும் இதனை விரிவுபடுத்திச் செல்வது மிகப் பெரும் பிழையாகி விடுமென்பதைக் கூறத் தேவையில்லை. வளர்ச்சியுற்ற நாடுகளில் ஏதேனும் ஒன்றிலாவது பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றியடையுமாயின், அதைத் தொடர்ந்து பெரும் மாற்றம் ஏற்படக் கூடும், அதாவது ருஷ்யா முன்மாதிரியாக இருக்கும் நிலை விரைவில் முடிவுற்றுத் திரும்பவும் (''சோவியத்'', சோஷலிசப் பொருளில்) பிற்பட்ட நாடாகிவிடக் கூடும் என்பதைக் காணத் தவறுவதும் பிழையே ஆகும்.

ஆனல் வரலாற்றின் தற்போதைய தருணத்தில் ருஷ்யாவின் முன்மாதிரியே, எல்லா நாடுகளுக்கும் அவற்றின் தவிர்க்க முடியாத சமீபத்திய எதிர்காலங் குறித்து ஒன்றை—மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றை—புலப்படுத்திக் காட்டுகிறது. இந்த வழியில்தான் காரியங்கள் நடைபெறுகின்றன. எல்லா நாடுகளிலும் முன்னேறிய தொழிலாளர்கள் இதனை முன்பே உணர்ந்து கொண்டு விட்டனர். பல சந்தர்ப்பங்களில், உணர்ந்து கொண்டனர் என்பதற்குப் பதிலாய், தமது புரட்சிகர வர்க்க உள்ளுணர்ச்சியின் துணை கொண்டு இதனை இறுகப் பற்றிக் கொண்டனர். சோவியத் ஆட்சியதிகார அமைப்புக்கும் மற்றும் போல்ஷிவிக்குத் தத்துவம், போர்த்தந்திரம் இவற்றின் அடிப்படைக் கூறுகளுக்கும் உள்ள சர்வதேச ''முக்கியத்துவம்'' (இச்சொல்லின் குறுகிய பொருளில்) இதில்தான் அடங்கியிருக்கிறது. இரண்டாவது அகிலத்தின் ''புரட்சிகரத்'' தலைவர்கள்—ஜெர்மனியில் காவுத்ஸ்கியையும், ஆஸ்திரியாவில் ஓட்டோ பெளவரையும் பிரெடெரிக் ஆட்லெரையும் போன்றவர்கள்—இதனைப் புரிந்து கொள்ளத் தவறி விட்டனர். அவர்கள் பிற்போக்காளர்களாகவும் படுமோசமான சந்தர்ப்பவாதத்தின், சமூக-துரோகத்தின் ஆதரவாளர்களாகவும் ஆகியதற்கு இதுவேதான் காரணம். எழுதியவர் பெயர் குறிக்கப்படாமல் உலகப் புரட்சி (*Weltrevolution*)[32] என்ற தலைப்பில் 1919 வியென்னுவில்

வெளியான பிரசுரத்தை (Sozialistische Bücherei, Heft 11; Jgnaz Brand*) இங்கு குறிப்பிடலாம். இது அவர்களுடைய சிந்தனைப் போக்கு அனைத்தையும் கருத்துக்களின் வீச்சு முழுவதையும், இன்னும் பொருத்தமாய்ச் சொல்வதெனில் அவர்களுடைய மடமை, பகட்டுப்புலமை, இழிநிலை, தொழிலாளி வர்க்க நலன்களுக்கு அவர்கள் இழைக்கும் துரோகம் ஆகியவற்றின் முழு அளவையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. அதுவும் ''உலகப் புரட்சி'' என்னும் கருத்தைப் ''பாதுகாப்பதாகக்'' கூறிக் கொண்டு இவ்வளவையும் அவர்கள் செய்வதை வெளிப்படுத்துகிறது.

ஆனுல் இந்தப் பிரசுரத்தைப் பற்றி மேலும் விவரமாய் வேறொரு நேரத்தில் பரிசீலிப்போம். இன்னும் ஒரேயொரு விவரத்தை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்: முன்னொரு காலத்தில் காவுத்ஸ்கி ஓடுகாலியாக இல்லாமல் மார்க்சியவாதியாகவே இருந்த போது, வரலாற்றியலாளராக அவர் இப்பிரச்சினையைப் பரிசீலிக்கையில், ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சித் தன்மை மேலைய ஐரோப்பாவுக்கு முன்மாதிரியாக விளங்கும் ஒரு சூழ்நிலை எழுவதன் சாத்தியப்பாட்டை முன்னறிந்து கூறியிருந்தார். 1902ல் புரட்சிகர இஸ்க்ராவுக்கு[33] ''ஸ்லாவ்களும் புரட்சியும்'' என்று காவுத்ஸ்கி ஒரு கட்டுரை எழுதிய போது இது நிகழ்ந்தது. அந்தக் கட்டுரையில் அவர் எழுதியதாவது:

''தற்காலத்தில் [1848ல் இருந்ததற்கு மாருக]** ஸ்லாவ்கள் புரட்சிகரத் தேசங்களது அணிவரிசையில் அடியெடுத்து வைத்து விட்டனர் என்பதுடன், புரட்சிகரச் சிந்தனையின், புரட்சிகரச் செயலின் மையம் மேலும் மேலும் ஸ்லாவ்களின் பக்கம் இடம் பெயர்ந்து வருவதாகவும் தெரிகிறது. புரட்சிகர மையம் மேற்றிசையிலிருந்து கீழ்த்திசைக்கு இடம் பெயர்ந்து செல்கிறது. பத்தொன்பதாம் நூற்றுண்டின்

* சோஷலிச நூலகம், தொகுதி 11; இக்னத்ஸ் பிராண்ட். —(ப-ர்.)

** வேறு விதமாய்க் குறிக்கப்படாத வரை, மேற்கோள்களில் அடைப்புகளுக்கு இடையமைந்த இடைக்குறிப்புக்கள் லெனினுடையவை.—(ப-ர்.)

முதற்பாதியில் அது பிரான்சில் அமைந்திருந்தது, சிற்சில சமயங்களில் இங்கிலாந்திலும் இருந்தது. 1848ல் ஜெர்மனியும் புரட்சிகரத் தேசங்களது அணிவரிசையில் சேர்ந்து கொண்டது.... புரட்சிகர மையம் மேலும் இடம் பெயர்வதை, அதாவது ருஷ்யாவுக்கு இடம் பெயர்வதை, நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற கருத்தைச் சுட்டும் நிகழ்ச்சிகளுடன் புதிய நூற்றாண்டு ஆரம்பமாகியுள்ளது.... மேற்கிலிருந்து அவ்வளவு பெரிய அளவில் புரட்சிகர முன் முயற்சியை ஈர்த்துக் கொண்ட ருஷ்யாவானது, இப்பொழுது புரட்சிகர ஆற்றலுக்குரிய ஊற்றாக மேற்கிற்குப் பணிபுரிய ஆயத்தமாயுள்ளது என்பதாகத் தெரிகிறது. நம் அணிகளில் மலிந்து வரும் ஊதிப் பருத்த குட்டிமுதலாளித்துவ அற்பத்தனத்துக்கும் உணர்ச்சி வேகமில்லா அரசியலுக்கும் முடிவு கட்டவல்ல சக்தி மிக்கச் சாதனமாக, தற்போது மூண்டெழுந்து வரும் ருஷ்யப் புரட்சி இயக்கம் செயல்படக் கூடும். போராட்ட ஆர்வத்தையும், நமது மாபெரும் இலட்சியங்கள் பால் உணர்ச்சித் துடிப்புள்ள பற்றுறுதியையும் அது மீண்டும் கிளர்ந்தெழச் செய்யக் கூடும். மேற்கு ஐரோப்பாவுக்கு ருஷ்யாவானது பிற்போக்கின், வரம்பற்ற எதேச்சாதிகாரத்தின் கொத்தளமாய் இருந்த நிலை முடிவுற்றுப் பல காலமாகிறது. இதற்கு நேர்மாறான நிலைதான் இன்றுள்ள நிலையாகுமென நினைக்கிறேன். ருஷ்யாவுக்கு மேற்கு ஐரோப்பா பிற்போக்கின், வரம்பற்ற எதேச்சாதிகாரத்தின் கொத்தளமாகி வருகிறது....ருஷ்யப் புரட்சியாளர்கள் ஜாருடன் கூடவே ஜாரின் கூட்டாளியான ஐரோப்பிய மூலதனத்தையும் ஏககாலத்தில் எதிர்த்துப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிராவிடில், நெடுங் காலத்துக்கு முன்பே அவர்கள் ஜார் மன்னனைச் சமாளித்திருப்பார்கள். இம்முறை அவர்கள் இரு பகைவர்களையும் சமாளிப்பதில் வெற்றி காண்பார்கள் என்றும், இந்தப் புதிய ''புனிதக் கூட்டு'' அதன் மூதாதைகளைக் காட்டிலும் மிக விரைவிலேயே தகர்ந்துவிடும் என்றும் எதிர்பார்ப்போமாக. ருஷ்யாவில் தற்போது நடைபெறும் போராட்டம் எப்படி முடிவுறுவதாய் இருப்பினும், அதன் தியாகிகளுடைய இரத்தமும் துன்பதுயரங்களும்—அது தோற்றுவிக்கும் தியாகிகளின் எண்ணிக்கை துரதிருஷ்டவசமாய் அளவு கடந்ததாகவே இருக்கும்—விரயமாகிவிடப் போவதில்லை. அவை நாகரிக உலகெங்கும் சமுதாயப் புரட்சியின் குருத்துக்களுக்கு ஊட்டமளித்து, அவற்றை மேலும் வளமாகவும் விரைவாகவும் வளரச் செய்யும். 1848ல் ஸ்லாவ்கள் உயிர் கொல்லும் கொடுங்குளிராகி, மக்களது வசந்தத்தின் நறுமலர்களை நலிந்து விழச் செய்தனர். இப்பொழுது

அவர்கள், பிற்போக்கின் இறுகிய பனிக்கட்டியை உடைத்து, தேசங்களுக்கு இன்பகரமான புதிய வசந்தத்தை யாராலும் தடுக்கவொண்ணுத முறையில் கொண்டு வந்து அளித்திடும் புயலாகி விடுவார்கள் என்று தோன்றுகிறது'' (கார்ல் காவுத்ஸ்கி, ''ஸ்லாவ்களும் புரட்சியும்'', இஸ்க்ரா, ருஷ்ய சமூக-ஜனநாயகப் புரட்சிகரச் செய்தியேடு, இதழ் 18, மார்ச் 10, 1902).

பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு கார்ல் காவுத்ஸ்கி எவ்வளவு நன்ருய் எழுதினர்!

2

போல்ஷிவிக்குகளுடைய வெற்றிக்கு இன்றியமையாத ஒரு நிபந்தனை

எங்களுடைய கட்சியில் மிகவும் கடுமையான, மெய்யாகவே உருக்கு உறுதி வாய்ந்த கட்டுப்பாடு இல்லாமல், அல்லது தொழிலாளி வர்க்கத்தின் பெருந் திரளானேர் அனைவரின்—அதாவது அதைச் சேர்ந்த சிந்தனையுடைய, நேர்மையான, தன்னலங்கருதாத தியாக உணர்வு கொண்ட, செல்வாக்குப் படைத்த பகுதியோர் யாவரின், பிற்பட்ட பகுதிகளுக்குத் தலைமை தாங்கவோ, அவற்றைத் தம்முடன் அழைத்துச் செல்லவோ வல்லமை பெற்ற பகுதியோர் யாவரின்—முழுநிறையான தங்குதடையற்ற ஆதரவு இல்லாமல், போல்ஷிவிக்குகளால் இரண்டரை ஆண்டுகள் வேண்டாம், இரண்டரை மாதங்களுக்குங்கூட அதிகாரத்தில் நீடித்திருக்க முடியாது என்பது தற்போது அனேகமாய் எல்லோராலுமே உணரப்படுகிறது என்று நினைக்கிறேன்.

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பது புதிய வர்க்கம் தன்னைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்து பகைவனை முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் மிகமிக வைராக்கியமான, ஈவிரக்கமற்ற யுத்தத்தைக் குறிக்கிறது. முதலாளித்துவ வர்க்கம் கவிழ்க்கப்பட்டதால் (ஒரேயொரு நாட்டில் மட்டும்தான் என்ருலுங்கூட) அதன் எதிர்ப்பு பத்து மடங்கு அதிகரித்து விட்டது. இதன் வலிமை சர்வதேச

மூலதனத்தின் பலத்தில் மட்டுமின்றி, இதன் சர்வதேசத் தொடர்புகளின் பலத்திலும் திண்மையிலும் மட்டுமின்றி, பழக்கத்துக்குள்ள பிடிப்பின் வலிவிலும் சிறுவீதப் பொருளுற்பத்திக்குள்ள பலத்திலும் அடங்கியுள்ளது. துரதிருஷ்டவசமாய் உலகில் சிறுவீதப் பொருளுற்பத்தி இன்னமும் மலிந்தே இருக்கிறது. இந்தச் சிறுவீதப் பொருளுற்பத்தி முதலாளித்துவத்தையும் முதலாளித்துவ வர்க்கத்தையும் இடையருது நாள்தோறும் மணிதோறும் தன்னியல்பாகவும் பெருவீத அளவிலும் தோற்றுவிக்கிறது. இந்த எல்லாக் காரணங்களாலும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் இன்றியமையாததாகி விடுகிறது. நெஞ்சுறுதியும் கட்டுப்பாடும் அசைக்க முடியாத ஒருமித்த திடச்சித்தமும் தேவைப்படும் விடாப்பிடியான உக்கிரமான நீண்டதோர் ஜீவ-மரணப் போராட்டமின்றி, முதலாளித்துவ வர்க்கத்தின் மீது வெற்றி பெறுவது சாத்தியமன்று.

திரும்பவும் கூறுகிறேன்: பாட்டாளி வர்க்கத்திடம் முழுமையான மத்தியத்துவமும் கடுமையான கட்டுப்பாடும் இருக்க வேண்டியது முதலாளித்துவ வர்க்கத்தின் மீது வெற்றி பெறுவதற்கான இன்றியமையாத ஒரு நிபந்தனையாகும் என்பதை ருஷ்யாவில் வெற்றி கண்ட பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் அனுபவம், சிந்தனை ஆற்றல் இல்லாதோருக்குங்கூட, அல்லது இதில் சிந்தனை செலுத்த வாய்ப்பு இல்லாமற் போனவர்களுக்குங்கூட தெளிவாகக் காட்டியுள்ளது.

அது அடிக்கடி எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதன் பொருள் என்ன, எந்நிலைமைகளில் இது சாத்தியம் என்பதில் போதிய அளவு சிந்தனை செலுத்தப்படவில்லை. சோவியத் ஆட்சியதிகாரத்துக்கும் போல்ஷிவிக்குகளுக்கும் வாழ்த்துக்கள் தெரிவிப்பதோடுகூட, இன்னும் அடிக்கடி புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு வேண்டிய கட்டுப்பாட்டை போல்ஷிவிக்குகளால் எப்படி நிறுவிக் கொள்ள முடிந்தது என்பதன் காரணங்கள் பற்றிய ஆழ்ந்த பகுத்தாராய்வும் செய்யப்படுமானல் எவ்வளவு நன்ருய் இருக்கும்?

அரசியல் சிந்தனைப் போக்காகவும் அரசியல் கட்சியாக

வும் போல்ஷிவிசமானது 1903 முதலாய் இருந்து வந்திருக்கிறது. இது நிலவிய இக்கட்டம் முழுவதிலுமான போல்ஷிவிசத்தின் வரலாற்றினுல் மட்டுமே, பாட்டாளி வர்க்க வெற்றிக்கு வேண்டிய உருக்கு உறுதி படைத்த கட்டுப்பாட்டை அதனுல் எப்படி நிறுவ முடிந்தது, மிகமிகக் கடினமான நிலைமைகளில் எப்படி அதைக் கட்டிக்காக்க முடிந்தது என்பதைத் திருப்திகரமாய் விளக்க முடியும்.

முதலாவதாக எழும் கேள்வி: பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சியின் கட்டுப்பாட்டைக் கட்டிக்காப்பது எப்படி? அது சோதிக்கப்படுவது எப்படி? அது மேலும் உறுதியூட்டப் பெறுவது எங்ஙனம்? முதலாவதாக, பாட்டாளிகளின் முன்னணிப் படையின் வர்க்க உணர்வாலும், புரட்சியின் பால் அதற்குள்ள பற்றுறுதியாலும், தன்னலங்கருதாத் தியாக உணர்வாலும், வீரத்தாலும். இரண்டாவதாக, உழைப்பாளி மக்கள் திரளின் மிகவும் விரிவான பகுதிகளுடனும், முக்கியமாய்ப் பாட்டாளி வர்க்கத்துடனும், மற்றும் உழைப்பாளி மக்களின் பாட்டாளி வர்க்கமல்லாத பகுதிகளுடனும் இணைப்புக் கொள்ளவும், மிக நெருங்கிய தொடர்பைக் கட்டிக்காக்கவும்—ஓரளவுக்கு ஒன்றுகலக்கவும் என்றுகூடச் சொல்லலாம்—அதற்குள்ள ஆற்றலால். மூன்றுவதாக, இந்த முன்னணிப் படையால் வகிக்கப்படும் அரசியல் தலைமையின் பிழையற்ற தன்மையால், அதன் அரசியல் ஆதார நெறி, போர்த்தந்திரம் இவற்றின் பிழையற்ற தன்மையால்—வெகுஜனப் பகுதிகள் தமது சொந்த அனுபவத்தின் வாயிலாகவே இவை சரியானவை என்பதைக் கண்டு கொண்டாக வேண்டும். முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி சமுதாயம் அனைத்தையும் மாற்றியமைத்திடுவதைப் பணியாகக் கொண்ட முன்னேற்றகரமான வர்க்கத்தின் கட்சியாக இருக்கும் மெய்யான தகுதியும் திறனும் கொண்ட புரட்சிகரக் கட்சியில், இந்நிலைமைகள் இல்லையேல், கட்டுப்பாட்டைச் சாதிக்க இயலாது. இந்த நிலைமைகள் இல்லையேல், கட்டுப்பாட்டை நிறுவுவதற்கான எல்லா முயற்சிகளும் தவிர்க்க முடியாதவாறு விரயமாகி வெறும் வாய்வீச்சாகவும் கேலிக்கூத்தாகவுமே முடிவுறும். அதேபோதில், இந்த நிலைமைகள்

யாவும் திடுதிப்பென்று தோன்றி விடுவதில்லை. அவை நீடித்த முயற்சியாலும் அரும் பாடுபட்டுப் பெறும் அனுபவத்தாலுமேதான் தோற்றுவிக்கப்படுகின்றன. பிழையற்ற புரட்சிகரத் தத்துவம் இருக்குமாயின், இந்நிலைமைகள் தோற்றுவிக்கப்படுவதற்கு அது துணை புரிகிறது. இந்தப் புரட்சிகரத் தத்துவம் வறட்டுச் சூத்திரமாக அமைந்து விடாமல், மெய்யாகவே வெகுஜனத் தன்மையதான, மெய்யாகவே புரட்சிகரமான இயக்கத்தின் நடைமுறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டே இறுதி வடிவம் பெறுகிறது.

1917-20ல் முன்பின் கண்டிராத மிகக் கடின நிலைமைகளில் போல்ஷிவிசமானது மிகவும் கண்டிப்பான மத்தியத்துவத்தையும் உருக்கு உறுதி வாய்ந்த கட்டுப்பாட்டையும் நிறுவி அவற்றை வெற்றிகரமாக கட்டிக்காக்க முடிந்ததற்கு ருஷ்யாவின் வரலாற்றுச் சிறப்பியல்புகள் பலவும்தான் காரணம்.

ஒரு புறத்தில், மார்க்சியத் தத்துவம் எனும் உறுதி மிக்க அடித்தளத்தின் மீது 1903ல் போல்ஷிவிசம் உதித்தெழுந்தது. இந்தப் புரட்சிகரத் தத்துவம் பிழையற்றதாகும் என்பது, இது ஒன்றுமட்டும்தான் பிழையற்றதாகும் என்பது, பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதிலுமான உலக அனுபவத்தினால் மட்டுமன்றி, இன்னும் முக்கியமாய் ருஷ்யாவில் புரட்சிகரச் சிந்தனையின் விசாரங்கள், ஊசலாட்டங்கள், தவறுகள், ஏமாற்றங்கள் ஆகியவற்றின் இந்த அனுபவத்தாலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ருஷ்யாவில் மிகவும் கொடிய, மிகவும் பிற்போக்கான ஜாரிசத்தால் ஒடுக்கப்பட்டு வந்த முற்போக்குச் சிந்தனை சுமார் அரை நூற்றாண்டாய்—கடந்த நூற்றாண்டில் ஏறத்தாழ நாற்பதாம் ஆண்டுகளிலிருந்து தொண்ணூறும் ஆண்டுகள் வரையில்—பிழையற்ற புரட்சிகரத் தத்துவத்தை ஆவலுடன் தேடி வந்தது; இத்துறையில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ‘‘இறுதி முடிவாகக்’’ கருதக் கூடியவை ஒவ்வொன்றையும் கண்ணும் கருத்துமாய், தளர்விலா ஊக்கத்துடன் கவனித்து வந்தது. ஈடிணையற்ற துன்பமும் தியாகமும், ஈடிணையற்ற புரட்சிகர வீரமும், நம்புதற்கரிய முனைப்பும், அயராத தேடலும், ஆராய்ச்சியும்,

நடைமுறைச் சோதனையும், ஏமாற்றமும், சரிபார்த்தலும், ஐரோப்பிய அனுபவத்துடனுன ஒப்பிடலும் நிறைந்த அரை நூற்ருண்டுக் காலத்தில் அனுபவித்த வாதனையின் வாயிலாய் ருஷ்யாவானது, பிழையற்ற ஒரேயொரு புரட்சித் தத்துவமான மார்க்சியத்தை வந்தடைந்தது. ஜாரிசத்தால் அரசியலாளர்கள் நாடுகடத்தப்பட்டு வந்ததன் விளைவாய், பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பாதியில் புரட்சிகர ருஷ்யா, வேறு எந்த நாட்டுக்கும் இல்லாத அளவுக்கு வளமான சர்வதேசத் தொடர்புகளும், உலகப் புரட்சி இயக்கத்தின் வடிவங்களையும் தத்துவங்களையும் பற்றிய அருமையான தகவல் ஞானமும் பெறலாயிற்று.

தத்துவமெனும் இந்தக் கருங்கல் அடித்தளத்தின் மீது எழுந்த போல்ஷிவிசமானது, மறு புறத்தில், உலகில் வேறு எங்கும் ஒப்புவமை காண இயலாத அனுபவச் செழுமை வாய்ந்த பதினைந்து ஆண்டுக் கால (1903-17) நடைமுறை வரலாற்றினைக் கடக்கலாயிற்று. அந்தப் பதினைந்து ஆண்டுகளின் போது இந்நாடு கண்ட புரட்சிகர அனுபவத்துக்கும், அதிவேகமாகவும் பல்வேறு வகைப்பட்டதாகவும் வரிசையாக வந்த வெவ்வேறு இயக்க வகைகளுக்கும்—சட்டபூர்வமானதும் சட்டவிரோதமானதும், அமைதியானதும் புயலின் மூர்க்கம் கொண்டதும், தலைமறைவானதும் பகிரங்கமானதும், சிறு குழுக்களின் அளவிலானதும் பரந்த வெகுஜன வீச்சு கொண்டதும், நாடாளுமன்ற வடிவிலானதும் பயங்கரவாத வடிவிலானதும் ஆகிய விதவிதமான இயக்க வகைகளுக்கும்—ஏறத்தாழ ஒப்பானவற்றையுங்கூட வேறு எந்த நாடும் கண்டதில்லை. வேறு எந்நாட்டிலும் நவீனச் சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களுக்குமுரிய போராட்டத்தின் இத்தனை விதமான வடிவங்களும் வகைகளும் முறைகளும் இவ்வளவு குறுகிய கால வரம்பினுள் ஒன்றுகுவிந்ததில்லை. இந்தப் போராட்டம் நாட்டின் பிற்பட்ட நிலை காரணமாகவும், ஜாரிச ஒடுக்குமுறையின் கடுமை காரணமாகவும், வியக்கத்தக்க வேகத்தில் முதிர்ச்சியுற்று, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய அரசியல் அனுபவத்தின் ''இறுதி முடிவாகக்'' கருதக் கூடியவற்றுள் பொருத்தமானவற்றை மிகுந்த ஆவலுடனும், வெற்றிகரமாகவும் கிரகித்துக் கொண்டது.

3

போல்ஷிவிச வரலாற்றின் பிரதான கட்டங்கள்

புரட்சியின் தயாரிப்புக்குரிய ஆண்டுகள் (1903-05). மாபெரும் புயல் நெருங்கி வந்ததை எங்கும் உணர முடிந்தது. எல்லா வர்க்கங்களும் கொந்தளிப்பான நிலைமையில் இருந்தன; தயாரிப்புகளில் முனைந்திருந்தன. நாடுகடத்தப்பட்ட அரசியலாளர்களின் பத்திரிகைகள் வெளிநாடுகளிலிருந்து, புரட்சியின் அடிப்படையான எல்லாப் பிரச்சினைகளின் தத்துவார்த்தக் கூறுகள் குறித்தும் விவாதித்து வந்தன. பிரதான மூன்று வர்க்கங்களின், மிதவாத-முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவ-ஜனநாயக (''சமூக-ஜனநாயகவாதி'', ''சோஷலிஸ்டு-புரட்சியாளர்''[34] என்னும் பெயர்களுக்குப் பின்னால் மறைந்து கொண்டு இவை செயல்பட்டன), பாட்டாளி வர்க்கப் புரட்சி ஆகிய முதன்மையான மூன்று அரசியல் போக்குகளின் பிரதிநிதிகள் வேலைத்திட்டம், போர்த்தந்திரம் இவற்றின் பிரச்சினைகள் குறித்து மிகக் கடுமையான போராட்டம் நடத்தி, நெருங்கி வந்த பகிரங்க வர்க்கப் போராட்டத்தை எதிர்பார்த்து, அதற்காகத் தயார் செய்து வந்தனர். 1905-07லும் 1917-20லும் வெகுஜனப் பகுதிகள் ஆயுதமேந்திப் போராடிய எல்லாப் பிரச்சினைகளையும் அவற்றின் கரு வடிவில் இக்காலத்திய பத்திரிகைகளில் படித்தறிந்து கொள்ளலாம் (படித்தறிந்து கொள்ளவும் வேண்டும்). இந்தப் பிரதான மூன்று போக்குகளுக்கு மத்தியில் இடைநிலையிலும் மாறிச்செல்லும் கட்டத்திலும் அரைகுறை நிலையிலுமான போக்குகள் ஏராளமாய் இருக்கத்தான் செய்தன. மெய்யான வர்க்கத் தன்மை கொண்ட அரசியல், சித்தாந்தப் போக்குகள், பத்திரிகைகளும் கட்சிகளும் பிரிவுகளும் குழுக்களும் நடத்திய போராட்டத்தில் தெளிவான உருவம் பெற்றன என்று சொன்னால் மேலும் பொருத்தமாயிருக்கும். நெருங்கி வந்து கொண்டிருந்த போர்களுக்குத் தேவையான அரசியல், சித்தாந்த ஆயுதங்களை இவ்வர்க்கங்கள் உருவாக்கி வந்தன.

புரட்சி ஆண்டுகள் (1905-07). எல்லா வர்க்கங்களும் பகிரங்கமாய் வெளிவரலாயின. வேலைத்திட்டம், போர்த் தந்திரம் இவை குறித்த எல்லாக் கருத்துக்களும் வெகுஜனங் களது செயலால் சோதித்துப் பார்க்கப்பட்டன. வேலை நிறுத்தப் போராட்டம் அதன் வீச்சிலும் தீவிரத்திலும் உலகில் எங்குமே இணையற்றதாய் விளங்கிற்று. பொருளாதார வேலை நிறுத்தம் அரசியல் வேலைநிறுத்தமாகவும், அரசியல் வேலை நிறுத்தம் ஆயுதமேந்திய எழுச்சியாகவும் வளர்ந்து விட்டது. தலைவனுகச் செயல்பட்ட பாட்டாளி வர்க்கத்துக்கும், தலைமை தாங்கி அழைத்துச் செல்லப்பட்ட ஊசலாட்டம் வாய்ந்த நிலையற்ற விவசாயிகளுக்கும் இடையிலான உறவுகள் செயலின் வாயிலாய்ச் சோதித்துப் பார்க்கப்பட்டன. போராட்டத்தின் தன்முனைப்பான வளர்ச்சியின் போது நிறுவன ஒழுங்கமைப்புக்கான சோவியத் வடிவம் உதித்தெழுந்தது. சோவியத்துக்களின் முக்கியத்துவம் குறித்து அக்காலத்தில் நடைபெற்ற சர்ச்சைகள் 1917-20ஆம் ஆண்டுகளின் பெரும் போராட்டத்துக்கு முன்னேற்பாடாக அமைந்தன. மாறி மாறிக் கையாளப்பட்ட நாடாளுமன்றப் போராட்ட முறைகளும் நாடாளுமன்றத்துக்குப் புறம்பான போராட்ட முறைகளும், நாடாளுமன்றத்தைப் பகிஷ்காரம் செய்யும் போர்த் தந்திரமும் நாடாளுமன்றத்தில் பங்கு கொள்ளும் போர்த் தந்திரமும், சட்டபூர்வமான போராட்ட முறைகளும் சட்டத்துக்குப் புறம்பான போராட்ட முறைகளும் மற்றும் இவற்றுக்கிடையிலான உறவுகளும் தொடர்புகளும் அளவு கடந்த உள்ளடக்கப் பொருள் வளம் மிக்கதாய்த் திகழ்ந்தன. வெகுஜனங்களும் தலைவர்களும், அதேபோல வர்க்கங்களும் கட்சிகளும் அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படைகளில் போதனை பெறுவதைப் பொறுத்தவரை, இந்தக் காலத்தின் ஒவ்வொரு மாதமும் ''சமாதான பூர்வமான'', ''அரசியலமைப்புச் சட்டக் கட்டுக்கோப்புக்கு உட்பட்டதான'' வளர்ச்சிக்குரிய ஒரு முழு ஆண்டுக்கு ஈடானதாய் இருந்தது. 1905ஆம் ஆண்டின் ''ஒத்திகை'' நடந்திருக்காவிட்டால், 1917ஆம் ஆண்டில் அக்டோபர் புரட்சியின் வெற்றி சாத்தியமாய் இருந்திருக்காது.

பிற்போக்கு அரசோச்சிய ஆண்டுகள் (1907-10). ஜாரிசம் வெற்றி பெற்று விட்டது. புரட்சிகரக் கட்சிகள், எதிர்க் கட்சிகள் யாவும் நொறுக்கப்பட்டன. தளர்வு, மனச் சோர்வு, பிளவுகள், பூசல்கள், ஓடுகாலித்தனம், ஆபாசம்—இவையே அரசியல் என்ருயிற்று. தத்துவவியல் கருத்துமுதல்வாதத்தை நோக்கி மேலும் மேலும் சரிவு ஏற்பட்டது, மாயாவாத மானது எதிர்ப்புரட்சி உணர்ச்சிகளின் மூடுதிரையாகியது. ஆனுல் அதேபோதில் இந்தப் பெருந்தோல்விதான் புரட்சிகரக் கட்சிகளுக்கும் புரட்சிகர வர்க்கத்துக்கும் மிகவும் பயனுள்ள மெய்யான பாடம் கற்பித்தது; வரலாற்றுத் துறை இயக்கவியலில், அரசியல் போராட்டத்தைப் புரிந்து கொள்வதில், அந்தப் போராட்டத்தை நடத்தும் கலையில் பாடம் கற்பித்தது. ஆபத்தான தருணங்களில்தான் யார் யார் தனது நண்பர்கள் என்பதை ஒருவர் தெரிந்து கொள்கிருர். தோல்வியுற்ற சேனைகள் நன்கு படிப்பினை பெறுகின்றன.

வெற்றி பெற்ற ஜாரிசம் ருஷ்யாவில் முதலாளித்துவத் துக்கு முற்பட்டதான, தந்தைவழிச் சமுதாய வாழ்க்கை முறையின் மீதமிச்சங்களது அழிவைத் துரிதப்படுத்துமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது. முதலாளித்துவ வழிகளில் நாட்டின் வளர்ச்சி மிக வேகமாக முன்னேறியது. வர்க்கப் பாகுபாடுகளுக்குப் புறம்பானவையாகவும் மேம்பட்டவையாகவும் தோன்றிய பிரமைகள், முதலாளித்துவத்தைத் தவிர்த்துக் கொள்வதற்குரிய சாத்தியப்பாடு குறித்த பிரமைகள் சிதறடிக்கப்பட்டன. வர்க்கப் போராட்டம் மிகவும் புதுமையான, மேலும் எடுப்பான முறையில் வெளிப்படலாயிற்று.

புரட்சிகரக் கட்சிகள் தமது கல்வி போதத்தை நிறைவுறச் செய்து கொள்ள வேண்டியிருந்தது. எப்படித் தாக்குதல் தொடுப்பது என்று இது வரை அவை கற்று வந்தன. இப்பொழுது அவை இந்த அறிவுடன் கூட, எப்படி ஒழுங்கு குலையாமல் பின்வாங்குவது என்ற அறிவைப் பெறுவதும் அவசியமென்பதை உணர வேண்டியதாயிற்று. ஒழுங்குடன் தாக்குவதற்கும் ஒழுங்குடன் பின்வாங்குவதற்கும் தெரிந்து கொண்டாலொழிய வெற்றி பெற முடியாதென்பதை அவை

உணர வேண்டியிருந்தது—கடுமையான அனுபவத்தின் வாயிலாகவே புரட்சிகர வர்க்கம் இதனை உணரத் தெரிந்து கொள்கிறது. தோல்வியுற்ற புரட்சிகரக் கட்சிகள், எதிர்க்கட்சிகள் யாவற்றிலும் போல்ஷிவிக்குகள்தான் மிகவும் கூடுதலான ஒழுங்குடன் பின்வாங்குதலைச் செயல்படுத்திக் கொண்டனர்; தமது ''சேனைக்கு'' மிகவும் குறைவான சேதத்தோடு, அதன் உட்கருவைப் பழுதின்றிப் பாதுகாத்துக் கொண்டு, மிகக் குறைந்த அளவிலான பிளவுகளுடன் (ஆழத்தின் நிலையிலிருந்தும் தீராத்தன்மையின் நிலையிலிருந்தும்), மிகக் குறைவான மனச்சோர்வுடன், மிகவும் விரிவான அளவிலும் பிழையற்ற முறையிலும் விறுவிறுப்பாய் மீண்டும் பணி தொடங்குவதற்குச் சிறந்த நிலையில் இதனைச் செயல்படுத்திக் கொண்டனர். பின்வாங்க வேண்டுமென்பதையும், எப்படிப் பின்வாங்குவதென்று தெரிந்திருக்க வேண்டுமென்பதையும், நாடாளுமன்றங்களில் மிகவும் பிற்போக்கானவற்றிலும், தொழிற்சங்கங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களிலும் இன்ஷூரன்ஸ் கழகங்களிலும் இன்ன பிற நிறுவனங்களிலும் மிகவும் பிற்போக்கானவற்றிலும் சட்டபூர்வமான முறையில் வேலை செய்யத் தெரிந்திருக்க வேண்டுமென்பதையும் புரிந்து கொள்ள விரும்பாத புரட்சிகர வாய்வீச்சுக்காரர்களை போல்ஷிவிக்குகள் ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தி விலக்கியதால்தான் அவர்களால் இதைச் செய்ய முடிந்தது.

புத்தெழுச்சி ஆண்டுகள் (1910-14). தொடக்கத்தில் முன்னேற்றம் சொல்ல முடியாத அளவுக்கு மிகமிக மந்தமாகவே இருந்து வந்தது. பிற்பாடு 1912ஆம் ஆண்டின் லேனு நிகழ்ச்சிகளைத்[35] தொடர்ந்து ஓரளவு துரிதமடையலாயிற்று. போல்ஷிவிக்குகள் இதன் முன் என்றும் கண்டிராத மிகப் பெரும் இன்னல்களைச் சமாளித்து மென்ஷிவிக்குகளைப் பின்னிலைக்குத் தள்ளினர். தொழிலாளி வர்க்க இயக்கத்தில் மென்ஷிவிக்குகள் முதலாளித்துவக் கையாட்களாக ஆற்றி வந்த பாத்திரத்தை 1905க்குப் பிற்பாடு முதலாளித்துவ வர்க்கம் அனைத்துமே தெளிவாக உணர்ந்து கொண்டு விட்டது. ஆகவே, முதலாளித்துவ வர்க்கத்தினர் போல்ஷிவிக்குகளுக்கு எதிராய் ஆயிரம் வழிகளில் அவர்

களுக்கு ஆதரவு அளித்தனர். போல்ஷிவிக்குகள் சட்ட விரோதமான வேலைகளைச் செய்வதுடன் ''சட்டபூர்வமான வாய்ப்புகளைத்'' தவறாமல் பயன்படுத்திக் கொள்வதையும் இணைத்திடுவதென்ற பிழையற்ற போர்த்தந்திரத்தைப் பின் பற்றியிராவிடில், மென்ஷிவிக்குகளைப் பின்னுக்குத் தள்ளு வதில் அவர்களால் வெற்றி பெற்றிருக்க முடியாது. பழுத்த பிற்போக்குவாத டூமாவில்[36] போல்ஷிவிக்குகள் தொழிலாளர் தொகுதியின் முழு ஆதரவையும் வென்று கொண்டனர்.

முதல் ஏகாதிபத்திய உலகப் போர் *(1914-17)*. கடை கோடியான பிற்போக்குவாத ''நாடாளுமன்றத்தைக்'' கொண்டு நடைபெற்ற சட்டபூர்வமான நாடாளுமன்றச் செயற்பாடானது, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சி யினரான போல்ஷிவிக்குகளுக்கு மிகவும் பயனுள்ள பணி ஆற்றியது. போல்ஷிவிக் டூமாப் பிரதிநிதிகள் சைபீரியா வுக்குக் கடத்தப்பட்டனர்.[37] சமூக-ஏகாதிபத்தியம், சமூக-தேசியவெறி, சமூக-தேசபக்தவாதம், முரண்பாடான சர்வ தேசியம், முரணற்ற சர்வதேசியம், சாத்வீகவாதம், சாத்வீக வாதப் பிரமைகளை நிராகரிக்கும் புரட்சிகரப் போக்கு ஆகியவற்றின் எல்லாச் சாயல்களும் நாடுகடத்தப்பட்டு வெளியிலிருந்து இயங்கிய ருஷ்யப் பத்திரிகைகளில் முழு அளவுக்கு வெளியாயின. ருஷ்ய சோஷலிச இயக்கத்தினுள் ''உட்குழுக்கள்'' மலிந்து விட்டதென்றும், அவை தம்மிடையே கடுமையான போராட்டம் நடத்தினவென்றும் ஆணவமாக வும் அலட்சியமாகவும் முகத்தைச் சுளித்துக் கொண்ட இரண்டாவது அகிலத்தின் மெத்தப் படித்த முட்டாள்களும் பாட்டிமார்களும்—வளர்ச்சி பெற்ற எல்லா நாடுகளிலும் மெச்சிப் புகழப்பட்ட ''சட்டபூர்வமான நிலையை'' யுத்த மானது தட்டிப் பறித்துக் கொண்டதும்—ருஷ்யப் புரட்சி யாளர்கள் ஸ்விட்சர்லாந்திலும் மற்றும் சில நாடுகளிலும் செய்து வந்த அந்தத் தங்குதடையற்ற (சட்டவிரோதமான) கருத்துப் பரிமாற்றத்துக்கும், பிழையற்ற கருத்துக்களின் தங்குதடையற்ற (சட்டவிரோதமாக) மலர்ச்சிக்கும் சொற்ப அளவுகூட ஒப்பானது எதையும் ஏற்பாடு செய்து கொள்ளத் திராணியற்றவர்களாயினர். எனவேதான், எல்லா நாடுகளை

யும் சேர்ந்த பகிரங்கமான சமூக-தேசபக்தவாதிகளும் சரி, ''காவுத்ஸ்கிவாதிகளும்'' சரி பாட்டாளி வர்க்கத்தின் படுமோசமான துரோகிகளாயினர். 1917-20ல் போல்ஷிவிசம் வெற்றிவாகை சூட முடிந்ததன் பிரதான காரணங்களில் ஒன்று என்னவெனில், 1914ஆம் ஆண்டின் இறுதியிலிருந்தே அது சமூக-தேசியவெறியின், ''காவுத்ஸ்கிவாதத்தின்'' இழிநிலையையும் கயமையையும் நீசத்தனத்தையும் ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தி வந்தது (பிரான்சில் லொங்கேயிசமும், பிரிட்டனில் சுயேச்சைத் தொழிற்கட்சியின்[38] தலைவர்கள், ஃபேபியன்கள்[39] இவர்களது கருத்துக்களும், இத்தாலியில் டுராட்டியின் கருத்துக்களும் இன்ன பிறவும் ''காவுத்ஸ்கிவாதத்தையே'' ஒத்தவையாகும்). பிற்பாடு வெகுஜனங்கள் போல்ஷிவிக்குகளின் கருத்துக்களே சரியானவை என்று தமது சொந்த அனுபவத்தின் வாயிலாக மேலும் மேலும் ஐயமற உணர்ந்து கொண்டனர்.

ருஷ்யாவில் இரண்டாவது புரட்சி (1917 பிப்ரவரியிலிருந்து அக்டோபர் வரை). ஜாரிசத்தின் கிழடு தட்டிய நிலையும், காலங் கழிந்த நிலையும் சேர்ந்து (மிகக் கொடூரமான போரில் கிடைத்த உதைகளும் அந்தப் போரால் விளைந்த கேடுகளும் துணை புரிய), ஜாரிசத்துக்கு ஏதிரான மிகக் கடுமையான நாசகர சக்தி ஒன்றைத் தோற்றுவித்தன. ஒரு சில நாட்களுக்குள் ருஷ்யாவானது ஜனநாயக முதலாளித்துவக் குடியரசாக, உலகின் வேறு எந்த நாட்டையும் விட—யுத்த நிலைமைகளில்—சுதந்திரத் தன்மை கொண்ட ஜனநாயகக் குடியரசாக மாற்றப்பட்டது. மிகக் ''கருரான நாடாளுமன்றக்'' குடியரசுகளில் செய்யப்படுவது போலவே, இங்கும் புரட்சிகரக் கட்சிகளின், எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் அரசாங்கத்தை அமைக்கத் தொடங்கினர். நாடாளுமன்றத்தில் — மிகவும் பிற்போக்கான நாடாளுமன்றம்தான் என்றாலுங்கூட—ஒருவர் எதிர்க் கட்சி ஒன்றின் தலைவராய் இருந்தார் என்ற உண்மையானது, பிற்பாடு புரட்சியில் அவர் பங்காற்றுவதற்கு வசதியாக இருந்தது.

ஒரு சில வாரங்களுக்குள் மென்ஷிவிக்குகளும் சோஷ

லிஸ்டு-புரட்சியாளர்களும், இரண்டாவது அகிலத்தின் ஐரோப்பிய தீரர்களுக்கும் அமைச்சரவைவாதிகளுக்கும்[40] ஏனைய சந்தர்ப்பவாதக் கும்பல்களுக்கும் உரிய எல்லா முறைகளையும் பழக்கவழக்கங்களையும் வாதங்களையும் குயுக்திகளையும் திறமையுடன் கற்றுத் தேர்ந்து கொண்டு விட்டனர். ஷெய்டெமன்களையும் நோஸ்கேயையும் காவுத்ஸ்கியையும் ஹில்ஃபர்டிங்கையும் ரென்னரையும் ஆஸ்டர்லித்சையும் ஒட்டோ பௌவரையும் ஆட்லெரையும் டுராட்டியையும் லொங்கேயையும் மற்றும் இங்கிலாந்தில் ஃபேபியன்களையும் சுயேச்சைத் தொழிற்கட்சித் தலைவர்களையும் பற்றி இப்பொழுது நாம் படிப்பவை எல்லாம், ஏற்கெனவே நாம் நன்கு அறிந்த பழைய பல்லவியையே சலிப்புத் தட்டும் முறையில் திருப்பிப் பாடுவதாக, ஒப்பிப்பதாகத் தோன்றுகிறது (உண்மையிலும் அப்படியேதான் இருக்கிறது). இவை யாவற்றையும் மென்ஷிவிக்குகளிடம் ஏற்கெனவே கண்டிருக்கிறோம். வரலாற்றின் கைங்கரியத்தால், பிற்பட்ட ஒரு நாட்டின் சந்தர்ப்பவாதிகள், முன்னேறிய நாடுகள் பலவற்றின் சந்தர்ப்பவாதிகளுக்கு முன்னோடிகளாக அமைந்து விட்டனர்.

இரண்டாவது அகிலத்தின் வீரர்கள் எல்லோரும் கையாலாகாதவர்களாகி விட்டனர் என்றால், சோவியத்துக்களின், சோவியத் ஆட்சியின் முக்கியத்துவத்தையும் பாத்திரத்தையும் பற்றிய பிரச்சினையில் தம்மைத் தாமே இழிவுபடுத்திக் கொண்டனர் என்றால், இப்பொழுது இரண்டாவது அகிலத்தை விட்டு விலகிச் சென்றுவிட்ட மூன்று மிக முக்கியக் கட்சிகளின் (அதாவது, ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி, பிரெஞ்சு லொங்கேயிஸ்டுக் கட்சி, பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற்கட்சி ஆகியவற்றின்) தலைவர்கள் இப்பிரச்சினையில் மிகவும் ''எடுப்பான'' முறையில் தம்மை இழிவுபடுத்திக் கொண்டு இக்கட்டான நிலையில் சிக்கிக் கொண்டனர் என்றால், இவர்கள் எல்லோருமே குட்டிமுதலாளித்துவ ஜனநாயகத்தின் தப்பெண்ணங்களுக்கு (முற்றிலும் 1848ஆம் ஆண்டின் குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினருடைய, தம்மை ''சமூக-ஜனநாயகவாதிகள்'' என்று அழைத்துக் கொண்ட இவர்களுடைய மனப்பாங்கிலே) தாம்

அடிமைப்பட்டுவிட்டதைக் காட்டிக் கொண்டார்கள் என்ருல், இவை யாவற்றையும் நாம் ஏற்கெனவே மென்ஷிவிக்குகளுடைய விவகாரத்தில் கண்டிருக்கிருேம். வரலாற்றின் கைங்கரியத்தால், சோவியத்துக்கள் ருஷ்யாவில் 1905லேயே தோன்றி விட்டன. 1917 பிப்ரவரியிலிருந்து அக்டோபர் வரையில் அவை மென்ஷிவிக்குகளால் தவருன வழியில் பிரயோகிக்கப்பட்டன. சோவியத்துக்களின் பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் மென்ஷிவிக்குகளால் புரிந்து கொள்ள முடியாத காரணத்தால் அவர்கள் கையாலாகாதவர்களாயினர். இன்று சோவியத்துக்களின் ஆட்சி என்னும் கருத்து உலகெங்கும் மலர்ந்து எல்லா நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தாரிடையிலும் அபார வேகத்தில் பரவி வருகிறது. எங்களுடைய மென்ஷிவிக்குகளைப் போலவே, இரண்டாவது அகிலத்தின் பழைய தீரர்கள் எல்லா இடங்களிலுமே கையாலாகாதவர்களாகி வருகிருர்கள். சோவியத்துக்களுடைய பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள அவர்கள் ஆற்றலற்றவர்களாய் இருப்பதே இதற்குக் காரணம். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மிக முக்கியமான சில பிரச்சினைகளில் எல்லா நாடுகளுமே, ருஷ்யா என்ன செய்துள்ளதோ, அதையே தவிர்க்க முடியாத வகையில் செய்ய வேண்டியிருக்கும் என்பதை அனுபவம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இப்போது அடிக்கடி காணக் கூடிய கருத்துக்களுக்கு மாருய், போல்ஷிவிக்குகள் நாடாளுமன்ற (உண்மை நிலையில்) முதலாளித்துவக் குடியரசுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் எதிரான தமது வெற்றிகரப் போராட்டத்தை மிகவும் எச்சரிக்கையான முறையில்தான் தொடங்கினர்; இதற்காக அவர்கள் செய்த தயாரிப்புகள் எவ்வகையிலும் சுலபமாய் இருக்கவில்லை. குறிப்பிடப்பட்ட இக்கட்டத்தின் தொடக்கத்தில், நாங்கள் அரசாங்கத்தை வீழ்த்தும்படி அறைகூவல் விடுக்கவில்லை. முதலில் சோவியத்துக்களின் அமைப்பையும் மனநிலையையும் மாற்றுமல், அரசாங்கத்தை வீழ்த்த முடியாதென விளக்கி வந்தோம். முதலாளித்துவ நாடாளுமன்றமான அரசியல் நிர்ணய

சபையைப் பகிஷ்கரிக்கும்படி நாங்கள் அறைகூவல் விடுக்க வில்லை; அதற்குப் பதில்—எங்கள் கட்சியின் ஏப்ரல் (1917) மாநாட்டைத் தொடர்ந்து, கட்சியின் பெயரிலேயே அதிகார பூர்வமாய் இதைக் கூற முற்பட்டோம்—அரசியல் நிர்ணய சபையைக் கொண்ட முதலாளித்துவக் குடியரசானது, அர சியல் நிர்ணய சபை இல்லாத முதலாளித்துவக் குடியரசைக் காட்டிலும் சிறந்ததாய் இருக்கும் என்றும், ஆனால் ''தொழி லாளர்கள், விவசாயிகளது'' சோவியத் குடியரசானது எந்த முதலாளித்துவ-ஜனநாயக, நாடாளுமன்றக் குடியரசைக் காட்டிலும் சிறப்பாய் இருக்கும் என்றும் கூறினோம். இது போன்ற முழுநிறையான, எச்சரிக்கை மிக்க, நீண்ட தயாரிப்பு கள் இல்லாமல், எங்களால் 1917 அக்டோபரில் வெற்றி பெற்றிருக்கவோ, அந்த வெற்றியை உறுதிப்படுத்தியிருக் கவோ முடிந்திருக்காது.

4

தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் எந்தெந்தப் பகைகளுக்கு எதிரான போராட்டம் போல்ஷிவிசம் வளர்ந்து வலிமையுற்று உருக்கு உறுதி பெற உதவிற்று

முதலாவதாகவும் முதன்மையானதாகவும் குறிப்பிட வேண்டியது சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான போராட்டம். சந்தர்ப்பவாதமானது 1914ல் திட்டவட்டமாய் சமூக-தேசிய வெறியாக வளர்ந்து, திட்டவட்டமாய்ப் பாட்டாளி வர்க்கத் துக்கு எதிராய்ச் சென்று, முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் சேர்ந்து கொண்டது. இயல்பாகவே இது, தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் போல்ஷிவிசத்தின் முதற்பெரும் பகையாகி யது. இன்னமும் சர்வதேச அளவில் இது முதற்பெரும் பகையாகவே இருந்து வருகிறது. இந்தப் பகை குறித்து போல்ஷிவிக்குகள் முதன்மையான கவனம் செலுத்தினர், இப்போதும் செலுத்துகின்றனர். போல்ஷிவிக்குகளுடைய செயலாற்றலின் இந்தப் பகுதி இப்பொழுது வெளிநாடு களிலுங்கூட ஓரளவு நன்கு தெரிந்ததாகி விட்டது.

ஆனல் தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் இருக்கும் போல்ஷிவிசத்தின் மற்றெரு பகை குறித்து இவ்வாறு சொல்வதற்கில்லை. போல்ஷிவிசமானது குட்டிமுதலாளித் துவப் புரட்சிவாதத்தை எதிர்த்து நீண்ட பல ஆண்டுகள் நடத்திய போராட்டத்தின் மூலமாக உருப்பெற்று வளர்ச்சி யுற்று உருக்கு உறுதியடைந்ததென்ற உண்மை குறித்து பிற நாடுகளில் அதிகம் தெரியாது. குட்டிமுதலாளித்துவப் புரட்சிவாதம் அராஜகவாதச் சாயல் கொண்டது; அல்லது அராஜகவாதத்திடமிருந்து சில அம்சங்களைக் கடன் வாங்கிக் கொள்கிறது. சாராம்சமான எல்லாத் துறைகளிலும் அது முரணற்ற பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நிலைமை களுக்கும் தேவைகளுக்கும் உகந்த தகுதிகளைப் பெற்ற தல்ல. சிறு உடைமையாளர், சிறு எஜமானர் (இந்தச் சமூக ரகத்தினர் பல ஐரோப்பிய நாடுகளில் விரிவான அளவில், வெகுஜன அளவிலுங்கூட இருந்து வருகின்றன) முதலாளித்துவத்தில் எப்பொழுதுமே ஒடுக்குமுறைக்கு இலக்காகி, அடிக்கடி தமது வாழ்க்கை நிலைமைகளில் மிகக் கடுமையான, நம்ப முடியாத அளவுக்கு மிக விரைவான சீரழி வுக்கு உள்ளாகின்ருர், படுநாசத்துக்குங்கூட ஆளாகின்ருர். இவர் எளிதில் புரட்சிகர அதிதீவிர நிலைகளுக்குச் சென்று விடுகிருர் என்ருலும், விடாமுயற்சியுடன் போராடவோ, ஒழுங்கமைப்பு பெறவோ, கட்டுப்பாடும் உறுதிப்பாடும் கொள்ளவோ திராணியற்றவர் என்பது மார்க்சியவாதி களுக்குத் தத்துவத்தின் வாயிலாக முழு அளவுக்கு நிலை நாட்டப்பட்டிருக்கிறது; ஐரோப்பியப் புரட்சிகள், புரட்சிகர இயக்கங்கள் ஆகியயாவற்றின் அனுபவத்தாலும் இது பூரண மாக ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. முதலாளித்துவத் தின் கொடுமைகளால் குட்டிமுதலாளித்துவப் பகுதியோர் ''வெறிபிடித்த மூர்க்க நிலைக்குத்'' தள்ளிவிடப்படுவதானது —அராஜகவாதத்தைப் போலவே—முதலாளித்துவ நாடுகள் யாவற்றுக்கும் இயல்பாகவே உரித்தான ஒரு சமூக நிகழ்வு ஆகும். இந்தப் புரட்சிவாதத்தின் நிலையற்ற தன்மையும், அதன் வறட்டுத் தனமும் மற்றும் அடங்கி அடிபணிந்து விடும் நிலையாகவும் மனச்சோர்வாகவும் மாயக் கற்பனை

களாகவும் ஏதேனும் ஒரு முதலாளித்துவ ''ஜம்பக்'' கருத்தின் பால் ''பைத்தியக்கார'' மோகங் கொண்டுவிடும் மடமையாகவுங்கூட அதிவிரைவாய் மாறி விடும்படியான அதன் போக்கும் பொதுவாக எல்லோருக்கும் தெரிந்ததே. ஆயினும், தத்துவார்த்த முறையிலோ, கருத்தியலான முறையிலோ இவ்வுண்மைகளை ஏற்றுக் கொள்வதனுல் மட்டும், புரட்சிகரக் கட்சிகள் ஒருபோதும் தமது பழைய தவறுகளிலிருந்து விடுபட்டுவிட முடியாது. எதிர்பாராத சந்தர்ப்பங்களில், ஓரளவு புதிய வடிவங்களில், இது வரை கண்டிராத ஜோடனைகளிலோ, சுற்றுச் சார்புகளிலோ, விபரீதமான—அல்லது அனேகமாய் விபரீதமான—சூழ்நிலையிலோ இத்தவறுகள் எப்பொழுதும் தலை தூக்கிய வண்ணம்தான் இருக்கும்.

தொழிலாளி வர்க்க இயக்கத்தில் இழைக்கப்படும் சந்தர்ப்பவாதக் குற்றங்களுக்கு, ஒருவகைத் தண்டனையாக அராஜகவாதம் தலை தூக்கி விடுவதை அடிக்கடி காணலாம். இவ்விரு கொடும் கோரங்களும் ஒன்றுக்கொன்று துணையாகக் கரங் கோத்துச் செயல்பட்டு வந்தன. ருஷ்யாவில்—பிற ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் அதன் மக்கள் தொகுதி அதிக அளவு குட்டிமுதலாளித்துவ இயைபு கொண்டதாய் இருந்தபோதிலும் — அராஜகவாதத்தின் செல்வாக்கு இரு புரட்சிகளின் போதும் (1905, 1917ஆம் ஆண்டுகளின் புரட்சிகள்), அவற்றுக்கான தயாரிப்புகளின் போதும் மிகச் சொற்பமாகவே இருந்தது. சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து மிகவும் கடுமையாகவும் சிறிதும் விட்டுக்கொடுக்காமலும், எப்பொழுதுமே போராடி வந்துள்ள போல்ஷிவிசத்துக்கே, சந்தேகத்துக்கு இடமின்றி இந்த நிலைமைக்குரிய பெருமையில் ஒரு பகுதி சார்ந்ததாகும். ''ஒரு பகுதி'' என்று நான் கூறுவதற்குக் காரணம் என்னவெனில், ருஷ்யாவில் அராஜகவாதம் பலவீனமடைந்ததற்கு இதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த மற்ருெரு காரணமும் இருந்தது. கடந்த காலத்தில் (பத்தொன்பதாம் நூற்ருண்டின் எழுபதாம் ஆண்டுகளில்) அராஜகவாதம் அளவு கடந்து வளர்வதற்கு வாய்ப்பு பெற்றிருந்த போது, அது முற்றிலும்

தவறனது, புரட்சிகர வர்க்கத்துக்கு வழிகாட்டும் தத்துவ மாகப் பணி புரியத் தகுதியற்றது என்பது கண் கூடாய் வெளிப்பட்டதே இந்த மற்றொரு காரணம்.

*1903*ல் போல்ஷிவிசம் உதித்தெழுந்ததும், அது குட்டி முதலாளித்துவ, அரைவாசி அராஜகவாத (அல்லது அராஜக வாதத்துடன் குலாவும்) புரட்சிவாதத்தையும் எதிர்த்து வெஞ்சமர் புரியும் மரபை சுவீகரித்துக் கொண்டது. புரட்சிகர சமூக-ஜனநாயகத்தில் இம்மரபு எப்பொழுதுமே இருந்து வந்தது. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் வெகுஜனக் கட்சிக்குரிய அடித்தளங்கள் *1900-03*ல் ருஷ்யாவில் நிறுவப் பட்டு வந்த போது இம்மரபு எங்கள் நாட்டில் குறிப்பிடத் தக்கவாறு வலிமையடைந்து விட்டது. வேறு எந்தக் கட்சியையும் விட அதிகமாய்க் குட்டிமுதலாளித்துவப் புரட்சி-வாதப் போக்குகளைப் பிரதிபலித்த கட்சியான ''சோஷலிஸ்டு புரட்சியாளர்'' கட்சிக்கு எதிரான போராட்டத்தை போல்ஷிவிசம் சுவீகரித்துக் கொண்டு, அதனைத் தொடர்ந்து நடத்திச் சென்றது. இந்தப் போராட்டத்தை அது மூன்று பிரதான பிரச்சினைகள் சம்பந்தமாய் நடத்திற்று. முதலாவதாக, மார்க்சியத்தை நிராகரித்த அந்தக் கட்சி, எந்த அரசியல் செயலையும் மேற்கொள்ளுமுன் வர்க்க சக்திகளையும் அவற்றின் பரஸ்பரப் பலத்தையும் முற்றிலும் புற நோக்கு நிலையிலிருந்து மதிப்பீடு செய்வதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளப் பிடிவாதமாய் மறுத்தது (அல்லது இன்னும் பொருத்தமாகச் சொல்வதெனில், புரிந்து கொள்ளும் திறனற்றதாய் இருந்தது) என்று சொல்லலாம். இரண்டாவதாக, அந்தக் கட்சி தனிநபர் பயங்கரவாதத்தை, தனியாட்களைக் கொலை புரிவதை—மார்க்சியவாதிகளான நாம் தீர்மானமாய் நிராகரித்த இதனை—அங்கீகரித்த காரணத்தால், தன்னை அது மிகமிகப் ''புரட்சிகரமானதாக'', மிக மிக ''இடதுசாரித் தன்மையுடையதாகக்'' கருதிக் கொண்டது. தனிநபர் பயங்கரவாதம் உசிதமானதல்ல என்ற காரணத்துக்காக மட்டுமேதான் நாம் அதை நிராகரித்தோம். ஆனல் ''கோட்பாட்டு அடிப்படையில்'' மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியின் பயங்கரத்தை, அல்லது அனைத்து

உலகின் முதலாளித்துவ வர்க்கத்தால் முற்றுகையிடப்பட்டிருக்கும் வெற்றியடைந்த புரட்சிக் கட்சி ஒன்ருல் கையாளப் படும் பயங்கரத்தைப் பொதுப்படையாகக் கண்டனம் செய்யக் கூடியவர்களே, 1900-03லேயே பிளெஹானவ்—அவர் மார்க்சியவாதியாகவும் புரட்சியாளராகவும் இருந்த போது—நையாண்டி செய்து எள்ளி நகையாடினர். மூன்ருவதாக, ''சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்'' ஜெர்மன் சமூக-ஜன நாயகக் கட்சியின் ஒப்பளவில் அற்பமான சந்தர்ப்பவாதக் குற்றங்களைச் சுட்டிக்காட்டி ஏளனம் செய்வது மிகவும் ''இடதுசாரித் தன்மையதாகும்'' எனக் கருதினர்கள். ஆனல் அதேபோதில் அவர்கள் அக்கட்சியின் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதிகளை—உதாரணமாய், நிலப்பிரச்சினையிலும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினையிலும்—தாமே பின்பற்றி வந்தனர்.

இதற்கிடையில், நாம் எப்பொழுதுமே முன்வைத்து ஆதரித்து வந்த கருத்தை, அதாவது ஜெர்மன் புரட்சிகர சமூக-ஜனநாயகம்தான் (1900-03லேயே பிளெஹானவ் கட்சியிலிருந்து பெர்ன்ஷ்டைன் வெளியேற்றப்பட வேண்டுமென்று கோரினர் என்பதையும், இந்த மரபை எப்பொழுதுமே பின்பற்றி வந்துள்ள போல்ஷிவிக்குகள் 1913ல் லேகினது இழிநிலையையும் கயமையையும் துரோகத்தையும் அம்பலப்படுத்தினர்[41] என்பதையும் கவனிக்கவும்) வெற்றிவாகை சூடுவதற்குப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தேவைப்படும் கட்சியாக அமையும் நிலைக்கு மிக அருகாமையில் வந்த கட்சியாகும் என்பதைப் பரவலான, உலகு தழுவிய அளவில் வரலாறு இப்பொழுது ஊர்ஜிதம் செய்திருக்கிறது. இன்று, 1920ல் யுத்த காலத்துக்கும் யுத்தப் பிற்கால ஆரம்ப ஆண்டுகளுக்கும் உரிய வெட்ககரமான எல்லாத் தோல்விகளுக்கும் நெருக்கடிகளுக்கும் பிற்பாடு, மேலையக் கட்சிகள் யாவற்றிலும் ஜெர்மன் புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளின் கட்சிதான் சிறந்த தலைவர்களை உருவாக்கிற்று என்பதையும், ஏனையக் கட்சிகளைக் காட்டிலும் விரைவில் மீட்சியுற்று புது பலம் பெற்றது என்பதையும் தெளிவாகக் காண முடிகிறது. ஸ்பார்த்தகிஸ்டுகளது கட்சியின் உதாரணத்

திலும், காவுத்ஸ்கிகள், ஹில்ஃபர்டிங்குகள், லெதெபூர்கள், கிரிஸ்பின்கள் ஆகியோரது சந்தர்ப்பவாதத்தையும் உறுதி யின்மையையும் எதிர்த்து அயராத போராட்டம் நடத்தி வரும் ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரி, பாட்டாளி வர்க்கப் பிரிவின் உதாரணத்திலும் இதனைக் காணலாம். முழு வரலாற்றுக் கட்டம் ஒன்றின் மீது, அதாவது பாரிஸ் கம்யூனிலிருந்து முதலாவது சோஷலிச சோவியத் குடியரசு வரையிலான கட்டத்தின் மீது பரவலாகப் பார்வையைச் செலுத்துவோமானல், பொது வாக அராஜகவாதம் குறித்து மார்க்சியத்தின் போக்கு மிகவும் தெளிவாகவும் சந்தேகத்துக்கு இடமில்லாமலும் புலப்படக் காணலாம். முடிவான பகுத்தாய்வில், மார்க் சியம்தான் சரியானது என்பது நிரூபித்துக் காட்டப்பட்டு விட்டது. பெரும்பாலான சோஷலிஸ்டுக் கட்சிகளில் அரசு குறித்து நிலவி வந்த சந்தர்ப்பவாதக் கருத்துக்களை அராஜக வாதிகள் சுட்டிக் காட்டியது நியாயமே என்ருலுங்கூட, முதலாவதாக, இந்தச் சந்தர்ப்பவாதம் அரசு பற்றிய மார்க்ஸ் கருத்துக்களைப் புரட்டிக் கூறியதோடல்லாமல், வேண்டுமென்றே மூடிமறைத்தும் வந்ததால் ஏற்பட்ட தாகும் என்பதைக் குறிப்பிட வேண்டும் (அரசும் புரட்சியும் என்ற எனது புத்தகத்தில், அரசு குறித்து நடப்பிலிருந்த சமூக-ஜனநாயகக் கருத்துக்களின் சந்தர்ப்பவாதத்தைத் தெளி வாகவும் கண்கூடாகவும் அப்பட்டமாகவும் திட்டவட்ட மாகவும் அம்பலம் செய்த எங்கெல்சின் கடிதம் ஒன்றை[42] முப்பத்தாறு ஆண்டுகளாய், 1875லிருந்து 1911 வரையில், பெபெல் வெளியிடாமலே வைத்திருந்ததை எடுத்துரைத் தேன்*; இரண்டாவதாக, இந்தச் சந்தர்ப்பவாதக் கருத்துக் களைத் திருத்திச் சரிசெய்வதும், சோவியத் ஆட்சியதிகாரத் தையும் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தை விட அது மேம்பாடானதாய் இருப்பதையும் ஏற்றுக் கொள் வதும் ஐரோப்பிய, அமெரிக்க சோஷலிஸ்டுக் கட்சிகளில்

* இப்பதிப்பின் ஆருவது தொகுதியில் பக்கங்கள் 193—202 பார்க்க.—(ப-ர்.)

மிகுதியான அளவுக்கு மார்க்சியத் தன்மை கொண்டிருந்த பகுதிகளிடையே மிகவும் விரைவாகவும் விரிவாகவும் நடந்தேறியதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

போல்ஷிவிசம் தனது கட்சிக்குள்ளேயே ''இடதுசாரித்'' திரிபுகளை எதிர்த்து நடத்திய போராட்டம் இரு சந்தர்ப்பங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க வீச்சு பெறலாயிற்று: 1908ல் மிகவும் பிற்போக்கான ஒரு ''நாடாளுமன்றத்திலும்'' மிகவும் பிற்போக்கான சட்டங்களால் விலங்கிடப்பட்ட சட்டபூர்வமான தொழிலாளர் கழகங்களிலும் பங்கெடுத்துக் கொள்வதா, இல்லையா என்னும் பிரச்சினை குறித்தும்; திரும்பவும் 1918ல் (பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை) எந்த விதமான ''சமரசத்துக்கும்'' இடமில்லையா என்னும் பிரச்சினை குறித்தும் இப்போராட்டம் விரிவும் வீச்சும் மிக்கதாய் நடந்தேறியது.

மிகவும் பிற்போக்கான ஒரு ''நாடாளுமன்றத்தில்'' பங்கெடுத்துக் கொள்வதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளப் பிடிவாதமாய் மறுத்ததற்காக ''இடதுசாரி'' போல்ஷிவிக்குகள் 1908ல் எங்கள் கட்சியிலிருந்து விலக்கப்பட்டனர்[43]. இந்த ''இடதுசாரிகள்''—இவர்களில் பலர் கம்யூனிஸ்டுக் கட்சியின் போற்றத்தக்க உறுப்பினர்களாகப் பிற்பாடு இருந்த (இன்னமும் இருந்து வரும்) சிறந்த புரட்சியாளர்களாவர் — 1905ஆம் ஆண்டுப் பகிஷ்காரத்தின் வெற்றிகர அனுபவத்தைத் தமக்கு ஆதாரமாகக் கொண்டிருந்தனர். 1905 ஆகஸ்டில் ஆலோசனை அந்தஸ்துடைய ''நாடாளுமன்றம்'' கூட்டப்படுவதாக ஜார் பிரகடனம் செய்த போது,[44] போல்ஷிவிக்குகள் எல்லா எதிர்க் கட்சிகளுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் எதிரான நிலையை ஏற்று, அதனைப் பகிஷ்காரம் செய்யும்படி அறைகூவினர். உண்மையில் இந்த''நாடாளுமன்றம்'' 1905 அக்டோபரில் மூண்ட புரட்சியால்[45] துடைத்தெறியப்பட்டு விட்டது. அக்காலத்தில், பகிஷ்காரமே பிழையற்றதாக இருந்தது. பிற்போக்கான நாடாளுமன்றங்களில் பங்குகொள்ளாது இருப்பது பொதுவாகச் சரியானதே என்பதல்ல காரணம்; எதார்த்த நிலைமையை நாங்கள் பிழையின்றி மதிப்பிட்டோம் என்பதே

காரணம். வெகுஜன வேலைநிறுத்தங்கள் முதலில் அரசியல் வேலைநிறுத்தமாகவும், பிறகு புரட்சிகர வேலைநிறுத்தமாக வும், முடிவில் ஓர் எழுச்சியாகவும் வேகமாய் வளர்ச்சி யுற்று வந்தன என்பதே அப்போதிருந்த எதார்த்த நிலைமை. தவிரவும், முதலாவது பிரதிநிதித்துவ சபை கூட்டப்படு வதை ஜாரின் கையில் விட்டுவிடுவதா, அல்லது அதனைப் பழைய ஆட்சியிடமிருந்து பறிப்பதற்கு முயற்சி செய்வதா என்பதே அக்காலத்தியப் போராட்டத்தின் மையப் பிரச் சினையாக இருந்தது. எதார்த்த நிலைமை இதையொத்த தாக இருக்கும் என்ற நிச்சயம் இல்லாத போதும் இருக்க முடியாத போதும், இதையொத்த ஒரு போக்கும் இதே வளர்ச்சி வேகமும் இருக்குமென்ற நிச்சயம் இல்லாத போ தும் இருக்க முடியாத போதும், பகிஷ்காரம் சரியானதல்ல.

1905ல் போல்ஷிவிக்குகள் ''நாடாளுமன்றத்தைப்'' பகிஷ்கரித்ததானது, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு மதிப்பிடற்கரிய அரசியல் அனுபவத்தை அளித்துச் செழு மைப்படுத்திற்று. சட்டபூர்வமான, சட்டவிரோதமான போராட்ட வடிவங்களும், நாடாளுமன்ற, நாடாளுமன்றத் துக்குப் புறம்பான போராட்ட வடிவங்களும் ஒன்றிணைக்கப் படுகையில், சில நேரங்களில் நாடாளுமன்ற வடிவங்களைக் கைவிடுவது பயனளிப்பதாக இருப்பதுடன் அவசியமும் ஆகி விடுகிறது என்பதை அது தெளிவுபடுத்திற்று. ஆனால் இந்த அனுபவத்தைக் கண்ணை மூடிக்கொண்டு அப்படியே காப்பி யடிப்பதும், விமர்சனப் பார்வையின்றி பிற நிலைமைகளி லும் பிற சூழல்களிலும் அனுசரிப்பதும் பெருந் தவறாகி விடும். 1906ல் போல்ஷிவிக்குகள் டூமாவைப் பகிஷ்கரித்தது சிறிய பிழையே என்றாலும், எளிதில் நிவர்த்தி செய்து கொள்ளத் தக்கதே என்றாலும் பிழையே ஆகும்*. 1907லும்

* தனிநபர்களுக்குப் பொருந்துவது, தக்க மாறுதல்களு டன், அரசியலுக்கும் கட்சிகளுக்கும் பொருந்தும், பிழையே செய்யாதவரல்ல புத்திசாலி. அத்தகையோர் யாருமில்லை, இருக்கவும் முடியாது. யாருடைய பிழைகள் கடுமையான பிழைகளாய் இல்லையோ, யார் அவற்றைச் சுலபமாகவும் சீக்கிரமாகவும் சரிசெய்து கொள்ள முடிகிறதோ, அவர்தான் புத்திசாலி.

1908லும் அடுத்து வந்த ஆண்டுகளிலும் டூமாவின் பகிஷ்காரம் மிகவும் கடுமையான, நிவர்த்தி செய்வதற்குக் கடினமான தவறாகி விட்டது. ஏனெனில், ஒரு புறத்தில், புரட்சி அலை வேகமாக உயர்ந்தெழுந்து, எழுச்சியாக மாறிவிடுமென்று எதிர்பார்க்க முடியாமல் இருந்தது. மறு புறத்தில், முதலாளித்துவ முடியாட்சி புதுப்பிக்கப்பட்ட போது உருவான வரலாற்று நிலைமை சட்டபூர்வமான செயற்பாடுகளையும் சட்டவிரோதமான செயற்பாடுகளையும் ஒன்றிணைத்துக் கொள்வதை அவசியமாக்கி விட்டது. முழு நிறைவு எய்திவிட்ட இந்த வரலாற்றுக் கட்டம் இதற்குப் பிந்தைய கட்டங்களுடன் கொண்டுள்ள இணைப்பு இப்போழுது மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. முடிவுற்றுவிட்ட இக்கட்டத்தை இன்று நாம் திரும்பிப் பார்க்கையில், சட்டபூர்வமான போராட்ட வடிவங்களையும் சட்டவிரோதமான போராட்ட வடிவங்களையும் ஒன்றிணைத்துக் கொள்வது இன்றியமையாத கடமையாகும், மிகவும் பிற்போக்கான நாடாளுமன்றத்திலும் பிற்போக்கான சட்டங்களால் கட்டுண்டிருக்கும் இதர பல நிறுவனங்களிலும் (இன்ஷியூரன்ஸ் நிறுவனங்கள் முதலானவை) பங்கெடுத்துக் கொள்வது இன்றியமையாத கடமையாகும் என்னும் கருத்தோட்டத்தை போல்ஷிவிக்குகள் மிக உக்கிரமாய்ப் போராடி நிலைநிறுத்தியிராவிடில், 1908-14ல் அவர்களால் பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்சியின் உறுதியான மையப் பகுதியை (பலப்படுத்துவதும் வளர்த்திடுவதும் உரப்படுத்துவும் இருக்கட்டும்) சிதையாது பாதுகாத்துக் கொள்ளக்கூட முடியாமற் போயிருக்கும் என்று மிகத் தெளிவாய்த் தெரிகிறது.

1918ல் பிளவு ஏற்படும் நிலை தோன்றி விடவில்லை. அக்காலத்தில் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள் எங்கள் கட்சிக்குள் அமைந்த ஒரு தனிப் பிரிவாகவே, அல்லது ''உட்குழுவாகவே'' இருந்து வந்தனர். அதுவுங்கூட அதிக காலத்துக்கு நீடிக்கவில்லை. அதே ஆண்டில், 1918 லேயே, ''இடதுசாரி கம்யூனிசத்தின்'' மிக முக்கியப் பிரதிநிதிகள், உதாரணமாய் தோழர்கள் ராதெக்கும் புஹாரினும், தமது தவறைப் பகிரங்கமாகவே ஒப்புக் கொண்டனர். பிரேஸ்த் சமாதான

உடன்படிக்கை, கோட்பாட்டு அடிப்படையில் எந்த நியாயமும் இல்லாமலும், புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சிக்குத் தீங்கு பயக்கும் விதத்திலும் ஏகாதிபத்திய வாதிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒரு சமரசமாகும் என்று அவர்களுக்குத் தோன்றிற்று. அது ஏகாதிபத்தியவாதிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒரு சமரசம் என்பது மெய்தான், ஆனல் அப்போதிருந்த நிலைமைகளில் செய்தே ஆக வேண்டியிருந்த ஒரு சமரசமாகும்.

பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட எங்களது போர்த்தந்திரம் இன்று, உதாரணமாக, ''சோஷலிஸ்டு-புரட்சியாளர்களால்'' தாக்கப்படுவதைக் கேட்கும் போதும், அல்லது தோழர் லான்ஸ்பரி என்னுடன் உரையாடுகையில் ''சமரசம் செய்து கொள்ள போல்ஷிவிசத்துக்கு அனுமதி உண்டெனில், சமரசம் செய்து கொள்ளத் தமக்கும் அனுமதி உண்டென எங்கள் பிரிட்டிஷ் தொழிற் சங்கங்களின் தலைவர்கள் சொல்கிருர்கள்'' என்று கூறுவதைக் கேட்கும் போதும், முதலில் நான் சாதாரணமாய் ''ஜனரஞ்சகமான'' ஓர் எளிய எடுத்துக்காட்டைக் குறிப்பிட்டு, பின்வருமாறு பதிலளிக்கிறேன்:

ஆயுதங்கள் கொண்ட கொள்ளைக் கூட்டத்தினர் உங்களுடைய காரை வழிமறித்துக் கொள்வதாய் நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய பணம், பாஸ்போர்ட், ரிவால்வர், கார் ஆகிய யாவற்றையும் அவர்களிடம் கொடுத்து விடுகிறீர்கள். இதற்குப் பதில் நீங்கள் கொள்ளைக் கூட்டத்தினரின் விரும்பத்தகாத சகவாசத்திலிருந்து விடுபடுகிறீர்கள். இது ஒரு சமரசமே என்பதில் சந்தேகமில்லை. "Do ut des" (பணம், ரிவால்வர், கார் ஆகியவற்றை நான் உனக்குத் ''தருகிறேன்'', முழு உடலுடன் போய்ச் சேரும் வாய்ப்பை ''நீ எனக்குத் தா''). ஆனல் இத்தகைய ஒரு சமரசம் ''கோட்பாட்டு அடிப்படையில் எந்த நியாயமும் இல்லாதது'' என்றோ, (கொள்ளைக் கூட்டத்தினர் இந்தக் காரில் ஏறி அதனையும் ரிவால்வரையும் மேலும் பலரையும் கொள்ளையடிப்பதற்காகப் பயன்படுத்தலாம் என்றாலும்) சமரசம் செய்து கொண்டவரைக் கொள்ளைக் கூட்டத்தினருக்கு

உடந்தையாக இருந்தவர் என்றோ, சித்த சுவாதீனமுடையவர் எவரும் கூற மாட்டார். ஜெர்மன் ஏகாதிபத்தியக் கொள்ளைக் கூட்டத்தினருடன் நாங்கள் செய்து கொண்ட சமரசம் இது போன்றதொரு சமரசமேயாகும்.

ஆனால் *1914-18*லும் பிறகு *1918-20*லும் ருஷ்யாவில் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும், ஜெர்மனியில் ஷெய்டெமன்வாதிகளும் (கணிசமான அளவுக்கு காவுத்ஸ்கிவாதிகளும்), ஆஸ்திரியாவில் ஓட்டோ பௌவரும் பிரெடெரிக் ஆட்லெரும் (ரென்னர்களையும் அவர்களைச் சேர்ந்தோரையும் கூறவே வேண்டியதில்லை), பிரான்சில் ரெனோடேல்களும் லொங்கேகளும், அவர்கள் கூட்டத்தினரும், பிரிட்டனில் ஃபேபியன்களும் ''சுயேச்சையாளர்களும்'' ''தொழிற்கட்சியினரும்''[46] தமது சொந்த நாடுகளின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக, தமது சொந்த முதலாளித்துவ வர்க்கக் கொள்ளையருடனும் சில நேரங்களில் ''நேச நாடுகளது'' முதலாளித்துவ வர்க்கக் கொள்ளையருடனும் சமரசங்கள் செய்து கொண்ட போது, இந்தக் கனவான்கள் எல்லோரும் உண்மையில் கொள்ளைக்கு உடந்தையாளர்களாகவே செயல்பட்டனர்.

முடிவு தெளிவாக விளங்குகிறது: ''கோட்பாட்டு அடிப்படையில்'' சமரசங்களை நிராகரிப்பது, எவ்வகையானவை என்பதைக் கருதாமலே பொதுப்பட எல்லாச் சமரசங்களையும் நிராகரிப்பது சிறுபிள்ளைத்தனமாகும்; பரிசீலனை செய்வதற்கே தகுதியற்ற ஒன்றாகும். புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்குப் பயனுள்ள பணியாற்ற விரும்பும் அரசியல் தலைவருக்கு, சமரசங்களில் சிறிதும் நியாயமில்லாத, சந்தர்ப்பவாதத்தின், துரோகத்தின் வெளியீடாக அமைந்த ஸ்தூலமான உதாரணங்களை இனம் கண்டு கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும். குற்றவிமர்சனத்தின் முழு சக்தியையும், தயவு தாட்சண்யமின்றி அம்பலம் செய்து சிறிதும் விட்டுக் கொடுக்காமல் போராடுவதன் முழுத் தீவிரத்தையும் அவர் இந்த ஸ்தூலமான சமரசங்களுக்கு எதிராகச் செயல்பட வைக்க வேண்டும். அனுபவமிக்க ''வியாபாரிகளான'' சோஷலிஸ்டுகளும் நாடாளுமன்ற எத்தர்களும் ''பொதுப்

படையாக சமரசங்கள்'' பற்றிய வியாக்கியானங்கள் மூலமாய்த் தமது பொறுப்பைத் தட்டிக் கழித்துத் தப்பியோடுவதற்கு அவர் அனுமதிக்கலாகாது. பிரிட்டிஷ் தொழிற் சங்கங்கள், ஃபேபியன் கழகம் மற்றும் ''சுயேச்சைத்'' தொழிற்கட்சி இவற்றின் ''தலைவர்கள்'' தாம் புரிந்த துரோகத்துக்கான பொறுப்பை—மெய்யாகவே படுமோசமான சந்தர்ப்பவாதமாகவும் துரோகமாகவும் காட்டிக்கொடுக்கும் வஞ்சகமாகவும் விளங்கும் இத்தகைய சமரசத்தைச் செய்து கொண்டதற்கான பொறுப்பை—இம்முறையில்தான் தட்டிக் கழித்துத் தப்பிக்க முயலுகின்றனர்.

சமரசங்களில் பல வகை உண்டு. அந்தந்த சமரசத்துக்குமான அல்லது சமரசத்தின் ஒவ்வொரு வகைக்குமான சூழ்நிலையையும் ஸ்தூல நிலைமைகளையும் பகுத்தாராயத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். கொள்ளைக் கூட்டத்தினர் செய்யக் கூடிய தீங்கைக் குறைக்கும் பொருட்டும், அவர்கள் பிடிபட்டு மரண தண்டனை விதிக்கப்படுவதற்கு உதவும் பொருட்டும், அவர்களிடம் தனது பணத்தையும் ரிவால்வரையும் கொடுக்கும் ஒருவரையும், கொள்ளையில் பங்கு பெறும் பொருட்டுத் தனது பணத்தையும் ரிவால்வரையும் கொள்ளைக் கூட்டத்தினருக்குக் கொடுக்கும் ஒருவரையும் வேறுபடுத்தி இனம் கண்டு கொள்ளத் தெரிந்து கொள்வது அவசியமாகும். சிறு பிள்ளைக்குரிய இந்த எளிய உதாரணத்தில் இருப்பது போல் அரசியலில் எப்பொழுதும் இது அவ்வளவு சுலபமாக இருப்பதில்லை, ஆனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அப்படியே எடுத்துக் கையாளக் கூடிய தயார் நிலையிலுள்ள தீர்வுகளை அளிக்கக் கூடிய ஒருவகைச் சூத்திரத்தைத் தொழிலாளர்களுக்கு வகுத்தளிக்க முற்படுகிறவர் எவரும், அல்லது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கொள்கை எக்காலத்திலும் கடினமான அல்லது சிக்கலான நிலைமைகளை எதிர்ப்படாதென வாக்குறுதி அளிப்பவர் எவரும் ஏமாற்று வித்தைக்காரரே ஆவார்.

தவறான விளக்கத்துக்கு இடந் தராமல் இருக்கும் பொருட்டு, ஸ்தூலமான சமரசங்களின் பகுத்தாராய்வுக்கான

சில அடிப்படை விதிகளை மிகச் சுருக்கமாகவேனும் இங்கு குறிப்பிட முயலுகிறேன்.

பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டு ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுடன் ஒரு சமரசம் செய்து கொண்ட கட்சியானது, 1914ஆம் ஆண்டின் முடிவிலிருந்தே தனது சர்வதேசியத்தை நடைமுறையில் உருவாக்கி வந்துள்ளது. ஜாரிச முடியாட்சியை முறியடிக்குமாறு அறைகூவல் விடுக்கவோ, இரு ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களிடையே நடைபெற்ற ஒரு போரில் ''தாயகப் பாதுகாப்பைக்'' கண்டனம் செய்யவோ அது அஞ்சியதில்லை. இக்கட்சியின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள், முதலாளித்துவ அரசாங்கத்தில் அமைச்சர் பதவிக்கு இட்டுச் செல்லும் பாதையை மேற்கொள்வதைக் காட்டிலும் தண்டனைக்கு உள்ளாகி சைபீரியாவுக்குக் கடத்தப்படுவதே மேலெனக் கொண்டனர். ஜாரிசத்தைக் கவிழ்த்துவிட்டு ஒரு ஜனநாயகக் குடியரசை நிறுவிய புரட்சியானது இக்கட்சியை மகத்தானதொரு புதிய சோதனைக்கு உள்ளாக்கிற்று — இக்கட்சி தனது ''சொந்த'' ஏகாதிபத்தியவாதிகளுடன் எந்த உடன்பாடுகளிலும் இறங்கவில்லை, அதற்குப் பதில் அவர்களைக் கவிழ்ப்பதற்காக வேலை செய்து, அவ்வாறே கவிழ்க்கவும் செய்தது. இக்கட்சி அரசியல் ஆட்சியதிகாரம் ஏற்றதும், அது நிலப்பிரபுத்துவ உடைமையையும் முதலாளித்துவ உடைமையையும் தகர்த்துத் தரைமட்டமாக்கி விட்டது. ஏகாதிபத்தியவாதிகளது இரகசிய ஒப்பந்தங்களைப் பகிரங்கப்படுத்தி அவற்றை நிராகரித்த பின், இக்கட்சி எல்லா நாடுகளின் மக்களுக்கும் சமாதானத்தைப் பிரேரணை செய்தது. ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் சமாதானம் ஏற்படாதபடிக் குழிபறித்த பிற்பாடுதான், ஜெர்மனியிலும் பிற நாடுகளிலும் புரட்சியைத் துரிதப்படுத்துவதற்காக போல்ஷிவிக்குகள் மனித சக்திக்கு இயன்றதனைத்தையும் செய்த பிற்பாடுதான், இக்கட்சி பிரேஸ்த் கொள்ளைக்காரர்களின் வன்முறைக்குப் பணிந்தது. இத்தகைய ஒரு கட்சி இத்தகைய ஒரு நிலையில் செய்துகொண்ட இந்தச் சமரசம்

முற்றிலும் சரியே என்பது எல்லோருக்கும் நாளுக்கு நாள் மேலும் மேலும் கண்கூடாகி வருகிறது.

ருஷ்யாவில் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் (உலகெங்கும் 1914-20ல் இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் எல்லோரும் செய்தது போலவே), நேரிடையாகவோ மறைமுகமாகவோ ''தாயகப் பாதுகாப்பு''—அதாவது,தமது சொந்தக் கொள்ளைக்கார முதலாளித்துவ வர்க்கத்தின் பாதுகாப்பு—நியாயமானதே என்பதாக வாதாடி, துரோகச் செயலுடன் தமது பணியைத் துவக்கினர். தமது சொந்த நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டு சேர்ந்து கொண்டு, தமது சொந்த முதலாளித்துவ வர்க்கத்துடன் தோளிணைத்து, தமது சொந்த நாட்டின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராகப் போராடி அவர்கள் தமது துரோகத்தைத் தொடர்ந்து செயல்படுத்திச் சென்றனர். ருஷ்யாவில் முதலில் கேரென்ஸ்கியுடனும் காடேட்டுகளுடனும்[47], பிற்பாடு கல்ச்சாக்குடனும் தெனீக்கினுடனுமான அவர்களுடைய கூட்டு—அவர்களது சகாக்கள் வெளிநாடுகளில் அவரவரது நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்துடன் நிறுவிக் கொண்ட கூட்டைப் போலவே—உண்மையில் அவர்கள் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராளிகளாகி, முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கத்துக்கு ஓடித் துரோகம் புரிந்ததையே குறித்தது. ஏகாதிபத்தியக் கொள்ளைக் கூட்டத்தினருடன் செய்து கொள்ளப்பட்ட அவர்களுடைய சமரசமானது ஆதிமுதல் அந்தம் வரை ஏகாதிபத்தியக் கொள்ளையில் அவர்கள் உடந்தையாளர்கள் ஆகி விட்டனர் என்பதையே குறித்தது.

5

ஜெர்மனியில் ''இடதுசாரி'' கம்யூனிசம். தலைவர்கள், கட்சி, வர்க்கம், வெகுஜனங்கள்

இப்பொழுது நாம் குறிப்பிடப் போகும் ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் தம்மை ''இடதுசாரிகள்'' என அழைத்துக் கொள்வதில்லை; இதற்குப் பதில், எனக்குத் தெரிந்தவரை,

''கோட்பாடு வழிப்பட்ட எதிர்த்தரப்பாளர்கள்''[48] என் பதாகத் தம்மை அழைத்துக் கொள்கிருர்கள். ஆனுல் இவர் கள் ''இடதுசாரிவாதத்தின் இளம் பருவக் கோளாறுக்குரிய'' எல்லா அறிகுறிகளையும் வெளிப்படுத்திக் கொள்கிருர்கள் என்பது பின்வருவதிலிருந்து புலனுகும்.

ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியில் (ஸ்பார்த்தக்கஸ் கழகத் தில்) பிளவு என்ற தலைப்பில், இந்த எதிர்த்தரப்பாளர்களது கருத்தோட்டத்தை எடுத்துரைத்து ''மாயின் கரையிலுள்ள ஃபிராங்ஃபுர்ட்டின் உள்ளூர்க் குழு'' வெளியிட்டிருக்கும் பிரசுரம், இந்த எதிர்த்தரப்பாளர்களுடைய கருத்துக்களை மிகவும் எடுப்பாகவும், தெட்டத்தெளிவாகவும், சுருக்கமாக வும் சித்திரம் போல் எடுத்துரைக்கிறது. இதன் சாராம் சத்தை வாசகர்களுக்கு அறிமுகம் செய்ய ஒரு சில மேற் கோள்களே போதும்:

''கம்யூனிஸ்டுக் கட்சியானது மிகவும் வைராக்கியமான வர்க்கப் போராட்டத்தின் கட்சியாகும்....''

''.... அரசியல் வழியில், இந்த இடைக்காலக் கட்ட மானது'' (முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும் இடைப்பட்டது) ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் கட்ட மாகும்....''

''.... ஒரு கேள்வி எழுகிறது: இந்தச் சர்வாதிகாரத்தைச் செலுத்த வேண்டியது எது? **கம்யூனிஸ்டுக் கட்சியா, அல்லது பாட்டாளி வர்க்கமா?** ... கோட்பாடு அடிப்படையில் நாம் பாடுபட வேண்டியது கம்யூனிஸ்டுக் கட்சியின் சர்வாதிகாரத்துக்கா, அல்லது பாட்டாளி வர்க்கத் தின் சர்வாதிகாரத்துக்கா?...''

(அழுத்தங்கள் யாவும் மூலத்தில் இருப்பவை.)

மேலும் இந்தப் பிரசுரத்தின் ஆசிரியர் ஜெர்மன் கம்யூ னிஸ்டுக் கட்சியின் ''மத்தியக் கமிட்டி'' மீது குற்றம் சாட்ட முற்படுகிருர். அது **ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியுடன் கூட்டணி** ஏற்படுத்துவதற்கான வழிகளைத் தேடுகிறது என்றும், சுயேச்சையாளர்களுடன் கூட்டணி நிறுவிக் கொள்வதற்கான மெய்யான, பிரதானமான தனது முயற்சிகளை மூடிமறைக்க வேண்டுமென்ற ஒரே குறிக் கோளுடன் நாடாளுமன்றவாதம் அடங்கலாய்ப் போராட் டத்துக்குரிய **''எல்லா அரசியல் வழிகளையும் கோட்பாடு**

அடிப்படையில் ஏற்றுக் கொள்ளும் பிரச்சினையை'' எழுப்பு கிறது என்றும் இவ்வாசிரியர் அதன் மீது குற்றம் சாட்டுகிறார். இந்தப் பிரசுரம் மேலும் கூறுவதாவது:

''எதிர்த்தரப்பாளர்கள் வேறொரு பாதையைத் தேர்ந் தெடுத்துக் கொண்டுள்ளனர். கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதிக் கத்தையும் கட்சியின் சர்வாதிகாரத்தையும் பற்றிய பிரச் சினை வெறும் போர்த்தந்திரப் பிரச்சினையே ஆகுமென்று அவர்கள் கருதுகிறார்கள். எப்படியும், கம்யூனிஸ்டுக் கட்சி யின் ஆதிக்கம்தான் எவ்வகையான கட்சி ஆதிக்கத்திற்கு முரிய இறுதி வடிவமாகும். கோட்பாடு அடிப்படையில் நாம் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்துக்காகப் பாடு பட வேண்டும். ஆகவே, கட்சியின் எல்லா நடவடிக்கைகளும் அதன் நிறுவனங்களும் போராட்ட முறைகளும் ஆதார நெறியும் போர்த்தந்திரமும் இதனையே குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். எனவே, பிற கட்சிகளுடனான எல்லா வித சமரசத்தையும், வரலாற்று வழியிலும் அர சியல் வழியிலும் காலாவதியாகிவிட்ட நாடாளுமன்றப் போ ராட்ட வடிவங்களுக்குச் சரிந்து செல்லும் எவ்வகையான பின்னடைவையும், வளைந்து கொடுப்பதற்கும் இணக்கத்துக்கு முரிய எந்தக் கொள்கையையும் தீர்மானமாய் நிராகரித்தே ஆக வேண்டும்.'' ''பாட்டாளி வர்க்கத்துக்குரிய தனிவகை யான புரட்சிகரப் போராட்ட முறைகளை வன்மையாக வலி யுறுத்த வேண்டும். கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில், புரட்சிகரப் போராட்டத்தில் மிகவும் பரவலான பாட்டாளி வர்க்க வட்டாரங்களும் பகுதிகளும் பங்கு கொள்ளும்படி அணி திரளும் பொருட்டு, புதிய நிறுவன வடிவங்களை மிக விரி வான அடிப்படையிலும் மிக விரிவான வீச்சிலும் தோற்று வித்தாக வேண்டும். ஆலை நிறுவனங்களை அடிப்படை யாகக் கொண்ட தொழிலாளர் சங்கம் எல்லாப் புரட்சிகர சக்தி களையும் ஒன்றுதிரட்டும் மையமாக வேண்டும். 'தொழிற் சங்கங்களிலிருந்து வெளியேறுங்கள்!' என்னும் கோஷத் தைப் பின்பற்றும் எல்லாத் தொழிலாளர்களையும் இது ஐக்கியப்படுத்த வேண்டும். போரிடும் பாட்டாளி வர்க்கம் இங்குதான் தனது விரிவான அணிகளைப் போருக்கு ஒன்று திரட்டுகிறது. வர்க்கப் போராட்டம், சோவியத் அமைப்பு, சர்வாதிகாரம் இவற்றை ஏற்றுக்கொள்வதே உறுப்பின ராய்ச் சேர்க்கப்படுவதற்குப் போதுமானதாய் இருக்க வேண் டும். போராடும் வெகுஜனங்கள் மேற்கொண்டு அரசியல் கல்விஞானம் பெற்று, போராட்டத்தில் அரசியல் திசை

வழி காண்பது தொழிலாளர் சங்கத்துக்கு வெளியிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சிக்குரிய பணியாகும்....''

''....இதன் விளைவாக, இப்பொழுது இரு கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒன்றுக்கொன்று எதிராக அணி வகுத்து நிற்கின்றன:

''ஒன்று தலைவர்களுடைய கட்சி. இது புரட்சிப் போராட்டத்தை ஒழுங்கமைத்து மேலிருந்து அதனை நடத்திச் செல்வதில் முனைந்துள்ளது; சர்வாதிகாரம் செலுத்தும் கூட்டணி அரசாங்கத்தில் தான் சேர்ந்து கொள்வதற்கு வகை செய்யும் நிலைமைகளைத் தோற்றுவிக்கும் பொருட்டு, சமரசங்களையும் நாடாளுமன்றவாதத்தையும் ஏற்றுக் கொள்கிறது.

''மற்றொன்று வெகுஜனங்களுடைய கட்சி. இது அடியிலிருந்து புரட்சிப் போராட்டம் எழுச்சியுறுமென எதிர்பார்க்கிறது. இந்தப் போராட்டத்தில் அதற்குத் தெரிந்ததும், அது அனுசரிப்பதும் ஒரேயொரு போராட்ட முறைதான் — தெளிவாகக் குறிக்கோளுக்கு இட்டுச் செல்லும் போராட்ட முறைதான். நாடாளுமன்ற, சந்தர்ப்பவாத முறைகள் யாவற்றையும் அது நிராகரிக்கிறது. நிபந்தனையின்றி முதலாளித்துவ வர்க்கத்தைக் கவிழ்த்து, அதன் பின் சோஷலிசத்தை அடைவதற்காகப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிறுவுவதென்ற ஒரேயொரு போராட்ட முறைதான் அது....''

''... அங்கே—தலைவர்களது சர்வாதிகாரம்; இங்கே—வெகுஜனங்களது சர்வாதிகாரம்! இதுவே நமது கோஷம்.''

ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியிலுள்ள எதிர்த்தரப்பின் கருத்துக்களது பிரதான கூறுகள் இவையே.

1903 முதலாய் போல்ஷிவிசத்தின் வளர்ச்சியில் உணர்வு பூர்வமாய்ப் பங்குகொண்டுள்ள, அல்லது நெருங்கி நின்று அந்த வளர்ச்சியைக் கவனித்து வந்துள்ள எந்த போல்ஷிவிக்கும், இந்த வாதங்களைப் படித்ததும், ''இது நாம் நன்கு அறிந்த அதே பழங் குப்பைதான்! அதே 'இடதுசாரிச்' சிறுபிள்ளைத் தனம்தான்!'' என்று உடனே கூறி விடுவார்.

எனினும், இந்த வாதங்களை இன்னும் சற்று நெருங்கிச் சென்று பரிசீலித்துப் பார்க்கலாம்.

''கட்சியின் சர்வாதிகாரமா, அல்லது வர்க்கத்தின் சர்வாதிகாரமா? தலைவர்களின் சர்வாதிகாரமா (கட்சியா),

அல்லது வெகுஜனங்களின் சர்வாதிகாரமா (கட்சியா)?'' என்று இந்தக் கேள்வி எழுப்பப்படும் விதமே நம்ப முடியாத, படுமோசமான சிந்தனைக் குழப்பத்திற்குச் சான்ருகி விடுகிறது. ஏதோ மிகவும் நூதனமான ஒன்றை இவர்கள் கண்டுபிடித்துக் கூற விரும்பி, சாமர்த்தியசாலிகளாய் இருக்க முயற்சித்து, தம்மைக் கேலிக்கு உரியவர்களாக்கிக் கொள்கிருர்கள். வெகுஜனங்கள் வர்க்கங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிருர்கள்; பொதுவாக மிகப் பெருவாரியானேரை, சமுதாயப் பொருளுற்பத்தி அமைப்பில் வகிக்கும் நிலைக்கு ஏற்றவாறு அவர்கள் பிரிக்கப்பட்டிருப்பதை கருதாமலே, சமுதாயப் பொருளுற்பத்தி அமைப்பில் குறிப்பிட்ட நிலையினை வகிக்கும் வகையினங்களுடன் ஒப்பிட்டு வேறுபடுத்துவதன் மூலமே வெகுஜனங்களை வர்க்கங்களுடன் ஒப்பிட்டு வேறுபடுத்த முடியும்; பொதுவாகவும் மிகப் பெருவாரியான சந்தர்ப்பங்களிலும், எப்படியும் இன்றைய நாகரிக நாடுகளில்; வர்க்கங்கள் அரசியல் கட்சிகளால் தலைமை தாங்கப் பெற்று வழிகாட்டப்படுகின்றன; பொதுவாக அரசியல் கட்சிகள் பொறுப்பு மிக்கப் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு தலைவர்கள் என்றழைக்கப்படும் அதிகாரமும் செல்வாக்கும் படைத்த, அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களாலாகிய ஓரளவு நிலையான குழுக்களால் நிர்வகிக்கப்படுகின்றன—இவை எல்லார்க்கும் தெரிந்தவையே. இவை யாவும் சர்வ சாதாரணமானவை. இவையாவும் தெளிவானவை, எளிமையானவை. இவற்றை ஒதுக்கிவிட்டு, இவற்றுக்குப் பதிலாய்ப் பொருளற்ற பேச்சை, வோலாபுக்* போன்ற புதிய செயற்கை மொழியைச் சிருஷ்டிப்பானேன்? ஒரு புறத்தில், கட்சியானது திடுதிப்பென்று சட்டபூர்வமான நிலையிலிருந்து சட்டவிரோதமான நிலைக்கு மாற்றப்பட்டு அதனுல் தலைவர்களுக்கும் கட்சிகளுக்கும் வர்க்கங்களுக்குமுள்ள வழக்கமான, முறையான, எளிய உறவுகள் குலைக்கப்பட்டுவிட்ட சூழ்நிலைக்குத்தாம் வந்து விட்டதைக் கண்டதும், இவர்கள் குழம்பி

---

* வோலாபுக்—*1880*ல் யோகன் ஷிலேயரால் தயாரிக்கப்பட்ட செயற்கை மொழி.—(ப-ர்.)

விட்டதாகத் தெரிகிறது. ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போலவே ஜெர்மனியிலும் சட்டபூர்வமான நிலைக்கு மக்கள் தம்மை மட்டுமீறிப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டனர். முறைப்படி நடைபெறும் கட்சிக் காங்கிரசுகளில் ''தலைவர்கள்'' தங்கு தடையின்றி ஒழுங்கான முறையில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும், நாடாளுமன்றத் தேர்தல்கள், பொதுக் கூட்டங்கள், பத்திரிகைகள், தொழிற்சங்கங்கள் மூலமாகவும், பிற நிறுவனங்கள் மூலமாகவும் வெளிப்படும் உணர்ச்சிகள் வாயிலாகக் கட்சிகளின் வர்க்க இயைபைச் சோதித்துப் பார்க்கும் வசதியான முறைக்கும், இன்ன பிற வற்றுக்கும் மட்டுமீறி மக்கள் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டனர். இவர்களது இந்த வழக்கமான செயல் முறைக்குப் பதிலாய், புரட்சிப் புயலின் வளர்ச்சி காரண மாகவும், உள்நாட்டுப் போரின் வளர்ச்சி காரணமாகவும் சட்டபூர்வமான நிலையிலிருந்து சட்டவிரோதமான நிலைக்கு விரைவாய் மாறிச் சென்று, இரண்டையும் ஒன்றிணைத்துக் கொண்டு, ''தலைவர்களது குழுக்களைத்'' தேர்வு செய்ய வேண்டிய அல்லது அமைக்க வேண்டிய அல்லது பாது காத்துக் கொள்ள வேண்டிய ''வசதியற்ற'', ''ஜனநாயக மல்லாத'' முறைகளைக் கையாள வேண்டி வந்ததும்— இவர்கள் நிலை தடுமாறி, கலப்பற்ற அபத்தக் கற்பனையில் இறங்கத் தலைப்பட்டு விட்டனர். ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சில உறுப்பினர்கள் மிகுந்த சலுகைக்கும் மிகவும் நிலையான சட்டபூர்வ அந்தஸ்துக்குமுரிய மரபுகளையும் நிலை மைகளையும் கொண்ட ஒரு சிறு நாட்டில் பிறக்க வேண்டிய துரதிருஷ்டத்துக்கு உள்ளாகி, சட்டபூர்வ நிலையிலிருந்து சட்டவிரோத நிலைக்கான மாற்றத்தை என்றும் காணுதவர் களாய் இருந்து விட்டதால், குழப்பத்துக்கு இரையாகி, சித்தப் பிரமை அடைந்து இந்த அபத்தக் கண்டுபிடிப்பு களைத் தோற்றுவிக்க உதவியதாகத் தெரிகிறது.

மறு புறத்தில், தற்போது ''நவநாகரிக'' வழக்குக் குரிய சொற்களாகிவிட்ட ''வெகுஜனங்கள்'', ''தலைவர்கள்'' ஆகிய இரண்டும் சிந்தனையின்றியும் தாறுமாருகவும் கை யாளப்படுவதையே காண்கிருேம். ''தலைவர்கள்'' மீது

தொடுக்கப்படும் மிகப் பல தாக்குதல்களிலும் தலைவர்கள் ''வெகுஜனங்களுக்கு'' எதிராக வைத்துப் பேசப்படுவதை இவர்கள் கேட்டு மனப்பாடம் செய்து கொண்டு விட்டனர். ஆனால் இவ்விவகாரங்கள் குறித்துச் சிந்தனை செய்யவும், இவற்றின் பொருளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும் தாம் திறனற்றவர்கள் என்பதை நிரூபித்துக் கொண்டு விட்டனர்.

''தலைவர்களுக்கும்'' ''வெகுஜனங்களுக்கும்'' இடையிலான வேற்றுமை ஏகாதிபத்தியப் போரின் முடிவிலும், அதற்குப் பிற்பாடும் எல்லா நாடுகளிலும் குறிப்பிடத்தக்க தெளிவுடனும் கூர்மையுடனும் வெளிப்பட்டது. இதற்குரிய தலைமையான காரணத்தை மார்க்சும் எங்கெல்சும் 1852க்கும் 1892க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் பிரிட்டனின் உதாரணத்தைக் கொண்டு பன்முறை விளக்கிக் கூறினர். இந்நாட்டின் ஏகபோக நிலை காரணமாய், ''வெகுஜனங்களிலிருந்து'' அரைவாசிக் குட்டிமுதலாளித்துவ, சந்தர்ப்பவாதத் ''தொழிலாளர் பிரபுக்குலத்தார்'' பிரிவு ஒன்று தோன்றலாயிற்று. இந்தத் தொழிலாளர் பிரபுக்குலத்தாரின் தலைவர்கள், முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கத்துக்கு ஓடி, நிலையாக அதனுடன் ஒட்டிக் கொண்டு நேரடியாகவோ, மறைமுகமாகவோ அதனிடம் கூலி பெற்று அதற்குச் சேவகம் புரிந்தனர். இந்தக் கழிசடைப் பிறவிகளுக்குப் பகிரங்கமாய்த் துரோகிகளென நாமம் சூட்டி இவர்களுடைய வெறுப்புக்குப் பாத்திரமாகும் சிறப்பை மார்க்ஸ் பெற்றுக் கொண்டார். நவீன (இருபதாம் நூற்றாண்டின்) ஏகாதிபத்தியம் வளர்ச்சி பெற்ற ஒரு சில நாடுகளுக்குத் தனிச்சலுகைக்குரிய விசேஷ நிலையை அளித்துள்ளது. இதனால் இரண்டாவது அகிலத்தினுள் எல்லா இடங்களிலும் துரோகத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் சமூக-தேசியவெறிக்கும் பெயர் பெற்ற தலைவர்களது ஒரு ரகம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள், தமது குலத்தொழிலின் நலன்களுக்காகவும், தொழிலாளர் பிரபுக்குலத்தாரில் தமது சொந்தப் பிரிவின் நலன்களுக்காகவும் பாடுபடுகிறவர்கள். சந்தர்ப்பவாதக் கட்சிகள் ''வெகுஜனங்களிடமிருந்து'', அதாவது

உழைப்பாளி மக்களின் மிகவும் விரிவான பகுதிகளிட மிருந்து, உழைப்பாளி மக்களின் பெரும்பான்மையோரிட மிருந்து, மிகக் குறைந்த சம்பளம் பெறும் தொழிலாளர் களிடமிருந்து பிரிந்து சென்று விட்டன. இந்தச் சீர்கேட்டை எதிர்த்துப் போராடினுல் ஒழிய, சந்தர்ப்பவாத சமூக-துரோகத் தலைவர்களை அம்பலப்படுத்தி, இழிவுபடுத்தி வெளி யேற்றினுல் ஒழிய, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற முடியாது. இக்கொள்கையைத்தான் மூன்ருவது அகிலம் மேற்கொண்டிருக்கிறது.

இது சம்பந்தமாய், பொத்தாம் பொதுவில் வெகுஜனங்களது சர்வாதிகாரமா, தலைவர்களது சர்வாதி காரமா என்று இவற்றை ஒன்றுக்கு ஒன்று எதிராய் வைக் கும் அளவுக்குச் செல்வதானது நகைக்கத் தக்க அபத்த மும் மடமையுமே ஆகும். இதில் மிகப் பெரும் வேடிக்கை என்னவெனில், எளிய பிரச்சினைகள் குறித்துப் பொதுவாக ஏற்கப்பட்டுள்ள கருத்துக்களைக் கொண்ட தலைவர்களுக்குப் பதிலாய், அர்த்தமற்ற சுத்த அபத்தம் பேசும் **புதிய தலை வர்கள்** (''தலைவர்கள் ஒழிக!'' என்னும் முழக்கத்தால் மூடி மறைக்கப்பட்டு) நடைமுறையில் முன்னுக்குக் கொண்டு வரப்படுகிருர்கள். ஜெர்மனியில் லௌபென்பெர்கும், வொல்ப் ஹெயிமும், ஹோர்னெரும், கார்ல் ஷ்ரேடரும், பிரெடெரிக் வெண்டெலும், கார்ல் எர்லெரும்* இத்தகையவர்ககள் தான். இப்பிரச்சினையில் ''ஆழ்ந்த புலமை'' வெளிப்படுத்திப் பொதுவாகவே அரசியல் கட்சிகள் தேவையற்றவை, ''முதலாளித்துவத் தன்மை வாய்ந்தவை'' என்பதாக முடிவுகட்டுவதற்கு எர்லெர் மேற்கொள்ளும் முயற்சிகள்

---

* கார்ல் எர்லெர், **கட்சியின் கலைப்பு**, ''கம்யூனிஸ்டுத் தொழிலாளர் பத்திரிகை''[49], ஹாம்பர்க், *1920*, பிப்ர வரி *7*, இதழ் *32*: ''முதலாளித்துவ ஜனநாயகத்தை அழிக் காமல், தொழிலாளி வர்க்கத்தால் முதலாளித்துவ அரசை அழித்துவிட முடியாது; கட்சிகளை அழிக்காமல், அதனுல் முதலாளித்துவ ஜனநாயகத்தை அழித்துவிட முடியாது.''

தம்மை மார்க்சியவாதிகளாகக் கூறிக்கொள்ளும் நிதான மான ஜெர்மானியர்களும் (மேற்கூறிய பத்திரிகையில்

அடிமுட்டாள்தனமாயிருப்பதால், எள்ளி நகையாடுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. சிறு பிழையானுலும் தொடர்ந்து அனுசரிக்கப்படுமானுல், அதற்கு நியாயம் கற்பிப்பதற்காக ஆழ்ந்த வாதங்களைத் தேடிப்பிடிக்க முயற்சி செய்யப்படுமானுல், தர்க்க வழியிலான அதன் ''இறுதி நிலைக்கு'' அது எடுத்துச் செல்லப்படுமானுல், பூதாகார அளவுக்கு அது பெரிதாகிவிடும் என்ற உண்மையையே இவை யாவும் வலியுறுத்துகின்றன.

கட்சிக் கோட்பாட்டையும் கட்சிக் கட்டுப்பாட்டையும் நிராகரித்தல் — எதிர்த்தரப்பார் வந்தடைந்துள்ள நிலையாகும். முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்காகப் பாட்டாளி வர்க்கத்தை முற்றிலும் நிராயுதபாணியாக்குவதற்கே இது ஒப்பானது. இவை எல்லாம் சேர்ந்ததுதான் அந்தக் குட்டிமுதலாளித்துவச் சிதறலும் நிலையின்மையும், விடா முயற்சி, ஒற்றுமை, ஒழுங்கமைந்த செயல் ஆகிய இவற்றுக்கான திராணியின்மையும், இவ்வியல்புகள் ஊக்குவிக்கப்பட்டால், தவிர்க்க முடியாத வகையில் இவை எந்தப் பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்தையும் அழித்தே தீரும். கட்சிக் கோட்பாட்டை நிராகரிப்பதானது, கம்யூனிசத்தின் கண்ணோட்டத்தில், முதலாளித்துவத்தின் வீழ்ச்சியின் தறுவாயிலிருந்து (ஜெர்மனியில்) கம்யூனிசத்தின் கீழ்க் கட்டத்

கா. எர்லெரும் கா. ஹோர்னெரும் தமது கட்டுரைகளின் மூலம், தம்மை நிதானமான மார்க்சியவாதிகளாகவே கருதிக் கொள்கிருர்கள் என்பதையும், ஆனுல் தாம் குறிப்பாயும் நகைக்கத்தக்க அபத்தமே பேசுகிறவர்கள், மார்க்சியத்தின் அரிச்சுவடியைக்கூடப் புரிந்து கொள்ளாதவர்கள் என்பதையும் பட்டவர்த்தனமாய்க் காட்டிக் கொண்டு விடுகிருர்கள்), முற்றிலும் மடத்தனமான முடிவுகளை எடுத்துரைக்கும் அளவுக்குச் செல்வது குறித்து லத்தீன் நாடுகளைச் சேர்ந்த சிண்டிக்கலிஸ்டுகளிலும் அராஜகவாதிகளிலும் அதிகப்படியாய்ச் சிந்தனைக் குழப்பமுற்ருேர் ''மன நிறைவு'' கொள்ளலாம். மார்க்சியத்தை ஏற்றுக் கொள்வதால் மட்டும் தவறுகளிலிருந்து தப்பிவிட முடியாது. ருஷ்யர்களாகிய நாங்கள் இதனை மிக நன்ருய் அறிவோம், ஏனெனில் பல சந்தர்ப்பங்களில் எங்கள் நாட்டில் மார்க்சியம் ''மோஸ்தராய்'' இருந்துள்ளது.

துக்கோ இடைநிலைக் கட்டத்துக்கோ அல்ல, நேரே உயர் கட்டத்துக்கே பாய்வதற்கான முயற்சியைத்தான் குறிக்கிறது. ருஷ்யாவிலுள்ள நாங்கள் (முதலாளித்துவ வர்க்கத்தைக் கவிழ்த்ததற்குப் பிற்பாடான இந்த மூன்ரும் ஆண்டில்) முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு, அதாவது கம்யூனிசத்தின் கீழ்நிலைக் கட்டத்துக்கு, மாறிச் செல்வதற்கான துவக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிரும். வர்க்கங்கள் இன்னமும் இருந்து வருகின்றன; பாட்டாளி வர்க்கம் ஆட்சியதிகாரம் வென்று கொண்ட பிற்பாடும் பல ஆண்டுகளுக்கு எங்கும் இருக்கவே செய்யும். விவசாயிகள் இல்லாத (ஆனல் சிறு உடைமையாளர் இருந்து வரும்) பிரிட்டனில் வேண்டுமானல் ஒருவேளை இந்தக் காலம் குறுகியதாய் இருக்கலாம். வர்க்கங்களை ஒழிப்பதென்பதன் பொருள் நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் அகற்றுவதென்பது மட்டுமல்ல — இதனை நாங்கள் ஒப்பளவில் சுலபமாய்ச் செய்து விட்டோம்; சிறுவீதப் பண்ட உற்பத்தியாளர்களை ஒழித்திடுவதென்பதும் இதன் பொருளாகும். இவர்களை அகற்றிவிட முடியாது, நசுக்கிவிடவும் முடியாது; நாம் இவர்களுடன் சேர்ந்து வாழ்ந்தாக வேண்டும். நீடித்த, மெதுவான, எச்சரிக்கையான ஒழுங்கமைப்புப் பணியின் மூலமாக மட்டுமே இவர்களை மாற்றவும், போதனை அளித்துத் திருத்தவும் முடியும் (அவ்வாறே செய்யவும் வேண்டும்). பாட்டாளி வர்க்கத்தை இவர்கள் எல்லாப் பக்கங்களிலும் குட்டிமுதலாளித்துவச் சூழ்நிலையால் சுற்றி வளைத்துள்ளனர். இச்சூழ்நிலை பாட்டாளி வர்க்கத்தினுள் கசிந்து அதனை மாசுபடுத்துகிறது. பாட்டாளி வர்க்கத்தினுள் குட்டிமுதலாளித்துவ உறுதியின்மையையும், ஒற்றுமையின்மையையும், தனிநபர் மனப்பான்மையையும், மாறி மாறி மனவெழுச்சியையும் மனச்சோர்வையும் ஓயாது மீண்டும் மீண்டும் தலை தூக்கச் செய்கிறது. இதனை எதிர்த்துச் சமாளிக்கும் பொருட்டு, பாட்டாளி வர்க்கத்தின் ஒழுங்கமைப்புப் பாத்திரம் (அதுவே அதன் தலைமையான பாத்திரம்) பிழையின்றியும் பயனுள்ள முறையிலும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றப்படும் பொருட்டு, பாட்டாளி வர்க்க அர

சியல் கட்சியினுள் மிகவும் கண்டிப்பான மத்தியத்துவமும் கட்டுப்பாடும் அவசியமாகும். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்றால் பழைய சமுதாயத்தின் சக்திகளுக்கும் மரபுகளுக்கும் எதிரான இடையறாத போராட்டம் என்று அர்த்தம், இரத்தக் களறியானதும் இரத்தமற்றதுமான, வன்முறையானதும் அமைதியானதுமான, ராணுவ வழிப்பட்டதும் பொருளாதார வழிப்பட்டதுமான, போதனைத் துறையிலானதும் நிர்வாகத் துறையிலானதுமான போராட்டம் என்று அர்த்தம். லட்சோப லட்சக் கணக்கானோரிடையிலும், கோடானு கோடியானோர் இடையிலும் நிலவும் பழக்கத்தின் சக்தி அபாரமானதொரு சக்தியாகும். போராட்டத்தில் புடம் போடப்பட்டு உருக்கு உறுதி கொண்ட ஒரு கட்சி இல்லையேல், குறிப்பிட்ட அந்த வர்க்கத்திலுள்ள நேர்மையானோர் அனைவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு கட்சி இல்லையேல், வெகுஜனங்களது மனப்பாங்கைக் கவனித்து வருவதற்கும் வயப்படுத்துவதற்குமான திறன் கொண்ட ஒரு கட்சி இல்லையேல், இத்தகைய ஒரு போராட்டத்தை வெற்றிகரமாய் நடத்த முடியாது. கோடானு கோடியாயுள்ள சிறு உடைமையாளர்களைத் ''தோற்கடிப்பதை'' விட மத்தியத்துவமடைந்த பெரு முதலாளிகளைத் தோற்கடிப்பது ஆயிரம் மடங்கு சுலபமானது. இந்தச் சிறு உடைமையாளர்கள் தமது சாதாரணமான, அன்றாட, கண்ணுக்குப் புலப்படாத, பிடிகொடுக்காத, சீர்கேடு உண்டாக்கும் நடவடிக்கைகள் மூலம் முதலாளித்துவ வர்க்கத்துக்குத் தேவையான அதே பலன்களைத்தான், முதலாளித்துவ வர்க்கத்தைப் புத்துயிர் பெற்றெழச் செய்யும் அதே பலன்களைத்தான் உண்டாக்குகிறார்கள். பாட்டாளி வர்க்கக் கட்சியின் உருக்குக் கட்டுப்பாட்டை (முக்கியமாய் அதன் சர்வாதிகாரத்தின் போது) இம்மியளவு பலவீனமாக்குகிறவருங்கூட, பாட்டாளி வர்க்கத்துக்கு விரோதமாய் முதலாளித்துவ வர்க்கத்துக்கு உதவுகிறவரே ஆவார்.

தலைவர்கள்—கட்சி—வர்க்கம்—வெகுஜனங்கள் பற்றிய பிரச்சினைக்கு இணைவாகவே, ''பிற்போக்குத்'' தொழிற் சங்கங்கள் பற்றிய பிரச்சினையையும் நாம் எழுப்பியாக

வேண்டும். ஆனால் முதலில், எங்கள் கட்சியினுடைய அனுபவத்தின் அடிப்படையில் சில முடிவுரைகளைக் கூற விரும்புகிறேன். நமது கட்சியில் ''தலைவர்களது சர்வாதிகாரம்'' குறித்து தாக்குதல்கள் எப்பொழுதுமே நடத்தப்பட்டு வந்துள்ளன. இத்தகைய தாக்குதல்களைப் பற்றி 1895ல் நான் முதன் முதலாய்க் கேட்டது நினைவுக்கு வருகிறது. அப்பொழுது அதிகாரபூர்வமாய்க் கட்சி எதுவும் இருக்கவில்லை. ஆனால் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் வட்டாரக் குழுக்களுக்குத் தலைமை ஏற்பதற்குரிய ஒரு மையக் குழு உருவாகத் தொடங்கியது.[50] எங்களுடைய கட்சியின் ஒன்பதாவது காங்கிரசில் (ஏப்ரல், 1920) இருந்த ஒரு சிறு எதிர்த்தரப்பும் இதேபோல ''தலைவர்களின் சர்வாதிகாரம்'', ''சிலராட்சி'' என்றெல்லாம் குறிப்பிட்டு எதிர்த்துப் பேசிற்று.[51] ஆகவே ஜெர்மானியர்களிடையிலான ''இடதுசாரி கம்யூனிசம்'' எனும் இந்த ''இளம் பருவக் கோளாற்றில்'' வியப்புக்குரியதோ, புதியதோ, பயங்கரமானதோ எதுவும் இல்லை. இந்த வியாதி ஆபத்தானதல்ல; இது வந்து சென்றதும் உடலமைப்பு முன்னிலும் அதிக வலுவானதாகி விடுகிறது. மறு புறத்தில், எங்களுடைய விவகாரத்தில், தலைமையகத்தையே—தலைவர்களையே—''மூடிமறைத்துப்'' பரம இரகசியமாய் வைத்துக் கொள்வது அவசியமாகி விடும்படி சட்டபூர்வமான வேலைகளும் சட்டவிரோதமான வேலைகளும் வேகமாய் மாறி மாறி வந்ததால், சில நேரங்களில் மிகவும் அபாயகரமான விளைவுகள் ஏற்பட்டன. இவ்விளைவுகளில் மிகவும் மோசமானது 1912ல் போலீஸ் கையாள் மலினேவ்ஸ்கி போல்ஷிவிக்குகளின் மத்தியக் கமிட்டியில் புகுந்து கொண்டதுதான். மிகச் சிறந்த, பற்றுறுதி மிக்க எத்தனையோ பல தோழர்களைக் காட்டிக் கொடுத்து, அவர்களுக்குக் கடுங்காவல் தண்டனை கிடைக்கச் செய்து, பலரும் விரைவிலேயே மரணமடைய அவன் காரணமாயிருந்தான். இன்னும் அவன் அதிக அளவில் தீங்கிழைக்க முடியாமற்போயிற்று என்றால், சட்டபூர்வமான வேலைகளுக்கும் சட்டவிரோத வேலைகளுக்கும் இடையில் இருந்த சரியான இணைவுதான் அதற்குக் காரணம். கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர் என்ற முறையிலும், டூமா

பிரதிநிதி என்ற முறையிலும் மலினேவ்ஸ்கி எங்கள் நம்பிக்கைக்கு உரியவனுகும் பொருட்டு, சட்டபூர்வமான தினசரிப் பத்திரிகைகளை நிறுவ எங்களுக்கு உதவும்படி நிர்ப்பந்திக்கப்பட்டான். ஜாரிச ஆட்சியிலுங்கூட, இப்பத்திரிகைகளால் மென்ஷிவிக்குகளின் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தவும், தக்கபடி மறைத்து போல்ஷிவிசத்தின் அடிப்படைக் கூறுகளைப் பரப்பவும் முடிந்தது. மலினேவ்ஸ்கி ஒருபுறம் மிகச் சிறந்த போல்ஷிவிக்குகள் பலரையும் கடுங்காவல் தண்டனைக்கும் மரணத்துக்கும் உள்ளாக்கிய அதே நேரத்தில், மறுபுறம் பத்தாயிரக்கணக்கான புதிய போல்ஷிவிக்குகள் சட்டபூர்வமான பத்திரிகைகளின் வாயிலாய் அரசியல் போதம் பெறத் துணை புரிய வேண்டியதாயிற்று. பிற்போக்கான தொழிற்சங்கங்களில் புரட்சிகர வேலைகளை நடத்திச் செல்வதற்குக் கற்றுக் கொள்வது சம்பந்தமான பணிகளை எதிர்நோக்கும் ஜெர்மன் (அதேபோல பிரிட்டிஷ், அமெரிக்க, பிரெஞ்சு, இத்தாலிய) தோழர்கள் இவ்வுண்மை குறித்து ஆழ்ந்த ஆலோசனை செய்வது நல்லது.*

---

* மலினேவ்ஸ்கி ஜெர்மனியில் போர்க் கைதியாக இருந்தான். போல்ஷிவிக்குகள் ஆட்சியதிகாரத்தில் இருக்கையில் ருஷ்யாவுக்குத் திரும்பிய உடனே, அவன் நீதி விசாரணை செய்யப்பட்டு எங்களது தொழிலாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டான். நமது தவறுக்காக—அதாவது, போலீஸ் கையாள் ஒருவன் நமது கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினுகி விட்டதற்காக—மென்ஷிவிக்குகள் நம்மை மிகக் கடுமையாகத் தாக்கினர். ஆனுல் கேரென்ஸ்கியின் கீழ், டூமாவின் தலைவர் ரத்ஸியான்கோவுக்கு மலினேவ்ஸ்கி ஒரு போலீஸ் கையாள் என்பது போருக்கு முன்பே தெரிந்திருந்தும் டூமாவில் துருதொவிக்குகளுக்கோ[52] தொழிலாளர்களுக்கோ அவர் தகவல் தெரிவிக்காமல் இருந்ததால், அவரைக் கைது செய்து நீதி விசாரணை செய்ய வேண்டுமென நாங்கள் கோரிய போது, கேரென்ஸ்கி அரசாங்கத்திலிருந்த மென்ஷிவிக்குகளோ சோஷலிஸ்டு-புரட்சியாளர்களோ எங்கள் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. ரத்ஸியான்கோ சுதந்திரமாகத்தான் இருந்து வந்தார். சுதந்திரமாக ஓடிச் சென்று தெனீக்கினுடன் அவர் சேர்ந்து கொண்டார்.

மிகவும் முன்னேறிய நாடுகள் அடங்கலாய்ப் பல நாடுகளில், முதலாளித்துவ வர்க்கம், கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குள் தனது உளவாளிகளை அனுப்பி வருகிறது என்பதில் ஐயமில்லை. இனியும் அது அவ்வாறே அனுப்பிவரும். இந்த அபாயத்தை எதிர்த்துப் போராடுவதற்கான முறைகளில் ஒன்று, சட்டவிரோதமான பணிகளையும், சட்டபூர்வமான பணிகளையும் சாமர்த்தியமாய் இணைத்துச் செல்வதாகும்.

6

புரட்சியாளர்கள் பிற்போக்குத் தொழிற்சங்கங்களில் வேலை செய்யலாமா?

ஜெர்மன் ''இடதுசாரிகள்'' தம்மைப் பொறுத்தவரை நிபந்தனையற்ற தீர்மானகரமான எதிர்மறையே இக்கேள்விக்குரிய பதிலாகுமெனக் கருதுகிறார்கள். கீழ்த்தரமான, சமூக-தேசியவெறி கொண்ட, சமரசவாத, லேகின் ரகத்தைச் சேர்ந்த, புரட்சி-எதிர்ப்புத் தொழிற்சங்கங்களில் புரட்சியாளர்களும் கம்யூனிஸ்டுகளும் வேலை செய்யத் தேவையில்லை என்பதுடன், அவ்வாறு வேலை செய்வது மன்னிக்க முடியாத குற்றம் ஆகும் என்றும், ''பிற்போக்கு'', ''புரட்சி-எதிர்ப்புத்'' தொழிற்சங்கங்களுக்கு எதிரான கண்டன முழக்கங்களும் ஆத்திரக் கூப்பாடுகளுமே (இவற்றுள் குறிப்பிடத்தக்க ''ஆதாரத்தோடும்'', குறிப்பிடத்தக்க அசட்டு முறையிலும் அமைந்தவை கா. ஹோர்னெர் எழுப்பியவை) போதுமான ''நிரூபணமாகும்'' என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

இத்தகைய போர்த்தந்திரத்தின் புரட்சித் தன்மை குறித்து ஜெர்மன் ''இடதுசாரிகள்'' எவ்வளவுதான் திட நம்பிக்கை கொண்டிருந்த போதிலும், உண்மையில் இது அடிப்படையிலேயே தவறானது, வெற்றுச் சொல்லடுக்குகளைத் தவிர வேறு எதுவும் இல்லாதது.

இதனைத் தெளிவுபடுத்தும் பொருட்டு, எங்களுடைய

சொந்த அனுபவத்தை முதலில் எடுத்துரைக்கிறேன். போல் ஷிவிசத்தின் வரலாற்றிலும் அதன் இன்றைய போர்த்தந் திரத்திலும் அனைத்துலகுக்கும் எதெல்லாம் பொருத்தமுடை யதோ, எதெல்லாம் முக்கியத்துவமுடையதோ, எதெல்லாம் இன்றியமையாததோ அதனை மேற்கு ஐரோப்பாவுக்குப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பிர சுரத்தின் பொது திட்டத்துக்கேற்ப, முதலில் எங்கள் அனுபவத்தை எடுத்துரைக்கிறேன்.

இன்று ருஷ்யாவில் தலைவர்களுக்கும் கட்சிக்கும் வர்க் கத்துக்கும் வெகுஜனங்களுக்கும் இடையிலுள்ள சம்பந்த மும், மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் அதன் கட்சியும் தொழிற்சங்கங்கள் பால் கொண்டுள்ள போக்கும் ஸ்தூலமாய்ப் பின்வருமாறு உள்ளன: சோவியத்துக்களின் மூலம் ஒழுங்கமைந்து பாட்டாளி வர்க்கம் சர்வாதிகாரத் தைச் செலுத்துகிறது; இந்தப் பாட்டாளி வர்க்கம் போல் ஷிவிக்குகளது கம்யூனிஸ்டுக் கட்சியால் வழிகாட்டப்படு கிறது. கடந்த கட்சிக் காங்கிரசின் (1920 ஏப்ரல்) புள்ளிவிவரங் களின்படி, இக்கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை 6,11,000. உறுப்பினர் எண்ணிக்கை அக்டோபர் புரட்சிக்கு முன்பும் அதற்குப் பிற்பாடும் பெரிதும் மாறுபட்டு வந்தது. 1918லும் 1919லும் கூட இதை விடவும் மிகக் குறைவாகவே இருந்தது.[53] கட்சி அளவுமீறி பெருகி விடுவதை நாங்கள் அச்சத்துக்குரியதாகவே கருதுகிறோம். ஏனெனில் சுட்டுத் தள்ளப்பட வேண்டிய பதவி வேட்டையாளர்களும், எத் தர்களும் ஆளும் கட்சியின் அணிகளுக்குள் நுழைந்துகொள் வதற்காக, தவிர்க்க முடியாத வகையில் எல்லா வழிகளிலும் முயலுகிறார்கள். கடைசித் தரம் கட்சியின் கதவுகளை நாங் கள் விரியத் திறந்தது—தொழிலாளர்கள் விவசாயிகளுக்கு மட்டுமேதான்—1919ஆம் ஆண்டு குளிர்காலத்தில், யுதே னிச் பெத்ரோகிராதுக்கு ஒரு சில கிலோமீட்டர் தொலை விலும், தெனீக்கின் ஒரியோலுக்கும் (மாஸ்கோவிலிருந்து சுமார் 350 கிலோமீட்டர் தொலைவில்) வந்துவிட்ட ஒரு நேரத்தில்: அதாவது, சோவியத் குடியரசு கொடிய அழிவு அபாயத்துக்கு உள்ளாகியிருந்த போது, துணிகர சுயநலக்

காரர்களும் பதவி வேட்டையாளர்களும் எத்தர்களும் நம்பத்தகாத ஆட்களும் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து கொள்வதன் மூலம் லாபகரமான பதவி பெறலாமென சிறிதும் எதிர்பார்க்க முடியாத போது (தூக்கு மேடையையும் சித்திரவதையையுமே அதிகம் எதிர்பார்க்க வேண்டியிருந்த போது) இது நடைபெற்றது.[54] கட்சியானது வருடாந்திரக் காங்கிரசுகளைக் கூட்டுகிறது (கடந்த காங்கிரஸ், 1,000 உறுப்பினர்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் நடைபெற்றது); காங்கிரசால் தேர்ந்தெடுக்கப்படும் பத்தொன்பது உறுப்பினர்கள் அடங்கிய மத்தியக் கமிட்டியால் கட்சி நடத்திச் செல்லப்படுகிறது. மாஸ்கோவிலிருந்து நடப்பு வேலைகளைக் கவனித்துக் கொள்பவை இன்னும் சிறிய குழுக்களாகும். ஒழுங்கமைப்புக் குழு, அரசியல் குழு எனப்படும் இவை, மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டங்களில் ஒவ்வொரு குழுவுக்கும் ஐந்து மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் என்னும் விகிதத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இது முழுக்க முழுக்க ''சிலர் ஆட்சியாகத்'' தோன்றக் கூடும். கட்சி மத்தியக் கமிட்டியின் வழிகாட்டுதல் இல்லாமல் எங்களது குடியரசில் எந்த முக்கிய அரசியல் அல்லது நிறுவனப் பிரச்சினை குறித்தும் எந்த அரசு நிறுவனத்தாலும் முடிவு எடுக்கப்படுவதில்லை.

கட்சி அதன் வேலைகளில் நேரடியாகத் தொழிற்சங்கங்களையே ஆதாரமாகக் கொண்டு இயங்குகிறது. தொழிற்சங்கங்கள், கடந்த காங்கிரசின் (1920 ஏப்ரல்) புள்ளிகளின்படி, நாற்பது லட்சத்துக்கும் கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றன. இவை உருவில் கட்சிசார்பற்ற நிறுவனங்கள். ஆனால் நடைமுறையில் மிகப் பெரும்பாலான தொழிற்சங்கங்களின் தலைமை அமைப்புகள் யாவும், முதன்மையாக அனைத்து ருஷ்யத் தொழிற்சங்கப் பொது மையம் அல்லது பியூரோ (தொழிற்சங்கங்களின் அனைத்து ருஷ்ய மத்தியக் கவுன்சில்) கம்யூனிஸ்டுகளால் ஆனவைதான்; கட்சியின் எல்லாத் தாக்கீதுகளையும் இவை நிறைவேற்றுகின்றன. இவ்வாறாக, மொத்தத்தில் நாங்கள் உருவில் கம்யூனிஸ்டல்லாத, நெகிழ்வுள்ள, ஒப்பளவில் மிகவும் விரிவான,

சக்தி மிக்கப் பாட்டாளி வர்க்க நிறுவன ஏற்பாட்டைப் பெற்றிருக்கிறோம். இதன் மூலம் கட்சியானது வர்க்கத் துடனும் வெகுஜனங்களுடனும் நெருங்கிய முறையில் பிணைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம்தான் கட்சியினுடைய தலைமையில், வர்க்கச் சர்வாதிகாரம் செலுத்தப்படுகிறது. தொழிற்சங்கங்களுடன் நெருங்கிய தொடர்புகளின்றி, பொரு ளாதார நிர்மாண விவகாரங்களில் மட்டுமின்றி இராணுவ நிர்மாண விவகாரங்களிலுங்கூட அவற்றின் சக்தி வாய்ந்த ஆதரவும் பற்றுறுதி கொண்ட முயற்சிகளுமின்றி, இரண்டரை ஆண்டுகள் இருக்கட்டும், இரண்டரை மாதங்களுக்குக்கூட நாட்டை அரசாள்வதும் சர்வாதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதும் முடியாமற் போயிருந்திருக்கும். நடைமுறை யில் இந்த மிக நெருங்கிய தொடர்புகளுக்கு இயல்பாகவே, பிரசாரத்தின் வடிவிலும் கிளர்ச்சியின் வடிவிலும் தலைமை யான தொழிற்சங்க ஊழியர்களுடன் மட்டுமின்றி, பொது வாகச் செல்வாக்கு படைத்த தொழிற்சங்க ஊழியர்களுட னும் தக்க காலத்திலும் அடிக்கடியும் நடைபெறும் மாநாடு களின் வடிவிலும் மிகவும் சிக்கலான, பல்வகைப்பட்ட பணி களும் இன்றியமையாதனவாகி விடுகின்றன. மென்ஷிவிக்கு களை எதிர்த்து வைராக்கியமாய்ப் போராடுவதும் இவற் றுக்கு அவசியமாகும். மென்ஷிவிக்குகளைப் பின்பற்றுவோர் சொற்பமேயாயினும், குறிப்பிட்ட சில பகுதியோர் இன்ன மும் அவர்கள் பின்னால் செல்லத்தான் செய்கிறார்கள். இவர் களுக்கு மென்ஷிவிக்குகள் (முதலாளித்துவ) ஜனநாயகத் தைச் சித்தாந்த வழியில் ஆதரிப்பது முதலாய், தொழிற் சங்கங்கள் ''சுயேச்சையாய்'' இருக்க வேண்டும் (பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்திலிருந்து!) என்று போதிப்பது முதலாய், பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டுக்குக் குழிபறிப் பது வரையிலான எல்லா வகைப்பட்ட எதிர்ப்புரட்சிச் சூழ்ச்சிகளையும் கற்றுத் தருகின்றனர்.

''வெகுஜனங்களுடன்'' தொழிற்சங்கங்கள் மூலமாக மட்டும் தொடர்புகள் கொண்டால் போதாதென நாங்கள் கருதுகிறோம். எங்களது புரட்சியின் போது நடைமுறை யானது கட்சிசார்பற்ற தொழிலாளர்கள், விவசாயிகளது மாநாடு

கள் போன்ற ஏற்பாடுகளைத் தோற்றுவித்தது. வெகுஜனங்களுடைய மனநிலையைக் கண்டறிந்து கொள்வது, அவர்களை மேலும் நெருங்கிச் செல்வது, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வது, அவர்களில் மிகச் சிறந்தோரை அரசாங்கப் பதவிகளுக்கு உயர்த்துவது முதலான பலவும் செய்யும் பொருட்டு, இந்த ஏற்பாடுகளை ஆதரிக்கவும் வளர்த்துச் செல்லவும் விரிவுபடுத்தவும் நாங்கள் எல்லா வழிகளிலும் முயலுகிறோம். அரசாங்கக் கண்காணிப்பு மக்கள் கமிசாரகத்தைத் ''தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வைப் போர்டாக'' மாற்றுவது குறித்து அண்மையில் பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி, இம்மாதிரியான கட்சிசார்பற்ற மாநாடுகளுக்கு, பல்வேறு வகையான தணிக்கைகளையும் பிறவற்றையும் நடத்தும் அரசாங்கக் கண்காணிப்பின் உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டது.

தவிரவும், கட்சியின் பணிகள் எல்லாம் உழைப்பாளி வெகுஜனங்களை அவர்களது வேலைத் துறை எதுவாயினும் தம்முட்கொண்ட சோவியத்துக்களின் மூலமாகவே நடந்தேறுகின்றன என்பதைக் கூறத் தேவையில்லை. சோவியத்துக்களின் உயெஸ்து காங்கிரசுகள் ஜனநாயக நிறுவன ஏற்பாடுகளாகும். முதலாளித்துவ உலகின் மிகச் சிறந்த ஜனநாயகக் குடியரசுகளுங்கூட இவையொத்த ஜனநாயக நிறுவன ஏற்பாடுகளை முன்பின் கண்டதில்லை. இந்தக் காங்கிரசுகளின் மூலமும் (இவற்றின் நடவடிக்கைகளைக் கட்சி மிக உன்னிப்பாகக் கவனித்துச் செயல்பட முனைகிறது), மற்றும் கிராமங்களில் வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்களைத் தொடர்ச்சியாகப் பல்வேறு பதவிகளில் அமர்த்துவதன் மூலமும் பாட்டாளி வர்க்கம் விவசாயிகளது தலைவனாகத் தான் ஆற்ற வேண்டிய பாத்திரத்தை நிறைவேற்றுகிறது; நகரப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைச் செயல்படச் செய்தல், விவசாயிகளில் சுரண்டலிலும் கொள்ளை லாபமடிப்பதிலும் ஈடுபடும் பணக்கார, முதலாளித்துவப் பகுதியோருக்கு எதிராய் இடையறாது போராடுதல் முதலான பணிகளை நிறைவேற்றுகிறது.

இதுவே பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்தை ''மேலி

ருந்து'' நோக்குகையில், சர்வாதிகாரத்தை நடைமுறையில் செயல்படுத்துவதன் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், தெரியவரும் பொது அமைப்புமுறையாகும். இந்த அமைப்பு முறை இருபத்தைந்து ஆண்டுகளாய் எப்படிச் சிறிய, சட்ட விரோத, தலைமறைவுக் குழுக்களிலிருந்து வளர்ந்து உரு வாயிற்று என்பதைக் கண்டுள்ள ருஷ்ய போல்ஷிவிக்குகள், ''மேலிருந்தா'' அல்லது ''கீழிருந்தா'' என்பதாகவும், தலைவர்களின் சர்வாதிகாரமா அல்லது வெகுஜனங்களின் சர்வாதிகாரமா என்பதாகவும், இன்னும் பலவாறாகவும் பேசப்படுகிற இந்தப் பேச்சை எல்லாம் நகைக்கத்தக்க, சிறு பிள்ளைத்தனமான அபத்தமாகவும், ஒருவருக்கு அதிகமாய்ப் பயன்படுவது அவரது இடது காலா அல்லது வலது கரமா என்று விவாதிக்க முற்படுவதை ஒத்ததாகவுமே கருத வேண்டியிருக்கிறதென்பதை வாசகர் புரிந்து கொள்வாரென நினைக்கிறோம்.

இதேபோல, கம்யூனிஸ்டுகள் பிற்போக்குத் தொழிற் சங்கங்களில் வேலை செய்ய முடியாது, வேலை செய்யக் கூடாதென்றும், இது போன்ற வேலையைக் கைவிட்டுவிடலாமென்றும், தொழிற்சங்கங்களை விட்டு வெளியேறி மிக அருமையான (பெருமளவுக்கு மிக இளம் பருவத்தினராகவே இருக்கக் கூடிய) கம்யூனிஸ்டுகளால் கண்டு பிடிக்கப்பட்ட புத்தம் புதிய வகைப்பட்ட அப்பழுக்கற்ற ''தொழிலாளர் சங்கத்தை'' உருவாக்குவது அவசியமென்றும், மற்றும் பலவாறாகவும் கூறும் ஜெர்மன் இடதுசாரிகளின் ஆடம்பரமான, மெத்தப் படித்த மேதாவித்தனமான, பயங்கரப் புரட்சிகரமான பல பேச்சுக்களையும் நாங்கள் நகைக்கத்தக்க, சிறுபிள்ளைத் தனமான அபத்தமாகவே கருத வேண்டியிருக்கிறது.

முதலாளித்துவமானது, சோஷலிசத்துக்குரிய மரபுரிமைச் சம்பத்தாக, ஒரு புறத்தில் தொழிலாளர்களிடையே பல நூற்றாண்டுகளாய் வளர்ந்து உருவான பழைய பணித்துறை, கைவினைத் துறைப் பாகுபாடுகளையும், மறு புறத்தில் தொழிற்சங்கங்களையும் தவிர்க்க முடியாதபடி விட்டுச் செல்கிறது. இந்த தொழிற்சங்கங்கள் மிக மெதுவாகவே, பல்லாண்டுக் காலப் போக்கில், தேர்ச்சித் துறைச் சங்கங்

களுக்குரிய தன்மை குறைந்து செல்ல, மேன்மேலும் விரிவான தொழில் துறைச் சங்கங்களாய் (தேர்ச்சித் துறைகளேயும் கைவினைத் துறைகளேயும் பணித் துறைகளேயும் மட்டுமின்றி, முழுமுழுத் தொழில்கள் பூராவையுமே தம்முட்கொண்டனவாய்) வளர முடிகிறது, வளரவும் செய்யும். இதன் பிறகு இந்தத் தொழில் துறைச் சங்கங்கள் மூலமாய் இவை, மக்களிடையே உழைப்புப் பிரிவினையை அகற்றவும், மக்களுக்குப் போதமளித்து, கல்வியறிவூட்டி வளர்த்திடவும், யாவற்றையும் செய்யும் திறன் பெறும்படி அவர்களுக்கு முழுநிறைவான வளர்ச்சியும் முழுநிறைவான பயிற்சியும் அளித்திடவும் முற்படும். கம்யூனிசம் இந்தக் குறிக்கோளை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது, முன்னேறவும் வேண்டும், கட்டாயம் அதனை வந்தடையவும் செய்யும். ஆனல் இதற்கு மிகப் பல ஆண்டுகள் வேண்டியிருக்கும். முழு வளர்ச்சி பெற்று, முழு வலுவுடையதாய் நிறுவப்பெற்று, முழு வீச்சுடைய முதிர்ச்சி பெற்ற கம்யூனிசமான இந்த வருங்கால விளைவை முன்கூட்டி இன்றே நடைமுறையில் காண முயலுவதானது, நான்கு வயதேயான குழந்தைக்கு உயர் கணிதம் கற்றுத் தரும் முயற்சிக்கு ஒப்பானதே ஆகும்.

சோஷலிசத்தை நாம் கட்டியமைக்க முற்பட முடியும், முற்படவும் வேண்டும்—கற்பனையான மானுடத்தைக் கொண்டோ, தனியே இதற்கென நாம் தயார் செய்யும் மானுடத்தைக் கொண்டோ அல்ல, முதலாளித்துவம் நமக்கு விட்டுச் சென்றுள்ள மானுடத்தைக் கொண்டு நாம் இதனைச் செய்ய வேண்டியிருக்கிறது. இது மிகவும் ''கடினமானதே'' என்பதைக் கூறத் தேவையில்லை. ஆனல் இப்பணிக்கு இதன்றி வேறு எந்த விதமான அணுகு முறையும் விவாதிப்பதற்குக் கூட தகுதி வாய்ந்ததாய் இருக்காது.

தொழிற்சங்கங்கள் முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்ப நாட்களில் தொழிலாளி வர்க்கத்துக்கு மகத்தானதொரு முன்னேற்றப் படியைக் குறித்தன. எப்படியெனில் தொழிலாளர்கள் சிதறிய நிலையில் திக்கற்றவர்களாக இருந்ததிலிருந்து மாறி வர்க்க ஒற்றுமையின் குருத்துக்களைப் பெற்றதை அவை குறித்தன. பாட்டாளி வர்க்க ஒற்றுமையின் மிக

உயர்ந்த வடிவமான பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்சி உருவாகத் தொடங்கியதும் (கட்சியானது தலைவர்களை வர்க்கத்தோடும் வெகுஜனங்களோடும் பிரிக்க முடியாதவாறு ஒன்றிபடச் செய்யத் தெரிந்து கொள்ளாத வரை அது கட்சி என்னும் பெயருக்கே ஏற்றதாகாது), தொழிற்சங்கங்கள் தவிர்க்க முடியாதபடி சிற்சில பிற்போக்கு இயல்புகளையும், தேர்ச்சித் துறைக்குரிய ஒரு குறுகிய கண்ணோட்டத்தையும், அரசியல் அக்கறையின்மைக்கான ஒருவிதப் போக்கையும், ஒருவகை மந்த நிலையையும், இன்ன பிறவற்றையும் வெளிப்படுத்தலாயின. ஆயினும் பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி உலகில் எங்கணுமே தொழிற்சங்கங்களல்லாத பிற வழிகளில், தொழிற்சங்கங்களுக்கும் தொழிலாளி வர்க்கக் கட்சிக்கும் இடையிலான பரஸ்பரச் செயற்பாட்டின் மூலமல்லாத பிற வழிகளில் நடைபெற்றதில்லை, நடைபெறவும் முடியாது. பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வென்றதானது பாட்டாளி வர்க்கத்துக்கு ஒரு வர்க்கம் என்ற முறையில் பிரம்மாண்டமானதொரு முன்னேற்றப் படியாகும். கட்சியானது இப்பொழுது பழைய வழியில் மட்டுமின்றி ஒரு மேலும் மேலும் புதிய வழியிலுங்கூட தொழிற்சங்கங்களுக்குப் போதமளித்து வழிகாட்டியாக வேண்டும். அதேபோதில் தொழிற்சங்கங்கள் அத்தியாவசியமான ''கம்யூனிசப் பயிற்சிப் பள்ளியாகவும்'', பாட்டாளி வர்க்கத்தினர் சர்வாதிகாரத்தைச் செலுத்துவதற்கு அவர்களுக்குப் பயிற்சி தரும் தயாரிப்புப் பள்ளியாகவும், நாட்டின் பொருளாதாரம் முழுவதுக்குமான நிர்வாகம் படிப்படியாகத் தொழிலாளி வர்க்கத்துக்கும் (தனித்தனிப் பணிப் பிரிவுகளுக்கல்ல), பிற்பாடு உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் மாற்றப்படுவதற்கு அத்தியாவசியமான தொழிலாளர் ஒற்றுமைக்கான வடிவமாகவும் இருக்கின்றன, நெடுங்காலத்துக்கு அவ்வாறு இருக்கவும் செய்யும் என்பதையும் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட பொருளில், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் தொழிற்சங்கங்கள் ஒருவகை ''பிற்போக்குத் தன்மை'' கொண்டவையாய் இருப்பது தவிர்க்க முடியாததாகும். இதைப் புரிந்து கொள்ளத் தவறுவது, முத

லாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்கான இடைக்காலத்துக்குரிய அடிப்படை நிலைமைகளைப் புரிந்து கொள்ள முற்றுகத் தவறுவதே ஆகும். இந்தப் ''பிற்போக்குத் தன்மையைக்'' கண்டு அஞ்சுவதோ, அதனைத் தட்டிக் கழிக்க அல்லது தாவிச் செல்ல முயலுவதோ படுமோசமான மடமையே ஆகும். ஏனெனில் தொழிலாளி வர்க்கத்தின், விவசாயிகளின் மிகவும் பிற்பட்ட பிரிவினரையும் பெருந்திரளினரையும் பயிற்றுவித்து, போதமளித்து, அறிவொளிபெறச் செய்து, புது வாழ்வினுள் ஈர்த்திடுவதென்ற பாட்டாளி வர்க்க முன்னணிப் படைக்குரிய அந்தப் பணியைக் கண்டு அஞ்சுவதாகவே இதற்கு அர்த்தம். ஆனல் குறுகிய பணித் துறைக்குரிய கண்ணேட்டமோ, தேர்ச்சித் துறைக்கும் தொழிற்சங்கவாதத்துக்குமான தப்பெண்ணங்களோ கொண்ட எந்தவொரு தொழிலாளியும் இல்லாத ஒரு காலம் வரும் வரை பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைச் சாதிக்காமல் ஒத்திப் போடுவதானது இன்னும் கடுமையான தவறுகிவிடும். பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை வெற்றிகரமாய் ஆட்சியதிகாரம் ஏற்பதற்கும், ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் போதும் பிற்பாடும் தொழிலாளி வர்க்கத்தையும் பாட்டாளி வர்க்கமல்லாத பிற உழைப்பாளி வெகுஜனங்களையும் சேர்ந்த போதிய அளவுக்கு விரிவான பகுதியோரின் ஆதரவைப் போதிய அளவு பெறுவதற்கும், அதன் பின் மேலும் மேலும் விரிவான உழைப்பாளி மக்கள் திரளினருக்குப் போதமளித்தும் பயிற்றுவித்தும் அவர்களை ஈர்த்துக் கொண்டும் தனது மேலாதிக்கத்தைப் பாதுகாத்து, உறுதியாக்கி, விரிவுபடுத்திக் கொள்வதற்கும் முடியும்படியான நிலைமைகளையும் தருணத்தையும் பிழையின்றிக் கணக்கிட்டு நிர்ணயிப்பதில்தான் அரசியலின் கலையும் (கம்யூனிஸ்டு தனக்குள்ள கடமைகளைச் சரிவர புரிந்து கொள்வதும்) அடங்கியுள்ளன.

அது மட்டுமல்ல. ருஷ்யாவைக் காட்டிலும் அதிக அளவு முன்னேறிய நாடுகளில், தொழிற்சங்கங்களின் ஒருவகைப் பிற்போக்குத் தனம் எங்களுடைய நாட்டை விட மிகவும் கூடுதலான அளவில் வெளிப்பட்டிருக்கிறது, வெளிப்பட்டே

ஆக வேண்டியிருந்தது. தொழிற்சங்கங்களின் குறுகிய தேர்ச்சித் துறை மனப்பான்மை, பணித் துறைத் தன்னலம், சந்தர்ப்பவாதம் ஆகியவை காரணமாய், எங்களது மென்ஷிவிக்குகள் தொழிற்சங்கங்களில் ஆதரவு பெற்றனர் (ஒரு சிலவற்றில் இன்னுங்கூட ஓரளவு ஆதரவு பெற்று வருகிறுர்கள்.) மேலைய நாடுகளின் மென்ஷிவிக்குகள் தொழிற்சங்கங்களில் மேலும் உறுதியான அடிப்படையைப் பெற்றிருக்கிறுர்கள். எங்கள் நாட்டில் இருந்ததை விட அங்குப் பணித் துறைக் கண்ணேட்டமும் குறுகிய மனப்பான்மையும் தன்னலம்மிக்க, தடிப்பேறிய, பேராசை பிடித்த, ஏகாதிபத்திய மனப்போக்கு கொண்டதும் ஏகாதிபத்தியத்தால் லஞ்சங் கொடுத்துக் கெடுக்கப்பட்டதுமான குட்டிமுதலாளித்துவ ''தொழிலாளர் பிரபுக்குலமானது'' மிகவும் வலுவுள்ள பிரிவாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. இது மறுக்க முடியாததாகும். மேற்கு ஐரோப்பாவில் கோம்பர்ஸ்களுக்கும், ழுவோக்கள், ஹெண்டர்சன்கள், மெர்ஹெயிம்கள், லேகின்கள் முதலாேருக்கும் எதிரான போராட்டம், முற்றிலும் ஒருபடித்தான சமூக, அரசியல் ரகத்தவரான எங்களது மென்ஷிவிக்குகளுக்கு எதிரான போராட்டத்தை விட மிகக் கடுமையானதாகும். இந்தப் போராட்டம் தயவு தாட்சண்யமின்றி நடத்தப்பட்டாக வேண்டும். நாங்கள் செய்தது போலவே, சந்தர்ப்பவாதத்தின், சமூக-தேசியவெறியின் கடைந்தெடுத்த தலைவர்கள் பூரணமாக முகமூடி கிழிக்கப்பட்டுத் தொழிற்சங்கங்களிலிருந்து விரட்டப்படும் நிலைக்கு இந்தப் போராட்டம் நடத்திச் செல்லப்பட்டாக வேண்டும். போராட்டம் குறிப்பிட்ட கட்டத்தை வந்தடைவதற்கு முன்னுல் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது (கைப்பற்றுவதற்கான முயற்சியும் செய்யப்படலாகாது). இந்தக் ''குறிப்பிட்ட கட்டம்'' வெவ்வேறு நாடுகளிலும், வெவ்வேறு நிலைமைகளிலும் வெவ்வேறுனதாய் இருக்கும். அந்தந்த நாட்டிலுள்ள சிந்தனை மிகுந்த, அனுபவம் வாய்ந்த, அறிவு சார்ந்த பாட்டாளி வர்க்க அரசியல் தலைவர்களால் மட்டுமே இதனைச் சரியாகக் கணக்கிட்டு நிர்ணயிக்க முடியும். (ருஷ்யாவில் 1917 அக்டோபர் 25 பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குச் சில நாட்களுக்குப் பிற்பாடு 1917 நவம்பரில் அரசியல்

நிர்ணயச் சபைக்கு நடைபெற்ற தேர்தல்கள் இந்தப் போராட்டம் கண்ட வெற்றிக்கு ஓர் உரைகல்லாக அமைந்தன. இத்தேர்தல்களில் மென்ஷிவிக்குகள் அடியோடு தோற்கடிக்கப்பட்டனர். அவர்களுக்குக் கிடைத்தது 7,00,000 வாக்குகள்தான்—டிரான்ஸ்காக்கஸசின் வாக்குகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டால் 14,00,000 வாக்குகள்தான்; ஆனல் போல்ஷிவிக்குகளுக்குக் கிடைத்ததோ 90,00,000 வாக்குகள். கம்யூனிஸ்டு அகிலம்,[55] இதழ்கள் 7 மற்றும் 8ல் ''அரசியல் நிர்ணயச் சபைத் தேர்தல்களும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும்'' என்னும் எனது கட்டுரையைப் பார்க்கவும்.)

தொழிலாளர் வெகுஜனத் திரளினரது பெயரில்தான், அவர்களை நம் பக்கத்துக்கு ஈர்த்துக் கொள்ளும் பொருட்டுதான், நாம் ''தொழிலாளர் பிரபுக்குலத்தை'' எதிர்த்துப் போராடுகிறோம். தொழிலாளி வர்க்கத்தை நம் பக்கத்துக்கு ஈர்த்துக் கொள்ளும் பொருட்டுதான் நாம் சந்தர்ப்பவாத, சமூக-தேசியவெறித் தலைவர்களை எதிர்த்துப் போராடுகிறோம். மிகவும் சர்வசாதாரணமான, கண்கூடான இந்த உண்மையை மறப்பது மடமையே ஆகும். ஆயினும் தொழிற்சங்க உச்சத் தலைவர்கள் பிற்போக்கு, எதிர்ப்புரட்சித் தன்மை கொண்டோராய் இருப்பதைக் காரணமாகக் காட்டி, தொழிற்சங்கங்களைத் துறந்துவிட்டு நாம் வெளியே வந்துவிட வேண்டும், அவற்றில் வேலை செய்ய மறுக்க வேண்டும், தொழிலாளர்களுடைய நிறுவன ஒழுங்கமைப்புக்கான செயற்கையான புதிய வடிவங்களைத் தோற்றுவிக்க வேண்டும் என்னும் முடிவுக்கு வருகையில் ஜெர்மன் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள் இதே மடமையைத்தான் வெளிப்படுத்துகிறார்கள்!! கம்யூனிஸ்டுகள் முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஆற்றக்கூடிய மிகப் பெருஞ் சேவையாகிவிடும் அளவுக்கு இது மன்னிக்க முடியாத மடமையாகும். ஏனெனில், சந்தர்ப்பவாத, சமூக-தேசியவெறி கொண்ட, காவுத்ஸ்கிவாதத் தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லோரையும் போலவே, எங்களது மென்ஷிவிக்குகளும் ''தொழிலாளி வர்க்க இயக்கத்திலுள்ள முதலாளித்துவ வர்க்கக் கைக்கூலிகளே''

யன்றி வேறல்லர் (மென்ஷிவிக்குகளைப் பற்றி எப்பொழுதுமே நாங்கள் இவ்வாறுதான் கூறி வந்திருக்கிறோம்), அல்லது அமெரிக்காவில் டேனியல் தெ லியோனைப் பின்பற்றுவோரின் அற்புதமான, நூற்றுக்கு நூறு உண்மையான தொடரில் சொல்வதெனில் ''முதலாளித்துவ வர்க்கத்தின் தொழிலாளர் துறை சேவகர்களே'' [labour lieutenants of the capitalist class] அன்றி வேறல்லர். பிற்போக்குத் தொழிற்சங்கங்களில் வேலை செய்ய மறுப்பதானது, தொழிலாளர்களில் போதிய அளவுக்கு வளர்ச்சி பெறாத அல்லது பிற்பட்ட பகுதியோரைப் பிற்போக்கு தலைவர்கள் அல்லது முதலாளித்துவ வர்க்கக் கைக்கூலிகள் அல்லது தொழிலாளர் பிரபுக்குலத்தோர் அல்லது ''முற்றிலும் முதலாளித்துவமயமாகிவிட்ட தொழிலாளர்கள்'' (பிரிட்டிஷ் தொழிலாளர்கள் குறித்து 1858ல் மார்க்சுக்கு எங்கெல்ஸ் எழுதிய கடிதத்தைப் பார்க்கவும்[56]) செல்வாக்கிலே விட்டு வைப்பதையே குறிக்கிறது.

கம்யூனிஸ்டுகள் பிற்போக்குத் தொழிற்சங்கங்களில் வேலை செய்யக் கூடாதென்னும் இந்த நகைக்கத்தக்கத் ''தத்துவம்'', ''வெகுஜனங்களை'' வயப்படுத்தும் பிரச்சினையை ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள் எவ்வளவு துச்சமாய் மதிக்கிறார்கள் என்பதையும், ''வெகுஜனங்களைப்'' பற்றிய கூப்பாட்டை எப்படி துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதையும் மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. ''வெகுஜனங்களுக்கு'' உதவி செய்வதற்கும், ''வெகுஜனங்களின்'' நம்பிக்கையையும் ஆதரவையும் அனுதாபத்தையும் பெறுவதற்கும் தெரிந்து கொள்ள விரும்புவீர்களானால், நீங்கள் இன்னல்களையும் இந்தத் ''தலைவர்களால்'' ஏற்படும் தொல்லைகளையும் புரட்டுகளையும் அடக்குமுறையையும் கண்டு அஞ்சாமல் (சந்தர்ப்பவாதிகளும் சமூக-தேசியவெறியர்களுமான இவர்கள் மிகப் பெருவாரியான சந்தர்ப்பங்களில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ முதலாளித்துவ வர்க்கத்துடனும் போலீசுடனும் இணைப்பு கொண்டவர்களாவர்), நிச்சயம் வெகுஜனங்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் வேலை செய்தாக வேண்டும். பாட்டாளி வர்க்க அல்லது அரைவாசிப் பாட்டாளி வர்க்க வெகுஜனங்கள் காணப்படும் நிலையங்

களிலும் கழகங்களிலும் சங்கங்களிலும்—மிகவும் பிற்போக் கானவற்றிலுங்கூட— கிளர்ச்சியும் பிரசாரமும் முறையாக வும் விடாமுயற்சியோடும் இடையருமலும் பொறுமையோ டும் செய்யும் பொருட்டு, நீங்கள் எந்தத் தியாகம் புரியவும், மிகப் பெரிய இடையூறுகளைச் சமாளிக்கவும் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். தொழிற்சங்கங்களும் தொழிலாளர் கூட்டுறவுகளும்தான் (பின்னவை சிற்சில சந்தர்ப்பங்களிலே னும்) வெகுஜனங்கள் இருக்கக் கூடிய நிறுவனங்கள். ஸ்வீடிஷ் பத்திரிகை *Folkets Dagblad Politiken*[57]இல் (1920 மார்ச் 10 இதழில்) எடுத்துரைக்கப்பட்டிருக்கும் புள்ளி களின்படி பிரிட்டனில் தொழிற்சங்க உறுப்பினர் தொகை 1917 இறுதிக்கும் 1918 இறுதிக்கும் இடையில் 55,00,000 லிருந்து 66,00,000 ஆக அதிகரித்தது; அதாவது, 19 சதவீத மான பெருக்கமாகும் இது. 1919 முடிவின் வாக்கில் உறுப் பினர் தொகை 75,00,000 ஆக மதிப்பிடப்பட்டது. பிரான் சுக்கும் ஜெர்மனிக்குமான இந்தப் புள்ளிகள் என்னிடம் இல்லை என்ருலும், சிறிதும் மறுக்க முடியாத பொதுவாகத் தெரிந்த உண்மைகள், இந்நாடுகளிலும் தொழிற்சங்க உறுப் பினர் தொகை மிக வேகமாய் உயர்ந்திருப்பதை நிரூபிக் கின்றன.

இவ்வுண்மைகள், ஆயிரக்கணக்கான வேறு பல அறிகுறி களால் ஊர்ஜிதம் செய்யப்படும் ஒன்றை—அதாவது பாட் டாளி வர்க்க வெகுஜனங்களிடையே, ''அடித்தட்டுப்'' பகுதி யோரிடையே, பிற்பட்ட பிரிவினரிடையே வர்க்க உணர்வும் நிறுவன ஒழுங்கமைப்பு வேண்டுமென்ற அவாவும் பெருகி வருகின்றன என்பதை — தெட்டத்தெளிவாக்குகின்றன. பிரிட்டனிலும் பிரான்சிலும் ஜெர்மனியிலும் லட்சோப லட்சத் தொழிலாளர்கள், நிறுவன ஒழுங்கமைப்பு அறவே இல்லாத ஒரு நிலையிலிருந்து ஆரம்பப்படியான, அடிநிலையான, மிக எளிய, (இன்னமும் முதலாளித்துவ-ஜனநாயகத் தப் பெண்ணங்களில் மூழ்கியுள்ளோர்) மிகச் சுலபமாய்ப் புரிந்து கொள்ளக் கூடிய நிறுவன வடிவத்துக்கு, அதாவது தொழிற் சங்கங்களுக்கு முதன்முதலாய் மாறி வந்து கொண்டிருக்கிருர் கள். இந்நிலையிலும் புரட்சிகரமான, ஆனுல் யோசனை இல்

லாத இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் தொழிற்சங்கங்களில் வேலை செய்ய மறுத்துவிட்டு விலகி நின்று ''வெகு ஜனங்கள்'', ''வெகுஜனங்கள்!'' என்று கத்துகிருர்கள்; தொழிற்சங்கங்கள் ''பிற்போக்கானவை'' என்பதாக இதற்கு அவர்கள் காரணம் கூறுகிருர்கள்; முதலாளித்துவ-ஜனநாயகத் தப்பெண்ணங்களால் மாசுபடுத்தப்படாத, தேர்ச்சித் துறை அல்லது குறுகிய பணித் துறை மனப்பாங்கினருக்குரிய குற்றங் குறைகளால் களங்கப்படுத்தப்படாத, புத்தம் புதிய, அப்பழுக்கற்ற ''தொழிலாளர் சங்கத்தைக்'' கற்பனை செய்து கண்டுபிடிக்கிருர்கள்—இந்தச் சங்கம் பரந்து விரிந்த ஒரு நிறுவனமாக இருக்கும்(!) என்று சாதிக்கிருர்கள்; ''சோவியத் அமைப்பையும் சர்வாதிகாரத்தையும் ஏற்றுக் கொள்வது தான்'' உறுப்பினராவதற்குரிய ஒரேயொரு (!) நிபந்தனையாக இருக்கும் (மேலே கொடுக்கப்பட்ட மேற்கோளைப் பார்க்கவும்).

இதைவிட முட்டாள்தனமான ஒன்றை, ''இடதுசாரிப்'' புரட்சியாளர்களால் புரட்சிக்கு ஏற்படும் கேட்டை விட பெரிய ஒன்றைக் கற்பனை செய்வதுகூட கடினம்! ஏன், ருஷ்யாவின், அன்டான்டின் முதலாளித்துவ வர்க்கத்தின் மீது முன்பின் கண்டிராத வெற்றிகளை இரண்டரை ஆண்டுகளாய்ப் பெற்ற பின்னரும் இன்று, ருஷ்யாவில் நாங்கள் ''சர்வாதிகாரத்தை ஏற்பதை'' தொழிற்சங்க உறுப்பினராவதற்குரிய ஒரு நிபந்தனையாக்குவோமாயின், முழு முட்டாளுக்குரிய செயல் புரிவோரே ஆவோம்; வெகுஜனங்களிடையே எங்களுக்குள்ள செல்வாக்குக்குத் தீங்கிழைத்து மென்ஷிவிக்குகளுக்கு உதவி புரிவோரே ஆவோம். ஏனெனில், கம்யூனிஸ்டுகள் முன்னுள்ள பணி பிற்பட்ட பகுதியோரின் நம்பிக்கையைப் பெறுவதும், அவர்களுக்கிடையே வேலை செய்வதுமேயன்றி, செயற்கைத் தன்மை வாய்ந்த சிறுபிள்ளைத்தனமான ''இடதுசாரிக்'' கோஷங்களைக் கொண்டு அவர்களிடமிருந்து தம்மைப் பிரித்து விலக்கி வேலி கட்டிக்கொள்வதல்ல.

''கோட்பாடு வழிப்பட்ட'' ஜெர்மன் எதிர்த்தரப்பினரைப் போல (இத்தகைய ''கோட்பாடு வழிபாட்டிலிருந்து'' கடவுள் நம்மைக் காப்பாற்றுவாராக!), அல்லது அமெரிக்க

''உலக ஆலைத் தொழிலாளர்'' நிறுவனத்தின்[58] புரட்சியாளர்கள் சிலரைப் போல, பிற்போக்குத் தொழிற்சங்கங்களை விட்டு வெளியேற வேண்டுமென்று வாதாடி இவற்றில் வேலை செய்ய மறுக்கும் அந்த ''இடதுசாரிப்'' புரட்சியாளர்களுக்கு கோம்பர்ஸ்களும் ஹெண்டர்சன்களும் ழுவோக்களும் லேகின்களும் மிகுந்த நன்றி செலுத்துகிறார்கள் என்பதில் ஐயப்பாட்டுக்கு இடமில்லை. சந்தர்ப்பவாதத்தின் ''தலைவர்களான'' இந்த ஆட்கள், கம்யூனிஸ்டுகளைத் தொழிற்சங்கங்களில் நுழையவிடாமல் தடுப்பதற்கும், எல்லா வழிகளிலும் இவற்றிலிருந்து அவர்களை விலக்கி வெளியே தள்ளுவதற்கும், தொழிற்சங்கங்களில் அவர்களுடைய பணியை எவ்வளவு சங்கடமாக்க முடியுமோ அவ்வளவும் செய்வதற்கும், அவர்களை அவமானப்படுத்துவதற்கும், வேட்டையாடுவதற்கும், அடக்கு முறைக்கு உள்ளாக்குவதற்கும் முதலாளித்துவ சூழ்ச்சிகளின் ஒவ்வொரு உபாயத்தையும் கையாளுவார்கள், முதலாளித்துவ அரசாங்கங்கள், பாதிரிமார்கள், போலீசார், நீதி மன்றத்தார் ஆகிய அனைவரது உதவியையும் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவற்றுக்கு எல்லாம் சளைக்காமல் நாம் எதிர்த்து நிற்கும் திறனுடையோராய் இருக்க வேண்டும்; எந்தத் தியாகமும் புரிய சித்தமாயிருக்க வேண்டும்; தேவை ஏற்பட்டால், பல்வேறு தந்திரங்களையும் உபாயங்களையும் சட்டவிரோத முறைகளையும் கையாளுவதற்குங்கூட, உண்மையைச் சொல்லாமலும், மறைத்தும் சமாளிப்பதற்குங்கூட தயாராயிருக்க வேண்டும் —எப்பாடு பட்டாகிலும் தொழிற்சங்கங்களில் புகுந்து, தொடர்ந்து அவற்றில் இருந்து, கம்யூனிஸ்டுப் பணியை அவற்றினுள்ளிருந்து நடத்திச் சென்றாக வேண்டும். ஜாரிசத்தில் 1905 வரையில், எங்களுக்குச் ''சட்டபூர்வமான வாய்ப்புகள்'' எவையும் இருக்கவில்லை. ஆயினும் இரகசியப் போலீசின் அதிகாரியான ஸுபாத்தவ் புரட்சியாளர்களைக் கண்ணி வைத்துப் பிடிக்கும் பொருட்டும், அவர்களை எதிர்த்துச் செயல்படும் பொருட்டும் கறுப்பு நூற்றுவர் தொழிலாளர் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்த போதும், தொழிலாளர்களின் கழகங்களை நிறுவிய போதும் நமது கட்சி உறுப்பினர்

களை நாங்கள் இந்தக் கூட்டங்களுக்கு, இந்தக் கழகங்களினுள்ளும் அனுப்பினோம் (இவர்களில் ஒருவரான செயின்ட் பீட்டர்ஸ்பர்கின் சிறந்த தொழிலாளர் தோழர் பாபுஷ்கின் என் நினைவில் இருக்கிறார்; ஜாரின் ஜெனரல்களது உத்தரவின் பேரில் இவர் *1906*ல் சுட்டுக் கொல்லப்பட்டார்). இவர்கள் வெகுஜனங்களுடன் தொடர்புகள் நிறுவிக் கொண்டனர்; இவர்களால் தமது கிளர்ச்சியை நடத்திச் செல்ல முடிந்தது; ஸுபாத்தவ்வாதத்தின்* செல்வாக்கிலிருந்து தொழிலாளர்களை விடுவிப்பதில் இவர்கள் வெற்றி பெற்றனர். ஆனால் ஆழமாக வேர்விட்டிருக்கும் சட்டவாத, அரசியலமைப்புச் சட்டபூர்வ, முதலாளித்துவ-ஜனநாயகத் தப்பெண்ணங்களில் மூழ்கிக் கிடக்கும் மேற்கு ஐரோப்பாவில் இதனைச் சாதிப்பது மிகவும் கடினமென்பது உண்மையே. ஆயினும் இதனைச் செய்ய முடியும், செய்தே ஆக வேண்டும்—அதுவும் முறையாகவும் தொடர்ச்சியாகவும் செய்தாக வேண்டும்.

என்னுடைய கருத்துப்படி, மூன்றாவது அகிலத்தின் செயற் குழு, பிற்போக்குத் தொழிற்சங்கங்களில் வேலை செய்ய மறுப்பதானது, எப்படி விவேகமற்றது என்பதையும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இலட்சியத்துக்கு இதனால் ஏற்படும் பெருங் கேட்டையும் விவரமாக விளக்கிக் கூறிப் பொதுவாக இக்கொள்கையையும், குறிப்பாக இந்தத் தவறான கொள்கையை ஆதரித்துள்ள—நேரடியாகவா அல்லது மறைமுகமாகவா, பகிரங்கமாகவா அல்லது இரகசியமாகவா, முழுமையாகவா அல்லது பகுதியாகவா என்பது குறித்துக் கருதத் தேவையில்லை—ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலரது செயல்முறையையும் திட்ட

---

* கோம்பர்ஸ்களும் ஹெண்டர்சன்களும் ஜூவோக்களும் லேகின்களும் ஸுபாத்தவ்களேயன்றி வேறல்லர்; அவர்களது ஐரோப்பிய ஜோடனையிலும், மெருகிலும், கேடு கெட்ட கொள்கையைச் செயல்படுத்துவதில் அவர்கள் அனுசரிக்கும் நாகரிகமான, பண்பட்ட, ஜனநாயகப் பாணியில் அமைந்த சாமர்த்திய முறையிலும்தான் எங்களது ஸுபாத்தவிடமிருந்து வித்தியாசப்படுகிறார்கள்.

வட்டமாகக் கண்டனம் செய்வதுடன், கம்யூனிஸ்டு அகிலத்தின் அடுத்த காங்கிரசையும் இவற்றைக் கண்டனம் செய்யுமாறு அறைகூவல் விடுக்க வேண்டும். மூன்ருவது அகிலம் இரண்டாம் அகிலத்தின் போர்த்தந்திரத்திலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு விட வேண்டும். சங்கடமான விவகாரங்களை அது தட்டிக் கழிக்கவோ, குறைத்துக் கூறி மெழுகவோ கூடாது; அதற்குப் பதில் அவற்றை நேர்முகமான முறையில் எடுத்துரைத்தாக வேண்டும். ''சுயேச்சையாளர்களை'' (ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி) பொறுத்தவரை சுற்றி வளைக்காமல் முழு உண்மையும் நேருக்குநேர் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது; இதே போல ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள் குறித்தும் சுற்றி வளைக்காமல் முழு உண்மையும் நேருக்குநேர் எடுத்துரைக்கப்பட்டாக வேண்டும்.

7

முதலாளித்துவ நாடாளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொள்ளலாமா?

மகா அலட்சியமாய், கிஞ்சிற்றும் பொறுப்புணர்வின்றி, ஜெர்மன் ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள் இக்கேள்விக்கு எதிர்மறையில் பதிலளிக்கிருர்கள். அவர்களுடைய வாதங்கள் யாவை? மேலே எடுத்துரைக்கப்பட்ட மேற்கோளில் பார்த்தோம்:

''....வரலாற்று வழியிலும் அரசியல் வழியிலும் காலாவதியாகிவிட்ட நாடாளுமன்றப் போராட்ட வடிவங்களுக்குச் சரிந்து செல்லும் எவ்வகையான பின்னடைவையும்... தீர்மானமாய் நிராகரித்தே ஆக வேண்டும்....''

நகைக்கத்தக்க ஆடம்பரத்துடன் இது கூறப்படுகிறது. கண்கூடாகவே தவருனது இது. நாடாளுமன்ற முறைக்குச் ''சரியும் பின்னடைவு'' என்கிருர்கள்! ஜெர்மனியில் ஏற்கெனவே சோவியத் குடியரசு ஒன்று உதித்துவிட்டதா, என்ன? அப்படி ஒன்றும் தெரியவில்லையே! ''சரியும் பின்

னடைவு'' என்பதாகப் பேசுகிறார்களே, எப்படி அது? பொருளற்ற சொல்லடுக்கேயன்றி வேறு என்ன?

நாடாளுமன்ற முறை ''வரலாற்று வழியில் காலாவதியாகி விட்ட'' ஒன்றுதான். பிரசார அர்த்தத்தில் இது மெய்தான். ஆனால் நடைமுறையில் அதனை வெற்றி கொள்ளும் நிலையை வந்தடைய இன்னும் நெடுந்தொலைவுள்ளதென்பது யாவரும் அறிந்ததே. முதலாளித்துவத்தையும் ''வரலாற்று வழியில் காலாவதியாகிவிட்ட'' ஒன்றாக மிகப் பல பத்தாண்டுகளுக்கு முன்பே, முழு நியாயத்துடன் அறிவித்திருக்கலாம். ஆயினும் அது, முதலாளித்துவத்தின் அடிப்படை மீது மிக நீண்ட, மிகவும் விடாப்பிடியான ஒரு போராட்டத்துக்கான அவசியத்தை நீக்கி விடவில்லையே. நாடாளுமன்ற முறை உலக வரலாற்றின் கண்ணோட்டத்தில் ''வரலாற்று வழியில் காலாவதியானதுதான்''; அதாவது முதலாளித்துவ நாடாளுமன்ற முறையின் சகாப்தம் முடிவுற்று விட்டதும், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் சகாப்தம் தொடங்கி விட்டதும் மெய்தான். இது மறுக்க முடியாததே. ஆனால் உலக வரலாறு பல பத்தாண்டுக் கணக்கில் அளக்கப்படும் ஒன்று. உலக வரலாற்றின் அளவுகோலைக் கொண்டு அளக்கையில், பத்து அல்லது இருபது ஆண்டுகள் முன்னதாகவோ பின்னதாகவோ கொள்வதால், மாறுபாடு ஏற்பட்டு விடுவதில்லை. உலக வரலாற்றின் கண்ணோட்டத்தில் இது உத்தேசமாகக்கூட மதிப்பிட முடியாத ஓர் அற்ப விவகாரம். ஆனால் உலக வரலாற்றின் இந்த அளவுகோலை அன்றாட நடைமுறை அரசியலில் பிரயோகிப்பது அப்பட்டமான தத்துவார்த்தப் பிழையாகி விடுமே.

நாடாளுமன்ற முறை ''அரசியல் வழியில் காலாவதியாகி விட்டதா?'' இது முற்றிலும் வேறொரு விவகாரம். இது உண்மையானால், ''இடதுசாரிகளின்'' நிலை வலுமிக்கதுதான். ஆனால் துருவிப் பரிசீலிக்கும் பகுத்தாய்வினால் நிரூபிக்கப்பட வேண்டிய ஒன்று இது. ஆனால் ''இடதுசாரிகளுக்கு'' இந்த விவகாரத்தை எப்படி அணுகுவது என்பது கூட தெரியவில்லை. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆம்ஸ்டர்டாமிலுள்ள இடைக் காலப் பியூரோவின் செய்தி வெளியீடு (*Bulletin*

of the Provisional Bureau in Amsterdam of the Communist International, February 1920), இதழ் 1ல் வெளிவந்த ''நாடாளுமன்ற முறை பற்றிய ஆய்வுரைகள்'' டச்சு-இடதுசாரி, அல்லது இடதுசாரி-டச்சு முயற்சிகளை வெளியிடுகிறது என்பது தெளிவு—இதிலுள்ள பகுத்தாய்வும், அடியில் நாம் காணப் போவது போல, படுமட்டமாகவே இருக்கிறது.

முதலாவதாக, ரோசா லுக்சம்பூர்க், கார்ல் லீப்க்னெஹ்ட் போன்ற சிறந்த அரசியல் தலைவர்களின் கருத்துக்கு விரோதமாய் ஜெர்மன் ''இடதுசாரிகள்'', நாடாளுமன்ற முறை ''அரசியல் காலாவதியாகிவிட்டது'' என்று 1919 ஜனவரியிலேயே கருதியது நமக்குத் தெரிந்ததே.[59] ''இடதுசாரிகளின்'' இந்தக் கருத்து தவறானது என்பதும் நாம் அறிந்ததே. நாடாளுமன்ற முறை ''அரசியல் வழியில் காலாவதியாகி விட்டது'' என்னும் நிர்ணயிப்பை ஒரே அடியில் ஒழித்திட இந்த ஓர் உண்மையே போதும். அக்காலத்தில் சர்ச்சைக்கு இடமில்லாததாய் இருந்த அவர்களது தவறு, இனி தவறல்ல என்றானது எப்படி என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இந்த ''இடதுசாரிகளுடையது'' ஆகும். இதை நிரூபிக்க அவர்கள் துளிக்கூட சான்று அளிக்கவில்லை, அளிக்கவும் முடியாது. ஓர் அரசியல் கட்சி தன்னுடைய தவறுகள் குறித்து அனுசரிக்கும் போக்கு, அக்கட்சி எந்த அளவுக்குப் பொறுப்புணர்ச்சி கொண்டுள்ளது என்பதையும், அதன் வர்க்கத்துக்கும் உழைப்பாளி வெகுஜனங்களுக்கும் அதற்குள்ள கடமைகளை நடைமுறையில் எந்த அளவுக்கு அது நிறைவேற்றுகிறது என்பதையும் மதிப்பிட்டு முடிவு செய்வதற்கான மிக முக்கியமான, நம்பகமான வழிகளில் ஒன்றாகும். தவறை ஒளிவுமறைவின்றி ஒப்புக் கொள்ளுதல், அத்தவறுக்குரிய காரணங்களை நிச்சயித்துக் கொள்ளுதல், அதனை நோக்கி இட்டுச் சென்ற நிலைமைகளைப் பகுத்தாய்தல், இதைச் சரிசெய்வதற்குரிய வழிகளை ஆராய்ந்தறிந்து வகுத்துக் கொள்ளுதல்—இவையே பொறுப்புணர்ச்சி கொண்ட ஒரு கட்சிக்குரிய அடையாளம்; இவ்வாறுதான் அது தனது கடமைகளைச் செய்து முடிக்க வேண்டும்; இவ்வாறுதான் அது தனது வர்க்கத்துக்கும்

பிறகு வெகுஜனங்களுக்கும் போதமளித்துப் பயிற்றுவிக்க வேண்டும். ஜெர்மனியிலும் (ஹாலந்திலும்) உள்ள ''இடதுசாரிகள்'' இந்தக் கடமையை நிறைவேற்றவும், கண் கூடான தமது தவறை ஆராய்வதில் முக்கிய கருத்தும் கவனமும் எச்சரிக்கையும் செலுத்தவும் தவறியதன் மூலம், தாம் ஒரு சிறு குழுவே அன்றி ஒரு **வர்க்கத்தின்** கட்சி அல்ல என்பதையும், அறிவுத்துறையினரையும் அறிவுத்துறை வாதத்தின் மோசமான இயல்புகளைக் காப்பியடிக்கும் ஒருசில தொழிலாளர்களையும் கொண்ட சிறு குழுவேயன்றி **வெகுஜனங்களது** கட்சி அல்ல என்பதையும் நிரூபித்துக் கொண்டு விட்டனர்.

இரண்டாவதாக, ஏற்கெனவே நாம் விவரமாய் மேற்கோள் கூறிய ஃபிராங்ஃபுர்ட் ''இடதுசாரிக்'' குழுவின் அதே பிரசுரத்தில் நாம் படிப்பதாவது:

''....இன்னும் மையத்தின் கொள்கையைப்'' (கத்தோலிக்க ''மையக்'' கட்சி) ''பின்பற்றும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் எதிர்ப்புரட்சித்தன்மை வாய்ந்தோரே ஆவர். கிராமப் பாட்டாளி வர்க்கத்தினர் எண்ணற்ற எதிர்ப் புரட்சித் துருப்புக்களாகி விடுகின்றனர்'' (மேலே கூறிய பிரசுரத்தின் **3**ஆம் பக்கம்).

இந்த முடிவு வரையறையற்றதாகவும் மிகைப்படக் கூறுவதாகவும் உள்ளதென்பதை யாவும் புலப்படுத்துகின்றன. ஆனால் இங்கு எடுத்துரைக்கப்படும் அடிப்படை உண்மை மறுக்க முடியாததாகும். இதனை ''இடதுசாரிகள்'' ஏற்றுக் கொள்வதானது அவர்களுடைய தவறுக்குரிய தெளிவான சான்றாகி விடுகிறது. பாட்டாளி வர்க்கத்தினரில் ''லட்சக் கணக்கானோரும்'' ''எண்ணற்றோரும்'' இன்னமும் பொதுவாக நாடாளுமன்ற முறையை ஆதரிப்பதோடன்றி, அப்பட்டமான ''எதிர்ப்புரட்சித்தன்மை வாய்ந்தோராகவும்'' இருக்கையில், ''நாடாளுமன்ற முறை அரசியல் வழியில் காலாவதியாகிவிட்டதென்று'' கூறுவது எப்படி!? ஜெர்மனியில் நாடாளுமன்ற முறை இன்னமும் அரசியல் வழியில் காலாவதி ஆகிவிடவில்லை என்பது தெளிவு. ஜெர்மனியிலுள்ள ''இடதுசாரிகள்'' தமது விருப்பத்தை, தமது அரசியல்-சித்தாந்தப்

போக்கை எதார்த்த உண்மையாகத் தவருய் நினைத்துக் கொண்டு விட்டனர் என்பது விளங்குகிறது. புரட்சியாளர்கள் செய்யக் கூடிய மிகவும் அபாயகரமான தவருகும் இது. ருஷ்யாவில் மிகவும் நீண்ட நெடுங்காலத்துக்கு மிகப் பல்வேறு வடிவங்களில் ஜாரிசத்தின் மிகக் கொடிய காட்டு மிராண்டித்தனமான ஒடுக்குமுறையானது பல்வேறு வகைப் பட்ட புரட்சியாளர்களையும் தோற்றுவித்தது. இப்புரட்சியாளர்கள் வியத்தகு பற்றுறுதியும் ஆர்வமும் வீரமும் நெஞ்சுறுதியும் வெளிப்படுத்தினர். ருஷ்யாவில் நாங்கள் புரட்சியாளர்களுடைய இந்தத் தவறை மிகவும் அருகாமையிலிருந்து கவனித்திருக்கிருேம். மிக உன்னிப்பாய் இதனை நாங்கள் ஆராய்ந்து, இதைப் பற்றி நேரடியாகத் தெரிந்து வைத்திருக்கிருேம். எனவேதான், ஏனையோரிடத்தும் இது எழும் போது எங்களால் மிகத் தெளிவாய் இதனைப் பார்க்க முடிகிறது. ஜெர்மனியிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கு நாடாளுமன்ற முறை ''அரசியல் வழியில் காலாவதியானதுதான்.'' ஆனால் —இதுவே இங்குள்ள முக்கிய விஷயம்—நமக்குக் காலாவதியாகிவிட்டதால் அது வர்க்கத்துக்கும், வெகுஜனங்களுக்கும் காலாவதியாகிவிட்டதாகும் எனக் கருதக் கூடாது. ''இடதுசாரிகளுக்கு'' ஒரு வர்க்கத்தின் கட்சியாக, வெகுஜனங்களின் கட்சியாகச் சிந்தனை செய்யத் தெரியவில்லை, அவ்வாறு செயல்படத் தெரியவில்லை என்பதையே திரும்பவும் இங்கு காண்கிருேம். வெகுஜனங்களுடைய நிலைக்கும் வர்க்கத்தின் பிற்பட்ட பகுதியின் நிலைக்கும் நீங்கள் சரிந்துவிடக் கூடாது. அதில் சர்ச்சைக்கு இடமில்லை. அவர்களுக்குக் கசப்பான உண்மையைச் சொல்லத்தான் வேண்டும். அவர்களுடைய முதலாளித்துவ-ஜனநாயக, நாடாளுமன்றவாதத் தப்பெண்ணங்களை, அவை தப்பெண்ணங்கள் என்று சுட்டிக் காட்ட வேண்டியதுதான் உங்களுடைய கடமை. ஆனால் அதேபோதில் (வர்க்கத்தின் கம்யூனிஸ்டு முன்னணிப் படை மட்டுமின்றி) வர்க்கம் அனைத்தின், (உழைப்பாளி மக்களின் முன்னேறிய பகுதியோர் மட்டுமின்றி) உழைப்பாளி மக்கள் திரளினர் அனைவரின் வர்க்க உணர்வு, தயார் நிலை இவற்றின் எதார்த்த

நிலவரத்தை நீங்கள் நிதானமாய்க் கவனித்து மதிப்பிட்டாக வேண்டும்.

ஆலைத் தொழிலாளர்களில் ''லட்சக்கணக்கானோரும்'', ''எண்ணற்றோரும்'' வேண்டாம், ஓரளவு பெரிதான சிறுபான்மையினர் மட்டும்தான் கத்தோலிக்கப் பாதிரிமார்களிடம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றாலுங்கூட—கிராமாந்தரத் தொழிலாளர்களிலும் இதேபோன்ற சிறுபான்மையினர் மட்டும்தான் நிலப்பிரபுக்களையும் பணக்கார விவசாயிகளையும் (Grossbauern) பின்பற்றுகிறார்கள் என்றாலுங்கூட—ஜெர்மனியில் நாடாளுமன்ற முறை அரசியல் வழியில் இன்னமும் காலாவதியாகிவிடவில்லை என்பதையே, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சி அதன் சொந்த வர்க்கத்தின் பிற்பட்ட பகுதியோரைப் போதம் பெறச் செய்யும் பொருட்டும், அடக்கி ஒடுக்கப்படும், வளர்ச்சியில்லாத, அறியாமையில் ஆழ்ந்த கிராமாந்தர வெகுஜனங்களைப் போதம் பெறச் செய்து அறிவொளி தரும் பொருட்டும், நாடாளுமன்றத் தேர்தல்களிலும் நாடாளுமன்ற அரங்கில் நடைபெறும் போராட்டத்திலும் பங்கெடுத்துக் கொள்வது இக்கட்சியின் கடமையாகும் என்பதையே, இது சந்தேகத்துக்கு இடமின்றி குறிப்பிடுகிறது. முதலாளித்துவ நாடாளுமன்றத்தையும் இதர வகையான பிற்போக்கு நிறுவனங்கள் அனைத்தையும் அகற்றிடும் பலம் உங்களிடம் இல்லாத வரை, அவற்றில் நீங்கள் வேலை செய்தே ஆக வேண்டும்; ஏனெனில் பாதிரிமார்களால் ஏமாற்றப்பட்டும், கிராம வாழ்க்கை முறையின் பிற்பட்ட நிலைமைகளால் முடக்கப்பட்டும் வரும் தொழிலாளர்களை இவற்றில்தான் இன்னமும் நீங்கள் காண்பீர்கள். இவ்வாறு வேலை செய்யாவிடில், நீங்கள் வாய்வீச்சடிப் பதைத் தவிர வேறு எதற்கும் உதவாதோராய் மாறிவிடும் அபாயம் ஏற்படும்.

மூன்றாவதாக, ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள் போல்ஷிவிக்குகளாகிய எங்களைப் புகழ்ந்து நிறையவே பேசுகிறார்கள். எங்களைப் புகழ்வதைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு, போல்ஷிவிக்குகளுடைய போர்த்தந்திரத்தை மேலும் நன்கு தெரிந்து கொள்ள முயலுங்கள் என்பதாக அவர்களுக்குச்

சொல்ல வேண்டுமென்று சில நேரங்களில் தோன்றுகிறது. ருஷ்ய முதலாளித்துவ நாடாளுமன்றமான அரசியல் நிர்ணயச் சபையின் தேர்தல்களில், 1917 செப்டம்பர்—நவம்பரில், நாங்கள் பங்கெடுத்துக் கொண்டோம். எங்களுடைய போர்த்தந்திரம் சரியா, தவரு? சரியல்ல என்ருல், இதனைத் தெளிவாக எடுத்துரைத்து நிரூபிக்க வேண்டும். ஏனெனில் சர்வதேசக் கம்யூனிசத்தின் பிழையற்ற போர்த்தந்திரத்தை வகுத்து உருவாக்குவதற்கு இது அவசியமாகும். அது சரியானதே என்ருல், இதிலிருந்து சில முடிவுகளைக் கிரகித்துக் கொண்டாக வேண்டும். ருஷ்யாவின் நிலைமைகளும் மேற்கு ஐரோப்பாவின் நிலைமைகளும் ஒன்றெனக் கொள்ளலாகாது என்பது உண்மையே. ஆனல் ''நாடாளுமன்ற முறை அரசியல் வழியில் காலாவதியாகிவிட்டது'' என்ற நிர்ணயிப்பின் பொருள் பற்றிய இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையைப் பொறுத்தவரை, எங்களுடைய அனுபவத்தைத் தக்கபடி கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும். ஏனெனில் ஸ்தூலமான அனுபவம் கணக்கில் எடுக்கப்பட்டாலொழிய இது போன்ற நிர்ணயிப்புகள் பொருளற்ற வெற்றுச் சொல்லடுக்குகளாக எளிதில் மாறிவிடும். 1917 செப்டம்பர்—நவம்பரில், நாடாளுமன்ற முறை ருஷ்யாவில் அரசியல் வழியில் காலாவதியாகி விட்டதாகக் கருத ருஷ்ய போல்ஷிவிக்குகளான எங்களுக்கு மேலையக் கம்யூனிஸ்டுகள் யாரையும் விட அதிக அளவு நியாயம் இருக்கவில்லையா? இருந்ததென்பதில் ஐயத்துக்கு இடமில்லை. இங்கு எழும் கேள்வி முதலாளித்துவ நாடாளுமன்றங்கள் அதிக காலம் இருந்துள்ளனவா அல்லது சிறிது காலமாய்த்தான் உள்ளனவா என்பதல்ல; பெருந்திரளான உழைப்பாளி மக்கள் சோவியத் அமைப்பை ஏற்றுக் கொள்ளவும், முதலாளித்துவ-ஜனநாயக நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் (அல்லது அது கலைக்கப்பட அனுமதிக்கவும்) எந்த அளவுக்கு (சித்தாந்த வழியிலும் அரசியல் வழியிலும் நடைமுறையிலும்) தயாராய் இருக்கிருர்கள் என்பதே இங்கு எழும் கேள்வி. 1917 செப்டம்பர்—நவம்பரில் ருஷ்யாவில் நகரத் தொழிலாளி வர்க்கத்தினர்களும் படைவீரர்களும் விவசாயிகளும், விசேஷ நிலைமைகள் பலவும் காரணமாய்,

சோவியத் அமைப்பை ஏற்றுக்கொள்ளவும், முதலாளித்துவ நாடாளுமன்றங்களிலே மிகவும் ஜனநாயகமானதைக் கலைத்திடவும், மிகவும் சிறப்பான அளவுக்குத் தயார் நிலையில் இருந்தனர் என்பது கிஞ்சித்தும் மறுக்க முடியாத, நூற்றுக்கு நூறு நிலைநாட்டப்பெற்ற வரலாற்று உண்மையாகும். இருந்த போதிலும் போல்ஷிவிக்குகள் அரசியல் நிர்ணயச் சபையைப் பகிஷ்காரம் செய்யவில்லை. அதற்குப் பதில், பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வென்று கொள்வதற்கு முன்பும் பிற்பாடும் தேர்தல்களில் பங்கெடுத்துக் கொண்டனர். ருஷ்யாவில் அரசியல் நிர்ணயச் சபையின் தேர்தல் முடிவுகளை விவரமாகப் பகுத்தாயும் மேற்கூறிய கட்டுரையில், இந்தத் தேர்தல்கள் மதிப்பிடற்கரிய (பாட்டாளி வர்க்கத்துக்கு மிகமிகப் பயனுள்ள) அரசியல் பலன்களை அளித்தன என்பது என்னுல் நிரூபிக்கப்பட்டிருக்கிறதென நான் திடமாக நம்புகிறேன்.

இதிலிருந்து பெறப்படும் முடிவு சிறிதளவும் மறுக்க முடியாததாகும்: சோவியத் குடியரசின் வெற்றிக்குச் சில வாரங்களே முன்னதாகவும், இந்த வெற்றிக்குப் பிற்பாடுங்கூட, முதலாளித்துவ-ஜனநாயக நாடாளுமன்றம் ஒன்றில் பங்கெடுத்துக் கொள்வதானது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தீங்கிழைப்பதற்குப் பதிலாய், இது போன்ற நாடாளுமன்றங்கள் கலைக்கப்பட வேண்டியது எப்படி அவசியமென்பதைப் பிற்பட்ட நிலையிலுள்ள வெகுஜனப் பகுதியோருக்கு நிரூபிப்பதற்கு நடைமுறையில் உதவுகிறது என்பதும், இந்நாடாளுமன்றங்கள் வெற்றிகரமாய்க் கலைக்கப்படுவதற்கு வகை செய்கிறது என்பதும், முதலாளித்துவ நாடாளுமன்ற முறையை ''அரசியல் வழியில் காலாவதியாக்குவதற்குத்'' துணை புரிகிறது என்பதும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அனுபவத்தை உதாசீனம் செய்துவிட்டு, அதே நேரத்தில் கம்யூனிஸ்டு அகிலத்துடன்—தனது போர்த்தந்திரத்தைச் சர்வதேசரீதியில் (குறுகலான, அல்லது தனிப்பட்டதான எந்தவொரு தேசத்துக்குமான போர்த்தந்திரமாயிராது, சர்வதேசப் போர்த்தந்திரமாய்) வகுத்துக் கொள்ள வேண்டிய

கம்யூனிஸ்டு அகிலத்துடன் — இணைப்புரிமை கொண்டாடுவதானது மிகக் கொடுந் தவறிழைப்பதாகவும், சர்வதேசியத்தைச் சொல்லளவில் ஏற்றுக் கொண்டு செயலில் கைவிடுவதாகவுமே அமைகிறது.

நாடாளுமன்றங்களில் பங்கு கொள்ளாதிருப்பதற்கு ஆதரவான ''டச்சு-இடதுசாரி'' வாதங்களை இனிப் பரிசீலனை செய்வோம். மேற்கூறிய ''டச்சு'' ஆய்வுரைகளில் மிகவும் முக்கியமானதான 4ஆவது ஆய்வுரையின் வாசகம் இதோ:

''முதலாளித்துவப் பொருளுற்பத்தி அமைப்பு முறிந்து போய், சமுதாயம் புரட்சிக்குரிய நிலையில் இருக்கையில், நாடாளுமன்றச் செயலானது வெகுஜனங்களது நேரடியான செயலுடன் ஒப்பிடும் போது படிப்படியாக முக்கியத்துவம் இழந்து விடுகிறது. இந்நிலைமைகளில் நாடாளுமன்றம் எதிர்ப் புரட்சியின் மையமாகவும் செயலுறுப்பாகவும் ஆகிவிடும் போது, மறு புறத்தில் தொழிலாளி வர்க்கம் சோவியத்துக்களைத் தனது ஆட்சியதிகாரத்துக்கான கருவிகளாக உருவாக்கிக் கொள்ளும் போது, நாடாளுமன்றச் செயலில் பங்கு கொள்வதை முற்றாகவும் முழுவதாகவும் கைவிடுவது அவசியமாகவுங்கூட ஆகிவிடலாம்.''

முதலாவது வாக்கியம் தவறென்பது தெளிவாக விளங்குகிறது. ஏனெனில் வெகுஜனங்களது செயல் — உதாரணமாய், ஒரு பெரிய வேலைநிறுத்தம்—புரட்சியின் போதோ, புரட்சிகர நிலையிலோ மட்டுமின்றி, எல்லாக் காலங்களிலுமே நாடாளுமன்றச் செயற்பாட்டை விட மிகவும் முக்கியமானதாகும். வரலாற்று வழியிலும் அரசியல் வழியிலும் தவறான, ஏற்கப்பட முடியாத, அபத்தமான இந்த வாதம், சட்டபூர்வமான போராட்டத்தையும் சட்டவிரோதமான போராட்டத்தையும் இணைத்திடுவதன் முக்கியத்துவம் குறித்த பொதுவான ஐரோப்பிய அனுபவத்தையும் (1848, 1870ஆம் ஆண்டுப் புரட்சிகளுக்கு முந்திய பிரெஞ்சு அனுபவம், 1878-90ஆம் ஆண்டுகளில் ஜெர்மன் அனுபவம் முதலியவை) ருஷ்ய அனுபவத்தையும் (மேலே பார்க்கவும்) இவ்வாசிரியர்கள் அறவே உதாசீனம் செய்கிறார்கள் என்பதைத்தான் மிகத் தெளிவாகக் காட்டுகிறது. இப்பிரச்சினை, பொதுவாக

வும் குறிப்பாகவும் அளவுகடந்த முக்கியத்துவமுடைய தாகும். ஏனெனில் நாகரிக வளர்ச்சியுடைய முன்னேறிய நாடுகள் யாவற்றிலும் இது போல இணைத்திடுதல் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சிக்கு மேலும் மேலும் அவசிய மாகிவிடும் காலம்—ஏற்கெனவே ஓரளவுக்கு இது அவசிய மாகி விட்டதென்றும் கூறலாம்—விரைவாக நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. பாட்டாளி வர்க்கத்துக்கும், முதலாளித் துவ வர்க்கத்துக்கும் இடையிலான உள்நாட்டுப் போர் முதிர்ச்சி யடைந்து நெருங்கி வர இருப்பதாலும், சட்ட முறையைத் துச்சமாக மதித்து எல்லா வழிகளிலும் அதனை மீறிடும் குடி யரசு அரசாங்கங்களும் பொதுவாக முதலாளித்துவ அரசாங் கங்களும் (அமெரிக்கா இதற்கு ஓர் உதாரணமாய் விளங்கு கிறது) கம்யூனிஸ்டுகள் மீது வெறித்தனமான அடக்குமுறை யை ஏவி விடுவதாலும் இன்ன பிறவற்றாலும் இந்நிலைமை ஏற்பட்டு வருகிறது. மிகவும் முக்கியமான இந்தப் பிரச் சினையை டச்சு-இடதுசாரிகளும், பொதுவாக எல்லா இடது சாரிகளும் உணர முற்றிலும் தவறி விட்டனர்.

இரண்டாவது வாக்கியம், முதலாவதாக வரலாற்று வழியில் தவறானது. போல்ஷிவிக்குகளான நாங்கள் படுமோச மான எதிர்ப்புரட்சி நாடாளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொண்டோம். இவ்வாறு பங்கு கொண்டதானது, ருஷ்யா வில் முதலாவது முதலாளித்துவப் புரட்சிக்கு (1905) பிறகு, இரண்டாவது முதலாளித்துவப் புரட்சிக்கும் (பிப்ரவரி 1917), பிற்பாடு சோஷலிசப் புரட்சிக்கும் (அக்டோபர் 1917) பாதையைச் செப்பனிடுவதற்குப் புரட்சிகரப் பாட் டாளி வர்க்கக் கட்சிக்குப் பயனுள்ளதாக இருந்ததுடன்கூட, அத்தியாவசியமாகவும் இருந்ததென்பதை அனுபவம் தெளிவு படுத்தியிருக்கிறது. இரண்டாவதாக, இவ்வாக்கியம் வியக்கத் தக்கவாறு முன்னுக்குப்பின் முரணாயிருக்கிறது. நாடாளு மன்றம் எதிர்ப்புரட்சியின் செயலுறுப்பாகவும் ''மைய மாகவும்'' ஆகிவிடுமானால் (உண்மையில் அது ''மையமாக'' இருந்ததே இல்லை, எந்நாளும் இருக்கவும் முடியாது—ஆனால் இது வேறு விவகாரம்), அதேபோதில் தொழிலாளர்கள் தமது ஆட்சியதிகாரத்தின் கருவிகளை சோவியத்துக்களின்

வடிவில் உருவாக்கிக் கொள்வார்களானுல், பிறகு நாடாளு மன்றத்துக்கு எதிரான சோவியத்துக்களின் போராட்டத் துக்கு, சோவியத்துக்களால் நாடாளுமன்றம் கலேக்கப்படு வதற்குத் தொழிலாளர்கள் சித்தாந்த வழியிலும் அரசியல் வழியிலும் செயல் நுட்ப வழியிலும் தயார் செய்ய வேண்டு மென்பதே இதிலிருந்து பெறப்படும் முடிவு. ஆனுல் எதிர்ப் புரட்சி நாடாளுமன்றத்தின் உள்ளே சோவியத் எதிர்த் தரப்பு ஒன்று இருப்பதானது இந்தக் கலேப்புக்கு இடையூருகி விடுமென்ருே, அனுசரணேயாக இருக்காதென்ருே இதிலி ருந்து எவ்வகையிலும் பெறப்படவில்லே. தெனீக்கினுக்கும் கல்ச்சாக்குக்கும் எதிரான எங்களது வெற்றிகரமான போராட்டத்தின் போது, அவர்களுடைய முகாமில் இருந்த சோவியத்,பாட்டாளி வர்க்க எதிர்த்தரப்பு எங்களது வெற்றி களுக்குப் பயனற்றதாயிருக்க நாங்கள் ஒரு தடவையும் காணவில்லே. கலேக்கப்படும் தறுவாயிலிருந்த எதிர்ப்புரட்சி அரசியல் நிர்ணய சபையினுள் முரணற்ற போல்ஷிவிக்கு களின் சோவியத் எதிர்த்தரப்பும், மற்றும் முரணுடைய இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின்[60] சோவியத் எதிர்த்தரப்பு ஒன்றும் இருந்ததானது, 1918 ஜனவரி 5ல் இந்த அரசியல் நிர்ணயச் சபை கலேக்கப்படுவதற்குத் தடங் கலாகிவிடவில்லே. அதற்குப் பதில் அனுகூலமாகவே இருந் தது என்பதை நாம் நன்கு அறிவோம். இந்த ஆய்வுரையின் ஆசிரியர்கள் சிந்தனேயைக் குழப்படி செய்வதில் ஈடுபட் டிருக்கிருர்கள். எல்லாப் புரட்சிகளின் அனுபவத்தை இல்லா விட்டாலும், மிகப் பல புரட்சிகளின் அனுபவத்தை இவர் கள் மறந்து விட்டனர். புரட்சிகளின் போது, பிற்போக்கு நாடாளுமன்றத்துக்கு வெளியே நடைபெறும் வெகுஜன நடவடிக்கைகள், நாடாளுமன்றத்தினுள் செயல்படும் புரட்சி அனுதாபங் கொண்ட (நேரடியாகப் புரட்சியை ஆதரிப் பதாய் இருப்பின் இன்னும் நல்லதே) ஓர் எதிர்த்தரப்புடன் இணேக்கப்படுவதானது பெரும் பயன் தரத் தக்கதென்பதே இப்புரட்சிகளின் அனுபவமாகும். டச்சு ''இடதுசாரிகளும்'' பொதுவாகவே எல்லா ''இடதுசாரிகளும்'' மெய்யான புரட்சி ஒன்றில் ஒருபோதும் பங்குகொள்ளாத, அல்லது

புரட்சிகளின் வரலாறு குறித்து சிந்தனேயே செய்திராத, அல்லது பிற்போக்கு அமைப்பு ஒன்றின் அகநிலே ''நிராகரிப்பை'' பல புறநிலேக் காரணக் கூறுகளின் ஒன்றிணேந்த செயற்பாட்டினல் நடைமுறையில் ஒழிக்கப்படுவதற்குச் சமமானதாகச் சிறுபிள்ளேத்தனமாய்த் தவருக நினேத்துக் கொள்ளும் புரட்சியின் வறட்டுச் சூத்திரவாதிகளேப் போல், இவ்விவகாரத்தில் வாதாடுகிருர்கள். ஒரு புதிய அரசியல் கருத்தை (அரசியல் கருத்தல்லாத பிற கருத்துக்களுக்கும் இது பொருந்தக் கூடியதே) இழிவுபடுத்துவதற்கும் கெடுப்பதற்குமான நிச்சயமான ஒரு வழி என்னவெனில், அதை ஆதரித்து வாதாடுவதாகக் கூறிக் கொண்டு அதனே அபத்தமாகும்படிச் சிறுமைப் படுத்துவதுதான். எந்த உண்மையும் (டித்ஸ்கென் சீனியர் குறிப்பிட்டது போல) ''அளவு மீறி விரிக்கப்பட்டால்'', மிகையாக்கப்பட்டால் அல்லது அதன் மெய்யான பயன்பாட்டுக்குரிய வரம்புகளுக்கு அப்பால் எடுத்துச் செல்லப்பட்டால் அபத்தமாய்ச் சிறுமையுற நேரும்; இந்நிலேமைகளில் அது கட்டாயம் அபத்தமாகியே தீருமென்றுகூடச் சொல்லலாம். ஆட்சியதிகாரத்தின் சோவியத் வடிவம் முதலாளித்துவ-ஜனநாயக நாடாளுமன்றங்களேக் காட்டிலும் மேலானதென்ற புதிய உண்மைக்கு டச்சு, ஜெர்மன் இடதுசாரிகள் இவ்வாறேதான் தீங்கிழைக்கின்றனர். காலத்துக்கு ஒவ்வாத கருத்தை யாராவது உரைத்தால், அல்லது முதலாளித்துவ நாடாளுமன்றங்களில் பங்கு கொள்வதை எல்லா நிலேமைகளிலும் நிராகரிக்கலாகாது என்று பொதுவாகவே யாராவது கருதினல், அது தவறே ஆகுமென்பதில் சந்தேகமில்லே. பகிஷ்காரம் பயனுள்ளதாயிருக்கும் நிலேமைகளே வரையறுக்க இங்கு நான் முயற்சிப்பதற்கில்லே. ஏனெனில், இந்தக் கட்டுரையின் நோக்கம் அவ்வளவு விரிவானதல்ல. அதாவது, சர்வதேசக் கம்யூனிஸ்டுப் போர்த்தந்திரம் சம்பந்தமான இந்நாளேயப் பிரச்சினேகள் சிலவற்றில் ருஷ்ய அனுபவத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். ருஷ்ய அனுபவமானது போல்ஷிவிக்குகள் பகிஷ்காரத்தைப் பயன்படுத்தியதில் வெற்றிகரமான பிழையற்ற ஓர் உதாரணத்தையும் (1905), தவருன மற்ருேர் உதாரணத்தையும் (1906) நமக்கு

அளித்திருக்கிறது. முதலாவது உதாரணத்தைப் பகுத்தாராய் வோமாயின், நாடாளுமன்றத்துக்கு வெளியே நடைபெற்ற புரட்சிகர வெகுஜன நடவடிக்கைகள் (குறிப்பாக வேலைநிறுத் தங்கள்) மிக வேகமாய் வளர்ச்சியுற்று வந்த ஒரு நிலைமை யில், பாட்டாளி வர்க்கத்தையும் விவசாயிகளையும் சேர்ந்த எந்தவொரு பகுதியும் பிற்போக்கு ஆட்சி முறைக்கு எவ்வழி யிலும் ஆதரவளிக்க முடியாத நிலைமையில், வேலைநிறுத்தப் போராட்டத்தின் மூலமாகவும் விவசாயி இயக்கத்தின் மூல மாகவும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் பிற்பட்ட வெகு ஜனங்கள் மீது செல்வாக்குப் பெற்று வந்த நிலைமையில், பிற்போக்கு ஆட்சி பிற்போக்கு நாடாளுமன்றம் ஒன்றைக் கூட்டுவதைத் தடுப்பதில் நாங்கள் வெற்றி பெற்றோம் என் பதைக் காண்கிறோம். இன்றைய ஐரோப்பிய நிலைமைகளில் இந்த அனுபவம் அனுசரிக்கப்படத்தக்கதல்ல என்பது தெளி வாக விளங்குகிறது. இதே போல, டச்சு ''இடதுசாரிகளும்'' பிற ''இடதுசாரிகளும்'' நாடாளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொள்ள மறுப்பதை ஆதரித்து வாதாடுவதானது—சில நிபந்தனைகளுடன்தான் என்றாலுங்கூட—அடிப்படையான முறையில் தவறாகும், புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் இலட்சியத்துக்குக் குந்தகமானதாகும் என்பதும் தெளிவாக விளங்குகிறது. முன்கூறிய வாதங்கள் இதை நிரூபிக்கின்றன.

மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர முன்னணிப் படைக்கு நாடாளு மன்றம் மிகவும் வெறுக்கத்தக்கதாகி விட்டது. இதனை மறுக்க முடியாது. இது எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதே. ஏனெ னில் போரின் போதும் போருக்குப் பிற்பாடும் மிகப் பெரும் பாலான சோஷலிஸ்டு, சமூக-ஜனநாயக நாடாளுமன்றப் பிரதி நிதிகளின் நடத்தையைக் காட்டிலும் அருவருக்கத்தக்க தையோ, இழிவானதையோ, துரோகமானதையோ கற்பனை செய்வதுங்கூட கடினமாகும். ஆயினும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் இந்தத் தீங்கினை எதிர்த்து எப்படிப் போராடு வது என்பதைத் தீர்மானிக்கையில், இந்த மனப்பான்மைக்கு அடிபணிவது நியாயமல்ல என்பதுடன், உண்மையில் ஒரு பெருங்குற்றமுமாகும். மேற்கு ஐரோப்பாவில் பல நாடுகளில்

தற்பொழுது புரட்சிகர மனப்பான்மையானது ''காணுத புதுமை'' அல்லது ''அரிதினும் அரிது'' என்பதாகவே கூற வேண்டியிருக்கிறது. மிக நீண்ட காலமாய் அடங்காத ஆவலோடு, ஆனுல் பயனின்றி இது எதிர்பார்க்கப்பட்டு வந்துள்ளது. இதனுல்தான் போலும் பலரும் எளிதில் இந்த மனப்பான்மைக்கு அடிபணிந்து விடுகிருர்கள். வெகுஜனங் களிடையே புரட்சிகர மனப்பான்மை இல்லாமல், இந்த மனப்பான்மை வளர்வதற்கு அனுசரணையான நிலைமைகள் இல்லாமல், புரட்சிகரப் போர்த்தந்திரம் ஒரு நாளும் செயல் நிலைக்கு வளர்ச்சியுற முடியாது என்பதைக் கூறத் தேவை யில்லை. ஆனுல் ருஷ்யாவில் இரத்தம் தோய்ந்த நீண்டநெடிய கொடிய அனுபவமானது, புரட்சிகரப் போர்த்தந்திரத்தைப் புரட்சிகர மனப்பான்மையின் அடிப்படையில் மட்டும் உரு வாக்கிவிட முடியாதென்ற உண்மையை எங்களுக்குப் போதித் துள்ளது. குறிப்பிட்ட அரசிலும் (அதனைச் சுற்றிலுமுள்ள அரசுகளிலும் மற்றும் உலகெங்குமுள்ள அரசுகளிலும்) இருக் கும் வர்க்க சக்திகள் யாவற்றையும், மற்றும் புரட்சி இயக்கங் களது அனுபவத்தையும் பற்றிய நிதானமான, முற்றிலும் புறநிலை நோக்குடன்கூடிய மதிப்பீட்டையே போர்த்தந்திரம் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். நாடாளுமன்ற சந்தர்ப்பவாதத்தைத் தூற்றுவதால் மட்டுமோ, நாடாளு மன்றங்களில் பங்கெடுத்துக் கொள்வதை நிராகரிப்பதால் மட்டுமோ ஒருவர் தமது ''புரட்சிகர மனோபாவத்தை'' வெளிப்படுத்திக் கொண்டு விடுவது மிகமிகச் சுலபம். ஆனுல் இந்தச் சுலபத்தின் காரணமாய், இது கடினமான, மிகமிகக் கடினமான ஒரு பிரச்சினைக்குரிய தீர்வாகி விடுவதில்லை. ஐரோப்பிய நாடாளுமன்றங்களில் மெய்யாகவே புரட்சிகர மான நாடாளுமன்றக் குழுவினைத் தோற்றுவிப்பது ருஷ்யா வில் இருந்ததைக் காட்டிலும் மிகமிகக் கடினமாகும். இது புரிந்துகொள்ளக் கூடியதே. இருந்தபோதிலும் இது, 1917ல் நிலவிய பிரத்தியேகமானதும் வரலாற்று வழியில் மிகவும் விசேஷமானதுமான நிலைமையில் சோஷலிசப் புரட்சியைத் தொடங்குவது ருஷ்யாவுக்குச் சுலபமாயிருந்ததென்ற பொது வான உண்மையின் குறிப்பிட்டதொரு வெளியீடே ஆகும்.

ஆனல் இந்தப் புரட்சியைத் தொடர்ந்து நடத்திச் செல்வதும், அதனை நிறைவுறச் செய்வதும் ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் ருஷ்யாவுக்கு மிகவும் கடினமானதாகும். 1918ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே இதனை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். எங்களுடைய கடந்த இரு ஆண்டு அனுபவம் இக்கருத்து முற்றிலும் சரியே என்பதைப் பூரணமாக மெய்ப்பித்திருக்கிறது. குறிப்பிட்ட சில பிரத்தியேக நிலைமைகள், அதாவது 1) சோவியத் புரட்சியை, தொழிலாளர்களையும் விவசாயிகளையும் சொல்லொணு அளவுக்குக் கசக்கிப் பிழிந்து வருத்திய ஏகாதிபத்தியப் போருக்கு இப் புரட்சியின் விளைவாய் முடிவு கட்டுவதுடன் இணைத்திடுவதற்கிருந்த சாத்தியப்பாடு; 2) தமது சோவியத் பகைவனை எதிர்த்து ஒன்றுபட முடியாதிருந்த ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களாலான உலகின் மிகவும் சக்தி வாய்ந்த இரு கோஷ்டிகளிடையே ஏற்பட்ட ஜீவமரண மோதலைத் தற்காலிகமாய்ப் பயன்படுத்தி அனுகூலமடைவதற்கிருந்த சாத்தியப்பாடு; 3) ஒப்பளவில் மிக நீண்ட உள்நாட்டுப் போரை ஓரளவு நாட்டின் பிரம்மாண்டப் பரப்பு காரணமாகவும் போக்குவரத்துச் சாதனங்கள் மோசமாயிருந்ததன் காரணமாகவும் சகித்துக் கொள்வதற்கிருந்த சாத்தியப்பாடு; 4) விவசாயிகளிடையே மிகவும் தீர்க்கமான முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி இயக்கம் அலைமோதிய காரணத்தால், பாட்டாளி வர்க்கத்தின் கட்சி விவசாயிகளின் கட்சியினுடைய (அதாவது, பெரும்பாலான உறுப்பினர்கள் போல்ஷிவிசத்தின் பால் முற்றிலும் பகைமை கொண்டிருந்த சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினுடைய) புரட்சிகரக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதும், பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வென்று கொண்டதன் விளைவாய் இக்கோரிக்கைகளை உடனே பூர்த்தி செய்வதும் சாத்தியமாகிவிட்ட ஒரு நிலைமை —ஆகிய இந்தப் பிரத்தியேக நிலைமைகள் யாவும் தற்போது மேற்கு ஐரோப்பாவில் இருக்கவில்லை; இந்த நிலைமைகள், அல்லது இவற்றையொத்த நிலைமைகள், அவ்வளவு சுலபமாய் ஏற்பட்டுவிடப் போவதுமில்லை. இதனல்தான்—இதர பல காரணங்களுடனும்கூட—சோஷலிசப் புரட்சியைத்

துவக்குவது எங்களைக் காட்டிலும் மேற்கு ஐரோப்பாவுக்கு அதிகக் கடினமாயிருக்கிறது என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடலாம். பிற்போக்கு நாடாளுமன்றங்களைப் புரட்சிகர நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் கடுமையான பணியைத் ''தட்டிக்கழிப்பதன்'' மூலம் இந்தக் கடின நிலைமையைச் ''சமாளிக்க'' முயலுவதானது முற்றிலும் சிறுபிள்ளைத்தனமானதே ஆகும். நீங்கள் ஒரு புதிய சமுதாயம் சமைக்க விரும்புகிறீர்கள், ஆயினும் திடநம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்ட வீரமிக்க கம்யூனிஸ்டுகளாலான சிறந்த நாடாளுமன்றக் குழு ஒன்றினைப் பிற்போக்கு நாடாளுமன்றத்தில் நிறுவிக் கொள்வதிலுள்ள சிரமங்களைக் கண்டு அஞ்சுகிறீர்கள்! இது சிறுபிள்ளைத்தனம் அல்லவா? ஜெர்மனியில் கார்ல் லீப்க்னெஹ்டும் ஸ்வீடனில் ஹோக்லண்டும் அடியிலிருந்து வெகுஜன ஆதரவு இல்லாமலேயே, பிற்போக்கு நாடாளுமன்றங்களை மெய்யாகவே புரட்சிகரமாய்ப் பயன்படுத்திக் கொள்வதில் முன்னுதாரணமாய்த் திகழ முடிந்ததெனில், விரைவாக வளர்ந்து வரும் புரட்சிகர வெகுஜனக் கட்சி ஒன்று யுத்தப் பிற்காலத்தில் வெகுஜனங்களிடையே பிரமைகள் நீங்கி கசப்புணர்ச்சி மேலோங்கியிருக்கும் நிலைமையில், படுமோசமான நாடாளுமன்றங்களாயினும் அவற்றிலும் கம்யூனிஸ்டுக் குழு ஒன்றை உருவாக்கிக் கொள்ள முடியாமற் போவது ஏன்?! தொழிலாளர்களின் பிற்பட்ட பகுதிகளும் இன்னும் அதிகமாய்ச் சிறு விவசாயிகளின் பகுதிகளும், ருஷ்யாவில் இருந்ததை விட மேற்கு ஐரோப்பாவில் மேலும் கூடுதலாய் முதலாளித்துவ-ஜனநாயகத் தப்பெண்ணங்களிலும் நாடாளுமன்றவாதத் தப்பெண்ணங்களிலும் ஊறியிருக்கிறுர்கள் என்பதே இதற்குக் காரணம். இதனுல்தான் முதலாளித்துவ நாடாளுமன்றங்களைப் போன்ற அமைப்புகளுக்கு உள்ளிருந்துதான் கம்யூனிஸ்டுகள் எவ்விதமான இடையூறுகளாலும் கலக்கமடையாமல் இந்தத் தப்பெண்ணங்களை அம்பலம் செய்யவும் களையவும் முறியடிக்கவும், விடாப்பிடியான நீண்ட போராட்டம் நடத்த முடியும் (நடத்தவும் வேண்டும்).

ஜெர்மன் ''இடதுசாரிகள்'' தமது கட்சியில் மோசமான

''தலைவர்கள்'' இருப்பது குறித்து புகார் கூறுகிறார்கள்; அவ நம்பிக்கைக்கும் சோர்வுக்கும் இடந்தருகிறார்கள்; ''தலைவர் களை'' ''மறுத்தொதுக்கும்'' நகைக்கத்தக்க நிலையினையுங்கூட வந்தடைகின்றனர். ஆனால் ''தலைவர்களைத்'' தலைமறைவாக ஒளித்து வைத்துக் கொள்வது அடிக்கடி அவசியமாகிவிடும் நிலைமைகளில் சிறந்த ''தலைவர்களை'', சோதித்து எடுக்கப் பட்ட நம்பகமான, செல்வாக்குடைய ''தலைவர்களை'' உரு வாக்குவது மிகவும் கடினமானதாகி விடுகிறது. சட்டபூர்வ மான வேலைகளையும் சட்டவிரோதமான வேலைகளையும் ஒன் றிணைத்துக் கொள்ளாமல், வேறு பல வழிகளோடு நாடாளு மன்றங்களிலும் ''தலைவர்களைச்'' சோதித்துப் பார்க்காமல் இதி லுள்ள கஷ்டங்களை வெற்றிகரமாய்ச் சமாளிக்க முடியாது குற்றவிமர்சனம்—மிகவும் கடுமையான, தாட்சண்யமற்ற, சமரசத்துக்கு இடமில்லாத குற்றவிமர்சனம் — நாடாளு மன்றவாதம் அல்லது நாடாளுமன்றச் செயற்பாடுகளுக்கு எதிராய் அல்லாமல், நாடாளுமன்றத் தேர்தல்களையும் நாடாளுமன்ற அரங்கையும் புரட்சிகரமான, கம்யூனிஸ்டு முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியாத தலைவர்களுக்கு எதிராய்—இன்னும் அதிகமாய் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பாதவர்களுக்கு எதிராய்—திருப்பி விடப்பட வேண்டும். இத்தகைய குற்றவிமர்சனம்தான்—இதோடுகூட தகுதியற்ற தலைவர்களை நீக்கித் தகுதியுடையோரை அவர் களிடத்தில் அமர்த்த வேண்டுமென்பதைக் கூறத் தேவை யில்லை—''தலைவர்களுக்குத்'' தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் லாயக்கானவர்களாக இருக்கும்படிப் போதமளித்துப் பயிற்றுவித்து, அதேபோதில் வெகுஜனங்களுக்கும் அரசியல் நிலைமையையும் அந்நிலைமை யிலிருந்து எழும் பல சந்தர்ப்பங்களில் மிகவும் குளறுபடி யான, சிக்கலான பணிகளைச் சரிவரப் புரிந்து கொள்ளும்படிப் போதமளித்துப் பயிற்றுவிக்கக் கூடியதான பயனுள்ள, செழு மை வாய்ந்த புரட்சிகரச் செயற்பாடாய் அமைய முடியும்.*

* இத்தாலியில் இருந்துவரும் ''இடதுசாரிக்'' கம்யூனிசத் தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள எனக்குச் சொற்ப அளவு வாய்ப்பே கிடைத்துள்ளது. தோழர் பொர்

8

சமரசம் கூடவே கூடாதா?

ஃபிராங்ஃபுர்ட் பிரசுரத்திலிருந்து தரப்பட்ட மேற்கோளில் ''இடதுசாரிகள்'' எவ்வளவு அழுத்தம் திருத்தமாய் இக்கோஷத்தை முன்வைக்கிறுர்கள் என்பதைக் கண்

டீகாவும் அவரது ''பகிஷ்காரக் கம்யூனிஸ்டு'' (Comunista astensionista) கோஷ்டியினரும் நாடாளுமன்றத்தில் பங்கு கொள்ளலாகாது எனக் கூறி வருவது சந்தேகமின்றிச் சரியல்ல தான். ஆனுல் அவருடைய பத்திரிகையான சோவியத்தின் (*Il Soviet*,[61] *1920*, ஜனவரி *18*, பிப்ரவரி *1* தேதிகளிட்ட இதழ்கள் *3*லும் *4*லும்) இரு இதழ்களிலிருந்தும், தோழர் செராட்டியின் சிறந்த வெளியீடான கம்யூனிசத்தின் (*Comunismo*[62], *1919*, அக்டோபர் *1* முதல் நவம்பர் *30* வரையிலான *1* முதல் *4* வரையிலுள்ள இதழ்கள்) நான்கு இதழ்களிலிருந்தும் மற்றும் நான் பார்த்துள்ள இத்தாலிய முதலாளித்துவப் பத்திரிகைகளின் தனித்தனி இதழ்களிலிருந்தும் தெரிந்து கொள்ள முடிந்த வரை, ஒரு விஷயத்தில் தோழர் பொர்டீகாவின் நிலே சரியானதாகவே எனக்குத் தோன்றுகிறது. தோழர் பொர்டீகாவும் அவர் கோஷ்டியினரும் டுராட்டியையும் அவரது ஆதரவாளர்களேயும் தாக்குவது சரியே. டுராட்டியும் அவரைச் சேர்ந்தோரும் சோவியத் ஆட்சியதிகாரத்தையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் ஏற்றுக்கொள்ளும் ஒரு கட்சியில் இருந்து கொண்டு, அதே நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் தமது கேடுகெட்ட பழைய சந்தர்ப்பவாதக் கொள்கையையே தொடர்ந்து பின்பற்றுகிறுர்கள். இதற்கு இடம் தருவதன் மூலம் தோழர் செராட்டியும் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி[63] அனைத்துமே தவறிழைக்கின்றனர். இத்தவருல், ஹங்கேரியில் நேர்ந்த அதே அளவு கேடும், அங்கு எழுந்த அதே அபாயங்களும் இத்தாலியிலும் ஏற்படுமென்று அஞ்ச வேண்டியிருக்கிறது. ஹங்கேரிய டுராட்டிகள் அங்கு கட்சிக்கும் சோவியத் ஆட்சிக்கும் உள்ளிருந்தே குழி பறித்து விட்டனர். சந்தர்ப்பவாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தமாய் அனுசரிக்கப்படும் இத்தகைய தவருன, முரண்பட்ட அல்லது உறுதியற்ற போக்கானது, ஒரு புறத்தில் ''இடதுசாரிக்'' கம்யூனிசத்தைத் தோற்றுவித்து, மறு புறத்தில்

டோம். சந்தேகத்துக்கு இடமின்றித் தம்மை மார்க்சியவாதிகளாய்க் கருதிக் கொள்வோர், மார்க்சியவாதிகளாகவே இருக்க விரும்புவோர், மார்க்சியத்தின் அடிப்படை உண்மைகளை மறந்து விடுவதைக் காணும் போது வருத்தமாய் இருக்கிறது. மார்க்சைப் போலவே எங்கெல்ஸ், அரிதிலும் அரிதான ஆசிரியர்களில் ஒருவர். இவ்வாசிரியர்களின் அடிப்படையான நூல் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வாக்கியமும் பிரமாதமான ஆழ்ந்த உள்ளடக்கம் கொண்டுள்ளது. முப்பத்து மூன்று பிளான்கிஸ்டுக்-கம்யூனர்டுகளின்[64] அறிக்கையை எதிர்த்து 1874ல் எங்கெல்ஸ் இவ்வாறு எழுதினர்:

''....'நாங்கள் கம்யூனிஸ்டுகள்' (பிளான்கிஸ்டுக்-கம்யூனர்டுகள் அவர்களுடைய அறிக்கையில் இப்படித்தான் எழுதினர்கள்), 'ஏனெனில் நாங்கள் இடைநிலையங்களில் நிற்காமலே, சமரசங்கள் எவற்றையும் ஏற்காமலே, எங்களுடைய குறிக்கோளை வந்தடைய விரும்புகிறேம். வெற்றி நாளை ஒத்திப் போடவே, அடிமை வாழ்வின் காலத்தை நீடிக்கச் செய்யவே சமரசங்கள் உதவுகின்றன.'

''ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் கம்யூனிஸ்டுகளாக இருப்பதற்குக் காரணம் என்னவெனில், அவர்கள் எல்லா இடைநிலையங்களையும் எல்லா சமரசங்களையும்—அவர்களால் அல்ல, வரலாற்று வளர்ச்சியின் போக்கால் தோற்றுவிக்கப்பட்ட இவற்றை—கடக்கையில் வர்க்கங்களை ஒழித்திடல், நிலத்திலோ எல்லா உற்பத்திச் சாதனங்களிலோ இனி தனியார் உடைமை இல்லாமற் போய்விடும் ஒரு சமுதாயத்தை அமைத்திடல் என்னும் இறுதி நோக்கத்தைத் தெளிவாகக் கண்ணுற்று, இடையருது அதனைப் பின்பற்றுகிருர்கள் என்

அதன் இருப்பை ஓரளவு நியாயமாக்கி விடுகிறது. நாடாளுமன்றப் பிரதிநிதி டுராட்டி ''முன்பின் முரண்பாடாக நடந்து கொள்வதாகத்'' தோழர் செராட்டி குற்றம் சாட்டுவது (*Comunismo*, இதழ் 3) தவருனதென்பதில் ஐயமில்லை. ஏனெனில் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியேதான் டுராட்டியையும் அவர் ஆட்களையும் போன்ற சந்தர்ப்பவாத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடம் தருவதன் மூலம் முன்பின் முரண்பாடாக நடந்து கொள்கிறது.

பதே ஆகும். முப்பத்து மூன்று பிளான்கிஸ்டுகள் கம்யூனிஸ்டுகளாய் இருப்பதற்குக் காரணம், இடைநிலையங்களையும் சமரசங்களையும் தாவிச் சென்றுவிடத் தாம் விரும்பும் ஒரே காரணத்தால் விவகாரமே முடிவுற்று விடுவதாக அவர்கள் கற்பனை செய்து கொள்வதுதான். அவர்கள் கட்டாயம் நிகழப்போகும் ஒன்றாகக் கருதுவது போல வருகிற சில நாட்களில் 'அது தொடங்கி விடுமாயின்', அவர்கள் ஆட்சியதிகாரத்தை மேற்கொண்டு விடுவார்களாயின், நாளைக்கு மறுதினமே 'கம்யூனிசம் நிறுவப்பட்டுவிடும்.' அது உடனடியாகச் சாத்தியப்படவில்லை எனில், அவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்லர்.

''தமது பொறுமையின்மையைத் தத்துவார்த்த வழியில் திடமாய் நிலைநாட்டப்பெற்ற வாதமாக எடுத்துரைப்பதைச் சிறுபிள்ளைக்குரிய தெரியாத்தனம் என்றுதானே கூற வேண்டும்!'' (பிரெடெரிக் எங்கெல்ஸ், ''பிளான்கிஸ்டுக்-கம்யூனர்டுகளின் வேலைத்திட்டம்'', ஜெர்மன் சமூக-ஜனநாயகச் செய்தியேடு *Volksstaat*[65], *1874*, இதழ் *73*லிருந்து ருஷ்ய மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், 1871—1875, பெத்ரோகிராத், *1919*, பக்கங்கள் *52—53*ல் தரப்படுவது).

இதே கட்டுரையில் வையானின் பால் தமக்குள்ள ஆழ்ந்த மதிப்பை எங்கெல்ஸ் வெளியிடுகிறார். அவருடைய ''மறுக்க முடியாத சிறப்பு'' குறித்துப் பேசுகிறார் (கெட்டைப் போலவே வையானும் சர்வதேச சோஷலிசத்தின் மிக முக்கியத் தலைவர்களில் ஒருவராக இருந்தவர்—*1914* ஆகஸ்டில் சோஷலிசத்துக்கு அவர்கள் துரோகம் புரியும் வரையில்). ஆனால் பட்டவர்த்தனமான தவறு பற்றிய விவரமான பகுத்தாய்வை எங்கெல்ஸ் அளிக்காமல் விட்டுவிடவில்லை. அனுபவமில்லாத இளம் புரட்சியாளர்களுக்கும் மற்றும் மதிப்புக்குரிய வயதும் மிகுந்த அனுபவமும் வாய்ந்தவர்களாயினும் குட்டிமுதலாளித்துவப் புரட்சியாளர்களாய் இருப்போருக்கும் ''சமரசங்களை அனுமதிப்பது'' மிகவும் ''அபாயகரமானதாகவும்'', புரிந்துகொள்ள முடியாததாகவும், தவறானதாகவுமே தோன்றும். குயுக்திவாதிகள் பலரும் (இவர்கள் அசாதாரண அல்லது அளவு கடந்த ''அனுபவமுடைய'' அரசியல்

வாதிகளானதால்) தோழர் லான்ஸ்பரி குறிப்பிட்ட பிரிட்டிஷ் சந்தர்ப்பவாதத் தலைவர்களைப் போல அதே வழியில் வாதாடுகிறார்கள்: ''போல்ஷிவிக்குகள் ஒரு வகை சமரசம் செய்து கொள்ளலாம் என்றால், நாங்கள் எவ்வகையான சமரசமும் செய்து கொள்ளக் கூடாதா, என்ன?'' ஆனால் எண்ணற்ற வேலைநிறுத்தங்களில் (வர்க்கப் போராட்டத்தின் இந்த ஒரு வெளியீட்டை மட்டும் குறிப்பிடுவதெனில்) புடம் போடப்பட்ட பாட்டாளி வர்க்கத்தினர், எங்கெல்ஸ் தெளிவு படுத்திய (தத்துவவியலிலும் வரலாற்றியலிலும் அரசியலிலும் உளவியலிலும்) மிகவும் ஆழமான உண்மையை மெச்சத்தக்க வகையில் சாதாரணமாய்ப் புரிந்து கொண்டு விடுகிறார்கள். பாட்டாளி வர்க்கத்தவர் ஒவ்வொருவரும் வேலைநிறுத்தத்தை அனுபவித்து அறிந்தவர்; தொழிலாளர்கள் எதனையுமே சாதிக்காமல், அல்லது அவர்களுடைய கோரிக்கைகளில் ஒரு பகுதி மட்டுமே பூர்த்தி செய்யப்படும் நிலைமைக்கு ஒப்புதல் அளித்து, வேலைக்குத் திரும்ப வேண்டியதாகிவிடும் வண்ணம், வெறுக்கத்தக்க ஒடுக்குமுறையாளர்களுடனும் சுரண்டலாளர்களுடனும் ''சமரசங்கள்'' செய்து கொள்ள நேர்வதை அனுபவித்து அறிந்தவர். பாட்டாளி வர்க்கத்தவர் ஒவ்வொருவரும்—வெகுஜனப் போராட்டத்தின் நிலைமைகளின் விளைவாகவும், அவர் எவற்றினிடையே வாழ்கிறாரோ அந்த வர்க்கப் பகைமைகள் வெகுவாகத் தீவிரமடைவதன் விளைவாகவும்—புற நிலைமைகளின் (வேலைநிறுத்த நிதிகளின் பற்றாக்குறை, வெளி ஆதரவு இல்லாமை, இனி தாளாது என்னும் படியான அளவுக்குப் பட்டினி, தளர்வு முதலான நிலைமைகளின்) நிர்ப்பந்தத்தால் ஏற்படும் சமரசத்துக்கும்—இத்தகைய சமரசத்துக்கு ஒத்துக் கொண்ட தொழிலாளர்களுடைய புரட்சிகரப் பற்றுறுதியும் மேலும் போராட்டத்தை நடத்திச் செல்வதிலுள்ள ஈடுபாடும் இச்சமரசத்தால் எவ்வகையிலும் குறைந்து விடுவதில்லை—மறுபுறத்தில் துரோகிகள் தமது சுயநலத்தையும் (கருங்காலிகளும் ''சமரசம்'' செய்து கொள்கிறார்களே!), கோழைத்தனத்தையும், முதலாளிகளுக்குத் தொண்டூழியம் புரிவதில் தமக்குள்ள நாட்டத்தையும், முதலாளிகளின் அச்சுறுத்தலுக்

கும் சில நேரங்களில் நயமான பேச்சுக்களுக்கும் சில நேரங்களில் கைக்கூலிக்கும் சில நேரங்களில் புகழுரைகளுக்கும் பணியத் தாம் தயாராயிருப்பதையும் புறநிலைக் காரணங்களாகத் திரித்துக் கூறிச் செய்து கொள்ளும் சமரசத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டு கொண்டு விடுகிறார் (பிரிட்டிஷ் தொழிற்சங்கத் தலைவர்கள் செய்து கொள்ளும் இத்தகைய துரோகத்தனமான சமரசங்களுக்குப் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றிலிருந்து ஏராளமான உதாரணங்கள் கூறலாம்; ஆனால் எல்லா நாடுகளிலும் அனேகமாய் எல்லாத் தொழிலாளர்களும் ஏதேனும் ஒரு வடிவத்தில் இதே போன்றவற்றைக் கண்டிருக்கிறார்கள்).

இந்த அல்லது அந்த ''சமரசத்தின்'' மெய்யான தன்மையைச் சரிவர நிர்ணயம் செய்வதற்குப் பெருமுயற்சிகள் தேவையாகிவிடும் மிகமிகக் கடினமான, சிக்கல் வாய்ந்த தனிப்பட்ட சந்தர்ப்பங்கள் எழுவது இயற்கையே. எப்படி ஆட்கொலை விவகாரத்தில் ஆட்கொலை முற்றிலும் நியாயமானதா, அவசியமானதா (உதாரணமாய், நியாயமான தற்காப்பிற்காக நிகழ்ந்ததா), அல்லது மன்னிக்க முடியாத கவனக் குறைவாலோ, தந்திரமாய்ச் செய்யப்பட்ட வஞ்சகச் சூழ்ச்சியாலோ நிகழ்ந்ததா என்று நிலை நாட்டுவது எளிதாய் இராத சந்தர்ப்பங்கள் எழுகின்றனவோ, அதே போல இந்த விவகாரத்திலும் எழுவது இயற்கையே. அரசியலில் சில நேரங்களில் வர்க்கங்களுக்கும் கட்சிகளுக்கும் இடையிலான அளவு கடந்த சிக்கல் வாய்ந்த உறவுகள்—தேசிய, சர்வதேசிய உறவுகள்—சம்பந்தமான விவகாரங்கள் எழுவதால், வேலைநிறுத்தத்தில் செய்து கொள்ளப்படும் நியாயமான ''சமரசமா'', அல்லது கருங்காலியாலோ, துரோகத் தலைவராலோ, இன்னோரன்ன பிறராலோ செய்யப்படும் துரோகமான ''சமரசமா'' என்கிற பிரச்சினையைக் காட்டிலும் மிகவும் கடினமான சந்தர்ப்பங்கள் பலவும் ஏற்படும் என்பது தெளிவு. எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் பொருந்தக் கூடிய ஒரு சூத்திரத்தையோ, பொது விதியையோ (''சமரசம் கூடவே கூடாது!'') வகுத்திடுவது அறிவுடைமையாகாது. அவரவரும் தமது சொந்த அறிவைப் பயன்படுத்திக்

கொண்டு, அந்தந்தச் சந்தர்ப்பத்திலும் தமக்குரிய நிலையை வகுத்துக்கொள்ளும் ஆற்றலுடையவராய் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் சிந்தனை ஆற்றலுடைய எல்லாப் பிரதிநிதிகளின்* நீடித்த, விடாப்பிடியான, பல்வேறுபட்ட, சர்வாம்ச முயற்சிகளின் மூலம் சிக்கலான அரசியல் பிரச்சினைகளுக்குச் சீக்கிரமாகவும் பிழையின்றியும் தீர்வு காண்பதற்குத் தேவையான அறிவும் அனுபவமும்—இவற்றுடன்கூட—அரசியல் நுட்பத் திறனும் பெற வேண்டியது உண்மையில் கட்சி நிறுவனத்துக்கும், தலைமைப் பதவி வகிப்பதற்குள்ள தகுதியுடைய கட்சித் தலைவர்களுக்குமுள்ள கடமைகளில் ஒன்றாகும்.

நாம் அயராத போராட்டம் நடத்தி வரும், கட்டாயம் நடத்த வேண்டியிருக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் புரட்சிகர மார்க்சியத்துக்கும், அல்லது கம்யூனிசத்துக்கும், இடையிலுள்ள எல்லாப் பாகுபாடுகளையும் நீக்கிவிடுவதற்கு, பொதுவில் சமரசத்துக்கு இடமுண்டு என்னும் முடிவே போதுமானதாகுமெனச் சிறுபிள்ளைத்தனமானோரும் சிறிதும் அனுபவமில்லாதோரும் கற்பனை செய்து கொண்டு விடுகிறார்கள். இத்தகையோர் இயற்கையிலும் சமுதாயத்திலும் எல்லாப் பாகுபாடுகளும் நெகிழ்வுடையவையே என்பதையும் ஓரளவு வரை சம்பிரதாயமானவையே என்பதையும் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை என்றால், நீண்ட காலப்

* ஒவ்வொரு வர்க்கத்தினுள்ளும், அதிக அளவுக்கு அறிவொளி பரவிய நாடுகளில் நிலவும் நிலைமைகளிலும்கூட, மிகவும் முன்னேறிய வர்க்கத்தினுள்ளும்கூட, அத்தருணத்தின் சூழ்நிலை காரணமாய் அவ்வர்க்கத்தின் ஆன்மீக சக்திகள் யாவும் பிரத்தியேக அளவுக்கு உசுப்பிவிடப்பட்டிருக்கும் போதுகூட, சுயமாகச் சிந்தனை செய்யாத, சிந்தனை செய்யும் தகுதியில்லாத வர்க்கப் பிரதிநிதிகள் எப்பொழுதும் இருக்கவே செய்கிறார்கள்—வர்க்கங்கள் இருக்கும் வரை, வர்க்கங்களில்லாத சமுதாயம் தனக்குரிய அடித்தளத்திலே பூரணமாகத் தன்னை உறுதிப்படுத்தி வளர்த்துக் கொள்ளாத வரை—தவிர்க்க முடியாதபடி இருந்தே வருவார்கள். நிலைமைகள் இவ்வாறின்றி வேறு விதமாய் இருப்பின் முதலாளித்துவத்தால், இப்பொழுது அது உண்மையில் இருப்பது போல், வெகுஜனங்களது ஒடுக்குமுறையாளனாக இருக்க முடியாது.

பயிற்சியும் போதமும் அறிவொளியும் அரசியல் அனுபவமும் அன்றாட அனுபவமும் பெறுவதைத் தவிர இவர்களுக்கு உதவ வேறு வழி எதுவுமில்லை. குறிப்பிட்ட எந்த ஒரு வரலாற்றுத் தருணத்திலும் அரசியலில் எழும் நடைமுறைப் பிரச்சினைகளில் புரட்சிகர வர்க்கத்துக்கு ஆபத்தான சந்தர்ப்பவாதத்தின் உருவாக அமைந்த சகிக்கவொண்ணாத, துரோகத்தனமான பிரதான வகை சமரசங்களாக இருப்பவற்றை இனம் கண்டு கொள்வதும், அவற்றை விளக்கிக் கூறவும் எதிர்த்துப் போராடவும் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வதும் முக்கியமாகும். ஒத்த அளவுக்குக் கொள்ளைவெறி கொண்ட நாடுகளது இரு கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற 1914-18ஆம் ஆண்டு ஏகாதிபத்திய போரின் போது, சமூக-தேசியவெறிதான், ''தாயகத்தின் பாதுகாப்புக்கு'' ஆதரவளிப்பதெனும் கூற்றுதான்—இத்தகைய ஒரு போரில் ''தாயகத்தின் பாதுகாப்பு'' என்பது உண்மையில் தமது ''சொந்த'' முதலாளித்துவ வர்க்கத்தின் கொள்ளைவெறிக்குரிய நலன்களின் பாதுகாப்பைத்தான் குறித்தது—சந்தர்ப்பவாதத்தின் பிரதானமான அடிப்படையான வகையாய் இருந்தது. இந்தப் போருக்குப் பிற்பாடு, கொள்ளைக்கார சர்வதேசச் சங்கத்தைப் பாதுகாப்பதும், புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கும் ''சோவியத்'' இயக்கத்துக்கும் எதிராய்த் தமது சொந்த நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்துடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ அமைந்த கூட்டணிகளின் பாதுகாப்பும், ''சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு'' எதிராய் முதலாளித்துவ ஜனநாயகத்தின், முதலாளித்துவ நாடாளுமன்ற முறையின் பாதுகாப்பும் அந்தச் சகிக்கவொண்ணாத, துரோகத்தனமான சமரசங்களின் பிரதான வெளியீடுகளாயின. ஒட்டுமொத்தமாய் இந்தச் சமரசங்கள் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கும் அதன் இலட்சியத்துக்கும் ஆபத்தான சந்தர்ப்பவாதமாய் அமைந்து விட்டன.

''....பிற கட்சிகளுடனான எல்லா வித சமரசத்தையும்... வளைந்து கொடுப்பதற்கும் இணக்கத்துக்குமுரிய எந்தக் கொள்கையையும் தீர்மானமாய் நிராகரித்தே ஆக வேண்டும்''—

என்று ஜெர்மன் இடதுசாரிகள் ஃபிராங்ஃபுர்ட் பிரசுரத்தில் எழுதுகின்றனர்.

இத்தகைய கருத்தோட்டங்களைக் கொண்ட இந்த இடது சாரிகள் போல்ஷிவிசத்தைத் தீர்மானமாய்க் கண்டனம் செய் யாமலிருப்பது ஆச்சரியம்தான்! போல்ஷிவிசத்தின் வரலாறு பூராவிலும், அக்டோபர் புரட்சிக்கு முன்பும் சரி, பிற்பாடும் சரி, முதலாளித்துவக் கட்சிகள் உட்பட பிற கட்சிகளுடன் வளைந்து கொடுப்பதற்கும் இணக்கங்களுக்கும் சமரசங் களுக்குமான உதாரணங்கள் நிறைய இருக்கின்றன என்பது எப்படியும் ஜெர்மன் இடதுசாரிகளுக்குத் தெரியாமல் இருப்பதற்கில்லை!

சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற் காகப் போர் நடத்திக் கொண்டு—அரசுகளிடையே நடை பெறும் சாதாரணப் போர்களில் மிகவும் மூர்க்கமானதைக் காட்டிலும் மிகவும் கடினமான, சிக்கலான, நீண்ட போர் நடத்திக் கொண்டு—வளைந்து கொடுப்பதையும், பகைவர் களின் நலன்களுக்கிடையே ஏற்படும் மோதலை (அது தற் காலிகமானதே என்றாலும்) எவ்விதத்திலும் பயன்படுத்திக் கொள்வதையும், சாத்தியமான கூட்டாளிகளுடனை (இக் கூட்டாளிகள் தற்காலிகமானவர்கள், நிலையற்றவர்கள், ஊச லாட்டமுடையவர்கள், குறிப்பிட்ட நிலைமைகளில் மட்டுமே கூட்டாளிகளாய் இருப்போர் என்றாலுங்கூட) எந்த இணக் கத்தையும் அல்லது சமரசத்தையும் முன்கூட்டியே நிரா கரித்து விடுவதென்றால்—அது எள்ளி நகையாடத்தக்கதல்ல வா? இன்னும் கண்டறியாத, இது வரை எட்டாததாயிருந்த ஒரு மலையின் மீது ஏறுவதென்ற கடினமான பணியை மேற் கொண்டு, வளைந்து நெளிந்த பாதையில் சில சமயம் செல் வதையோ, முன்வைத்த காலைச் சில சமயம் பின்வைப் பதையோ, தேர்வு செய்து கொண்ட பாதையைச் சில சமயம் விட்டு விலகிப் பிறிதொன்றில் செல்ல முயலுவதையோ முன் கூட்டியே நிராகரிப்பது போன்றதல்லவா இது? எனினும் சிறிதும் முதிர்ச்சியடையாத, அனுபவமில்லாத இவர்களுக்கு (இளமைப் பருவமே காரணம் என்றால் அது அவ்வளவு மோச மானதல்ல, இளைஞர்கள் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு இது

போலத்தான் அபத்தம் பேச வேண்டும் என்பது ஆண்டவன் ஆணை) ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சில உறுப்பினர்களிடமிருந்து ஆதரவு—நேரடியானதா மறைமுகமானதா, பகிரங்கமானதா இரகசியமானதா, முழு அளவிலானதா குறையானதா என்பது முக்கியமல்ல—கிடைத்திருக்கிறது!!

பாட்டாளி வர்க்கத்தின் முதலாவது சோஷலிசப் புரட்சிக்குப் பிறகும், ஒரு நாட்டில் முதலாளித்துவ வர்க்கம் வீழ்த்தப்பட்ட பிறகும்கூட, அந்நாட்டின் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தைக் காட்டிலும் நீண்ட காலத்துக்குப் பலவீனமானதாகவே இருந்து வருகிறது. முதலாளித்துவ வர்க்கத்துக்குள்ள விரிவான சர்வதேசப் பிணைப்புகளும், மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்திய நாட்டில் சிறு வீதப் பண்ட உற்பத்தியாளர்களால் தன்னியல்பாகவும் தொடர்ச்சியாகவும் முதலாளித்துவமும் முதலாளித்துவ வர்க்கமும் திரும்பவும் தோற்றுவிக்கப்படுவதும் புத்துயிரூட்டப்படுவதுமே இதற்குக் காரணம். மிகுந்த வலுவுள்ள இந்தப் பகைவனைத் தோற்கடிப்பதெனில், முழு முனைப்பான முயற்சிகளை மேற்கொள்வதன் மூலமும், பகைவர்களிடையே இருக்கக் கூடிய எந்தப் பிளவையும்—மிகவும் சிறியதே ஆயினும்—பல்வேறு நாடுகளின் முதலாளித்துவ வர்க்கத்தாரின் நலன்களிடையிலும் அந்தந்த நாட்டினுள்ளும் முதலாளித்துவ வர்க்கத்தின் பல்வேறு கோஷ்டிகள் அல்லது வகைகளின் நலன்களிடையிலும் எழக் கூடிய எந்த மோதலையும் மிகவும் தீர்க்கமாகவும் கவனமாகவும் விழிப்புடனும் சாமர்த்தியமாகவும் கட்டாயமாகவும் பயன்படுத்திக் கொள்வதன் மூலமும், மற்றும் வெகுஜனக் கூட்டாளியை—இக்கூட்டாளி தற்காலிகமானவர்தான், ஊசலாட்டமுடையவர்தான், நிலையற்றவர்தான், நம்ப முடியாதவர்தான், குறிப்பிட்ட நிலைமைகளில் மட்டுமே கூட்டாளியாய் இருப்பவர்தான் என்றாலுங்கூட—வென்று கொள்வதற்கான எந்தவொரு மிகச் சிறிய வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்வதன் மூலமுந்தான் இது சாத்தியமாகும். இதைப் புரிந்து கொள்ளாதவர்கள், மார்க்சியத்தை, பொதுவாகவே நவீன கால விஞ்ஞான சோஷலிசத்தைக் கடுகளவுங்கூட புரிந்து கொள்ளும் ஆற்றல் தமக்கில்லை என்

பதைத்தான் வெளிப்படுத்திக் கொள்கிருர்கள். செயலில் இந்த உண்மையைக் கையாளும் திறன் தமக்குண்டு என் பதை ஓரளவு கணிச அளவிலான காலத்திலும் நாளுவிதமான அரசியல் சூழ்நிலைமைகளிலும் நடைமுறையில் நிரூபித்துக் காட்டாதவர்கள், உழைக்கும் மனித சமுதாயத்தார் அனே வரையும் சுரண்டலாளர்களிடமிருந்து விடுவிப்பதற்காகப் புரட்சிகர வர்க்கம் நடத்தும் போராட்டத்தில் அதற்குத் துணை புரியும் வழியை இன்னமும் தெரிந்து கொள்ளாதவர் களே ஆவர். பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் வென்று கொள்வதற்கு முற்பட்ட காலத்துக்கும் அதற் குப் பிற்பட்ட காலத்துக்கும் இது ஒருங்கே பொருந்தும்.

நமது தத்துவம் செயலுக்கான வழிகாட்டியே அன்றி, வறட்டுச் சூத்திரமல்ல என்று மார்க்சும் எங்கெல்சும் கூறி னர்.[66] கார்ல் காவுத்ஸ்கி, ஒட்டோ பெளவர் முதலானேர் போன்ற ''முழுமையான'' மார்க்சியவாதிகள் புரிந்த மிகப் பெருந்தவறு, மிகப் பெருங்குற்றம் என்னவெனில், அவர்கள் இதனைப் புரிந்துகொள்ளாததுதான், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மிக முக்கியமான தருணங்களில் அவர்கள் இதனைச் செயற்படுத்தும் திறனற்ருேராய் இருந்ததுதான். மார்க்சியக் கட்டத்துக்கு முற்பட்ட பிரபல ருஷ்ய சோஷலிஸ்டான நி.க. செர்னிஷேவ்ஸ்கி ''அரசியல் செயற்பாடு நேவ்ஸ்கி பிராஸ்பெக்ட்டின் நடைபாதை போன்றதல்ல'' (செயின்ட் பீட்டர்ஸ்பர்கின் நேர் ஒழுங்கான பிரதான வீதியின் நன்கு பராமரிக்கப்படும் சமதளமான விசால நடைபாதை) என்று சொல்வது வழக்கம்.[67] செர்னிஷேவ்ஸ்கியின் காலத்துக்குப் பிற்பாடு இந்த உண்மையைப் புறக்கணித்ததாலோ, மறந்த தாலோ ருஷ்யப் புரட்சியாளர்கள் அளவிலாத் தியாகங்கள் புரிய வேண்டியதாயிற்று. பிற்பட்ட நிலையிலிருந்த ருஷ்யர் கள் இந்த உண்மையைக் கற்றுணர்வதற்காகச் செலுத்த நேர்ந்தது போல் அவ்வளவு கடுமையான விலையை இடது சாரிக் கம்யூனிஸ்டுகளும் தொழிலாளி வர்க்கத்தின் பால் விசுவாசம் கொண்ட மேற்கு ஐரோப்பிய, அமெரிக்கப் புரட்சியாளர்களும் செலுத்த நேராதபடித் தடுப்பதற்கு எல்லா வழிகளிலும் நாம் முயன்ருக வேண்டும்,

ஜாரிசத்தின் வீழ்ச்சிக்கு முன்பு ருஷ்யப் புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் முதலாளித்துவ மிதவாதிகளின் சேவைகளை அடிக்கடி பயன்படுத்திக் கொண்டனர். அதாவது, இந்த மிதவாதிகளுடன் எத்தனையோ முறை நடைமுறை சார்ந்த சமரசங்கள் செய்து கொண்டனர். போல்ஷிவிசம் உதித்தெழுவதற்கு முன்பே, 1901-02ல் இஸ்க்ராவின் பழைய ஆசிரியர் குழு (பிளெஹானவ், அக்செல்ரோத், ஸசூலிச், மார்த்தவ், பத்ரேசவ் ஆகியோரையும் என்னையும் கொண்டது) முதலாளித்துவ மிதவாதத்தின் அரசியல் தலைவரான ஸ்துருவேயுடன் (அதிக காலத்துக்கு இல்லை என்பது உண்மையே என்றாலும்) முறைப்படி அரசியல் கூட்டணி நிறுவிக் கொண்டது; அதே போதில் முதலாளித்துவ மிதவாதத்தை எதிர்த்தும், தொழிலாளி வர்க்க இயக்கத்தில் அதன் செல்வாக்கின் அற்பசொற்ப வெளிப்பாடுகளை எதிர்த்தும் அந்த ஆசிரியர் குழு விடாப்பிடியான, தயவு தாட்சண்யமற்ற கடுமையான, சித்தாந்த, அரசியல் போராட்டம் நடத்த முடிந்தது. போல்ஷிவிக்குகள் எப்பொழுதுமே இக்கொள்கையைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். 1905 முதலாய் அவர்கள் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் ஜாரிசத்துக்கும் எதிராய்த் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்குமிடையிலான கூட்டணியை இடையறாது ஆதரித்து வந்துள்ளனர். ஆயினும் அவர்கள் ஜாரிசத்துக்கு விரோதமாய் முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு ஒருபோதும் ஆதரவளிக்க மறுத்ததே இல்லை (உதாரணமாய், தேர்தல்களின் இரண்டாவது கட்டம், அல்லது இரண்டாவது வாக்குப் பதிவின் போது); முதலாளித்துவ-புரட்சிகர விவசாயிக் கட்சியினரான ''சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கு'' எதிரான எங்களது ஓயாத சித்தாந்த, அரசியல் போராட்டத்தைக் கைவிடவே இல்லை; இவர்கள் தம்மைப் பொய்யாக சோஷலிஸ்டுகள் என்று வர்ணித்துக் கொள்ளும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளாவர் என்பதைத் தொடர்ந்து அம்பலம் செய்து வந்தோம். 1907ல் டூமா தேர்தல்களின் போது குறுகிய காலத்துக்கு போல்ஷிவிக்குகள் ''சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடன்'' முறைப்படி அரசியல் கூட்டணி நிறுவிக்

கொண்டனர். 1903க்கும் 1912க்கும் இடையில் பல ஆண்டுகளில் நாங்கள் மென்ஷிவிக்குகளுடன் ஒரே சமூக-ஜனநாயகக் கட்சியில் முறைப்படி ஒன்றுபட்டிருந்தோம்; ஆயினும் சந்தர்ப்பவாதிகளும் பாட்டாளி வர்க்கத்தினுள் முதலாளித்துவச் செல்வாக்கினைப் புகுத்துவதற்கான சாதனமாய் இருந்தோருமான அவர்களுக்கு எதிராக எங்களுடைய சித்தாந்த, அரசியல் போராட்டத்தை நாங்கள் ஒருபோதும் நிறுத்தி வைக்கவே இல்லை. போரின் போது ''காவுத்ஸ்கிவாதிகளுடனும்'', இடதுசாரி மென்ஷிவிக்குகளுடனும் (மார்த்தவ்), ''சோஷலிஸ்டு-புரட்சியாளர்களில்'' ஒரு பகுதியோருடனும் (செர்னேவ், நத்தன்சோன்) சிற்சில சமரசங்கள் செய்து கொண்டோம்; ஸிம்மர்வால்டிலும் கின்தாலிலும் நாங்கள் இவர்களுடன் சேர்ந்திருந்தோம்,[68] கூட்டு அறிக்கைகள் வெளியிட்டோம். ஆயினும் நாங்கள் ''காவுத்ஸ்கிவாதிகளையும்'' மார்த்தவையும் செர்னேவையும் எதிர்த்து (நத்தன்சோன் ''புரட்சிகரக் கம்யூனிஸ்டு''-நரோதியவாதியாக இருந்து[69] 1919ல் இறந்தார், எங்களுக்கு மிகவும் நெருங்கியவராய் இருந்தவர், எங்களுடன் அனேகமாய்க் கருத்து ஒற்றுமை கொண்டிருந்தவர்) எங்களுடைய சித்தாந்த, அரசியல் போராட்டத்தை ஒருபோதும் நிறுத்தவோ தணித்துக் கொள்ளவோ இல்லை. அக்டோபர் புரட்சி நடைபெற்ற அதே கணத்தில் நாங்கள் குட்டிமுதலாளித்துவ விவசாயி மக்களுடன் முறைப்படி இல்லாவிட்டாலும், மிகவும் முக்கியமான (மிகவும் வெற்றிகரமானதுங்கூட) அரசியல் கூட்டணி வகுத்துக் கொண்டோம். சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் நிலத்துறை வேலைத்திட்டத்தை எந்தவொரு மாற்றமுமின்றி அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்வதன் வாயிலாக இதனைச் செய்தோம்—அதாவது, விவசாயிகளுடன் நாங்கள் உடன்பாடு காண விரும்பினோமே அன்றி அவர்களை ''நசுக்கி ஒடுக்கிவிட'' விரும்பவில்லை என்பதை அவர்களுக்கு நிரூபித்துக் காட்டும் பொருட்டு மறுக்க முடியாததொரு சமரசம் செய்து கொண்டோம். அதேபோதில் ''இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடன்'' அரசாங்கத்தில் பங்கு கொள்வதும் அடங்கலாய் முறைப்படியானதோர் அரசியல் கூட்டணி

நிறுவிக் கொள்ளலாமென அவர்களிடம் முன்மொழிந்தோம் (விரைவில் அவ்வாறே நிறுவிக் கொண்டோம்). பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை முடிவான பின் அவர்கள் இந்தக் கூட்டணியை உடைத்தனர்; பிறகு 1918 ஜூலையில் ஆயுத மேந்திக் கலகம் செய்யும் அளவுக்கும், பின்னர் எங்களை எதிர்த்து ஆயுதப் போராட்டம் நடத்தும் அளவுக்கும் சென்றனர்.

ஆகவே ஜெர்மன் இடதுசாரிகள், ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியானது ''சுயேச்சையாளர்களுடன்'' (''ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியான'' காவுத்ஸ்கிவாதிகளுடன்) கூட்டணி நிறுவிக் கொள்ளும் கருத்தை ஆதரித்ததற்காக அதனைத் தாக்குவது எங்கள் அபிப்பிராயத்தில் முற்றிலும் அர்த்தமற்றதாகும். தவறு இழைப்பது ''இடதுசாரிகளே'' என்பது நன்கு விளங்குகிறது. ருஷ்யாவிலுங்கூட ஜெர்மன் ஷெய்டெமன்களுக்கு இணையான வலதுசாரி மென்ஷிவிக்குகளும் (கேரென்ஸ்கி அரசாங்கத்தில் பங்கு கொண்டவர்கள்), ஜெர்மன் காவுத்ஸ்கிவாதிகளுக்கு இணையாகவும் வலதுசாரி மென்ஷிவிக்குகளுக்கு எதிராளிகளாகவும் அமைந்த இடதுசாரி மென்ஷிவிக்குகளும் (மார்த்தவ்) இருந்து வந்தனர். தொழிலாளி வெகுஜனங்கள் மென்ஷிவிக்குகளின் பக்கமிருந்து படிப்படியாக போல்ஷிவிக்குகளின் பக்கம் வந்தனர் என்பதை 1917ல் தெளிவாகக் காண முடிந்தது. 1917 ஜூனில் நடைபெற்ற சோவியத்துக்களின் முதலாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் எங்களுக்கு 13 சதவீதமான வாக்குகளே கிடைத்தன. சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் பெரும்பான்மை பெற்றிருந்தனர். சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரசில் (பழைய முறைப்படி 1917, அக்டோபர் 25) எங்களுக்கு 51 சதவீதமான வாக்குகள் கிடைத்தன. ஜெர்மனியில் தொழிலாளர்கள் இதே போலவும் இதற்கு முழுதொத்த முறையிலும் வலதுசாரிகளின் பக்கமிருந்து இடதுசாரிகளின் பக்கத்துக்கு வந்ததானது, உடனே கம்யூனிஸ்டுகளைப் பலப்படுத்தாமல், இடைநிலையிலிருந்த ''சுயேச்சைக் கட்சியையே''—இக்கட்சி எக்காலத்திலும் சுயேச்சை

யான அரசியல் கருத்துக்களோ, சுயேச்சையான கொள்கையோ இல்லாமல் ஷெய்டெமன்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்குமிடையே ஊசலாடிய வண்ணமிருந்த போதிலுங் கூட—முதலில் பலப்படுத்தியதன் காரணம் என்ன?

கண்கூடான காரணங்களில் ஒன்று ஜெர்மன் கம்யூனிஸ்டுகளுடைய தவறுன போர்த்தந்திரமாகும். இவர்கள் அச்சமின்றியும் நேர்மையுடனும் இந்தப் பிழையை ஏற்றுக்கொண்டு இதனைத் திருத்திக் கொள்ளக் கற்றுக் கொண்டாக வேண்டும். பிற்போக்கான முதலாளித்துவ நாடாளுமன்றத்திலும் பிற்போக்கான தொழிற்சங்கங்களிலும் பங்கெடுத்துக் கொள்வதன் அவசியத்தை இவர்கள் மறுத்ததில் இந்தத் தவறு அடங்கியிருந்தது; ''இடதுசாரி'' இளம் பருவக் கோளாறின் எண்ணற்ற வெளிப்பாடுகளில் இது அடங்கியிருந்தது. இந்த ''இடதுசாரி'' இளம் பருவக் கோளாறு இப்பொழுது வெளியே தெரியும்படி வெளிப்பட்டு விட்டது; இதனுல் இது முன்னிலும் தீர்க்கமாகவும் விரைவாகவும் உடலுக்கு இன்னும் கூடுதலான அனுகூலம் உண்டாகும் முறையிலும் குணப்படுத்தப்படும்.

ஜெர்மன் ''சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி'' ஒரு படித்தான அமைப்பல்ல என்பது கண்கூடு. பழைய சந்தர்ப்பவாதத் தலைவர்களுடன் (காவுத்ஸ்கியும் ஹில்ஃபர்டிங்கும் மற்றும் கணிச அளவுக்கு கிரிஸ்பினும் லெதெபூரும் ஏனையோரும்) கூடவே—இவர்கள் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குமுள்ள முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கவும் தமக்கு ஆற்றலில்லை என்பதை வெளிப்படுத்திக் கொண்டு விட்டனர்—இக்கட்சியினுள் இடதுசாரி, பாட்டாளி வர்க்கப் பிரிவு ஒன்றும் தோன்றியுள்ளது; இது மிக வேகமாய் வளர்ந்து வருகிறது. இக்கட்சியின் உறுப்பினர்களில் லட்சக்கணக்கானோர் (இது சுமார் ஏழரை லட்சம் உறுப்பினர்களைக் கொண்டதென்று நினைக்கிறேன்), ஷெய்டெமனை விட்டொழித்து மிக வேகமாய்க் கம்யூனிசத்தின் பக்கத்துக்கு மாறி வந்து கொண்டிருக்கும் பாட்டாளிகளாவர். இந்தப்

பாட்டாளி வர்க்கப் பிரிவு, இக்கட்சி உடனடியாகவும் நிபந்தனையின்றியும் மூன்ருவது அகிலத்துடன் இணைந்துவிட வேண்டுமென்று ஏற்கெனவே—''சுயேச்சையாளர்களின்'' லேப்ஸிக் காங்கிரசில் (1919)—பிரேரணை செய்திருக்கிறது. இக்கட்சியின் இந்தப் பிரிவுடன் ''சமரசம்'' செய்து கொள்ள அஞ்சுவது நிச்சயம் நகைக்கத்தக்கதே ஆகும். இதற்கு மாருக, அவர்களுடன் பொருத்தமான ஒரு சமரசத்தைத் தேடிக் கண்டுபிடிப்பது கம்யூனிஸ்டுகளுக்குள்ள கடமை ஆகும். இந்தச் சமரசம் ஒரு புறத்தில் இப்பிரிவினருடன் அவசியமான முழுமையான இணைப்புக்கு உதவுவதாகவும், அதனைத் துரிதப்படுத்துவதாகவும், மறு புறத்தில் ''சுயேச்சையாளர்களின்'' சந்தர்ப்பவாத வலதுசாரிப் பிரிவினரை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் நடத்தும் சித்தாந்த, அரசியல் போராட்டத்துக்கு எவ்வகையிலும் ஊறு செய்யாததாகவும் இருத்தல் வேண்டும்.

சமரசத்திற்கான தக்க வடிவத்தை வகுத்துக் கொள்வது எளியதாய் இல்லாமல் இருக்கலாம்—ஆனல் ஜெர்மன் தொழிலாளர்களும் ஜெர்மன் கம்யூனிஸ்டுகளும் ''எளிய'' வழியில் வெற்றியை வந்தடைந்து விடலாமென வாக்குறுதி அளிப்போர் எத்தர்களாகவே இருப்பார்கள்.

பாட்டாளி வர்க்கத்தாருக்கும் அரைகுறைப் பாட்டாளி வர்க்கத்தாருக்கும் (பகுதியளவுக்குத் தமது உழைப்பாற்றலை விற்றுப் பிழைப்பவர்கள்), அரைகுறைப் பாட்டாளி வர்க்கத்தாருக்கும் சிறு விவசாயிகளுக்கும் (சிறு கைவினைஞருக்கும், கைத்தொழிலாளருக்கும், பொதுவாகச் சிறு உடைமையாளருக்கும்), சிறு விவசாயிகளுக்கும் நடுத்தர விவசாயிகளுக்கும், இன்னபிற பகுதியோருக்கும் இடைப்பட்ட ஏராளமான பல்வேறு வகையோராலும் ''தூய்மையான'' பாட்டாளி வர்க்கம் சூழப்பட்டிராவிடில், பாட்டாளி வர்க்கமே கூட அதிக வளர்ச்சி பெற்ற பகுதியாகவும் அவ்வளவாக வளர்ச்சி பெருத பகுதியாகவும் பிரிக்கப்பட்டிராவிடில், பிரதேசம், தொழில், சில நேரங்களில் மதத்தின் அடிப்படையிலும், பிற வழிகளிலும் அது பிரிக்கப்பட்டிராவிடில், முதலாளித்துவம் முதலாளித்துவமாய் இராது. கம்யூனிஸ்டுக்

கட்சியானது — பாட்டாளி வர்க்கத்தின், வர்க்க உணர்வு கொண்ட அதன் பகுதியின் முன்னணிப் படையான கம்யூனிஸ்டுக் கட்சியானது — வளைந்து கொடுப்பதும், பாட்டாளி வர்க்கத்தாரின் பல்வேறு தொகுப்புகளுடனும் தொழிலாளர்கள், சிறு உடைமையாளர்களின் பல்வேறு கட்சிகளுடனும் இணக்கத்துக்கு வருவதும், சமரசங்கள் செய்து கொள்வதும் அவசியம் என்பது, அத்தியாவசியம் என்பது இவை யாவற்றிலிருந்தும் பெறப்படுகிறது. இந்தப் போர்த்தந்திரங்களைப் பாட்டாளிகளின் வர்க்க உணர்வின் பொது நிலையையும், புரட்சிகர மனப்பான்மையையும், போராடுவதற்கும் வெற்றியடைவதற்குமான ஆற்றலையும் உயர்த்தும் பொருட்டு— குறைக்கும் பொருட்டல்ல—எப்படி அனுசரிப்பதென்பது தெரிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். போல்ஷிவிக்குகள் மென்ஷிவிக்குகள் மீது வெற்றி காண்பதற்கு, 1917 அக்டோபர் புரட்சிக்கு முன்பு மட்டுமின்றி, அதற்குப் பிற்பாடுங்கூட வளைந்து கொடுத்து மாற்றமைவு செய்தலும் இணக்கங்களும் சமரசங்களும் செய்து கொள்வதுமாகிய போர்த்தந்திரங்கள் அவசியமாயிருந்தன என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். ஆனல் வளைந்து கொடுத்து மாற்றமைவு செய்தலும் சமரசங்களும் மென்ஷிவிக்குகளைப் பலவீனப்படுத்திப் போல்ஷிவிக்குகளுக்குத் துணை புரியத் தக்கனவாகவும், போல்ஷிவிக்குகளை ஆக்கம் பெறச் செய்து உறுதியாக்கத்தக்கனவாகவும் இருந்தன என்பதைக் கூறத் தேவையில்லை. குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் (மென்ஷிவிக்குகள் அடங்கலாய்) முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்குமிடையே, முதலாளித்துவ ஜனநாயகத்துக்கும் சோவியத் ஆட்சியமைப்புக்குமிடையே, சீர்திருத்தவாதத்துக்கும் புரட்சிவாதத்துக்குமிடையே, தொழிலாளர்களிடமுள்ள நேயத்துக்கும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்திடமுள்ள அச்சத்துக்குமிடையே, இன்ன பிறவற்றுக்குமிடையே தவிர்க்க முடியாதவாறு ஊசலாடுகின்றனர். கம்யூனிஸ்டுகளுடைய சரியான போர்த்தந்திரம் இந்த ஊசலாட்டங்களைப் பயன்படுத்திக் கொள்வதிலே அடங்கியிருக்கிறதே அன்றி, அவற்றை உதாசீனப்படுத்துவதில் அல்ல.

இவற்றைப் பயன்படுத்திக் கொள்வதெனில், பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் வரும் பகுதியோருக்கு—அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் வரும் போதும், எந்த அளவுக்கு வருகிறார்கள் என்பதற்கு ஏற்பவும்—சலுகைகள் தருவதும், இவற்றுடன் கூடவே, முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் செல்வோரை எதிர்த்துப் போராடுவதும் அவசியமாகி விடுகின்றன. பிழையற்ற போர்த்தந்திரத்தைச் செயல்படுத்தியதன் விளைவாய் எங்கள் நாட்டில் மென்ஷிவிசம் சிதையத் தொடங்கி, மேலும் மேலும் சிதைந்து வந்திருக்கிறது; பிடிவாதமாயிருந்த சந்தர்ப்பவாதத் தலைவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு வருகிறார்கள்; சிறந்த தொழிலாளர்களும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளில் சிறந்த பகுதியோரும் எங்களுடைய முகாமுக்குக் கவர்ந்திழுக்கப்படுகிறார்கள். இது நீண்ட நெடிய நிகழ்ச்சிப்போக்கு. ''சமரசங்கள் கூடவே கூடாது, வளைந்து கொடுத்து மாற்றமைவு செய்தல் கூடவே கூடாது'' என்ற அவசர ''முடிவு'' புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் செல்வாக்கு பலம் பெறுவதற்கும், அதன் சக்திகள் வளர்ந்து பெருகுவதற்கும் குந்தகமே விளைவிக்கும்.

கடைசியாக, ஜெர்மன் ''இடதுசாரிகளின்'' சந்தேகத்துக்கு இடமில்லாத தவறுகளில் ஒன்று, வெர்சேய் உடன்படிக்கையை ஏற்க அவர்கள் அடியோடு மறுப்பதில் அடங்கியுள்ளது. இந்தக் கருத்தோட்டம் எவ்வளவுக்கு எவ்வளவு ''பலமாகவும்'', ''தடபுடலாகவும்'', எவ்வளவுக்கு எவ்வளவு ''அழுத்தம் திருத்தமாகவும்'' முடிவாகவும் எடுத்துரைக்கப்படுகிறதோ (உதாரணமாய் கா. ஹோர்னெரால்), அவ்வளவுக்கு அவ்வளவு அது அர்த்தமற்றதாகவே தோன்றுகிறது. அன்டான்டின் அரசுகளை எதிர்த்து போர் புரிய ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டு அமைத்துக் கொள்ள வேண்டுமெனக் கூறும் அளவுக்குச் சென்றுவிட்ட ''தேசிய போல்ஷிவிசத்தின்'' (லௌபென்பெர்கும் ஏனையோரும்) படுமோசமான மடத்தனத்தை நிராகரித்தால் மட்டும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தற்போதைய நிலைமைகளில் போதாது. சோவியத் ஜெர்மனி (ஜெர்மன்

சோவியத் குடியரசு ஒன்று விரைவில் தோன்றுமெனக் கொள்வோமாயின்) வெர்சேய் உடன்படிக்கையைச் சில காலத்துக்கு அங்கீகரிக்க வேண்டியிருக்கும், அதற்குப் பணிய வேண்டியிருக்கும் என்பதை ஒத்துக் கொள்ள மறுப்பது முற்றிலும் தவறான போர்த்தந்திரமாகும் என்பதை உணர்ந்தாக வேண்டும். ஆனால் ''சுயேச்சையாளர்கள்''—அரசாங்கத்தில் ஷெய்டெமன்கள் பங்கு கொண்டு வந்த ஒரு காலத்தில், ஹங்கேரியில் சோவியத் ஆட்சியதிகாரம் இன்னும் கவிழ்க்கப்பட்டுவிடாத போது, வியென்னுவில் சோவியத் புரட்சி ஒன்று ஏற்பட்டு அது சோவியத் ஹங்கேரிக்கு ஆதரவு அளிப்பது இன்னமும் சாத்தியமாகவே இருந்து வந்த போது—வெர்சேய் உடன்படிக்கை கையெழுத்திடப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்ததானது அப்போதைய சூழ்நிலைமைகளில் சரியானதே என்பதாக இதிலிருந்து பெறப்பட்டு விடவில்லை. அப்பொழுது ''சுயேச்சையாளர்கள்'' வளைந்து கொடுத்து மாற்றமைவு செய்து கொண்ட முறை படுமோசமாய் இருந்தது. ஏனெனில் அவர்கள் துரோகிகளான ஷெய்டெமன்களுக்கு அனேகமாய்த் தாமே பொறுப்பேற்றுக் கொண்டு விட்டனர்; ஷெய்டெமன்களை எதிர்த்து உக்கிரமான (சிறிதும் அசங்காமல் நிதானமாய் நடத்தப்பட வேண்டிய) வர்க்கப் போராட்டத்துக்காகப் பாடுபடாமல், ''வர்க்கமற்ற'', அல்லது ''வர்க்கத்துக்கு அப்பாற்பட்ட'' கண்ணோட்டத்துக்குப் பாடுபடும் நிலைக்கு அனேகமாய்ச் சரிந்து சென்று விட்டனர்.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் ஜெர்மன் கம்யூனிஸ்டுகள், கம்யூனிசம் வெற்றிவாகை சூடுமாயின் வெர்சேய் உடன்படிக்கையை நிராகரித்து விடுவோமென்ற நேரடியான, திட்டவட்டமான வாக்குறுதி அளிப்பதன் மூலம் தமக்குச் செயல் சுதந்திரம் இல்லாதபடிச் செய்து கொண்டுவிடக் கூடாதென்பது தெளிவு. அவ்வாறு செய்வது மடமையாகும். அவர்கள் இவ்வாறே சொல்ல வேண்டும்: ஷெய்டெமன்களும் காவுத்ஸ்கிவாதிகளும் பல துரோகச் செயல்கள் புரிந்து, சோவியத் ருஷ்யாவுடனும் சோவியத் ஹங்கேரியுடனும் கூட்டணி ஏற்படும் சந்தர்ப்பங்களை தடுத்து வந்

தனர் (ஓரளவுக்கு அவற்றைப் பாழ்படுத்தியும் விட்டனர்). கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் இத்தகைய கூட்டணி ஏற்படு வதற்கு உதவியாகவும், அதற்கு வழிவகுக்கவும் எங்களால் இயன்றது அனைத்தையும் செய்வோம். ஆயினும் என்ன நேர்ந்தாலும் வெர்சேய் உடன்படிக்கையை நிராகரிப்போ மென்றோ, உடனடியாகவே அவ்வாறு செய்வோமென்றோ, எவ்வகையிலும் நாங்கள் பொறுப்பேற்கவில்லை. அது வெற்றி கரமாய் நிராகரிக்கப்படுவதற்கான சாத்தியப்பாடு சோவி யத் இயக்கம் ஜெர்மனியில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் காணும் வெற்றிகளையே பொறுத்திருக்கும். ஷெய்டெமன் களும் காவுத்ஸ்கிவாதிகளும் இந்த இயக்கத்துக்குக் குந்தகம் புரிந்து வந்துள்ளனர். நாங்கள் இதற்குத் துணை புரிந்து வருகிறோம். இதுவே இவ்விவகாரத்தின் சாரப்பொருள். அடிப்படையான வேறுபாடு இதில்தான் அடங்கியுள்ளது. எங்களுடைய வர்க்கப் பகைவர்களான சுரண்டலாளர்களும் அவர்களது ஷெய்டெமன், காவுத்ஸ்கிவாத அடிவருடிகளும் ஜெர்மன் சோவியத் இயக்கத்தையும் சர்வதேச சோவியத் இயக்கத்தையும் ஜெர்மன் சோவியத் புரட்சியையும் சர்வ தேச சோவியத் புரட்சியையும் பலப்படுத்துவதற்கான பல வாய்ப்புகளை நழுவவிட்டுவிட்ட குற்றம் அவர்களையே சாரும். ஜெர்மனியில் நடைபெறும் சோவியத் புரட்சி சர்வதேச சோவியத் இயக்கத்தை வலுப்பெறச் செய்யும். இவ்வியக் கம் வெர்சேய் உடன்படிக்கைக்கும் பொதுவில் சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான வலிமை மிக்க அரணாகும் (நம்பகமான, தகர்க்க இயலாத, உலகு தழுவிய ஒரே அர ணாகும்). வெர்சேய் உடன்படிக்கையிலிருந்து விடுதலை பெறு வதற்கு முழுமையான, திட்டவட்டமான, உடனடியான முதல் முக்கியத்துவம் அளிப்பதானது, அதுவும் ஏகாதிபத் தியத்தால் ஒடுக்கப்பட்டுள்ள பிற நாடுகளை ஏகாதிபத்தியத் தளைகளிலிருந்து விடுவிக்கும் பிரச்சினைக்கும் முன்னதான முதல் முக்கியத்துவம் அளிப்பதானது அற்பத்தனமான குட்டி முதலாளித்துவத் தேசியவாதமாகும்; இது புரட்சிகர சர்வ தேசியத்துக்குப் பொருந்தாது (காவுத்ஸ்கிகளுக்கும் ஹில் ஃபர்டிங்குகளுக்கும் ஒட்டோ பௌவர்களுக்கும் இவர்களைச்

சேர்ந்த கும்பல்களுக்கும் தான் பொருந்தும்). ஜெர்மனி அடங்கலான பெரிய ஐரோப்பிய நாடுகளில் எதிலும் முதலாளித்துவ வர்க்கம் வீழ்த்தப்படுவதானது சர்வதேசப் புரட்சிக்கு மிகப் பெரியதோர் ஆதாயமாய் இருக்குமாதலால், இதன் பொருட்டு வெர்சேய் உடன்படிக்கை மேலும் அதிக காலத்துக்கு நீடிக்க ஒத்துக் கொள்ளலாம் என்பதுடன், அவசியமாய் இருக்குமானல் ஒத்துக் கொள்ளவும் வேண்டும். தனித்து நிற்கும் ருஷ்யாவால் புரட்சியின் அனுகூலத்துக்காக வேண்டி பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையைப் பல மாதங்களாய்ச் சகித்துக் கொள்ள முடியும் போது, சோவியத் ருஷ்யாவுடன் கூட்டணி கொண்டுள்ள ஒரு சோவியத் ஜெர்மனியால் வெர்சேய் உடன்படிக்கை இருப்பதை புரட்சியின் அனுகூலத்துக்காக வேண்டி, மேலும் அதிக காலத்துக்குச் சகித்துக் கொள்வது அசாத்தியமானதல்ல.

பிரான்ஸ், பிரிட்டன் முதலானவற்றின் ஏகாதிபத்தியவாதிகள் ஜெர்மன் கம்யூனிஸ்டுகளைக் கிளர்த்திவிட்டுத் தமது கண்ணியில் சிக்க வைக்க எத்தனிக்கின்றனர்; ''வெர்சேய் உடன்படிக்கையில் கையெழுத்திட மாட்டோமெனச் சொல்லுங்கள்!'' என்று அவர்கள் தூண்டி விடுகின்றனர். இடதுசாரி கம்யூனிஸ்டுகள், சூழ்ச்சிமிக்க, தற்போது அதிக பலம் படைத்த பகைவனுக்கு எதிராய்ச் சாமர்த்தியமாய்த் தந்திரம் புரிந்து, ''இப்பொழுது வெர்சேய் உடன்படிக்கையில் கையெழுத்திடுகிறோம்'' என்று அப்பகைவனிடம் சொல்வதற்குப் பதிலாய், அவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் கண்ணிக்குள் குழந்தைகளைப் போல் சென்று சிக்கிக் கொள்கிறார்கள். நமக்குச் செயல் சுதந்திரம் இல்லாதபடி முன்கூட்டியே செய்து கொள்வதும், தற்போது நம்மைக் காட்டிலும் அதிக ஆயுத பலங் கொண்ட பகைவனுக்கு, நாம் அவனை எதிர்த்துப் போராடப் போகிறோமா, எப்பொழுது போராடுவோம் என்பதை எல்லாம் பகிரங்கமாக அறிவிப்பதும் புரட்சிவாதமாகாது; அசட்டுத்தனமே ஆகும். நமக்கல்லாமல் பகைவனுக்கே நிலைமை அனுகூலமாயிருக்கிறதென்பது நன்றாய்த் தெரியும் ஒரு நேரத்தில் போரை ஏற்றுக்

களம் புகுவது பெரும் குற்றமாகும். புரட்சிகர வர்க்கத்தின் அரசியல் தலைவர்கள், தெளிவாகவே பிரதிகூலமாயுள்ள ஒரு போரில் தட்டிக் கழிக்கும் படியான செயலில் இறங்கும் பொருட்டு ''வளைந்து கொடுத்து மாற்றமைவு செய்யவோ, இணக்கமும் சமரசமும் காணவோ'' முற்படும் ஆற்றலில்லாதவர்களாய் இருப்பார்களாயின், அவர்கள் முற்றிலும் உதவாக்கரைத் தலைவர்களே ஆவர்.

9

பிரிட்டனில் ''இடதுசாரி'' கம்யூனிசம்

பிரிட்டனில் இன்னமும் கம்யூனிஸ்டுக் கட்சி இல்லை. ஆனால் அங்கு தொழிலாளர்களிடையே சக்தி வாய்ந்த, புத்தம் புதிய, விரிவான, விரைவாய் வளர்ந்து வரும் கம்யூனிஸ்டு இயக்கம் இருந்து வருகிறது. இவ்வியக்கம் ஆர்வமிக்க நன்னம்பிக்கை ஊட்டுவதாயுள்ளது. கம்யூனிஸ்டுக் கட்சியை அமைத்துக் கொள்ள விரும்பும்—இந்நோக்கத்துடன் ஏற்கெனவே தம்மிடையே பேச்சுவார்த்தைகள் நடத்திவரும்—சில அரசியல் கட்சிகளும் நிறுவனங்களும் (''பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி''[70], ''சோஷலிஸ்டுத் தொழிற்கட்சி'', ''தெற்கு வேல்ஸ் சோஷலிஸ்டுக் கழகம்'', ''தொழிலாளர் சோஷலிஸ்டுச் சம்மேளனம்''[71]) அங்கு இருக்கின்றன. இவற்றில் கடைசியில் குறிக்கப்பட்ட நிறுவனத்தின் வார வெளியீடான *Workers' Dreadnought*[72]ல் (மலர் 6, இதழ் 48, 1920, பிப்ரவரி 21) ''கம்யூனிஸ்டுக் கட்சியை நோக்கி'' என்னும் தலைப்பில் அதன் ஆசிரியரான தோழர் சில்வியா பான்க்ஹர்ஸ்டின் கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது. மூன்றுவது அகிலத்துடன் இணைப்பு பெறுதல், நாடாளுமன்ற முறைக்குப் பதிலாய் சோவியத் முறையை ஏற்றுக் கொள்ளுதல், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றுபட்ட ஒரு கம்யூனிஸ்டுக் கட்சியை அமைப்பதற்காக மேற்கூறிய நான்கு நிறுவனங்களிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளைப் பற்றி

இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. நாடாளுமன்றத்தில் பங்கெடுத்துக் கொள்வதா, புதிய கம்யூனிஸ்டுக் கட்சியானது பெருமளவுக்குத் தொழிற்சங்கங்களாலான பழைய, தொழிற்சங்கவாத, சந்தர்ப்பவாத, சமூக-தேசியவெறிவாதத் ''தொழிற்கட்சியுடன்'' இணைய வேண்டுமா என்னும் பிரச்சினைகள் குறித்து ஏற்பட்ட கருத்து வேறுபாடு, ஒன்றுபட்ட கம்யூனிஸ்டுக் கட்சி உடனடியாக அமைக்கப்படுவதற்கு மிகப் பெரிய தடை மதில்களில் ஒன்ருய் இருப்பதாகத் தெரிய வருகிறது. ''தொழிலாளர் சோஷலிஸ்டுச் சம்மேளனமும்'' ''சோஷலிஸ்டுத் தொழிற்கட்சியும்''* நாடாளுமன்றத் தேர்தல்களிலும் நாடாளுமன்றத்திலும் பங்கு கொள்வதை எதிர்க்கின்றன; ''தொழிற்கட்சியுடன்'' இணைவு பெறுவதையும் அவை எதிர்க்கின்றன. இக்கட்சிகளைச் சேர்ந்தோர் இதில் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் அனைவருடனும், அல்லது மிகப் பெருவாரியோருடனும் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிருர்கள். பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியை அவர்கள் பிரிட்டனிலுள்ள ''கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வலதுசாரிப் பிரிவாகக்'' கருதுகிருர்கள் (சில்வியா பான்க்ஹெர்ஸ்டின் கட்டுரை, பக்கம் 5).

இங்கும் ஜெர்மனியிலும் கருத்து வேறுபாடுகள் வெளியிடப்படும் வடிவங்களிலும் (ஜெர்மனியில் இவ்வடிவம் பிரிட்டனில் இருப்பதைக் காட்டிலும் ''ருஷ்ய'' வடிவத்துக்கு மிக மிக ஒத்ததாய் உள்ளது) வேறு பல விவகாரங்களிலும் மிகுந்த வித்தியாசம் இருப்பினும், பிரதான பிரிவினை இங்கும் ஜெர்மனியில் உள்ளது போலவேதான் இருக்கிறது. ''இடதுசாரிகளின்'' வாதங்களைப் பரிசீலிப்போம்.

நாடாளுமன்றத்தில் பங்கு கொள்ளும் பிரச்சினை குறித்து தோழர் சில்வியா பான்க்ஹர்ஸ்ட் இதே இதழிலுள்ள தோழர் வி. கலாஹரின் [W. Gallacher] கட்டுரை ஒன்றைக் குறிப்பிடுகிருர். தோழர் கலாஹர் கிளாஸ்கோவிலுள்ள

* இக்கட்சி ''தொழிற்கட்சியுடன்'' இணைவதை எதிர்க்கிறது; ஆனல் நாடாளுமன்றத்தில் பங்கு கொள்வதை இதன் உறுப்பினர்கள் எல்லோரும் எதிர்க்கவில்லை என்று நினைக்கிறேன்.

''ஸ்காட்லாந்து தொழிலாளர் கவுன்சிலின்'' சார்பில் இக் கட்டுரையை எழுதுகிருர்.

''மேற்கண்ட கவுன்சில் திட்டவட்டமாய் நாடாளுமன்ற-எதிர்ப்பாளராகும்'' என்று அவர் எழுதுகிருர். ''பல்வேறு அரசியல் நிறுவனங்களின் இடதுசாரிப் பிரிவுகள் இதனை ஆதரித்து நிற்கின்றன. நாங்கள் ஸ்காட்லாந்தின் புரட்சிகர இயக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம்; தொழில்களின் (பொருளுற்பத்தியின் பல்வேறு கிளைகளிலும்) புரட்சிகர நிறுவனம் ஒன்றை அமைத்திட, சமூக கமிட்டிகளை அடிப்படையாகக் கொண்டு, நாடெங்கிலும் கம்யூனிஸ்டுக் கட்சி ஒன்றை அமைத்திட இடையருது பாடுபடுகிறோம். நீண்ட காலமாய் நாங்கள் அதிகாரபூர்வமான நாடாளுமன்றவாதிகளுடன் மோதி வந்துள்ளோம். அவர்களை எதிர்த்துப் பகிரங்கப் போர் தொடுப்பது அவசியமெனக் கருதாமலே இருந்து வந்துள்ளோம். அவர்களும் எங்கள் மீது தாக்குதலை ஆரம்பிக்க அஞ்சுகிருர்கள்.

''ஆனுல் இந்த நிலைமை அதிக காலத்துக்கு நீடிக்க முடியாது. எல்லா முனைகளிலும் நாங்கள் வெற்றி பெற்று வருகிறோம்.

''ஸ்காட்லாந்தில் சுயேச்சைத் தொழிற்கட்சியின் சாதாரண உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றம் என்னும் கருத்தே மேலும் மேலும் அருவருக்கத் தக்கதாகி வருகிறது. சோவியத்துக்கள் (ருஷ்யச் சொல் அப்படியே ஆங்கில எழுத்துக்களில் உபயோகிக்கப்படுகிறது) அல்லது தொழிலாளர் கவுன்சில்களை அனேகமாய் ஒவ்வொரு வட்டாரக் கிளையும் ஆதரிக்கிறது. அரசியலை ஓர் உத்தியோகத் துறையாகக் கொண்டுள்ள கனவான்களுக்கு இது ஆபத்தானதுதான். அவர்கள் தமது உறுப்பினர்களை நாடாளுமன்ற முறைக்குத் திரும்பி விடும்படி வற்புறுத்த எல்லா வித வழிகளையும் கையாளுகின்றனர். புரட்சிகரத் தோழர்கள் இந்தக் கும்பலுக்கு எவ்வித ஆதரவும் தரக் கூடாது (அழுத்தங்கள் யாவும் கட்டுரை ஆசிரியருடையவை). இங்கு எங்களது போராட்டம் மிகவும் கடுமையானதாகவே இருக்கும். புரட்சியின் பால் தமக்குள்ள நாட்டத்தைக் காட்டிலும் சொந்தத்தில் தாம் உயர்வடைய வேண்டுமென்ற ஆவலாலேயே அதிகமாய் உந்திவிடப்படுவோரது துரோகம், இதன் மிக மோசமான கூறுகளில் ஒன்ருய் இருக்கும். நாடாளுமன்ற முறைக்கு எவ்விதத்திலும் ஆதரவளிப்பதானது, நமது பிரிட்டிஷ் ஷெய்டெமன்களையும் நோஸ்கேகளையும் அதிகாரத்தில் அமர்த்துவதற்குத்தான்

உதவியாக இருக்கும். ஹெண்டர்சன், கிளீன்ஸ் [Clynes] முதலானேர் பழுத்த பிற்போக்காளர்கள். சுயேச்சைத் தொழிற்கட்சியின் தலைமை மேலும் மேலும் முதலாளித்துவ வர்க்க மிதவாதிகளின் பிடிக்குள் வந்து கொண்டிருக்கிறது. இவர்கள் திருவாளர்கள் மாக்டானல்ட், ஸ்னேடன் முதலானேரின் முகாமினுள் தமக்கு 'ஆன்மீக இருப்பிடம்' தேடிக் கொண்டு விட்டனர். சுயேச்சைத் தொழிற்கட்சியின் தலைமை மூன்றுவது அகிலத்தின் மீது தீராப் பகை கொண்டுள்ளது; ஆனல் கட்சியின் சாதாரண உறுப்பினர்கள் அதனை ஆதரிக்கின்றனர். நாடாளுமன்ற சந்தர்ப்பவாதிகளுக்கு எவ்வகையிலும் ஆதரவு அளிப்பதானது அவர்களுடைய கண்ணியில் சிக்குவதாகவே இருக்கும். பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி இங்கு எவ்விதத்திலும் பொருட்படுத்தக் கூடியதாய் இல்லை.... இங்கு எமக்கு வேண்டியது நம்பகமான புரட்சிகரத் தொழிலாளர் நிறுவனமும் தெளிவான, நிர்ணயமான, விஞ்ஞான வழிகளில் இயங்கும் ஒரு கம்யூனிஸ்டுக் கட்சியும்தான். இவற்றை அமைப்பதற்கு எமது தோழர்களால் எங்களுக்கு உதவ முடிந்தால், அவர்களுடைய உதவியை நாங்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வோம்; அவர்களால் உதவ முடியவில்லையாஞல், கடவுள் புண்ணியத்தில் அவர்கள் முற்றிலும் வெளியிலேயே இருக்கட்டும்; உள்ளே வந்து பிற்போக்காளர்களுக்குத் தமது ஆதரவை அளிப்பதன் மூலம் புரட்சிக்குத் துரோகம் இழைக்க வேண்டாம். இந்தப் பிற்போக்காளர்கள் நாடாளுமன்றச் 'சிறப்புகள்' (?) [கேள்விக் குறி கட்டுரை ஆசிரியருடையது] பெற வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறுர்கள்; 'எஜமானர்' வர்க்க அரசியல்வாதிகளைப் போலவே தம்மாலும் திறமையாக ஆட்சி நடத்த முடியும் என்று நிரூபிக்க அடங்காத ஆவல் கொண்டுள்ளனர்.''

ஆசிரியருக்கு எழுதப்பட்ட இந்தக் கடிதம், என்னுடைய அபிப்பிராயத்தில், இளங் கம்யூனிஸ்டுகள் அல்லது இப்பொழுதுதான் கம்யூனிசத்தை ஏற்கத் தொடங்கியுள்ள சாதாரணத் தொழிலாளர்களின் மனப்பாங்கையும் கண்ணேட்டத்தையும் நன்கு வெளியிடுகிறது. இந்த மனப்பாங்கு மிகுந்த மனநிறைவு தருவதும் மதிப்பிடற்கரியதும் ஆகும். இதனைப் பாராட்டவும் இதற்கு ஆதரவளிக்கவும் நாம் தெரிந்து கொண்டாக வேண்டும். ஏனெனில் இது இல்லையேல், பிரிட்டனிலோ, ஏன் வேறு எந்த நாட்டிலுமோ, பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெறுமென எதிர்பார்க்க வழியில்லாமற்

போய்விடும். வெகுஜனங்களது இந்த மனப்பான்மையை வெளியிட்டுக் காட்டக் கூடியவர்களுக்கு, இத்தகைய மனப் பான்மையை வெகுஜனங்களிடையே உசுப்பிவிடக் கூடியவர் களுக்கு (அடிக்கடி இது உறங்கிய நிலையிலும் உள்மனத்துக் குரியதாகவும் உள்ளடங்கியதாகவும் இருந்து விடுகிறது) பாராட்டு தெரிவித்து எல்லா வித உதவியும் அளித்திட வேண்டும். அதேபோதில், மாபெரும் புரட்சிப் போராட்டத் தில் வெகுஜனங்களுக்குத் தலைமை தாங்குவதற்கு மனப் பாங்கு மட்டும் இருந்தால் போதாது என்பதையும், புரட்சி லட்சியத்தில் அளவிலா ஈடுபாடு கொண்டவர்கள் புரியப் போகும் அல்லது புரிந்து வரும் சில தவறுகளால் புரட்சி லட் சியத்துக்குத் தீங்கு ஏற்படக் கூடும் என்பதையும் ஒளிவு மறை வின்றி பகிரங்கமாக அவர்களுக்கு நாம் கூற வேண்டும். ஜெர் மன் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள் புரிந்து வரும், 1908லும் 1918லும் ருஷ்ய ''இடதுசாரி'' போல்ஷிவிக்குகள் புரிந்த எல்லாத் தவறுகளுக்குமான கருக்களும் தோழர் கலாஹரின் கடிதத்தில் காணக்கிடக்கின்றன.

இந்தக் கடிதத்தின் ஆசிரியரிடம் முதலாளித்துவ ''வர்க்க அரசியல்வாதிகள்'' பால் புனிதமான, பாட்டாளி வர்க்க வெறுப்புணர்ச்சி நிரம்ப இருக்கிறது (ஆனால் பாட்டாளி வர்க் கத்தினர் மட்டுமின்றி எல்லா உழைப்பாளி மக்களுமே, ஜெர் மன் தொடரை உபயோகிப்பதானால் ''சிறு மனிதர்கள்'' யாவருமே இந்த வெறுப்புணர்ச்சியைப் புரிந்து கொள்கிறார் கள், இதனால் ஈர்க்கப்படுகிறார்கள்). ஒடுக்கப்படும், சுரண் டப்படும் வெகுஜனங்களின் பிரதிநிதி ஒருவரிடத்து இந்த வெறுப்புணர்ச்சி உண்மையில் ''அனைத்து அறிவின் ஆரம் பம்'' ஆகும்; எந்த ஒரு சோஷலிச, கம்யூனிச இயக்கத்திற்கும் அதன் வெற்றிக்குமான அடிப்படை ஆகும். ஆனால் அரசியல் என்பது ஒரு விஞ்ஞானமும் கலையுமாகும், அது அப்படியே ஆகாயத்திலிருந்து வந்து குதித்து விடுவதோ, வரப்பிரசாத மாய்க் கிடைப்பதோ அல்லவென்பதையும், பாட்டாளி வர்க்கமானது முதலாளித்துவ வர்க்கத்தின் மீது வெற்றி பெற விரும்பினால் அது முதலாளித்துவ அரசியல்வாதிகளுக்கு எவ்விதத்திலும் சப்பையில்லாத தனது சொந்தப் பாட்டாளி

''வர்க்க அரசியல்வாதிகளை'' உருவாக்க வேண்டுமென்பதையும் இக்கடிதத்தின் ஆசிரியர் பார்க்கத் தவறி விடுகிறார் என்பது தெரிகிறது.

பாட்டாளி வர்க்கம் அதன் குறிக்கோள்களை வந்தடைய வகை செய்யும் சாதனம் தொழிலாளர்களது சோவியத்துக்களே அன்றி நாடாளுமன்றமல்ல என்பதை இக்கடிதத்தின் ஆசிரியர் நன்கு உணருகிறார். இதுவரை இதனை உணரத் தவறியோர், அவர்கள் மெத்தப் படித்தவர்களாகவும் மிகுந்த அனுபவமுடைய அரசியல்வாதிகளாகவும் மனப்பூர்வமான சோஷலிஸ்டுகளாகவும் நன்கு கற்றுத் தேர்ந்த மார்க்சியவாதிகளாகவும் நேர்மையான குடிமக்களாகவும் நல்ல தந்தையராகவும் இருந்த போதிலும், கடைந்தெடுத்த பிற்போக்குவாதிகளே ஆவர். ஆனால் சோவியத்துக்களுக்கு ஆதரவான அரசியல்வாதிகளை நாடாளுமன்றத்தின் உள்ளே வரச் செய்யாமல், உள்ளிருந்தே நாடாளுமன்ற முறையைச் சிதைவுறச் செய்யாமல், நாடாளுமன்றத்தைக் கலைத்திடுவதற்காக சோவியத்துக்கள் மேற்கொள்ளப் போகும் பணியில் சோவியத்துக்களின் வெற்றிக்காக நாடாளுமன்றத்தினுள்ளிருந்து வேலை செய்யாமல், நாடாளுமன்றத்தின் மீது சோவியத்துக்கள் வெற்றி பெறுவது சாத்தியம்தானா என்று இக்கடிதத்தின் ஆசிரியர் கேட்கவே இல்லை—இவ்வாறு கேட்க வேண்டும் என்ற எண்ணமே அவருக்கு ஏற்படவில்லை. ஆயினும் பிரிட்டனில் கம்யூனிஸ்டுக் கட்சியானது விஞ்ஞானக் கோட்பாடுகளையே ஆதாரமாகக் கொண்டு செயல்பட வேண்டுமென்ற முற்றிலும் சரியான கருத்தை இந்தக் கடிதத்தின் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். விஞ்ஞானம் முதலாவதாகப் பிற நாடுகளின் அனுபவத்தை—முக்கியமாய் முதலாளித்துவ நாடுகளேயான இந்தப் பிற நாடுகள் இதே மாதிரியான அனுபவத்தைக் கண்டு வருமாயின், அல்லது அண்மையில் கண்டிருக்குமாயின்—கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருகிறது; இரண்டாவதாக, அது அந்தந்த நாட்டிலும் செயல்படும் எல்லாச் சக்திகளையும் கோஷ்டிகளையும் கட்சிகளையும் வர்க்கங்களையும் வெகுஜனங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், மற்றும் ஒரேயொரு

கோஷ்டி அல்லது கட்சியின் விருப்பங்களையும் அபிப்பிராயங்களையும் வர்க்க உணர்வின், போர்க்குணத்தின் நிலையையும் மட்டும் கொண்டு கொள்கையை நிர்ணயித்துவிடக் கூடாதென்றும் கோருகிறது.

ஹெண்டர்சன்களும் கிளைனஸ்களும் மாக்டானல்டுகளும் ஸ்னேடன்களும் படுமோசமான பிற்போக்காளர்களாய் இருப்பது மெய்தான். அவர்கள் ஆட்சியதிகாரம் பெற விரும்புகிறார்கள் என்பதும் (முதலாளித்துவ வர்க்கத்துடன் சேர்ந்து கூட்டணி அரசாங்கம் அமைத்துக் கொள்வதில்தான் அதிக நாட்டம் கொண்டுள்ளனர் எனலாம்), பழைய முதலாளித்துவ வழிகளிலேதான் ''ஆட்சி நடத்த'' விரும்புகிறார்கள் என்பதும், ஆட்சியில் அமர்ந்ததும் நிச்சயமாய் ஷெய்டெமன்களையும் நோஸ்கேகளையும் போலவேதான் நடந்து கொள்வார்கள் என்பதும் மெய்தான். இவை யாவும் உண்மையே. ஆயினும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பதானது புரட்சிக்குத் துரோகம் இழைப்பதாகிவிடுமென்று இவற்றிலிருந்து பெறப்படவே இல்லை. புரட்சியின் நலன்களை உத்தேசித்து, தொழிலாளி வர்க்கப் புரட்சியாளர்கள் இந்தக் கனவான்களுக்கு நாடாளுமன்ற ஆதரவு ஓரளவு அளிக்க வேண்டுமென்பதே இவற்றிலிருந்து பெறப்படும் முடிவு. இந்தக் கருத்தை விளக்கும் பொருட்டு, இன்றைய பிரிட்டிஷ் அரசியல் ஆவணங்கள் இரண்டை எடுத்துரைக்க விரும்புகிறேன்: 1) தலைமை அமைச்சர் லாயிட் ஜார்ஜ் 1920 மார்ச் 18ல் நிகழ்த்திய சொற்பொழிவு (*The Manchester Guardian*,[73] 1920 மார்ச் 19ஆம் தேதி இதழில் தரப்பட்டிருப்பதை எடுத்துக் கொள்கிறேன்), 2) ''இடதுசாரி'' கம்யூனிஸ்டான தோழர் சில்வியா பான்க்ஹெர்ஸ்ட் மேலே குறிக்கப்பட்ட கட்டுரையில் முன்வைக்கும் வாதங்கள்.

லாயிட் ஜார்ஜ் தமது சொற்பொழிவில், அஸ்குவித்துடனும் (இக்கூட்டத்துக்கு வருமாறு விசேஷ முறையில் அழைக்கப்பட்டிருந்த இவர் வர மறுத்து விட்டார்), மற்றும் கான்சர்வேட்டிவ்களுடன் கூட்டுசேர்வதற்குப் பதிலாய்த் தொழிற்கட்சியுடன் மேலும் நெருங்கிய உறவுகள் கொள்ளவே விரும்பும் ஏனைய மிதவாதிகளுடனும் வாக்குவாதத்

தில் இறங்கினர். (சுயேச்சைத் தொழிற்கட்சியில் மிதவாதிகள் சேர்ந்து வருகிருர்கள் என்பதை மேலே குறிக்கப்பட்ட கடிதத்தில் தோழர் கலாஹறரும் சுட்டிக் காட்டுகிருர்.) மிதவாதிகளுக்கும் கான்சர்வேட்டிவ்களுக்குமிடையே கூட்டணி —அதுவும் நெருங்கிய கூட்டணி—அவசியம் என்று லாயிட் ஜார்ஜ் வாதாடினர். இல்லாவிட்டால், தொழிற்கட்சி வெற்றியடைய நேர்ந்துவிடும் என்ருர். தொழிற்கட்சியை லாயிட் ஜார்ஜ் ''சோஷலிஸ்டு'' என்பதாக அழைக்க விரும்புகிருர்; உற்பத்திச் சாதனங்களின் ''பொது உடைமைக்காக'' அது பாடுபடுகிறது என்கிருர். ''பிரான்சில் அது கம்யூனிசம் என்பதாகப் பெயர் பெற்றிருக்கிறது'' என்று தன் எதிரே கூடியிருந்த மிதவாத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு—இது பற்றி அவர்கள் இதற்கு முன் அறியாதவர்கள் போலும்— புரியும்படி ரஞ்சகமான முறையில் பிரிட்டிஷ் முதலாளித்துவ வர்க்கத் தலைவர் எடுத்துரைத்தார். ''ஜெர்மனியில் அது சோஷலிசம் என்று அழைக்கப்பட்டது; ருஷ்யாவில் போல்ஷிவிசம் என்று அழைக்கப்படுகிறது'' என்று மேலும் தொடர்ந்து விளக்கினர். மிதவாதிகளுக்கு அது கோட்பாட்டு அடிப்படையிலே ஏற்க முடியாத ஒன்று, ஏனெனில் அவர்கள் தனியார் சொத்துடைமைக் கோட்பாட்டினர் என்று லாயிட் ஜார்ஜ் அறிவுறுத்தினர். ''நாகரிகத்துக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது'' என்று பறைசாற்றினர்; ஆகவே மிதவாதிகளும் கான்சர்வேட்டிவ்களும் ஒன்றுபட்டாக வேண்டும்....

''....விவசாயப் பிரதேசங்களுக்குச் சென்ருல், பழைய கட்சிப் பிரிவினைகள் எப்பொழுதும் போல வலிமையுடன் இருப்பதைக் காணலாம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அவை அபாயத்திலிருந்து தொலைவில் உள்ளன. அங்கு அபாயம் இன்னும் தலைகாட்டவில்லை'' என்று லாயிட் ஜார்ஜ் கூறினர். ''ஆனல் விவகாரம் கிராம வட்டாரங்களுக்குப் போய்ச் சேரும் போது இப்பொழுது தொழிற்பகுதிகள் சிலவற்றில் இருப்பது போலவே இந்த அபாயம் அங்கும் பெரிதாகிவிடும். இந்நாட்டில் ஐந்தில் நான்கு பகுதி தொழில், வாணிபத் துறைகளைச் சேர்ந்தது; ஐந்தில் ஒரு பகுதிக்கும் குறைவானதே விவசாயத்தைச் சேர்ந்தது. வருங்காலத்தில் இங்கு ஏற்படக் கூடிய அபாயங்களைப் பற்றிச் சிந்திக்கையில் எந்

நேரமும் என் மனத்துள் எழுகின்றவற்றில் ஒன்ருகும் இது. பிரான்சில் மக்கள் திரள் விவசாயத் துறையினர் ஆவர்; அதிவேகமாய் மாறிவிடாத, புரட்சி இயக்கங்களால் மிகச் சுலபமாய் ஆவேசமூட்டப்படாத திடமான அபிப்பிராயத் தொகுதி அங்கு இருந்து வருகிறது. இங்கு அவ்வாறு இல்லை. இந்நாடு உலகில் வேறு எந்த நாட்டையும் விட எளிதில் கவிழ்க்கப்படக் கூடியது; ஆடத் தொடங்கியதும் இங்கு ஏற்படும் முறிவும் அதிர்ச்சியும், இக்காரணத்திஞல், எந்த நாட்டிலும் காணக் கூடியதைக் காட்டிலும் மிகக் கடுமையாய் இருக்கும்.''

திரு லாயிட் ஜார்ஜ் மிகவும் கெட்டிக்காரர் என்பதுடன், மார்க்சியவாதிகளிடமிருந்து பலவும் கற்றுக் கொண்டவர் என்பதையும் வாசகர்கள் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். நாமும் சிலவற்றை லாயிட் ஜார்ஜிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

லாயிட் ஜார்ஜின் சொற்பொழிவுக்குப் பிறகு எழுந்த விவாதத்தின் போது நடைபெற்ற பின்வரும் நிகழ்ச்சி கருத்தூன்றிக் கவனிக்கத்தக்கது:

''திரு வாலஸ் [Wallace], நாடாளுமன்ற உறுப்பினர்: தொழில் துறைத் தொகுதிகளில் ஆலைத் தொழிலாளர்களிடம் இந்தக் கொள்கையால் என்ன விளைவு ஏற்படுமென தலைமை அமைச்சர் கருதுகிருர் என்று கேட்க விரும்புகிறேன். இத்தொழிலாளர்களில் பலரும் தற்போது மிதவாதிகளாவர்; இவர்களிடமிருந்து நமக்கு மிகுதியான ஆதரவு கிடைக்கிறது. தற்போது முழுமனதான நமது ஆதரவாளர்களாய் இருக்கும் இவர்களிடமிருந்து இதன் விளைவாய்த் தொழிற்கட்சி உடனடியாகப் பெரும் பலம் பெற்றுவிடாதா?

''தலைமை அமைச்சர்: நான் முற்றிலும் வேறு விதமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன். மிதவாதிகள் தம்மிடையே சண்டையிட்டுக் கொள்வதானது கணிச எண்ணிக்கையிலான மிதவாதிகளை நம்பிக்கை இழக்கச் செய்து அவர்களைத் தொழிற்கட்சிக்கு ஓடச் செய்கிறது என்பதில் ஐயமில்லை. தொழிற்கட்சியில் மிதவாதிகள் கணிச எண்ணிக்கையில் இருக்கிருர்கள்; இவர்கள் தகுதியும் ஆற்றலும் மிக்கவர்கள்; அரசாங்கத்தை இழிவுபடுத்துவதே இவர்களுடைய வேலையாகி விட்டது. இதன் விளைவாய்ப் பொதுஜன உணர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் தொழிற்கட்சியின் பக்கம் போய்

விடுகிறது. வெளியிலுள்ள மிதவாதிகளுக்கு அது போவதில்லே; தொழிற்கட்சிக்குத் தான் போகிறது—துணைத் தேர்தல்கள் இதனைப் புலப்படுத்துகின்றன.''

முதலாளித்துவ வர்க்கத்தின் கூர் அறிவு படைத்த உறுப்பினர்களுங்கூட எவ்வளவு குழப்பமுற்று விடுகிறார்கள், தவிர்க்க இயலாதபடிச் சரி செய்ய முடியாத அசட்டுப் பிழைகள் புரிகின்றனர் என்பதை இந்த வாக்குவாதம் தெளிவாகக் காட்டுவதைப் போகிறபோக்கில் இங்கு குறிப்பிடலாம். உண்மையில் இதுவே முதலாளித்துவ வர்க்கத்தின் வீழ்ச்சிக்கு வழி செய்யப் போகிறது. ஆனால் நம்மைச் சேர்ந்தவர்களும் அசட்டுப் பிழைகள் புரியவும் கூடும்; ஆயினும் (இவை மிகப் பெரியனவாய் இல்லாமலிருந்து, காலத்திலேயே திருத்தப்படும் பட்சத்தில்) இறுதி வெற்றி நம்மவர்களுக்கே உரியதாகும்.

இரண்டாவது ஆவணம் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டான தோழர் சில்வியா பான்க்ஹெர்ஸ்ட் முன்வைக்கும் வாதமாகும்:

''....தோழர் இன்க்பின் (பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளர்) தொழிற்கட்சியைத் 'தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பிரதான நிறுவனமாகக்' குறிப்பிடுகிறார். பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியின் மற்றொரு தோழர் மூன்றாம் அகிலத்தில் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியின் நிலேயை மேலும் எடுப்பான முறையில் குறிப்பிட்டார். 'தொழிற்கட்சியை நாங்கள் நிறுவன ஒழுங்கமைப்பு கொண்ட தொழிலாளி வர்க்கமாய்க் கருதுகிறோம்' என்றார் அவர்.

''தொழிற்கட்சியைப் பற்றிய இந்த அபிப்பிராயத்தை நாங்கள் ஆதரிக்கவில்லே. தொழிற்கட்சி எண்ணிக்கை அளவில் மிகப் பெரியதே. ஆனால் அதன் உறுப்பினர்கள் பெருமளவுக்குச் செயலற்ற மந்த நிலேயில் இருப்பவர்கள், உணர்ச்சித் துடிப்பற்றவர்கள். தமது சகாக்கள் தொழிற்சங்கங்களில் இருப்பதால், தாமும் தொழிற்சங்கங்களில் சேர்ந்து கொண்டுவிட்ட ஆடவரும் பெண்டிருமாவர். தொழிற்சங்கத்தின் அனுகூலங்களில் பங்கு பெறுவதற்காகச் சேர்ந்து கொண்டவர்கள்.

''தொழிற்கட்சி பெரியதாய் இருப்பதற்கு, அது பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினர் இன்னமும் வெளிப்பட்டு வராத ஒரு சிந்தனே வழியால் தோன்றிய

தென்பதும் காரணம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆயினும் மக்கள் மனதில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சீக்கிரத்தில் மக்கள் தற்போதுள்ள நிலவரத்தை மாற்றிவிடுவார்கள்....''

''....பிற நாடுகளிலுள்ள சமூக-தேசபக்த நிறுவனங்களைப் போலவே பிரிட்டிஷ் தொழிற்கட்சியும் சமுதாயத்தின் இயல்பான வளர்ச்சிப் போக்கில் தவிர்க்க முடியாதபடி ஆட்சியதிகாரத்துக்கு வரவே செய்யும். சமூக-தேசபக்தர்களை வீழ்த்தப் போகும் சக்திகளை ஒன்றுதிரட்டி வளர்த்திடுவது கம்யூனிஸ்டுகளுக்குரிய பணியாகும். இந்நாட்டில் நாம் இப்பணியைச் செய்வதில் தாமதமோ தயக்கமோ காட்டலாகாது.

''தொழிற்கட்சியின் பலத்தைக் கூடுதலாக்குவதில் நாம் நமது ஆற்றலை விரயம் செய்யக் கூடாது. ஏனெனில் தொழிற்கட்சி ஆட்சியதிகாரத்துக்கு வருவது தவிர்க்க முடியாததாகும். அதனைத் தோற்கடிக்கக் கூடிய கம்யூனிஸ்டு இயக்கத்தை உருவாக்குவதில் நமது கவனத்தை ஒன்றுகுவிக்க வேண்டும். தொழிற்கட்சி விரைவில் அரசாங்கத்தை அமைத்துவிடும்; அதனைத் தாக்குவதற்காகப் புரட்சிகர எதிர்ப்பாளர்கள் தம்மைத் தயார் செய்து கொண்டாக வேண்டும்....''

இவ்வாறு, மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தார் நூற்றுக் கணக்கான ஆண்டுகளின் அனுபவத்தால் புனிதமாக்கப் பட்டு, சுரண்டலாளர்களுக்கு மிகவும் அனுகூலமாய் இருந்து வந்துள்ள ''இரு கட்சிகளாலான'' (இரண்டும் சுரண்டலாளர் கட்சிகளே) வரலாற்று வழி வந்த அமைப்பினைக் கைவிட்டு வருகின்றனர்; தொழிற்கட்சிக்கு எதிராய் இவ்விரு கட்சிகளும் தமது சக்திகளை ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டுமென இவர்கள் கருதுகின்றனர். மூழ்கும் கப்பலை விட்டோடும் எலிகளைப் போல மிதவாதிகளில் ஒரு பகுதியோர் தொழிற்கட்சிக்கு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இடதுசாரி கம்யூனிஸ்டுகள் ஆட்சியதிகாரம் தொழிற்கட்சிக்கு மாறுவது தவிர்க்க முடியாததாகுமென நம்புகிறார்கள்; தற்போது தொழிற்கட்சிக்குப் பொருவாரியான தொழிலாளர்களின் ஆதரவு கிடைத்து வருகிறது என்பதை அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் இதிலிருந்து ஒரு விபரீதமான முடிவுக்கு வருகிறார்கள். தோழர் சில்வியா பான்க்ஹெர்ஸ்ட் இதனை இவ்வாறு எடுத்துரைக்கிறார்:

''கம்யூனிஸ்டுக் கட்சி சமரசம் செய்து கொள்ளக் கூடாது.... கம்யூனிஸ்டுக் கட்சி அதன் கோட்பாடுகளைப் பரிசுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும்; சீர்திருத்தவாதத்துக்கு இடந்தராமல் அதன் சுயேச்சை நிலையைப் பழுதின்றிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். கம்யூனிஸ்டுப் புரட்சிக்காக நேர் பாதையில், இடையில் நிற்காமலும் திரும்பாமலும் முன்னேறிச் செல்வதே அதன் கடன்.''

ஆனால், மிகப் பெருவாரியான பிரிட்டிஷ் தொழிலாளர்கள் இன்னமும் பிரிட்டிஷ் கேரென்ஸ்கிகள் அல்லது ஷெய்டெமன்களின் தலைமையையே பின்பற்றி வருகிறார்கள்; இவர்களாலான அரசாங்கம் குறித்து இன்னமும் அவர்களுக்கு அனுபவம் ஏற்பட்டாகவில்லை—தொழிலாளர்கள் வெகுஜன அளவில் கம்யூனிசத்துக்கு மாறி வருவதற்கு ருஷ்யாவிலும் ஜெர்மனியிலும் இந்த அனுபவம் அவசியமாயிருந்தது—என்னும் இவ்வுண்மை, இதற்கு நேர்மாறாக, பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் நாடாளுமன்றச் செயற்பாட்டில் பங்கு கொண்டு ஆக வேண்டும், நாடாளுமன்றத்தின் உள்ளிருந்து கொண்டு ஹெண்டர்சன், ஸ்னோடென் அரசாங்கத்தின் விளைவுகளைத் தொழிலாளி வெகுஜனங்கள் நடைமுறையில் கண்டுணருவதற்குத் துணை புரிய வேண்டும், லாயிட் ஜார்ஜ், சர்ச்சில் இவர்களது ஒன்றுபட்ட சக்திகளைத் தோற்கடிக்க ஹெண்டர்சன்களுக்கும் ஸ்னோடென்களுக்கும் உதவ வேண்டும் என்பதையே சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவுபடுத்துகிறது. வேறுவிதமாய்ச் செயல்படுவதானது, புரட்சி இலட்சியத்துக்கு ஊறு செய்வதாகவே இருக்கும். ஏனெனில் தொழிலாளி வர்க்கத்தில் பெரும்பாலோரது அபிப்பிராயங்களில் மாற்றம் உண்டாக்காமல் புரட்சி சாத்தியமன்று. இந்த மாற்றத்தை வெகுஜனங்களுடைய அரசியல் அனுபவத்தால் உண்டாக்க முடியுமேயன்றி, பிரசாரத்தினால் மட்டும் ஒரு நாளும் உண்டாக்கி விட முடியாது. ''சமரசங்களின்றி, திருப்பமின்றி முன்னேறிச் செல்ல வேண்டும்''—கண்கூடாகவே சக்தியற்ற சிறுபான்மைத் தொழிலாளர்களிடமிருந்து வரும் இக்கோஷம் தவறானது என்பது தெளிவு. லாயிட் ஜார்ஜ், சர்ச்சில் இவர்கள் மீது ஹெண்டர்சனுக்கும் ஸ்னோடெனுக்கும் வெற்றி கிட்டி

யதும் பெரும்பான்மைத் தொழிலாளர்கள் விரைவில் அவர்களது தலைவர்களிடத்து ஏமாற்றமடைந்து விடுவார்கள், கம்யூனிசத்தை ஆதரிக்க முற்படுவார்கள் (எப்படியும் கம்யூனிஸ்டுகள் குறித்து நடுநிலைமைப் போக்கையே, பிரதானமாய் அனுதாபமுடைய நடுநிலைமைப் போக்கையே அனுசரிப்பார்கள்) என்பது இந்தச் சிறுபான்மைத் தொழிலாளர்களுக்குத் தெரிந்ததே (அல்லது எப்படியும் தெரிந்தே இருக்க வேண்டும்). 10,000 படைவீரர்கள், தமக்கு ஆதரவாக உடனடியாகச் செயலில் இறங்க முடியாவிட்டாலும் தம்மை நோக்கி விரைந்து கொண்டிருக்கும் 1,00,000 படைவீரர்கள் வந்து சேருவதற்கு வேண்டிய அவகாசத்தைப் பெறும் பொருட்டு ''காத்து நிற்பது'', அல்லது ''நேரடி மோதலைத் தவிர்த்துக் கொள்வது'', அல்லது ''சமரசம்'' செய்து கொள்வதுகூட தக்க முறையாக இருக்கும் ஒரு நேரத்தில், 50,000 துருப்புக்களைக் கொண்ட பகைப்படையை எதிர்த்துப் போரில் குதிப்பதைப் போன்றதே ஆகும் இது. அறிவுத்துறைவாதச் சிறுபிள்ளைத்தனமாகுமே அன்றி, புரட்சிகர வர்க்கத்துக்குரிய முதிர்ச்சியுற்ற போர்த்தந்திரமாகாது இது.

இருபதாம் நூற்றுண்டில் நடைபெற்ற மூன்று ருஷ்யப் புரட்சிகளும் அடங்கலாய் எல்லாப் புரட்சிகளாலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கும் அடிப்படைப் புரட்சி விதி வருமாறு: புரட்சி நடைபெற வேண்டுமானுல், சுரண்டப்படும், ஒடுக்கப்படும் வெகுஜனங்கள் பழைய வழியில் தாம் வாழ்வது சாத்தியமல்ல என்பதை உணர்ந்து மாற்றங்கள் வேண்டுமெனக் கோரினுல் மட்டும் போதாது; புரட்சி நடைபெற வேண்டுமானுல், சுரண்டலாளர்கள் பழைய வழியில் வாழவும் ஆட்சி நடத்தவும் முடியாமற்போவது அவசியமாகும். பழைய வழியில் வாழ ''அடிமட்டத்து வர்க்கங்கள்'' விரும்பவில்லை, ''மேல் வர்க்கங்களால்'' பழைய வழியில் நடத்திச் செல்ல முடியவில்லை என்கிற நிலை ஏற்படும் போது மட்டும் தான் புரட்சி வெற்றி பெற முடியும். இந்த உண்மையை வேறுவிதமாகவும் கூறலாம்: தேசம் தழுவிய நெருக்கடி (சுரண்டப்படுவோர், சுரண்டுவோர் ஆகிய இரு சாராரையும் பாதிக்கும் நெருக்கடி) இல்லாமல் புரட்சி சாத்தியமன்று.

இதிலிருந்து தெளிவாவது என்னவெனில், புரட்சி நடைபெறு வதற்கு, முதலாவதாக, பெரும்பான்மையான தொழிலாளர் கள் (அல்லது குறைந்தது, வர்க்க உணர்வு கொண்ட, சிந்தனை ஆற்றலுடைய, அரசியல் செயலாற்றல் வாய்ந்த தொழி லாளர்களில் பெரும்பாலோர்) புரட்சி இன்றியமையாததென் பதை நன்கு உணர்ந்திருப்பதும், புரட்சிக்காக உயிர் விடத் தயாராயிருப்பதும் அவசியமாகும்; இரண்டாவதாக, ஆளும் வர்க்கங்கள் அரசாங்க நெருக்கடிக்கு—மிகவும் பிற்பட்ட நிலை யிலுள்ள வெகுஜனங்களையும் அரசியல் அரங்குக்குக் கவர்ந் திழுக்கும் (இதுவரை செயலின்றி உறக்கத்தில் இருந்த உழைப்பாளர்களும் ஒடுக்கப்பட்டோருமான வெகுஜனங் களில் அரசியல் போராட்டம் நடத்தக் கூடியவர்களது தொகை விரைவில் பத்து மடங்கும், ஏன் நூறு மடங்கும் கூட பெருகி விடுவது மெய்யான எந்தப் புரட்சிக்குமுரிய அறி குறியாகும்), அரசாங்கத்தைப் பலவீனமாக்கும், புரட்சி யாளர்கள் விரைவில் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு வகை செய்யும் அரசாங்க நெருக்கடிக்கு—இலக்காகி விடுவது அவசியமாகும்.

வெற்றிகரமான பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குரிய இரு நிலைமைகளும் பிரிட்டனில் தெளிவாக முதிர்ச்சியடைந்து வருகின்றன. லாயிட் ஜார்ஜின் சொற்பொழிவிலிருந்தும் இதனைத் தெரிந்து கொள்ளலாம். இடதுசாரி கம்யூனிஸ்டு கள் புரியும் தவறுகள் தற்போது மிகவும் அபாயகரமானவை. ஏனெனில் புரட்சியாளர்களில் சிலர் மேற்கூறிய இரு நிலை மைகளில் ஒவ்வொன்றும் குறித்து போதுமான அளவுக்குச் சிந்தனையோடு கூடிய, போதுமான அளவுக்குக் கவனமான, போதுமான அளவுக்கு உணர்வுபூர்வமான, போதுமான அள வுக்குக் கருத்துக் கொண்ட போக்கை அனுசரிக்கவில்லை. நாம் புரட்சிகரமான ஒரு கோஷ்டியாக மட்டுமல்லாமல், புரட்சிகர **வர்க்கத்தின்** கட்சியாகவும் இருக்க வேண்டு மாயின், வெகுஜனங்கள் நம்மைப் பின்தொடர வேண்டுமென விரும்புவோமாயின் (இவ்விருப்பம் சாதனையாகாத வரை வெறும் வாய்ச் சவடால்காரர்களாகிவிடும் அபாயம் நம்மை எதிர்நோக்குகிறது), முதலில் நாம் ஹெண்டர்சனே ஸ்னே

டனே லாயிட் ஜார்ஜையும் சர்ச்சிலையும் தோற்கடிக்க உதவி செய்ய வேண்டும் (அல்லது முன்னவர்கள் பின்னவர்களைத் தோற்கடிக்கும்படிக் கட்டாயப்படுத்தியாக வேண்டுமெனக் கூறுவதே பொருத்தமாயிருக்கும், ஏனெனில் முன்னவர்கள் தமக்கு வெற்றி கிடைத்துவிடுமோ என்று அஞ்சுகிறார்கள்!); இரண்டாவதாக, நாம் சொல்வதுதான் சரியென்பதை, அதாவது ஹெண்டர்சன்களும் ஸ்னேடன்களும் முற்றிலும் உதவாக்கரைகள், இயல்பாகவே குட்டிமுதலாளித்துவத் தன்மையும் துரோகத்தனமும் வாய்ந்தவர்கள், அவர்கள் கையாலாகாதவர்களாவது தவிர்க்க முடியாததென்பதைத் தொழிலாளி வர்க்கத்தாரில் பெரும்பாலோர் தமது சொந்த அனுபவத்தின் வாயிலாகவே ஐயமற உணர நாம் உதவ வேண்டும்; மூன்றாவதாக, பெரும்பாலான தொழிலாளர்கள் ஹெண்டர்சன்களிடத்து ஏமாற்றமடைவதன் அடிப்படையில், ஹெண்டர்சன்களுடைய அரசாங்கத்தை உடனே வீழ்த்துவது சாத்தியமாகி, வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளும் மிகுதியாகிவிடும் தருணத்தை நாம் அருகாமையில் வரச் செய்ய வேண்டும். மிகவும் சாதுர்யமான—குட்டிமுதலாளித்துவ அல்ல—பெரு முதலாளித்துவ பலம் படைத்த லாயிட் ஜார்ஜே கதிகலங்கி, நேற்று சர்ச்சிலுடனும் இன்று அஸ்குவித்துடனும் தனக்குள்ள ''பிணக்கின்'' மூலம் தன்னையும் (மொத்தத்தில் முதலாளித்துவ வர்க்கத்தையும்) மேலும் மேலும் பலவீனப்படுத்திச் செல்கிறுரெனில், ஹெண்டர்சன் அரசாங்கத்துக்கு ஏற்படப் போகும் கதி கலக்கம் இன்னும் எவ்வளவு பெரியதாயிருக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை.

மேலும் ஸ்தூலமாய் எடுத்துரைக்கிறேன். என்னுடைய அபிப்பிராயத்தில் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் தமது நான்கு கட்சிகளையும் கோஷ்டிகளையும் (எல்லாமே பலவீனமானவை, சில மிகமிக பலவீனமானவை) மூன்ருவது அகிலத்தின் கோட்பாடுகளின் அடிப்படையிலும், நாடாளுமன்றத்தில் பங்கு கொள்வதைக் கடமையாக ஏற்பதன் அடிப்படையிலும் ஒரே கம்யூனிஸ்டுக் கட்சியாகத் தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கம்யூனிஸ்டுக் கட்சி ஹெண்டர்சன்களுக்கும் ஸ்னேடன்களுக்கும் பின்வரும் ''சமரசத்'' தேர்தல்

உடன்பாட்டைப் பிரேரணை செய்ய வேண்டும்: நாம் கூட்டாகச் சேர்ந்து லாயிட் ஜார்ஜுக்கும் கான்சர்வேட்டிவ்களுக்கும் இடையிலான கூட்டணியை எதிர்த்துப் போராடுவோம்; தொழிற்கட்சிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் கிடைக்கும் வாக்குகளின் வீதா சாரத்தில் (தேர்தல்களில் அல்ல, விசேஷமானதொரு வாக்கெடுப்பில்) நாடாளுமன்ற இடங்களை நாம் பகிர்ந்து கொள்ளலாம்; கிளர்ச்சி, பிரசாரம், அரசியல் செயற்பாடு இவற்றில் எப்பொழுதும் போல முழுநிறை சுதந்திரம் பெற்றவர்களாகவே இருக்கலாம். இக்கடைசி நிபந்தனை இல்லாமல் நாம் ஒரு கூட்டணிக்கு உடன்பட முடியாது. ஏனெனில் அவ்வாறு செய்வது துரோகச் செயலாகி விடும். பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் ஹெண்டர்சன்களையும் ஸ்னேடன்களையும் அம்பலம் செய்வதற்குப் பூரண சுதந்திரம் கோரிப் பெற்றுக் கொள்ள வேண்டும், எப்படி ருஷ்ய போல்ஷிவிக்குகள் (பதினைந்து ஆண்டுகளுக்கு—*1903-17*) ருஷ்ய ஹெண்டர்சன்களும் ஸ்னேடன்களும், அதாவது மென்ஷிவிக்குகள், சம்பந்தமாய்க் கோரிப் பெற்றுக் கொண்டார்களோ அதே போல.

இந்த நிபந்தனைகளின் பேரில் ஹெண்டர்சன்களும் ஸ்னேடன்களும் கூட்டு அமைத்துக் கொள்ள சம்மதித்தார்களாயின், நாமே ஆதாயமடைவோராய் இருப்போம். ஏனெனில் நாடாளுமன்ற இடங்களின் எண்ணிக்கை நமக்கு முக்கியமல்ல; இடங்களைப் பிடிப்பதல்ல நமது நோக்கம். இந்த விவகாரத்தில் நாம் விட்டுக்கொடுத்து விடுவோம் (ஹெண்டர்சன்களும் இன்னும் முக்கியமாய் அவர்களுடைய புதிய நண்பர்களான—அல்லது புதிய எஜமானர்களான—சுயேச்சைத் தொழிற்கட்சியில் சேர்ந்துள்ள மிதவாதிகளும் இடங்கள் பெறத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்). நாம்தான் ஆதாயமடைவோராய் இருப்போம். ஏனெனில், லாயிட் ஜார்ஜ்தானே வெகுஜனங்களைக் ''கொதிப்புறச் செய்திருக்கும்'' ஒரு நேரத்தில், நாம் நமது கிளர்ச்சியை அவர்களிடம் எடுத்துச் செல்வோம்; தொழிற்கட்சி அதன் அரசாங்கத்தை மேலும் சீக்கிரமாய் நிறுவிக் கொள்ள அதற்கு உதவுவதோடு, ஹெண்டர்சன்களை எதிர்த்துச் சிறிதும் தயங்காமலும்

தவறுமலும் நாம் நடத்திச் செல்லும் கம்யூனிஸ்டுப் பிர சாரத்தை மேலும் சீக்கிரமாய்ப் புரிந்து கொள்வதற்கும் வெகுஜனங்களுக்கு நாம் உதவுவோம்.

இந்த நிபந்தனைகளின் பேரில் நம்முடன் கூட்டுசேர ஹெண்டர்சன்களும் ஸ்னேடன்களும் மறுப்பாராயின், நாம் மேலும் அதிக அளவில் ஆதாயமடைவோம். எப்படியெனில், ஹெண்டர்சன்கள் எல்லாத் தொழிலாளர்களின் ஒற்றுமை யைக் காட்டிலும் முதலாளிகளுடனுன தமது நெருங்கிய உறவுகளையே மேலானதாகக் கொண்டுள்ளனர் என்பதை நாம் வெகுஜனங்களுக்கு (முற்றிலும் மென்ஷிவிக் தன்மை யும் முழுக்க முழுக்க சந்தர்ப்பவாதத் தன்மையும் கொண்ட சுயேச்சைத் தொழிற்கட்சியிலுங்கூட சாதாரண உறுப்பினர் கள் சோவியத்துக்களையே ஆதரிப்பது கவனிக்கத்தக்கது) உடனே காட்டியவர்களாகி விடுவோம். வெகுஜனங்களின் கண்களில் நாம் உடனடியாகச் சிறப்புப் பெறுவோம். முக்கியமாய், லாயிட் ஜார்ஜ் அளித்த சிறந்த, முற்றிலும் சரியான, மிகவும் பயனுள்ள (கம்யூனிசத்துக்கு) விளக்கங் களைத் தொடர்ந்து, வெகுஜனங்கள் லாயிட் ஜார்ஜ்-கான்சர் வேட்டிவ் கூட்டணிக்கு எதிராய் எல்லாத் தொழிலாளர்களை யும் ஒன்றுபடச் செய்வதென்னும் கருத்தில் அனுதாபமிக்க வர்களாக இருப்பார்கள். நாம் உடனடியாக ஆதாயமடை வோம், ஏனெனில் ஹெண்டர்சன்களும் ஸ்னேடன்களும் லாயிட் ஜார்ஜ் தோற்கடிக்கப்பட்டு விடுவார் என்று அஞ்சு கிறுர்கள், தனியே ஆட்சியதிகாரத்தில் அமர்வதற்கு அஞ்சு கிறுர்கள் என்பதையும், தொழிற்கட்சிக்கு எதிராய் கன்சர் வேட்டிவ்களுக்குப் பகிரங்கமாகவே நேசக் கரம் நீட்டும் லாயிட் ஜார்ஜிடம் இரகசியமாய் ஆதரவு பெற முயற்சி செய் கிறுர்கள் என்பதையும் நாம் வெகுஜனங்களுக்குத் தெளிவு படக் காட்டியவர்களாகி விடுவோம். ருஷ்யாவில் 1917 பிப்ரவரி 27 (பழைய முறைப்படி) புரட்சிக்குப் பிற்பாடு மென்ஷிவிக்குகளுக்கும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கும் (அதாவது ருஷ்ய ஹெண்டர்சன்களுக்கும் ஸ்னேடன்களுக் கும்) எதிரான போல்ஷிவிக்குகளின் பிரசாரம் இதே வகை யான ஒரு சூழ்நிலையால்தான் ஆதாயம் பெறலாயிற்று. மென்

ஷிவிக்குகளிடமும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களிடமும் நாங்கள் கூறினோம்: முதலாளித்துவ வர்க்கத்தார் இல்லாமல் நீங்களே முழு ஆட்சியதிகாரத்தையும் ஏற்றுக் கொள்ளுங்கள், ஏனெனில் சோவியத்துக்களில் உங்களுக்குப் பெரும்பான்மை நிலை இருக்கிறது (1917 ஜூனில் சோவியத்துக்களின் முதலாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் போல்ஷிவிக்குகளுக்கு 13 சதவீத வாக்குகளே கிடைத்திருந்தன). ஆனால் ருஷ்ய ஹெண்டர்சன்களும் ஸ்னோடென்களும் முதலாளித்துவ வர்க்கத்தினர் இல்லாமல் ஆட்சியதிகாரம் ஏற்க அஞ்சினர். தேர்தல்களில் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் (இரு கட்சிகளும் நெருங்கிய அரசியல் கூட்டு கொண்டிருந்தன; இரண்டும் உண்மையில் அதே குட்டிமுதலாளித்துவ ஜனநாயகத்தையே பிரதிநிதித்துவப்படுத்தின) பெரும்பான்மை கிடைத்து விடுமென்பதை* நன்கு அறிந்திருந்த முதலாளித்துவ வர்க்கத்தினர் அரசியல் நிர்ணயச் சபைத் தேர்தல்களைத் தள்ளிப் போட்ட போது, சோஷலிஸ்டு-புரட்சியாளர்களாலும் மென்ஷிவிக்குகளாலும் இந்தத் தாமதங்களை முழு மூச்சுடனும் முரணின்றியும் எதிர்க்க முடியவில்லை.

ஹெண்டர்சன்களும் ஸ்னோடென்களும் கம்யூனிஸ்டுகளுடன் கூட்டுசேர மறுத்தால், கம்யூனிஸ்டுகள் வெகுஜனங்களின் அனுதாபத்தைப் பெற்றும், ஹெண்டர்சன்களையும் ஸ்னோடென்களையும் செல்வாக்கிழக்கச் செய்தும் உடனே அனுகூலமடைவார்கள். இதன் விளைவாய் நாம் சில நாடாளுமன்ற

* ருஷ்யாவில் அரசியல் நிர்ணயச் சபைக்கு 1917 நவம்பரில் நடைபெற்ற தேர்தல்களில் 3,60,00,000க்கு அதிகமான வாக்காளர்கள் பதிவு செய்த வாக்குகளின் அடிப்படையிலான முடிவுகள் பின்வருமாறு: போல்ஷிவிக்குகளுக்கு 25 சதவீதமான வாக்குகள் கிடைத்தன; நிலப்பிரபுக்கள்; முதலாளித்துவ வர்க்கத்தினர் இவர்களது பல்வேறு கட்சிகளுக்கும் 13 சதவீத வாக்குகளும், குட்டிமுதலாளித்துவக் கட்சிகளுக்கும், அதாவது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும், இவற்றையொத்த பல சிறு கோஷ்டிகளுக்கும் 62 சதவீத வாக்குகளும் கிடைத்தன.

இடங்களை இழக்க நேர்ந்தால், அது நமக்கு முக்கியமான தல்ல. முற்றிலும் நம்பகமான ஒரு சில தொகுதிகளில், அதாவது போட்டியிடுவதால் தொழிற்கட்சி வேட்பாளர்களுக்குப் பாதகமாய் மிதவாதிகள் இடங்கள் பெற முடியாத தொகுதிகளில், நாம் நமது வேட்பாளர்களை நிறுத்துவோம். தேர்தல் இயக்கத்தில் நாம் பங்கெடுத்துக் கொள்வோம்; கம்யூனிசத்துக்காகக் கிளர்ச்சி செய்யும் துண்டுப் பிரசுரங்களை வினியோகிப்போம். நமது வேட்பாளர்கள் போட்டியிடாத எல்லாத் தொகுதிகளிலும் முதலாளித்துவ வேட்பாளரை எதிர்த்தும் தொழிற்கட்சி வேட்பாளரை ஆதரித்தும் வாக்களிக்கும்படி நாம் வாக்காளர்களை வற்புறுத்துவோம். இது கம்யூனிசத்துக்குத் துரோகமிழைப்பதாகும் என்றோ, சமூக-துரோகிகளுக்கு எதிரான போராட்டத்தைக் கைவிடுவதாகும் என்றோ தோழர்கள் சில்வியா பான்க்ஹெர்ஸ்டும் கலாஹரும் நினைப்பது தவறாகும். இதற்கு மாறாக, கம்யூனிசப் புரட்சிப் பணி இதனால் சந்தேகத்துக்கு இடமின்றி ஆதாயமே அடையும்.

வெகுஜனங்களை அணுகுவதுங்கூட, தாம் கூறுவதைச் செவி கொடுத்து அவர்களைக் கேட்கச் செய்வதுங்கூட தற்போது பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்கு மிகவும் கடினமாயுள்ளது. நான் கம்யூனிஸ்டாக அவர்கள் முன்னே நின்று, ஹெண்டர்சனை ஆதரித்தும், லாயிட் ஜார்ஜை எதிர்த்தும் வாக்களிக்கும்படி அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேனாகில், கட்டாயம் அவர்கள் நான் கூறுவதைச் செவி கொடுத்துக் கேட்பார்கள். மக்களுக்குப் புரியும்படியான முறையில் விளக்கிக் கூறுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். சோவியத்துக்கள் நாடாளுமன்றத்தைக் காட்டிலும் எப்படிச் சிறந்தவை, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் சர்ச்சிலின் சர்வாதிகாரத்தை (முதலாளித்துவ ''ஜனநாயகம்'' என்னும் பெயரில் மூடி மறைக்கப்பட்டிருப்பது இது) காட்டிலும் எப்படிச் சிறந்தது என்பதை மட்டுமின்றி, என்னுடைய வாக்கைக் கொண்டு நான் ஹெண்டர்சனுக்கு ஆதரவாக இருக்க விரும்புவது தூக்குக் கயிறு தூக்கிலிடப்பட்ட மனிதனுக்கு ஆதரவாக இருப்பது போன்றதாகும் என்பதையும் நான் விளக்கிக் கூறச் சந்தர்ப்பம் கிடைக்கும்;—அரசாங்கத்தை நிறுவும் நிலையை

ஹெண்டர்சன்கள் நெருங்க நெருங்க நான் சொல்வது சரி என்பது மேலும் மேலும் தெளிவாக நிரூபிக்கப்படும்; வெகு ஜனங்களை என் பக்கத்துக்கு வரச் செய்யும்; ஹெண்டர்சன் கள், ஸ்னேடன்கள் இவர்களது அரசியல் அழிவைத் துரிதப் படுத்தும், ருஷ்யாவிலும் ஜெர்மனியிலும் இவர்களை ஒத்தவர் களது விவகாரத்தில் எப்படி நேர்ந்ததோ அதே போல.

இந்தப் போர்த்தந்திரம் மிகவும் ''நுட்பமானது'', அல் லது மிகவும் சிக்கலானது, வெகுஜனங்களால் இதனைப் புரிந்து கொள்ள முடியாது என்றும், இந்தப் போர்த்தந்திரம் நமது சக்திகளைப் பிளவுபடுத்திச் சிதறடித்துவிடும், சோவியத் புரட்சியிலே அவற்றை நாம் ஒருசேரத் திரட்டி ஈடுபடுத்த முடியாதபடிச் செய்துவிடும் என்றும், இன்ன பலவாறாகவும் ஆட்சேபம் எழுப்பப்படுமானால், இந்த ''இடதுசாரி'' ஆட் சேபக்காரர்களைப் பார்த்து, உங்களுடைய வறட்டுச் சூத்திர வாதத்தை வெகுஜனங்களுக்குரியதாகக் கூறுகிறீர்கள் என்று தான் நான் பதிலளிப்பேன்! ருஷ்யாவிலுள்ள வெகுஜனங்கள் பிரிட்டனிலுள்ள வெகுஜனங்களைக் காட்டிலும் கல்வி கேள் வியில் சிறந்தவர்களல்ல என்பது தெளிவு; உண்மையில் அவர் களைக் காட்டிலும் பிற்பட்டவர்களே. ஆயினும் வெகுஜனங் கள் போல்ஷிவிக்குகளைப் புரிந்து கொள்ளவே செய் தனர். சோவியத் புரட்சிக்குச் சிறிது காலமே முன்னதாய், **1917** செப்டம்பரில், போல்ஷிவிக்குகள் முதலாளித்துவ நாடாளுமன்றத்துக்கு (அரசியல் நிர்ணயச் சபைக்கு) தமது வேட்பாளர்களை நிறுத்தினர், **1917** நவம்பரில் சோவியத் புரட்சிக்கு மறு தினம் இந்த அரசியல் நிர்ணயச் சபையின் தேர்தல்களில் பங்கு கொண்டனர்—**1918** ஜனவரி 5ல் இந்த அரசியல் நிர்ணயச் சபையைக் கலைத்தனர்—என்பது போல்ஷிவிக்குகளுக்குத் தடங்கலாகிவிடவில்லை, மாறாக அவர்களுக்கு உதவியே செய்தது.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளிடையே கருத்து வேறுபாட்டுக் குரிய இரண்டாவது விவரம் குறித்து—அதாவது தொழிற் கட்சியுடன் இணைப்பு பெறுவதா, கூடாதா என்பது குறித்து —இங்கு என்னால் பரிசீலிப்பதற்கில்லை. இப்பிரச்சினை குறித்து எனக்கு மிகச் சொற்பத் தகவல்களே கிடைத்திருக்கின்றன.

இப்பிரச்சினை மிகவும் சிக்கலானது. காரணம் என்னவெனில் பிரிட்டிஷ் ''தொழிற்கட்சி'' நூதனமான தன்மை கொண்டது; அதன் அமைப்பே ஐரோப்பியக் கண்டத்தில் சாதாரணமாய்க் காணப்படும் அரசியல் கட்சிகளைச் சிறிதும் ஒத்ததாயில்லை. ஆயினும், முதலாவதாக, இந்தப் பிரச்சினையிலும், ''அதன் கோட்பாடுகளைக் கம்யூனிஸ்டுக் கட்சி பரிசுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும்; சீர்திருத்தவாதத்துக்கு இடந்தராமல் அதன் சுயேச்சை நிலையைப் பழுதின்றிப் பாதுகாத் துக் கொள்ள வேண்டும்; கம்யூனிஸ்டுப் புரட்சிக்கான நேர் பாதையில், இடையில் நிற்காமலும் திரும்பாமலும் முன்னேறிச் செல்வதே அதன் கடன்'' என்பன போன்ற கோட்பாடுகளிலிருந்து புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் போர்த்தந்திரத்தை அனுமானிக்க முயலுவோர் தவிர்க்க முடியாதவாறு தவறிழைக்கவே நேரும் என்பது தெளிவு. இவை போன்ற கோட்பாடுகள், *1874ல்* எல்லா சமரசங்களையும் எல்லா இடைநிலைக் கட்டங்களையும் ''நிராகரித்த'' பிரெஞ்சுப் பிளான்கிஸ்டுக்-கம்யூனர்டுகள் புரிந்த தவறை அப்படியே திரும்பவும் செய்வதாகவே அமைந்திருக்கின்றன. இரண்டாவதாக, இந்தப் பிரச்சினையிலும், எப்பொழுதும் போல, கம்யூனிசத்தின் பொதுவான, அடிப்படையான கோட்பாடுகளை வர்க்கங்களுக்கிடையிலான, கட்சிகளுக்கிடையிலான பிரத்தியேக உறவுகளுக்கு, கம்யூனிசத்தை நோக்கி அமைந்த எதார்த்த வளர்ச்சியின் பிரத்தியேகக் கூறுகளுக்குப் பொருத்தமாய் அனுசரிக்கத் தெரிந்து கொள்வதே நம்முன்னுள்ள பணி. இந்தப் பிரத்தியேக உறவுகளும் கூறுகளும் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறாய் இருக்கின்றன; இவற்றைக் கண்டறிந்து கொள்ளவும், பரிசீலிக்கவும், வருவது அறிந்து முன்கூட்டியே கூறவும் நாம் ஆற்றலுடையோராய் இருத்தல் வேண்டும்.

ஆயினும் இதனை பிரிட்டிஷ் கம்யூனிசம் சம்பந்தமாய் மட்டுமின்றி, எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் உள்ள கம்யூனிசத்தின் வளர்ச்சி குறித்த பொது முடிவுகள் சம்பந்தமாகவும் விவாதித்தாக வேண்டும். இந்தப் பொருள் குறித்து இனிப் பரிசீலிக்கத் தொடங்குவோம்.

10

சில முடிவுகள்

ருஷ்யாவின் 1905ஆம் ஆண்டு முதலாளித்துவப் புரட்சி உலக வரலாற்றிலே முற்றிலும் தனிவகையானதொரு திருப்பத்தை வெளிப்படுத்திற்று: மிகவும் பிற்பட்ட முதலாளித்துவ நாடு ஒன்றில் வேலைநிறுத்த இயக்கம் உலகில் வேறு எங்கும் காணப்பட்டிராத வீச்சும் சக்தியுமுடையதாகி விட்டது. 1905ஆம் ஆண்டில் முதல் மாதத்தில் மட்டும் வேலைநிறுத்தம் செய்தவர்களது எண்ணிக்கை இதற்கு முந்திய பத்து ஆண்டுகளில் (1895—1904) இருந்த வருடாந்தரச் சராசரியைப் போல் பத்து மடங்காயிருந்தது. 1905 ஜனவரியிலிருந்து அக்டோபர் வரை வேலைநிறுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துப் பிரம்மாண்ட அளவுகளை எட்டின. தனிச் சிறப்பான வரலாற்று நிலைமைகள் பலவற்றின் காரணமாய், பிற்பட்ட ருஷ்யா முதன்முதலாய், ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களின் சுயேச்சையான செயற்பாடு புரட்சிக் காலத்தில் தாவிக் குதித்துப் பிரமாதமாய் வளர்ந்து விடுவதை மட்டுமின்றி (எல்லா மாபெரும் புரட்சிகளிலும் இது நடந்திருக்கிறது), பாட்டாளி வர்க்கத்தின் முக்கியத்துவம் மொத்த மக்கள்தொகையில் அதற்குள்ள வீதாசாரத்தைக் காட்டிலும் அளவு கடந்ததாகி விடுகிறது என்பதையும் உலகுக்குக் காட்டிற்று. பொருளாதார வேலைநிறுத்தம், அரசியல் வேலை நிறுத்தம் இவை இரண்டின் இணைப்பையும், பின்னது ஆயுதமேந்திய எழுச்சியாகிவிடும் வளர்ச்சியையும், முதலாளித்துவத்தால் ஒடுக்கப்படும் வர்க்கங்களது வெகுஜனப் போராட்டத்துக்கும் வெகுஜன நிறுவன ஒழுங்கமைப்புக்குமான புதிய வடிவமாகிய சோவியத்துக்களின் உதயத்தையும் அது காட்டிற்று.

1917 பிப்ரவரி, அக்டோபர் புரட்சிகள் சோவியத்துக்களின் நாடு தழுவிய அளவிலான முழுநிறை வளர்ச்சிக்கும், பிற்பாடு பாட்டாளி வர்க்க சோஷலிசப் புரட்சியில் அவற்றின் வெற்றிக்கும் இட்டுச்சென்றன. இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில், சோவியத்துக்களின் சர்வதேசியத் தன்மையும், போராட்டத்துக்கும் நிறுவன ஒழுங்கமைப்

புக்குமான இந்த வடிவம் உலகத் தொழிலாளி வர்க்க இயக்கம் பூராவிலும் பரவக் கூடியதென்பதும், முதலாளித்துவ நாடாளுமன்ற முறையின், பொதுவில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் சவக்குழி தோண்டுவோனுகவும் வாரிசாகவும் மரபுரிமையாளனுகவும் செயல்படுவதே சோவியத்துக்களுக்குள்ள வரலாற்று வழிப்பட்ட பணியென்பதும் கண்கூடாயின.

அது மட்டுமல்ல. வெளித்தோன்றி மேலும் மேலும் பலமடைந்து வெற்றியை நோக்கி முன்னேறும் கம்யூனிசம் முக்கியமாய்த் தனது ''மென்ஷிவிசத்தை'' எதிர்த்தும், அதாவது சந்தர்ப்பவாதத்தையும் சமூக-தேசியவெறியையும் (அந்தந்த நாட்டிலுமுள்ள உள்நாட்டு வகையைச் சேர்ந்தவை) எதிர்த்தும், பிறகு—அனுபந்தமாய் எனலாம்—''இடதுசாரி'' கம்யூனிசத்தை எதிர்த்தும் நடத்தும் போராட்டத்தை எல்லா நாடுகளும் காணப் போகின்றன (ஏற்கெனவே கண்டும் வருகின்றன) என்பதைத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வரலாறு இன்று தெளிவுபடுத்துகிறது. முந்திய போராட்டம் அனேகமாய் விதிவிலக்கின்றி எல்லா நாடுகளிலும் இரண்டாவது அகிலத்துக்கும் (இது ஏற்கெனவே உண்மையில் மடிந்துவிட்டது) மூன்றுவது அகிலத்துக்கும் இடையிலான போராட்டமாக வளர்ந்திருக்கிறது. பிந்திய போராட்டத்தை ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இத்தாலியிலும், அமெரிக்காவிலும் (எப்படியும் ''உலக ஆலைத் தொழிலாளர்'' நிறுவனத்தின் ஒரு பிரிவும், அராஜக-சிண்டிக்கலிஸ்டுப் போக்குகளைச் சேர்ந்த ஒரு பிரிவும் சோவியத் அமைப்பை அனேகமாய் முழுமனதாய் ஏற்கும் அதே நேரத்தில், இடதுசாரி கம்யூனிசத்தின் தவறுகளையும் ஆதரித்து நிற்கின்றன), மற்றும் பிரான்சிலும் (முன்னுள் சிண்டிக்கலிஸ்டுகளில் ஒரு பிரிவினர் இதேபோல சோவியத் அமைப்பை ஏற்றுக் கொள்வதுடன் கூடவே அரசியல் கட்சி குறித்தும் நாடாளுமன்ற முறை குறித்தும் அனுசரிக்கும் போக்கிலும்) காணலாம். அதாவது இந்தப் போராட்டம் சர்வதேச அளவில் மட்டுமின்றி, உலகு தழுவிய அளவிலும் கூட நடைபெற்று வருகிறது.

தொழிலாளி வர்க்க இயக்கம் எல்லா நாடுகளிலும் முதலாளித்துவ வர்க்கத்தை வெற்றி கொள்வதற்காக ஒரே

வகையான தயாரிப்புப் பள்ளியில் பயிற்சி பெற்று வருகிற தென்றாலும், இந்த வளர்ச்சியை ஒவ்வொரு நாட்டிலும் அதற் குரிய தனி முறையில் கண்டு வருகிறது. முன்னேறிய பெரிய முதலாளித்துவ நாடுகள் போல்ஷிவிசத்தைக் காட்டிலும் இந்தப் பாதையை மிக வேகமாய்க் கடந்து வருகின்றன. போல்ஷிவிசம் நிறுவன வழியில் ஒழுங்கமைந்த அரசியல் போக்காகி வெற்றிக்குத் தன்னைத் தயாரித்துக் கொள்வதற் காக வரலாறு அதற்குப் பதினைந்து ஆண்டுக் கால அவகாசம் அளித்தது. மூன்றாவது அகிலம் மிகக் குறுகிய காலமான ஓராண்டுக்குள் தீர்மானகரமான வெற்றி பெற்று விட்டது; கீழ்த்தரமான சமூக-தேசியவெறி கொண்ட இரண்டாவது அகிலத்தை அது தோற்கடித்து விட்டது. சில மாதங்களுக்கு முன்புகூட ஒப்பிட முடியாத அளவுக்கு இரண்டாவது அகிலம் மூன்றாவதைக் காட்டிலும் பலம் படைத்திருந்தது; நிலையான தாகவும் சக்தி மிக்கதாகவும் தோன்றியது; உலக முதலாளித் துவ வர்க்கத்திடமிருந்து சாத்தியமான எல்லா ஆதரவும்—நேரடி ஆதரவும் மறைமுக ஆதரவும், பொருள்வகை ஆதர வும் (அமைச்சர் பதவிகள், பாஸ்போர்ட்டுகள், பத்திரிகை கள்) சித்தாந்த ஆதரவும்—பெற்று வந்தது.

சந்தர்ப்பவாதத்துக்கும் ''இடதுசாரி'' வறட்டுச் சூத் திரவாதத்துக்கும் எதிரான போராட்டத்தின் அடிப்படைக் கடமைகளையும், மற்றும் இந்தப் போராட்டம் ஒவ்வொரு நாட்டிலும் அதன் பொருளாதாரம், அரசியல், பண்பாடு, தேசிய இயைபு, (அயர்லாந்து போன்ற நாடுகள்), அதன் காலனிகள், மதப் பிரிவினைகள் முதலான பலவற்றுக்கும் ஏற்பப் பெறும், தவிர்க்க இயலாத முறையில் பெற்றாக வேண் டிய, ஸ்தூல இயல்புகளையும் அந்தந்த நாட்டின் கம்யூனிஸ்டு களும் உணர்வு பூர்வமாய்க் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியது இப்பொழுது இன்றியமையாததாகும். இரண் டாவது அகிலம் குறித்து எங்கும் அதிருப்தி ஏற்பட்டிருக் கிறது; இந்த அதிருப்தி பரவியும் வளர்ந்தும் வருகிறது. இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதமும், உலக சோவியத் குடியரசுக்காகப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்தில் அதன் சர்வதேசப் போர்த்தந்

திரத்தை வழி நடத்தவல்ல, மெய்யாகவே மத்தியத்துவ மடைந்த, மெய்யாகவே தலைமை தாங்கும் கேந்திரத்தைத் தோற்றுவிக்க அதற்குத் திறனும் தகுதியும் இல்லாமற் போனதும்தான் இதற்குக் காரணம். மாறு உரு வகைப்பட்ட, யாந்திரிகமாய்ச் சமனமாக்கப்பட்ட, முழுதொத்தப் போர்த் தந்திர விதிகளை ஆதாரமாகக் கொண்டு இத்தகைய தலைமைக் கேந்திரத்தை அமைத்து விட முடியாது என்று நாம் தெளிவாகப் புரிந்துக் கொள்ள வேண்டியது அவசியம். தேசிய சமுதாயங்களிடையிலும் நாடுகளிடையிலும் தேசிய, அரசு வேற்றுமைகள் இருக்கும் வரை—இவை நீண்ட நெடுங் காலத்துக்கு, அனைத்துலக அளவில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் நிலைநாட்டப் பெற்ற பிறகுங்கூட தொடர்ந்து இருக்கவே செய்யும் — எல்லா நாடுகளின் கம்யூனிஸ்டுத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசப் போர்த்தந்திரத்தின் ஒற்றுமைக்குத் தேவைப்படுவது வகை வேறுபாட்டை நீக்குவதோ, தேசிய வேறுபாடுகளை ஒழிப்பதோ அல்ல (தற்போது இது ஒரு பகற்கனவே ஆகும்), கம்யூனிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை (சோவியத் ஆட்சியதிகாரம், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்) செயல்படுத்தப்படுவதேதான்—தேசிய வேறுபாடுகளுக்கும், தேசிய அரசு வேறுபாடுகளுக்கும் ஏற்ப சிற்சில விவரங்களில் இந்த அடிப்படைக் கோட்பாடுகள் பிழையின்றி உருமாற்றப்பட்டுச் சரிவரப் பொருத்தமாக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும். தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் சந்தர்ப்பவாதத்தையும் இடதுசாரி வறட்டுச் சூத்திரவாதத்தையும் வெற்றி கொள்ளுதல், முதலாளித்துவ வர்க்கத்தைக் கவிழ்த்தல், சோவியத் குடியரசையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் நிறுவுதல் என்னும் ஒருமித்த சர்வதேசப் பணியை அந்தந்த நாடும் நிறைவேற்றிட வேண்டிய ஸ்தூலமான முறையில் தேசிய வழியில் பிரத்தியேகமானவற்றையும் தேசிய வழியில் தனிச்சிறப்பானவற்றையும் அலசி ஆராய வேண்டும், தேடிப் பிடித்தாக வேண்டும், வருவது அறிந்து கூற வேண்டும், உணர்ந்து கொண்டாக வேண்டும்—இதுவே வளர்ச்சி பெற்ற எல்லா நாடுகளும் (அவை மட்டுமல்ல) கடந்து சென்று

கொண்டிருக்கும் இந்த வரலாற்றுக் கட்டத்தின் அடிப்படையான பணியாகும். ஆக வேண்டியவை நிறைய இருப்பினும், பிரதானமானது ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு விட்டது: தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படை வயப்படுத்தப் பட்டு விட்டது, நாடாளுமன்ற முறைக்கு எதிராக சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு ஆதரவாகவும், முதலாளித்துவ ஜனநாயகத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு ஆதரவாகவும் அது அணி திரண்டு விட்டது. இனி முயற்சிகள் யாவற்றையும், கவனம் அனைத்தையும் வளர்ச்சியின் அடுத்த படியை அடைவதில் ஒன்றுகுவித்தாக வேண்டும். இந்தப் படி முந்தியதைப் போல அவ்வளவு அடிப்படையானதல்ல என்பதாகத் தோன்றலாம்—ஒரு விதத்தில் அது உண்மையுங்கூட. ஆனல் நடைமுறையில் இப்பணியைச் செய்து முடிப்பதற்கு இந்தப் படிதான் உண்மையில் மிகவும் அருகாமையில் அமைந்தது, உடனடியானது. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு வளர்ந்து செல்வதற்கான அல்லது அதனை அணுகுவதற்கான முறைகளைத் தேடிப்பிடிப்பதே இந்தப் படி.

பாட்டாளி வர்க்க முன்னணிப் படை சித்தாந்த வழியில் வயப்படுத்தப்பட்டு விட்டது. இதுவே பிரதான காரியம். இது செய்யப்படவில்லையானல், வெற்றியை நோக்கி ஓர் அடி கூட முன்னேற முடியாது. ஆயினும் வெற்றிக்கு இன்னும் நெடுந்தொலைவு இருக்கிறது. முன்னணிப் படையை மட்டும் கொண்டு வெற்றியைச் சாதித்துவிட முடியாது. வர்க்கம் அனைத்தும், விரிவான வெகுஜனங்கள் எல்லோரும், முன்னணிப் படைக்கு நேரடி ஆதரவு அளிக்கும் நிலையை அடையுமுன், அல்லது குறைந்தது அது குறித்துப் பரிவுடன் கூடிய நடுநிலையையும் பகைவனுக்கு ஆதரவளிக்காத நிலையையும் அடையுமுன், முன்னணிப் படையை மட்டும் முடிவுகட்டும் போரில் இறங்கச் செய்வதானது முட்டாள் தனம் மட்டுமின்றி கொடுங்குற்றமுமாகும். ஒரு வர்க்கம் முழுவதும், உழைப்பாளி மக்களின் விரிவான பகுதிகள் யாவும், மூலதனத்தால் ஒடுக்கப்படுவோர் எல்லோரும் இத்தகைய ஒரு நிலையை அடைவதற்கு, வெறும் பிரசாரமும் கிளர்ச்சியும் மட்டும் போதாது. இதற்கு வெகுஜனங்கள் தாமே அரசியல் அனு

பவம் பெற வேண்டியது அவசியமாகும். மாபெரும் புரட்சிகள் யாவற்றுக்குமான அடிப்படை விதி இது. ருஷ்யாவில் மட்டுமின்றி, ஜெர்மனியிலுங்கூட இது மிகுந்த வலிமையுடனும் தெட்டத் தெளிவாகவும் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. வைராக்கியமாய்க் கம்யூனிசத்தின் பக்கம் வருவதற்கு, அறியாமை இருளில் மூழ்கிய, பெருமளவுக்கு எழுத்தறிவற்ற ருஷ்ய வெகுஜனங்களுக்கு மட்டுமின்றி, எழுத்தறிவும் கல்வியறிவும் படைத்த ஜெர்மன் வெகுஜனங்களுக்குங்கூட இரண்டாவது அகிலத்தின் காவலர்களது அரசாங்கம் அறவே கையாலாகாதது, உறுதியில்லாதது, அறவே வக்கற்றது, முதலாளித்துவ வர்க்கத்துக்குக் கும்பிடு போடும் அடிமைப் புத்தி கொண்டது, கேடுகெட்ட இழிநிலை வாய்ந்தது என்பதைச் சொந்தமாய்த் தமது கொடிய அனுபவத்தின் வாயிலாக உணர வேண்டியது அவசியமாயிருந்தது. பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம் இல்லையேல் கடைந்தெடுத்த பிற் போக்குவாதிகளின் (ருஷ்யாவில் கர்னீலவ், ஜெர்மனியில் காப் கும்பல்) சர்வாதிகாரம் தவிர்க்க முடியாதபடி ஏற்பட்டுவிடும் என்பதை அவர்கள் உணர வேண்டியது அவசியமாயிருந்தது.

சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் வர்க்க உணர்வு கொண்ட முன்னணிப் படையின், அதாவது கம்யூனிஸ்டுக் கட்சிகள், கோஷ்டிகள், போக்குகளின் உடனடியான பணி, விரிவான வெகுஜனங்களுக்கு (பெருமளவுக்கு இவர்கள் இன்னமும் உறக்க நிலையிலும் மந்த நிலையிலும் செயலற்றும், மரபால் கட்டுண்டும்தான் இருக்கிறார்கள்) தலைமை தாங்கி அவர்களுடைய புதிய நிலைக்கு அழைத்துச் செல்லும் ஆற்றல் பெற வேண்டுமென்பதுதான்; அல்லது இன்னும் துல்லியமாய்ச் சொல்வதெனில் தமது சொந்தக் கட்சி மட்டுமின்றி இந்த வெகுஜனங்களும் புதிய நிலையை வந்தடைவதற்கான அவர்களது முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் தலைமை தாங்கும் ஆற்றல் பெற வேண்டுமென்பதுதான். வரலாறு வழிப்பட்ட முதலாவது பணியை (பாட்டாளிகளின் வர்க்க உணர்வு படைத்த முன்னணிப் படையை சோவியத் ஆட்சியதிகாரத்தின், தொழிலாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் பக்கம் வரும்படி வயப்படுத்தும் பணியை) சந்தர்ப்பவாதத்

தின் மீதும் சமூக-தேசியவெறியின் மீதும் முழுநிறையான சித்தாந்த, அரசியல் வெற்றி பெருமல் ஈடேறச் செய்திருக்க முடியாது; அதே போல வெகுஜனங்களுக்குத் தலைமை தாங்கி, புரட்சியில் முன்னணிப் படையின் வெற்றியை உறுதி செய்யக் கூடிய புதிய நிலைக்கு அவர்களை அழைத்துச் செல்வதென்ற இரண்டாவதும் உடனடியானதுமான பணியை இடதுசாரி வறட்டுச் சூத்திரவாதத்தை ஒழித்திடாது, அதன் தவறுகளை முழுமையாகக் களைந்தெறியாது ஈடேறச் செய்ய முடியாது.

பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையைக் கம்யூனிசத்தின் பக்கத்துக்கு ஈர்த்திடுவதே பிரச்சினையாக இருந்த வரை (இன்னும் இருக்கும் வரை) பிரசாரப் பணிக்கே முதலிடம் உரியதாயிருந்தது, இன்னமும் உரியதாயிருக்கிறது. சிறு பிரசாரக் குழுக்களுங்கூட, அவற்றின் குறுகிய நோக்கங்கள் காரணமாய்ப் பல குறைபாடுகளுக்கு உள்ளாகியுங்கூட, இந்நிலைமைகளில் பயனுள்ளனவாகி, சிறந்த பலன்களை அளிக்கின்றன. ஆனல் வெகுஜனங்கள் ஆற்ற வேண்டிய நடைமுறைச் செயலாற்றல், இறுதியான, முடிவு கட்டவல்ல போருக்கான கோடிக் கணக்கானோரின் படை வரிசைகளின்—இவ்வாறு கூறலாமெனில்—அணிவகுப்பு, ஒரு சமுதாயத்தின் வர்க்க சக்திகள் யாவற்றின் பரஸ்பர பலம் ஆகியவை பிரச்சினையாகிவிடுமாயின், அப்பொழுது பிரசார முறைகள் மட்டும் போதா; ''தூய்மையான'' கம்யூனிசத்தின் உண்மைகளைத் திரும்பத் திரும்பக் கூறி வந்தால் மட்டும் போதாது. இந்நிலைமைகளில், வெகுஜனங்களுக்குத் தலைமை தாங்கும் பணியை இன்னமும் மேற்கொள்ளாத சிறு குழுவைச் சேர்ந்த பிரசாரகரைப் போல ஆயிரக் கணக்கில் எண்ணிக் கணக்கிட்டால் போதாது; பத்துலட்சக் கணக்கிலும் கோடிக் கணக்கிலும் எண்ணிக் கணக்கிட்டாக வேண்டும். இந்நிலைமைகளில், புரட்சிகர வர்க்கத்தின் முன்னணிப் படைக்குத் திடநம்பிக்கை ஏற்படச் செய்துவிட்டோமா என்பதாய்க் கேட்பதுடன் கூட, எல்லா வர்க்கங்களையும்—ஆம், விதிவிலக்கின்றி சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களையும்—சேர்ந்த வரலாற்று வழியில் செயலாற்றலுள்ள சக்திகள், முடிவு கட்டப் போகும் போர் வந்துவிட்டதென்பதற்கு ஏற்ற வகையில்

அணி வகுத்து நிற்கின்றனவா என்பதாகவும் கேட்க வேண்டும்; அதாவது (1) நமக்குப் பகையான எல்லா வர்க்க சக்திகளும் போதிய அளவு சிக்குண்டுவிட்டனவா, போதிய அளவு ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொள்கின்றனவா, தமது பலத்துக்கு அப்பாற்பட்ட போராட்டத்தில் சிக்கிப் போதிய அளவு தம்மை பலவீனப்படுத்திக் கொண்டு விட்டனவா; (2) நிலையின்றி ஊசலாடும் இடைநிலை நபர்கள் யாவரும்—முதலாளித்துவ வர்க்கத்திலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டிய குட்டிமுதலாளித்துவப் பகுதியோரும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளும்—மக்களின் கண்களில் போதிய அளவு தம்மை அம்பலப்படுத்திக் கொண்டு, நடைமுறையில் தமது கையாலாகாத்தனத்தால் தம்மைப் போதிய அளவு இழிவுபடுத்திக்கொண்டு விட்டனரா; (3) முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து மிகவும் வைராக்கியமான, துணிச்சலான, பற்றுறுதி மிக்க புரட்சிகரச் செயலில் இறங்குவதற்கு ஆதரவான வெகுஜன உணர்ச்சி பாட்டாளி வர்க்கத்தினிடையே தோன்றி சக்தி வாய்ந்த முறையில் வளரத் தொடங்கி விட்டது என்பதற்கு ஏற்ற வகையில் அவை அணி வகுத்து நிற்கின்றனவா என்று கேட்க வேண்டும். அப்படியானல், புரட்சி மெய்யாகவே முற்றிப் பக்குவ நிலை அடைந்து விட்டது; மேலே சுட்டிக் காட்டப் பெற்று சுருக்கமாய்க் கூறப்பட்ட எல்லா நிலைமைகளையும் நாம் பிழையின்றி மதிப்பீடு செய்து விட்டோமாயின், தக்க தருணத்தையும் தெரிந்தெடுத்துக் கொண்டுவிட்டோமாயின், நாம் வெற்றி பெறுவது உறுதி.

ஒரு புறத்தில் சர்ச்சில்களுக்கும் லாயிட் ஜார்ஜ்களுக்கும் இடையிலான வேற்றுமைகளும்—அற்பசொற்பத் தேசிய வேறுபாடுகளுடன் எல்லா நாடுகளிலும் இந்த அரசியல் ரகத்தினர் இருக்கின்றனர்—மறு புறத்தில் ஹெண்டர்சன்களுக்கும் லாயிட் ஜார்ஜ்களுக்கும் இடையிலான வேற்றுமைகளும் தூய தனிநிலை (அதாவது, கருத்தியலான) கம்யூனிசத்தின் கண்ணோட்டத்தில், அதாவது, வெகுஜனங்களால் நடைமுறை அரசியல் செயல் மேற்கொள்ளப்படும் கட்டத்துக்கு இன்னும் முதிர்ச்சியுறாத கம்யூனிசத்தின் கண்ணோட்டத்தில் முக்கியத்

துவமற்றவையும் அற்பமானவையுமே ஆகும். ஆனால் வெகு ஜனங்களது இந்த நடைமுறைச் செயலின் கண்ணோட்டத்தில் இந்த வேற்றுமைகள் மிகவும் முக்கியமானவை. இந்த வேற்றுமைகளைத் தக்கபடிக் கணக்கில் எடுத்து கொள்வதும், இந்த ''நண்பர்களிடையே'' தவிர்க்க முடியாதபடி எழுந்து ஒட்டு மொத்தமாய் இந்த எல்லா ''நண்பர்களையும்'' பலவீனப் படுத்தி நலிவுறச் செய்யும் இம்மோதல்கள் உச்ச நிலையை அடையும் தருணத்தை நிர்ணயிப்பதும்தான் வர்க்க உணர்வும் திடநம்பிக்கையும் சித்தாந்தத்தின் பால் விசுவாசமுள்ள பிரசாரகராய் மட்டுமின்றி, புரட்சியில் வெகுஜனங்களது நடைமுறைத் தலைவராகவும் இருக்க விரும்பும் கம்யூனிஸ்டின் கடனும் பணியுமாகும். கம்யூனிசத்தின் கருத்துக்களிடம் மாறாத விசுவாசம் கொண்டிருப்பதுடன் கூட, தேவையான எல்லா நடைமுறை சமரசங்களையும், வளைந்து கொடுத்து மாற்றமைவு செய்தலையும் இணக்கங்களையும், நெகிழ்வுத் திறனையும் பின்வாங்குதலையும், இன்ன பிற முறைகளையும் கைக்கொள்வதற்கான ஆற்றலையும் இணைத்துக் கொள்வது அவசியமாகும். அப்பொழுதுதான் ஹெண்டர்சன்கள் (தம்மை சோஷலிஸ்டுகள் என அழைத்துக் கொள்ளும் குட்டி முதலாளித்துவ ஜனநாயகத்தின் தனிப்பட்ட பிரதிநிதிகளது பெயர்களைக் குறிப்பிடாமல் சொல்வதென்றால், இரண்டாவது அகிலத்தின் தீரர்கள்) அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதையும், பிற்பாடு அதனை இழப்பதையும் துரிதமாக நடந்தேறச் செய்ய முடியும்; தவிர்க்க முடியாத வகையில் அவர்கள் நடைமுறையில் கையாலாகாதவர்களாவதையும், அதனால் வெகுஜனங்கள் நமது கருத்துக்களின் உணர்வில், கம்யூனிசத் திசையிலே, அறிவொளி வெறுவதையும் துரிதப் படுத்த முடியும்; ஹெண்டர்சன்கள், லாயிட் ஜார்ஜ்கள், சர்ச்சில்கள் ஆகியோரிடையே (மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், காடேட்டுகள், முடியாட்சி ஆதரவாளர்கள்; மற்றும் ஷெய்டெமன்கள், முதலாளித்துவ வர்க்கத்தினர், காப் ஆதரவாளர்கள் முதலான பலரிடையிலே) தவிர்க்க முடியாத படி கசப்பும் பூசல்களும் மோதல்களும் பூரணச் சிதைவு உண்டாவதைத் துரிதமாய் நடைபெறச் செய்ய முடி

யும்; தீர்மானகரமான தாக்குதலின் மூலம் பாட்டாளி வர்க்கம் இவர்கள் எல்லோரையும் தோற்கடித்து அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் பொருட்டு, ''தனியார் சொத்துடைமையின் புனிதத்தன்மையினுடைய காவலர்களான'' இவர்களிடையே பிணக்கு உச்ச நிலைக்கு உயர்ந்து விடும் தக்க தருணத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும்.

பொதுவாக வரலாறும், குறிப்பாகப் புரட்சிகளின் வரலாறும், மிகச் சிறந்த கட்சிகளும் மிகவும் முன்னேறிய வர்க்கங்களுடைய மிகுந்த வர்க்க உணர்வு படைத்த முன்னணிப் படைகளும் கற்பனை செய்யக் கூடியதையும் விட எப்பொழுதும் உள்ளடக்கத்தில் கூடுதலான செழுமையும், கூடுதலான வகை வளமும், கூடுதலான வடிவ வளமும், கூடுதலான உயிர்த்துடிப்பும் ''சாமர்த்தியமுமுடையனவாய்'' விளங்குகின்றன. இது எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதே. ஏனெனில் மிகச் சிறந்த முன்னணிப் படைகளாலுங்கூட பத்தாயிரக் கணக்கானோரின் வர்க்க உணர்வையும் சித்தத்தையும் உணர்ச்சிப் பெருக்கினையும் கற்பனைத் திறனையும் தான் வெளியிட முடிகிறது; ஆனால் மாபெரும் எழுச்சிக்கும் மனித ஆற்றல்கள் யாவற்றின் மும்முரச் செயற்பாட்டுக்குமுரிய தருணங்களில் வர்க்கங்களிடையிலான மிகக் கடுமையான போராட்டத்தால் உந்தப்படும் கோடானு கோடியானோரின் வர்க்க உணர்வாலும் சித்தத்தாலும் உணர்ச்சிப் பெருக்காலும் கற்பனைத் திறனும் புரட்சிகள் நடத்தப்படுகின்றன. இதிலிருந்து நடைமுறைத் துறையில் இரு மிக முக்கிய முடிவுகள் கிடைக்கின்றன: முதலாவதாக, புரட்சிகர வர்க்கம் தனது பணியை நிறைவேற்ற வேண்டுமாயின் அது சமுதாயச் செயற்பாட்டின் எல்லா வடிவங்களையும் அல்லது கூறுகளையும் விதிவிலக்கின்றிக் கற்றுப் பாண்டித்தியம் பெறும் ஆற்றலுடையதாய் இருத்தல் வேண்டும் (அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னால் பூர்த்தி செய்யாது விட்டு வைத்தவற்றை, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு—சில நேரங்களில் மிகுந்த ஆபத்துக்கும் மிகப் பெரிய அபாயத்துக்கும் உட்பட்டு—அது பூர்த்தி செய்ய வேண்டிவரும்); இரண்டாவதாக, அந்தப் புரட்சிகர வர்க்கம் ஒரு வடிவம்

பிறிதொன்ருக மிகவும் விரைவாகவும் திடுதிப்பென்றும் மாற்றப்படுவதற்குத் தயாராய் இருக்க வேண்டும்.

பகைவன் வசமுள்ள அல்லது அவனிடம் இருக்கக் கூடிய எல்லா ஆயுதங்களேயும் போருக்கான எல்லாச் சாதனங்களே யும் முறைகளேயும் பயன்படுத்துவதற்குத் தன்னேப் பயிற்று வித்துக் கொள்ளாத எந்தச் சேனேயும் விவேகமற்ற முறை யில், ஏன் கொடுங் குற்றத்துக்குரிய முறையிலுங்கூட நடந்து கொள்கிறதென்பதை எவரும் தயக்கமின்றி உடனே ஒத்துக் கொள்வர். போர்க் கலேயைக் காட்டிலும் அரசியலுக்கு இது இன்னும் அதிகமாய்ப் பொருந்துவதாகும். அரசியலில் குறிப் பிட்ட எதிர்கால நிலேமைகளில் எந்தப் போராட்ட முறைகள் ஏற்றவையாகவும் நமக்கு அனுகூலமளிப்பவையாகவும் இருக்குமென்று முன்கூட்டியே அறிந்து கொள்வது இன்னுங் கூட கடினமாகும். எல்லாப் போராட்ட முறைகளேயும் நாம் கையாளத் தெரிந்து கொள்ளாவிடில், நமது விருப்பங்களுக்கு அப்பாற்பட்ட வழியில் பிற வர்க்கங்களது நிலேயில் மாற்றங் கள் ஏற்பட்டு நாம் மிகவும் பலவீனமாயிருக்கும் ஒரு செயல் முறை முன்னணிக்கு வரும் போது, நாம் கடுமையான, சில நேரங்களில் தீர்மானகரமான தோல்விக்கு உள்ளாக நேர லாம். ஆனுல் எல்லாப் போராட்ட முறைகளேயும் கையாள நாம் கற்றுக் கொண்டு விடுவோமாயின், வெற்றி நிச்சயமாய் நமதே; ஏனெனில், பகைவனுக்கு மிகவும் அபாயகரமான ஆயுதங்களே, மிகத் துரிதமாய் மரண அடி கொடுக்கக் கூடிய ஆயுதங்களே நாம் பிரயோகிப்பதற்கு நிலேமைகள் நம்மை அனுமதிக்காவிட்டாலுங்கூட, நாம் மெய்யாகவே முன்னிலே யிலுள்ள, மெய்யாகவே புரட்சிகரமான வர்க்கத்தினுடைய நலன்களேப் பிரதிபலிப்பவர்களாவோம். அனுபவமில்லாத புரட்சியாளர்கள் சட்டபூர்வமான போராட்ட முறைகள் சந்தர்ப்பவாத முறைகளாகுமென்றும், ஏனெனில் முத லாளித்துவ வர்க்கம் இத்துறையில் தொழிலாளர்களே எண் ணற்ற முறை (முக்கியமாய்ப் புரட்சிகரமல்லாத ''அமைதி யான'' காலங்களில்) ஏய்த்தும் ஏமாற்றியும் விட்டதென்றும், சட்டவிரோதமான போராட்ட முறைகளே புரட்சிகர மானவையென்றும் அடிக்கடி நினேக்கிருர்கள். ஆனுல் இது சரி

யல்ல. உண்மை என்னவெனில், உதாரணமாய், 1914-18ஆம் ஆண்டுகளின் ஏகாதிபத்தியப் போரின் போது மிகவும் சுதந்திரமான ஜனநாயக நாடுகளின் முதலாளித்துவ வர்க்கமும் தொழிலாளர்களை அப்பட்டமாகவும் கொடுமையாகவும் ஏமாற்றியும் போரின் கொள்ளைக்காரத் தன்மையைப் பற்றிய உண்மையை இருட்டடிப்பு செய்தும் வந்த காலத்துக்கு ஒப்பான நிலைமைகளில் சட்டவிரோதமான போராட்ட முறைகளைக் கையாளத் திராணியில்லாத அல்லது விருப்பமில்லாத (''முடியவில்லை'' என்பது சரியல்ல, ''விருப்பமில்லை'' என்பதே சரி) கட்சிகளும் தலைவர்களும்தான் சந்தர்ப்பவாதிகள், தொழிலாளி வர்க்கத்துக்குத் துரோகிகள். ஆனால் சட்டவிரோதமான போராட்ட வடிவங்களைச் சட்டபூர்வமான போராட்டத்துக்குரிய எல்லா வடிவங்களுடனும் இணைத்துக் கொள்ளும் திறனில்லாத புரட்சியாளர்கள் மட்டரகமான புரட்சியாளர்களே ஆவர். புரட்சி ஏற்கெனவே வெடித்துப் பொங்கி வழிந்தோடும் போது, எல்லா ரகத்தினரும் கூட்டத்தோடு கூட்டமாய்ப் புரட்சிக்கு இழுத்துச் செல்லப்படும் போது—புரட்சியில் ஈடுபடுவதே நடப்பு நிலை என்பதாலும், சில நேரங்களில் பதவி மோகத்தால் உந்தப்பட்டுங்கூட எல்லா ரகத்தினரும் புரட்சியில் சேர்ந்து கொண்டுவிடும் போது—புரட்சியாளராக இருப்பது கடினமல்ல. பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்ற பிறகு இத்தகையப் போலிப் புரட்சியாளர்களிடமிருந்து தன்னை ''விடுவித்துக் கொள்ள'' அது மிகக் கடுமையான முயற்சிகளை, பெருந்துயரத்துக்குரிய முயற்சிகளையுங்கூட மேற்கொள்ள வேண்டியதாகிவிடும். நேரடியான, பகிரங்கமான, மெய்யாகவே வெகுஜனத்தன்மை வாய்ந்த, மெய்யாகவே புரட்சிகரமான போராட்டத்துக்குரிய நிலைமைகள் இன்னமும் இல்லாத போது புரட்சியாளராக இருப்பதானது, புரட்சிகரமல்லாத நிறுவனங்களில், பல சந்தர்ப்பங்களில் முழுக்க முழுக்க பிற்போக்கான நிறுவனங்களில் இருந்து, புரட்சிகரமல்லாத ஒரு சூழ்நிலையில், புரட்சிகரச் செயல் முறைகளின் அவசியத்தை உடனடியாக உணர முடியாத வெகுஜனங்களிடையே புரட்சியின் நலன்களுக்காக (பிரசாரம், கிளர்ச்சி, நிறுவன அமைப்பு இவற்றின் மூலம்)

முன்னின்று போராடுவதானது மிகமிகக் கடினம்—ஆனல் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. மெய்யான, தீர்மானகரமான, இறுதியான புரட்சிப் போராட்டத்துக்கு வெகுஜனங்களை அழைத்துச் செல்லக் கூடிய பிரத்தியேகப் பாதையை அல்லது நிகழ்ச்சிகளின் குறிப்பிட்ட திருப்பத்தைத் தேடி, கண்டறிந்து, பிழையின்றி நிர்ணயம் செய்யும் ஆற்றல் பெறுவதே—மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இன்று கம்யூனிசத்தின் தலையாய குறிக்கோள்.

பிரிட்டன் ஓர் உதாரணமாகும். அங்கு மெய்யான பாட்டாளி வர்க்கப் புரட்சி எவ்வளவு சீக்கிரத்தில் மூண்டெழுமென்றும், இன்னமும் உறக்க நிலையிலே இருக்கும் மிக விரிவான வெகுஜனங்களைத் தட்டியெழுப்பி ஆர்த்தெழச் செய்து போராட்டத்தில் இறங்க வைப்பதற்கு எந்த உடனடிக்காரணம் மிகுதியாகச் செயல்படப் போகிறதென்றும் சொல்வதற்கில்லை—முன்கூட்டியே யாராலும் சொல்ல முடியாது. ஆகவே நமது தயாரிப்பு வேலைகள் யாவற்றையும் (காலஞ் சென்ற பிளெஹானவ் அவர் ஒரு மார்க்சியவாதியாகவும் புரட்சியாளராகவும் இருந்த காலத்தில் கூறி வந்தது போல) ''நான்கு கால்களிலும் லாடம் பழுதின்றி நன்கு அமைந்திருக்கும்'' வகையில் செய்வது நமது கடமையாகும். நாடாளுமன்ற நெருக்கடியாலோ, கடுஞ் சிக்கலாகி மேலும் மேலும் வேதனையளிப்பதாகித் தீவிரமடைந்து வரும் காலனித் துறை, ஏகாதிபத்திய முரண்பாடுகளிலிருந்து எழும் நெருக்கடியாலோ, அன்றி மூன்றுவதொரு காரணத்தாலோ ''உடைப்பு'' ஏற்பட்டு, ''வெள்ளம் பெருக்கெடுக்கத்'' தொடங்கலாம். பிரிட்டனில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கதியை நிர்ணயிக்கப் போகும் போராட்டம் என்னவாக இருக்கும் என்பதை நாம் விவாதிக்கவில்லை (இது குறித்து எந்தக் கம்யூனிஸ்டுக்கும் எவ்வித சந்தேகமும் இல்லை; நாம் எல்லோருக்கும் இது ஏற்கெனவே நிலைநாட்டப் பெற்று விட்ட முடிவாகும்); நாம் விவாதிப்பதெல்லாம் தற்போது உறக்க நிலையிலுள்ள பாட்டாளி வர்க்க வெகுஜனங்களைச் செயலில் இறங்கச் செய்து நேரே அவர்களைப் புரட்சிக்கு இட்டுச் செல்லும் உடனடிக் காரணம் என்னவாக இருக்கும் என்பதே. உதாரணமாய்,

பிரெஞ்சு முதலாளித்துவக் குடியரசில், சர்வதேசக் கண்ணேட்டத்திலும் தேசியக் கண்ணேட்டத்திலும் இன்று இருப்பதை விட நூறு மடங்கு குறைவான அளவுக்குப் புரட்சிகரமாய் இருந்த ஓர் சூழ்நிலையில், பிற்போக்குவாத இராணுவவாதிகளது ஆயிரக் கணக்கான மோசடிகளில் ஒன்றைப் போன்ற ''எதிர்பாராத'', ''அற்பக்'' காரணம் (டிரைஃபஸ் வழக்கு[74]) மக்களை உள்நாட்டுப் போரின் விளிம்புக்கு இட்டுச் செல்லப் போதுமானதாகிவிட்டது என்பதை மறக்கலாகாது!

பிரிட்டனில் கம்யூனிஸ்டுகள் நாடாளுமன்றத் தேர்தல்களையும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அயர்லாந்துக் கொள்கை, காலனிக் கொள்கை, உலக-ஏகாதிபத்தியக் கொள்கை ஆகியவற்றின் எல்லா இன்னல்களையும், மற்றும் பொது வாழ்வின் ஏனைய எல்லா அரங்கங்கள், துறைகள், கூறுகளையும் இடையருதும் சிறிதும் அயராமலும் இம்மியும் பிறழாமலும் பயன்படுத்திக் கொண்டாக வேண்டும். இவை யாவற்றிலும் அவர்கள் ஒரு புதிய வழியில், கம்யூனிஸ்டு வழியில், இரண்டாவதல்ல, மூன்ருவது அகிலத்தின் உணர்வோடு செயலாற்றியாக வேண்டும். நாடாளுமன்றத் தேர்தல்களிலும் நாடாளுமன்றப் போராட்டத்திலும் பங்கெடுத்துக் கொள்வதற்கான ''ருஷ்ய'', ''போல்ஷிவிக்'' முறைகளை விவரிப்பதற்கு இங்கு எனக்கு அவகாசமோ இடமோ இல்லை. ஆயினும், அவை வழக்கமான மேற்கு ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தல் இயக்கங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தன என்று வெளிநாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு நான் உறுதியாகக் கூற முடியும். இதிலிருந்து அடிக்கடி பின்வருமாறு முடிவு செய்யப்படுகிறது: ''ஆனல் அது நடந்தது ருஷ்யாவில்; நம்முடைய நாட்டில் நாடாளுமன்ற முறை வேறு விதமானது.'' இது தவருன முடிவு. பழைய சோஷலிச, தொழிற்சங்கவாத, சிண்டிக்கலிஸ்டு, நாடாளுமன்றப் பணி முறையை, ஒரு புதிய முறையாக, கம்யூனிஸ்டுப் பணி முறையாக வழி நெடுகிலும், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மாற்றிடும் பொருட்டே மூன்ருவது அகிலத்தைப் பின்பற்றுவோரான கம்யூனிஸ்டுகள் எல்லா நாடுகளிலும் உள்ளனர். ருஷ்யாவிலுங்கூட தேர்தல்களில் சந்தர்ப்பவாதமும், முற்றிலும் முதலாளித்துவத்

தில்லுமுல்லுகளும் கள்ளத்தனமும் சூதுவாதும் எப்பொழுதும் மலிந்தே இருந்தன. மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கம்யூனிஸ்டுகள் வழக்கத்துக்கு மாறான, சந்தர்ப்பவாதமல்லாத, பதவி வேட்டையாக அமையாத ஒரு புதிய ரக நாடாளுமன்ற முறையைத் தோற்றுவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்; கம்யூனிஸ்டுக் கட்சிகள் தமக்குரிய கோஷங்களை வெளியிட வேண்டும்; மெய்யான பாட்டாளி வர்க்கத்தினர் நிறுவன ஒழுங்கமைப்பு பெறாத, ஒடுக்கி வதைக்கப்படும் ஏழைகளுடைய உதவியுடன் துண்டுப் பிரசுரங்கள் வினியோகிக்க வேண்டும், தொழிலாளர்களுடைய வீடுகளுக்கும் கிராமப் பாட்டாளிகளின், இருள் மண்டிய கிராமங்களிலுள்ள விவசாயிகளின் குடில்களுக்கும் சென்று அவர்களுடைய ஆதரவைத் திரட்ட வேண்டும் (ருஷ்யாவைக் காட்டிலும் அதிருஷ்டவசமாய் ஐரோப்பாவில் பல மடங்கு குறைவான இருள் மண்டிய கிராமங்களே உள்ளன; பிரிட்டனில் இவற்றின் எண்ணிக்கை இன்னும் குறைவு); அவர்கள் சாராயக் கடைகளுக்குச் சென்றும்; பாமர மக்களின் சங்கங்களுக்குள்ளும் கழகங்களுக்குள்ளும் தற்செயலான கூட்டங்களினுள்ளும் ஊடுருவியும் இம்மக்களுடன் பேச வேண்டும்—மெத்தப் படித்தவர்களது (அல்லது நாடாளுமன்றத்துக்குரிய) மொழியிலல்ல; அவர்கள் நாடாளுமன்ற ''இடங்களைப் பிடிக்க'' முயற்சி செய்யலாகாது, அதற்குப் பதில் மக்களைச் சிந்திக்க வைப்பதற்கே எங்கும் முயற்சி செய்ய வேண்டும், வெகு ஜனங்களைப் போராட்டத்தில் இறங்கும்படிக் கவர்ந்திழுக்க வேண்டும், முதலாளித்துவ வர்க்கத்தை அதன் சொற்களைக் கொண்டே மடக்க வேண்டும், அது அமைத்துள்ள ஏற்பாட்டையும் நடத்தி வரும் தேர்தல்களையும் மக்களுக்கு அது விடுத்துள்ள வேண்டுகோள்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; போல்ஷிவிசம் என்றால் என்னவென்பதை மக்களுக்கு விளக்க முயல வேண்டும்—இவ்வாறு விளக்குவது (முதலாளித்துவ ஆதிக்கத்தில்) தேர்தல் காலங்கள் அல்லாத பிற காலங்களில் சாத்தியமாய் இருந்ததில்லை (பெரிய வேலைநிறுத்தங்கள் நடைபெற்ற காலங்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கு; ருஷ்யாவில் இக்காலங்களில் மக்களிடையே விரிந்த அளவில்

கிளர்ச்சி நடத்துவதற்காக, தேர்தல் காலத்தில் இயங்கியதை ஒத்த அமைப்பு ஒன்று இன்னுங்கூட தீவிரமாய் இயங்கிற்று). மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இதைச் செய்வது மிகக் கடினம், மிகமிகக் கடினம். என்றாலும் இதனைச் செய்ய முடியும், செய்தே ஆகவும் வேண்டும்; அருமுயற்சி இல்லாமல் கம்யூனிசத்தின் குறிக்கோள்களைச் சாதிக்க முடியாது. மேலும் மேலும் நானாவிதமான, சமுதாய வாழ்வின் எல்லாக் கிளைகளுடனும் மேலும் மேலும் நெருங்கிய இணைப்புக் கொண்ட நடைமுறைப் பணிகளை நிறைவேற்றி, முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து ஒவ்வொரு கிளையாக, ஒவ்வொரு துறையாக கைப்பற்ற நாம் பாடுபட்டாக வேண்டும்.

மேலும் பிரிட்டனில் பிரசார, கிளர்ச்சி, நிறுவன ஒழுங்கமைப்புப் பணிகள் இராணுவப் படையினரிடையிலும், தமது ''சொந்த'' அரசின் ஒடுக்கப்பட்ட, உரிமைகள் பறிக்கப்பட்ட தேசிய இனங்களிடையிலும் (அயர்லாந்து, காலனிகள்) ஒரு புதிய பாணியில் (சோஷலிஸ்டுப் பாணியில் அல்லாமல் கம்யூனிஸ்டுப் பாணியில், சீர்திருத்தவாதப் பாணியில் அல்லாமல் புரட்சிகரப் பாணியில்) மேற்கொள்ளப்பட்டுச் செய்யப்பட்டாக வேண்டும். இதற்குக் காரணம் என்னவெனில், பொதுவாக ஏகாதிபத்தியச் சகாப்தத்தில், இன்னும் முக்கியமாய் இன்று பல்வேறு நாடுகளின் மக்களுக்கும் ஒரு கொடுஞ்சோதனையாகி, வேகமாய் அவர்களுடைய கண்களைத் திறந்துவிட்டு உண்மையைப் பார்க்கச் செய்த (அதாவது மிகவும் கூடுதலான நாடுகளைச் சூறையாடப் போவது பிரிட்டிஷ் கொள்ளைக்காரர்களா அல்லது ஜெர்மன் கொள்ளைக்காரர்களா என்பதை முடிவு செய்ய வேண்டுமென்பதற்காகக் கோடிக் கணக்கானோர் கொல்லப்பட்டனர், முடமாக்கப்பட்டனர் என்கிற இந்த உண்மையைப் பார்க்கச் செய்த) ஒரு போருக்குப் பிற்பாடு, சமுதாய வாழ்வின் இந்த எல்லாத் துறைகளிலும் வெடிமருந்து மிகுதியாகக் குவிந்து விட்டது; மோதல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் வர்க்கப் போராட்டம் கடுமையாவதற்குமான எண்ணற்ற காரணங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. உலகப் பொருளாதார, அரசியல் நெருக்கடியின் விளைவாய் எல்லா நாடுகளிலும் சிதறிப் பறக்கும்

எண்ணிலடங்காத தீப்பொறிகளில் எது பெருந்தீயை மூட்டி விட போகிறதென்பது—வெகுஜனங்களைக் கிளர்ந்தெழச் செய்யப் போகிறது என்ற அர்த்தத்தில்—நமக்குத் தெரியாது, தெரியவும் முடியாது. ஆகவே நாம் நமது புதிய, கம்யூனிஸ்டுக் கோட்பாடுகளின் அடிப்படையில் யாவற்றையும், மிகவும் பழமையான, இருள் மண்டிய, நம்பிக்கைக்குச் சிறிதும் இடமில்லாததாய்த் தோன்றும் துறைகளையும்கூட கிளர்த்திவிட வேலை செய்தாக வேண்டும். இல்லையேல் நாம் நமது கடமைகளை நிறைவேற்ற முடியாமற் போய்விடும்; விரிவான அளவில் தயார் செய்து ஆயத்த நிலையில் இருக்க முடியாமற் போய்விடும்; எல்லா ஆயுதங்களையும் பெற்றவர்களாய் இருக்க முடியாமற் போய்விடும்; முதலாளித்துவ வர்க்கத்தை (அதற்குரிய முதலாளித்துவ பாணியில் சமுதாய வாழ்வின் எல்லாக் கூறுகளையும் ஒழுங்கமைத்த, இப்போழுது அவை யாவற்றையும் அலங்கோலமாக்கிவிட்ட முதலாளித்துவ வர்க்கத்தை)வெற்றி கொள்ளவும், அந்த வெற்றியைத் தொடர்ந்து வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் செய்யப்பட வேண்டிய கம்யூனிசப் புனரமைப்பைச் செய்ய முடியாமலும் போய்விடும்.

ருஷ்யாவில் ஏற்பட்ட பாட்டாளி வர்க்கப் புரட்சியையும், முதலாளித்துவ வர்க்கத்தினரும் அற்பர்களும் சிறிதும் எதிர்பாரா வண்ணம் சர்வதேச அளவில் அது கண்ட வெற்றிகளையும் தொடர்ந்து அகில உலகும் மாறி விட்டது; முதலாளித்துவ வர்க்கமும் மாறி விட்டது. ''போல்ஷிவிசம்'' என்றதுமே அதற்குக் குலைநடுக்கம் உண்டாகிறது; வெறி பிடித்தாடும் அளவுக்கு அதற்குக் கொடுஞ் சீற்றம் ஏற்படுகிறது. இதன் நேரடி விளைவாய் அது ஒரு புறத்தில் நிகழ்ச்சிகளின் வளர்ச்சிப் போக்கை மேலும் மும்முரமடையச் செய்கிறது; மறு புறத்தில் வன்முறையால் போல்ஷிவிசத்தை நசுக்குவதில் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறது. இதன் மூலம் அது வேறு பல துறைகளிலும் தனது நிலைகளைப் பலவீனப்படுத்திக் கொண்டு விடுகிறது. முன்னேறிய எல்லா நாடுகளிலும் கம்யூனிஸ்டுகள் தமது போர்த்தந்திரத்தில் இவ்விரு நிலைமைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ருஷ்யக் காடேட்டுகளும் கேரென்ஸ்கியும் அடங்காத ஆத்திரங் கொண்டு, போல்ஷிவிக்குகளை வேட்டையாட முற்பட்ட போது—முக்கியமாய் 1917 ஏப்ரலுக்குப் பிற்பாடு, இன்னும் முக்கியமாய் 1917 ஜூன்— ஜூலையில் —அவர்கள் அளவு மீறிச் சென்று விட்டனர். போல்ஷிவிக்குகளை எதிர்த்து எல்லா ஸ்தாயிகளிலும் பெருங் கூச்சல் எழுப்பிய முதலாளித்துவப் பத்திரிகைகளின் லட்சக் கணக்கான பிரதிகள், வெகு ஜனங்கள் போல்ஷிவிசத்தை மதிப்பீடு செய்வதற்கு உதவியாக இருந்தன. பத்திரிகைகளைத் தவிர முதலாளித்துவ வர்க்கத்தின் ''உற்சாகம்'' காரணமாகவும் பொது வாழ்வு அனைத்திலும் போல்ஷிவிசத்தைப் பற்றிய விவாதங்கள் மிகுதியாகி விட்டன. இன்று சர்வதேச அளவில் எல்லா நாடுகளின் கோடீஸ்வரர்களும் நமது உள்ளம் நிறைந்த நன்றிக்கு உரித்தானவர்களாகும் முறையில் நடந்து கொள்கிறார்கள்; கேரென்ஸ்கி கூட்டத்தார் காட்டிய அதே உற்சாகத்தோடு போல்ஷிவிக்குகளை வேட்டையாடி வருகிறார்கள்; கேரென்ஸ்கி செய்தது போலவே இவர்களும் அளவு மீறிச் சென்று விடுகிறார்கள்; அதன் மூலம் நமக்கு உதவி செய்து வருகிறார்கள். பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கம், ஒப்பளவில் மிதவாத சோஷலிஸ்டுகள் அல்லது ஊசலாடும் சோஷலிஸ்டுகளானோரை போல்ஷிவிக்குகள் என்பதாகக் கூறிக் குற்றம் சாட்டித் தேர்தல்களில் போல்ஷிவிசத்தை மையப் பிரச்சினையாக்கும் போதும், அமெரிக்க முதலாளித்துவ வர்க்கம் போல்ஷிவிக் சதித்திட்டங்கள் என்று கூறி பல கதைகளைப் பரப்பி முற்றிலும் கதி கலங்கிப்போய் ஆயிரமாயிரமானோரை போல்ஷிவிசத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் சந்தேகத்தின் பேரில் பிடித்துச் சென்று பீதி நிலைமையை உண்டாக்கும் போதும், உலகிலேயே மிகவும் ''திடமான'' பிரிட்டிஷ் முதலாளித்துவ வர்க்கம்—அது எவ்வளவோ விவேகமும் அனுபவமும் பெற்று இருந்துங் கூட — பெரும் பணம் ஒதுக்கிப் ''போல்ஷிவிசத்தை எதிர்த்துப் போராடும் கழகங்கள்'' நிறுவியும், போல்ஷிவிசம் குறித்து தனிவகை வெளியீடுகளைத் தோற்றுவித்தும், அதனை எதிர்த்துப் போராடுவதற்காக அதிகப்படியான அள

வில் விஞ்ஞானிகளேயும் கிளர்ச்சியாளர்களேயும் மத குருமார் களேயும் திரட்டியும் நம்ப முடியாத அசட்டுத் தவறுகள் புரியும் போதும், நாம் முதலாளிகளுக்குக் கும்பிடு போட்டு நன்றி தெரிவித்தே ஆக வேண்டும். அவர்கள் நமக்காகத்தான் வேலே செய்கிருர்கள். போல்ஷிவிசத்தின் சாரப்பொருள் என்ன, அதன் முக்கியத்துவம் என்ன என்பதில் வெகுஜனங் களே அக்கறை கொள்ளச் செய்வதற்கு நமக்கு உதவி செய்கிருர்கள். இவ்வாறன்றி அவர்களால் வேறு எவ்வகை யிலும் நடந்துகொள்ள முடியாது; ஏனெனில் போல்ஷிவி சத்தை உதாசீனம் செய்து அதனே நசுக்கிவிடலாமென்னும் முயற்சியில் ஏற்கெனவே அவர்கள் தோல்வியுற்று விட்டனர்.

ஆனுல், அதேபோதில் முதலாளித்துவ வர்க்கம் அனேக மாய் போல்ஷிவிசத்தின் ஒரேயொரு அம்சத்தை மட்டும் தான்—புரட்சியெழுச்சி, வன்முறை, பயங்கரம் இவற்றை மட்டும்தான்—காண்கிறது; எனவே அது இந்தத் துறையில் எதிர்முயற்சிக்கும் எதிர்ப்புக்கும் தன்னேத் தயார் செய்து கொள்ள முற்படுகிறது. சிற்சில சந்தர்ப்பங்களில், சிற்சில நாடுகளில், குறிப்பிட்ட சில காலத்துக்கு இதில் அது வெற்றி பெறுவது சாத்தியமே. இம்மாதிரியான சாத்தியப்பாட்டை நாம் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். இதில் அது வெற் றியே பெற்ருலுங்கூட, நாம் அஞ்சுவதற்குக் காரணம் இல்லே. பொது வாழ்வின் எல்லாத் துறைகளிலும் கம்யூனிசம் திட்ட வட்டமாய்த் ''தலேதூக்கி'' வருகிறது. அதன் தொடக்க நிலேகளே, ஒன்றுகூட பாக்கி இல்லாமல் எல்லாப் பக்கங்களி லும் காண முடிகிறது. இந்தத் ''தொத்து'' (முதலாளித்துவ வர்க்கத்தாலும் முதலாளித்துவப் போலீசாலும் வெகுவாகக் கையாளப்படும், அவர்களுக்கு மிகவும் பிடித்தமான உரு வகச் சொல்லே உபயோகிப்பதெனில்) உடல் பூராவிலுமே முழுக்க முழுக்க ஊடுருவி முழு அளவுக்குப் பரவி விட்டது. விசேஷ முயற்சிகள் எடுத்து ஒரு வழியை மூடியடைத்தால், இந்தத் ''தொத்து'' வேமுெரு வழியை, சில நேரங்களில் சிறிதும் எதிர்பாராத ஒரு வழியை, உடனே கண்டுபிடித்துக் கொள்ளும். வாழ்க்கையானது தன்னேத் தானே நிலேநாட்டிக் கொள்ளவே செய்யும். முதலாளித்துவ வர்க்கம் கொடுஞ்

சீற்றங் கொண்டு வெறி தலைக்கேறி கோர நர்த்தனம் புரியட்டும்; அளவு மீறிச் சென்று கடைகோடி நிலைகளை மேற்கொள்ளட்டும்; அசட்டுத் தவறுகள் செய்யட்டும்; முன்கூட்டியே போல்ஷிவிக்குகள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளட்டும்; மேலும் கூடுதலாய் நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் லட்சக் கணக்கிலும் நேற்றைய கம்யூனிஸ்டுகளையும் நாளைய கம்யூனிஸ்டுகளையும் கொன்று குவிக்க (இந்தியாவிலும் ஹங்கேரியிலும் ஜெர்மனியிலும் மற்றும் பல நாடுகளிலும் செய்வதைப் போல) முயன்று பார்க்கட்டும். இவ்வாறு செயல்படுவதன் மூலம் முதலாளித்துவ வர்க்கம் வரலாற்று வழியில் சபிக்கப்பட்டு அழிவை நோக்கி விரையும் எல்லா வர்க்கங்களையும் போலவேதான் நடந்து கொள்கிறது. எது எப்படி ஆயினும் வருங்காலம் நமதே என்பது கம்யூனிஸ்டுகளுக்குத் தெரிந்திருக்கவேண்டும். ஆகவே நம்மால் மாபெரும் புரட்சிப் போராட்டத்தின் பால் அடங்காத உணர்ச்சிப் பரவசத்தை முதலாளித்துவ வர்க்கத்தின் தலைவிரி கோலமான வெறியாட்டத்தைப் பற்றிய மிகமிக அமைதியான, மிகமிக நிதானமான மதிப்பீட்டுடன் இணைத்துக் கொள்ள முடியும் (அவ்வாறே இணைத்துக் கொள்ளவும் வேண்டும்). ருஷ்யப் புரட்சி கொடிய முறையில் 1905ல் தோற்கடிக்கப்பட்டது; ருஷ்ய போல்ஷிவிக்குகள் 1917 ஜூலையில் தோற்கடிக்கப்பட்டனர்; முதலாளித்துவ வர்க்கத்துடனும் முடியாட்சிவாத ஜெனரல்களுடனும் கை கோத்துச் செயல்பட்ட ஷெய்டெமனும் நோஸ்கேயும் செய்த ஈனத்தனமான ஆத்திர மூட்டலின் விளைவாகவும் தந்திரச் சூழ்ச்சிகளின் விளைவாகவும் 15,000க்கு அதிகமான ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் கொலையுண்டனர்; பின்லாந்திலும் ஹங்கேரியிலும் படு பயங்கர அடக்குமுறை தாண்டவமாடுகிறது. ஆனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், எல்லா நாடுகளிலும் கம்யூனிசம் உருக்கு உறுதி பெற்று ஓங்கி வளர்ந்தே வருகிறது; அதன் வேர்கள் அவ்வளவு ஆழமாகச் செல்வதால் அடக்குமுறை அதனைப் பலவீனமாக்கவோ சிதைக்கவோ இல்லை, மேலும் மேலும் பலம் பெறவே செய்கிறது. மேலும் திடநம்பிக்கையோடும் உறுதியோடும் நாம் வெற்றியை நோக்கி முன்னேறி நடைபோடுவதற்கு ஒன்றே

ஒன்றுதான் தேவைப்படுகிறது: அது என்னவெனில் எல்லா நாடுகளிலும் எல்லாக் கம்யூனிஸ்டுகளிடையிலும் தமது போர்த்தந்திரத்தில் அதிகபட்ச நெகிழ்வுத்தன்மையை வெளிப் படுத்துவது அவசியமென்ற உணர்வு அனைத்துலக அளவிலும் முழுமையாகவும் ஏற்பட வேண்டுமென்பதே. சிறப்பாய் வளர்ச்சியுற்று வரும் கம்யூனிஸ்டு இயக்கத்தில் இன்று, முக் கியமாய் வளர்ச்சி பெற்ற நாடுகளில், இந்த உணர்வும் நடை முறையில் இதனைச் செயல்படுத்தும் ஆற்றலும் இருக்கவில்லை.

சோஷலிசத்தில் பற்றுறுதி கொண்ட அரும்பெரும் புலமை வாய்ந்த மார்க்சியவாதிகளான காவுத்ஸ்கியையும் ஒட்டோ பௌவரையும் ஏனையோரையும் போன்ற இரண் டாம் அகிலத் தலைவர்களுக்கு நேர்ந்த கதி நல்லதொரு படிப் பினையாக அமையக் கூடும் (அமையவும் வேண்டும்). நெகிழ் வுடைய போர்த்தந்திரத்தின் அவசியத்தை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்; அவர்கள் மார்க்சின் இயக்கவியலைத் தாமும் கற்று ஏனையோருக்கும் கற்பித்தனர் (இத்துறையில் அவர்கள் செய்த பணியின் பெரும் பகுதி சோஷலிச இலக் கியத்துக்கு ஆற்றிய மதிப்பிடற்கரிய பங்காய் என்றென்றும் நிலைத்திருக்கும்); ஆயினும் இந்த இயக்கவியலைப் பிரயோகிப் பதில் அவர்கள் அவ்வளவு பெருந்தவறிழைத்ததால், அல்லது நடைமுறையில் அந்த அளவுக்கு இயக்கவியலுக்கு முரணாகச் சென்றதால், வடிவங்களில் ஏற்பட்ட அதிவிரைவான மாறுதலையும் பழைய வடிவங்கள் அதிவிரைவாய்ப் புதிய உள்ளடக்கம் பெற்றதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும் திறனற்றோராகியதால், அவர்களுக்கு நேர்ந்த கதி ஹைண்ட் மன், கெட்டு, பிளெஹானவ் ஆகியோருக்கு ஏற்பட்டதை விட அதிகம் சிறப்பானதாயில்லை. அவர்கள் கையாலாகாத வர்களாகியதற்குப் பிரதான காரணம் என்னவெனில், தொழி லாளி வர்க்க இயக்கத்தின், சோஷலிசத்தின் வளர்ச்சிக்குரிய ஒரு குறிப்பிட்ட வடிவத்தால் மதி மயங்கிக் கட்டுண்டு, அந்த வடிவத்தின் ஒருசார்பான தன்மையை அறவே மறந்து விட் டனர், எதார்த்த நிலைமைகளால் தவிர்க்க முடியாததாக்கப் பட்டுவிடும் திடீர் மாற்றங்களைக் காண்பதற்கு அஞ்சினர், மேம்போக்காய்ப் பார்க்கையில் மறுக்க இயலாதவையாகத்

தோன்றிய ''இரண்டை விட மூன்றே அதிகம்'' என்பதை யொத்த எளிய சூத்திரங்களை மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டு கிளிப்பிள்ளை போல் திரும்பத் திரும்ப அதையே சொல்லி வந்தனர். ஆனால் அரசியலானது எண் கணிதத்தை விட குறிக் கணிதத்தையே அதிகம் ஒத்தது; இன்னும் ஆரம்பக் கணிதத்தை விட உயர் கணிதத்தையே அதிகம் ஒத்தது. எதார்த்தத்தில் சோஷலிச இயக்கத்தின் பழைய வடிவங்கள் யாவும் ஒரு புதிய உள்ளடக்கத்தைப் பெற்று விட்டன; ஆகவே எல்லா இலக்கங்களின் முன்பும் ஒரு புதிய குறி, ''மைனஸ்'' குறி தோன்றி விட்டது. ஆனால் நமது மேதாவிகள் ''மைனஸ் இரண்டை'' விட ''மைனஸ் மூன்றே'' அதிகம் என்று பிடிவாதமாய்த் தொடர்ந்து தமக்கும் பிறருக்கும் எடுத்துரைத்து வந்தனர் (இன்னமும் எடுத்துரைத்து வருகின்றனர்).

கம்யூனிஸ்டுகள் இதைப் போன்ற பிழையை இதற்கு எதிரிடைப் பொருளில் செய்யாதிருக்கும்படி நாம் பார்த்துக் கொண்டாக வேண்டும்; அல்லது இன்னும் திருத்தமாய்க் கூறுவதெனில், இதைப் போன்ற ஒரு பிழை இதற்கு எதிரிடையான பொருளில் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகளால் செய்யப்படுவதானது கூடுமான சீக்கிரத்தில் திருத்தப்படும் படியும், கூடுமான அளவு விரைவாகவும் வேதனையின்றியும் நீக்கப்படும்படியும் செய்தாக வேண்டும். தவறாயிருப்பது வலதுசாரி வறட்டுச் சூத்திரவாதம் மட்டுமல்ல; இடதுசாரி வறட்டுச் சூத்திரவாதமும் தவறானதே. கம்யூனிசத்தில் தற்போது இடதுசாரி வறட்டுச் சூத்திரவாதம் வலதுசாரி வறட்டுச் சூத்திரவாதத்தைக் காட்டிலும் (அதாவது சமூக-தேசியவெறியையும் காவுத்ஸ்கிவாதத்தையும் காட்டிலும்) ஆயிரம் மடங்கு குறைவான அபாயத்தை விளைவிக்கக் கூடிய தென்பதும், ஆயிரம் மடங்கு குறைவான முக்கியத்துவமே வாய்ந்ததென்பதும் மெய்தான். ஆனால் இடதுசாரி கம்யூனிசம் இளம் பருவத்திலுள்ள ஒரு போக்கு, இப்பொழுதுதான் தோன்றிவருகிற போக்கு என்பதால் ஏற்படும் நிலைமையே ஆகும் இது. இக்காரணத்தினால் மட்டும் இந்த வியாதி சில நிலைமைகளில் சுலபமாய் அகற்றப்படக் கூடியதாகி விடுகிறது;

இதனை அகற்ற நாம் முழு சக்தியையும் கொண்டு செயல்பட வேண்டும்.

பழைய வடிவங்கள் வெடித்துப் பிளக்கின்றன; ஏனெனில் அவற்றின் புதிய உள்ளடக்கம்—பாட்டாளி வர்க்க-எதிர்ப்பும் பிற்போக்குமான இந்தப் புதிய உள்ளடக்கம்—அளவு மீறி வளர்ந்து விட்டது. சர்வதேசக் கம்யூனிச வளர்ச்சியின் கண்ணேட்டத்தில் இன்று நமது பணி (சோவியத் ஆட்சியதிகாரத்துக்கும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குமான நமது பணி) மிகவும் நிலையான, சக்தி வாய்ந்த உள்ளடக்கமுடையதாகையால், அது எந்த வடிவத்திலும்—புதியது, பழைய ஆகிய இரு வடிவங்களிலுமே—வெளிப்பட முடியும், வெளிப்படவும் வேண்டும்; அது எல்லா வடிவங்களையும்—புதியவற்றை மட்டுமின்றி பழையவற்றையும் கூட—புத்துயிர் பெறச் செய்யவும் வெற்றி கொள்ளவும் ஆட்கொள்ளவும் முடியும், அவ்வாறே செய்யவும் வேண்டும்; பழையவற்றுடன் தனக்கு இணக்கம் ஏற்படும் பொருட்டு அல்ல, புதியவை, பழையவை ஆகிய எல்லா வடிவங்களையுமே கம்யூனிசத்தின் முழு நிறையான, தடுக்க இயலாத வெற்றிக்கான ஆயுதமாக்கிக் கொள்ளும் பொருட்டு அது இதனைச் செய்ய வேண்டும்.

உலகு தழுவிய அளவில் சோவியத் ஆட்சியதிகாரமும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் வெற்றி பெறுவதற்கான மிகக் குறைந்த தொலைவுள்ள நேரான பாதையில் தொழிலாளி வர்க்க இயக்கத்தையும் பொதுவாக சமுதாய வளர்ச்சியையும் வழிநடத்திச் செல்வதற்குக் கம்யூனிஸ்டுகள் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இது மறுக்க முடியாத உண்மை. ஆனல் இதே திசையில் அமைந்ததாகத் தோன்றும் மேலும் ஒரு சிறு அடி எடுத்து வைத்தால் போதும், உண்மை பிழையாக மாறி விடுகிறது. ஜெர்மன், பிரிட்டிஷ் இடதுசாரி கம்யூனிஸ்டுகள் சொல்வது போல், ஒரே பாதையை மட்டுமே, நேர் பாதையை மட்டுமே நாம் அங்கீகரிப்போம், வளைந்து கொடுத்து மாற்றமைவு செய்தலையோ, இணக்கம் காணுதலையோ, சமரசத்தையோ அனுமதியோம் என்று சொன்னல் போதும், கம்யூனிசத்துக்குப்

பெருங் கேடு விளைவிக்கக் கூடிய, ஓரளவுக்கு ஏற்கெனவே விளைவித்துவிட்ட, விளைவித்தும் வருகிற, தவறிழைப்போராய் விடுவோம். வலதுசாரி வறட்டுச் சூத்திரவாதம் பழைய வடிவங்களை மட்டுமே அங்கீகரிப்பேன் என்று விடாப்பிடியாக நின்று, முற்றிலும் கையாலாகாததாகி விட்டது; புதிய உள்ளடக்கத்தை அது காணத் தவறியதே இதற்குக் காரணம். இடதுசாரி வறட்டுச் சூத்திரவாதம் கண்ணை மூடிக் கொண்டு சில பழைய வடிவங்களைப் பிடிவாதமாய் நிராகரிக்கிறது; புதிய உள்ளடக்கம் எல்லா வகையான வடிவங்கள் மூலமாகவும் வலுக் கட்டாயமாக வெளிப்படுகிறது என்பதையும், கம்யூனிஸ்டுகளாகிய நாம் எல்லா வடிவங்களிலும் பாண்டித்தியம் பெறுவதும், மிகவும் கூடுதலான வேகத்தில் ஒரு வடிவத்துக்குத் துணையாக மற்றொன்றை இணைத்துக் கொள்வதும், ஒன்றுக்குப் பதிலாய் இன்னொன்றைப் பயன்படுத்திக் கொள்வதும், நம்முடைய வர்க்கத்திடமிருந்தோ, நம்முடைய முயற்சிகளின் வாயிலாகவோ ஏற்படாத எந்த மாறுதலுக்கும் பொருத்தமாய் நம்முடைய போர்த்தந்திரத்தை மாற்றியமைத்துக் கொள்வதும் நமது கடமையாகும் என்பதையும் அது பார்க்கத் தவறி விடுகிறது.

உலக ஏகமதிபத்தியப் போரின் பயங்கரக் கொடுமைகளாலும் இழிநிலைகளாலும் அநீதிகளாலும் மற்றும் இந்தப் போரால் ஏற்பட்ட படுமோசமான சூழ்நிலையாலும் உலகப் புரட்சி சக்தி வாய்ந்த முறையில் தூண்டப் பெற்று துரிதப் படுத்தப்பட்டு விட்டது. மகத்தான வேகத்தில் முன்னேறி, மாறிச் செல்லும் வடிவங்களது அற்புத வளத்தை வெளிப் படுத்தி, எல்லா விதமான வறட்டுச் சூத்திரவாதத்தையும் நடைமுறையில் பொய்ப்பித்துக் காட்டி, புத்தி புகட்டி இந்தப் புரட்சி வீச்சிலும் ஆழத்திலும் ஓங்கி வளர்ந்து வருகிறது. இந்நிலைமைகளில் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் துரிதமாகவும் முழுமையாகவும் ''இடதுசாரி'' கம்யூனிசம் என்னும் இந்த இளம் பருவக் கோளாறிலிருந்து விடுபட்டு விடுமென முழு நம்பிக்கையுடன் கூறலாம்.

ஏப்ரல் 27, 1920

அனுபந்தம்

எங்கள் நாட்டின் பதிப்பகங்கள் என்னுடைய பிரசுரத்தை வெளிக் கொண்டுவருவதற்குள்—பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காக வஞ்சம் தீர்க்க வேண்டுமென்று அனைத்துலக ஏகாதிபத்தியவாதிகளாலும் எங்கள் நாடு சூறையாடப் பட்டிருக்கிறது; தமது தொழிலாளர்களுக்கு அவர்கள் அளித்த எல்லா வாக்குறுதிகளும் மீறப்பட்டு தொடர்ந்து இன்னமும் சூறையாடப்பட்டும் முற்றுகையிடப்பட்டும் வருகிறது—மேலும் பல தகவல்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து சேர்ந்தன. நடப்பு விவகாரங்களைப் பற்றி எழுதுபவரின் அவசரமான குறிப்புக்களைக் காட்டிலும் அதிகமாய் எதனையும் என்னுடைய பிரசுரத்தில் அளிப்பதாய்க் கூறிக்கொள்ளாமல், ஒரு சில விவரங்களை இங்கு சுருக்கமாய் எடுத்துரைக்கிறேன்.

1

ஜெர்மன் கம்யூனிஸ்டுகளிடையே பிளவு

ஜெர்மனியில், கம்யூனிஸ்டுகளிடையே பிளவு உண்மை நிலவரமாகி விட்டது. ''இடதுசாரிகள்'' அல்லது ''கோட்பாடு வழிப்பட்ட எதிர்த்தரப்பாளர்கள்'' ''கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து'' விலகி வேறானதொரு தனிக் ''கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியை'' அமைத்துக் கொண்டு விட்டனர். இத்தாலியிலும் பிளவு ஏற்பட்டுவிடுமெனத் தோன்றுகிறது—ஏன் நான் ''தோன்றுகிறது'' எனக் கூறுகிறேன் என்றால், சோவியத் (*Il Soviet*) இடதுசாரிச் செய்தியேட்டில்

மேற்கொண்டு இரு இதழ்கள் மட்டுமே (இதழ்கள் 7,8) எனக்குக் கிடைத்திருக்கின்றன; இவ்விதழ்களில் பிளவின் சாத்தியப்பாடு குறித்தும், அவசியம் குறித்தும் பகிரங்க மாகவே விவாதிக்கப்படுகிறது தவிரவும் இன்னமும் இத்தா லிய சோஷலிஸ்டுக் கட்சியின் ஒரு பகுதியாகவே இருந்து வரும் ''விலகி நிற்போர்'' கோஷ்டியின் (அல்லது பகிஷ்கரிப் பாளர்கள், அதாவது நாடாளுமன்றத்தில் பங்கு கொள்வதை எதிர்ப்பவர்கள் கோஷ்டியின்) காங்கிரசைப் பற்றியும் குறிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற-எதிர்ப்பாளர்களாகிய ''இடதுசாரிகளுட ஞன'' (இவர்கள் எந்த அரசியல் கட்சியையும் தொழிற் சங்கங்களில் பணியாற்றுவதையும் எதிர்ப்பதால் ஓரளவுக்கு அரசியலையே எதிர்ப்பவர்களுமாவர்) இந்தப் பிளவு, ''மைய வாதிகளுடனுன'' (அதாவது, காவுத்ஸ்கிவாதிகள், லொங் கேவாதிகள், ''சுயேச்சையாளர்கள்'' முதலானோர்) பிள வைப் போலவே சர்வதேச நிகழ்ச்சிப் போக்காகி விடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. அப்படியேதான் நடை பெறட்டுமே. எப்படியும் குழப்பத்தை விட பிளவு மேலா னதே. குழப்பத்தால் கட்சியின் சித்தாந்த, தத்துவார்த்த, புரட்சிகர வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் தடை ஏற்படுகிறது; கட்சியின் இசைவான, மெய்யாகவே ஒழுங்கமைக்கப்பட்ட நடைமுறைப் பணிக்கு—இந்தப் பணிதான் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குப் பாதையைச் செப்பனிடு கிறது—குந்தகம் உண்டாகிறது.

''இடதுசாரிகள்'' தேச அளவிலும் சர்வதேச அளவிலும் தம்மை நடைமுறைச் சோதனைக்கு உட்படுத்திப் பார்க்கட் டும். கண்டிப்பான முறையில் மத்தியத்துவப்படுத்தப்பட்டு, உருக்கு உறுதி கொண்ட கட்டுப்பாடுடைய கட்சி இல்லாமல், அரசியல், கலாசாரப் பணியின் ஒவ்வொரு துறையிலும் கிளை யிலும் அதன் ஒவ்வொரு வகையிலும் தலைமையாளர்களா கிடும் ஆற்றலின்றி, அவர்கள் பாட்டாளி வர்க்கச் சர்வாதி காரத்துக்குத் தயார் செய்தும், பிறகு அதனைச் செயல்படுத் தியும் பார்க்கட்டும். நடைமுறை அனுபவம் விரைவில் அவர் களுக்குப் புத்தி புகட்டும்.

ஆனால் ஒன்று: தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பங்கு கொள்வோரில் உளப் பூர்வமாகவும் நேர்மையாகவும் சோவியத் ஆட்சியதிகாரத்துக்காகவும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்காகவும் பாடுபடுவோர் யாவரும் ஒரே கட்சியாக ஒன்றிணைவதற்கு—இந்த அவசியமான ஒன்றிணைப்பு அண்மையான வருங்காலத்தில் தவிர்க்க முடியாதபடி ஏற்படும்—''இடதுசாரிகளுடனான'' பிளவு தடங்கலாகி விடாதபடி, அல்லது கூடுமான அளவுக்கு இத்தடங்கள் குறைவாகி விடும்படி, செய்ய நாம் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். ருஷ்யாவில் வெகுஜனங்கள் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்காக நேரடிச் செயலில் இறங்குவதற்குப் பல காலம் முன்னதாகவே, மென்ஷிவிக்குகளை (அதாவது, சந்தர்ப்பவாதிகளையும் ''மையவாதிகளையும்'') மட்டுமின்றி, ''இடதுசாரிகளையும்'' எதிர்த்து முறையாய்ப் போராடவும் இப்போராட்டத்தை அதன் முடிவு வரை நடத்திச் செல்லவும் பதினைந்து ஆண்டு அவகாசம் கிடைத்ததானது போல்ஷிவிக்குகளின் அதிருஷ்டமாகும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இதே பணியை இன்று அவசரகோலமாய்ச் செய்தாக வேண்டியுள்ளது. தனிநபர்கள் சிலர், முக்கியமாய்த் தலைவர்களாவதற்கு முயன்று தோல்வியுற்றோரைச் சேர்ந்தவர்கள், (அவர்கள் பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டு உணர்ச்சி போதிய அளவு இல்லாமலும் தமக்குத் தாமே நேர்மையில்லாமலும் இருப்போராயின்) தமது தவறுகளிலிருந்து வெளிவர நீண்ட காலம் மறுத்து வரலாம். ஆனால் காலம் பக்குவநிலை அடைந்ததும் தொழிலாளி வெகுஜனங்கள் எளிதிலும் விரைவிலும் தாமே ஒன்றுபட்டு, நேர்மையுள்ள எல்லாக் கம்யூனிஸ்டுகளையும் சோவியத் அமைப்பையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் நிறுவ வல்ல ஒரே கட்சியாக ஒன்றுபடச் செய்து விடுவார்கள்.*

* நாடாளுமன்ற-எதிர்ப்பாளர்களான ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள் பொதுவாகக் கம்யூனிஸ்டுகளுடன் வருங்காலத்தில் ஒன்றிணையும் பிரச்சினை குறித்து மேலே கூறியதுடன்கூட பின்வருவனவற்றையும் குறிப்பிட திவிரும்புகிறேன். ஜெர்மனியின் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகளுடைய

2
ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகளும் சுயேச்சையாளர்களும்

கம்யூனிஸ்டுகளுக்கும் சுயேச்சையாளர்களைச் சேர்ந்த இடதுசாரியினருக்கும் இடையே சமரசம் ஏற்படுவது கம்யூனிசத்துக்கு அவசியமும் பயனுள்ளதும் ஆகும், ஆனால் இதைச் செய்வது எளிதல்ல. சுயேச்சையாளர்களுடைய செய்தியேடுகளையும் பொதுவாகக் கம்யூனிஸ்டுகளுடைய செய்தியேடுகளையும் நான் படித்துத் தெரிந்து கொண்ட வரை, வெகுஜனங்களிடையே கிளர்ச்சி நடத்துவதில் முன்னவர்கள் பின்னவர்களைக் காட்டிலும் திறனுடையோராய் இருக்கும் அனுகூலத்தைப் பெற்றிருக்கக் காண்கிறேன். போல்ஷிவிக் கட்சியின் வரலாற்றிலும் இதை விடச் சிறு அளவிலேதான் என்றாலும், தனிப்பட்ட வட்டார நிறுவனங்களில் மட்டுமேயன்றி தேச அளவில் இல்லை என்றாலும், இதையொத்த ஒரு நிலைமையை அடிக்கடி நான் கண்டு வந்திருக்கிறேன். உதாரணமாய், 1907-08ல் ''இடதுசாரி'' போல்ஷிவிக்குகள் சில சந்தர்ப்பங்களிலும் சில இடங்களிலும் வெகுஜனங்களிடையே எங்களைக் காட்டிலும் வெற்றிகரமாய்க் கிளர்ச்சி நடத்தினர். புரட்சிகரமான ஒரு தருணத்தில் அல்லது புரட்சிகர நினைவுகள் இன்னமும் பசுமையாக இருக்கும் ஒரு நேரத்தில், யாவற்றையும் மறுக்கும் போக்குடைய போர்த்தந்திரத்துடன் வெகுஜனங்களை அணுகுவது சுலபமாகும் என்பது ஓரளவுக்கு இதற்குக் காரணமாய் இருக்கலாம். ஆனால் இத்தகைய போர்த்தந்திரமே சரியானதென நிரூபிக்க இது தக்க வாதமாகிவிட முடியாது. எப்படியும், புரட்சிகர வர்க்கத்தின், பாட்டாளி வர்க்கத்தின் மெய்யான முன்னணிப் படையாக, முன்னேறிய படைப்பிரிவாக விரும்பும் ஒரு கம்யூனிஸ்டுக் கட்சி, மற்றும் வெகுஜனங்களுக்கு— பாட்டாளி வர்க்கத்தினருக்கு மட்டுமின்றி, சுரண்டப்படும் உழைப்பாளி மக்களைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினரல்லாத பிற வெகுஜனங்களுக்கும்—தலைமை தாங்கி அவர்களை வழிநடத்திச் செல்லக் கற்றுக் கொள்ள விரும்பும் ஒரு கம்யூனிஸ்டுக் கட்சி, நகரப்புறத்து ஆலை வெகுஜனங்களுக்கு மட்டுமின்றி கிராமப்புற வெகுஜனங்களுக்கும் மிகவும் எளியதாகவும் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் தெளிவாகவும் கண்கூடாகவும் இருக்கும் முறையில் பிரசாரம் நடத்துவது எப்படி, நிறுவன ஒழுங்கமைப்பு செய்வது எப்படி, கிளர்ச்சி நடத்துவது எப்படி என்பதை தெரிந்திருக்க வேண்டுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

செய்வது எளிதல்ல என்ற கருத்தை இந்தப் பிரசுரத்தில் நான் வெளியிட்டிருக்கிறேன. இதன் பின் எனக்குக் கிடைத்திருக்கும் செய்தியேடுகள் இந்தக் கருத்தின் இவ்விரு அம்சங்களேயும் ஊர்ஜிதம் செய்கின்றன. ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி ஏடான செங்கொடி இதழ் 32 (*Die Rote Fahne*[75], Zentralorgan der Kommunistischen Partei Deutschlands, Spartakusbund, 1920, மார்ச் 26ஆம் தேதி இதழ்) காப்-லுட்விட்ஸ் இராணுவத்தினர் நடத்த முயன்ற ஆட்சிக் கவிழ்ப்பையும் ''சோஷலிஸ்டு அரசாங்கத்தையும்'' பற்றிய இந்த மத்தியக் கமிட்டியின்''அறிக்கை'' ஒன்றை வெளியிட்டிருக்கிறது. இந்த அறிக்கை அதன் அடிப்படை முதற்கோளிலும் அதன் நடைமுறை முடிவுகளிலும் முற்றிலும் சரியானதே. அடிப்படை முதற்கோள் என்னவெனில், ''நகரப்புறத் தொழிலாளர்களில் பெரும்பாலோர்'' சுயேச்சையாளர்களே ஆதரிப்பதால், தற்போது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கு ''எதார்த்த அடித்தளம்'' இருக்கவில்லே. முடிவு இதுவே: ''சோஷலிஸ்டு அரசாங்கம் பூர்ஷுவா-முதலாளித்துவக் கட்சிகளேச் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்குமாஞல்'' அதற்கு ''விசுவாசமான எதிர்க்கட்சியாக'' இருப்பதாக (அதாவது ''வன்முறை மூலம் கவிழ்ப்பதற்கான'' தயாரிப்புகளில் இறங்குவதில்லே என்பதாக) வாக்களிப்பது.

பிரதானமாய் இந்தப் போர்த்தந்திரம் சரியானதே என்பதில் ஐயமில்லே. ஆயினும், வரையறுப்புகளில் சிறு பிழைகளே எடுத்துரைக்க வேண்டியதில்லே என்று விட்டாலுங்கூட, சமூக-துரோகிகளாலான ஓர் அரசாங்கத்தை (கம்யூனிஸ்டுக் கட்சியின் அதிகாரபூர்வமான ஓர் அறிக்கையில்) ''சோஷலிஸ்டு'' என அழைக்கலாகாது என்பதையும், ஷெய்டெமன்களின் கட்சி,காவுத்ஸ்கிகள்,கிரிஸ்பியன்கள் இவர்களது கட்சி ஆகிய இரு கட்சிகளும் குட்டிமுதலாளித்துவ-ஜனநாயகக் கட்சிகளாய் இருக்கையில் ''பூர்ஷுவா-முதலாளித்துவக் கட்சிகளேச் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்குவது'' பற்றிப் பேசக் கூடாது என்பதையும், அறிக்கையில் §4ல் அடங்கியுள்ளவை ஒருபோதும் எழுதப்படக் கூடாதவை என்பதை

யும் குறிப்பிடாமல் மௌனமாயிருப்பதற்கில்லை. அறிக்கையின் இப்பகுதி வருமாறு:

''....அரசியல் சுதந்திரம் முழுமையாக அனுபவித்துக் கொள்ளக் கூடியதாகவும் முதலாளித்துவ ஜனநாயகம் மூலதனத்தின் சர்வாதிகாரமாய்ச் செயல்பட முடியாததாகவும் ஆகிவிட்ட ஒரு நிலைமையானது, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் வளர்ச்சியினுடைய கண்ணோட்டத்தில் பார்க்கையில், பாட்டாளி வர்க்க வெகுஜனங்களை மேலும் அதிகமாய்க் கம்யூனிசத்தின் பக்கத்துக்கு ஈர்த்திடுவதற்குத் தலையாய முக்கியத்துவம் வாய்ந்ததாகும்....''

இது போன்ற ஒரு நிலைமை சாத்தியமற்றதாகும். ஜெர்மன் ஹெண்டர்சன்களும் (ஷெய்டெமன்கள்), ஸ்னோடென்களும் (கிரிஸ்பியன்கள்) ஆன குட்டிமுதலாளித்துவத் தலைவர்கள் முதலாளித்துவ ஜனநாயகத்தின் வரம்புகளுக்கு அப்பால் செல்வதுமில்லை, அவர்களால் செல்லவும் முடியாது. முதலாளித்துவ ஜனநாயகம் மூலதனத்தின் சர்வாதிகாரமாகவேயன்றி வேறு எதுவாகவும் இருக்க முடியாது. கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி முற்றிலும் சரியானபடி எதற்காகப் பாடுபட்டு வந்ததோ அந்த நடைமுறை விளைவுகளைச் சாதிப்பதற்கு, கோட்பாட்டில் தவறானவையும் அரசியல் வழியில் தீங்கானவையுமான இவை போன்றவற்றை எழுதத் தேவை இல்லை. பின்வருமாறு கூறினால் (நாடாளுமன்ற ஆசாரங்களை அனுசரிக்க விரும்பினால்) போதுமானதாய் இருந்திருக்கும்: ''கம்யூனிஸ்டுகளாகிய நாம், பெரும்பாலான நகரப்புறத் தொழிலாளர்கள் சுயேச்சையாளர்களைப் பின்தொடரும் வரை, இத்தொழிலாளர்கள் தம்மிடையே எஞ்சியிருக்கும் அற்பத்தனமான குட்டிமுதலாளித்துவ, போலி ஜனநாயக(அதாவது, 'பூர்ஷுவா-முதலாளித்துவ') பிரமைகளைத் தமது 'சொந்த' அரசாங்கத்தைக் கொண்டிருக்கும் அனுபவத்தைப் பெறுவதன் வாயிலாக விட்டொழிப்பதற்குத் தடையாக எதுவும் செய்யக் கூடாது''. சமரசத்துக்கு இது போதுமான அடிப்படையாகும். சமரசம் மெய்யாகவே தேவைதான்; நகரப்புறத் தொழிலாளர்களில் பெரும்பாலோரது நம்பிக்கைக்கு உரித்தாயுள்ள ஓர் அரசாங்கத்தைப்

பலவந்தமாய்க் கவிழ்ப்பதற்கான எந்த முயற்சியிலும் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு ஈடுபடாதிருப்பதுதான் இந்தச் சமரசமாய் அமைய வேண்டும். ஆனல் அன்ருட வெகுஜனக் கிளர்ச்சியில் நாடாளுமன்றத்துக்குரிய முறையான ஆசாரங்களால் கட்டுப்பட்டிருக்க வேண்டியதில்லை என்பதால், மேற்கூறியதோடு நில்லாது பின்வருவதையும் கூறலாம்: ''ஷெய்டெமன்களைப் போன்ற கயவர்களும், காவுத்ஸ்கிகளையும் கிரிஸ்பியன்களையும் போன்ற அற்பர்களும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டதுடன், தொழிலாளர்களையும் எப்படி ஏமாற்றி வருகிருர்கள் என்பதையும் தமது செயல்கள் மூலமே அம்பலம் செய்து கொள்ளட்டும்; அவர்களுடைய 'சுத்தமான' அரசாங்கமே ஏனைய எல்லோரையும் விட 'சுத்தமான' முறையில் சோஷலிசம், சமூக-ஜனநாயகம் மற்றும் ஏனைய வகையான சமூக-துரோகம் ஆகிய அவுகியஸ் லாயங்களைச்[76] 'சுத்தம்' செய்துவிடும்.''

''ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியினது'' இன்றைய தலைவர்களின் உண்மை சொரூபம் (இத்தலைவர்கள் ஏற்கெனவே அறவே செல்வாக்கிழந்துவிட்டதாகத் தவருகக் கூறப்பட்டு வந்தது; உண்மையில் இவர்கள், தம்மைக் கம்யூனிஸ்டுகள் என்றழைத்துக் கொண்டு, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ''ஆதரிப்பதாக'' வாக்களித்த ஹங்கேரிய சமூக-ஜனநாயகவாதிகளைக் காட்டிலும் பாட்டாளி வர்க்கத்துக்கு இன்னுங்கூட அபாயகரமானவர்கள்) கர்னிலவ் கலகத்தின் ஜெர்மன் வடிவாக அமைந்த சம்பவத்தின் போது, அதாவது காப்-லுட்விட்ஸ் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியின் போது, திரும்பவும் தெளிவாக வெளிப்படலாயிற்று.* சுருக்கமான இரு கட்டுரைகள் இதற்குச் சிறிதேயாயினும் எடுப்

* இது தனிச்சிறப்பு மிக்க தெளிவுடனும் சுருக்கமாகவும் துல்லியமாகவும் மார்க்சிய வழியிலும் ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சிறந்த ஏடான செங்கொடியில் 1920 மார்ச் 28, 30 இதழ்களில் (*Die Rote Fahne*[77], Wien, 1920, №№ 266 u. 267; L.L.: "Ein neuer Abschnitt der deutschen Revolution" [வியென்ன, 1920, இதழ்கள் 266, 267; எல். எல்.: ''ஜெர்மன் புரட்சியின் புதிய கட்டம்''—ப-ர்.]) பரிசீலிக்கப்பட்டிருப்பதை இங்கு குறிப்பிடலாம்.

பானதோர் உதாரணமாகும்: ஒரு கட்டுரை ''தீர்மானகர மான சில மணிநேரம்'' ("Entscheidende Studen") என்னும் தலைப்பில் சுயேச்சையாளர்களின் ஏடான *Die Freiheit*[78] 1920 மார்ச் 30 இதழில் கார்ல் காவுத்ஸ்கி எழுதியது; மற் றொன்று ''அரசியல் சூழ்நிலை குறித்து'' என்னும் தலைப்பில் (அதே செய்தியேட்டில் 1920 ஏப்ரல் 14 இதழில்) அர்த்தூர் கிரிஸ்பின் எழுதியது. இந்தக் கனவான்கள் புரட்சியாளர் களைப் போலச் சிந்திக்கவும் பகுத்தாராயவும் சிறிதும் ஆற்றலில்லாதவர்கள். இவர்கள் கெஞ்சிப் பிழைக்கும் அற்பர்களான ஜனநாயகவாதிகள். சோவியத் ஆட்சியதி காரத்தையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் ஆதரிப்பதாகக் கூறிக் கொள்ளும் போது இவர்கள் பாட்டாளி வர்க்கத்துக்கு மேலும் ஆயிரம் மடங்கு ஆபத்தானவர்களாகி விடுகிறார்கள். ஏனெனில் உண்மையில் இவர்கள், கடினமான, அபாயகரமான நிலைமை தோன்றியதும் நிச்சயமாய்த் துரோ கம் செய்கிறவர்கள்... பாட்டாளி வர்க்கத்துக்குத் துணை புரி வதாக ''மனப்பூர்வமாய்'' நம்பிய படியே துரோகம் இழைப்ப வர்கள்! ஹங்கேரிய சமூக-ஜனநாயகவாதிகள் கம்யூனிஸ்டு கள் என்பதாகத் தமது பெயரை மாற்றிக் கொண்டு, பாட் டாளி வர்க்கத்துக்குத் ''துணை'' புரிய விரும்பவில்லையா? தமது கோழைத்தனம் காரணமாகவும், உறுதியின்மை கார ணமாகவும், ஹங்கேரியில் சோவியத் ஆட்சியதிகாரத்தின் நிலை நம்பிக்கைக்குச் சிறிதும் இடந்தருவதாயில்லை என்று கருதி, அன்டான்ட் முதலாளிகள், அன்டான்ட் கொலைகாரர்கள் இவர்களுடைய கையாட்களிடம் பல்லைக் காட்டிக் கொண்டு ஓடவில்லையா?

3

இத்தாலியில் டுராட்டி கோஷ்டியார்

இத்தாலியச் செய்தியேடான சோவியத்தின் மேலே குறிப் பிட்ட இதழ்கள், இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி தனது அணிகளில் இத்தகைய உறுப்பினர்களையும் இத்தகைய நாடாளுமன்றக் குழு ஒன்றையுங்கூட இருக்கும்படி விட்டு

வைத்தது தவறாகும் என்பது குறித்து நான் இந்தப் பிரசுரத்தில் சொல்லியிருப்பதைப் பூரணமாக ஊர்ஜிதம் செய்கின்றன. இத்துடன், பிரிட்டிஷ் மிதவாத-முதலாளித்துவ ஏடான *The Manchester Guardian*இன் ரோம் நிருபரைப் போன்ற ஒரு வெளியிடத்துப் பார்வையாளராலும் இது ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. டுராட்டியுடனான இவரது பேட்டி இந்த ஏட்டின் 1920 மார்ச் 12 இதழில் வெளிவந்திருக்கிறது. இந் நிருபர் எழுதுவதாவது:

''....திரு டுராட்டியின் அபிப்பிராயத்தில் அதிகம் அச்சப்பட வேண்டிய அளவுக்கு இத்தாலியில் புரட்சி அபாயம் இருக்கவில்லை. வெகுஜனங்களை விழிப்புடன் பரபரப்பான நிலையிலே வைத்திருக்கும் பொருட்டுதான் மாக்சிமலிஸ்டுகள் சோவியத் தத்துவங்கள் எனும் நெருப்பைத் தூண்டி விட்டு வருகிறார்கள். ஆனால் இத்தத்துவங்கள் வெறுங்கற்பனைகளும் பக்குவமில்லாத வேலைத்திட்டங்களுமே ஆகும்; நடைமுறையில் இவை பயன்படுத்த முடியாதவை. உழைப்பாளி வர்க்கங்களை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் வைத்திருப்பதற்கே இவை பயன்படுகின்றன. பாட்டாளி வர்க்கத்தாரைக் கவர்ந்திழுப்பதற்கான மயக்குப் பொருளாக இவற்றை உபயோகித்து வருவோருங்கூட, அற்பசொற்பமான சில பொருளாதார ஆதாயங்களைப் பெறுவதற்காகத் தினசரி போராடும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. உழைப்பாளி வர்க்கங்கள் தமது பிரமைகளையும் தம்மை ஊக்குவிக்கும் இந்தக் கட்டுக்கதைகளில் நம்பிக்கையையும் இழக்கும் தருணம் விரைவில் வந்துவிடாதபடி தடுப்பதற்காக அவர்கள் இவ்வாறு போராட வேண்டிவருகிறது. அண்மையில் தபால், ரயில்வே துறைகளில் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள் அடங்கலாய் எல்லா அளவுகளிலும் எல்லா விதமான சாக்குகளின் பேரிலும் சங்கிலித் தொடர் போல அமைந்த வேலைநிறுத்தங்களுக்கு எல்லாம் இதுவேதான் காரணம். ஏற்கெனவே மிகக் கடுமையாகிவிட்ட நாட்டு நிலவரங்களை இந்த வேலைநிறுத்தங்கள் மேலும் மோசமடையச் செய்கின்றன. நாடு அதன் அட்ரியாட்டிக் பிரச்சினை காரணமாய் எழும் இன்னல்களால் துன்புறுத்தப்படுகிறது; அதன் வெளிநாட்டுக் கடனாலும் விரிந்து பெருகிவிட்ட காகிதப் பணப் புழக்கத்தாலும் அலைக்கழிக்கப்படுகிறது. கட்டுப்பாட்டுடன் வேலை செய்வதால் மட்டுமே ஒழுங்கையும் சுபிட்சத்தையும் திரும்பவும் உண்டாக்க முடியும். ஆனால் நாடு இந்தக் கட்டுப்பாட்டு உணர்ச்சியின் அவசியத்தை இன்னும் உணர்ந்தாகவில்லை....''

டுராட்டியாலும் இத்தாலியிலுள்ள அவரது முதலாளித் துவ ஆதரவாளர்களாலும் உடந்தையாளர்களாலும் ஆதர்ச புருஷர்களாலும் மூடிமறைக்கப்பட்டும் பூசி மெழுகப்பட்டும் வரும்படியான ஓர் உண்மையை இந்த பிரிட்டிஷ் நிருபர் அவ சரகோலமாய்ப் போட்டு உடைத்து விடுகிருர் என்பது தெட் டத்தெளிவாக விளங்குகிறது. டுராட்டி, திரெவெஸ், மொடி லியானி, துகோனி முதலானேரது கருத்துக்களும் அரசியல் நடவடிக்கைகளும் மெய்யாகவே இந்த பிரிட்டிஷ் நிருபர் விவ ரிக்கும் வகைப்பட்டவையே என்பதுதான் இந்த உண்மை. இது அப்பட்டமான சமூக-துரோகமே அன்றி வேறில்லை. முதலாளிகளுடைய பணப் பெட்டியை நிரப்புவதற்காக உழைத்திடும் கொத்தடிமைகளான தொழிலாளர்களிடையே இவர்கள் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஆதரித்து நிற் பதைப் பாருங்கள்! ருஷ்யர்களான நாங்கள் கேட்டுக் கேட்டுக் காது புளித்துப் போன மென்ஷிவிக் சொற்பொழிவு களாயிற்றே இவையாவும்! வெகுஜனங்கள் சோவியத் ஆட்சி யதிகாரத்தை ஆதரிக்கிருர்கள் என்பது அரியதோர் ஒப்புதல் வாக்குமூலமாயிற்றே! தன்முனைப்புடன் பரவிவரும் இந்த வேலை நிறுத்தங்கள் ஆற்றும் புரட்சிகரப் பணியைப் புரிந்து கொள்ளத் தவறுவது அசட்டுத்தனத்தையும் முதலாளித்துவ ஈனத்தனத்தையும் தான் குறிக்கிறது! இந்த பிரிட்டிஷ் முத லாளித்துவ-மிதவாதச் செய்தியேட்டின் நிருபர் டுராட்டி கோஷ்டியாருக்கு உண்மையில் தீங்கே இழைத்துள்ளார். இத் தாலிய சோஷலிஸ்டுக் கட்சி உண்மையில் மூன்ருவது அகிலத் துக்கு ஆதரவாக இருக்க விரும்பினல் அது டுராட்டி கோஷ் டியாரைத் தனது அணிகளிலிருந்து கேவலமான முறையில் விரட்டி, பெயரளவில் மட்டுமின்றி செயலிலும் கம்யூனிஸ்டுக் கட்சியாகிவிட வேண்டுமென வற்புறுத்தும் தோழர் பொர்டீ காவும் சோவியத்தில் பணியாற்றும் அவரது நண்பர்களும் கோருவது முற்றிலும் சரியே என்பதை அவர் சிறந்த முறை யில் ஊர்ஜிதம் செய்கிருர்.

4

சரியான முதற்கோள்களிலிருந்து பெறப்படும் தவருன முடிவுகள்

ஆனல் தோழர் பொர்டீகாவும் அவருடைய ''இடது சாரி'' நண்பர்களும் டிராட்டி கோஷ்டியைப் பற்றிய அவர்களுடைய சரியான குற்றவிமர்சனத்திலிருந்து, நாடாளுமன்றத்தில் பங்கு கொள்வதே கோட்பாட்டு வழியில் தீங்கானதென்ற தவருன முடிவை வந்தடைகிருர்கள். இந்தக் கருத்துக்கு ஆதரவாய் ஆழமுள்ள எந்தவொரு வாதத்தையும் இம்மியளவுங்கூட இத்தாலிய ''இடதுசாரிகளால்'' முன் வைக்க முடியவில்லை. முதலாளித்துவ நாடாளுமன்றங்களை மெய்யாகவே புரட்சிகரமாய்க் கம்யூனிஸ்டு வழியில் பயன் படுத்திக் கொள்வதற்குரிய சர்வதேச உதாரணங்கள் அவர்களுக்குத் தெரியவேயில்லை (அல்லது அவற்றை மறந்துவிட முயலுகின்றனர்). முதலாளித்துவ நாடாளுமன்றங்களை இவ்வழியில் பயன்படுத்தியதானது பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குத் தயார் செய்வதற்கு உதவியாக இருந்தது மறுக்க முடியாததாகும். இவற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்கான ''புதிய'' வழி எதனையும் அவர்களால் சிந்தித்துப் பார்க்கக் கூட முடியவில்லை; ஆகவே போல்ஷிவிக் வழியல்லாத ''பழைய'' வழியைப் பற்றி முடிவின்றித் திரும்பத் திரும்பக் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிருர்கள்.

அவர்களுடைய அடிப்படையான தவறு இதில்தான் அடங்கியுள்ளது. நாடாளுமன்றத் துறையில் மட்டுமல்லாது, எல்லாச் செயல் துறைகளிலுமே, கம்யூனிசமானது இரண்டாவது அகிலத்தின் பாரம்பரியங்களிலிருந்து (நல்லதை இருத்திக் கொண்டு வளர்த்துச் செல்லும் போதே) முற்றிலும் துண்டித்துக் கொள்வதாக அமையும்படி கோட்பாட்டு வழியில் புதுமையானதொன்றைப் புகுத்தியாக வேண்டும் (நீண்ட நெடிய, விடாப்பிடியான முயற்சி இல்லாமல் இவ்வாறு அதனல் புகுத்த முடியாது).

பத்திரிகைத் துறைப் பணியை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். செய்தியேடுகளும் வெளியீடுகளும் துண்டுப்

பிரசுரங்களும் பிரசாரம், கிளர்ச்சி, நிறுவன ஒழுங்கமைப்பு ஆகிய அத்தியாவசியப் பணிகளைச் செய்கின்றன. ஓரளவே னும் நாகரிகமடைந்த எந்த நாட்டிலும் வெகுஜன இயக்கம் எதுவும் பத்திரிகைத் துறை இல்லாமல் நடந்தேற முடியாது. ''தலைவர்களுக்கு'' எதிரான எந்தக் கூப்பாட்டினாலும், தலை வர்களது செல்வாக்கிற்கு உட்பட்டுகளங்கமுற்று விடாதபடி வெகுஜனங்களைக் காப்போமென ஏற்கப்படும் எந்தப் புனிதச் சபதத்தாலும், இப்பணிக்காக முதலாளித்துவ அறிவுத் துறைச் சுற்றுச்சார்பிலிருந்து வந்தவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் அவசியத்திலிருந்து நம்மை விடுவிக்கவோ, முத லாளித்துவத்தில் இப்பணி நடந்தேறும் முதலாளித்துவ-ஜன நாயக, ''தனியார் சொத்துக்குரிய'' சூழ்நிலையையும் சுற்றுச் சார்பையும் நம்மிடமிருந்து ஒழித்திடவோ போவதில்லை. முதலாளித்துவ வர்க்கம் கவிழ்க்கப்பட்ட பிற்பாடு, பாட் டாளி வர்க்கம் அரசியல் அதிகாரம் வென்ற பிற்பாடு, இரண் டரை ஆண்டுகள் ஆகியுங்கூட இன்னமும் எங்களைச் சுற்றிலும் இந்தச் சூழ்நிலை, வெகுஜன (விவசாயி, கைத்தொழிலாளர்) முதலாளித்துவ-ஜனநாயகத் தனியார் சொத்து உறவுகளின் சுற்றுச்சார்பு இருந்தே வருகிறது.

நாடாளுமன்றப் பணி ஒரு வகை செயற்பாடாகும்; பத்தி ரிகைத் துறை மற்றொரு வகையாகும். இவ்விரு துறைகளி லும் ஈடுபட்டுள்ளோர் மெய்யான கம்யூனிஸ்டுகளாய் இருப் பின், மெய்யாகவே பாட்டாளி வர்க்க வெகுஜனக் கட்சியின் உறுப்பினர்களாய் இருப்பின், இவை இரண்டின் உள்ளடக்க மும் கம்யூனிஸ்டு இயல்புடையதாய் இருக்க முடியும், இருக்க வும் வேண்டும். பாட்டாளி வர்க்கம் தனது சொந்த நோக் கங்களுக்காக முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டும், முதலாளித்துவ-அறிவுத்துறைவாதத் தப்பெண்ணங்களையும் அதனுடைய செல்வாக்கின் விளைவுகளையும் அகற்றிடும் பொருட்டும், குட்டிமுதலாளித்துவச் சுற்றுச்சார்பின் எதிர்ப் பினைப் பலவீனப்படுத்தும் பொருட்டும் (இறுதியில், அறவே அந்தச் சுற்றுச்சார்பினை உருமாற்றிவிடும் பொருட்டும்), பாட்டாளி வர்க்கம் சமாளித்தாக வேண்டிய இன்னல்களை

யும் அது தீர்வு காண வேண்டிய தனிவகையான பிரச்சினை களையும் தவிர்ப்பது இவ்விரு துறைகளில் எதனிலும்—முத லாளித்துவத்திலும், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத் துக்கு மாறிச் செல்லும் காலத்திலும் வேறு எந்தச் செயல் துறையிலும்—சாத்தியமல்ல.

கடைகோடியான ''இடதுசாரி'' அராஜகவாதிகளும் சிண்டிக்கலிஸ்டுகளும் பிறரும் நாடாளுமன்ற முறையை எதிர்த்து அனல் பறக்கப் பேசியும், முதலாளித்துவ வழியில் சீரழிந்துவிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சோஷ லிஸ்டுகளை எள்ளி நகையாடியும், இவர்களுடைய பதவி மோகத்தைச் சாடியும், இன்ன பலவாருக எதிர்த்த போதி லும், பத்திரிகைத் துறை வாயிலாகவும், சிண்டிக்கேட்டுகளின் (தொழிற்சங்கங்களின்) வேலைகள் வாயிலாகவும் தாமும் இதே வகையான முதலாளித்துவப் பிழைப்பு நடத்தியதற்கு 1914-18 போருக்கு முன்பு எல்லா நாடுகளிலும் நாம் எண் ணற்ற உதாரணங்களைப் பார்க்கவில்லையா? பிரான்சை மட்டும் எடுத்துக் கொள்வதாயின், மூவோ, மெர்ஹெயிம் இவர்களது உதாரணம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு அல்லவா?

நாடாளுமன்றத்தில் பங்கு கொள்வதை ''நிராகரிப்பவர் கள்'', தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள்ளே முதலாளித் துவ-ஜனநாயகத்தின் செல்வாக்குகள் செயல்படுவதை எதிர்த் திடும் கடினமான பிரச்சினைக்கு இது போன்ற ''சிக்கலற்ற'', ''சுலபமான'', புரட்சிகரமானதென்று கூறிக் கொள்ளப்படும் முறையில் ''தீர்வு கண்டு விடலாம்'' என நினைப்பதில் அவர் களுடைய சிறுபிள்ளைத்தனம்தான் காணக்கிடக்கிறது. உண் மையில் அவர்கள் தமது சொந்த நிழல்களிடமிருந்து ஓடிவிட முயலுகிருர்கள்; இன்னல்களைக் காண விரும்பாது கண்களை மூடிக் கொள்கிருர்கள்; வெறும் சொற்களைக் கொண்டு இவற்றை ஓட்டிவிட எத்தனிக்கிருர்கள். மான வெட்கமற்ற படுமோசமான பதவி மோகம், நாடாளுமன்ற இடங்களை முத லாளித்துவ வழியில் பயன்படுத்திக் கொள்ளுதல், நாடாளு மன்றச் செயற்பாட்டை அப்பட்டமான சீர்திருத்தவாத இழி செயலாய் மாற்றுதல், மட்டரகமான குட்டிமுதலாளித்துவப் பழமைவாதம் ஆகிய இவை யாவும் எங்கும்—தொழிலாளி

வர்க்க இயக்கத்துக்கு வெளியே மட்டுமின்றி அதனுள்ளும் —முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்படும் சகஜமான, பெருவழக்கான இயல்புகள் என்பது மறுக்க முடியாததாகும். இதே முதலாளித்துவமும் அது தோற்றுவிக்கும் முதலாளித் துவச் சுற்றுச்சார்பும் (முதலாளித்துவ வர்க்கம் கவிழ்க்கப் பட்ட பிறகுங்கூட இது மிகமிக மெதுவாகவே மறைகிறது; ஏனெனில் விவசாயிகள் இடையருது முதலாளித்துவ வர்க் கத்தை உயிர் பெறச் செய்கிருர்கள்) செயற்பாடு, வாழ்க்கை இவற்றின் எல்லாத் துறைகளிலும் சாராம்சத்தில் இதே போன்ற வடிவத்தில் மட்டும் சிறிது வேறுபட்ட முதலாளித் துவப் பதவி மோகத்தையும் தேசியவெறிப் போக்கையும் குட்டிமுதலாளித்துவ கொச்சைத்தனத்தையும் இன்ன பிற வற்றையும் உண்டாக்குகின்றன.

எனதருமை பகிஷ்காரவாதிகளே, நாடாளுமன்ற-எதிர்ப் பாளர்களே, நீங்கள் உங்களை ''உக்கிரமான புரட்சியாளர் களாக'' நினைத்துக் கொள்கிறீர்கள்; ஆனல் உண்மையில் தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் தலைதூக்கும் முதலாளித் துவச் செல்வாக்குகளுக்கு எதிரான போராட்டத்தில் ஒப் பளவில் அற்பமான இன்னல்களைக் கண்டு நீங்கள் நடுங்கி விடுகிறீர்கள். ஆனல் உங்களுடைய வெற்றி—அதாவது முத லாளித்துவ வர்க்கத்தைக் கவிழ்த்துப் பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தை வென்று கொள்வதானது— மேலும் பெரிய அளவில், எல்லையின்றிப் பெரிய அளவில் இதே இன்னல்களையே தோற்றுவிக்கும். இன்று உங்களை எதிர் நோக்கும் சிறிய இன்னலைக் கண்டு, சிறு பிள்ளைகளைப் போல நடுக்கமுறுகிறீர்கள்; ஆனல் நாளைக்கும் அதற்கு மறு நாளும் இதே இன்னல்களை எல்லையின்றிக் கூடுதலான அளவில் சமாளிப்பதற்குக் கற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும், முழுமையாகவும் தீர்க்கமாகவும் கற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை.

சோவியத் ஆட்சியதிகாரத்தில் உங்களுடையதும் எங் களுடையதுமான பாட்டாளி வர்க்கக் கட்சிக்குள், மேலும் பெரிய எண்ணிக்கையில் முதலாளித்துவ அறிவுத்துறையினர் நுழைந்து கொண்டு விடுவார்கள். அவர்கள் சோவியத்துக்

களுக்குள்ளும் நீதிமன்றங்களினுள்ளும் நிர்வாகத்தினுள்ளும் துளைத்துக் கொண்டு வந்து விடுவார்கள்; ஏனெனில், முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்பட்ட மானுடத்தின் துணை கொண்டல்லாது வேறு எவ்வழியிலும் கம்யூனிசத்தைக் கட்டியெழுப்பிவிட முடியாது; முதலாளித்துவ அறிவுத்துறையினரை நம் பக்கத்துக்கு வென்று உருமாறும்படியும் நம்முடன் ஒன்றுகலக்கும்படியும் புனர் போதம் அளிக்க வேண்டுமேயல்லாது, அவர்களை விலக்கித் தள்ளிவிடவோ ஒழித்துக் கட்டிவிடவோ முடியாது. எப்படிப் பாட்டாளி வர்க்கத்தினருக்குங்கூட, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் அடிப்படையில் நீண்ட நெடிய போராட்டம் நடத்தி, புனர் போதம் அளிக்க வேண்டுமோ, அவ்வாறே அறிவுத்துறையினருக்கும் அளிக்க வேண்டும். பாட்டாளி வர்க்கத்தினர் அவர்களுடைய சொந்த குட்டிமுதலாளித்துவத் தப்பெண்ணங்களை நினைத்த மாத்திரத்தில் ஒரு நொடியில், மந்திர ஜாலத்தால், தெய்வ கடாட்சத்தால் விட்டொழித்து விடுவதில்லை; ஒரு கோஷம் அல்லது தீர்மானம் அல்லது சட்டத்தை வெளியிட்டு இதனைச் செய்து விட முடியாது; வெகுஜனக் குட்டிமுதலாளித்துவச் செல்வாக்குகளை எதிர்த்துக் கடினமான நீண்டதொரு வெகுஜனப் போராட்டம் நடைபெறும் போதுதான் அவர்கள் இவற்றை விட்டொழிக்கிறார்கள். சோவியத் ஆட்சியில் இதே பிரச்சினைகள்—நாடாளுமன்ற-எதிர்ப்பாளர்கள் இன்று இவ்வளவு டாம்பீகமாகவும் அகம்பாவத்துடனும் அலட்சியமாகவும் சிறுபிள்ளைத்தனமாகவும் நினைத்த மாத்திரத்திலே ஒதுக்கித் தள்ளிவிடலாமென நினைக்கும் இதே பிரச்சினைகள்—சோவியத்துக்களின் உள்ளும், சோவியத் நிர்வாகத்தின் உள்ளும், சோவியத் ''வழக்குரைஞர்கள்'' இடையிலும் (ருஷ்யாவில் நாங்கள் முதலாளித்துவ வழக்கறிஞர் அமைப்பை ஒழித்து விட்டோம், இது முற்றிலும் சரியே, ஆனால் ''சோவியத்'' ''வழக்குரைஞர்கள்''[79] என்ற பெயரில் இவ்வமைப்பு திரும்பவும் உயிர் பெற்று வருகிறது) எழுந்து வருகின்றன. சோவியத் பொறியாளர்களிடையிலும், சோவியத் பள்ளி ஆசிரியர்களிடையிலும், சலுகைகள் பெற்றுள்ள—அதாவது மிக உயர்ந்த தேர்ச்சி பெற்று மிகச் சிறந்த நிலையிலுள்ளவர்

களான—சோவியத் ஆலைத் தொழிலாளர்களிடையிலும் முதலாளித்துவ நாடாளுமன்ற முறைக்குரிய தீய இயல்புகள் யாவும் இடையறாது அப்படியே புத்துயிர் பெற்றெழுவதை நாம் காண்கிறோம். இந்தத் தீமையைப் படிப்படியாகத்தான்—பாட்டாளி வர்க்க நிறுவன ஒழுங்கமைப்பு, கட்டுப்பாடு இவற்றின் அடிப்படையில் நடைபெறும் அயராத, இடைவிடாத, நீண்ட போராட்டத்தைத் திரும்பவும் நடத்துவதன் மூலமே—வெற்றி கொண்டு வருகிறோம்.

முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தில் நம்முடைய, அதாவது தொழிலாளாகளுடைய கட்சியிலிருந்து, முதலாளித்துவப் பழக்கவழக்கங்களைக் களைந்திடுவது மிகவும் ''கடினமானதே''. முதலாளித்துவத் தப்பெண்ணங்களால் படுமோசமாய் ஊழல்படுத்தப்பட்ட வழக்கமான நாடாளுமன்றத் தலைவர்களைக் கட்சியிலிருந்து விலக்குவதும் ''கடினமானதுதான்.'' முதலாளித்துவ வர்க்கத்திலிருந்து வரும் (சொற்பமே ஆயினும்) அத்தியாவசிய எண்ணிக்கையோரைப் பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படியச் செய்வதும் ''கடினமானதே''. தொழிலாளி வர்க்கத்துக்குரிய முழுத் தகுதியும் சிறப்பும் வாய்ந்த கம்யூனிஸ்டுக் குழு ஒன்றை முதலாளித்துவ நாடாளுமன்றத்தில் நிறுவுவதும் ''கடினமானதுதான்''. கம்யூனிஸ்டு நாடாளுமன்றத்தினர் முதலாளித்துவநாடாளுமன்ற வெற்றுப் பணிகளில் ஈடுபடாது வெகுஜனங் களுக்கிடையிலான பிரசாரம், கிளர்ச்சி, நிறுவன ஒழுங்கமைப்பு ஆகிய அவசர அவசியப் பணிகளில் கவனம் செலுத்தும்படி உறுதி செய்து கொள்வதும் ''கடினமானதுதான்''. இவை யாவும் ''கடினமானவை'' என்பதில் ஐயமில்லைதான். ருஷ்யாவில் இவை கடினமானவையாகத்தான் இருந்தன. முதலாளித்துவ வர்க்கம் மேலும் பன்மடங்கு பலம் படைத்ததாகவும், முதலாளித்துவ-ஜனநாயகப் பாரம்பரியங்கள் மேலும் வலிமை மிக்கனவாகவும், இன்ன பிற நிலைமைகளுக்குமுரிய மேலைய ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இவை மிகமிகக் கடினமானவையாகவே இருக்கும்.

ஆயினும் இந்தக் ''கடினமான பணிகள்'' யாவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போதும் பாட்டாளி வர்க்கம்

ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட பிறகும் வெற்றி பெறும் பொருட்டு எப்படியும் பாட்டாளி வர்க்கம் கட்டாய மாய்த் தீர்வு காண வேண்டியிருக்கும் இதே வகையான பிரச்சினைகளுடன் ஒப்பிடுகையில் குழந்தைப் பிள்ளையின் விளையாட்டே ஆகும். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் கோடானு கோடியான விவசாயிகளுக்கும் சிறு உடைமை யாளர்களுக்கும் லட்சக் கணக்கான அலுவலகச் சிப்பந்திகளுக் கும் அதிகாரிகளுக்கும் முதலாளித்துவ அறிவுத்துறையினருக் கும் புனர் போதம் அளிப்பது, அவர்கள் எல்லோரையும் பாட்டாளி வர்க்க அரசுக்கும் பாட்டாளி வர்க்கத் தலைமைக் கும் கீழ்ப்படியச் செய்வது, அவர்களுடைய முதலாளித் துவப் பழக்கவழக்கங்களையும் பாரம்பரியங்களையும் இல்லா தொழியச் செய்வது—மெய்யாகவே பிரம்மாண்டமான இந்தப் பணிகளுடன் ஒப்பிடுகையில், முதலாளித்துவ வர்க் கத்தின் ஆதிக்கத்தில் முதலாளித்துவ நாடாளுமன்றத்தில் மெய்யான பாட்டாளி வர்க்கக் கட்சியின் மெய்யான கம்யூ னிஸ்டுக் குழு ஒன்றை உருவாக்குவது குழந்தைப் பிள்ளைக் குரியதெனச் சொல்லத்தக்க அளவுக்கு எளியதே ஆகும்.

நாடாளுமன்ற-எதிர்ப்பாளர்களும் ''இடதுசாரித்'' தோழர்களும் இது போன்ற ஒரு சிறிய இன்னலை இப்பொழுது சமாளிக்கத் தெரிந்து கொள்ளவில்லை என்றால், அவர்கள் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைச் சாதிக்கும் திறனற்ற வர்களாகவும் முதலாளித்துவ அறிவுத்துறையினரையும் முத லாளித்துவ ஏற்பாடுகளையும் விரிவான அளவில் கீழ்ப்படச் செய்யவும் புனரமைக்கவும் முடியாதோராயுமே இருக்க வேண்டும், அல்லது அவர்கள் அவசர அவசரமாய்த் தமது பயிற்சியை நிறைவுறச் செய்ய வேண்டியதாகி, இந்த அவசரத் தின் விளைவாய்ப் பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்குப் பெருமளவில் தீங்கிழைப்போரும், வழக்கமானதை விட அதிகமான தவறுகள் இழைப்போரும், சராசரி அளவைக் காட்டிலும் கூடுதலான பல வீனத்தையும் திறனின்மையை யும் வெளிப்படுத்துவோருமாகவே இருக்க வேண்டுமென்று துணிந்து கூறலாம்.

முதலாளித்துவ வர்க்கம் கவிழ்க்கப்படும் வரை, அதற்குப்

பிற்பாடு சிறுவீதப் பொருளாதாரமும் சிறுவீதப் பண்ட உற்பத்தியும் பூரணமாக மறைந்தொழியும் வரை, முதலாளித்துவச் சூழ்நிலையும் சொத்துடைமைப் பழக்கவழக்கங்களும் குட்டிமுதலாளித்துவ மரபுகளும் தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள்ளும் வெளியிலும்—செயற்பாட்டுத் துறைகளில் ஒன்றே ஒன்றான நாடாளுமன்றத் துறையில் மட்டுமின்றித் தவிர்க்க முடியாதபடி சமூகச் செயற்பாட்டின் ஒவ்வொரு துறையிலும், எல்லாக் கலாசார, அரசியல் துறைகளிலும்விதிவிலக்கின்றி—பாட்டாளி வர்க்கப் பணிக்குத் தீங்கிழைத்தே வரும். செயற்பாட்டின் ஏதேனும் ஒரு துறையில் எழும் ''விரும்பத்தகாத'' பிரச்சினைகள் அல்லது சங்கடங்களில் ஒன்றைப் புறக்கணிக்கவோ, அதிலிருந்து வேலியிட்டுப் பிரித்துக் கொண்டு விடவோ முயலுவது மிகப் பெரும் தவறாகும்; பிற்பாடு இதற்காகக் கட்டாயம் வருந்த வேண்டியே வரும். விதிவிலக்கின்றி ஒவ்வொரு வேலைத் துறையிலும் செயற்பாட்டு அரங்கிலும் பாண்டித்தியம் பெறவும், எல்லா இன்னல்களையும் சமாளிக்கவும், முதலாளித்துவப் பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள் யாவற்றையும் ஒழித்திடவும் நாம் கற்றுக் கொண்டாக வேண்டும். பிரச்சினையை வேறு எந்த விதமாய் எடுத்துரைப்பதாயினும், அது வெறும் விளையாட்டாகவே, சிறு பிள்ளைத்தனமாகவே இருக்கும்.

மே 12, 1920

5

இப்புத்தகத்தின் ருஷ்யப் பதிப்பில் நான் சர்வதேசப் புரட்சிக் கொள்கைத் துறையில் ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியை ஒட்டுமொத்தமாய்க் குறிப்பிட்டு அதன் நடத்தையை ஓரளவு பிழைபட விவரித்து விட்டேன். ஆகவே தற்போது எனக்குக் கிடைத்திருக்கும் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, இப்பிரச்சினை குறித்து நமது டச்சுத் தோழர்களின் கடிதம் ஒன்றை வெளியிட்டு, ருஷ்ய மூலத்தில் நான் உபயோகித்த ''டச்சு டிரிபியூனிஸ்டுகள்'' என்னும் தொடரைத் திருத்திக் கொள்கிறேன்; அதனை இப்பொழுது

''ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலர்'' என்பதாய் மாற்றிக் கொள்கிறேன்.[80]

நி. லெனின்

வைன்காப்பின் கடிதம்

மாஸ்கோ, ஜூன் 30, 1920

அருமைத் தோழர் லெனின்,

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கான டச்சுப் பிரதிநிதிக் குழுவின் உறுப்பினர்களான நாங்கள், உங்கள் அன்பின் காரணமாய், உங்களுடைய ''இடதுசாரி'' கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு என்னும் நூலை, அது ஐரோப்பிய மொழிகளில் வெளிவருவதற்கு முன்பே படிக்கும் வாய்ப்புப் பெற்றோம். சர்வதேச அரசியலில் ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் ஆற்றும் பங்கு குறித்து உங்களுடைய ஆட்சேபத்தை இப்புத்தகத்தில் சில இடங்களில் நீங்கள் வலியுறுத்துகிறீர்கள்.

ஆனால் அவர்களுடைய செயல்களுக்கான பொறுப்பை நீங்கள் கம்யூனிஸ்டுக் கட்சியின் மீது சுமத்துவது குறித்து நாங்கள் ஆட்சேபிக்க வேண்டுமெனக் கருதுகிறோம். இது மிகவும் பிழையானது. தவிரவும் இது நியாயமுமல்ல. ஏனெனில் ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் இந்த உறுப்பினர்கள் கட்சியின் நடப்புச் செயல்களில் அற்ப சொற்ப பங்கே எடுத்துக்கொள்கிறவர்கள், அல்லது சிறிதும் பங்கெடுத்துக் கொள்ளாதவர்கள். ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியில் நேரடியாகவோ மறைமுகமாகவோ எதிர்த்தரப்புக் கோஷங்களைப் புகுத்துவதற்கே இவர்கள் முயன்றுவருகிறார்கள். இந்த எதிர்த்தரப்புக் கோஷங்களை எதிர்த்துக் கட்சியும் அதன் எல்லாப் பத்திரிகைகளும் முழு முனைப்பானதொரு போராட்டம் நடத்தியுள்ளது, தொடர்ந்து நடத்தியும் வருகிறது.

தோழமை மிக்க தங்கள்,
டே. வைன்காப்
(டச்சுப் பிரதிநிதிக் குழுவின் சார்பில்)

1920, ஏப்ரல்—மேயில்
எழுதப்பட்டது

1920, ஜூனில் தனிப் பிரசுரமாய்
பெத்ரோகிராதில் வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி 41,
பக்கங்கள் 1-104

பதிப்பாளர் குறிப்புகள்

1 மென்ஷிவிக்குகள்—ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் குட்டி முதலாளித்துவ, சந்தர்ப்பவாதப் போக்கின் ஆதரவாளர்கள். ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசில் (1903ல்) மத்திய அமைப்புக்களுக்காக நடந்த தேர்தல்களில் லெனின் ஆதரவாளர்கள் பெரும்பான்மை பெற்றனர். இவர்கள் போல்ஷிவிக்குகள் (பெரும்பான்மையோர்) என்று அழைக்கப்படலாயினர். சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மையினராகி மென்ஷிவிக்குகள் (சிறுபான்மையோர்) என்று பெயர் பெற்றனர்.

1905—1907 புரட்சி ஆண்டுகளில் கட்சியின் புரட்சிகர வேலைத்திட்டத்தையும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் தொழிலாளி வர்க்கம் விவசாயிகளுடன் கூட்டுச்சேருவதையும் மென்ஷிவிக்குகள் எதிர்த்தார்கள், மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினருடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்றனர்.

1917ல் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் மென்ஷிவிக்குகள் பங்கு கொண்டனர். மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின்பு மற்ற எதிர்ப்புரட்சி கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போராடினர்.

சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் — 1901ஆம் ஆண்டு இறுதியிலும் 1902 ஆரம்பத்திலும் ருஷ்யாவில் நிறுவப்பெற்ற ஒருகுட்டிமுதலாளித்துவக் கட்சி.

1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து எதிர்ப்புரட்சி இடைக்கால அரசாங்கத்தின் முக்கிய ஆதாரமாக இருந்தார்கள். இக்கட்சியின் தலைவர்கள் அந்த அரசாங்கத்தில் பதவி வகித்தார்கள்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போராடிய முதலாளிகள், நிலப் பிரபுக்கள் மற்றும் அன்னியத் தலையீட்டாளர்களை சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் தீவிரமாக ஆதரித்தார்கள்.—13.

[2] ஸ்பார்த்தகிஸ்டுகள்—ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளது புரட்சிகர அமைப்பின் உறுப்பினர்கள். ஏகாதிபத்திய உலகப் போரின் துவக்கத்தில் கார்ல் லீப்க்னெஹ்ட், ரோசா லுக்சம்பூர்க், ஃப்ரான்ஸ் மேரிங், மற்றும் இதரர்களால் இவ்வமைப்பு நிறுவப்பட்டது. ஸ்பார்த்தகிஸ்டுகள் பொது மக்களிடையே புரட்சிப் பிரசாரம் நடத்தினர்கள், பெருமளவில் போர்-எதிர்ப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தார்கள், வேலை நிறுத்தங்களுக்குத் தலைமைதாங்கி நடத்தினர்கள், உலகப் போரின் ஏகாதிபத்தியத் தன்மையையும், சந்தர்ப்பவாத சமூக-ஜனநாயகக் கட்சித் தலைவர்களின் துரோகத்தையும் அம்பலப்படுத்தினர்கள். 1917 ஏப்ரலில் ஸ்பார்த்தகிஸ்டுகள் மையவாத ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தனர். ஆனல் ஸ்தாபன ரீதியில் சுயேச்சையாக இருந்தனர். 1918 நவம்பரில் ஜெர்மனியில் புரட்சி நடந்த போது அவர்கள் ''ஸ்பார்த்தகஸ் கழகத்தை'' நிறுவினர். தமது சொந்த வேலைத்திட்டத்தை (டிசம்பர் 14) வெளியிட்டனர், ''சுயேச்சையாளர்களிடமிருந்து'' பிரிந்து சென்றனர். 1918 டிசம்பர் 30 முதல் 1919 ஜனவரி 1ந் தேதி வரையில் நடைபெற்ற துவக்கக் காங்கிரசில் அவர்கள் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியை அமைத்தார்கள்.—28.

[3] அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு குறித்த தேதியில்—1917 நவம்பர் 12 (25)ல் நடைபெற்றது. அக்டோபர் புரட்சிக்கு முன்னல் தயாரிக்கப்பட்ட பட்டியல்களுக்கு ஏற்பவும், இடைக்கால அரசாங்கத்தினல் ஆதரிக்கப்பட்ட விதிமுறைகளை அனுசரித்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சோஷலிஸ்டுப் புரட்சியின் முக்கியத்துவத்தை மக்கள் திரள் இன்னும் அறிந்தேற்றுக் கொள்ளாத ஒரு நேரத்தில் இத்தேர்தல்கள் நடத்தப்பெற்றன. இதை வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் தமக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு தலைநகரம் மற்றும் தொழிற்துறை மையங்களில் இருந்து தொலைவில் இருக்கும் பகுதிகளில் வாக்குகளில் பெரும்பான்மையைப் பெற

ஏற்பாடு செய்தனர். அரசியல் நிர்ணய சபை சோவியத் அரசாங்கத்தால் கூட்டப்பட்டு *1918* ஜனவரி *5 (18)*ல் பெத்ரோகிராதில் ஆரம்பமாயிற்று. இந்த சபையின் எதிர்ப்புரட்சியாளர் பெரும்பான்மை அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் சமர்ப்பிக்கப்பட்ட "உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பிரகடனத்தை" நிராகரித்தது, சமாதானம், நிலம், சோவியத்துகளுக்கு ஆட்சி அதிகாரத்தை மாற்றி வழங்குவது குறித்த சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரஸ் அங்கீகரித்த அரசாணைகளை ஏற்க மறுத்தது. எனவே ம.நி. கமிட்டி, அதன் ஜனவரி *6 (19)* அரசாணை மூலம் அரசியல் நிர்ணய சபையைக் கலைத்துவிட்டது.—*34.*

4 இங்கு குறிப்பிடப்படுவது அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கு முன்னல், செக் மற்றும் ஸ்லோவக் போர்க் கைதிகளைக் கொண்டு ருஷ்யாவில் நிறுவப்பட்ட செக்கோஸ் லோவக் படைப் பிரிவின் எதிர்ப்புரட்சி ஆயுதக் கலகமாகும்.

இந்தக் கலகம் மென்ஷிவிக், சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் செயலூக்கமான உதவியுடன் அன்டான்ட் ஏகாதிபத்தியவாதிகளால் திட்டமிட்டு ஏவப்பட்டது. இது *1918* மே மாதம் வெடித்தது. வெண்காவலர் மற்றும் குலாக்குகளுடன் மிகவும் நெருக்கமாகத் தொடர்பு பூண்டு செயலாற்றிய இந்தக் கலகக்காரர்கள் ஊராலின் பெரும் பகுதி, வோல்கா பிரதேசம் மற்றும் சைபிரியாவை பற்றுடல் செய்து எங்கும் முதலாளித்துவ ஆட்சியை மீண்டும் நிலைநாட்டினர்கள்.

வோல்கா பிரதேசம் *1918* மாரிக்காலத்தில் செஞ்சேனையால் விடுவிக்கப்பட்டது. வெண்காவலர் மற்றும் செக்கோஸ்லோவக்குகள் *1919* இறுதியில் முற்றுக முறியடிக்கப்பட்டார்கள்.—*48.*

5 கேரென்ஸ்கி ஆட்சி கால கட்டம் *1917* பிப்ரவரி முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கும் இடையிலான காலப்பகுதி. இந்த கட்டத்தில் சோஷலிஸ்டுப் புரட்சியாளரான கேரென்ஸ்கியின் தலைமையில் இடைக்கால அரசாங்கம் நிலவியது. அவர் முதலாளித்துவ நலன்களால் ஆட்டிப்படைக்கப்பட்ட ஒரு கொள்கையைப் பின்பற்றினர்.—*49.*

6 அன்டான்ட் (மூன்று நாடுகளின் கூட்டணி)—இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜாராட்சி ருஷ்யாவின் ஏகாதிபத்தியக்

கூட்டணி. முதல் உலகப் போரின் போது அமெரிக்கா, ஜப்பான், இத்தாலி மற்றும் இதர பல நாடுகள் இந்தக் கூட்டணியில் சேர்ந்தன.—51.

7 இரண்டாவது அகிலம் 1889ல் நிறுவப்பட்ட சோஷலிஸ்டுக் கட்சிகளின் சர்வதேசிய நிறுவனம். முதல் உலகப் போர் (1914-1918) துவங்கிய போது இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் சோஷலிஸ்டு லட்சியத்திற்குத் துரோகம் செய்து தமது ஏகாதிபத்திய அரசாங்கங்களை ஆதரித்தார்கள். இரண்டாவது அகிலம் தகர்வுற்றது. இரண்டாவது அகிலத்தில் முன்பு இருந்த இடதுசாரிக் கட்சிகளும் குழுக்களும் 1919ல் மாஸ்கோவில் நிறுவப்பட்ட (மூன்றாவது) கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்ந்தன.

இதே 1919ல் பெர்ன் (சுவிட்சர்லாந்து) மாநாட்டில் இரண்டாம் அகிலம் மீண்டும் நிலைநாட்டப்பட்டது. சோஷலிஸ்டு இயக்கத்தில் வலதுசாரி சந்தர்ப்பவாதப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்திய அந்தக் கட்சிகள் மட்டுமே இதில் சேர்ந்தன.—68.

8 கீழ்த்திசை மக்களது கம்யூனிஸ்டு நிறுவனங்களின் இரண்டாம் அகில ருஷ்யக் காங்கிரஸ், ரு.க.க.(போ.)இன் மத்தியக் கமிட்டியின் கீழ்த்திசை மக்களது கம்யூனிஸ்டு நிறுவனங்களின் மத்திய பியூரோவால் கூட்டப்பட்டு, 1919 நவம்பர் 22 முதல் டிசம்பர் 3 வரையில் மாஸ்கோவில் நடைபெற்றது.—84.

9 இங்கு குறிப்பிடப்படுவது சமாராவில் இருந்த வெண்காவலர்-சோஷலிஸ்டுப் புரட்சியாளர்-மென்ஷிவிக் அரசாங்கமாகும். இவர்கள் அரசியல் நிர்ணய சபை கமிட்டி உறுப்பினர்கள் (கோமுச்) என்று கருதப்பட்டார்கள். செக்கோஸ்லோவக் படைப்பிரிவின் கலகக்காரர்களால் சமாரா பற்றுடல் செய்யப்பட்ட போது 1918 ஜூன் மாதம் இது நிறுவப்பட்டது. 1918 ஆகஸ்டுக்குள் கோமுச் வோல்காப் பகுதி, உரால் பகுதியில் இருந்த பல குபேர்னியாக்களைப் பற்றுடல் செய்துவிட்டது. முன்பனிக் காலத்தில் செஞ்சேனையின் தாக்குதலின் கீழ் இந்த எதிர்ப்புரட்சி அரசாங்கம் ஒழிக்கப்பட்டது.—87.

10 வெர்சேய் சமாதான ஒப்பந்தம் (1914-18) முதல் உலகப் போரை முடிவுறச் செய்த இந்த உடன்படிக்கை 1919 ஜூன் 28ல் ஒருபுறம் அமெரிக்கா, பிரிட்டிஷ் பேரரசு, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் மற்றும் இதர நேச நாடுகளாலும், மறுபுறம் ஜெர்மனியாலும் கையெழுத்திடப்பட்

டது. இந்த உடன்படிக்கை முதலாளித்துவ உலகின் மறு பங்கீடை வெற்றியாளர்களுக்கு சாதகமாக உறுதிப்படுத்தியது, சோவியத் ருஷ்யாவை நெரித்தொழிப்பதையும் உலகப் புரட்சி இயக்கத்தை ஒடுக்குவதையும் நோக்கமாக்கிய நாடுகளிடையான உறவுகளின் ஓர் அமைப்பை நிறுவியது.—*91*.

11 **பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை** *1918* மார்ச் *3*ந் தேதி சோவியத் ருஷ்யாவுக்கு மிகவும் கடுமையான நிபந்தனைகளுடன் சோவியத் ருஷ்யாவுக்கும் ஜெர்மன் கூட்டணி அரசுகளுக்கும் (ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா மற்றும் துருக்கி) இடையே ஏற்பட்டது. திரோத்ஸ்கி மற்றும் ''இடது கம்யூனிஸ்டுகளின்'' கட்சி விரோதக் குழுவின் பிடிவாதமான எதிர்ப்பு இருந்தபோதிலும் இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. லெனினது பேரளவான முயற்சிகளின் விளைவாகவே ஜெர்மனியுடனான இந்த சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டது. *1918* நவம்பர் *13*ல் ஜெர்மனியில் நடைபெற்ற புரட்சியைத் தொடர்ந்து—அது முடியாட்சியின் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது—அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி இந்த அநீதியான கொள்ளைக்கார பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கையை ரத்துச் செய்தது.—*91*.

12 **விவசாயக் கம்யூன்கள் மற்றும் விவசாய ஆர்ட்டல்களின் முதலாவது காங்கிரஸ்** விவசாயத்துறை மக்கள் கமிசாரகத்தால் கூட்டப்பெற்று மாஸ்கோவில் *1919* டிசம்பர் *3—10* தேதிகளில் நடைபெற்றது. இந்தக் காங்கிரசில் *140* பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள், இவர்களில் *93* பேர் கம்யூனிஸ்டுகள். லெனின் காங்கிரசின் இரண்டாவது நாள் உரையாற்றினார். விவசாய உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் (கம்யூன்கள் மற்றும் ஆர்ட்டல்கள்) அகில ருஷ்ய சங்கத்தின் விதிகளை காங்கிரஸ் ஏற்றது. இந்த விதிகள், கூட்டுப் பண்ணை முறை பற்றிய கருத்து, அண்டைவாசிகளான விவசாயிகளுக்கு நடைமுறை உதவி குறிப்பாயும் செஞ்சேனை வீரர் குடும்பங்கள் மற்றும் ஏழை விவசாயிகளுக்கு உதவி எனும் கருத்தைப் பிரசாரம் செய்வதையும், எல்லா விவசாயக் கூட்டமைப்புகளையும் தனியொரு உற்பத்தியாளர் சங்கத்தில் ஒன்றிணைப்பதையும் பிரதான நோக்கங்களாக வைத்திருக்க வேண்டும் என்று வரையறை செய்தன.—*106*.

13 நூறு கோடி ரூபிள் நிதி *1918 நவம்பர் 2ந் தேதிய மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் அரசாணைப்படி நிறுவப்பட்டது. ''விவசாயத்தை மேம்படுத்தி வளர்ப்பதும் அதனை ஆகத் துரிதமாக சோஷலிஸ்டு வழிகளில் புனரமைப்பது மே இதன் நோக்கம். ''இந்த நிதியில் இருந்து உதவி நிதிகளும் கடன்களும் விவசாயக் கம்யூன்கள், மற்றும் விவசாயிகளின் உழைப்பு சங்கங்கள், கிராமிய சங்கங்கள் மற்றும் தனி நபர் சாகுபடியில் இருந்து கூட்டுறவுப் பண்ணைகளுக்குச் சென்ற விவசாயிகள் பிரிவு ஆகியவற்றுக்கு வழங்கப் பட்டன.—106.*

14 ''சோஷலிஸ்டு நிலத் தீர்வு மற்றும் சோஷலிஸ்டு சாகுபடி முறைக்கு மாறிச் செல்வதற்கான நடவடிக்கைகள் பற்றிய சட்டம்'' *1919 பிப்ரவரியில் அகில ருஷ்ய மத்திய நிர் வாகக் கமிட்டியால் ஏற்கப்பட்டது. இது 1918 டிசம்பரில் நில இலாகாக்களின், ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் மற்றும் கம்யூன்களின் சார்பில் நடந்த முதல் அகில ருஷ் யன் காங்கிரசின் முடிவுகளை அடிப்படையாக்கியதாகும் இந்தச் ''சட்டத்தை'' வகுப்பதிலும் இதைப் பதிப்புச் செய்வதிலும் லெனின் நேரடியான பங்கு வகித்தார். விவசாய உற்பத்தி ஆற்றலை அதிகரித்தல், சாகுபடியின் கீழ் கொண்டுவரும் நிலப்பரப்பை அதிகரித்தல், விவ சாயத்தை ஒரு சோஷலிஸ்டு வழியில் புனரமைத்தல் ஆகியவற்றுக்கு உரிய பல நடைமுறை நடவடிக்கைகளை இந்தச் சட்டம் உருவரை செய்தது.—106.*

15 அகில உக்ரேன் புரட்சிகர ராணுவக் கமிட்டி—*1919 டிசம் பர் 11ந் தேதி ம.நி. கமிட்டி மற்றும் உக்ரேன் மக்கள் கமிசாரகக் கவுன்சிலின் முடிவுப்படி நிறுவப்பட்ட புரட்சி கர ஆட்சி அதிகாரத்தின் இடைக்கால உறுப்பமைப்பா கும். ம.நி.க. மற்றும் உக்ரேன் ம.க.க. இந்தப் புரட்சி கரக் கமிட்டியிடம் ஒப்படைத்த பணிகள் பின்வருமாறு: வெண்காவலர் படைகளை இறுதியாக நசுக்குவதற்கான லட்சியத்திற்கு செஞ்சேனைக்கு எல்லாவகையிலுமான உதவிகள் புரிதல்; நிலப்பிரபுக்களையும் நிலப்பிரபுத்துவ நிலவுடைமையையும் ஒழித்தல்; சோவியத் உக்ரேன் பிரதேசத்தில் கறாரான தொழிலாளர் விவசாயிகள் ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டுவது; உக்ரேன் நிலப்பரப்பின் ஆகப் பெரிய பகுதி விடுதலை செய்யப்பட்ட உடனேயே சோவியத்துகளின் நாலாவது அகில உக்ரேன் காங்கிரசைக் கூட்டுவது இத்தியாதி.—127.*

16 ''பரோத்பா'' வாதிகள்—உக்ரேனியன் சோஷலிஸ்டுக் கட்சியில் ஏற்பட்ட பிளவுக்குப் பிறகு *1918* மே மாதத்தில் எழுந்த குட்டிமுதலாளித்துவ தேசியவாதக் கட்சியின் உறுப்பினர்கள். அவர்களது கட்சியின் மத்திய ஏடான ''பரோத்பா'' (''போராட்டம்'')வை ஒட்டி அவர்கள் பரோத்பிஸ்டுகள் என்று அழைக்கப்பட்டனர். *1919* மார்ச்சில் அவர்கள் பரோத்பிஸ்டு கம்யூனிஸ்டுகளின் உக்ரேனிய சோஷலிஸ்டு-புரட்சி கட்சி எனும் பெயரைச் சூட்டிக் கொண்டார்கள். இதே ஆண்டு ஆகஸ்டில் பரோத்பிஸ்டுகளின் உக்ரேனியன் கம்யூனிஸ்டுக் கட்சி என்று அழைத்துக் கொள்ளத் தொடங்கினர்.

விவசாயிகள் மத்தியில் பெருகிவந்த போல்ஷிவிக்குகளின் செல்வாக்கு மற்றும் உக்ரேனில் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் வெற்றிகள் காரணமாக பரோத்பிஸ்டுகள் சுயவிருப்பமாகத் தம்மைத் தாமே கலைத்துக் கொள்வது எனும் முடிவை ஏற்கும் கட்டாயம் ஏற்பட்டது. உக்ரேன் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யின் நாலாவது மாநாடு *1920* மார்ச்சில் நடைபெற்றது. இந்த மாநாடு கட்சி அணிகளில் பரோத்பிஸ்டுகளைச் சேர்த்துக்கொள்ள ஒத்துக் கொண்டது. ஆனால் பிந்திய ஆண்டுகளில் பல பரோத்பிஸ்டுகள் தமது சோவியத்-எதிர்ப்பு நடவடிக்கைகளில் மீண்டும் இறங்கி உக்ரேனிலுள்ள எதிர்ப்புரட்சி முதலாளித்துவ-தேசியவாத நபர்களின் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.—*127*.

17 சர்வதேச சங்கம்—முதல் உலகப் போருக்கும் இரண்டாம் உலகப் போருக்கும் இடையே நிலவிய ஒரு சர்வதேச நிறுவனம். முதலாவது உலகப் போரின் வெற்றியாளர்கள் நடத்திய பாரிஸ் சமாதான மாநாட்டில் *1919*ல் இது தோற்றுவிக்கப்பட்டது. இந்த நிறுவனம், ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு, படைக்கலக் குறைப்பு, சமாதானம் பந்தோபஸ்தை வலுப்படுத்துவது ஆகிய நோக்கங்களை ஆதரிப்பது போல ஓர் எண்ணத்தை உருவாக்கும் திட்டத்துடன், சர்வதேச சங்கத்தின் சாசனம் முறைப்படுத்தி முன்வைக்கப்பட்டது. உண்மையில் சர்வதேச சங்கத்தின் தலைவர்கள் ஆக்கிரமிப்பை ஆதரித்தார்கள், ஆயுதப் போட்டியை அனுமதித்தார்கள், இரண்டாம் உலகப் போருக்கான தயாரிப்புகளை ஆதரித்தார்கள்.

*1920*க்கும் *1934*க்கும் இடையே இதன் செயல்பாடுகள் சோவியத் யூனியனுக்குப் பகைமையானதாக இருந்தன. *1920-21*ல் சர்வதேச சங்கம் சோவியத் ருஷ்யாவுக்கு

எதிரான ராணுவத் தலையீட்டை ஏற்பாடு செய்த மையங்களில் ஒன்றாக இருந்தது.

1934 செப்டம்பரில் பிரெஞ்சு அரசுத்துறையாளர் முன்முயற்சியின் மீது இச்சங்கத்தின் முப்பத்து நான்கு உறுப்பு நாடுகள் சர்வதேச சங்கத்தில் சேரும்படி சோவியத் யூனியனை அழைத்தன. சமாதானத்திற்கான போராட்டத்தை நடத்திவரும் பொருட்டு சோவியத் யூனியன் சர்வதேச சங்கத்தில் சேர்ந்தது. ஆனால் ஒரு சமாதான முன்னணி அமைப்பதற்கான அதன் முயற்சிகளை மேலை வல்லரசுகளின் பிற்போக்கு வட்டங்கள் எதிர்த்தன.

இரண்டாம் உலகப் போரின் துவக்கம் முதலே சர்வதேச சங்கத்தின் நடவடிக்கைகள் நின்று போயின. 1946 ஏப்ரலில் விசேஷமாகக் கூட்டப்பட்ட சபையின் முடிவுப்படி இது சம்பிரதாயமாகக் கலைக்கப்பட்டது.—142.

18 ரு.சோ.சோ.கூ. குடியரசுக்கும் லிதுவேனியாவுக்கும் இடையிலான சமாதான உடன்படிக்கை 1920 ஜூலை 12ந் தேதியன்று மாஸ்கோவில் செய்து கொள்ளப்பட்டது. ரு.சோ.சோ.கூ. குடியரசுக்கும் லாத்வியாவுக்கும் இடையிலான சமாதான உடன்படிக்கை 1920 ஆகஸ்டு 11ந் தேதி ரீகாவில் செய்து கொள்ளப்பட்டது.—143.

19 ரு.க.க.(போ.)இன் மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோ மற்றும் நிறுவன ஒழுங்கமைப்பு பியூரோ ஆகியவை நிரந்தர அமைப்புகளாக 919 மார்ச் 25ந் தேதி நிறுவப்பட்டன. கட்சியின் எட்டாவது காங்கிரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியக் கமிட்டியின் முதலாவது பிளீனம் கூட்டத்தில் நிறுவன ஒழுங்கமைப்பு பற்றிய பிரச்சினைகள் மீதான காங்கிரஸ் தீர்மானத்திற்கு இணங்க இவை நிறுவப்பட்டன.—146.

20 இங்கு குறிப்பிடப்படுவது ரு.க.க.(போ.)இன் ஒன்பதாவது காங்கிரசுக்கு முன்பு, 1920 மார்ச்சில் ''ரு.க.க.(போ.) இன் மத்தியக் கமிட்டி செய்தி வெளியீடு'' பிரசுரம் செய்த மத்தியக் கமிட்டி மற்றும் அதன் இலாகாக்களின் அறிக்கைகள் ஆகும்.—148.

21 பின்லாந்து சமூக-ஜனநாயகக் கட்சி அறைகூவலின்படி 1918 ஜனவரி 27ந் தேதி பின்லாந்தில் புரட்சி வெடித்தது. ஸ்வின்ஹூப்வித்தின் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கம் வீழ்த்தப்பட்டு ஆட்சி அதிகாரம் தொழிலாளர் கரங்களுக்கு மாறியது. ஜனவரி 29ந் தேதி பின்லாந்தின் புரட்சி

அரசாங்க மக்கள் பிரதிநிதிகளின் கவுன்சில் நிறுவப்பட்டது.

பாட்டாளி வர்க்கப் புரட்சி தெற்கு மாவட்டங்களில் மட்டுமே வெற்றியடைந்தது. ஸ்வின்ஹூப்வித்தின் அரசாங்கம் நாட்டின் வடக்குப் பகுதியில் உறுதியாக இருந்தது. அங்கு எதிர்ப்புரட்சி சக்திகள் யாவும் ஒன்று சேரத் தொடங்கின. ஜெர்மன் அரசாங்கத்திடம் உதவி கோரின.

ஜெர்மன் ஆயுதப்படைகளின் தலையீட்டைத் தொடர்ந்து உள்நாட்டுப் போர் *3* மாதம் நீடித்தது. *1918* மே 2ல் பின்லாந்தில் புரட்சி நசுக்கப்பட்டது. வெள்ளை பயங்கர ஆட்சி நாட்டில் தொடங்கியது. ஆயிரக் கணக்கான புரட்சிகரத் தொழிலாளர் விவசாயிகள் தூக்கிலிடப்பட்டனர், சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டு மடிந்தனர்.—*156*.

22 *1919* மார்ச் *21*ந் தேதி ஹங்கேரியில் சோவியத் ஆட்சி அதிகாரம் நிறுவப்பட்டது. ஹங்கேரியில் நடைபெற்ற சோஷலிஸ்டுப் புரட்சி அமைதி பூர்வமானது ஹங்கேரிய முதலாளி வர்க்கத்தால் மக்களை எதிர்த்து நிற்க முடியவில்லை. உள்நாட்டு வெளிநாட்டு இடர்ப்பாடுகளைச் சமாளிக்கத் திராணி அற்ற அது புரட்சி வளர்ச்சியுறுவதைத் தடைசெய்யும் நோக்குடன் சில காலத்துக்கு வலதுசாரி சமூக-ஜனநாயக வாதிகளிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்க முடிவு செய்தது. இருப்பினும், இதற்கிடையே மக்கள் திரள் மத்தியில் ஹங்கேரி கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கு வெகுவாகப் பெருகி இருந்தது. கம்யூனிஸ்டுகளுடன் ஒற்றுமை வேண்டும் எனும் சமூக-ஜனநாயக அணிகளின் கோரிக்கை மிகவும் விடாப்பிடியானதாக இருந்தது. எனவே சமூக-ஜனநாயகத் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருந்த கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களிடம் ஒரு கூட்டு அரசாங்கம் அமைக்க வேண்டும் என்று முன்மொழிந்தனர். பேச்சு வார்த்தைகளின் போது ச.-ஜ. தலைவர்கள் கம்யூனிஸ்டுகள் முன்வைத்த நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டது; ஒரு சோவியத் அரசாங்கத்தை அமைத்தல், முதலாளிகளை நிராயுத ராக்குதல், ஒரு செஞ்சேனை மற்றும் மக்கள் மிலீஷியாவை படைத்துருவாக்குதல், நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகளைப் பறிமுதல் செய்தல், தொழிற் துறையைத் தேசவுடைமையாக்கல், சோவியத் ருஷ்யாவுடன் நேச அணி இத்தியாதி இவையே இந்த நிபந்தனைகள். இதே சமயம் இந்த இரு கட்சிகளும் ஹங்கேரியன் சோஷலிஸ்டுக் கட்சியாக ஒன்

றிணைக்கப்படுவது குறித்த ஓர் உடன்பாட்டில் கையொப்ப மிடப்பட்டது. இணைப்பு நடை முறையில் தவறுகள் செய்யப்பட்டு அவை பின்னல் பாதிப்பு விளேத்தன. சீர் திருத்தவாத நபர்களே விலக்கித் தனிப்படுத்தாமல் இயாந் திரிகமான முறையில் இந்த இணைப்பு நடைபெற்றது.

1919 ஆகஸ்டு 1ந் தேதி அன்னிய ஏகாதிபத்தியத் தலையீடு மற்றும் உள்நாட்டில் எதிர்ப்புரட்சியின் கூட்டுத் தாக்குதல்களின் விளைவாக ஹங்கேரியில் நிலவிய சோவியத் ஆட்சி அதிகாரம் வீழ்த்தப்பட்டது.—156.

23 1920 மார்ச் 25ந் தேதி பின்லாந்தின் அயல் விவகார அமைச்சு எல்லையை வரையரை செய்யுமாறு சோவியத் அரசாங்கத்திடம் முன்மொழிந்தது. இது சமாதானத்திற் கான பேச்சுகள் துவங்குவதற்குச் சமமாகும். 1920 அக் டோபர் 14ந் தேதி சோவியத்-பின்னிஷ் சமாதான உடன் படிக்கை கையொப்பமாயிற்று.—159.

24 பேச்சுவார்த்தைகள் தொடங்குவதாகப் போலந்து உடன் பட்டது, சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான ஒரு போருக்குத் தயாரிப்புகள் செய்வதை மூடிமறைக்கச் செய்த சூழ்ச்சியே யாகும். 1920 மார்ச் 27ந் தேதி தான் போலிஷ் அரசாங் கம் பேச்சு வார்த்தைகளுக்கான சோவியத் அரசாங்கத் தின் பல யோசனைகளே (1919 டிசம்பர் 22, 1920 ஜனவரி 28, பிப்ரவரி 2, மற்றும் மார்ச் 6) ஏற்றது. பரீசவ் எனும் போர்முனை நகரில் பேச்சுவார்த்தைகள் தொடங்க வேண் டும் என்று கருத்து வைத்தது. அந்தப் பகுதியில் மட்டுமே ராணுவ நடவடிக்கைகள் போலந்தால் நிறுத்தப்பட்டது. எல்லா ராணுவ நடவடிக்கைகளேயும் நிறுத்த வேண்டும், பேச்சு வார்த்தைகள் ஏதேனும் நடுநிலைமை நாட்டில் நடத் தப்பட வேண்டும் எனும் சோவியத் யோசனைக்கு போலிஷ் அரசாங்கம் அளித்த பதில் ஓர் இறுதி எச்சரிக்கைக்குச் சமமானதாக இருந்தது. போலிஷ் பிற்போக்காளர்கள் இப்பேச்சு வார்த்தைகளேப் பயனற்றதாக்கி ஏப்ரல் 25ல் சோவியத் குடியரசுக்கு எதிரான பகைமை நடவடிக்கை களேத் தொடங்கினர்கள்.

1920 முன்பனிக் காலத்தில் செஞ்சேனே அடைந்த வெற்றிகளின் விளைவாக போலிஷ் அரசாங்கம் ஒரு சமா தான உடன்படிக்கையில் கையொப்பமிட வேண்டி ஏற் பட்டது. 1920 அக்டோபர் 12ல் ஒரு போர்நிறுத்த உடன் பாடு ஏற்பட்டது. 1921 மார்ச் 18ந் தேதி சமாதான உடன் படிக்கை கையொப்பமாயிற்று.—160.

25 கர்னீலவ் கலகம்—இங்கு குறிப்பிடப்படுவது ஜாரின் சேனுதிபதி ஜெனரல் கர்னீலவ் தலைமையில் 1917 ஆகஸ்டில் நடைபெற்ற முதலாளிகள் நிலப்பிரபுக்களின் எதிர்ப் புரட்சிக் கலகமாகும். கலகக்காரர்கள் பெத்ரோகிராதைக் கைப்பற்றவும் போல்ஷிவிக் கட்சியை நசுக்கவும் சோவியத்துகளைக் கலைக்கவும் முடியாட்சியை மீண்டும் நிறுவும் கருத்துடன் ஒரு ராணுவ சர்வாதிகாரத்தை நிறுவவும் திட்டமிட்டார்கள்.

ஆகஸ்டு 25 (செப்டம்பர் 7) துவங்கிய கர்னீலவ் கலகம் போல்ஷிவிக்குகளின் தலைமையிலான தொழிலாளர், விவசாயிகளால் ஒடுக்கப் பட்டது.

ஜெர்மன் ''கர்னீலவ் கலகம்''—இங்கு குறிப்பிடப்படுவது ஜெர்மன் பிற்போக்கு ராணுவவாதிகளால் நடத்தி முடிக்கப்பட்டதான ''காப் ஆட்சிப்பறிப்பு'', எனப்படும் பிற்போக்கு ராணுவ-முடியாட்சிவாதிகளின் திடீர் அரசியல் புரட்சி. இதை சமூக-ஜனநாயக அரசாங்கத்தின் அப்பட்டமான உடந்தையுடன் முடியாட்சிவாத நிலப்பிரபு காப் மற்றும் ஜெனரல்களான லுடென்டார்ஃப், செக்த், மற்றும் லுட்விட்ஸ் ஏற்பாடு செய்தார்கள். 1920 மார்ச் 13ல் கலகக்காரர்கள் பெர்லினுக்கு எதிராகத் துருப்புகளைச் செலுத்தினர். அரசாங்கத்திடமிருந்து எதிர்ப்பு எதுவும் இல்லாததால் ராணுவ சர்வாதிகாரத்தைப் பிரகடனம் செய்தனர். ஜெர்மன் தொழிலாளர்கள் பொது வேலைநிறுத்தம் மூலம் பதிலடி தந்தனர். அவர்களது நிர்ப்பந்தத்தின் கீழ் காப் அரசாங்கம் மார்ச் 17ல் வீழ்ச்சியடைந்தது. சமூக-ஜனநாயகவாதிகள் மீண்டும் ஆட்சி அதிகாரம் மேற்கொண்டனர்.—160.

26 ஜெர்மனியின் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி—1917 ஏப்ரலில் கோத்தாவில் நடைபெற்ற ஒரு துவக்க காங்கிரசில் அமைக்கப்பட்டதான ஒரு மையவாதக் கட்சி. ''சுயேச்சையாளர்கள்'' சமூக-தேசியவெறியர்களுடன் ஒற்றுமை சேருவதை ஆதரித்து வர்க்கப் போராட்டத்தை நிராகரிக்கும் அளவுக்குச் சென்றூர்கள். இந்தக் கட்சியின் முக்கிய பகுதி ரைஹ்ஸ்டாக்கில் தொழிலாளர் ஐக்கியம் எனப்பட்ட காவுத்ஸ்கியின் அமைப்பாகும்.

1920 அக்டோபரில் ஹாலேயில் ஜெ.சு. ச.ஜ. கட்சிக் காங்கிரசில் பிளவு ஏற்பட்டது. 1920 டிசம்பரில் ''சுயேச்சையாளர்களில்'' கணிசமான பகுதியினர் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்து விட்டார்கள். வலதுசாரி நபர்கள் தனிக் கட்சி அமைத்தார்கள். ஜெர்மன் சு.ச.ஜ.

கட்சி என்ற பழைய பேரை எடுத்துக் கொண்டார்கள். இக்கட்சி 1922 வரை நிலவியது.—164.

27 லொங்கேவாதிகள்—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியில் ழான் லொங்கேயின் தலைமையில் சிறுபான்மைவாதிகளின் ஆதரவாளர்கள். 1914-18ஆம் ஆண்டுகளின் ஏகாதிபத்தியப் போரின்போது லொங்கேயிஸ்டுகள் சமூக-தேசிய வெறியினர்பால் இணக்கம் கொள்ளும் கொள்கையைப் பின்பற்றினர். புரட்சிப் போராட்டத்தை நிராகரித்து விட்டு, ஏகாதிபத்தியப் போரில் ''தாயகப் பாதுகாப்பு'' நிலையை மேற்கொண்டனர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிற்பாடு லொங்கேயிஸ்டுகள் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஆதரிப்பதாகக் கூறிக் கொண்டனர்; ஆனால் உண்மையில் இந்தச் சர்வாதிகாரத்தின் எதிரிகளாய் இருந்தனர். 1920 டிசம்பரில் லொங்கேயிஸ்டுகள் பகிரங்கமான சீர்திருத்தவாதிகளுடன் சேர்ந்து கட்சியிலிருந்து வெளியேறி, இரண்டரையாவது அகிலத்தில் சேர்ந்து கொண்டனர்.—164.

28 ஸ்மோல்னி மாளிகை—பெத்ரோகிராதில் முன்னாள் ஸ்மோல்னி கல்லூரி இருந்த கட்டிடம். 1918 மார்ச்சில் மாஸ்கோவுக்கு மாறிச் செல்லும் வரை இது சோவியத் அரசாங்கத்தின் பீடமாக இருந்தது.—172.

29 ருஷ்யன் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)இன் மத்தியக் கமிட்டியின் ''இஸ்வேஸ்தியா''—கட்சி வாழ்க்கை பற்றிய பிரச்சினைகளை விளக்கும் ம.க.யின் செய்தி வெளியீடு. ரு.க.க. (போ.)இன் எட்டாவது காங்கிரஸ் முடிவுப்படி நிறுவப்பட்டது. இது 1919ல் மே 28லிருந்து மாஸ்கோவில் வெளிவரத் தொடங்கிற்று. முதலாம் ஏடுகள்''பிராவ்தாவின்'' வார வெளியீடுகளாக பிரசுரமாயின. 1920ல் அக்டோபரிலிருந்து—சுயேச்சையான ஏடு—176.

30 இங்கு லெனின் குறிப்பிடுவது 1920 ஏப்ரல் 11ந் தேதி ரு.க.க. (போ.)இன் மாஸ்கோ கமிட்டியின் முன் முயற்சியால் வெளியிடப்பட்ட கம்யூனிஸ்தீசெஸ்கி சுபோத்னிக் என்னும் ஒரு தினசரி செய்திப் பத்திரிகையாகும். இதற்கான விவரங்களை சுபோத்னிக்கு நடைபெற்ற போது ஏப்ரல் 10ந் தேதி மாஸ்கோ செய்திப்பத்திரிகைகளான பிராவ்தா, இஸ்வேஸ்தியா, பெத்னத்தா, இகனமீசெஸ்கயா ஷீஸ்ன், கம்யூனிஸ்தீசெஸ்கி த்ருத் மற்றும் ரோஸ்த் தந்திச் செய்தி நிறுவனம் ஆகியவற்றின் ஆசிரியர்களும் கட்டுரையாளர்களும் திரட்டினார்கள்.

ரு. க. க. (போ.) இன் மாஸ்கோ கமிட்டியின் முன்முயற்சிக்கு அச்சகத்தார் மிகவும் ஆதரவு காட்டி மிகுந்த உற்சாகத்துடன் முதல் ''செய்தித்தாளான'' சுபோத்னிக் வேலைகளைக் கவனித்தார்கள். அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அச்சக ஊழியர்களால் இந்தப் பத்திரிகை தயாரிக்கப்பட்டு அச்சடிக்கப்பட்டது. ஞாயிற்றுக் கிழமை சுயவிருப்ப(இலவச)வேலைசெய்தவர்கள் மத்தியில் ஏப்ரல் 11ல் இது வினியோகிக்கப்பட்டது.—*179*.

31 ''இடதுசாரி'' கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு எனும் இந்த நூல் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் ஆரம்பமாவதற்கு முன்னுல் வி. இ. லெனினுல் எழுதப்பட்டது.

இந்த நூல் சம்பந்தமான பிரதான வேலைகளை லெனின் *1920* ஏப்ரலில் முடித்திருந்தார் (கையெழுத்துப் பிரதி ஏப்ரல் 27ல் பூர்த்தியாயிற்று). இதற்கான சேர்ப்புகள் மே 12ல் எழுதப்பட்டன. அப்போது இவை புரூப் பிரதிகளாக இருந்தன. கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கு முன்பே உரிய காலத்தில் இந்த நூல் வெளிவர வேண்டும் என்பதற்காக எழுத்துக் கோற்பது முதல் இதைப் பிரசுரம் செய்வது வரையிலான எல்லா வேலைகளையும் கால அட்டவணை போட்டு லெனின் தாமே நேரடியாகக் கண்காணித்தார். *1920* ஜூன் 12ல் இந்தப் புத்தகம் அச்சடிக்கப்பட்டது. ஜூலையில் சோவியத் ருஷ்யாவில் இதன் பிரெஞ்சு, ஆங்கிலப் பதிப்புகளும் வெளியிடப்பட்டன. கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்கு வந்த எல்லாப் பிரதிநிதிகளுக்கும் இந்த நூல் வழங்கப்பட்டது. இந்த நூலின் மிகவும் முக்கியமான கோட்பாடும் முடிவுமான '' 'இடதுசாரி' கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு'' என்பது காங்கிரஸ் முடிவுகளுக்கு அடித்தளமாக இருந்தது.—*183*.

32 *Weltrevolution* (''உலகப் புரட்சி'') எனும் பிரசுரம் ஓட்டோ பௌவர் எழுதியதாகும்.—*184*.

33 இஸ்க்ரா (''தீப்பொறி'') (பழைய) *1900*ஆம் ஆண்டில் லெனினுல் தோற்றுவிக்கப்பட்ட முதல் அகில ருஷ்ய சட்ட விரோத மார்க்சிய செய்திப்பத்திரிகை. ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர மார்க்சியக் கட்சியை நிறுவுவதில் இது தீர்மானகரமான பங்கு வகித்தது.

1903 ஜூலை-ஆகஸ்டில் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் முடிந்த உடனே கி. வா. பிளெஹானவால் ஆதரிக்கப்

பட்ட மென்ஷிவிக்குகள் இஸ்க்ராவை தம் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொண்டுவிட்டார்கள். எனவே அதன் ஐம்பத்திரண்டாவது இதழ் முதல் அது புரட்சிகர மார்க்சியத்தின் ஒரு ஏடு என்பது இல்லாதொழிந்தது.—185.

34 இங்கு குறிப்பிடப்படுவது சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும். பின்னவர்கள் ரு.ச.ஜ.தொ. கட்சியின் வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் ஆவர். குறிப்பு 1 பார்க்க.—192.

35 இங்கு குறிப்பிடப்படுவது 1912 ஏப்ரல் 4ல் (17) லேஞ ஆற்றுப் பிரதேசத்தில் (சைபிரியா) தங்கச் சுரங்கங்களில் நிராயுதர்களான தொழிலாளர் சுடப்பட்ட சம்பவம் ஆகும். லேஞ படுகொலை பற்றிய செய்தி ருஷ்யத் தொழிலாளர்களைக் கிளர்ந்தெழச் செய்தது. நாடு முழுதும் மக்களின் ஆர்ப்பாட்டங்கள் கூட்டங்கள் மற்றும் வேலைநிறுத்தங்கள் அலைவீசின.—195.

36 அரசாங்க டூமா 1905ஆம் ஆண்டின் புரட்சி நிகழ்ச்சிகளின் காரணமாய் ஜார் அரசாங்கம் கூட்ட வேண்டியிருந்த பிரதிநிதித்துவ சபை. சட்ட மன்றமாக இருந்த அரசாங்க டூமா மெய்யான அதிகாரம் எதுவும் இல்லாததாகவே இருந்து வந்தது. அரசாங்க டூமாவுக்கான தேர்தல்கள் நேரடியானவையாகவோ, சமத்துவ வாக்குரிமையுடையதாகவோ, குடி மக்கள் அனைவருக்குமானதாகவோ இருக்கவில்லை. உழைப்பாளி மக்களுக்கும் ருஷ்யாவில் இருந்த ருஷ்யரல்லாத இனத்தோருக்கும் வாக்குரிமை வெகுவாகக் குறைக்கப்பட்டு இருந்தது. ஏராளமான தொழிலாளர்களும் விவசாயிகளும் வாக்குரிமை அற்றோர் ஆகவே இருந்தனர். முதலாவது டூமாவும் (1906 ஏப்ரல்-ஜூலை) இரண்டாவது டூமாவும் (1907 பிப்ரவரி-ஜூன்) ஜார் அரசாங்கத்தால் கலைக்கப்பட்டன. 1907 ஜூன் 3ல் திடீர் ஆட்சி மாற்றம் புதிய தேர்தல் சட்டத்தைப் பிறப்பித்தது. தொழிலாளர்கள், விவசாயிகள் நகரப்புறக் குட்டி-முதலாளிகள் வாக்குரிமையை இச்சட்டம் மேலும் குறைத்தது. இதனுல் மூன்ருவது டூமாவிலும் (1907-12) நான்காவது டூமாவிலும் (1912-17) நிலப்பிரபுக்கள் பெருமுதலாளிகளின் பிற்போக்குக் கூட்டணி ஆதிக்கம் வகிக்க முடிந்தது.—196.

37 இங்கு குறிப்பிடப்படுவது நாலாவது அரசாங்க டூமாவின் போல்ஷிவிக் பிரதிநிதிகள்: அ.இ. பதாயெவ், எம்.கே. முரானவ், கி. இ. பெத்ரோவ்ஸ்கி, எப்.என்.சமோய்லவ்

மற்றும் என்.ஆர். ஷாகவ் ஆகியோராவர். *1914* ஜூலை *26*ல் (ஆகஸ்டு *8*ல்) நடந்த டூமா அமர்வில் போல்ஷிவிக் குழு ஜாராட்சி ருஷ்யா ஏகாதிபத்தியப் போரில் பிரவேசித்ததை எதிர்த்து அதன் தீர்மான எதிர்ப்பை பிரகடனம் செய்தது. இராணுவக் கடன்களுக்கு ஓட்டளிக்க மறுத்தது. மக்கள் மத்தியில் புரட்சிகரமான பிரசாரம் நடத்தியது. *1914* நவம்பரில் போல்ஷிவிக் பிரதிநிதிகள் கைதுசெய்யப்பட்டனர். *1915* பிப்ரவரியில் அவர்கள் மீதான வழக்கு விசாரணை நடந்தது. அவர்கள் துருகான்ஸ்கி பிராந்தியத்திற்கு (கிழக்கு சைபிரியா) ஆயுசுக்கும் குடியேறிவாழும் தண்டனை பெற்றனர்கள். இந்த போல்ஷிவிக் குழு உறுப்பினர்கள் எதேச்சாதிகார ஆட்சியை அம்பலப்படுத்தி நீதிமன்றத்தில் ஆற்றிய வீரிய மிகுந்த உரைகள் இராணுவ எதிர்ப்புப் பிரசாரத்திலும், உழைக்கும் மக்களின் உணர்வைப் புரட்சிகரமாக எழுச்சியுறச் செய்யவும் பெரும் பங்கு ஆற்றின.—*196*.

38 **பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற் கட்சி** எனும் சீர்திருத்தவாத நிறுவனம். ''புதிய தொழிற்சங்கங்களின்'' தலைவர்களால் கேய்ர் ஹார்டி மற்றும் ராம்ஸே மாக்டானல்ட் தலைமையில் *1893*ல் தோற்றுவிக்கப்பட்டது. பி.சு.தொ.க. நாடாளுமன்றப் போராட்ட வடிவங்களையும் மிதவாதக் கட்சியுடனான நாடாளுமன்ற பேரங்களையும் பிரதானமாக வற்புறுத்தியது.

சுயேச்சைத் தொழிற்கட்சியை இனங்குறித்துக் காட்டிய லெனின் ''உண்மையில் இது எப்போதுமே முதலாளிகளைச் சார்ந்து நின்ற தந்தர்ப்பவாதக் கட்சியே'' என்று எழுதினார்.—*197*.

39 **ஃபேபியன்கள்** — ஃபேபியன் கழகத்தின் உறுப்பினர்கள். இந்த ஆங்கிலேய சீர்திருத்தவாதக் கழகம் *1884*ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்த சங்கம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஃபேபியஸ் மாக்சிம் எனும் ரோமன் ஜெனரல் பெயரை ஒட்டி வழங்குகிறது. அவருக்கு ''குன்க்டேட்டர்'' (''இழுத்தடிப்பவர்'') எனும் புனைப்பெயர் உண்டு. ஹனிபாலுடன் நடந்த போரில் அவர் உறுதியுடன் போரிடாது தட்டிக்கழிக்கும் காலம் கடத்தும் போர்த்தந்திரத்தை மேற்கொண்டதால் இப்புனைப்பெயர் பெற்றார். ஃபேபியன்கள் பெரும்பாலும் முதலாளித்துவ அறிவுத்துறையினராவர்: விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள். சிறு சீர்திருத்தங்கள் வாயிலாகவும் சமுதாயத்தைப் படிப்படியாகப் புனரமைப்

பதன் மூலமாகவுமே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று கருதினர். அவர்கள் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம் மற்றும் சோஷலிஸ்டுப் புரட்சியின் முக்கியத்துவத்தை மறுத்து நிராகரித்தார்கள். *1900*ல் ஃபேபியன் கழகம் பிரிட்டிஷ் தொழிற் கட்சியில் சேர்ந்தது.—*197*.

40 **அமைச்சரவைவாதிகள்** — (''அமைச்சு சார்பியல் அமைச்சு சார்ந்த சோஷலிசம்'' அல்லது ''மில்லிரான் போக்கு'') —ஒரு சந்தர்ப்பவாதப் போர்த்தந்திரத்தின் சாரம்: சோஷலிஸ்டுகள் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கங்களில் பங்கேற்க வேண்டும். பிரெஞ்சு சீர்திருத்தவாத சோஷலிஸ்டான மில்லிரான் பெயரைத் தாங்கியது. அவர் *1899*ல் பிரான்சில் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கத்தில் பதவி வகித்து அதன் மக்கள்-விரோதக் கொள்கையை ஆதரித்தார்.—*198*.

41 இங்கு குறிப்பிடப்படுவது ''ஒருவேளை ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் இருந்து எதைக் காப்பி அடிக்கக் கூடாது'' எனும் லெனின் கட்டுரையாக இருக்கும். இக்கட்டுரை ''புரோஸ்வெஷேனியே'' (''அறிவொளி'') எனும் போல்ஷிவிக் சஞ்சிகையில் *1914* ஏப்ரலில் வெளியிடப்பட்டது. இதில் லெனின் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி கார்ல் லேகியனின் வஞ்சகமான நடத்தையை அம்பலப்படுத்தினர். இந்தப் பேர்வழி *1912*ல் அமெரிக்கா சென்றபோது அங்கு அதிகார வட்டங்களையும் முதலாளித்துவக் கட்சிகளையும் புகழ்ந்து பேசினர்.—*204*.

42 இங்கு குறிப்பிடப்படுவது *1875* மார்ச் *18-28* தேதிகளில் ஔகுஸ்ட் பெபெலுக்கு எங்கெல்ஸ் எழுதிய கடிதங்களாகும். (மார்க்ஸ், எங்கெல்ஸ் ''தேர்வு நூல்கள்'', தொகுதி *3*, மாஸ்கோ *1973*, பக்கம் *31-37*.)—*205*.

43 இங்கு குறிப்பிடப்படுவது அத்சோவிஸ்டுகள் (''ஆத்சிவ்'' எனும் ருஷ்யச் சொல்லில் இருந்து—இதன் பொருள் ''திருப்பியழை'' என்பது) மற்றும் இறுதி எச்சரிக்கையாளர்கள் பற்றியதாகும். இவர்களை எதிர்த்த போராட்டம் *1908* மற்றும் *1909*ல் வளர்ச்சியடைந்து அதன் விளைவாக அத்சோவிஸ்டு தலைவர் அ. பக்தானவ் போல்ஷிவிக் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார். புரட்சிகரத் தொடர்களின் மறைவில் இந்த அத்சோவிஸ்டுகள் மூன்றுவது டூமாவில் இருந்த சமூக-ஜனநாயகக் கட்சி பிரதிநிதிகளை திருப்பி அழைக்கும் படியும் சட்டபூர்வ நிறுவனங்களான தொழிற்

சங்கங்கள், கூட்டுறவுகள் ஆகியவற்றிலான செயல்பாடுகளை நிறுத்தி விட வேண்டும் எனவும் கோரினர்கள். இறுதி எச்சரிக்கைவாதம் என்பதும் ஒரு வகைப்பட்ட அத்சோவிசமே. சமூக-ஜனநாயகக் கட்சிப் பிரதிநிதிகளுடன் நிலையுறுதியான புரட்சிகரமான வேலைசெய்வதற்கு, அவர்களை நாடாளுமன்றவாதிகளாக்குவதற்கு அவர்களுடன் விடாப்பிடியாக அன்ருட வேலைகளில் ஈடுபட வேண்டும் என்பதன் அவசியத்தை இறுதி எச்சரிக்கையாளர்கள் புரிந்து கொள்ளவில்லை. கட்சியின் மத்தியக் கமிட்டியின் முடிவுகளுக்கு டூமாவில் இருக்கும் சமூக-ஜனநாயகக் கட்சி பிரதிநிதிகள் முற்றுமுழுமையாகக் கீழடங்க வேண்டும் எனும் இறுதி எச்சரிக்கை முன்வைக்கப்படுவதை அவர்கள் ஆதரித்தார்கள். அவர்கள் இதை ஏற்கத் தவறினல் அவர்களை டூமாவில் இருந்து திருப்பியழைக்கப்பட வேண்டும் 1909 ஜூன் மாதம் போல்ஷிவிக் செய்திப்பத்திரிகையான ''புரொலிட்டாரியின்'' விரிவுபடுத்தப்பட்ட ஆசிரியர் குழு மாநாடு தன் முடிவில் ரு.ச.ஜ.தொ. கட்சியில் இருக்கும் ஒரு திட்டவட்டமான போக்கு என்ற முறையில் போல்ஷிவிசத்துக்கு அத்சோவிஸத்துடனே, இறுதி எச்சரிக்கைவாதத்துடனே எவ்விதப் பொது அம்சமும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டியது. மற்றும் ''புரட்சிகர மார்க்சியத்தின் பாதையில் இருந்து பிறழ்ந்து செல்லும் இந்தத் திரிபுகளை எதிர்த்து மிகவும் உறுதியாகப் போராடும்படி'' போல்ஷிவிக்குகளை வலியுறுத்தியது.——206.

44 **புலீகின் டூமா**—ஆலோசக அந்தஸ்துடைய சபை; 1905ல் ஜார் அரசாங்கம் இதைக் கூட்டுவதாய் இருந்தது. இந்த டூமாவின் சட்டத்துக்கான நகல் உள்துறை அமைச்சர் புலீகின் தலைமையில் அமைந்த ஒரு குழுவால் தயாரிக்கப்பட்டதால், இது புலீகின் டூமா என்று அழைக்கப்பட்டது. இதன் சட்டமும் ஜாரின் அறிக்கையும் 1905ல், ஆகஸ்டு 6 (19)ல் வெளியிடப்பட்டன. இந்த நகலின்படி டூமாவுக்குச் சட்டம் இயற்றும் உரிமை இல்லை. சில பிரச்சினைகளை விவாதிக்க மட்டுமே முடியும். இந்த டூமாவைப் பகிஷ்கரிக்கும்படி போல்ஷிவிக்குகள் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் கேட்டுக் கொண்டார்கள். இந்த டூமாவுக்கான தேர்தல்கள் நடைபெறவில்லை. 1905ல் நடைபெற்ற அனைத்து ருஷ்ய அக்டோபர் அரசியல் வேலைநிறுத்தத்தாலும் புரட்சியின் எழுச்சியாலும் இந்த டூமா ஒழிக்கப்பட்டது.—206.

45 இங்கு குறிப்பிடப்படுவது முதலாம் ருஷ்யப் புரட்சியின்

போது நடந்த 1905 அகில ருஷ்ய அக்டோபர் அரசியல் வேலைநிறுத்தம் ஆகும். இந்த வேலைநிறுத்தத்தில் இருபது லட்சம் மக்களுக்கு மேல் ஈடுபட்டிருந்தார்கள். இந்த வேலை நிறுத்தம் எதேச்சாதிகாரத்தை ஒழிப்பது, புலீகின் டூமாவை செயலூக்கத்துடன் பகிஷ்கரித்தல், அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுதல் மற்றும் ஒரு ஜனநாயகக் குடியரசை நிறுவுதல் எனும் கோஷங்களின் கீழ் நடத்தப்பட்டது. அகில ருஷ்ய அரசியல் வேலைநிறுத்தம் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வலிமையை நிதர்சனப்படுத்திக் காட்டியது. நாட்டுப்புறப் பகுதி, சேனை மற்றும் கடற்படையின் புரட்சிப் போராட்டத்துக்கு ஊக்குவிப்பை அளித்தது.— *206*.

46 Labourites *(தொழிற்கட்சியினர்)—1900ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் உறுப்பினர்கள். இது தொழிற்சங்கங்கள், சோஷலிஸ்டு நிறுவனங்கள், குழுக்கள் ஆகியவை இணைந்த நாடாளுமன்றத்துக்குத் தொழிலாளர் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் நோக்கம் கொண்ட (''தொழிலாளர் பிரதிநிதித்துவக் கமிட்டி'') அமைப்பாகும். 1906ல் இக்கமிட்டி தன் பெயரை தொழிற் கட்சி என்று மாற்றிக் கொண்டது. தொழிற்சங்கங்களை வைத்து முதலில் உருவாக்கப்பட்ட இக்கட்சி (பின்னால் இதில் பல குட்டிமுதலாளித்துவ நபர்கள் சேர்ந்தார்கள்) தன் சித்தாந்தம் மற்றும் போர்த்தந்திரங்கள் விஷயத்தில் ஒரு சந்தர்ப்பவாத அமைப்பாக இருந்தது. இக்கட்சியின் ஆரம்பம் முதலே இதன் தலைவர்கள் முதலாளிகளுடனான ஒரு ஒத்துழைப்புக் கொள்கையைப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். முதல் உலகப் போரின் போது இக்கட்சியின் தலைவர்கள் (ஆர்த்தர் ஹெண்டர்சன் மற்றும் பிறர்) ஒரு சமூக-தேசியவெறி நிலை மேற்கொண்டனர், அரசாங்கத்தில் பதவி ஏற்றனர். அவர்களது உதவியுடன் அரசாங்கம் (நாட்டை ராணுவமயமாக்கல் உட்பட) பல தொழிலாளர்-விரோதச் சட்டங்களை நிறைவேற்றியது.—210.*

47 **அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சி (காடேட்டுகள்)**—இது ருஷ்யாவின் மிதவாத-முடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் முதன்மையான கட்சியாக இருந்தது. இக்கட்சி 1905ல் நிறுவப்பட்டது. முதலாளி வர்க்கத்தினர், ஸெம்ஸ்துவோ உறுப்பினர்களான நிலப்பிரபுக்கள், முதலாளித்துவப் படிப்பாளிப் பகுதியினர் அதில் சேர்ந்திருந்தனர். பிறகு காடேட்டுகள் ஏகாதிபத்திய முதலாளித்துவக் கட்சியாக மாற்றமடைந்தனர்.

முதலாவது உலகப் போரின் போது அவர்கள் ஜார்

அரசாங்கத்தின் நாடு பிடிக்கும் கொள்கையை ஆதரித்தார்கள். 1917 பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் போது காடேட்டுகள் முடியரசைக் காப்பாற்ற முயன்றனர். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் தலைமைப் பதவிகள் வகித்த அவர்கள் மக்களுக்குப் பகைமையான எதிர்ப்புரட்சிக் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். மாபெரும் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு காடேட்டுகள் சோவியத் ஆட்சியின் தீவிரப் பகைவர்களாயினர். ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சி எழுச்சிகளிலும் வெளி நாடுகளின் படையெடுப்புக்களிலும் பங்கு பற்றினார்கள்.—*213*.

48 கோட்பாடு வழிப்பட்ட எதிர்த்தரப்பாளர்கள் என்பது அராஜக-சிண்டிகல்வாதக் கருத்துகளை ஆதரித்த ஜெர்மன் ''இடது'' கம்யூனிஸ்ட்களின் ஒரு பிரிவு ஆகும். 1919ல் ஹெய்டல்பர்க்கில் நடைபெற்ற ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் இந்த எதிர்ப்பணி உறுப்பினர்களை வெளியேற்றியது. இவர்கள் ஜெர்மனியின் தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சி என்பதாக ஒன்றை 1920 ஏப்ரலில் நிறுவினர். ஜெர்மனியின் கம்யூனிஸ்டு சக்திகள் அனைத்தும் ஒன்றிணைக்கப்படுவதை எளிதாக்கவும், ஜெர்மன் தொழிலாளர் கம்யூனிஸ்டுக் கட்சியின் அருமையான பாட்டாளி வர்க்க சக்திகளின் நலன்களை நிறைவு செய்யவும் வேண்டி இந்த எதிர்ப்பணி நபர்கள் அனுதாப உறுப்பினர் என்ற உரிமையுடன் 1920 நவம்பரில் கம்யூனிஸ்டு அகிலத்தில் தற்காலிகமாக சேர அனுமதிக்கப்பட்டார்கள். எனினும் கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி ஜெர்மனியின் ஒற்றுமை (யுனைட்டட்) கம்யூனிஸ்டுக் கட்சியே கம்யூனிஸ்டு அகிலத்தின் அதிகாரபூர்வமான பிரிவு என்று கருதியது. ஒற்றுமை கம்யூனிஸ்டு கட்சியில் ஒன்றிணைந்துவிட வேண்டும், அதன் செயல்கள் அனைத்தையும் ஆதரிக்க வேண்டும், என்ற நிபந்தனையின் பேரில் ஜெ. தொ. க. க. பிரதிநிதிகள் அகிலத்தினுள் அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் ஜெ.தொ.க.க. தலைவர்கள் இந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டனர். கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ் (1921ல் ஜூன்-ஜூலை) இன்னும் ஜெ.தொ.க.க. தலைவர்களைப் பின்பற்றி வந்த தொழிலாளர்களைத் தன் பக்கம் ஈர்க்கும் நோக்கத்துடன் ஒரு காங்கிரசை கூட்டி இணைப்புப் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வேண்டி அக்கட்சிக்கு இரண்டு மாத கால அவகாசம் அளித்தது. மூன்றாவது

காங்கிரசின் தீர்மானத்தை ஜெ.தொ.க.க. தலைவர்கள் ஏற்கவில்லை, இதன் மூலம் அவர்கள் தம்மைத் தாமே கம்யூனிஸ்டு அகிலத்தில் இருந்து வெளியில் இருத்திக் கொண்டார்கள். பின்னால் இந்தக் கட்சி ஒரு சிறிய செக்டேரியன் குழுவாகி தொழிலாளி வர்க்க ஆதரவை இழந்து சிதைவுற்றது.—*214*.

49 *Kommunistische Arbeiter-zeitung* (''கம்யூனிஸ்ட் தொழிலாளர் பத்திரிகை'')—ஜெர்மன் ''இடது'' கம்யூனிஸ்டுகளின் அராஜகவாத-சிண்டிகல்வாத ஏடு. *1919* முதல் *1927* வரை ஹாம்பர்க்கில் வெளியிடப்பட்டது.

லெனின் குறிப்பிடும் கார்ல் எர்லெர், ஹென்ரிஹ் லௌபென்பர்க்கின் புனைப்பெயராகும்.—*220*.

50 இங்கு குறிப்பிடப்படுவது *1895* முன்பனிக் காலத்தில் லெனினால் ஒழுங்கமைக்கப்பட்ட **தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்ட கழகம்** ஆகும். செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் இருந்த சுமார் இருபது மார்க்சிய வட்டங்களை இணைத்த இந்த சங்கத்துக்குத் தலைமை தாங்கிய மத்தியக் குழுவில் வி. இ. லெனின், அ. அ. வனேயெவ், பி. க. ஜபரோஷெத்ஸ், கி.ம. கிரிழிழனேவ்ஸ்கி, ந.க. குரூப்ஸ்கயா, எல். மார்த்தவ், மி.அ. சில்வின், வி.வி. ஸ்தார்கவ் ஆகியோர் இருந்தார்கள். லெனின் தலைமையில் இருந்த ஐந்து உறுப்பினர்கள் இந்தச் சங்கத்தின் செயல்களை நெறியாண்மை செய்தார்கள். இந்த அமைப்பு மாவட்டக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முற்போக்கான அதிக வர்க்க உணர்வுடைய தொழிலாளர்கள் (இ.வ. பாபுஷ்கின், வ.அ. ஷெல்குனேவ் மற்றும் பிறர்) இந்தக் குழுக்களை ஆலைகளுடன் இணைத்தார்கள்.

''தொழிலாளி வர்க்க விடுதலைச் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் போராட்ட கழகம்'' லெனின் சொற்களில் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அடிப்படையில் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்துக்குத் தலைமைதாங்கும் ஒரு புரட்சிகர கட்சியின் கருவாக விளங்கியது.—*224*.

51 இங்கு குறிப்பிடப்படுவது கட்சி எதிர்ப்பு **''ஜனநாயக மத்தியத்துவ'' பிரிவு** ஆகும். ரு.க.க. (போ.)இன் ஒன்பதாவது காங்கிரசில் இந்த ''ஜ.ம. பிரிவு'' பொருளாதார கட்டமைப்பு பிரச்சினைகள் மற்றும் நிறுவன ஒழுங்கமைப்புப் பிரச்சினைகள் மீது தமது தனி அறிக்கைகளைச் செய்தனர். ஜனநாயக மத்தியத்துவம் எனும் தொடரின் திரைமறைவில், உள்ளபடியே இந்தக் கோட்பாட்டைத் தவருக வியாக்

யானம் செய்த இவர்கள் உற்பத்தித் துறையில் ஒரு மனித நிர்வாகப் பொறுப்பு அவசியம் என்பதை நிராகரித்தனர். கரு ரான கட்சி மற்றும் அரசுக் கட்டுப்பாட்டை எதிர்த்தனர்; சோவியத்துகளிலும் தொழிற்சங்கங்களிலுமான கட்சியின் தலைமைப் பாத்திரத்தை மறுத்தனர்; கோஷ்டிகள், பிரிவு களின் சுதந்திரத்தைக் கோரினர். 1923ல் இந்தப் பிரிவி னர் தகர்ந்து போயினர். இதன் தலைவர்கள் திரோத்ஸ்கி வாதிகளின் எதிர்ப்பணியில் சேர்ந்தனர்.—224.

52 **துருதொவிக்குகள்** (''உழைப்பாளர் கோஷ்டி'')—அர சாங்க டூமாக்களில் இருந்த விவசாயிகள் மற்றும் நரோத் னிக் மனப்பான்மையுடைய அறிவுஜீவிகளைக் கொண்ட குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் பிரிவு.—225.

53 1917 பிப்ரவரியிலிருந்து முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு 1919 வரை அந்த ஆண்டு உட்பட கட்சியின் உறுப்பினர் தொகை பின்வருமாறு மாற்றமடைந் தது: ரு.ச.ஜ.தொ.க.(போ.)இன் ஏழாவது (ஏப்ரல்) அகில ருஷ்ய மாநாட்டுக்குள் 1917ல் கட்சியில் 80,000 உறுப்பினர்கள் இருந்தனர்; ரு.ச.ஜ.தொ.க. (போ.)இன் ஆறுவது காங்கிரசுக்குள் (1917ல்ஜூலை-ஆகஸ்டு) சுமார் 2,40,000; ரு.க.க.(போ.)இன் ஏழாவது காங்கிரசுக்குள் (1918ல் மார்ச்)—3,00,000க்குக் குறை யாமலும்; ரு.க.க.(போ.)இன் எட்டாவது காங்கிரசுக்குள் (1919ல் மார்ச்)—3,13,766 உறுப்பினர்களும்.—227.

54 இங்கு குறிப்பிடப்படுவது கட்சி அங்கத்தினர் தொகையை அதிகரிக்கும் நோக்கமுடன் நிறைவேற்றப்பட்ட ரு.க.க. (போ.)இன் எட்டாவது காங்கிரசின் தீர்மானப்படி நடை பெற்ற ''கட்சி வாரம்'' ஆகும். செப்டம்பர் இறுதியில் மத்தியக் கமிட்டி எல்லா கட்சி நிறுவனங்களுக்கும் ஒரு சுற்றுக் கடிதம் அனுப்பி வைத்தது. கட்சி வாரத்தின் போது தொழிலாளர், உழைக்கும் பெண்கள் செஞ்சேனை வீரர், கடற்படையினர், விவசாயிகள் விவசாயிப் பெண் கள் மட்டுமே கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட வேண் டும் என்று அந்தக் கடிதம் கோரியிருந்தது. கட்சி வாரத் தில் செய்த பணியின் விளைவாக ரு.சோ.சோ.கூ. குடியர சின் ருஷ்யன் பகுதியிலான 38 குபேர்னியாக்களில் மட் டுமே 2 லட்சம் பேர் கட்சியில் சேர்ந்தனர். இதில் பாதிக்கு மேல் தொழிலாளிகள்; சேனை, கடற்படையினைச் சேர்ந் தவர்கள் 25 சதவிகிதம் ஆவர்.—228.

55 **கம்யூனிஸ்டு அகிலம்**—இது கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்

வாகக் கமிட்டியால் வெளியிடப்பட்டு வந்த சஞ்சிகை. இது ருஷ்யன், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், ஸ்பானிஷ் மற்றும் சீன மொழி ஆகியவற்றில் பிரசுரமாகியது. முதல் இதழ் 1919 மே 1ந் தேதி வெளிவந்தது. இந்த சஞ்சிகையில் தத்துவார்த்தக் கட்டுரைகளும் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆவணங்களும் வெளியிடப்பட்டன. லெனினது பல கட்டுரைகள் இதில் இடம் பெற்றன.—236.

56 *1858ல் அக்டோபர் 7ல் எங்கெல்ஸ் மார்க்சுக்கு எழுதிய கடிதம் காண்க (மார்க்ஸ், எங்கெல்ஸ். ''தேர்வுக் கடிதங்கள்.'' மாஸ்கோ, 1956. பக். 110).—237.*

57 *Folkets Dagblad Politiken* (''மக்கள் அரசியல் தினசரி'')—ஸ்வீடிஷ் இடதுசாரி சமூக-ஜனநாயகக் கட்சியின் ஏடு. இது 1916 ஏப்ரல் முதல் ஸ்டாக்ஹோமில் வெளிவந்தது. பின்னர் 1917 நவம்பர் வரை *Politiken* என்ற தலைப்பில் தினசரியாக வெளிவந்தது.—238.

58 **உலக ஆலைத் தொழிலாளர் நிறுவனம்** (Industrial Workers of the World) அமெரிக்கத் தொழிலாளர்களின் தொழிற்சங்க நிறுவனம் 1905ல் நிறுவப்பட்டது. பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த பிரதானமாயும் தேர்ச்சியற்றிருந்த குறைந்த ஊதியம் பெற்றுவந்த தொழிலாளர்களை இது ஒன்றுசேர்த்திருந்தது. இதை நிறுவுவதில் அமெரிக்கத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கிய தலைவர்களான டே. டெ. லியோன், யூ. டேப்ஸ் மற்றும் வி. ஹேவுட் தீவிரப் பங்கேற்றனர். உலக தொழிற்துறை தொழிலாளர் சங்கங்கள் கனடா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, லத்தீன் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலும் நிறுவப்பட்டன. முதல் உலகப் போரின் போது இந்த சம்மேளனத்தின் பங்கேற்புடன் பல யுத்த-எதிர்ப்பு வெகுஜனப் போராட்டங்கள் நடைபெற்றன. இந்த அமைப்பின் செயல்பாடுகளில் அராஜகவாத, சிண்டிகல்வாதப் போக்குகள் காணப்பட்டன: இது பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டங்களை மறுத்தது, கட்சியின் தலைமைப் பாத்திரத்தை மறுத்தது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அவசியத்தை மறைத்தது, அமெரிக்க தொழிற்சங்க சம்மேளன உறுப்பினரிடை வேலை செய்ய மறுத்தது. தலைமையின் இத்தகைய சந்தர்ப்பவாத அரசியல் காரணமாக உலக தொழிற்துறைத் தொழிலாளர் சங்கம் ஒரு செக்டேரியன் அமைப்பாகச் சீரழிந்து தொழிலாளி வர்க்க இயக்கத்தில் இருந்த செல்வாக்கு அனைத்தையும் இழந்து விட்டது.—240.

59 *1918* டிசம்பர் *30*ந் தேதி நடந்த ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் காங்கிரஸ் தேசிய சட்டசபைக்கான தேர்தல் களில் பங்கேற்பது சம்பந்தமான பிரச்சினையை விவாதித் தது. கார்ல் லீப்க்னெஹ்டும் ரோசா லுக்சம்பூர்கும் இவ் வாறு பங்கேற்பதை ஆதரித்தார்கள். மக்கள் திரள் மத் தியில் புரட்சிகரமான கோஷங்களைப் பரப்ப நாடாளுமன்ற மேடையைப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை எடுத் துக் காட்டினார்கள். ஆனால் காங்கிரஸ் பெரும்பான்மை தேர்தல்களில் கலந்து கொள்வதை எதிர்த்து அந்த முடி வை நோக்கிய ஒரு தீர்மானத்தை அங்கீகரித்தது.—*244*.

60 **இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்** — இடதுசாரி சோஷ லிஸ்டுப் புரட்சியாளர் (சர்வதேசியவாதிகள்) கட்சி யின் உறுப்பினர்கள். இக்கட்சி *1917* நவம்பர் *19-28* (டிசம்பர் *2-11*)ல் நடந்த அதன் அனைத்து ருஷ்யக் காங் கிரசில் நிறுவன வடிவம் பெற்றது. இதற்கு முன்பு இவர் கள் சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியில் இடதுசாரி யாகச் செயல்பட்டு வந்தார்கள். ஏகாதிபத்திய உலகப் போரின் போது இந்த இடதுசாரிப் பிரிவு உருவாகியது.

இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் சோவியத் துகளின் இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் எல்லா முக்கியப் பிரச்சினைகளிலும் போல்ஷிவிக்குகளுடன் சேர்ந்து வாக்களித்தார்கள். சோஷலிஸ்டுப் புரட்சியாளர் களின் கட்சியுடன் ஒரு கூட்டணி அமைப்பது அவசியம் என்று போல்ஷிவிக்குகள் கருதினார்கள். ஆயினும் சோவியத் அரசாங்கத்தில் பங்கேற்றுக் கொள்ளுமாறு அவர்கள் போல்ஷிவிக்குகள் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள்.

மிகுந்த ஊசலாட்டத்திற்குப் பிறகு விவசாயிகளி டையே தமது செல்வாக்கைக் காத்துக் கொள்ள விரும்பி இவர்கள் போல்ஷிவிக்குகளுடன் உடன்பாட்டுக்கு வந்து மக்கள் கமிசார் அவையில் இடங்கள் பெற்றனர்.

போல்ஷிவிக்குகளுடன் சேர்ந்து பணியாற்ற வந்த இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் சோஷலிச நிர்மாணத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் பலவற்றில் அவர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு எதிராகப் போராடினர்.

1918 ஜனவரி-பிப்ரவரியில் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் மத்தியக் கமிட்டி பிரேஸ்த் சமா தான உடன்படிக்கைக்கு எதிராகப் போராட்டம் துவக் கியது. உடன்பாடு கையெழுத்தாகி *1918* மார்ச்சில் சோவி

யத்துக்களின் நான்காவது காங்கிரசால் அங்கிகரிக்கப்பட்ட பிறகு இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் மக்கள் கமிசார் அவையில் இருந்து வெளியேறினுர்கள். ஆயினும் மக்கள் கமிசார் அவையின் குழுக்களிலும் மற்றும் வட்டார ஆட்சி உறுப்புக்களிலும் அவர்கள் தொடர்ந்து செயல்பட்டு வந்தார்கள். கிராமங்களிலும் சோஷலிசப் புரட்சி வளர்ச்சியுற்ற போது இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் மத்தியில் சோவியத்—எதிர்ப்பு உணர்ச்சிகள் அதிகமாயின. *1918* ஜூலையில் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் மத்தியக் கமிட்டி மாஸ்கோவில் இருந்த ஜெர்மன் தூதரைக் கொலை செய்ய ஏற்பாடு செய்தது. இதன் மூலம் சோவியத் ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையில் ஒரு போரைத் துவக்கிவிட அது முயன்றது. சோவியத் அரசுக்கு எதிராக ஆயுதந்தாங்கிய கலகம் ஒடுக்கப்பட்ட பிறகு சோவியத்துக்களின் ஐந்தாவது அனைத்து ருஷ்யக் காங்கிரஸ் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களில் அக்கட்சித் தலைமையின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர்களை சோவியத்துகளில் இருந்து வெளியேற்றுவது என்று முடிவு செய்தது. மக்கள் திரளிடையே இருந்த சகல ஆதரவையும் இழந்து விட்ட இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் சோவியத் ஆட்சியை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடினர். சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களில் சிலர் போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைக்க விரும்பினர். இவர்கள் ''நரோத்னிக்-கம்யூனிஸ்டுகள் கட்சி'', ''புரட்சிகர கம்யூனிஸ்டுகள் கட்சி'' ஆகியவற்றை நிறுவினர். பின்னுல் இவர்களில் கணிசமான பகுதியினர் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தனர்.—*252*.

61 *Il Soviet*—இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் செய்திப் பத்திரிகை. *1918* முதல் *1922* வரை நேபிள்ஸில் இருந்து வெளியிடப்பட்டது. *1920*ல் இது சோஷலிஸ்டுக் கட்சியில் இருந்த கம்யூனிஸ்டு-நடுநிலைவாதிகள் பிரிவின் ஏடாக வெளிவரத் தொடங்கியது.—*259*.

62 *Comunismo* (''கம்யூனிசம்'')— இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சியின் மாதம் இருமுறை சஞ்சிகை. இது ஜியாச்சின்டோ செராட்டியை ஆசிரியராகக் கொண்டு *1919* முதல் *1922* வரை மிலானில் வெளியிடப்பட்டது. —*259*.

63 இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி *1892*ல் தோற்றுவிக்கப் பட்டது. துவக்க நாள் முதலே கட்சிக்குள் இருந்த புரட்சி

கரப் போக்கினர் மற்றும் சந்தர்ப்பவாதிகளுக்கு இடையே கடுமையான சித்தாந்தப் போராட்டம் நடந்து வந்தது. ருஷ்யாவில் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி நிகழ்ந்த பிறகு இ.சோ.க. இடதுசாரிப் பிரிவு வலுவடைந்தது. *1919* அக்டோபர் *5-8* தேதிகளில் போலோனியாவில் நடந்த கட்சியின் *16*ஆவது காங்கிரசில் மூன்றுவது அகிலத்துடன் இணைந்து கொள்வது எனும் தீர்மானத்தை ஏற்றது. கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாம் காங்கிரசில் இ.சோ.க. பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். காங்கிரசுக்குப் பிறகு பிரதிநிதிக் குழுவின் தலைவர் மையவாதி செராட்டி சீர்திருத்தவாதிகளுடன் முறித்துக் கொள்வதை எதிர்த்தார். *1921* ஜனவரியில் லிவோர்னே எனும் இடத்தில் நடந்த கட்சியின் *17*ஆவது காங்கிரசில் பெரும்பான்மையாக இருந்த மையவாதிகள் சீர்திருத்தவாதிகளிடம் இருந்து முறித்துக் கொள்ள மறுத்தனர், கம்யூனிஸ்டு அகிலத்தில் சேருவதற்கான எல்லா நிபந்தனைகளையும் ஏற்க மறுத்தனர். ஜனவரி *21*ந் தேதி இடதுசாரி பிரதிநிதிகள் காங்கிரசில் இருந்து வெளி நடப்புச் செய்து இத்தாலிய கம்யூனிஸ்டுக் கட்சியைத் தோற்றுவித்தனர்.—*259*.

64 பிளான்கிவாதம்—புகழ்வாய்ந்த புரட்சி வீரரும் பிரெஞ்சுக் கற்பனுவாதக் கம்யூனிசத்தின் பிரபல பிரதிநிதியுமான லூயீ ஔகுஸ்ட் பிளான்கி [Blanqui] *(1805—1881)* தலைமை தாங்கிய பிரெஞ்சு சோஷலிச இயக்கத்தில் ஒரு போக்கு.

''கூலி அடிமை நிலையில் இருந்து மனித இனத்தை விடுவிப்பதற்கான பாதை பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம் அல்ல. சிறு பான்மையினரான அறிவுத் துறையினரின் சிறு குழுவின் சூழ்ச்சிகளே'' என்று பிளான்கிவாதிகள் கருதினர்கள். (லெனின்.) புரட்சிகரக் கட்சியின் பணிகளுக்குப் பதிலாய் இரகசியச் சதிகாரக் குறுங்குழுவின் செயற்பாட்டை ஆதரித்த இவர்கள் எழுச்சியின் வெற்றிக்கு அவசியமான பிரத்தியேக நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. பிளான்கிவாதிகள் வெகுஜனங்களுடனை தொடர்புகளைப் புறக்கணித்தார்கள்.—*260*.

65 *Der Volksstaat* (''மக்கள் அரசு'')—ஜெர்மன் சமூக-ஜனநாயக (ஐஸனுஹ் கட்சி) கட்சியின் மத்திய ஏடு. *1869-76*ல் லைப்ஸிக்கில் இருந்து வில்ஹெல்ம் லீப்க்னெஹ்டை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது. மார்க்சும் எங்கெல்சும் இந்தப் பத்திரிகையுடன் ஒத்துழைத்தார்கள். —*261*.

66 இங்கு லெனினுல் குறிப்பிடப்படுவது *1886*ல் நவம்பர் *29*ல் எங்கெல்ஸ் பி.அ. ஸெர்கேக்கு எழுதிய கடிதத்தில் இருக்கும் ஒரு வாசகம் ஆகும். அதில் அவர் அமெரிக்காவில் நாடு கடந்து வாழ்ந்து வந்த ஜெர்மன் சமூக-ஜனநாயக வாதிகளின் செயல்களின் செக்டேரியன் தன்மையை விமர்சித்து அவர்களுக்கு ''தத்துவம் ஒரு Credo நம்பிக்கை விதியே தவிர செயலுக்கு வழி காட்டி அல்ல'' என்று எழுதினர். — *268*.

67 அமெரிக்கப் பொருளியலாளர் கி. காரி எழுதியுள்ள ''அமெரிக்க அதிபருக்கு அரசியல்-பொருளாதாரக் கடிதங்கள்'' எனும் புத்தகத்தைப் பற்றிய தமது மதிப்பாய்வில் நி.க. செர்னிஷெவ்ஸ்கி எழுதியதாவது: ''வரலாற்றின் பாதை நெவ்ஸ்கி நெடுஞ்சாலையின் நடைபாதை போன்றதல்ல; அது அழுக்கும் மண்ணும் சார்ந்த வயல்கள் ஊடே, சதுப்பு நிலங்கள் மற்றும் அடர்ந்த காடுகளின் ஊடே முழுமையாகக் கடந்து செல்வதாகும். புழுதியால் மூடப்படுவோம், காலணி மண்ணில் அழுக்காகி விடும் என்று அஞ்சுகிற எவரும் பொது வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம்.''—*268*.

68 இங்கு குறிப்பிடப்படுவது ஸிம்மர்வால்டு மற்றும் கின்தால் (சுவிட்சர்லாந்து) சர்வதேச சோஷலிஸ்டு மாநாடுகள் ஆகும்.

ஸிம்மர்வால்டு அல்லது முதலாவது சர்வதேச சோஷலிஸ்டு மாநாடு *1915*ல் செப்டம்பர் *5-8* தேதிகளில் நடந்தது.

கின்தால் அல்லது இரண்டாவது சர்வதேச சோஷலிஸ்டு மாநாடு *1916*ல் ஏப்ரல் *24-30* தேதிகளில் நடந்தது.

இந்த இருமாநாடுகளும் மேற்கு ஐரோப்பிய சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரி நபர்களின் ஒற்றுமைக்கும் அவர்களது மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் லட்சிய அடிப்படைக்கும் பங்குப்பணி ஆற்றின.—*270*.

69 ''வோல்யா த்ரூதா'' பத்திரிகை ஆதரவாளர்கள் பிரிவின் காங்கிரசில் புரட்சிகரக் கம்யூனிஸ்டுக் கட்சி ஸ்தாபன ரீதியாக உருவாக்கப்பட்டது. இந்தக் காங்கிரஸ் மாஸ்கோவில் *1918*ல் செப்டம்பர் *25-30* தேதிகளில் நடைபெற்றது. காங்கிரசின் முடிவுகளில் இந்தப் புதிய கட்சி ''போல்ஷிவிக்குகளுடன் மெய்யான, மனப்பூர்வமான ஒத்துழைப்புக்கான'' கொள்கையை மேற்கொள்ளும் என்று கூறப்பட்டது. புரட்சிக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக்

கமிட்டியில் அ. அலெக்சாந்த்ரவ், மி. தொப்ரகோதவ், அ. கலெகாயெவ் மற்றும் பிறர் இடம் பெற்றிருந்தனர். 1920 வரை ''புரட்சிக் கம்யூனிஸ்டுக் கட்சி'' ஒரு சிறிய பிரிவாக இருந்தது. 1920ல் செப்டம்பரில் நடந்த இக்கட்சியின் ஆருவது காங்கிரஸ் ரு.க.க. (போ.)இல் சேருவது பற்றிய முடிவு எடுத்தது. 1920ல் அக்டோபரில் ரு.க.க. (போ.)இன் மத்தியக் கமிட்டி தனது கட்சி நிறுவனங்கள் முன்னுள் புரட்சிக் கம்யூனிஸ்டுகளே உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள அனுமதித்தது.—270.

70 **பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி (பி.சோ.க.)** சமூக-ஜனநாயகக் கட்சி இதர சோஷலிஸ்டுப் பிரிவுகளுடன் ஒன்று சேர்ந்ததன் விளைவாக 1911ல் மான்செஸ்டரில் நிறுவப்பட்டது. பி.சோ.க. மார்க்சிய உணர்வில் கிளர்ச்சி நடத்தியது, லெனின் குறிப்பிட்டது போன்று ''இது சந்தர்ப்பவாதக் கட்சியல்ல, மிதவாதிகள் இடமிருந்து உண்மையிலேயே சுதந்திரமானதாக இருந்தது'' (''நூல்கள் திரட்டு,'' தொகுதி 19, பக்கம் 273).

பி. சோ.க. ருஷ்யாவில் நடந்த அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியை வரவேற்றது. அன்னியத் தலையீட்டில் இருந்து சோவியத் ருஷ்யாவைப் பாதுகாப்பதற்கான இயக்கத்தில் இக்கட்சியின் உறுப்பினர்கள் மாபெரும் பங்கு வகித்தனர். 1919ல் இக்கட்சி நிறுவனங்களில் பெரும்பாலானவை (98 ஆதரவு, 4 எதிர்ப்பு) கம்யூனிஸ்ட் அகிலத்துடன் இணைவதை ஆதரித்தன. கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தோற்றுவிப்பதில் பி.சோ.க. கம்யூனிஸ்டு ஒற்றுமைப் பிரிவுடன் சேர்ந்து முக்கிய பங்கு வகித்தது. 1920ல் நடந்த முதல் ஒற்றுமைக் காங்கிரசில் பி.சோ.க.வின் மிகப் பெரும்பாலான வட்டார நிறுவனங்கள் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தன.—279.

71 **சோஷலிஸ்டுத் தொழிற் கட்சி**—இது 1903ல் சமூக-ஜனநாயக சம்மேளனத்தில் இருந்து விலகிச் சென்ற இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் பிரிவால் ஸ்காட்லாந்தில் தோற்றுவிக்கப்பட்ட புரட்சிகர மார்க்சிய நிறுவனமாகும். இதன் உறுப்பினர்களில் கணிசமானவர்கள் ஸ்காட் இனத்தவராவர்.

தெற்கு வேல்ஸ் சோஷலிஸ்டுக் கழகம்—இது பிரதானமாயும் புரட்சி மனப்பான்மையுடைய வெல்ஷ் சுரங்கத் தொழிலாளர்களைக் கொண்ட சிறு பிரிவாகும். இது நிலக்கரிச் சுரங்கத் தொழிலில் சீர்திருத்தம் கோரிய இயக்கத்தின் போது தனது நடவடிக்கைகளைத் தொடங்கியது.

முதல் உலகப் போர் தருணத்தில் இது ஏற்கெனவே பலம் அடைந்திருந்தது.

தொழிலாளர் சோஷலிஸ்டுச் சம்மேளனம்—இது 1918ல் மே மாதத்தில் ''மாதர் வாக்குரிமைக் கழகத்தில்'' இருந்து தோற்றமளித்த சிறிய அமைப்பாகும். இதில் மாதர்களே பெரும்பாலும் உறுப்பினர்கள்.

செக்டேரியன் பிழைகளைப் புரிந்த இந்த மூன்று அமைப்புகளும் கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேரவில்லை. காரணம், 1920ல் ஜுலை 31, ஆகஸ்டு 1ந் தேதி நடைபெற்ற துவக்க காங்கிரசில் நிறுவப்பட்ட இக்கட்சியின் வேலைத்திட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல்களில் கட்சி பங்கேற்பது பற்றியும் தொழிற் கட்சியுடன் இணைந்து கொள்வது பற்றியும் ஒரு ஷரத்து இருந்தது. 1921ல் ஜனவரியில் தெற்கு வெல்ஸ் சோஷலிஸ்டுக் கழகம், கம்யூனிஸ்டு கட்சி (மூன்றும் அகிலத்தின் பிரிட்டிஷ் பகுதி) எனும் பெயர் சூடிக் கொண்ட தொழிலாளர் சோஷலிஸ்டு சம்மேளனமும் கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்டு கட்சியுடன் ஒன்றிணைந்தன. சோஷலிஸ்டு தொழிலாளர் கட்சித் தலைவர்கள் சேர மறுத்தனர்.—279.

72 *Workers' Dreadnought* எனும் பத்திரிகை 1914 மார்ச் முதல் 1924ல் ஜூன் வரை லண்டனில் வெளியிடப்பட்டது. 1917 ஜூலை வரை இது *Women's Dreadnought* எனும் பெயரில் வந்தது. 1918ல் ''தொழிலாளர் சோஷலிஸ்டு சம்மேளனம்'' நிறுவப்பட்ட போது இந்தப் பத்திரிகை அதன் பிரசார ஏடாகியது.—279.

73 *The Manchester Guardian*—1821ல் தோற்றுவிக்கப்பட்ட ஒரு முதலாளித்துவ-மிதவாத செய்திப் பத்திரிகை. மிகவும் ஜனப்பிரியமான, செல்வாக்குள்ள பிரிட்டிஷ் முதலாளித்துவச் செய்திப்பத்திரிகை.—285.

74 **டிரைஃபஸ் வழக்கு**—பிரெஞ்சு ராணுவத் தலைமையகத்தின் அதிகாரியான டிரைஃபஸ் எனும் யூதர் மீது, பிரெஞ்சு ராணுவவெறி பிற்போக்கு முடியாட்சிவாதி வட்டத்தினர் வேண்டுமென்றே 1894ல் தொடுத்த ஒரு பொய்வழக்கு. அன்னிய நாட்டுக்காக வேவுபார்த்ததாயும் அரசுக்கு துரோகம் செய்ததாயும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இராணுவ நீதிமன்றம் அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது. 1899ல் பொதுஜன நிர்ப்பந்தத்தின் விளைவாக டிரைஃபஸ் மன்னிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். ஆனுல் 1906ல் தான் மனு நீதிமன்றம் அவரைக் குற்ற

மற்றவர் என்று தீர்ப்பளித்தது, சேனையில் இழந்த உரிமைகளை அவர் மீண்டும் பெற்றார்.—*313*.

75 *Die Rote Fahne* (''செங்கொடி'')—ஸ்பார்த்தகஸ் கழகத்தின் மத்திய ஏடாக கார்ல் லீப்க்னெஹ்ட் மற்றும் ரோசா லுக்சம்பூர்க்கால் தோற்றுவிக்கப்பட்ட செய்திப் பத்திரிகை. பின்னால் இது ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய ஏடு ஆயிற்று. *1918*ல் நவம்பர் *9* முதல் இது வெளிவரலாயிற்று. ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் அவைத் தலைவர் ஏ.தெல்மன் இப்பத்திரிகையின் பணிகளில் செயலூக்கமுடன் ஒத்துழைத்தார். பாசிஸ்டு சர்வாதிகாரம் நிறுவப்பட்ட பிறகு *Die Rote Fahne* ஒடுக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து சட்டவிரோதமாக வெளிவந்தது. *1935*ல் அதன் வெளியீடு பிராக் நகருக்கு மாற்றப்பட்டது. *1936*ல் அக்டோபர் முதல் *1939*ல் முன்பனிக் காலம் வரை இது பிரஸ்ஸெல்சில் வெளிவந்தது.—*328*.

76 அவுகியஸ் இலாயங்கள்—கிரேக்க புராணத்தில் வரும் அவுகியஸ் எனும் மன்னரின் அழுக்கு மண்டிக் கிடந்த இலாயங்கள். ஹெராக்லஸ் எனும் இதிகாச வீரன் இவற்றை ஒரே நாளில் துப்புரவாக்கினான். இந்தத் தொடர் அலுவல்களில் குழப்பத்தையும் ஒழுங்கின்மையையும் உண்டாக்குவதைக் குறிப்பதாகும்.—*330*.

77 *Die Rote Fahne* (''செம் பதாகை'')—ஒரு செய்திப் பத்திரிகை, ஆஸ்திரிய கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய ஏடு. *1918*ல் நவம்பர் முதல் வியன்னாவில் இருந்து வெளிவந்தது. முதலில் *1919*ல் ஜனவரி முதல் *Der Weckruf* (''அழைப்பு'') எனும் தலைப்பிலும், *1919*ல் ஜூலை முதல் *Die Rote Fahne* எனும் தலைப்பிலும் வெளிவந்தது. *1933*ல் *Die Rote Fahne* சட்டவிரோதமாக வெளிவர வேண்டி இருந்தது. *1945*ல் ஆகஸ்டு முதல் இது *Österreichische Volksstimme* (''ஆஸ்திரியாவின் மக்கள் குரல்'') எனவும் *1957*ல் பிப்ரவரி முதல் *Volksstimme* (''மக்கள் குரல்'') எனும் பெயரிலும் வெளிவந்தது.—*330*.

78 *Die Freiheit* (''விடுதலை'')—தினசரிப் பத்திரிகை, ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் ஏடு. *1918*ல் நவம்பர் முதல் *1922*ல் அக்டோபர் வரை பெர்லினில் வெளிவந்தது.—*331*.

79 சோவியத் வழக்குரைஞர்—*1918*ல் பிப்ரவரியில் தொழிலாளர், விவசாயிகள், படையாளிகள் மற்றும் கசாக் பிர

திநிதிகள் சோவியத்துகளின் கீழ் நிறுவப்பட்ட வழக்குரைஞர் கூட்டமைப்பு. பல கூட்டமைப்புகளில் முதலாளித்துவ வழக்குரைஞர் செல்வாக்கு பலமாக இருந்தது. இவர்கள் சோவியத் சட்ட நடைமுறை அடிப்படைகளை வக்கிரமாகப் புரட்டித் துஷ்பிரயோகம் செய்தனர். 1920ல் அக்டோபரில் இந்தக் கூட்டமைப்புகள் ஒழிக்கப்பட்டன.—338.

80 வி.இ. லெனின் நூல்கள் ஐந்தாம் பதிப்பிலும் இந்தத் தொகுப்பிலும் தரப்பட்ட நெறிமுறைப்படி '' 'இடது சாரி'' கம்யூனிசம்—இளம் பருவக் கோளாறு'' என்ற நூலின் வாசகத்தில் ''டச்சு ட்ரிப்யூன்வாதிகளுக்கு'' பதில் ''ஹாலந்து கம்யூனிஸ்டுக் கட்சியின் சில உறுப்பினர்கள்'' எனும் வாசகம் மாற்றாகத் தரப்பட்டுள்ளது.—342.

அக்செல்ரோத் [Axelrode], பாவெல் பரீசவிச் *(1850-1928)*—மென்ஷிவிக் தலைவர். முதல் உலகப் போரின் போது தமது மெய்யான சமூக-தேசியவெறி நிலை பாட்டை மூடி மறைக்க அமைதிவாதத் தொடர்களைப் பயன்படுத்தினர். *1917*ல் பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தை ஆதரித்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கு பகைமை காட்டி வெளிநாட்டுக்கு ஓடினர். சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான ஆயுதத் தலையீடை பகிரங்கமாக ஆதரித்தார்.—*269*.

அயர் [Eire], லிங்கன்—அமெரிக்க முதலாளித்துவ செய்திப் பத்திரிகையான *The World* என்பதன் நிருபர்.—*137-145*.

அஸ்குவித் [Asquith], ஹேர்பர்ட் ஹென்ரி *(1852—1928)*—பிரிட்டிஷ் அரசியலாளர், அரசறிஞர், மிதவாதக் கட்சியின் தலைவர். பலதடவை அமைச்சர் பதவி வகித்தவர். *1908* முதல் *1916* வரை அரசாங்கத்தின் தலைவராக இருந்தார். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கம் மற்றும் அதன் பிரதேசக் கைப்பற்றல் நலன்களின் ஆதரவாளர். தொழிலாளி வர்க்கம் மற்றும் விடுதலை இயக்கத்தை எதிர்த்து அடக்குமுறைக் கொள்கையை அமுல் நடத்தினர்.—*285, 293*.

ஆட்லெர் [Adler], பிரெடெரிக் *(1879—1960)*—ஆஸ்திரியன் சமூக-ஜனநாயகவாதிகள் தலைவர்; ஆஸ்திரியாவில் *1918*ல் நடந்த புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டார், மையவாத இரண்டரையாவது அகிலத்தின் நிறுவகர்களில் ஒருவர் *(1921—1928)*; பின்

னர் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம் எனப்படுவதன் தலைவருள் ஒருவர்.—*68, 184, 198, 210.*

ஆஸ்டர்லித்ஸ் [Austerlitz], பிரெடெரிக் *(1862—1931)*— ஆஸ்திரிய சமூக-ஜனநாயகக் கட்சியின் ஒரு தலைவர், அதன் மத்திய ஏடான *Arbeiter-Zeitung* இன் பிரதம ஆசிரியர், வியன்னுவில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினரானுர்; முதல் உலகப் போரின் போது சமூக-தேசிய வெறி நிலை மேற்கொண்டார்.—*198.*

இன்க்பின் [Inkpin], ஆல்பர்ட் *(1884—1944)*—பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பங்கேற்றவர். *1904*ல் சமூக-ஜனநாயக சம்மேளனத்தில் சேர்ந்தார். *1913*ல் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சமூக-தேசியவெறியர் ஹைண்ட்மன் கும்பலை எதிர்த்தார். பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியின் *(1920)* நிறுவகர்களில் ஒருவர். *1920—1929*ல் கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலர்.—*288.*

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் *(1820—1895)*—*10, 14, 34, 83, 205, 219, 237, 260, 261, 268.*

எர்லெர், க.—லௌபென்பெர்க், ஹென்ரிஹ் பார்க்க.

ஃபோஷ் [Foch], ஃபெர்டினுண்டு *(1851—1929)*—பிரெஞ்சு ராணுவப் பிரமுகர், மார்ஷல். முதல் உலகப் போரின் போது பிரெஞ்சுப் படைகளின் தலைமைத் தளபதி. பிரான்சின் ராணுவத் தலைமைப் பிரிவின் தலைவர். அன்டான்டு படைப் பிரிவுகளின் உயர் தலைமைத் தளபதி. *1918—1920*ல் சோவியத் ருஷ்யாவை எதிர்த்து தீவிரமான ராணுவத் தலையீட்டை ஏற்பாடு செய்தார். நேச நாடுகள் உயர் ராணுவக் கவுன்சிலின் தலைவர் வெர்சேய் உடன்படிக்கையை உருவாக்கியவர்களில் ஒருவர்.—*137, 142.*

கர்னீலவ் [Kornilov], லாவ்ர் கியோர்கியெவிச் *(1870—1918)*—ஜாராட்சி ஜெனரல், முடியாட்சிவாதி. *1917* ஜூலை -ஆகஸ்டில் ருஷ்யன் சேனையின் தலைமை தளபதி. ஆகஸ்டில் எதிர்ப்புரட்சிக் கலகத்துக்குத் தலைமை தாங்கினுர். கலகம் ஒடுக்கப்பட்டு கைது செய்யப்பட்ட பிறகு இவர் தோன் பிரதேசத்திற்குத் தப்பி ஓடினுர். ''வெண் காவலர் படையை'' திரட்டி அதன் தலைமை தளபதியானுர். எக்கத்தெரீனதார் அருகே போராடும் போது கொல்லப்பட்டார்.—*161, 162, 305, 330.*

கலாஹர் [Gallacher], **வில்லியம்** *(1881—1965)*—பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியப் பிரமுகர். கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவருள் ஒருவர். இடது சாரி செக்டேரியன் தவறுகள் செய்து கம்யூனிஸ்டுகள் முதலாளித்துவ நாடாளுமன்றத்தில் பங்கேற்பதையும் தொழிற் கட்சியில் சேருவதையும் எதிர்த்தார். ஆனால் விமர்சனத்தின் செல்வாக்கின் கீழ் தவறை போக்கிக் கொண்டு செயல்பட்டார். 1921ல் கலாஹர் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார். அதன் மத்தியக் கமிட்டிக்கும் அரசியல் பியூரோவுக்கும் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அதன் அவைத்தலைவராக இருந்தார்.—*280, 283, 284, 286, 297.*

கல்ச்சாக் [Kolchack], **அலெக்சாந்தர் வசீலியெவிச்** *(1873—1920)*—ஜாராட்சி கடற்படைத் தளபதி, முடியாட்சி வாதி. 1918—1919ல் ருஷ்ய எதிர்ப்புரட்சியின் முக்கியத் தலைவரில் ஒருவர். அன்டான்டு நாடுகளின் கையாள். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிரான்சின் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவோடு தம்மைத் தாமே ருஷ்யாவின் ஆட்சித் தலைவர் என்று பிரகடனப்படுத்திக் கொண்டார். ஊரால்ஸ், சைபிரியா மற்றும் தொலை கிழக்குப் பகுதிகளில் ராணுவ முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரத்தின் தலைவராக இருந்தார். செஞ்சேனையின் தாக்குதலும் புரட்சிகரப் போராளித் தொண்டர் இயக்கத்தின் வளர்ச்சியும் கல்ச்சாக் கலகத்தை ஒடுக்கியது; கல்ச்சாக் கைது செய்யப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டார்.—*41, 42, 43, 44, 45, 46, 47, 48, 50, 54, 55, 58, 85, 87, 89, 94, 95, 122, 130, 138, 151, 162, 213, 252.*

காப் [Kapp], **வால்ஃப்காங்கு** *(1858—1922)*—ஜெர்மன் ஜங்கர்கள் மற்றும் ஏகாதிபத்திய ராணுவக் கும்பலின் வட்டாரங்களின் பிரதிநிதி. 1917ல் பிற்போக்கு ''சுதேசிக் கட்சியை'' நிறுவியவர்களில் ஒருவர். 1920 மார்ச்சில் எதிர்ப்புரட்சி ராணுவ-முடியாட்சிவாத அரசுக் கவிழ்ப்புச் சதிக்குத் தலைமை தாங்கினர்.—*305, 309, 328, 330.*

காமெனெவ் (ரோசன்ஃபெல்ட்) [Kamenev (Rosenfeld)], **லேவ் பரீசவிச்** *(1883—1936)*—1901 முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு, சோஷலிஸ்டுப் புரட்சித் திசையிலான கட்சியின் லெனினியப் பாதையை எதிர்த்தார். 1917 அக்

டோபரில் அரை மென்ஷிவிக் பத்திரிகை ''நோவயா ஷீஸ்ன் இல்'' தமது சார்பிலும் ஸினேவியெவின் சார்பிலும் ஆயுதமேந்திய புரட்சி எழுச்சி பற்றிய மத்தியக் கமிட்டித் தீர்மானத்துடனுன தனது மறுப்பை வெளியிட்டார். இது கட்சியின் இரகசிய முடிவை வெளியிடுவதாயும் புரட்சிக்குத் துரோகமாயும் போய் முடிந்தது. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு கட்சியிலும் அரசாங்கத்திலும் முக்கிய பதவிகள் வகித்தார். பல முறை கட்சியின் லெனினியக் கொள்கையை எதிர்த்தார். கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.—*176.*

காவுத்ஸ்கி [Kautsky], கார்ல் *(1854—1938)*—ஜெர்மன் சமூக-ஜனநாயக கட்சி மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். தொடக்கத்தில் மார்க்சியவாதி, பிற்காலத்தில் மார்க்சியத்தை கைவிட்ட ஓடுகாலியானுர். மிகவும் அபாயகரமான கேடுவிளைக்கும் சந்தர்ப்பவாத வகைப்பட்ட மையவாதத்தின் சித்தாந்தி ஆனுர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பாட்டாளி வர்க்கப் புரட்சி, தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம், போல்ஷிவிக் கட்சி சோவியத் அரசு சகலத்தையும் எதிர்த்தார்.—*68, 75, 77, 79, 184, 187, 197, 205, 210, 268, 270, 272, 276, 277, 320, 321, 325, 328, 331.*

கிரிஸ்பின் [Crispien], ஆர்த்தர் *(1875—1946)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவரில் ஒருவர். *1917—1922*ல் ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் வலதுசாரிக்குத் தலைமை வகித்தார். *1920*ல் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் கலந்து கொண்டார். ஜெர்மனி திரும்பிய பின் கம்யூனிஸ்டு அகிலத்தில் சேருவதை எதிர்த்தார். *1922*ல் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியில் மீண்டும் சேர்ந்தார்.—*205, 272, 328, 331.*

கிளெமன்சோ [Clemenceau], ழோர்ழ் பென்ஜமென் *(1841—1929)*—பிரான்சின் அரசியல் மற்றும் அரசுப் பிரமுகர். *1906—1909, 1917—1920* ஆண்டுகளில் பிரெஞ்சு அரசாங்கத்தின் பிரதமர். முதல் உலகப் போரின் போது ஆர்வமிகு தேசியவெறியர். சோவியத் குடியரசுக்கு எதிரான முற்றுகை மற்றும் ஆயுதத் தலையீட்டை ஏற்பாடு செய்து ஊக்குவித்தவருள் ஒருவர்.—*138.*

கிளைன்ஸ் [Clynes], ஜான் ராபர்ட் *(1869—1949)*—ஆங்கில

அரசியல் பிரமுகர். தொழிற் கட்சியின் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது சமூக-தேசியவெறியர். மாக்டானல்டின் தொழிற் கட்சி அரசாங்கத்தில் முத்திரை நாயகம் மற்றும் உள்துறை அமைச்சர் பதவிகளை வகித்தார். தொழிலாளி வர்க்க விரோதக் கொள்கையைச் செயல்படுத்தினர்.—*282, 285.*

கூசெவ் [Gusev], செர்கேய் இவானவிச் *(திராப்கின்) (1874—1933)*—முழுநேரப் புரட்சியாளர், போல்ஷிவிக். *1918—1920ல்* செஞ்சேனையில் அரசியல் பணிகள் புரிந்தார். கட்சியின் வரலாறு, போர் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்துப் பல நூல்களை எழுதியுள்ளார்.—*177.*

கெட்டு [Guesde], ழூல் *(1845—1922)*—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி மற்றும் இரண்டாம் அகிலத்தின் மூலவர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். பிரான்சில் மார்க்சியக் கருத்துக்களைப் பரப்புவதிலும் சோஷலிஸ்டு இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதிலும் பெரும் பணி ஆற்றினர். வலதுசாரி சோஷலிஸ்டுகளின் கொள்கையை எதிர்த்து முன் வந்த இவர் தத்துவார்த்த மற்றும் போர்த்தந்திர பிரச்சினைகளில் செக்டேரியன் தன்மை வாய்ந்த தவறுகளைப் புரிந்தார். முதல் உலகப் போரின் துவக்கம் முதல் சமூக-தேசிய வெறி நிலை மேற்கொண்டு பிரான்சின் முதலாளித்துவ அரசாங்கத்தில் பதவி வகித்தார். *1920ல்* கெட்டு பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் தூர் மாநாட்டில் பெரும் பான்மை முடிவின்படி கம்யூனிஸ்டு அகிலத்துடன் இணைவதை எதிர்த்தார்.—*261, 320.*

கேரென்ஸ்கி [Kerensky], அலெக்சாந்தர் ஃபியோதரவிச் *(1881—1970)*—சோஷலிஸ்டுப் புரட்சியாளர். *1917ல்* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சட்ட, ராணுவ கடற்படை அமைச்சராயும் பிறகு முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் தலைவராயும் தலைமை தளபதியாயும் இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியை எதிர்த்துப் போர் தொடுத்தார். *1918* நாடுவிட்டு வெளியேறினர். —*49, 50, 130, 162, 213, 225, 270, 290, 317.*

கோம்பர்ஸ் [Gompers], சமுயேல் *(1850—1924)*—அமெரிக்கத் தொழிற்சங்க இயக்கத்தின் பிரமுகர். அமெரிக்க தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவருள் ஒருவர். முதலாளிகளுடன் நெருக்கமான ஒத்துழைப்பை ஆதரித்தார்.

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களை எதிர்த்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி மற்றும் சோவியத் அரசிடம் பகைமை கொண்டவர்.—*235, 240.*

சர்ச்சில் [Churchill], வின்ஸ்டன் *(1874—1965)—பிரிட்டிஷ் அரசியல்வாதி, டோரிக் கட்சியினர். 1918—1921ல் போர்த் துறை அமைச்சர். சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக ஆயுதமேந்திய தலையீட்டை ஊக்குவித்தவருள் ஒருவர்.—96, 138, 142, 290, 293, 297, 307.*

செராட்டி [Serrati], ஜியாச்சீன்டோ மேனேட்டி *(1872—1926)—இத்தாலியத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியப் பிரமுகர். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது சர்வதேசியவாதி. ஸிம்மர்வால்டு மற்றும் கீன்தால் மாநாடுகளில் பங்கு பற்றினர். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் இத்தாலியத் தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கினர். சீர்திருத்தவாதிகளுடன் நிபந்தனை இன்றி முறித்துக் கொள்வதை எதிர்த்துப் பேசினர். 1924ல் இத்தாலியன் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார்.—259, 260.*

செரெதா [Sereda], செமியோன் பஃப்னூதியெவிச் *(1871—1933)—பிரபல சோவியத் அரசறிஞர். 1903ல் முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். 1918—1921ல் ரு.சோ. சோ.கூ. குடியரசில் விவசாயத்துறை மக்கள் கமிசார். 1921 முதல் உயர் பொருளாதாரக் கவுன்சில் மற்றும் அரசாங்கத் திட்டக் கமிஷன் தலைமைக்குழு உறுப்பினர். ரு.சோ.சோ.கூ. கு. மத்தியப் புள்ளிவிவர இலாகாவின் உதவி நிர்வாகி, பிறகு தலைமை நிர்வாகி.—114.*

செர்னிஷேவ்ஸ்கி [Chernishevsky], நிக்கலாய் கவ்ரீலவிச் *(1828—1889) — ருஷ்யாவின் புரட்சிகர ஜனநாயகவாதி, விஞ்ஞானி, எழுத்தாளர், இலக்கிய விமர்சகர், ருஷ்யாவின் புரட்சிகர சமூக-ஜனநாயக இயக்கத்தின் தலைசிறந்த முன்னேடிகளில் ஒருவர்.—268.*

செர்னேவ் [Chernov], வீக்தர் மிஹாய்லவிச் *(1876—1952)—சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் தலைவர் மற்றும் தத்துவாளருள் ஒருவர். 1917 மே-ஆகஸ்டு கட்டத்தில் இடைக்கால அரசாங்கத்தில் விவசாயத்துறை அமைச்சர். நிலப்பிரபுக்களின் நிலங்களை எடுத்துக்கொண்ட விவசாயிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் எதிர்ப்புக் கலகங்*

களுக்கு உதவி புரிந்தார். 1920ல் நாட்டை விட்டு வெளியேறினர்.—77, 79, 270.

டெ லியோன் [De Leon], டேனியல் (1852—1914)—அமெரிக்கத் தொழிலாளர் இயக்கப் பிரமுகர். சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் தலைவர், சித்தாந்தவாதி, பொது விவகார எழுத்தாளர். தொழிற்சங்க அமைப்பான உலக ஆலைத் தொழிலாளர் சங்கத்தின் நிறுவகர்களில் ஒருவர்.—237.

டித்ஸ்கென் [Dietzgen], யோசிப் (1828—1888)—தலைசிறந்த ஜெர்மன் தத்துவஞானி; சுயேச்சையாகவே இயக்கவியல் பொருள்முதல்வாதத்திற்கு வந்து சேர்ந்தார். சமூக-ஜனநாயகவாதி.—253.

டிரைஃபஸ் [Dreyfus], அல்ஃபிரேட் (1859—1935)—பிரெஞ்சு ராணுவத் தலைமையில் இருந்த யூத அதிகாரி பொய்யான துரோகக் குற்றம் சாட்டப்பட்டு 1894ல் ஆயுட் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். 1899ல் தொழிலாளர் முற்போக்கு அறிவுஜிவிகள் அவருக்கு ஆதரவாக நடத்திய கிளர்ச்சியின் விளைவாக மன்னிக்கப்பட்டார். 1906ல் பழைய பதவியில் மீண்டும் அமர்த்தப்பட்டார்.—313.

டுராட்டி [Turati], ஃபிலீப்பொ (1857—1932)—இத்தாலிய தொழிலாளர் இயக்கப் பிரமுகர். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் அமைப்பாளரில் ஒருவர், அதன் வலதுசாரி, சீர்த்திருத்தவாதப் பிரிவின் தலைவர். முதல் உலகப் போரின் போது மையவாதி. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியிடம் பகைமை கொண்டிருந்தார். 1922ல் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி பிளவுற்ற பிறகு சீர்த்திருத்தவாத யூனிட்டரியன் சோஷலிஸ்டுக் கட்சிக்குத் தலைமை தாங்கினர்.—197, 260, 331, 333.

திரெவெஸ் [Treves], கிளாவுடியோ (1868—1933)—இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்த்திருத்தவாதத் தலைவரில் ஒருவர். முதல் உலகப் போரின் போது மையவாதி. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியிடம் பகைமை காட்டினர். 1922ல் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி பிளவுற்ற பிறகு சீர்திருத்தவாத யூனிட்டரியன் சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவருள் ஒருவரானர்.—333.

துகோனி [Dugoni], என்ரீக்கோ (1874—1945)—இத்தாலிய சோஷலிஸ்டு; முதல் உலகப் போருக்கு முன்பு டுராட்டி-

திரெவெஸ் சீர்திருத்தவாத கோஷ்டியில் சேர்ந்தார். *1920*ல் சோவியத் ருஷ்யாவுக்கு இத்தாலிய சோஷலிஸ்டுத் தூதுக்குழு உறுப்பினர் என்ற முறையில் வந்தார். இத்தாலி திரும்பிய பின் ருஷ்யப் புரட்சி பற்றிய அவதூருன ஒரு நூலே வெளியிட்டார்.—*333*.

தெனிக்கின் [Denikin], அன்தோன் இவானவிச் *(1872—1947)*—ஜாராட்சி ஜெனரல், அன்னிய ராணுவத் தலையீடு மற்றும் உள்நாட்டுப் போரின் *(1918—1920)* போது ருஷ்யாவின் தெற்குப் பகுதியில் வெண்காவலர் படை பிரதம தளபதி. சோவியத் துருப்புக்களால் இப்படை நசுக்கப்பட்ட பிறகு வெளிநாட்டுக்குச் சென்று குடியேறினர்.—*44, 46, 47 48, 49, 50, 52, 53, 54, 55, 58, 61, 85, 89, 97, 122, 127 130, 131, 138, 151, 162, 176, 213, 225, 227, 252*.

நத்தன்சோன் [Natanson], மார்க் அந்திரேயெவிச் *(1850—1919)*—புரட்சிகர நரோத்னிக், பிறகு சோஷலிஸ்டுப் புரட்சியாளர்; *1869* முதல் புரட்சி இயக்கத்தில் பங்கு கொண்டார். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சி அமைப்பாளரில் ஒருவர். *1918*ல் சோவியத் ஆட்சிக்கு எதிரான இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கலகத்தைக் கண்டித்தார்.—*270*.

நான்சன் [Nansen], ஃபிரித்தியப் *(1861—1930)*—நார்வேஜிய விஞ்ஞானி. ஆர்க்டிக்கில் ஆய்வுப் பயணம் நடத்தியவர். பொதுவாழ்வுப் பிரமுகர். பல்வேறு நாடுகளின் ராணுவக் கைதிகள் நிலைமையை மேம்படுத்த முதல் உலகப் போரின் போது பாடுபட்டார். போருக்குப் பின் சர்வதேச சங்கத்தில் ராணுவக் கைதிகள் பற்றிய சுப்ரீம் கமிசார். *1921*ல் ருஷ்யப் பஞ்சத்தின் போது பட்டினி கிடப்போருக்கு உதவ சர்வதேசக் கமிஷனே நிறுவினர். *1922*ல் நோபல் சமாதானப் பரிசு பெற்ருர்.—*104*.

நிக்கலாய் இரண்டாவது [Nickolas II], [ரமானவ்] *(1868—1918)*—கடைசி ருஷ்யப் பேரரசர். *1894* முதல் *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி வரையில் அரசாண்டார்.—*206, 207*.

நோஸ்கே [Noske], குஸ்தாவ் *(1868—1946)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் சந்தர்ப்பவாதத் தலைவருள் ஒருவர். *1918*ல் ஜெர்மனியில் நடைபெற்ற நவம்பர் புரட்சி

யின் போது கீல் கடற்படையாளர் புரட்சி இயக்கத்தை அடக்கியவருள் ஒருவர். *1919—1920*ல் இராணுவ அமைச்சர், பெர்லின் தொழிலாளர்களைப் பழிவாங்குதல், கா. லீப்க்னெஹ்ட், ரோசா லுக்சம்பூர்க் படுகொலை ஆகியவற்றை ஏற்பாடு செய்தவர்.—*198, 281, 285, 319.*

பத்ரேசவ் [Potresov], அலெக்சாந்தர் நிக்கலாயெவிச்(*1869—1934*)—மென்ஷிவிக் தலைவரில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு நாடுவிட்டுச் சென்றார். வெளிநாட்டில் இருந்தபடி சோவியத் ருஷ்யாவைத் தாக்கினார். —*269.*

பாபுஷ்கின் [Babushkin,] இவான் வசிலியெவிச் (*1873—1906*) —போல்ஷிவிக், தொழிலாளி, முழுநேரப் புரட்சியாளர்; தொழிலாளி வர்க்க விடுதலை செயின்ட் பீட்டர்ஸ்பர்க் போராட்டக் கழகத்தின் தீவிர உறுப்பினர்; லெனினிய செய்திப் பத்திரிகையான ''இஸ்க்ராவை'' நிறுவுவதில் பங்கேற்றார். *1905-07* புரட்சியில் செயலூக்கமான பங்கு வகித்தார்; துப்பாக்கிகளை இரகசியமாகக் கடத்தி வந்த போது ஜாராட்சி தண்டனைப் படைப் பிரிவினரால் பிடிக்கப்பட்டு, விசாரணை இன்றிச் சுட்டுக் கொல்லப் பட்டார்.—*241.*

பான்க்ஹெர்ஸ்ட் [Pankhurst], சில்வியா எஸ்தேல்லா (*1882—1960*)—பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கப் பிரமுகர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ருஷ்யா மீதான ராணுவத் தலையீட்டை எதிர்த்தார். இடது சாரி தொழிலாளர் சோஷலிஸ்டுச் சம்மேளனத்தின் தலைவர். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாம் காங்கிரசில் பங்கேற்றார். *1921*ல் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார். கட்சிக் கட்டுப்பாட்டினை ஏற்க மறுத்ததற்காக விரைவில் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.—*280, 285, 288, 289, 297.*

பிளான்கி [Blanqui], லுயீ ஔகுஸ்ட் (*1805—1881*)—தலைசிறந்த பிரெஞ்சு புரட்சியாளர், கற்பனாவாதக் கம்யூனிசத்தின் முக்கிய பிரதிநிதி. பல இரகசியப் புரட்சி சங்கங்களுக்குத் தலைமை தாங்கினார். புரட்சிகர சதியாளர்களின் சிறு குழு மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்று கருதிய இவர் புரட்சிகரப் போராட்டத்தில் மக்கள் திரளின் ஸ்தாபனம் வகிக்கும் நிர்ணயமான பாத்திரத்தைப் புரிந்து கொள்ளவில்லை.—*260, 299.*

பிளெஹானவ் [Plekhanov], கியோர்கி வலென்தீனவிச் *(1856——1918)*—ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைசிறந்த பிரதிநிதி. ருஷ்யாவில் முதன் முதலில் மார்க்சியத்தைப் பரப்பியவர். ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிறகு (1903ல்) சந்தர்ப்பவாதத்துடன் இணக்கவாத நிலையை அனுசரித்தார். பிற்பாடு மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து கொண்டார். முதலாவது உலகப் போரின் போது (1914-18) சமூக-தேசியவெறியராக இருந்தார்.

1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் மென்ஷிவிக்கு பாதுகாப்புவாதிகளின் தீவிர வலதுசாரி (''எதின்ஸ்துவோ'') குழுவுக்குத் தலைமை தாங்கினர். போல்ஷிவிக்குகளையும் சோஷலிஸ்டுப் புரட்சியையும் எதிர்த்துப் பிரசாரம் செய்தார். சோஷலிசத்திற்கு மாறிச் செல்ல ருஷ்யா இன்னும் பக்குவம் அடையவில்லை என்று கருதினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் பால் எதிர்மறைப் போக்கை மேற்கொண்டார். ஆனல் சோவியத் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் சேரவில்லை.—*204, 269, 312, 320.*

புல்லிட் [Bullitt], வில்லியம் கிரிஸ்தியன் *(பிறப்பு: 1891)*—பிற்போக்கு அமெரிக்க பத்திரிகையாளர், அரசுத்துறையாளர், சோவியத்-எதிர்ப்புக் கொள்கையைத் தூண்டியவர். *1919*ல் அவர் விசேஷப் பணி மேற்கொண்டு சோவியத் ருஷ்யாவுக்கு வில்சனுலும் லாயிட் ஜார்ஜாலும் அனுப்பி வைக்கப்பட்டார்.—*104.*

புஹாரின் [Bukharin] நிக்கலாய் இவானவிச் *(1888—1938)*—பொதுவிவகார எழுத்தாளர், பொருளியலாளர், 1906 முதல் ரு.ச.ஜ.தொ. கட்சியின் உறுப்பினர்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு ''பிராவ்தா'' செய்திப் பத்திரிகையின் ஆசிரியர். மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோ உறுப்பினர். கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். பல முறை கட்சியின் லெனினியக் கொள்கையை எதிர்த்தார். 1918ல் இடதுசாரி கம்யூனிஸ்டுகளின் கட்சி எதிர்ப்புப் பிரிவுக்குத் தலைமை வகித்தார். தொழிற்சங்கங்கள் பற்றிய விவாதத்தில் (1920—1921) முதலில் இடைத்தட்டு நிலை மேற்கொண்டார், பிறகு திரோத்ஸ்கியின் பிரிவில் சேர்ந்தார். 1928 முதல் கட்சியின் வலதுசாரித் திரிபுப் போக்கின் தலைவர். 1937ல் கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.—*208.*

பூல் [Poole], டியுவித் கிலின்தன் *(1885—1952)*—அமெரிக்க அரசுத்துறையாளர். *1917* ஜூலை முதல் மாஸ்கோவில் கான்சல். *1918* நவம்பர் முதல் *1919* ஜூன் வரை வடக்கு பிராந்திய வெண்காவலர் இடைக்கால அரசாங்கத்தில் அமெரிக்க பொறுப்பு அதிகாரி. சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான அன்டான்டு நாடுகள் தலையீட்டையும் உள்நாட்டில் எதிர்ப்புரட்சிச் செயல்களையும் ஏற்பாடு செய்தவருள் ஒருவர்.—*104*.

பெபெல் [Bebel], ஔகுஸ்ட் *(1840—1913)*—ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கம் மற்றும் இரண்டாம் அகிலத்தின் முக்கிய பிரமுகர்; இந்த நூற்றுண்டின் திருப்பத்தில் ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தில் நிலவிய சீர்திருத்தவாதத்தையும், திருத்தல்வாதத்தையும் தீவிரமாக எதிர்த்தார். ஆற்றல் மிக்க அமைப்பாளர், அரசியல் பத்திரிகையாளர். ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியில் மாபெரும் செல்வாக்குச் செலுத்தினுர்.—*205*.

பெர்ன்ஷ்டைன் [Bernstein], எடுவார்டு *(1850—1932)*—ஜெர்மன் சமூக-ஜனநாயக கட்சியின் கடைக்கோடி சந்தர்ப்பவாதப் பிரிவு மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவர். சீர்திருத்தவாதம் மற்றும் திருத்தல்வாதத்தின் தத்துவாளர். முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர் நிலைமைகளை மேம்படுத்திக் கொள்ள சீர்திருத்தல்களுக்காகப் போராடுவதே தொழிலாளர் இயக்கத்தின் பிரதான நோக்கம் என்று சாற்றினுர். ''இயக்கமே சர்வமும், இறுதி நோக்கம் எதுவும் இல்லை'' எனும் சந்தர்ப்பவாத கோஷத்தை முன்வைத்தார். முதல் உலகப் போரின் போது மையவாத நிலை மேற்கொண்டார். தமது சமூக-தேசியவெறியை மறைக்க சர்வதேசியம் பற்றிய தொடர்களைப் பயன்படுத்தினுர்; அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியையும் சோவியத் அரசையும் எதிர்த்தார்.—*204*.

பெனெகக் [Pannekoek], ஆன்டனி (ஹோர்னெர், க.) *(1873—1960)*—டச்சு சமூக-ஜனநாயகவாதி. முதல் உலகப் போரின் போது சர்வதேசியவாதி. *1918—1921*ல் டச்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர். கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகளில் பங்குபற்றினுர். அதீத இடதுசாரி செக்டேரியன் போக்கு மேற்கொண்டார். *1921*ல் கம்யூனிஸ்டு கட்சியை விட்டு விலகி தீவிர அரசியல் பணிகளைக் கைவிட்டார்.—*221, 226, 275*.

பொர்டிகா [Bordiga], அமடேயோ *(பிறப்பு: 1889)*—இத்தாலிய அரசியலாளர். *1910* முதல் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர். அதில் அராஜகவாதத்துக்கு நெருக்கமான ஒரு போக்குக்குத் தலைமை வகித்தார். *1919* முதல் முதலாளித்துவ நாடாளுமன்றத்தை பகிஷ்காரம் செய்யும் வேலைத்திட்டத்தை முன்வைத்தார். *1921*ல் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவுவதில் பங்கு பற்றினர். இடதுசாரி செக்டேரியன் கொள்கையைச் செயல் படுத்தினர்.—*258, 333, 334.*

பௌவர் [Bauer], ஓட்டோ (வெபர், ஹென்ரிஷ்)*(1882—1938)*—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகள் மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவருள் ஒருவர், ஆஸ்திரோ-மார்க்சியம் எனப்படுவதன் சித்தாந்தவாதி; இது, புரட்சிகர மார்க்சியத்தையும் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தையும் நிராகரிப்பதை மூடிமறைக்க மார்க்சிய தொடர்களைப் பயன்படுத்திய ஒரு போக்காகும்.—*184, 198, 210, 268, 277, 320.*

மலிநோவ்ஸ்கி [Malinovsky], ரமான் வத்சிலாவவிச் *(1876—1918)*—மாஸ்கோ குபெர்னியாவின் தொழிலாளர் தொகுதியில் இருந்து நாலாவது டூமாவுக்குப் பிரதிநிதியாக வந்தவர். டூமாவில் போல்ஷிவிக் பிரிவின் உறுப்பினர். பிறகு ஆத்திரமூட்டித் தூண்டிவிடுபவர், ஜாரிஸ்டு அரசியல் போலீஸ் இரகசிய உளவாளி என்று அம்பலப்படுத்தப்பட்டார். *1918*ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் உயர் விசாரணை மன்றத்தால் விசாரிக்கப்பட்டுச் சுடப்பட்டார்.—*224, 225.*

மாக்டானல்ட் [MacDonald], ஜேம்ஸ் ராம்ஸே *(1866—1937)*—பிரிட்டிஷ் அரசியல்வாதி. சுயேச்சைத் தொழிற் கட்சி மற்றும் தொழிற் கட்சியின் நிறுவகர்கள், தலைவர்களில் ஒருவர். தீவிர சந்தர்ப்பவாதக் கொள்கையைப் பின்பற்றினர். வர்க்க ஒத்துழைப்பு முதலாளித்துவத்தைப் படிப்படியாக சோஷலிசத் திசையில் கொண்டுவருதல் போன்ற தத்துவங்களைப் பிரசாரம் செய்தார். *1918—1920*ல் சோவியத் விரோத தலையீட்டை எதிர்த்த பிரிட்டிஷ் தொழிலாளர் போராட்டத்தில் குறுக்கிட்டுத் தடுத்தார். *1924*லும் *1929—1931*லும் பிரதமராக இருந்தார்.—*68, 282, 286.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883)*—*10, 205, 219, 237, 260, 268.*

மார்த்தவ் எல். [Martov L.], (ஸெதர்பாவும்) யூலி ஓசிப்பவிச் *(1873—1923)*—மென்ஷிவிக் தலைவர்; முதல் உலகப் போரின் போது மையவாதி. *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு தொழிலாளர் படையாளிகள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சிக்கு எதிராக முன் வந்தார். *1920*ல் ஜெர்மனிக்குப் போய்விட்டார்—*77, 79, 269, 270, 271.*

மில்லிரான் [Millerand], அலெக்சாந்தர் எத்தியேன் *(1859—1943)*—பிரெஞ்சு அரசியல்வாதி. *1890*ஆம் ஆண்டுகளில் பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தின் சந்தர்ப்பவாதப் போக்குக்குத் தலைமை தாங்கினர். *1899*ல் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கத்தில் பதவி வகித்தார். *1904*ல் சோஷலிஸ்டுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டு முன்னள் சோஷலிஸ்டுகளுடன் (பிரியாண்டு, விவியானி) சேர்ந்து ''சுயேச்சை சோஷலிஸ்டு'' பிரிவை நிறுவினர். பல்வேறு மந்திரிப் பதவிகள் வகித்தவர். *1920—1924*ல் பிரெஞ்சுக் குடியரசின் தலைவர்.—*138.*

மெர்ஹெயிம் [Merrheim], அல்ஃபோன்ஸ் *(1881—1925)*—பிரெஞ்சு தொழிற்சங்கவாதி, சிண்டிகல்வாதி. பிரான்சின் தொழிலாளர் பொதுச் சம்மேளனத்தின் தலைவரில் ஒருவர். முதல் உலகப் போரின் போது முதலில் சர்வதேசியவாதியாக இருந்தார், பிறகு பகிரங்கமான தேசியவெறி சீர்திருத்தவாத நிலை மேற்கொண்டார். சோவியத் யூனியன் மீது பகைமை காட்டினர்.—*235, 336.*

மொடிலியானி [Modigliani], விட்டோரியோ எமனுவலே *(1872—1947)*—இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சியின் பழைமையான தலைவருள் ஒருவர், சீர்திருத்தவாதி. முதல் *(1914—1918*ல்) உலகப் போரின் போது மையவாதி. ஸிம்மர்வால்டு கீந்தால் மாநாடுகளில் பங்கேற்றவர். ஸிம்மர்வால்டு இடதுசாரிகளை எதிர்த்து முன்வந்தார்.—*333.*

யுதேனிச் [Yudenich], நிக்கலாய் நிக்கலாயெவிச் *(1862—1933)*—ஜாராட்சி ஜெனரல், அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சி வட-மேற்கு அரசாங்கத்தில் உறுப்பினர். வட-மேற்கு வெண்காவலர் படையின் தலைமைத் தளபதி. அன்டான்டு ஏகாதிபத்தியவாதிகளின் விரிவான ஆதரவைப் பெற்ருர். *1919*ல் செஞ்சேனையால்

முறியடிக்கப்பட்டு எஸ்தோனியாவுக்கு பின்வாங்கி ஓடினார், பிறகு இங்கிலாந்து சென்றார்.—*44, 50, 61, 85, 89, 94, 96, 151, 227.*

ரத்ஸியான்கோ [Rodzyanko], மிஹயீல் விளதீமிரவிச் *(1859—1924)*—பெரிய நிலப்பிரபு, அக்டோபர்வாதிகள் கட்சித் தலைவரில் ஒருவர், முடியாட்சிவாதி. *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் போது, எதிர்ப்புரட்சி மையம் ஒன்றை அமைத்தார். இதுவே அரசாங்க டூமாவின் இடைக்காலக் கமிட்டி மற்றும் டூமா உறுப்பினர் ''தனிமாநாடும்'' ஆகும். கர்னீலவ் கலகத்தின் தலைவருள் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு தப்பி ஓடிப்போய் தெனீக்கினுடன் சேர்ந்து கொண்டார். சோவியத் ஆட்சிக்கு எதிராக எதிர்ப்புரட்சி சக்திகளைத் திரட்ட முயன்றார். பின்னால் நாட்டைவிட்டு வெளியேறினார்.—*225.*

ராதெக் [Radek], கார்ல் பெர்ன்கார்தவிச் *(1885—1939)*—கலீஷியா, போலந்து மற்றும் ஜெர்மனியில் சமூக-ஜனநாயக இயக்கத்தில் பங்கேற்றவர். முதல் *(1914-18)* உலகப் போரின் போது சர்வதேசியவாதி. *1917*ல் முதல் போல்ஷிவிக். கட்சியின் லெனினியக் கொள்கையை அடிக்கடி எதிர்த்தார். பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையின் போது ''இடதுசாரி கம்யூனிஸ்டு'' நிலை எடுத்தார். *1923* முதல் திரோத்ஸ்கியின் எதிர்ப்பணியில் தீவிர முக்கியஸ்தர். அவரது கட்சிவிரோதச் செயல்களுக்காக கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.—*208.*

ரெனோடேல் [Renaudel], பியேர் *(1871—1935)*—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவருள் ஒருவர். *1914—1918* முதல் உலகப் போரின் போது சமூக-தேசியவெறியர். *1914—1920*ல் *L'Humanite* (''மனிதகுலம்'') எனும் செய்திப் பத்திரிகையின் ஆசிரியர். *1914—1919* மற்றும் *1924*ல் நாடாளுமன்ற உறுப்பினர்.—*210.*

ரென்னர் [Renner], கார்ல் *(1870—1950)*—ஆஸ்திரியன் அரசியல்வாதி, ஆஸ்திரிய வலதுசாரி சமூக-ஜனநாயகவாதத்தின் தத்துவாளர், ''ஆஸ்திரோ-மார்க்சியம்'' எனப்படுவதன் சித்தாந்தவாதி. முதல் உலகப் போரின் போது சமூக-தேசியவெறியர். *1919—1920*ல் ஆஸ்திரியாவின் (சான்சலர்) முதலமைச்சர்.—*198, 210.*

லாயிட் ஜார்ஜ் [Lloyd George], டேவிட் *(1863—1945)*—பிரிட்டிஷ் அரசியல்வாதி, அரசுறவாளர். டோரிக் கட்சி

யின் தலைவர். 1916—1922ல் பிரதமர். ருஷ்யாவின் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் அரசுக்கு எதிரான ராணுவத் தலையீட்டை ஊக்குவித்து ஒழுங்கமைத்தவருள் ஒருவர்.—138, 285, 290, 292, 293, 295, 307.

லான்ஸ்பரி [Lansbury], ஜார்ஜ் *(1859—1940)—பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் தலைவர்களில் ஒருவர். நாடாளுமன்ற உறுப்பினர்—209, 262.*

லித்வினவ் [Litvinov], மக்சிம் மக்சிமவிச் *(1876—1951)—கட்சி மற்றும் அரசுப் பிரமுகர். பிரசித்திபெற்ற சோவியத் அரசுறவாளர். 1898 முதல் ரு.ச.ஜ.தொ. கட்சி உறுப்பினர், போல்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு அரசுறவாளராகப் பணி புரிந்தார். 1921—1930ல் அயல்துறை உதவி மக்கள் கமிசாராக இருந்தார். —104.*

லீப்க்னெஹ்ட் [Liebknecht], கார்ல் *(1871—1919)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கங்களின் தலைசிறந்த பிரமுகர். ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி இடதுசாரிப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது புரட்சிகரமான சர்வதேச நிலை மேற்கொண்டார். 1914 டிசம்பர் 2ந் தேதி ரைஹ்ஸ்டாகில் ராணுவக் கடன்களை எதிர்த்து வாக்களித்தார். 1918ல் நவம்பர் புரட்சியின் போது ரோசா லுக்சம்பூர்க்குடன் சேர்ந்து ஜெர்மன் தொழிலாளர்களின் புரட்சிகர முன்னணிக்குத் தலைமை தாங்கினர். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் ஒருவர். 1919 ஜனவரியில் நடந்த பெர்லின் தொழிலாளர் எழுச்சிக்குத் தலைவர். இந்த எழுச்சி அடக்கப்பட்ட பிறகு எதிர்ப்புரட்சியாளர்களால் கொலை செய்யப்பட்டார்.—156, 244, 257.*

லுக்சம்பூர்க் [Luxemburg], ரோசா *(1871—1919)—ஜெர்மன் போலிஷ் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த பிரமுகர். இரண்டாம் அகிலத்தின் இடதுசாரிப் பிரிவின் தலைவருள் ஒருவர். ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவக உறுப்பினர். 1918 நவம்பர் புரட்சியின் போது ஜெர்மன் தொழிலாளர்களின் புரட்சிகர முன்னணிப்படையின் தலைவர்களில் ஒருவர். 1919ல் எதிர்ப் புரட்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்டார்.—244.*

லுட்விட்ஸ் [Lüttwitz], வால்டர் *(1859—1942)—ஜெனரல், ஜெர்மன் ஏகாதிபத்திய ராணுவக் கும்பலின் பிரதிநிதி.*

முடியாட்சியை மீட்டமைப்பது, ஜெர்மனியில் ராணுவ சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவது எனும் நோக்கமுடன் 1920ல் மார்ச்சில் ஏற்பாடு செய்யப்பட்ட "காப் கவிழ்ப் புச்சதி" எனும் எதிர்ப்புரட்சிக் கலகத்தின் தலைவர்களில் ஒருவர்.—328, 330.

லெதெபூர் [Ledebour], கியோர்கு *(1850—1947)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. ஜெர்மனியின் மையவாத சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்களில் ஒருவர்.—205, 272.*

லெனின் (உலியானவ்) [Lenin], விளதீமிர் இலியீச் *(1870—1924)—138, 142, 144, 145, 342.*

லேகின் [Legien], கார்ல் *(1861—1920)—ஜெர்மன் வலது சாரி சமூக-ஜனநாயகவாதி. ஜெர்மன் தொழிற்சங்கங் களின் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது தீவிரமான சமூக-தேசியவெறியர். பாட்டாளி வர்க்கத் தின் புரட்சிகர இயக்கத்தை எதிர்த்துப் போராடினர்.——204, 235, 240.*

லொங்கே [Longuet], ழான் *(1876—1938)—பிரெஞ்சு சோஷ லிஸ்டுக் கட்சி மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவர் களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது பி.சோ.க. மையவாத-அமைதிவாத சிறுபான்மைக்குத் தலைமை தாங் கினர். பி.சோ.க. கம்யூனிஸ்டு அகிலத்துடன் சேருவதை யும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டு கட்சி நிறுவப்படுவதையும் எதிர்த்தார். 1921 முதல் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம் எனப் படுவதன் தலைவர்களில் ஒருவர்.—68, 164, 198, 210, 325.*

லௌபென்பெர்க் [Laufenberg], ஹென்ரிஹ் (எர்லெர், கார்ல்) *(1872—1932)—ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயக வாதி. 1918 நவம்பர் புரட்சிக்குப் பிறகு ஜெர்மன் கம்யூ னிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார். இதில் அவர் "இடதுசாரி" எதிர்பணிக்குத் தலைமை தாங்கினர். அராஜக-சிண்டிகல் வாதக் கருத்துக்களையும் "தேசியப் பெரும்பான்மை" எனப்படுவதன் குட்டிமுதலாளித்துவ தேசிய வேலைத்திட் டத்தையும் பிரசாரம் செய்தார். 1919 இறுதியில் கம்யூ னிஸ்டுக் கட்சியில் பிளவைக் கொண்டு வந்தவர்களில் ஒருவராக இருந்த அவர் ஜெர்மனியின் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி எனப்படுவதை நிறுவுவதில் பங்கேற்*

ருர். 1920ல் ஜெ.க.தொ. கட்சியில் இருந்து விலக்கப் பட்டார்.—224, 275.

விகாண்ட் [Wigand], கார்ல்—*''யுனிவர்சல் சர்விஸ்'' எனும் அமெரிக்க செய்தி நிறுவனத்தின் பெர்லின் நிருபர்.—133-136.*

வில்சன் [Wilson], உட்ரோ *(1856—1924)—அமெரிக்க ஜனாதிபதி (1913-21). சோவியத் ருஷ்யாவுக்கு எதிராக ஏகாதிபத்திய அரசுகளின் ராணுவத் தலையீட்டை ஏற்பாடு செய்தவருள் ஒருவர்.—104.*

வெண்டெல் [Wendel], பிரெடெரிக் *(1886—1960)—ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதி. 1918ல் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார். இதில் அவர் ''இடதுசாரி'' எதிர்ப்பணியை ஆதரித்து அராஜக-சிண்டிகல் வாதக் கருத்துக்களைப் பரப்பினர். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்து ''இடதுசாரி'' எதிர்ப்பணி விலக்கப் பட்ட பிறகு ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி எனப்படுவதை நிறுவுவதில் பங்கு பற்றினர். 1920 இறுதியில் ஜெ.க.தொ. கட்சியில் இருந்து விலக்கப்பட்டார். விரைவில் மீண்டும் சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தார்.—224.*

வொல்ப்ஹேய்ம் [Wolffheim], ஃபிரீட்ஸ்—*ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதி, பொது விவகார எழுத்தாளர். 1918 நவம்பரில் நடந்த ஜெர்மன் புரட்சிக்குப் பின் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார். அதில் ஹென்ரிஹ் லௌபென்பெர்க்குடன் சேர்ந்து ''இடதுசாரி'' எதிர்ப்பணிக்குத் தலைமை தாங்கினர். இது அராஜகவாத-சிண்டிகல்வாதக் கருத்துக்களைப் பிரசாரம் செய்தது. ஜெ.க.க. இருந்து ''இடதுசாரி'' எதிர்ப்பணி வெளியேற்றப் பட்ட பிறகு ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியை நிறுவுவதில் பங்கு பற்றினர். 1920 இறுதியில் இக்கட்சியில் இருந்து விலக்கப்பட்டு தொழிலாளர் இயக்கத்தை விட்டே வெளியேறினர்.—224.*

வையான் [Vaillant], எடுவார்டு மரீ *(1840—1915)—பிரெஞ்சு சோஷலிஸ்டு, இரண்டாம் அகிலத்தின் தலைவருள் ஒருவர். பிரான்சின் சோஷலிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் ஒருவர் (1901). முதல் உலகப் போரின் போது சமூக-தேசியவெறி நிலை மேற்கொண்டார்.—261.*

வைன்காப் [Wijnkoop], டேவிட் *(1877—1941)—டச்சு இடது*

சாரி சமூக-ஜனநாயகவாதி, பிறகு கம்யூனிஸ்ட். முதல் உலகப் போரின் போது சர்வதேசியவாதி. ஸிம்மர்வால்டு இடதுசாரி ஏடான Vorbote சஞ்சிகையுடன் ஒத்துழைத்தார். டச்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவருள் ஒருவர் என்ற முறையில் அதீத இடதுசாரி செக்டேரியன் நிலை மேற்கொண்டார். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் க.அ.நி.க.க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.—342.

ழூவோ [Jouhaux], லியோன் *(1879—1954)—பிரெஞ்சு மற்றும் சர்வதேச தொழிற்சங்க இயக்கத்தின் சீர்திருத்தவாதப் பிரமுகர். தொழிற்சங்கங்களின் ஆம்ஸ்டர்டாம் சர்வதேசிய அமைப்பின் வலதுசாரித் தலைவருள் ஒருவர். முதல் உலகப் போரின் போது தேசியவெறியர்.—235, 241, 336.*

ஷெய்டெமன் [Scheidemann], ஃபிலீப் *(1865—1939)—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் கடைக்கோடி வலதுசாரி சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். 1918 நவம்பரில் ஜெர்மனியில் நடைபெற்ற புரட்சியின் போது மக்கள் பிரதிநிதிகள் கவுன்சில் எனப்பட்டதன் உறுப்பினர். இதன் செயல்பாடுகள் எதிர்ப்புரட்சி முதலாளி வர்க்கத்தினரின் நலன்களால் நிர்ணயிக்கப்பட்டன. 1919 பிப்ரவரி-ஜூன் கட்டத்தில் வைமார் குடியரசின் கூட்டணி அரசாங்கத்தின் தலைவராக இருந்தார். 1918—1921ல் ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தை எதிர்த்து மிருகத்தனமான அடக்கு முறைகளை ஏற்பாடு செய்தார்.—134, 198, 210, 271, 276, 281, 285, 290, 309, 319, 329, 330.*

ஷ்ரேடர் [Schröder], கார்ல் *(1884—1950)—ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதி, எழுத்தாளர், கட்டுரையாளர். 1918 நவம்பரில் ஜெர்மனியில் நடந்த புரட்சிக்குப் பிறகு ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார். அதில் லௌபென்பெர்க்-வொல்ப்ஹேய்ம் எதிர்ப்பணியில் சேர்ந்து அராஜக-சிண்டிகல்வாதக் கருத்துக்களைப் பிரசாரம் செய்தார். 1919 அக்டோபருக்குப் பின்னுல் ''இடதுசாரி'' எதிர்ப்பாளர். அது கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட பிறகு ஜெர்மனியின் கம்யூனிஸ்டுத் தொழிற் கட்சி எனப்பட்டதை நிறுவுவதில் பங்கு பற்றினர். விரைவில் இக்கட்சியில் இருந்து விலகி ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியில் மீண்டும் சேர்ந்தார்.—220.*

ஸசூலிச் [Zasulich], வேரா இவானவ்ன (*1849—1919*)—நரோத்னிக் இயக்கத்தின் பின்னல் ருஷ்யாவின் சமூக-ஜன நாயக இயக்கத்தின் முக்கிய பிரமுகர். தொழிலாளர் விடுதலைக் குழுவை நிறுவுவதிலும் அதன் செயல்பாடுகளிலும் பங்கு பற்றினர். *1900* ஆம் ஆண்டில் ''இஸ்க்ரா'' மற்றும் ''ஸார்யா'' ஆசிரியர் குழுவில் இருந்தார். ரு.ச.ஜ. தொ. க. (*1903*) இரண்டாம் காங்கிரசுக்குப் பிறகு மென்ஷிவிக் தலைவரானர். அக்டோபர் புரட்சியை எதிர்த்தார்.—*269*.

ஸுபாத்தவ் [Zubatov], செர்கேய் வசிலியெவிச் (*1864—1917*)—போலீஸ் படையின் கர்னல். ''போலீஸ் சோஷலிசத்தின்'' (''ஸுபாத்தவிசம்'') முன்முயற்சியாளர், அமைப்பாளர். *1901-03*ல் தொழிலாளர்களைப் புரட்சிகரப் போராட்டத்தில் இருந்து திசை திருப்பும் நோக்கமுடன் போலீஸ் சார்பு தொழிலாளர் அமைப்புகளை நிறுவினர். தமது ஆத்திரமூட்டல் கொள்கை நசுக்கப்பட்ட பின் விலக்கப்பட்டு அரசியல் செயல்களில் இருந்து ஒதுங்கிக் கொண்டார்.—*241*.

ஸ்துருவே [Struve], பியோத்தர் பெர்ன்கார்தவிச் (*1870—1944*)—முதலாளித்துவப் பொருளியலாளர், பொதுவிவகார எழுத்தாளர். காடேட் கட்சியின் தலைவருள் ஒருவர். ''சட்டபூர்வ மார்க்சியத்தின்'' மிகவும் முக்கியமான பிரதிநிதி. இது பெர்ன்ஷ்டைன்வாதத்தின் ருஷ்ய வகைப்பட்டதாகும். ருஷ்யன் ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகளில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு விராங்கெலின் எதிர்ப்புரட்சி அரசாங்கத்தில் பதவி வகித்தார். பிறகு வெள்ளைப்படை வெளியேறியானர்.—*269*.

ஸ்பார்த்தகஸ் [Spartacus], (*மரணம்: கி.மு. 71*)—ரோமாபுரி காட்சி அரங்கப் போர்வீரர். கி.மு. *74* (அல்லது கி.மு. *73*)ல் பண்டைய ரோமாபுரியில் அடிமைகள் நடத்தியமிகவும் முக்கியமான கலகத்தின் தலைவர்களில் ஒருவர்.—*28*.

ஸ்வெர்த்லோவ் [Sverdlov], யாக்கவ் மிஹாய்லவிச் (*1885—1919*)—கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் சோவியத் அரசின் தலைசிறந்த தலைவர். *1901* முதல் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கான தயாரிப்புகள் மற்றும் அதன் நிறைவேற்றத்தில் தீவிரப் பங்கு வகித்தார். *1917* நவம்பர் முதல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைவர்.—*146*.

ஸ்னேடன் [Snowden], ஃபிலிப் (*1864—1937*)—பிரிட்டிஷ்

அரசியல்வாதி. *1903—1906*லும் மற்றும் *1917—1920* லும் சுயேச்சைத் தொழிற் கட்சியின் தலைவராக இருந் தார். அதன் வலதுசாரிப் பிரிவின் பிரதிநிதி. முதல் உலகப் போரின் போது மையவாதி. முதலாளிகளுடன் கூட்டணி சேருவதை ஆதரித்தார். *282, 285, 290, 292, 293, 294, 295, 329.*

ஹில்ஃபர்டிங் [Hilferding], ருடோல்ஃப் *(1877—1941)*—ஜெர் மன் சமூக-ஜனநாயகக் கட்சி மற்றும் இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவருள் ஒருவர். ஆஸ்தி ரோ-மார்க்சியம் எனப்படுவதன் தத்துவாளர். ''ஒழுங் குறுத்தப்பட்ட முதலாளித்துவம்'' எனும் தத்துவத்தின் ஆசிரியர். அரசு ஏகபோக முதலாளித்துவத்துக்கு ஆதர வாக வாதம் புரிந்தார். *1917* முதல் ஜெர்மனியின் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்.—*198, 205, 272, 277.*

ஹெண்டர்சன் [Henderson], ஆர்த்தர் *(1863—1935)*—பிரிட் டிஷ் தொழிற் கட்சி மற்றும் தொழிற்சங்க இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரியில் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு ஏகாதிபத்தியப் போரைத் தொடர்ந்து நடத்துவதற்குப் பிரசாரம் செய்வதற்காக ருஷ்யாவுக்கு வந்தார். *1919*ல் பெர்ன் (II) அகிலத்தின் அமைப்பாளரில் ஒருவர். பல முறை பிரிட்டிஷ் முதலா ளித்துவ அரசாங்கத்தில் பதவி வகித்தார்.—*235, 240, 282, 285, 290, 292, 293, 294, 295, 307, 329.*

ஹைண்ட்மன் [Hyndman], ஹென்ரி மாயர்ஸ் *(1842—1921)*—ஆங்கில சோஷலிஸ்டு, சீர்திருத்தவாதி. பிரிட்டிஷ் சோஷ லிஸ்டுக் கட்சியின் தலைவருள் ஒருவர். இக்கட்சியின் சால்ஃ போர்ட் மாநாடு ஏகாதிபத்தியப் போர் சம்பந்தமான இவரது தேசியவெறி நிலையைக் கண்டனம் செய்ததை ஒட்டி *1916*ல் இக்கட்சியை விட்டு விலகினர். அக்டோபர் புரட்சியின் பால் பகைமையான தோரணை கொண்டிருந் தார்.—*320.*

ஹொர்னெர் க. [Horner], பெனெகக் ஆன்டனி பார்க்க.

ஹோக்லண்டு [Höglund], கார்ல் ஸெத் கன்ஸ்தன்தீன் *(1884—1956)*—ஸ்வீடன் நாட்டு சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரிப் பிரிவு மற்றும் இளைஞர் சோஷலிஸ்டு இயக் கத்தின் தலைவர். முதல் உலகப் போரின் போது சர்வதேசிய வாதி. ஸிம்மர்வால்டு இடதுசாரி உறுப்பினர். *1917—1924*ல் ஸ்வீடன் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர்.—*257.*

அடுத்து வரும் வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பதினொன்றாவது தொகுதியில் இளைஞர் கழகங்களின் பணிகள், பண்ட வரி குறித்து முதலியவை இடம் பெறுகின்றன

T1
R